டிறத்தி னென்றில னானுடை யுண்டியுண்
டிறப்ப வந்நா கத்திடை யெய்தினான். (சஅ)

மற்றி மண்மிசைப் பற்றுளத் தாற்கிளை
யுற்ற மாந்த ருரைபல வுண்மையாற்
குற்ற மாய்க்கொண்டு லோபெனும் பாவியைக்
கற்ற மாந்தர் கடிந்தன ரென்பவே. (சகூ)

வேறு.

ஆக்குவ தேதெனி லறத்தை யாக்குவ
போக்குவ தேதெனில் வெகுளி போக்குவ
நோக்குவ தேதெனின் ஞான நோக்குவ
காக்குவ தேதெனில் விரதங் காப்பவே. (ரு0)

மாலு நான்முக னும்மதி சூடிய கண்ணுத லிண்டோண்மேற்
சேலை சூடிய சேகர வானவர் தானவ ரானும்
மேல வல்வினை துகளற விளக்கிய விளங்கொளி மணிச்சோதிக்
கோல முக்குடை யுடையவர்க் கல்லதென் கைத்தலங் குவியாதே.

---

... யசோதரன் என்பான் சரிதை கூறியவாறு. யசோதரன் அவந்திநாட்டு ... உஞ்சையினிநகரத்தரசன்; இவன் மாவினாற் கோழியுருவமைந்து அதனைக் காளிக்குப்பலிகொடுத்ததனால் இவனும், இவனை இதுபுரிகவென்று தூண்டியதனால் இவன்தாய் சந்திரமதியுங் கொலையுண்டு, பின்னரும் பின்னரும் பல இழிபிறப்பெய்தி அப்பிறப்புக்கடோறுங் கொல்லப்பட்டிறந்தனர் என்பது கதை. இதன்விரிவு யசோதரகாவியத்துட் காண்க.

சகூ. கிளை - பந்துமித்திரர்; "கிளையுற்றமாந்தர்" என்னும் விசேடணம், அவர் தம்கிளையுடன் கெட்டமை குறிக்கும். உண்மை - சரித்திரம். உலோபு - உலோபம்; வடமொழியில் 'லுப்' என்பது பகுதி என்பர்: உலோபு என்பதனடியாக, பெரியாழ்வார் திருமொழியில், "எதுமுலோபாய் பண்புக்குப் பண்பில் காணம்பீ" என வினைவிகற்பம் வருதலுங் காண்க. 'லோபத்தைப் பாவி என்றார்: கொடியானைப் பாவிஎன்னும் வழக்குண்மையான்.' இருமையுங் கெடுத்தற்கேதுவாமைபற்றி லோபத்தையேனும் தன்னையாக்கினானை ...

ரு0. விரதம் - இல்லறத்தார்க்குரிய அணுகுணசிக்ஷாவிரதங்களும், துறவறத்தார்க்குரிய மகாவிரதமுமாம்; இவற்றின் விரிவு ...ன் நூல்களிற் கண்டுகொள்க.

'மாலு நான்முகனும்'—இப்பாடல் சில பிரதிகளில் இறுதியிற் காணப்படுகிறது. சேலை - வஸ்திரம். சேகரவானவர் - வானவசேகரர்:—தேவசிரேஷ்டர். என்றவாறு.

165406

தேற லோம்புமின் றீயவை யாவையுங்
கூற லோம்புமின் நற்குண மல்லன. (சச)

விட்டு நீங்குமின் பற்றுள மின்மையாற்
கட்டு மெண்வினை காற்றலை கட்டலால்
ஒட்டி யின்னுயிர் கோறல் பிறர்மனை
விட்டு நீங்குமின் கற்றறிந் தீரெலாம். (சரு)

ஊக்கி யொண்பொரு ளெட்டுணைத் தாயினு
மாக்கி நல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளின்
நீக்கி நல்லற நிற்ப நிலாவிடிற்
றேக்கு மேற்றுணைச் செல்கதி யில்லையே. (சசு)

திருத்த மொன்றலிர் தேர்ச்சி யிலாநரி
விருத்தங் கேட்டது மெய்யென வோர்ந்துள
வருத்த முற்றவர்க் கீந்தருள் செய்திரேல்
வருத்த மொன்றில செல்கதி மாடெலாம். (சஎ)

வரைத்த நாளன்றி வாழ்பவ ரின்மையால்
உரைத்த மாட்சி யிலாநரி யுற்றகோட்

---

மெல்லுதல்: தின்றல். 'மெய்ப்பொருளல்லெனில்' எனவும் பாடம். கூறல் கூறற்க: அல்லீற்று வியங்கோள். நற்குணமல்லன ஓம்புமின்.

சரு. இன்னுயிர் கோறல் காற்றலையாகக் கட்டலால் (அதிற்) பற்றுளமின்மையோடு விட்டு நீங்குமின்; பிறர்மனை (விழைதலை) விட்டு நீங்குமின் —என இயைக்க. கட்டும் எண்வினை - வகுப்பமைந்த எண்வினை; "கட்டமை நீதி" என்புழிப்போல (சிந்தா-குண. உகூசு). எண்வினை யாவன;—ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பன.

சசு. சிராவக தர்மத்தினின்று சிறிதேனும் பொருளைத் தேடி நல்லதர்மஞ்செய்வர்; அன்றி யாக்கைசெல்வங்களின் நிலையாமைகருதின் பற்றற்று யதிதர்மத்தில் நிற்பர்; இவ்விரண்டனுளொன்றில் நில்லாவிடின் நற்கதியில்லை யென்க. தேக்குதல் - இன்பம் நிறைதல்.

சஎ. திருத்தம் - ஒழுக்கம். வருத்தம் ஒன்றில-துன்பங்கள் பொருந்தா.

சஅ. வரைத்த நாள் - விதிக்கப்பட்ட ஆயுள். கோள்திறத்தின்—குற்றப்பகுதியினின்று. ஒன்றிலன் - நல்[illegible]ிற் பொருந்ாதவனாய். பின்னடியி[illegible]

க.
புண்
"கல்ல
னெல்லி

"கற்றிலாய் கலை
முற்று நோக்கின் ட

இங்ஙனமாக எழுதுதற
ருமையை முற்றக்கூறற்கியலும
ந்த பெரியார் தாம் தாமே யனுபவமுக,
அஃதில்லாதார் பிண்டமாகக் கண்டுணருமா
பம் மிகச்சிறந்த தென்று கூறிப்போதல
தலியையாது.

ஆகவே, காலாந்தரத்தி லழிதற்பாலவும் இம்மை[illegible]ன்பு சிறிதளவே தரற்பாலவுமாகிய அன்னதான முதலிய என்ன தானங்களினும் வித்தியாதானமே மிகச் சிறந்த தென்பது பசுமரத்தாணி போல் நாட்டப்படும். இதனானன்றே,

" அன்னதான ஸமம் நாஸ்தி வித்யாதானம் ததப்பரம்,
அன்னம்து க்ஷணிகம் ஜீர்ணம் யாவத் ஜீவம்து வித்யயா."

என்ற சுலோகத்தை என் நண்பர் ப்ரும்மஸ்ரீ எஸ். சாமிநாதய்யரவர்கள் தாம் எழுதிய ஆத்திசூடி விருத்தியுரையில் "ஐயமிட்டுண்" என்றவாக்கியத்திலெடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

ஆகவே முன்னர் இவண் கூட்டப்பெற்ற நம் சங்கத்து ஐந்தா[illegible]வைக்கொண்டாட்டத்தின்கண்ணே, நைமித்யசபைத் தலைமைபூண்[illegible]காமகோபாத்தியாயர். ப்ரும்மஸ்ரீ சாமிநாதையர் அவர்களது வித்[illegible]ானத்தைப் பற்றிப் பேசுங்கால்,

" எனவும்,

...ன்ெருவன்

...வாறு.

...ங கல்வி யொருவற்கு

...பவை." எனவும்,

...றசமல்லாற்சிறப்பில்லைகற்றோர்க்குச்

...மலலாஞ் சிறப்பு." எனவும்,

" கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின் மெலிவுக்கோர் துணையுமாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும் புகழுமாந் துணைவியாக்கும்
இ... ...பொருள்." எனவும்,

"கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தாற்
றத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பா
லுயர்ந்த வுலகம் புகும்." எனவும்,

" எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

(6). அவ்வையறிவுகளுடனுட
...துணர்வதற்குச் சாதனம...
தேவர், நரகர்களுமாக வை...

உடலே ஆலயமாகவும், அதற்கும்...
...யாமியாகிய பரமேசுவரனாகவும், அவனுடைய
தன்மையாய் விளங்கும் உயிர்ப்பொலிவாகவு...
...ர்க்கு நிடுக்கணின்றிப் பாதுகாப்பதே அப்பரமே
...எல்லா வழிபாடுகளினும் மேலான வழிபாடென

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

...ன்று கொல்லாமை எல்லா அறங்களினும் சிறந்ததாகக்...
...ட்டுள்ளது.

இது நிற்க. புரியும் ஓர் நல்வினைக்குப் பயன்கூறும் ...
அவ்வினையைப் புரியாதவர்க்கு அப்பயன் கைகூடாதென்று ...
பொதுவாக வழுத்துமாயினும், கொல்லாமையினால் எல்லா...
...னும் கைகூடுமெனவும், கொல்லுதலானது எல்லாப்பாவங்க...
...ன்களையு மொருங்கே விளைவிக்குமெனவும் சிறப்பாகக் கூறி...
...து.

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்" என்று,

கொல்லாமையை அறங்களெல்லாமாகிய உயர் பண்பு ...
கொல்லுதல் பாவச்செயல்கள் எல்லாவற்றையும் தானே த...
...லும் திருவள்ளுவ நாயனார் கூறியிருக்கின்றனர். இந்நாட்டில்
...ன்றுதொட்டு வழங்கும் அறநூல்களும், விறகுக்காகப் பச்சை
...தை வெட்டுவது கொடிய பாவமென்றும், சிப்பியானது உயிரு...
...ருக்கையில் அதைக் கொன்று முத்தினைக்கவர்தல் கொடும் பா...
...மென்றும் பலமுறை கூறியுள்ளன. ஆகினும், உயிர்நீத்தல் பாவமே
...யென்று அங்கீகரிக்கும் சிலர், உயிர் ஒழிந்தபின் உயிரற்றவுடலை உண...
...வுக்காகக் கைக்கொள்வது பாவமன்றென்று சங்கிப்பதுமுண்டு. இ...
...தன்றியும் யாம் கொல்லாதிருந்து பிறர் கொன்றபின் உயிரொழி...
(...)

லனச் சிலர் வாதிப்பார்கள். ஒரு
புள்ள ஓர் உயிர் வாழ்ந்திருந்த உட
அதனை உணவாகக்கைக்கொள்ளுமிட
லின்கண் அவாமேலிட்டு, உயிரகற்றி
ந்துணிந்துவிடும் எனும் காரணம்பற்றிப்
புண்ணியங்களினும் மேலானதென்பது ஆன்
கொலைத்தொழிற்கு யாம் உடப்படாமல் பிறர்
றைச்சியைக் கைக்கொள்வோமாகில், அவ்வாறு
ள்வது கொல்லுவார்க்கு ஊக்கத்தை விளைவித்து,
லவர்கள் பயன்பெறும்படி நாம் செய்வதால் நா
லத்தொழிலுக்குக் காரணமாகிறோமென்பது பற்
றுதவும் புலாலையுங்கூடக் கைக்கொள்வது பெரும் பா
அறநெறியறிந்தமேலோர் வற்புறுத்தி யிகழ்கின்றனர்.
மானிடர்க்குத் தெய்வத்தன்மையை விளைவிப்பது அரு
றல்லாது மற்றேது மன்று.

"[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥"

வசனமானது கற்கும் கல்வியும், புயவலியும், ஈசுவரத்யான
ர் தெய்வத்தை சுவாதீனப்படுத்திக்கொள்வதும், மிக்க ஈகை
த்தமமான க்ஷேத்திரங்களிற் சென்று புண்ணியதீர்த்தங்களில்
ருதல் முதலிய எல்லா நல்வினைகளும், குரூரமான செய்கையு
யவனுக்கு எப்பலனையும் அளிக்காவென்று முறையிட்டுப் புகல்
றது. ஏனெனில், எந்த நல்வினைக்கும் அருளொன்றே இன்றி

---

* கொலையிலானுதவுமன்னங்கூறிற்பேரமுதமாகும்
கொலையுளானுதவுமன்னம்கூறில்வல்விடமதாகும்
புலையர்தமனையிலுண்போன்புலையனுமாறுபோலக்
கொலைஞர்தமனையிலுண்போன்கொலைஞனேயாவனன்றே.
(பகபதிபாசவிளக்கம்)



யமையாத உற்றதுணையாயிருக்கவே
றிப் "பலவுடம் பழிக்கும் பழியூனுண
து டிபிடை நசுப்பே" எனக் கல்லாடத்
வொருநல்வினையும் உடல்போலவும் அ
தாகச்செய்ய அருளே உயிராகவும் சாற்றப
ற்றவுடல் எப்பயனும் பெறாதவண்ணம் அ
ந்த நல்வினையும் பயனளிக்கும் பான்மையற்ற
யாதலால்,

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்
எங்ஙன மாளு மருள்."

தன்னுடம்பை வீக்குதற் பொருட்டுப் பிறிதோர் உட
தின்பவன் எவ்வாறு அருள்பொருந்தியிருப்பான்,
டைய நீதிவசனம் பிறந்திருக்கின்றது. இஃதன்ற

"உண்ணவூனை விரும்பியுயிர்க்கொலை
யெண்ணுவான்கொலைகண்டிரங்கான்கொலை
பண்ணுவாரைத்தடுத்துப்பகர்கிலா
னண்ணுவானிவரோடெனுநால்வரும்."
எனச்சிவதருமோத்தரத்தி.

"கொன்றான் கொலச்சொன்னான் கூசவறத் தான்சுட்டான்
தின்றான் விலைக்கிட்டான் சென்றொன்று—கொன்றவனைக்
குட்டவன்கணிட்டெரிக்க வெந்துகொடு வெந்நரகில்
பட்டழுன்று வீழ்வர் பதைத்து"
எனப்பெருந்தேவனார் பாரதத்திலும்,

"கொன்றான் கொலையை யுடம்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்காற்—கொன்றதனை
அட்டான் அடவுண்டான் ஐவரினு மேலுளவாக்
கடடெறிந்த பாவங் கருது"
எனச் சிறுபஞ்சமூலத்திலும் சாற்றியருளப்பட்டுள்ளன.

முதலில் தர்மத்துக்கு ஆதாரமே கொல்லாமை யென்பது,
"தருமம்" மென்னும் மொழியைப்பகுத்து அறிவதனால் நன்குவெளி
யாகின்றது. காப்பாற்றுதலென்னும் பொருளுடைய முதனிலையா

ருந்து "தர்மம்" என்னும் மொழியா
அம்மொழிக்குக் "கொல்லாமை" அல்
முதற்பொருளாகவும் அக்கொடுஞ்செய
ஜீவகாருண்யத்தினால் இயற்றப்படும்
ணம்' அல்லது 'இலக்கணை' யான பொரு
ப்பட்டுள்ளன.

மூன்றுவிதமான பூர்வபக்ஷங்களை இக்காலத்து
னால் இழுக்குற்றமதியார்கள் சிலர் சிற்சில சமய
து புகல்வதை நாம் அறிந்திருக்கின்றோம்.

அந்தணர் முதலிய மூன்று வருணத்தாரும் உயிர்
யுண்டதாகப் புராணமுதலிய பழைய நூல்களில் வரை
மையாலும்,

) பலவிதமான யாகங்களை விழுத்தும் மேலான
கான்று ஊனை ஆஹுதியாக அளிக்க இடங்கொ

சாக்தம், காணாபத்யம், சௌரம் முதலிய தந்திரங்
ங்நாட்டில் தொன்றுதொட்டு, பிடாரி முதலிய தெய்
, ஆடு, கிடா, கோழி முதலிய பிராணிகளைப் பலிகொடுத்
டு செய்துவரும் வழக்கத்தினாலும், உயிர்கொல்லுதல் குற்றம
யன்று அன்னவர் வாதிக்கின்றார்கள்.

முதலாவது, இரண்டாவது பூர்வபக்ஷங்கள், விதியின் கருத்
யும், அவ்விதி பிறந்தகாலத்தின் தன்மையையும், அவ்விதியின் கரு
தை நன்குணர்த்துமாறு பெரியோர்களால் பின்னர் வரையப்பட்டிரு
கும் கட்டளைகளையும், கருதாது சிற்றறிவினால் மொழியப்படுகின்
றன.

மானிடப்பிறவி இருபண்புகளினால் அமைக்கப்பட்டுள்ளது.
ஐயறிவு பொருந்திய மிருகத்தன்மை அவன்கண் பொருந்தியிருப்பதா
ல் இழிவாகிய இச்சை அல்லது ருசியென்னும் பண்பும், மற்றப்பிரா
ணிகளுக்கு இயற்கையில்லாததும் மானிடப்பிறவிக்குமட்டும் உரித்



தானதுமான 'நீதி' யென்னும் பா
றிருக்கின்றன. இச்சையினின்று கா
பழுதுகள் மனத்தின்கண் உதிக்கின்ற
எல்லாப்பாபங்களுக்கும் மூலகாரணமாக
அநித்யமிதுவென்னும் இருவிதமான நல்
யை முற்றிலுமகற்றி அதற்குப்பிரதியாகஅரு
மென்மேலும் பெருகப்புரிந்து ஸேஹிதையச்
ள்ளதாகவுமிருக்கின்றமையால் இச்சையைக்கு
ஆசரிப்பதும்தான் எல்லா நூல்களிலும் உரைக்கப்
ளின் கருத்து.

அந்தத்தாத்பரியத்தையே வற்புறுத்தி மேற்சொ
நத்தும் இயற்கையானது 'ருசி' யென்று பொருள்படு
inct' எனவும், மானிடப்பிறவியில் புதிதாக உ
று பொருள்படுகிற 'Moral responsibility'
ummond' என்கிற மேனாட்டுப்பண்டிதர் ஆத்மாவி
கியென்று பொருள்படுகிற 'Ascent of man' எ
ல் நன்கு விவரித்திருக்கின்றனர். அம்முறை
tion' என்னும் பிரபந்தத்தில் அந்நூலின் ஆ
jamin Kid' என்பவரும் அவ்விருபண்புகளில்
ination' எனவும் மற்றொருபண்புக்கு 'Sacrifice'
கொடுத்து அவ்விருபண்புகளின் விருத்திகளை விவரித்துத்
க்கின்றனர். மானிடப்பிறவியிலும், தாழ்ந்தபண்பாகிய
யல்லது ருசியானது இருந்துகொண்டிருக்கின்றதென்றும் ந
ன்னும் பண்பானது மேலிட்டு வளர வளரத்தான் இச்சையென்
ப் பண்பானது காலக்கிரமமாகக் குறைந்து விடுகிறதென்றும் ருசி
ற்றிலுமகன்று நீதிமட்டும் பிரகாசித்து விளங்குங்காலையிற்றான்
மானிடப்பிறவி பூர்ணவிகாசத்தையடைகிறதென்றும் அவ்விரண்டு
நூலாசிரியர்களும் புகன்றிருக்கின்றனர். அக்கருத்தையே சங்கேத
மாகவிளக்கி நம்மவர் மேலாகவியந்துபாராட்டும் பாகவதநூலிலும்
த நவசரித்திரம் என்னும் புண்ணியகதைவடிவாகக் கூறியிருக்கின்ற
னர். அஃதெவ்வாறெனில், 'ஆத்மா' மேனோக்கிச்செல்லுந்திறமுடைய
வன்மையால் அவனுக்கு அப்பொருளையுடைய நாமமாகிய 'உத்தா

ணிடத்தமைந்திருக்கும் இருபண்பு
மனைவிகளாகக் கற்பித்து, மேலான
த்தமனைவியாகவும், தாழ்ந்த பண்பை
வியாகவும் புகன்று, 'சுநீதி'யாகிய மூத்த
அறிவைக்குறிக்கின்ற 'த்ருவன்' என்கிற
றுப, ருசி அல்லது இச்சைக்கு உடன்படுப
பார் என்னும் கருத்தை விளக்கி, 'உத்தானப
னும் இளையமனைவிக்குள்ளடங்கினவனாய் அவ
ரக் 'சுநீதி'யையும் அவள் மைந்தன் த்ருவனையும
மனைவும், காலக்கிரமமாக நிலையான அறிவானது
வளர்ந்து மாணிடப்பிறவியை இச்சை அல்லது ரு
தளையினின்றும்விலக்கி மேலான பதவியைப்பயக்கு
ன்குமுத்தி 'த்ருவன்' தவமபுரிந்து ஞானியாய்த் தன்
எக்காலும் திரும்புதலற்ற உத்தமபதவியை வாங்கி
ரவும் அக்கதைக்குப் பொருளாகும்.

(இன்னும் வரும்.)

---

# பூச்சிக்குழாம்.

ஸ்ரீமத்-வி. நரசிம்ம ஐயங்காரவர்கள், எம். ஏ. எழுதியது.

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு—திருக்குறள்.

இவ்வுலகத்துலவும் ஜீவப் பிராணிகள் எவற்றுள்ளும் மனிதர்களே, தனித்தனி வசிக்காது, பலரோடு ஒன்று சேர்ந்து ஜனசமூகங்களாகக் கூடிவாழக் காண்கின்றோம். இங்ஙனம் ஜனசமூகங்களாகக் கூடிவாழ்வதின் பயன் பலவுண்டென்பதற்கு ஐயமின்று. இதுகாரணம் பற்றியே, பொறுகளிற சஞ்சரிக்கும் நீர் நாய்கள் ஒருங்கே சேர்ந்து கூட்டங் கூட்டமாக வாழ்நாளைப் போக்குவன. இவற்றுட் சில மரங்கொண்டுவர, சில மண் சேர்க்க, சில அணைகட்ட, வேறு சில உணவு தேடிச் சேகரிக்க, சில கூட்டத்தைதயும் இருப்பிடத்தையும்



பாதுகாக்க, கூட்டத்தின் கருமங்கள் யாவும் செவ்வனே முடிந்தேறி நீர் வாசிகள் சுகமுறுவர். இவ்வண்ணமே, சமூகங்களாகத் தொகுத்துக் கூட்டுறவு கொண்டாடும் பூச்சிகள் சிலவுண்டு. அப்பூச்சிக் கூட்டங்கட்கு ஈங்குப் "பூச்சிக்குழாம்" என்னும் பெயரளிப்போம்.

முதன்முதல் பூச்சி குஞ்சுபொரிப்பதைக் குறித்துச் சில சொல்வது அவசியம். ஏனெனில், பின்பு விவரிக்கப்படும் பூச்சிக் கூட்டங்களின் இரகசியங்கள் நன்கு புலப்படும் பொருட்டேயாம். பூச்சி முட்டையினின்று சிறு புழுவொன்று வெளிவரும். இந்த நிலையிலிருக்குங்கால் அப்புழு மிகச் சுருசுருப்பாய்ச் செடிகளினிலையைத் தின்று நீண்டு பருக்கும். பிறகு இந்நிலைமாறித் தன்னைச் சுற்றி லுட்டுப் போன்ற ஒரு பொருளால் சிறுகூடொன்று கட்டிக்கொண்டு அதனுள் அந்நாகாரமின்றிச் சிலநாள் வாழும். அக்காலத்துச் சுவாசம் விடுவதுமில்லையாம். இவ்வாறு சில நாட் செல்லப், பின்பு கூடுடைந்து, பரமாத்மாவைக் காணப் பலகாலம்யோகத்திலிருந்து அதைக்கண்ட சிவாத்மாப்போல, சிறகுபெற்று ஆனந்த பரவசத்துடன் வெளியேறும். இவ்வண்ணமே பூச்சிகள் யாவையும், புழு உரு, புழுக்கூட்டுரு எனப்பலவுரு மாறிமாறிக் கடைசியாய் முழுப் பூச்சியாகின்றனவென்னும் விஷயம் ஞாபகத்திலிருத்தல் வேண்டும்.

சமூகங்களாக நெருங்கேகூடிச் சீவிக்கும் பூச்சிகள் சிலவுண்டென்று முன்னே … றோம். அவையாவன:—கறையான், குளவி, எறும்பு, தே… என்பவை. இவற்றின் கூட்டமொவ்வொன்றைப் பற்றியுஞ் சில சொல்லுவோம்.

## கறையான்.

இவை மிகுதியும் உஷ்ணப்பிரதேசங்களில் வசிப்பன. நாமிருக்கின்ற வீடுகட்டும் மரங்கட்கும் மரவேருக்கு மிவை செய்யுஞ் சேதம் யாவருமறிந்த விஷயம். இவற்றின் கூட்டமொன்றில் மூன்றுவகை வருணங்கள் உண்டு; அவையாவன:-பெண்கறையான், ஆண்கறையான், ஆணும் பெண்ணுமல்லாத அலிக்கறையான். ஒவ்வொரு புற்றிற்கும் ஒருபெண்ணும் ஓர் ஆணுமேயிருக்கும். பெண்ணை இராணியென்றும் ஆணை அரசனென்று மழைத்தல் தகுதியாகும். அலி இருவகைப்

படும். சிலர் ஊழியஞ் செய்வோர்: சிலர் யுத்தவீரர். யுத்த வீரர்களோ, மண்டைபருத்து அலகுகள் மிக வளரப்பெற்றவர்கள். புற்றைப் பாதுகாப்பதுவே இன்னோர்கருமம்; ஆனால் ஊழியக்காரர் செய்யும்பணி பலவாம்; கூடுகட்டுதல், தீனிசேகரித்தல், மராமத்துப் பார்த்தல், குஞ்சுகளைப் பேணுதல் முதலியனவாம். அரசியுமரசனும் குஞ்சு பிறப்பித்துக் கூட்டை நிரப்புவதைத்தவிர வேறொன்றுஞ் செய்பவரல்லர்.

மாரிகாலம் நெருங்கவே, ஆணும்பெண்ணும் (இவற்றிற்கே சிறகுண்டு) தமது அழகிய சிறகை விரித்தாடித் தாமிருக்குமுன்னதமாடத்தினின்றும் மாலையில் வெளிப்போம். மறுநாட்காலை தமது ஆட்டமோய்ந்து, இறகையுமிழந்து, மண்ணிற்புரண்டு கிடக்க, சில பறவைகட்குஞ் சில எறும்புகட்கும், சில மனிதர்கட்கு மிரையாகும். இத்துணை இடுக்கண்களுக்கிடையில் இரண்டொரு ஆணும்பெண்ணும் தப்பியோடப் பார்க்கலாம். ஆனால், ஒப்பில்லாதோடித்திரியும் ஊழியக்காரரிற் சிலர் இங்ஙனம் பிணக்கோலங் கொண்டு வெட்கமின்றியொன்றையொன்று பற்றிவருமிவரைக் கண்டால், ஆணையும் பெண்ணையுமழைத்து, அவற்றுக்கு மணக்கோலமிட்டுத் தக்கமரியாதை செய்து கொண்டுபோய்ச், சிறியமண் கூடுகட்டி அதிலிருத்துவார்கள். ஆங்கு, காதலுங்கணைகள்வீச, ஆணும்பெண்ணும் புணர அரசி கருப்பந்தரிப்பாள். அக்காலந்தொட்டு, அரசியினுடம்புபூரிக்க, மூன்றங்குல நீளமாவாள்; இரண்டுவருடகாலமுயிர் தரிப்பாள். அரசியின் உப்பரிகையைச்சுற்றி எக்காலத்தும் பட்டாளமொன்று காத்திருப்பதுந் தவிர மெய்காப்பாளருஞ் சிலருண்டு. இவையன்றி அரசியின் மாடத்தைச்சுற்றி எண்ணிறந்த வேலைக்காரர்களும் படையாளர்களும் அரசியினாணையை எதிர்பார்த்துக் கைகட்டி வாய்பொத்திக் காத்திருப்பார்கள். அரசிமுட்டையிடயிட அவற்றைப் போஷணசாலைக்கெடுத்துப்போவார்கள். அங்கு முட்டை குஞ்சாகமாறி வெளிவரும்.

கறையான் மறைவிலேயே தங்கருமங்களை நடாத்துவன. ஊழியஞ் செய்வோர் தாம் போமிடமெல்லாம் மண்ணால் மறைவுபாதையமைத்து அதன்வழியே பிரயாணஞ்செய்வார்கள். கூட்டிற்கு யாதொரு விபத்து நேரிடினும், பாதை இடிந்துபோகினும், அவற்றை உடனுக்கு



டனே மராமத்துச்செய்வார்கள்; ஓரிரவிற்குள் உத்தேசம் நூறடி நீளமுள்ள கட்டிடமெழுப்பிவிடுவார்கள். அரசன் அரசியிவ்விருவரிருக்குங்கூடம் நீங்கலாக மற்றக்கூடு முழுவதுமிடிந்துபோனாலும், முன்போல், மாடமாளிகை கூடகோபுரங் கொண்ட புதிய அரண்மனையொன்று கட்டிவிடுவார்கள். அரசி பருக்கப்பருக்க அவளுக்குத்தக்க அறையமைப்பார்கள். இத்தகைய வேலையுடன், உண்டியுஞ் சேகரித்தல் வேண்டும். அதற்காக மரங்களைத் துளைத்து, அவற்றினின்றும் ஓர்வகைப் பிசினுஞ்சாறுமெடுத்து ஆகாரமாயுபயோகிப்பார்கள்.

வேறொரு கூட்டத்தார் வந்து எதிர்த்து மதில்களிற்றுவாரஞ் செய்வரேல், வேலைக்காரர்கள் திடீரென்று மறைய, போர்வீரர் நூற்றுக்கணக்காய் வெளிவருவார்கள். ஆனால் முதன்முதல் சிலரே வெளிவந்து வேவு பார்ப்பார்கள். பின்பு சிலர் பலராகி யுத்தஞ்செய்வார்கள். போர்புரியுங்காலுண்டாங்கோபமும், ஆவேசமுஞ்சொல்லுந்தரத்தவல்ல. அவசரத்திற் கை கால் தவறிக்கீழேயுருண்டு விழுவார்கள். விழுமுன்னெழுந்து நிற்பார்கள். சண்டை நின்று எதிரிகண்மன்றந்தவுடன் போர்வீரர்களைப்பாறத் தங்கூட்டிற்குத் திரும்புவார்கள். உடனே பணியாளர் வெளிவந்து போராலுண்டான சேதத்தைப்பழுதுபார்ப்பார்கள். இரண்டொரு யுத்தவீரர் மட்டும் வேலை செவ்வனே நடக்கின்றதாவென்று மேற்பார்வை பார்ப்பார்கள். அம்மம்ம! என்ன எச்சரிக்கை! என்ன ஜாக்கிரதை! என்ன சுற்றத்தாரபிமானம்! ஐப்பானியரிடத்து மிவ்வளவுண்டோ?

## குளவி.

குளவிகளுட் சிலசாதிமட்டுமே கூட்டமாய் வசிக்கும். ஒவ்வொரு கூட்டமும் ஆண்பெண் அலிகளாலானது. பெண்களுளிருவகையுண்டு. ஒன்று ஆண் பெண்ணாகிய விருவகைமுட்டையுமிடும். மற்றொன்று ஆண்முட்டை மட்டுமேயிடும். மாரிக்காலத்துவக்கத்தில் பெண்குளவி தவிர மற்றயாவையுமரித்துப்போம். தனியே விடப்பட்ட பெண் மண்ணினாலாவது மெழுகினாலாவது கூடுகட்டி அதில் முட்டையிடும். கூட்டினறைகளொவ்வொன்றிலும் ஒரு முட்டையையும், அம்முட்டைக்கிரையாக மற்றப்பூச்சிகளின் புழுவைக்கொன்றுங் கொல்லாதுமாய் வைத்துப் பின்பு அறையின் வாயை மூடிவிடும்.

குளவிமுட்டையினின்று புழு வெளிவந்து இரையாகவைத்திருக்கும் மற்றப்புழுக்களையுண்டு பருத்துச் சிலகாலஞ் சென்றதுங்கூட்டைப் பிளந்துகொண்டு குளவி வெளியேறும். ஒவ்வொரு கூட்டத்திலும் பெண்குளவியே மிகவுண்டு. ஆண் சிலவே; இவை கூட்டைசுத்தி செய்யும். பிணங்களை அப்புறப்படுத்தும். அலிகளோ எண்ணிறந்தவை. கோடைகாலத்தும் இலையுதிர்காலத்தும் வெளியிற்சென்று தீனி சேகரித்து அதிற்சிறிதுபாகத்தைக் குஞ்சுகட்காக வைத்துவிட்டு மற்றயதைப் பாகித்துண்ணும். இவற்றின் முன்யோசனையுஞ் சாவதானமும் யாவர்க்கும் வியப்புண்டாக்குந் தரத்தவன்றோ?

## எறும்பு.

எறும்புக்கூட்டங்களில் ஊழியக்காரர்க்கே போர்த்தொழிலுரித்து. அரசியர் சிலருளர். பொறுமைகொண்டு ஒருவரோடொருவர் எதிர்த்துப் போர்புரியாது ஒற்றுமையாய் வாழ்வார்கள். ஆணெறும்புகளோ அரசியரோடு புணர்ந்தபிறகு இவ்வுலகத்தின் முழுவதும் வெறுத்தனபோல் உயிர்நீக்கும். அரசிறந்ததைக்கண்ணுற்ற பட்டமகிஷியர் தமக்கு வந்த துன்பத்தை நினைத்துருகி தமக்காடையாகவு மாபரணமாகவுமிருந்த இறகுகளைத்தாமே கொய்தெறிந்துவிட்டு அமங்கலிகளாகிய தம்முகத்தை வெளிக்காட்டாது கூட்டிலேயே வாசஞ்செய்வார்கள். இத்தகைய அன்பு, உலகவெறுப்பு, விசுவாசமுதலிய குணாதிசயங்களைப்பற்றி நாம் மிக எழுதவும் வேண்டுமோ?

கோடைக்காலப்பிற்பகுதியில் இறகுகொண்ட ஆணும்பெண்ணும் அறைகளினின்று வெளிவந்து புற்றுமுழுவதிலும் நிறைந்துபோம். திடீரென்று ஆணெறும்புகள் சத்தஞ்செய்து ஆகாயத்திற்புறப்படும். அவற்றை அரசியரும் பின்றொடர்வார்கள். ஆகாயத்திலிவ்வாறு ஆணும்பெண்ணும் நிறையவே ஆண் கோணலாயங்குமிங்கும் பறப்பதையும் பெண் இறகை நன்றாகவிரித்து அந்தரத்திலசைவின்றி நிற்றலையுங் கண்ணுளோர் பன்முறையுங்கண்டிருப்பார்கள். அரசி கம்பீரமாய் “விர்” “விர்” என்று ஆகாயத்திலெழவே அவளைக்கண்ட ஆணெறும்புகளிற்பல அவளைக்கைப்பற்றவான்வேண்டி, தமயந்தியின் சுயம்வரத்திற்கு வந்து கூடிய அரசர்போல் அவளைச்சுற்றி வட்டமிடும். நளனைப்போற் பாக்கியம்பெற்ற சில புருஷர்கள்தாம் பெண்டிர்களாலங்கீகரிக்கப்படுவார்கள். ஆகாயத்திலேயே காந்தர்வமணம்புரிவார்கள். உடனே ஆண்மரிக்கப் பெண்ணுந் தன் சிறகையெறிந்து துன்பத்திலாழ்ந்துகிடக்கும். அத்தருணத்துப் பணியாளர்பலர் வந்து அவளையெடுத்துச்சென்று தகுந்தவிடமொன்றிற் சேர்ப்பார்கள். அங்கே பணிவிடை பலவுஞ்செய்து அன்னமூட்டி உற்சாகப்படுத்தி ஆசனத்திருத்துவார்கள். பட்டாபிஷேககாலங்களில் நடக்குமுற்சவங்கள் பலவாம். சில ஆடுவன, சில ஓடுவன, சில குதிப்பன, சில ஆரவாரிப்பன, சில அரசியைத்தூக்கி ஊர்வலம்வருவன.



அரசி முட்டையிடவும் அவற்றைத் தம்வாயாற்கவ்வித் தனித்தனியறைகளிற்சேர்த்துக் குஞ்சுபொரிக்கும் வரையில் ஊழியஞ்செய்வோர் பாதுகாப்பார்கள். ஆகாயத்தின் சீதோஷ்ணஸ்திதிக்குத்தக்கவாறு முட்டைகளை வெவ்வேறிடமாற்றுவதுமுண்டு. இதுவிஷயம் நாமிலக்கணம் பயிலுங்கால் கற்று இத்தருணமறந்த “எறும்புமுட்டைகொண்டு திட்டை ஏறினால் மழைபெய்தது” என்னுமுதாரணமுகத்தான் நன்குவிளங்கும். மழை வருவதை எதிர்நோக்கி முட்டை தரையின்கீழிருந்தால் மழைச்சலத்தால் நனைந்துபோதல் திண்ணமாதலால் அவற்றை வேறிடங்கொண்டு செல்வது தகுதியன்றோ! இன்னும் ஊழியக்காரர் செய்யுங்கருமங்கள் பலவுண்டு. புழுக்களுக்கன்னமூட்டிச் சுத்திசெய்து தும்பைப்பூப்போல் வெண்மையாய் வைத்திருப்பார்கள். சிற்சிலவமையத்து முட்டையையாரேனும் மிதித்துவிடின் மண்ணோடு கலந்துகிடக்கும் முட்டையை ஒவ்வொன்றாய்ப் பிரித்துப் புற்றிற்குக்கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். வளைகளை பராமத்துப்பார்ப்பார்கள். எறும்புப்புற்றொன்றை நாங்கண்ணுற் காணில் அதனிலுமதிசயக்காட்சியுண்டோ! புற்றினொருபுறம் முட்டை குவியல்குவியலாய்க் கிடக்கும்; மற்றொருபுறம் புழுக்கள் வெள்ளியங்கிரிபோல் விளங்கும். வேறொருபுறம் குஞ்சுகட்குப் பணியாளர் அன்னமூட்டுவார்கள். இன்னொருபுறம் பாதை, அறை முதலியவற்றைச் சுத்தஞ்செய்வார்கள். மற்றொருபுறஞ் சிலர் கைவிரித்துப்படுத்து இளைப்பாறுவார்கள்.

எறும்புச் சமூகங்களொன்றோடொன்று யுத்தம்புரிவது மிக்கவற்புதக்காட்சியே. சிலஜாதியெறும்பு வேறொருஜாதியெறும்பைக் கைதிகளாகக்கொண்டு அவற்றைத் தங்கூட்டத்தார்க்குப் பணிவிடைசெய்விக்கும். ஆயினும், மிக்கநேசத்துடனும், தங்கூட்டத்தார்க்குக் காட்டுமபிமானத்துடனும் அவற்றைப்பாராட்டும். மற்றொருஜாதியெறும்பு தங்கூட்டத்தோடு வைத்துப்பசுப்போற் பாதுகாத்துவரும் வேறுசிலபூச்சியைக் கைப்பற்றுவதற்காகப் போர் புரிவதுண்டு. இப்பூச்சிகள் வண்டினத்தைச் சேர்ந்தவை. இவற்றை யெறும்புகள் தம்மலகுகளாற்றட்ட, அவை தமதுடம்பினின்றுமொழுகுந் தேன்போன்ற ஒரு ரசத்தையீனும். அதைப்பருகி இச்சாதி எறும்புகளிக்கும். மானுடர் பசுவை வைத்துக்காப்பாற்றிப் பாலருந்துவதுபோல் இவ்வெறும்பு அப்பூச்சிகளை வைத்துப்பாராட்டி இன்பந்துய்க்கும். அச்சிறுவண்டுகளை எறும்புகள் ஓரிடத்திருந்து மற்றோரிடத்திற்குக் குடிபோருங்கால் கூட்டிக்கொண்டு பிரயாணஞ்செய்யப்பார்த்திருக்கலாம்.

(இன்னும் வரும்.)

---

உ

சிவமயம்.

# இராமாவதாரச் செய்யுட்பாடாந்தரம்.

## நட்புக்கோட்படலம்.

வெறி னானவ னெவரு மஞ்சுறச்
சீறி னானெடுஞ் சிகர மெய்தினான்
வேறி லாதவன் புதல்வன் மெய்ம்மையா
மாறி னானும்வந் தடிவ ணங்கினான்.

என்னும் ௬௧-ம் செய்யுளில், 'வேறிலாதவன் புதல்வன்மெய்ம்மையா—மாறினானும் வந்தடிவணங்கினான்' என்பது, 'வேறிலாதவன்புரியதம்முன்மேன்—மாறிலானும் வந்தடிவணங்கினான்' எனக்காணப்படுகின்றது. முன்னையதுபொருட்பொருத்தமின்றாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. மாறிலான் - மாறுபாடில்லாதவன்.



## நட்புக்கோட்படலம்.

உன்னி னேனின துள்ளத்தி னுள்ளத்தை யுரவோ
யன்ன வாலியைக் காலனுக் களிப்பதோ ராற்ற
லின்ன வீரர்பா லில்லையென் றயிர்த்தனை யினியான்
சொன்ன கேட்டவை கடைப்பிடிப் பாயெனச் சொன்னான்.

என்னும் ௭௮-ம் செய்யுளில், 'உள்ளத்தினுள்ளத்தை' என்பது, 'உள்ளத்தினுற்றதை' எனக்காணப்படுகின்றது. மனத்திற் பொருந்தியதை என்னும் பொருள்படவருதலின் பின்னையதே சிறப்புடைத்து. தகரமெய்யை விரித்தலாகக்கொண்டு பொருள்கொள்ளின் முன்னையதும் பொருந்தும்.

௸

துன்பு தோன்றிய பொழுதுடன் றோன்றின னெவர்க்கு
முன்பு தோன்றலை யறிதற்கு முடிவெனென் றியம்ப
வன்பு சான்றன வுரைத்தனை யையவெ னக்கை
வென்பு தோன்றல வருகின வெளிற்பிறி தெவனோ.

என்னும் ௮௨-ம் செய்யுளில், 'துன்புதோன்றியபொழுதுடன்றோன்றினனெவர்க்கு—முன்புதோன்றலையறிதற்கு முடிவெனென்றியம்ப' என்பது, 'துன்புதோன்றிய வுடலிடைத் தோன்றினனறிக—வின்புதோன்றுமக்கடவுளை யெவ்வகையெனயான்' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட்பொருத்தமின்றாதலிற் பின்னையதேபொருத்தமுடைத்து. பின்னையதற்கு 'துன்பமே உருவாகத்தோன்றிய உடலையெடுத்துப்பிறந்தேன், அத்தன்மையனாகியயான், இன்பமே உருவாகத்தோன்றிய அந்தக் (கட்புலனாகாக்) கடவுளை எவ்வாறு அறிவேனென்றுகூற—எனப்பொருள் கொள்க. 'துன்புதோன்றிய பொழுதுடன்றோன்றுவன்' என்னும்பாடமும் பொருத்த

---

## மராமரப்படலம்.

கட்டுவன்,
யாழ்ப்பாணம்.

கலைகண் டோங்கிய மதியமுஞ் சதிரவன் றனுந்
தலைகண் டோடுதற் கருந்தவந் தொடங்குறுஞ் சார
மலைகண் டோமென்ப தல்லது மலர்திசை யயற்கு
நிலைகண் டோமெனத் தெரிப்பருந் தரத்தன வேழு

என்னும் ௨-ம் செய்யுளில், 'இலைகண்டோமெனத் தெரிப்பருந்தரத் தனவேழும்' என்பது, 'இலைகண்டல்லது தெரிப்பருந்தரத்தவவ்வேழும்' எனக்காணப்படுகின்றது. மலையைக்கண்டோமென்று சொல்வதன்றி இலையைக் கண்டேயல்லாமல் மரமென்றறிதற்கரியது எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதேபொருத்தமுடைத்து. 'மலைகண்டோமென்பதல்லது' என்பதிலுள்ள 'அல்லது' என்பதை 'அருமை'யோடுமுடிக்க. முன்னையபாடத்தினும் இதிற்பொருள் சிறத்தல்காண்க.

## மராமரப்படலம்.

எய்தல் காண்டுங்கொலின்னமென் றரிதின்வந் தெய்திப்
பொய்யின் மாருதி முதலினோர் புகழ்வுறும் பொழுதின்
மொய்கொள் வார்சிலை நாணினை முறையுற வாங்கி
வெய்ய வாளியை யாளுடை வில்லியும் விட்டான்.

என்னும் ௧௫-ம் செய்யுளில், 'புகழ்வுறும்பொழுதில்' என்பது 'புடையுறும்பொழுதில்' எனக்காணப்படுகின்றது. மாருதிமுதலினோர் எய்தல் காண்டும் என்று புடையில்வந்தார் எனப் பொருள்படுதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

---

## கலன்காண்படலம்.

முளரிமேல் வைகுவான் முருகற் றந்தவத்
தளிரியல் பாசத்தான் றடக்கை யாழியா
னளவியொன் றுவரே மன்றி யையமில்
கிளவியர் தனித்தனி கிடைப்ப ரோதுனே.

என்னும் ௧௬-ம் செய்யுளில், 'ஐயமில்—கிளவியர்' என்பது 'ஐயமில்—கிளவியில்' எனக்காணப்படுகின்றது. ஐயமற்ற (உவமைச்) சொ... பொருள்கொள்ளுமிடத்துப் பொருள்சிறத்தலிற் பின் ...ருத்தமுடைத்து. ஐயமில்கிளவியர் என்பது ஈண்டுப் ...வாளாநிற்றலிற் பொருத்தமின்று.

ஷ

...ங்க ணொளி யேறு மீளி மாவும் வேக நாகமுஞ்
...க வேறி ரண்டொ டொத்தி ரண்ட வன்ன செய்கையார்
...ங்கு சால மூல மார்த மால வேல மாலைபோற்
...பாங்கு நாக முந்து வன்று சார லூடு போயினார்.



என்னும் ௫௪-ம் செய்யுளில், 'வெங்கணாளியேறு மீளிமாவும் வேகநாகமும்' என்பது 'வெங்கண்யானையோடுபாயும் வேங்கைதானும் வேகமாம்' எனககாணப்படுகின்றது. இங்கே சுக்கிரீவன் அனுமன் இராமன் இலக்குவன் என்னும் நால்வருமே கூடியிருப்போராதலின் அந்நால்வருக்குமே இங்கே உவமைகூறுதல் சிறப்பாதலிற் பின்னையதே பொருந்தமுடைத்து. முன்னையதற்கு ஒருவமை கூடிவருதலிற் பொருத்தமின்று. நாகம்—சுக்கிரீவன். வேங்கை—அனுமன். சிங்கவேறிரண்டு—இராமஇலக்குவர். 'மாலைபோல்' என்பதும் 'ஆவுடன்' எனக்காணப்படுகின்றது. இதுவேபொருத்தமாதல்காண்க.

---

## வாலிவதைப்படலம்.

ஆயிடைத் தாரையென் றமுதிற் றோன்றிய
வேயிடைத் தோளினா ளிடைவி லக்கினாள்
வாயிடைப் புகைவர வாலி கண்வருந்
தீயிடைத் தன்னெடுங் கூந்த றீகின்றாள்.

என்னும் ௧௫-ம் செய்யுளில், 'வேயிடைத்தோளினா ளிடைவிலக்கினாள்' என்பது 'வேயிடைத்தோளினாள் விரைவிற்பற்றினாள்' எனக்காணப்படுகின்றது. இந்நூலின் முதனூலாகிய வான்மீகிராமாயணத்தில் "தாரை வாலியைக் கட்டித்தழுவிக்கொண்டு அவன் நன்மைகருதி அவனைத்தடுப்பாளாயினாள்" (ஸ்ரீமத்-கனகசுந்தரம்பிள்ளையவர்கள் மொழிபெயர்ப்பு, கிஷ்கிந்தாகாண்டம் பதினைந்தாஞ்சருக்கம் ௫௮-ம் பக்கம்.) எனக்கூறப்பட்டிருத்தலின் பின்னையதே பொருத்தமுடைத்து. பற்றினாள் என்பதற்குப் பற்றி விலக்கினாள் எனப் பொருள் கொள்க.

இங்ஙனம்,
சி. கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன்,
யாழ்ப்பாணம்.

---

உ

சிவமயம்.

# அறிவு.*

[ஸ்ரீமத்-காரை. கா. சிவசிதம்பர ஐயரவர்கள் உபந்நியாசம்.]

அலைகடலாற் சூழப்பட்ட அவனியின்கண்ணே ஈசுவரனாற் சிருட்டிக்கப்பட்டபிராணிகளுக்குள்ளே மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் மிகுவேற்றுமையுண்டென்பது யாவருமறிந்தவிஷயமன்றோ? மிருகங்களுக்கு காண்டல், கேட்டல், மோத்தல், உருசித்தல், பரிசித்தல், என ஐந்து பிரதம உணர்ச்சிகளுண்டு. இந்த உணர்ச்சி அல்லது அறிவிற்குக்காரணம் மிருகங்களின் தாதுக்களேயாகும். இந்தத்தாதுக்கள் பிறபொருளைப்பரிசித்ததினாலே மேற்கூறிய ஐவகை உணர்வும் உண்டாகின்றன. மிருகங்களின் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பஞ்சேந்திரியங்களின் தாதுக்கள் பிறபொருள்களை மூன்றுவிதமாகப்பரிசிக்கின்றன. எங்ஙனமெனில், மெய்யும் வாயும் பிறபொருள்கள் தம்மேல் நேரே தாக்குதலினால் பரிசத்தையும் உருசியையும் முறையே அறிகின்றன. மூக்கு, பிறபொருள்களின் நுண்ணிய அணுக்கள் தனக்கும் அப்பொருளுக்கும் இடையிலுள்ள வாயுவின்மூலமாய்ச்சென்று அதன் துவாரத் துட்புறத்திற்படுதலினால் உணர்வடைகின்றது. கண்ணும் செவியும் தம்மெதிர்நிற்கின்ற பொருள்கள் முறையே ஆகாயத்தி (Ether) லும், வாயுவிலும் சலனங்களையுண்டாக்க அச்சலனங்கள் நீரிலுண்டாகும் அலைகள்போற் பரந்துதாக்க உணர்கின்றன. இப்படி எவ்வகைப்பட்ட உணர்ச்சிக்கும் ஆதாரமாகியதாதுக்களுக்கு மூலஸ்தானமாக விளங்குவது மூளையேயாகும். எப்பொருள் எப்பொறியிற்றாக்கினும் அதை உணரத்தக்கதானம் மூளையேயாதலால் அறிவிற்குப்பற்றுக்கோடு தாதுசங்கமம்பொருந்திய சிலவர்க்கங்களின் மூளையேயாகும். சிலவர்க்கங்கள் தங்கள் பஞ்சேந்திரியங்களாலுணரப்பட்ட உணர்ச்சியைப்பதித்து, பின்னரதனை

* இவ்வுபந்நியாசம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆறாவது வருஷோற்சவ தினங்களில் ஒன்றாகிய 1907-ஆம் மே-மீ 25-உ மாலை கூடிய வித்வச்சபையில் படிக்கப்பெற்றது.



க்கவனிக்குஞ் சத்தியே மனமாகும். மிருகங்கள் தந்தம் நிலைமைக்குத்தக்க இயற்கையறிவுடையவைகளாய்ச் சீவித்து ஒரேவகைப் பழக்கமுடையவைகளாய், தாம் உண்டாக்கப்பட்ட காலம் முதல் இந்நாள்காறும் தாமாய் யாதும் நூதனசம்பவங்களை முயற்சிபண்ணிச்செய்யாமலும், ஒன்று தன்னினமாகிய மற்றொன்றைப்பார்க்கிலும் தேர்ச்சியடையாமலுமிருக்கின்றன. பல்லாயிரம் வருடங்கட்குமுன் கட்டின கூண்டின்வண்ணமே குருவி தற்காலத்துங் கூண்டுகட்டுகின்றது. பார்ப்பவர்கள் தேன்கூட்டின் அமைப்பு மிகவிசித்திரமானவையென்று சொல்லவேண்டுமேனும், ஆதிமுதலாக அமைக்கப்பட்டதேன்கூடுகள் இவ்வாறேயமைக்கப்பட்டதேயன்றி தேனீக்கள் காலத்துக்குக்காலம் தேர்ச்சியடைந்து இவ்வாறு அமைத்திருக்கின்றனவென்று கொள்வதற்கு யாதோர் ஆதாரமும் இல்லை. மிருகங்களுக்கு இவ்வாறுள்ள அறிவு இயற்கையென்றும் இயற்கைப் பழக்கமென்றும் ஊகிக்கவேண்டியதேயாகும்.

மிருகங்களுக்கும் மக்கட்கும் பஞ்சேந்திரியவுணர்ச்சி ஒருபடித்தாயினும், மக்களோ அப்பஞ்சேந்திரியங்களோடு யுத்தியென்னும் அகவிந்திரியமுஞ்சேர்ந்து * ஆறறிவுடையராய் ஒவ்வொன்றையும் பகுத்தறியும் உணர்ச்சியின் திட்பத்தானே சிறந்தவரென்பது வெள்ளிடைமலைபோல விளங்கலாகும். கடவுள் சர்வஞ்ஞரும் மனுஷன் கிஞ்சிஞ்ஞனுமாயிருப்பினும் யுத்தியென்னுமித்தத்துவம் அவனை மிருகங்களினின்றும் விசேஷப்படுத்தி, கடவுளோடு ஒருவாறு இணைத்துவிடுகின்றதென்னல் வழுவாகாது. இது செய்யலாம், இது செய்யப்படாது என்னும் விதிவிலக்குகளைப் பகுத்தறியுமுணர்ச்சி எவர்க்கில்லையோ அவர்க்கும் மிருகங்களுக்கும் யாதொருபேதமுமில்லையென்பதே அறிவாளரின்கொள்கையாகும். மனிதரின் பகுத்தறியுந்தன்மை அவனவன் சார்ந்திருக்கும் இனத்துக்கேற்றபடியேயிருக்கிறதெனவும், அவனுக்கு இயற்கையிலேபகுத்தறிவு என்பது கிடையாதெனவும் சிலமனோதத்துவசாஸ்திரிகள் வாதிக்கின்றார்கள். அவ்வாறு கூறுவது பொருந்தாது. ஆயினும், அவர்கள் கூறுவது முழுதும் அபத்தமென்று சொல்வதற்கு மியையாது. மனிதனுடைய

* மனிதர் ஐயறிவுடையரென்பது ஒருபாலார்கொள்கை: அது பொருந்தாது.

இயற்கையறிவு சேர்க்கைக்குத்தக்கதாய் உண்டாமென்பது உண்மையே. இக்காரணம்பற்றியன்றோ சீர்படவேண்டி ஒவ்வொருவனும் சன்மார்க்க சங்கத்தை மேவவேண்டுமென்றும், நல்லோரை நாடவேண்டுமென்றும்; தீயாரைவிட்டகலவேண்டுமென்றும் பண்டைக்காலத்தான்றோர் வற்புறுத்திக்கூறியுள்ளார். பகுத்தறிவு பழக்கத்துக்கேற்றபெற்றித்தாய்த் திருந்துந் தன்மையாலேயே பகுத்தறிவு என்பது இயல்பாக மக்களிடத்தில்லையென்று சாதிப்பது தர்க்கிலக்கணமாகுமா? எங்ஙனமெனில், "இணைக்காறிந்திணங்கு" எனக்கூறிய ஆன்றோர் வசனப்படி இன்னதை நல்லினக்கமென்றும், சங்கமென்றும், இன்னதை அஃதல்லவென்றும் ஆதியில் அறிந்துகொள்வதற்குப் பகுத்தறியும் உணர்ச்சி ஒவ்வொருவனுக்கும் அத்தியாவசியகம் வேண்டற்பாலதேயாகும். "வித்தில்லாச்சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை" என்றபடி மனிதனுக்கு ஆதிதொட்டு இயல்பாயில்லாத வோர்தத்துவம் இடையிலுண்டாதல் கூடாது. பின்னை, பகுத்தறிவு என்னும் தத்துவம் சுபாவத்தில் சமட்டிரூபமாயிருந்து பின்சேர்மானம், பழக்கம் என்பவற்றிற்கேற்க விரிந்து பலமுறுகின்றதெனச் சொல்வதே சரியாகும். பகுத்தறிவு முற்றுமேயில்லை: சார்பினாற்றான் பகுத்தறிவு உண்டாகிறதென்று வாதிக்கும் மனோதத்துவசாஸ்திரிகள், ஆதியில் மனிதனுக்குப்பகுத்தறிவு எப்படி உண்டாயதென்பதை விளக்கிக்காட்டுவாராக. உலகத்திலே அறிவைவிட உயர்ந்தபொருள் யாதொன்றுமில்லை. விலையேற்றமுள்ள நவரத்தினங்களும், பொன் முதலிய லோகவகைகளும் அறிவிற்கு இணையாகாவே. மின்சாரத்தபால், நீராவியந்திரம் முதலிய மிக்க அதிசயமான ஏற்பாடுகளெல்லாம் அவற்றைக்கண்டுபிடித்தவர்களின் திட்பமான அறிவின் மகத்துவத்தை விளக்கிக்காண்பிக்கின்றனவல்லவா? அஃதின்றி, அவர்களின்பொருள், குலம் முதலியவற்றை உத்கிருஷ்டமாகக்காண்பிக்கவில்லையே. ஆகையால், அறிவே பிரதானப்பொருளன்றி மற்றவையவ்வளவு சிறப்புடையனவல்ல என்றுகொள்வதற்குந்தடையுண்டா? தக்க அறிவாளிக்குச் சொந்தத்தேசமென்றும் அன்னியதேசமென்றுமில்லையே. அறிவாளிக்கு எல்லாத்தேசமுஞ் சொந்தத்தேசமாகுமல்லவா? அவனுக்குப்பகைவரென்றும் சிநேகரென்றுமில்லையே. அவன் அவரவருக்கு ஏற்பநடந்துகொள்ளும் சா



துரிய அறிவால் எவர்களும் அவனுக்கு நட்பினராகவே உறைவாரன்றோ? ஆகவே திருவள்ளுவநாயனாரும்,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

"பொன்றலினட்பினுக் கப்புணர்வொடுபழகல்வேண்டா
நின்றநல்லுணர்ச்சிதானே நிறைக்குமென் றுணர்ந்தநல்லீர்" *

என்றதும் அதனை.

அறிவுடைய ஒருவனது நேசத்தையாவரும் விரும்புவார்களே. அரசனும் அவனுடைய சிநேகத்தை விரும்பி அவனுக்கு வேண்டியவற்றைச்சம்மானஞ்செய்வானன்றோ? "அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்" என்று பெரியோர் கூறியுள்ளார். அறிவுடையொருவன் எவ்விதமான ஆபத்துவரினும் அதினின்றும் விலகிக்கொள்வான். அறிவுடையொருவனை வெல்லுதற்கு ஒருவராலும் முடியாதென்பது நிதர்சனமே. நீரையுடைய ஆறானது தன்னையடைந்தபொருளைப் பெருங்கடலிடத்திலே சேர்ப்பதுபோல, அறிவானது ஒருவனை அடைதற்கரிய மேனிலையிற் சேர்க்கின்றதல்லவா. ம்மையாளும் அரசினரும் அஞ்சியிருந்த பெருந்தோற்றத்தினராகிய ருஷ்யரை சின்னபின்னப்படுத்தி வெங்காட்டியோடும்படி செய்தது, சிற்றுருவமைந்த ஜப்பானியரின் கூரிய அறிவன்றோ.

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து"

எனவுரைத்த தேவர் வாக்குக்கு இஃதோரிலக்கியம்போல விளங்குகின்றதல்லவா? "உருவுகண்டெள்ளாதாற்றலுணர்வதே உணர்ச்சி" ¶ என்றதும் அதனை.

சகலவளங்களையுமொருங்கே படைத்த தேசமெனினும், அறிவாளரில்லாவிடத்து அதுவுந்தேசமாகுமா? இதுபற்றியன்றே,

* சீகாளத்திபுராணம், நக்கீரச்சருக்கம், ௭௬.
¶ கந்தபுராணம், மூன்றாநாட் பானுகோபன் யுத்தப்படலம், ௧௰௩.

"சான்றோரில்லாத் தொல்பதி யிருத்தலிற்
றேன்றேர் குறவர் தேச நன்றே"

என்றுபோதாவியர் கூறியுள்ளார். பூர்வகாலத்தே மரக்குகைகளில் வசித்தமாந்தர்களையுடைய யேலேத்தேசத்திலே லார்ட் பிராஞ்சீஸ் பேக்கன் (Francis Lord Bacon,) ஸர் ஐசக்நியூட்டன் (Sir Isaac Newton,) கலிலீயோ (Galileo,) ஸர் வில்லியம் அர்ஷல் (Sir William Herschel) முதலிய அறிவாளர்தோன்றுகிருப்பரேல் அத்தேசங்களுந்தேசங்களாகும்? அத்தேசங்களுக்கு இப்பெருமைகளெல்லாம் வந்தது அறிவாளரின் தோற்றத்தாலன்றோ? அதுநிற்க. மக்களின் அறிவு சிறுபான்மையியற்கையேயாயினும் பெரும்பான்மை தாங்கொண்ட மக்களின் சேர்க்கைக்குத்தக்கதாகவே உண்டாகுமென்று கொள்வதே ஏற்புடைத்தாகும். இயற்கையுஞ்செயற்கையுஞ் சேர்ந்தசமூகமே மக்களின் அறிவாகும். உடம்புவளரவளர மூளை விசாலித்து அறிவு அபிவிர்த்தியடைகின்றதல்லவா? மக்கள்யாவரும் ஒரேதன்மையினராகவிருந்தும் சிலர் தீவிரமான அறிவுடையவர்களாகவும் சிலர் இல்லாதவர்களுமாக இருக்கக்காண்கின்றேமே. அவ்வாறு இருப்பதற்குக்காரணம் யாதென்பதை நன்காராய்ந்தால் மக்களின் மூளையின் வளத்துக்குத் தக்கபடியே அறிவும் பொருந்தியிருக்குமென்று ஊகிப்பதே நியாயமாகும். மக்கள் தாம் தாம் கொண்ட சேர்க்கையாரின் பழக்கவழக்கத்துக்குத் தக்கவாறு அறிவுடையராவரென்பது பிரத்தியட்சமன்றோ? இவ்வாறுண்டாகும் அறிவே சாதாரணமாகும். இச்சாதாரண அறிவு மக்களெவரிடத்தும் விளங்குவதாகும். இச்சாதாரண அறிவினின்றும் விளங்குவதே மேலாயதீவிர அறிவாகும். இத்தீவிர அறிவே ஒவ்வொன்றையும் பகுத்துணரும் ஆற்றலுடையதாகும். இத்தீவிர அறிவே மக்கட்கு இன்றியமையாச் சிறப்புடையது இத்தீவிர அறிவு கல்வியாலன்றி வேறொருவாற்றானும் எய்தப் பெறுதென்பதே கற்றறிந்த மேலோரின் கொள்கையாகும். மக்கள் எத்துணைகாறுங் கற்கின்றார்களோ அத்துணைகாறும் அறிவு உண்டாகுமல்லவா? இதுபற்றியன்றே,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்றார் பொய்யாமொழியார்.



"சித்திரம் விவேகத்தையும், காவியம் சாதுரியத்தையும், பிரகிருதிசாஸ்திரம் ஆழத்தையும், தர்க்கசாஸ்திரம் சக்தியையும், நீதிசாஸ்திரம் சேஷத்துவத்தையும் தருமென்று பேகன்பிரபு (Lord Bacon) சொல்லுகிறார்." தீவிர அறிவே ஒரு பொருளின் தத்துவத்தை சந்தேக விபரீதமற உணரும்புணையாகும். நாயனாரும்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

எனக்கூறினார்.

உண்மையறிவால் தத்துவஞானமுண்டாகி நிருவிகற்பசமாதியாய் ஈசனதடிக்கமலஞ் சேர்தலே பேறாகும்.

அறிவையபிவிருத்தி செய்யும்பொருட்டாகத்தோன்றிய நம்செந்தமிழ்ச்சங்கம் பெரும்பயனளித்துப் பல்லாண்டு வாழ்வதாக!

காரை. கா. சிவசிதம்பர ஐயர்,
யாழ்ப்பாணம்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# தணிகைப்புராணம் மூலமும் உரையும்.

## உரைச்சிறப்புப்பாயிரம்.

தொல்காப்பியப்பெருந்தோணித்தமிழ்யாலுமியாங்கத்துகளின்றேடிப்
பல்காப்பியத்துறைகள்படிந்தசைவசிகாமணிநற்பதிநூறேர்ந்தோன் [ன்
அல்காப்பல்புகழுடையானிணுவையிலம்பிகைபாகனவைபோற்றுந்தெ
சொல்காப்பத்திருத்தணிகைப்புராணவுரைதரல்வியப்போசொல்லான்
[றீரே.

இத்திருத்தணிகைப்புராணம், புராணங்களெவற்றினும் மாணிக்கம்போலப் போற்றப்படுவதென்பது கற்றுணர்புலமையிற்றலைமையோரெவர்க்கு மொப்பமுடிந்தது. இப்புராணத்தை அலங்காரம் முதலிய எவ்வகைநலனும்பெற்றொளிருமாறு தமிழ்ப்பாடையிற் றந்தவர்,

சிவஞானசுவாமிகளது பிரதமமாணாக்கரும், பலபுராண ஆசிரியருமா
கிய கச்சியப்பமுனிவர். இப்புராணத்தின் அருமை பெருமைகளை
இனிதுணர்ந்தே புதுக்கோட்டை அரசர், இதற்கு உரையியற்றுவா
ர்க்குத் தக்கபரிசிலளிக்கப்படுமென முன்னோர்போது வெளிப்படுத்
தியுள்ளார். இன்னனம் அருமையும் பெருமையுமாகிய இப்புராண
த்தின் முதல் ஒருநூறு செய்யுள்களுக்கு யாழ்ப்பாணம் வித்வான்
அம்பிகைபாக உபாத்தியாயர் அவர்களால் உரையியற்றி வெளிப்ப
டுத்தப்பட்டது. எஞ்சியபாகவுரை வெளிபாதற்குமுன் உபாத்தி
யாயர் அவர்கள் சிவபதமடைந்து விட்டார்கள். ஆகலின், இவ்வு
ரையையும், எஞ்சியபாக உரையையும், கல்விவிருத்தியும், பரோபகா
ரமுங் கருதி இச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடத்துணிகின்றேன்.
உரைகளிற் பிழைகாணப்படின், அவ்வக்காலங்களில், திருத்தம்செ
ய்யுமாறு அறிஞரை வேண்டுகின்றேன்.

## உரைக்காப்பு.

திங்கட்சேய்பணிசெஞ்சடையிடந்தொறுந்திரைபாற்
கங்கைகாட்டுதன்னுருவகிகலத்தலிற்கடியும்
புங்கவன்முதற்புதல்வனைப்பிரணவம்பொருவும்
துங்கயானையானனத்தனைத்துணைக்கழல்தொழுவாம்.

## விநாயகர் காப்பு.

மும்மதத்தனென்றொருபெயர்தனக்குமொய்கூந்தற்
கொம்மைவெம்முலைகோற்றொடிக்கொடிச்சியையிலைவேற்
கைம்மலர்த்தனியிளவற்குங்கஃறெனுங்கானத்
தம்மமுந்துபுக்குறாத்தவனடிமலர்பணிவாம்.

(இதன் பதப்பொருள்.) முந்து கஃறெனுங் கானத்துப் புக்கு -
முன்னொளிலே இருண்ட காட்டின்கண் (யானைவடிவாய்ச்) சென்
று, மும்மதத்தன் என்ற ஒருபெயர் தனக்கும் - மும்மதத்தன் எ
ன்ற ஒப்பற்றபெயரைத் தமக்கும், மொய்கூந்தல் - மொய்த்த கூந்
தலையும், கொம்மை வெம்முலை - இளமை பொருந்திய விருப்பத்த
க்க முலையையும், கோல் தொடி கொடிச்சியை - திரண்டவளைய
லையுமுடைய வள்ளிநாயகியை, இலை வேல் கைம்மலர்த்தனி இள
வற்கும் - இலைத்தொழிலமைந்த வேற்படையைத்தரித்த திருக்கர



மலரையுடைய ஒப்பற்ற முருகக்கடவுளுக்கும், உறாத்தவன் அடி
மலர் பணிவாம் - சேர்த்தருளிய விநாயகக் கடவுளுடைய பாதாரவி
ந்தங்களை வணங்குவாம். எ - று.

தனக்கு மும்மதத்தன் என்ற பெயரையும் இளவற்கு வள்ளிநா
யகியையும் உறாத்தவன் என்றது, யானையுறுப்புக் கழுத்துக்குமே
லன்றி யின்மையால், மும்மதத்தனுதல் சாலுமென்னு மாசங்கையை
நீக்கி இந்நூலாசிரியர் தந்துணிபுரைத்தவாறு. முந்துபுக்குறாத்தவ
ன் எனுஞ்சொல்லாற்றலால், எல்லாவற்றிற்கும் முதலினுள்ள உன்
மனையிற் பிரணவரூபமாயிருந்து பிரபஞ்சத்தை நிலைப்படுத்துவானெ
ன்னு மொருபொருளுந் தோன்றினமை அறிக. விநாயகக் கடவுள்
மூலாதாரத்தினும், முன் மனுந்தத்தினு மிருத்தலை ஆகமங்களிற் கா
ண்க. (க)

## வேறு.

ஊற்றிருக்குமதக்கலுழியுன்னுமடியாருளத்துக் கறையைமண்ணக், கூற்
றிருக்குங்கூர்நுதிவெண்கோடுவெளிற்றறிவிரண்டுங்குமைப்பமேனி, தோற்
றிருக்குமளப்பரியசுடர்நிறைப்பத்தோரணகம்பத்தெஞ்ஞான்றும், வீற்றி
ருக்கும்பெருமானைவிரைமலர்தூய்ப்பணிந்தெழுந்தெம்மெலிவுதீர்வாம்.

(இ - ள்) ஊற்று இருக்கும் மதக்கலுழி - ஊறுதலையுடையரு
மதமாகிய கலங்கனீர், உன்னும் அடியார் உளத்துக் கறையை மண்
ணா - தம்மை நினைக்கும் அடியாருள்ளத் (தஞ்ஞானமாகிய) கறை
யைக்கழுவவும், கூற்று இருக்கும் கூர்நுதி வெண்கோடு - கொலைத்
தொழில் பொருந்திய கூரிய நுனியையுடைய வெள்ளிய திருக்கோ
டானது, வெளிற்று அறிவு இரண்டும் குமைப்ப - (அவருள்ளத்துப்
பாசஞானம் பசு ஞானமாகிய) வெளிற்றறிவுகளிரண்டனையுமழிக்க
வும், மேனி தோற்று இருக்கும் அளப்பு அரிய சுடர் நிறைப்ப - தி
ருமேனியானது எவற்றையுமளந்துகாட்டும் வேதங்களு மளத்தற்க
ரிய (பரஞானமாகிய) சுடரை அவருள்ளத்து நிறைக்கவும், தோர
ண கம்பத்து எஞ்ஞான்றும் வீற்றிருக்கும் பெருமானை—தோரண
கம்பத்தில் எப்பொழுதும் வீற்றிருக்கின்ற விநாயகக்கடவுளை, வி
ரைமலர் தூய்ப் பணிந்தெழுந்து எம்மெலிவு தீர்வாம் - மணம்பொரு
ந்திய மலரைத்தூவி வணங்கி எமது வருத்தத்தினின்றும் நீங்குவாம்
எ - று.

*

பாசஞானமாவது, நால்வகைவாக்கினால் வரும் சொற்பிரபஞ்சமும், நிலம்முதல் நாதமீறாகிய பொருட் பிரபஞ்சமும் என்னும் இவை பற்றி நிகழும் ஏகதேசஞானம். பசுஞானமாவது, இப்பாசஞானத்தைப் பொருந்திய ஆன்மா இவையனைத்துந் தன்கீழ் வியாப்பியமென்றறிந்து நீங்கித் தான் அவற்றிற்கு வேறுபடுதலான, அச்செருக்குக் கொண்டு நானே பிரமமென நினைப்பது. இவைகள், பதிஞானம்போல உள்ளீடின்மைபற்றி வெளிற்றறிவென்றார். தோரணகம்பம்- வாயிலில் நாட்டப்படுவதோர் கம்பம். ஏவப்பட்டார் பிழைக்கலரிதாதலின், "கூற்றிருக்கும் கூர்நுதி வெண்கோடு" என்றும், மதசலமானது, திருமேனியிலணிந்த சந்தனம் குங்குமத்தோடு கலந்து வருதலின், 'கலுழி' என்றுங் கூறினார். கலுழ= அழுக்கு. (உ)

## கடவுள் வாழ்த்து.

### சிவபெருமான்.

உலகிருளுருவத்தொளிகளினிரித்தாங்குறுபொருளெவற்றையுந் தெரி[த்துள்
விலகிருண்முழுதுமருள்கொடுதுமித்துவிராயொளிர்தன்னையுந்தன்னா
லிலகுயிர்தனையுந்தெரித்தறிவுறுக்குமியல்பினெக்காலமும்பிறழா
தலகிலற்புதக்கூத்துமையினைக்காட்டுமடிகள்சேவடிகளைப்பணிவாம்.

(இ - ள்.) உலகு இருள் உருவத்து ஒளிகளின் இரித்து - உலகத்திலுள்ள புறவிருளை உருவவொளியாகிய சோம சூரியாக்கினிகளால் நீக்கி, ஆங்கு உறுபொருள் எவற்றையுந் தெரித்து - அவ்வுலகிலுள்ள எப்பொருளையும் (கண்ணுக்கு) விடயமாகச் செய்து, விலகு உள்ளிருள் முழுதும் அருள்கொடு துமித்து -(இச்சாஞானக்கிரியைகளை) மறைக்கும அகவிருளாகிய ஆணவமலம் முழுமையையும் அருளாகிய ஒளிகொண்டு தடிந்து, விராய் ஒளிர் தன்னையும் - (பெத்தக்காலத்து அறியப்படாது) கலந்தும் (முத்திக்காலத்து) விளங்கியுமிருக்கும் (பதிப்பொருளாகிய) தம்மையும், தன்னால் இலகு உயிர் தனையும் - தம்மால்விளக்க விளங்கும் (பசுவாகிய) ஆன்மாவையும், தெரித்து அறிவுறுக்கும் இயல்பின் - தெரிவித்தறிவுறுத்தலாகிய தம்மியல்பினின்றும், எக்காலமும் பிறழாது - எந்தக்காலத்தும் மாறுபடாமல், அலகு இல அற்புதக்கூத்து - எண்ணிறந்த அற்புதத்தையுடைய திருக்கூத்தை, உமையினைக்காட்டும் - உமையம்மைக்



குக் காட்டியருளும், அடிகள் சே அடிகளைப் பணிவாம் - சிவபிரானுடைய சிவந்த திருவடிகளை வணங்குவாம் - எ - று.

'உமையினைக் காட்டும்' என்பது, "அறிவுடையந்தணனவனைக் காட்டென்றானே" என்பதுபோல வேற்றுமைமயக்கம். 'விலக்கு' 'விலகு' என விகாரமாயிற்று. அற்புதக்கூத்து, பஞ்சகிருத்திய யோக்கியதைபண்ணும் நிஷ்களாதீத நடனம். அது, ஆன்மாக்கட்குப்புதிது புதிதாய்த்தோன்ற அருள் செய்தலின் அவ்வாறு கூறப்பட்டது. 'அருள் கொடுதுமித்து' எனவே, மலத்தீர்வும், 'விராயொளிர்தன்னையும் தன்னால் இலகு உயிர்தனையுந் தெரித்து' எனவே, ஆராய்ச்சியும், "அறிவுறுக்குமியல்பிறழாது" எனவே, அனுபவமுங் கூறியவாறு. "மூலமலமுங்கெடுத்து" என்பது போதர 'இருண்முழுதும்" என்றும்; நல்வினை நீக்கத்திற் றீவினை சென்றடைதல்போல, புறவொளி நீக்கத்தில் புறவிருள்வருமென்பது தோன்ற, "இரித்து" என்றும், கடலொடுகலந்தயாற்றுநீர் கடலெனப்படுதலன்றி யாறெனப்படுதலும் மீடலும் இல்லாததுபோல, சிவத்தொடு கலந்த ஆன்மாச் சிவமெனப்படுவதல்லது திரும்பலும் பசு எனப்படுதலுமின்று என்பது போதரத் 'துமித்து' என்றுங்கூறினார். "பொன்னிறவைம் புலன்களெல்லாம் பொய்யெனமெய் கண்டான் பொருந்திடுவன் சிவத்தினோடும் போதான்பின்னை, முன்னிறை நீர் சிறைமுரியமுடுகியோடி முந்நீர் சேர்ந்தந்நீராய்ப் பின்னீங்காமுறைபோல்" என்பதனாலும் அறிக. (௪)

### சிவசத்தி.

சீரணிசிருக்குமணிவடஞ்சங்குதிகிரிசூலப்படையிலைவேல்
போரணிபாசமங்குசங்கழைவில்பூங்கணைவேறுவேறணியா
வாரணன்மாயனரனிபமுகத்தனனங்கனென்றிவர்தொழிற்கெல்லாங்
காரணமாதறெளித்தருள்கொழிக்குங்கன்னியையுன்னியேத்தெடுப்[பாம்.

(இ - ள்.) சீர் அணி சிருக்கு மணிவடம்-சிறப்புப் பொருந்திய நெய்த்துடுப்பும் அக்கவடமும், சங்கு திகிரி - சங்கும் சக்கரமும், சூலப்படை இலைவேல் - சூலாயுதமும் இலைத்தொழில் பொருந்திய வேலாயுதமும், போர் அணி பாசம் அங்குசம் - போரை அணியாகவுடைய பாசமும் தோட்டியும், கழைவில் பூங்கணை - கருப்புவி

ல்லும் மலர்ப்பாணமும் ஆகிய இவற்றை, வேறு வேறு அணிபா - வேறுவேருக அணிதலால் (முறையே), ஆரணன் மாயன் அரன் இபமுகத்தன் அனங்கன் - நான்முகன், நாரணன், அரன், விநாயகன், மன்மதன், என்ற இவர் தொழிற்கு எல்லாம் - என்று சொல்லப்பட்ட இவர்கள் தொழில்கட்கெல்லாம், காரணம் ஆதல் தெளித்து - தான் காரணமாயிருத்தலைத் தெளிவித்து, அருள்கொழிக்குங் கன்னியை உன்னி ஏத்தெடுப்பாம் - அருளைக்கொழிக்குஞ் சிவசத்தியை (மனத்தால்) நினைந்து (வாக்கால்) துதிப்பாம் எ - று.

இருக்கு, மாலைஎன்பாருமுளர். நான்முகன் முதலிய கிருத்திய கர்த்தருடைய தொழிலெல்லாம், சிவசத்தியால் நடத்தலால் வெளிப்படையாய் அவ்வச்சத்திரூபங்களிற் றரித்திருக்கும் இவ்வாயுதமே தங்களே கண்கூடாகக் காட்டுமென்பார், "இவர் தொழிற்கெல்லாங் காரணமாதறெளித்தருள்கொழிக்குங் கன்னியை" என்ருர். 'வேறுவேறணியா' என்றதனுல், ஐவருக்கும் ஐந்து சத்தியாயிருத்தல் பெற்ரும். (௨)

## ஆபத்சகாய விநாயகக் கடவுள்.

*பண்ணியமேந்துங்கரந்தனக்காக்கிப்பானிலாமருப்பமர்திருக்கை*
*விண்ணவர்க்காக்கியரதனக்கலசவியன்கரந்தந்தைதாய்க்காக்கிக்*
*கண்ணிலாணவவெங்கரிபிணித்தடக்கிக்கரிசினேற்கிருகையுமாக்கு*
*மண்ணலைத்தணிகைவரைவளராபத்சகாயனையகந்தழீஇக்களிப்பாம்.*

(இ - ள்.) பண்ணியம் ஏந்துங் கரம் தனக்கு ஆக்கி - மோதகம் ஏந்துந் திருக்கரத்தைத் தம்பொருட் டாக்கியும், பால்நிலாமருப்பு அமர் திருக்கை - பாதிச்சந்திரன்போலும் கொம்புபொருந்துந் திருக்கரத்தை, விண்ணவர்க்கு ஆக்கி - தேவர்கட்காக்கியும், அரதனக் கலசவியன்கரம் - இரத்தினகலசந் தரித்த பெரிய திருக்கரத்தை, தந்தைதாய்க்கு ஆக்கி - தந்தைதாயர்கட்காக்கியும், கண் இல் ஆணவ வெம்கரிபிணித்து அடக்கி - அறிவின்மையாகிய ஆணவமலமென்னுங் கொடியயானையைப் பிணித்து அடக்குதலினுல், இருகையும் கரிசினேற்கு ஆக்கும் - மற்றை இரண்டு திருக்கரத்தையும் அஞ்ஞானியாகிய என்பொருட்டும் ஆக்கும், அண்ணலை - பெருமையையுடையவரை, தணிகைவரை வளர் ஆபத்சகாயனை - தணிகைமலையி



லெழுந்தருளிய ஆபத்சகாய விநாயகக்கடவுளை, அகம்தழீஇக் களிப்பாம் - மனதிற்றியானம் பண்ணுதலாற் களிப்படைவாம். எ - று.

கண் = அறிவு. அறிவின்மை, அஞ்ஞானம் என்னும் பொருட்டு. ஆணவக்கரி பிணித்த கரம், பாசந்தரித்த கரம். அடக்கியகரம், அங்குசந் தரித்த கரமென்பதறிக. விண்ணவருடைய பகையைமாற்றலான், "மருப்பமர் திருக்கைவிண்ணவர்க்கு ஆக்கி" என்றும், அபிடேகஞ்செய்தலால், "அரதனக்கலசவியன்கரந் தந்தைதாய்க்காக்கி" என்றும், ஆணவக்கரியைப்பிணித்தலும், அதன் வலியையடக்குதலுஞ் செய்யும் பாவனையுடைமையால், அங்குசபாசந்தரித்த கரங்களை, "கரிசினேற்கிருகையுமாக்கும்" என்றுங்கூறினர். (௩)

இங்ஙனம்,

அ. க. வைத்தியலிங்க உபாத்தியாயன்.
இணுவில், யாழ்ப்பாணம்.

[உபாத்தியாயரவர்கள், தணிகைப்புராண முழுமைக்கும் எழுதப்பட்ட வுரையை வெளியிடுவதாகத் தெரிவித்திருப்பது, தமிழ் மக்கள் பெரிதும் விரும்பத்தக்கதேயாம். ஆனுல் பெருநூலாகிய அப்புராண உரை முழுதும், மேற்காட்டியவாறே, "செந்தமிழ்" மூலம் வெளிவருவதாயின் பல வருஷங்கள் செல்லும் என்பது திண்ணம். அவ்வாறு, பெரும்புத்தக ரூபமாக வெளியிடற்குரியதைப் பத்திரிகைக்கு உபயோகிப்பதினும், உபாத்தியாயரவர்கள் சங்கத்தினுதவிபெற்ருே அல்லது வேறு வழியாகவோ, தனியாக வெளியிடக்கூடுமானுல், அது சிறந்ததென்றே நம்புகிறேன். ஆயினும், அவ்வுரையின் போக்கு முதலியவற்றைச் செந்தமிழபிமானிகள் தெரிந்துகொள்ளுதற்கு அனுகூலமாக, உபாத்தியாயரவர்கள் அனுப்பியபகுதியை இங்கே வெளியிடலாயிற்று. பத்திராசிரியர்.]

உ
கடவுள் துணை.

# பொருளைய விளக்கம்.*

[பின்னத்தூர் ஸ்ரீமத்-அ. நாராயணசாமி ஐயரவர்கள் உபந்நியாசம்.]

முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமப்புலவர்களே! (தொல். பொருள். மெய். க.) "பண்ணைத்தோன்றிய வெண்ணான்கு பொருளுங், கண்ணிய புறனே நானான் கென்ப" என்ற சூத்திரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் நகைச்சுவைக்குப் பொருளாவது 'ஆரியர் கூறுந்தமிழ்' என்றனர். அதற்கு எடுத்துக்காட்டாவன யான் கூறுவனவேயாம்; அங்ஙனம் நகைத்தற்குரியவாயினும் கல்வியறிவிற்சிறந்த பெரியோர்கள் செவியேற்றருளுமாறு வேண்டுகிறேன்.

உலகத்தில் அனேக பாஷைகளிருக்கின்றனவென்றும் அவற்றுள் இலக்கணவரம்புடையன சிலவேயென்றும் அப்படியுள்ளனவற்றும் நிரம்பிய இலக்கணத்தன வடமொழி தென்மொழி யென்னுமிரண்டேயென்றும் யாவருமறிந்துகொண்டிருக்கின்றார்கள். அவ்விருமொழியுள்ளும் வடமொழிக்கு வியாகரணம்போலத் தமிழுக்கு எழுத்துச்சொல்லிலக்கணங்கள் தெளிவாயமைந்துள்ளன; அப்படியே தருக்கம் சோதிடம் கணிதம் முதலியவும் பலவகைப்பட்ட காப்பியங்களும் பண்டைக்காலத்திலே மொழிபெயர்க்கப்பட்டும் தத்தம் அறிவின் ஆற்றலால் ஆக்கப்பட்டும் நிலைநிறுத்தியன.

"ஏரணமுருவம் யோகமிசைகணக்கிரதஞ்சாலந்
தாரணமறமேசந்தந்தம்பநீர்நிலமுலோக
மாரணம்பொருளின்றின்னபான நூல்யாவும்வாரி
வாரணங்கொண்டதந்தோவழிவழிப்பெயருமாள்" என்றபடி

கபாடபுரத்திற் சங்கமிருந்து கடல்கொண்டபொழுது அழிந்துபோனபின்பும் பிற்காலத்திலுள்ள சான்றோர்கள் பலராலும் அமைக்

* இவ்வுபந்நியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ஆறாவது வருஷோற்சவ தினங்களில் ஒன்றாகிய 1907-ஆடு மே-மீ 26-உ காலை கூடிய வித்வச்சபையில், உபந்நியாசகராற் படிக்கப்பெற்றது.



கப்பட்ட தருக்க முதலியன முற்கூறியவும் பிறவும் எல்லையின்றிப் பரந்துள்ளன. அன்றி, வடமொழிக்கு வேதம்போலத் தமிழுக்குத் திருக்குறளும் தேவார திருவாசக திவ்யப்பிரபந்த முதலாயினவும் பிறவுமான சமயநூல்களுக்கு அவ்வப்பகுதியும் நிறைந்திருக்கின்றன. அன்றித் தமிழில் பதினெண்கீழ்க்கணக்கு முதலாயினவற்றிற் கூறப்படுகிற நீதிகள் எந்தப்பாஷைகளிலுமில்லையென்பது ஒருதலை. இவையன்றி யாந்தர்க்கு இன்றியமையாத பொருளிலக்கணமொன்று தமிழில் விசேடமாகவுள்ளதென்பது நன்கறியக்கிடந்ததொன்றேயாம். அவ்விலக்கணந்தான் மனிதர்க்குரிய 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் நான்கு பயன்களையும் தெளிவாகக்கூறுவது. அது வழக்கு நூலாதலால் பெரும்பான்மையும் நால்வகை வருணத்தார்க்கும் உரியதென்ப. அந்நூல் தொல்காப்பியனாரால் ஒன்பது இயலாகப்பகுக்கப்பட்டுள்ளது. அவற்றை விரித்துரைக்குமிடத்து முதலாவது அகத்திணையியலில் நிலத்தைப்பகுத்து முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருளெனப்பாகுபாடுசெய்து அந்தணரால் நியமிக்கப்பட்ட பிரமமுதலாகிய எண்வகை மணங்களில் ஐந்திணைக்குரிய கந்தருவமணத்தைச் சிறப்பித்துத் தலைவன் தலைவியென்னப் புலனெறிவழக்கால் நிலையிட்டு அகத்தே நிகழுமின்பமாதலின் அகத்திலக்கணமெனப்பெயர்நாட்டி அதில் நிகழுங்கூற்றிற்குரியாரையுந் தொகுத்துக்கூறி நெறிப்படுத்தியதன்றி பற்றைமணங்களேழனுள் நான்குமணத்துக்குரிய பெருந்திணைப்பகுதியையுங் காட்டி முடித்தது.

2. ஆவது புறத்திணையியல்; இதில் முந்திய அகத்திணையியலில் கூறிய திணை ஏழற்கும் புறமாகிய திணை ஏழனையும் கூறுவான் தொடங்கி வெட்சி முதலாக வாகையீறாக அறமும் பொருளும் தருகின்ற அரசியல் கூறிக் காஞ்சித்திணையில் அவற்றின் நிலையாமையும் "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுஞ்சூத்திரத்தினால் இல்லறமும் துறவறமும் கூறி இவ்விரண்டறங்களாலும் முற்கூறிய நிலையாமையாலும் வீட்டிற்குக்காரணமுங் கூறியதன்றி அத்திணையில் கைக்கிளைப்புறனாகிய பாடாண்டிணையென ஒரு பகுதியை நிலையிட்டு அத்திணையுள் தேவர்களைத்துதிக்கும் பகுதியும், அத்தேவர்களிடத்தில் இழிந்த பொருளை விரும்பும் பகுதியும், ஒரு

வரை ஒருவர் துதித்தலும், புகழ்தலும், வேண்டிக்கோடலும், தேவர்முதலியோரை மானிடயாதர் காதலிக்கும் பகுதியும், மற்றையோரை வாழ்த்துகின்ற வாழ்த்தியலும், கொடுப்போரைத் துதித்தலும், கொடாதாரைப்பழித்தலும், அரசரிடத்து ஆடன்மாந்தரும், பாடற்பாணரும், கருவிப்பொருநரும், விறலியரும், சூதரும் பாடி அவ்வரசர்களால் கொடுக்கப்படுகின்ற பயன்களைப்பெறுகின்ற முறையும் இன்னும் அளவற்ற விஷயங்களும் விளங்கக்கூறுவதாகும்.

3. ஆவது களவியல்; இவ்வியலின் முன் அகத்திணையில் அதிகாரப்பட்ட தலைமகன் கூற்றும் பிறர் கூற்றும் முடிவுபோகக்கூறித் தலைவன் வரைந்தெய்துநெறியிற் றலைப்படுத்தி முடித்ததாகும்.

4. ஆவது கற்பியல்; இவ்வியலில் வரைந்தெய்திய தலைமகன் இல்லறநெறியும் அவனது அறுவகைப்பிரிவும் பாணர் விறலியர் கூத்தர் இருவகைப்பாங்கர் இளைஞர் கண்டோர் தலைவி பாங்கி காதற்பரத்தை காமக்கிழத்தி முதலாயினோர் கூற்றுக்களும் பிறவுந்துறைப்படக்கூறி நெறிப்படக்கொண்டு மக்களொடு மகிழ்ந்து மனையறங்காத்து, மிக்க காமத்து வேட்கை தீர்ந்தவிடத்துத் தலைவனுந்தலைவியுஞ்சிறந்தது பயிற்றலாகிய துறவறங்காக்கும் வரை கூறி முடித்ததாகும்.

5. ஆவது பொருளியல்; இவ்வியலொன்றும் நன்னூலுக்குப் பொதுவியல் எத்தன்மையதோ, அத்தன்மைபோலாகி இன்பப்பகுதியுள் தலைவன் தலைவி தோழி செவிலி பாங்கன் முதலாயினோர் கூறத்தகாதன கூறுதலால் வரும் வழுக்களும் அவற்றிற்கு வழுவமைதிகளும் இன்னின்னோர் இவ்வகையாக உள்ளுறை கூறற்பாலரென்கூறும் அமைதிகளும் இறைச்சிப்பொருளின் பாகுபாடுகளும் பிறவுங்கூறி முடித்ததாகும்.

6. ஆவது மெய்ப்பாட்டியலென்பது முற்கூறிய களவியலகத்துக்கூறிய தலைவியைத்தலைவன் கண்டகாலந்தொடங்கிப்புணர்தலினும் பிரிதலினும் காமங்கனற்றலில் தலைவிதாங்காளாய்ப் புலம்புழுந்துறத்தலினும் கையறவினும் கலங்கிமொழிதலினும் அவ்வப்போழ்தில் தலைவிக்குரிய சரீரவேறுபாடுகள் தோன்றப்பெறுதலைத்தெளிவா



கவிளக்கிக் காவுதற்பெனும் கைகோளிரண்டனுக்கும் இன்றியமையாதனவாய் உணர்வுடைமாந்தர் கண்ணானுஞ்செவிபுலனானும் அறியுந்தரத்ததா வெடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

7. உவமவியல்; உவமையிலக்கணத்தையும் முற்கூறியதலைவன் தலைவி முதலாயினோர் உள்ளுறை கூறுமுறையையும் பிறவற்றையும் விரித்துக்கூறுவதாகும்.

8. செய்யுளியல்; பாடல்செய்யும் முறைமை க்கூறுவதென்பது யாவராலும் அறியப்பட்டதாகும்.

9. மரபியல்; இது 'மக்கள், விலங்கு, நீர்வாழ்வன, நிலைத்திணை முதலியன, ஊர்வன, பறப்பன' என்னும் இவற்றின் ஆண்பாற் பெயர்களையும், பெண்பாற்பெயர்களையும், இளமைப் பெயர்களையும், தனித்தனி தொகைவகைவிரியிற்றோன்றக் கூறி நால்வகைச்சாதியர்க்கும் அவரவர்க்குரியதொழிலும் இயலும் அடையாளங்களுந் தோன்ற விரித்துரைத்து நன்னூலில் முதலிற் பாயிரங்கூறியதுபோல ஈற்றில் நூற்பாயிரமுங் கூறி நூலின் முடிவுரைபுகன்று ஒருவழியாக முடிவுபெற்றதாகும்.

இத்தகைய இலக்கணம் புதியநூல்கள் செய்வதற்கும் உரைகள் செய்வதற்கும் பற்றெந்த விஷயங்களுக்கும் முக்கியசாதனமாகும். இந்த நூலில் எந்தப்பாகமும் மிக்க உபயோகமுள்ளதே. இதனை ஆராய்ந்துபடித்தறியாமல் புதிதாக ஒருநூல் செய்தாலும் பிழையாய் முடியும். ஒருநூலுக்குப்புதிதாக உரைசெய்தாலும் பயனற்றதாய் முடியும். (பாங்கனமோவெனில் சிறிதளவு கூறுவன்:— மரபியலுட் கூறிய பகுதியை ஆராயாமல் தவறிவிடுதல்; புறப்பொருளை அகப்பொருளென ஐயமுறக்கூறல் முதலியன) அவ்வண்ணமே முற்காலத்தில் செய்யப்பட்ட நூல்களில் தொல்காப்பியத்தின் வழிபோகாற் செய்த நூல்கள் பல இப்பொழுது பிரத்தியக்ஷமாகக் காணப்படுகின்றன. இப்படி நான் சொல்லுவது பண்டைக்காலமுதல் பொருளிலக்கண ஆராய்ச்சி குறைந்ததென்பதை எடுத்துக்காட்டவந்ததேயன்றி அந்த நூல்களுக்குக் குற்றங்கூறப் புகுந்தேனில்லை. நிற்க, உதாரணமாக நூல் செய்ததனைப்பற்றிக் கூறுவன். (தொடரும்)

*

"மயிலெழா லல்லாப்புள்ளின் வருத்தவாண் சேவலென்ப" (பிங்கலந்தை) "எழால்மயிலொழிந்த ஏனைப்பறவைகள், வழா அவாணின்பெயர் சேவலாகும்." (தொல்-பொருள். மர. சஅ) "சேவற்பெயர்க்கொடை சிறகொடு சிவணும், மாயிருந் தூவி மயிலலங் கடையே." இவற்றால் 'பறப்பனவற்றின் ஆண்பாற்கெல்லாம் சேவற்பெயருரித்து; அவற்றுள் மயிற்காயின், அஃதாகாது' என்று கூறியவற்றானறிக. காந்தம் தேவகாண்டம் தெய்வயானையம்மை திருமணப்படலம் (192.) "எழுந்து முன்னுறு மஞ்ஞையஞ் சேவன்மேலேறி" என்றதனை நோக்குக. இதுபற்றிப்போலும் நச்சினார்க்கினியர், முற்கூறியசூத்திரவுரையில் செவ்வேளூர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும்படும் என்று கூறிப்போக்கினார்.

மற்றும் (தொல்- பொருள்- மர. 55, 56.) "கோழி கூகை யாயிரண்டல்லவை, சூழுங் காலை யளவெனலமையா." "அப்பெயர்க்கிழமை மயிற்கு முரித்தே" இவற்றாலறிந்துகொண்டது 'கோழி, கூகை, மயில்' ஆகிய இம்மூன்றன் பெண்பாலும் அளகு என்னும் பெயரால் கூறப்படும். இப்படியே "மனைவாழளகின் வாடல்" (பெரும்பாணாறு—256 உரை) "கோழிப் பெடையினாற் சமைத்தபொரியல்" என்றார் உரையினும். இவற்றாலறிவது மேற்கூறியவரம்பு கடந்து இம்மூன்றன் ஆண்பால்களை அளகெனல் தகுதியில்லையாகும். திருவிளையாடல் அருச்சனைப் படலம் (34) "அளகைப் பொறித்தகொடியினையோன" இதில் அளகென்பது ஆண்கோழிக்கு வந்துள்ளது. இப்படி ஒவ்வொன்றனை ஆராயப்புகுந்தால் அளவில்லாமல் பெருகி வளர்தலுண்மையாகும். அன்றிப்பெரும்பாலும் அவ்வந்நிலத்து மக்களுக்கு அவ்வந்நிலத்துப் பொருளையே உவமிப்பது ஒரு வழக்கமிருந்ததாகத் தெரிகிறது. உதாரணமாகச் சிந்தாமணியில் கோவிந்தையாரிலம்பகம் செய்யுள் (72.)

'வெண்ணெய்போன்றூறினியள்மேம்பால்போற்றீஞ்சொலள்
உண்ணவுருக்கியஆநெய்போன்மேனியள்
வண்ணவனமுலைமாதர்மடநோக்கி
கண்ணுங்கருவிளம்போதிரண்டேகண்டாய்.'



இவ்வழக்கத்தை யொட்டித் தமிழ்வித்வான்களாயுள்ளோர் இக்காலத்தில் பாடுகிறதேயில்லை. இவ்வளவு அரும்பெறலிலக்கண ஆராய்ச்சி குறைவுபட்டது தற்காலத்தில் மாத்திரமன்று; கடைச்சங்கத்தார் காலத்தில் உக்கிரப்பெருவழுதி "நூல்வல்லாரைக்கொணர்கவென் றெல்லாப்பக்கமும்போக்க எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக்கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரை எங்குந்தலைப்பட்டிலேமென்று வந்தார்; வர, அரசனும்புடைபடக்கவன்று, என்னை? எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமெனின் இவைபெற்றும் பெற்றிலேம்." எனச் சொல்லிவருந்தினானென்றும் இவ்வூரில் (மதுரையில்) ஆலவாய் எம்பெருமான் இறையனாரகப்பொருட் சூத்திரம் அறுபதும் அருளியவழியும் அவற்றின் பொருள்காண்பாரின்றிச் சங்கத்தார் யாவரும் சென்று கடவுளை இரந்து பொருள்காணவல்லானொருவனைப் பெற்றாரென்றும் களவியற் பொருள்கண்ட நக்கீரராற் கூறப்பட்டுள்ளதனாற் றெரியலாகும்.

இனி உரைசெய்வதனைப்பற்றிக் கூறுவன். பொருளிலக்கண ஆராய்ச்சி மிகுதியால் அவ்விலக்கணத்துக்கே உரை செய்தருளிய பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலானோர் நிற்க, பிற்காலத்தில் சிலப்பதிகாரத்துக்கு உரை செய்த அடியார்க்குநல்லாரும் சிலப்பதிகாரநான்முகத்தில் அந்நூலிலுள்ள பொருட் பகுதியைத்தெள்ளிதிற் புலப்படுத்தியதிறத்தினால் பண்டை நூலாசிரியர் பலரினும் மேதகவிற்றிருக்கத் தக்காரென்றறியப்படுகிறார். இக்காலத்தில் பண்டை நூல்களுக்கு உரைசெய்யத்தொடங்கும்பலரும் பொருளிலக்கணம் இருந்தவிடமும் தெரியாதவராய் உரை யெழுதத்தொடங்குகிறார்கள். அங்ஙனம் எழுதுவதாலுண்டாகும் குற்றங்கள் கடலினும் பெரியவாய் வரம்பின்றிப்பெருகும்.

நூல்களிலுள்ள தொகைமொழிப்பொருளைத் தோன்றக்கூறுவதில்லை; காரணம், ஆராய்ச்சியில்லாமையேயாம்; சிறந்த புலவர்கள் தந்நூல்களில் தொகைமொழிகளைப்பலவிடங்களிலும் கற்பித்துவைத்துப்போயினர்; அவற்றை நாட்டின் சிறப்பென்று கொண்டு 'இத

னால் அந்நாட்டுவளம் கூறினர்' என்று எழுதியிடுகின்றார்கள்; தொகைமொழியாவது "நெஞ்சினிற் பொருளை நிரப்ப வேறொரு, செஞ்சொலிற் காட்டுந் திறமே தொகைமொழி." இதனால் தொகைமொழி இன்னதென்பதனை அறிந்துகொள்க.

(தொடரும்.)

---

# சோழவம்ச சரித்திரம்.

## முகவுரை.

பன்னூறு ஆண்டுகளாகச் செந்தமிழ்ப்பரிபாலனம்பண்ணிவந்த தமிழ்நாட்டரசர் மெலிவடைந்தபின்னர், சிலகாலம் ஆதரிப்பாரின்றிக்கிடந்த தமிழணங்கை, அது தன் பண்டைப்பெருமைகளுடன்விளங்குமாறு, செந்தமிழின் "பிறந்தகம்" என்று சொல்லப்படும் பாண்டிநாட்டு மதுராபுரியிலே முன்னாள் விளங்கிய முச்சங்கத்தையொப்ப நான்காஞ்சங்கமொன்று நிறுவி, அதன்வாயிலாய்ப் பண்டைப்பனுவல்களைப் பாணத்தின்வாய்ப்படாது உயிர்ப்பித்தும், இக்காலத்திற்குரிய புதியநூல்களை இயற்றுவித்தும், இன்னும் பல்லாற்றானும் தமிழ்ப்பாஷையை நிலைநிறுத்தித் தம்முடல்பொருளாவிகளை அதன்பொருட்டே ஒப்பித்து உழைத்துவரும் ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்கட்குத் தமிழகத்தார் பல்லாற்றானும் கடமைப்பட்டவர்களாவர். இச்சங்கத்தில் தமிழபிவிருத்தியின்பொருட்டுச்செய்யப்படும் பல காரியங்களில், தமிழிலக்கியங்களை நுணுகி ஆராயும் அறிஞர்கள் தத்தங்கருத்துக்களை அவ்வக்காலங்களில் வெளியிட்டுவரவேண்டி, "செந்தமிழ்" என்னும் மாதாந்தரபத்திரிகையொன்று நடத்திவருதல் முக்கியமானது. இப்பத்திரிகை தொடங்கியகாலமுதல் தமிழிலக்கியவிஷயங்களேயன்றி, இந்நாட்டு மூவேந்தர் சரித்திரங்களும் பிறவும் வெளிவரத்தலைப்பட்டன. சரித்திரவாராய்ச்சியானது இலக்கியவிஷயங்கள் பலவற்றை இனிதுவிளக்கக்கூடுமாதலால், நம்மவர் அச்சரித்திரங்களின் சுருக்கத்தையேனும் ஒருவாறு அறிந்திருத்தல் நன்றென்றுகருதி, சோழசரித்திரத்தை என்னாலியன்றமட்டும் தொடர்ச்சியாக எழுதத்துணிந்தேன்.



இவ்வாறு நான் எழுதக்காரணமாயிருந்தது, மகாமகோபாத்தியாயர்: ஸ்ரீமத்-சாமிநாதஐயரவர்கள் தூண்டுதலே. ஐயரவர்கள் சென்றவருடம் மூவருலாக்களைப்பதிப்பிக்க முயன்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வுலாக்களின் நாயகர்களாகிய சோழவரசர்களது சரித்திரமும் விளங்கும்படி ஓர் சிறுவியாசம் எழுதிக்கொடுக்கக் கட்டளையிட்டனர். அக்கட்டளையைச்சிரமேற்கொண்டு சோழவம்ச சரித்திர முழுதுமெழுதின், உலாக்களில் வர்ணித்திருக்கும் சோழர்களின் சரித்திரம் நன்கு புலப்படுமென்று சென்றவருடமே எழுதிமுடித்தும் இதுகாறும் அச்சிற்குக்கொண்டுவரமுடியாமல் சிற்சில இடையூறுகள் நேர்ந்தன. இச்சரித்திரத்தை, மதுரைத்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்கள், இதற்குத் தாங்களே ஒரு முகவுரை யெழுதித் தமிழ்ச்சங்கத்தில் பதிப்பிப்பதாய் வாக்களித்தார்கள். இவ்வாறு ஸ்ரீமாந். தேவரவர்கள் தயவுகூர்ந்து என்னை ஊக்கியதும் ஸ்ரீ ஐயரவர்கள் என்னை இச்சரித்திரமெழுதத் தூண்டியதும் என்னால் எப்பொழுதும் மறவாது பாராட்டத்தக்கன.

இந்தியதேச சரித்திரம் மிகுதியும் சாஸநங்களைக்கொண்டே எழுதவேண்டியிருத்தலின், இச்சாஸனங்கள் முழுதும் பரிசோதித்து முடிந்தாலன்றிச் சரித்திரங் குறைவற எழுதவியலாது. ஆதலால் இதுகாறும் வெளிவந்த சாஸனங்கள் பலவற்றையும், வெளிவாராச் சிலவற்றையும் ஆதாரமாகக்கொண்டு எழுதிய இந்நூலில் குற்றங்குறைகள் பலவாயிருக்கக் கூடுமாதலால், குணமேதேனுமிருப்பின் அதனைமட்டும் ஆன்றோர் கிரகித்துக்கொள்வாராக.

---

## முதலாம் அதிகாரம்.

வெகுபுராதன காலமுதல், தமிழ்நாடு சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தராலாளப்பட்டு வந்தது. பாரதகாலத்தே, அர்ச்சுனன் தென்னாட்டுக்குவந்து அவ்விடத்தில் இராஜகன்னிகையை மணம்புரிந்தனன்; அவளிடம் பிறந்த மக்கள் பாண்டியர்களெனப்பெயர்பெற்றார்கள். பின்பு, கி. மு. 3-ம் நூற்றாண்டில் வடஇந்தியாவை

சார்வபௌம சக்கரவர்த்தியாயரசாண்ட பௌத்தவரசனாகிய அசோகமகாராஜன், தமிழ்நாட்டுக்குத் தன்னிநமக்களாகிய சங்கமித்திரையையும், மகேந்திரனையும் அனுப்பி பௌத்தமதத்தைப்பரவச்செய்தான். இக்காலத்தில் தென்னாட்டைப் பிரபலமாயாண்டுவந்தவரசர்கள் சோழர், பாண்டியர், கேரளபுத்திரர்களென்று கூறப்பட்டிருக்கிறது.* இப்புராதனகாலத்திலேயே, சோழர்கள் மிகப்பராக்கிரமசாலிகளாகவிருந்தி, அடிக்கடி சிங்களத்தின்மீது படையெடுத்துச்சென்றுபிடித்து அதனைப் பலகாலும் ஆண்டுவந்ததாகத் தெரியவருகிறது. இந்நூற்றாண்டுகளில், தமிழர்நாகரிகம் ஆரியர்களுடைய நாகரிகத்துக்கு ஒருவாறு சமமாயிருந்ததென்று சொல்லலாம்.

தமிழிலக்கியங்களில் பற்பல பழையவரசர்கள் வருணிக்கப்பட்டிருக்கிறார்கள். புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலியவற்றில் புகழப்படும் அரசர்களின் சரித்திரம் நன்றாய்த் தெரியவரவில்லை. இலக்கியங்களில் சிறப்பிக்கப்பட்டவரசர்களில் முக்கியமானவர்கள், பெருநற்கிள்ளி, கரிகாலன், கோச்செங்கண்ணன் என்னும் மூவர்களே. இவர்களுள் கரிகாலன் காவிரியினிருமருங்கும் கரையிடுவித்தான்.† கோச்செங்கண்ணன் என்பவன் முன் சன்மத்தில் ஓர் சிலந்திப்பூச்சியாயிருந்தனன். அப்பொழுது, அப்பூச்சி, திருவானைக்காவில் திருவெண்ணாவற்கீழமர்ந்திருந்த சிவபிரானை, சூரியகிரணங்கள் படாவண்ணம் வலைகள்கட்டிப் பாதுகாக்கும் தொண்டுசெய்துவந்தது. அதேசிவலிங்கத்தை ஓர் யானையும் வழிபட்டுவந்தது. இவ்யானை ஒவ்வொருதினமும் மகாதேவர் மீது சிலந்தி வலைபரப்பியிருப்பதை நீக்கிப் பூசித்துச்செல்வது வழக்கம். தன் பணிவிடைகளை இரக்கமின்றிப்பழிக்கும் யானையின்மீது சினந்து, சிலந்தி, ஒருநாள் யானையின துதிக்கையுட்புகுந்து வலியுண்டாக்கிற்று. அப்பொழுது யானை அதனைப்பொறுக்கமுடியாமல் தும்பிக்கையைக்கீழே யறைந்து தன்னையும், தன்னுட்புகுந்திருந்தசிலந்தியையும் கொன்றுகொண்டது.

---

* Rock edicts II & III.

† "தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற் றொடரவந்திலா முகரி யைப்படத்—தெழுது கென்றுகண் டிதுமிகைக்கணென் றிங்கழிக்கவே யக்கழிந்ததும்" (கலிங்கத்துப்பரணி-இராசபாரம்பரியம் - பா - 20.)



இவ்வாறு மரணமடைந்த சிலந்தியே மறுஜனனத்தில் கோச்செங்கண்ணனாகப்பிறந்தது* என்பது புராண ஐதிகம். இவன "எண்டோளீசர்க்கெழில்மாட மெழுபதுசெய் துலகமாண்டா"ன்; † அன்றியும் இவன் "விறல் மன்னர்திறலழிய" த் "தனிவேலுய்த்" தவனும் "தெவ்வர் வலங்கொண்ட" ‡ னும் என்னப்பட்டிருக்கிறான்.

சோழர்கள் சூரியவமிசத்தைச்சேர்ந்தவர்கள். இவர்கள் வைவச்சுதமனுவினிடமிருந்து பாரம்பரையாயிழிந்தவர்களென்று அடியில்வரும் பௌராணிகவழியைத் தமக்குக் கற்பித்துக் கொள்ளுகின்றார்கள்:—$

வைவச்சுதமனு.

|

சூரியவம்சஸ்தாபகனான

இக்ஷுவாகு.

|

மாந்தாதா.

|

முசுகுந்தன்.

(இவன் மகனாகிய)

|

வல்லபன்.

:

சிபி.

இச்சிபியின் பின் சோளன், இராசகேசரி, பரகேசரி, இராஜேந்திரமிருத்துஜித்து, வியாக்கிரகேது, அரிகாலன் முதலியவர்கள் ஆண்டதாகச் சொல்வது வழக்கம்.

உத்தேசம் நான்காம் நூற்றாண்டில் பல்லவர்களென்னும் ஓர் பராக்கிரமமுடைய வம்சத்தரசர்கள் சோணாடு, பிலாடு, கொங்கு, வாணகப்பாடி முதலிய பழைய இராச்சியங்களைக் கைப்பற்றிக்கொண்டு சார்வபௌமசக்கரவர்த்திகளாய், 10-ம் நூற்றாண்டுவரை, காஞ்சிபுரம், மாமல்லபுரம் முதலியவிடங்களை இராசதானியாகக்கொண்டு

---

* "பண்டுபல சருகாற் பந்தர், பயின்ற நூற் சிலந்திக்குப் பாரா ளச் செல்வம் கொடுத்தவன் காண்" எனத் திருச்சச்சிமேகம்பத் திருத்தாண்டகத்திலும், "புத்தியினாற் சிலந்தியுந்தன வாயினூலாற் பொதுப்பந்தரதுவிழைத்துச் சருகானமேய்ந்த, சித்தியினா லரசாண்டு சிறப்புச் செய்யச் செகுணைத்துப் புகப்பெய்தா" எனத் திருப்பாசூர்ப்பதிகத்தும்— திருநாவுக்கரசு சுவாமிகள் உரைத்தருளினமையுங் காண்க.

† பெரியதிருமொழி- 6-பத்து. திருநறையூர்ப்பதிகம் பாட்டு- 8.

‡ ஷை பா - 6, 3. ($) The Large Leiden grant.

அரசாண்டுவந்தார்கள். இந்த 6-ம் நூற்றாண்டிறுதிச் சோழர்கள் ஒருவாறு சிற்றரசர்கள் பதவியையடைந்து, பல்லவர்கள்கீழிருந்து அரசாளவேண்டியதாயிற்று.

8-ஆம் நூற்றாண்டின் மத்தியில் பல்லவச்சக்ராதிபதியாகிய பரமேச்சுவரபோத்தரசனிறந்தான். இவன்பின், இவன் தாயத்தாளுகிய நந்திவர்மபல்லவமல்லனென்பவன், பல்லவ ராச்சியத்தைக்கட்டிக்கொண்டு ஆளத்தொடங்கினன். இவனைச் சித்திரமாயன் என்னும் பல்லவ இளவரசன் எதிர்த்தனன். இவனுக்குத் தமிழ்நாட்டரசர்களெல்லாரும் உதவிபுரிந்தார்கள். நந்திபுரமென்னுமிடத்திருந்த நந்திவர்மபல்லவமல்லனை முற்றினார்கள். அப்பொழுது இவனுடைய தண்டத்தலைவனான உதயசந்திரனென்பவன் திரமிளவரசர்களைத்துரத்தி, பல்லவமல்லனை விடுவித்தான். *

மேற்கூறியவற்றால், கி. பி. 760-ல் தமிழ்நாட்டரசர்கள் பல்லவசார்வபௌமத்தை ஒழிக்க முயன்றார்களென்பது விளங்கும். இதுமுதல், சோழபாண்டியர்கள் தருணம்பார்த்துச் சுவாதீனமடையயத்தனித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குச்சாதகமாக தம்முட்பெண்களைக் கொடுக்கல்வாங்கல் செய்யத்தலைப்பட்டார்கள். கி.பி. 862-ல் † பட்டந்தரித்த வரகுணபாண்டியன் ஓர் சோழன்மகன். இவ்வாறு தாமுள் ஐக்கியமாயிருந்து கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் கடைசியில் பட்டஞ்சூட்டப்பெற்ற நிருபதுங்கவர்மன் என்னும் பல்லவனையும், அவனுக்குத்துணைபுரியவந்த, அவன்கீழ்ச் சிற்றரசனை பிருதிவிபதி (I) என்பவனையும் பல யுத்தங்களில் ஜயித்தார்கள்.‡ அக்காலத்தரசாண்டவர்கள் விஜயாலயன்மகன் ஆதித்தசோழனும், பாண்டியன் மாறஞ்சடையனும், வரகுணபாண்டியனுமே. இவர்களில் ஆதித்தன் நிருபதுங்கனை ஜயித்துசோழநாட்

* Udyendiram plats of Nandivaram. S. I. I, Vol. II, P. 363.

† Epigraphists Annual Report for 1905—6, P. 71.

‡ Ibid. P. 61. கம்பவனம், சூதவனம், சகாரகிராமம், நெல்லூர், நெல்வேலி, குரவழுந்தூர் முதலியவிடங்களில். இப்பெயர்கள் தமிழ்ப்பெயர்களின் வடமொழிப்பெயர்ப்பு.




கி. பி. 10.ம் நூற்றாண்டுக்கு முன்பு பல்லவ ராஜ்யத்தின் விஸ்தீரணம்






டின் ஓர்பகுதியைப் பற்றிக்கொண்டான். * திருப்புறம்பியத்தில் நடந்த போரில் வாகுணன் பிருதிவிபதியைக்கொன்றான். † இவ்வாறு ஆரம்பித்துப் பல்லவசார்வபௌமத்தைத் தொலைத்தனர். இது முதல் சோழர்கள்பரம்பரை கிரமமாக 13 - ஆவது நூற்றாண்டுவரை உன்னதநிலையிலிருந்துவந்தது.

---

## இரண்டாம் அதிகாரம்.

—:○:—

சோழவமிசத்தரசர்களுள் இராஜகேசரி,பரகேசரி என்னும் பெயர்கள் அடுத்தடுத்துத் தரிக்கப்பட்டுவந்தன. அதாவது; பராந்தகன், இராஜராஜன், இராஜேந்திரன் என்ற மூன்று தலைமுறையாரை எடுத்துக்கொள்ளுவோம். இவர்களில் பாட்டனாகிய பராந்தகன், பரகேசரி என்னும் பட்டந்தரித்திருப்பின், இவன்மகன் இராஜராஜன், இராஜகேசரியென்னும்பட்டம் தரிக்கவேண்டும்; பெயரனை இராஜேந்திரசோழன், பரகேசரியாவான். இவ்வாறு இவ்விருபெயர்கள் மாறிமாறி வந்ததென்னும் விஷயம் அவசியமாய்த்தெரியவேண்டும்; ஏனெனில், ஒருபெயரே பலவரசர்கள் தரித்திருப்பின், இவர்களில் முன் பின்னவர்கள் யாவர் என்பதும், இடையில் யாரேனும் பட்டம் பெற்றனரோவென்பதும் இராஜகேசரி, பரகேசரியென்னும் பெயர்களால் ஊகித்தறியலாம். எவ்வாறெனின், இராஜேந்திர சோழன் என்னும் பட்டம் தரித்திருந்தவர்களில் முக்கியமானவர்களிருவர். அவர்களில் முதல்வன் பரகேசரி. இவன் பெயரனாகிய (—தௌஹித்திரன்.—) இரண்டாம் இராஜேந்திரன் இராஜகேசரியாயிருந்தான். சரியானவழியாய் அடுத்தடுத்துப்பட்டத்துக்கு வந்திருப்பின், இரண்டாவனும் பரகேசரியாகவேண்டும்; ஏனெனில், பாட்டன் பரகேசரி, தகப்பன் இராஜகேசரி, தான் பரகேசரியாகவேண்டும். அவ்வா

---

(*) Tiruvalangadu Plates of Rajendracholadeva. *Ep. An. Rep*- for 1905—6. P, 67.

(†) Udayendram Plates of Prithivipati II, S. I. I., Voll II, P. 381.

றன்றி, இவன் இராஜகேசரியாயிருத்தலின், இவன் சரியானமுறையில் பட்டத்துக்கு வந்தவனல்லன்: இவனுக்குமுன் ஒரு பரகேசரியாவதாண்டிருக்கவேண்டும் என்று சங்கிக்கலாம். சரியானவழியில் பட்டம்பெற்றவனல்லன் என்பது, பின்வரும் இவன் சரித்திரத்தால் விளங்கும்.

விஜயாலயன் என்னும் சோழசக்கரவர்த்தி தஞ்சாபுரியைப்பிடித்துக்கொண்டு அதை இராஜதானியாக்கிக்கொண்டான். * இவன் காலமுதல், முதலிராஜராஜன் காலம் வரையிலும் இதுவே இராஜதானியாயிருந்தது. தஞ்சாவூரில் விஜயாலயன் துர்க்கைக்கு ஓர் கோவில் கட்டுவித்தான்.

இவன் மகன், முதல் ஆதித்தன்; இவன்காலத்துத்தான் நிருபதுங்கபல்லவனுக்கும், சோழபாண்டியர்களுக்கும் அரைசூர், வேம்பில், திருப்புறம்பியமுதலிய இடங்களில் போர் நடந்ததில், சோழபாண்டியர்கள் சுவாதீனமடைந்தார்கள். இதனை, சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

"கருமையமற்றருமனுர்தமர்நம்மைக்கட்டியகட்டறுப்பிப்பானை
யருமையாந்தன்னுலகந்தருவானை மண்ணுலகங்காவல்பூண்ட
வுரிமையாற்பல்லவர்க்குத்திறைகொடாமன்னவரைமறுக்கஞ்செய்யும்
பெருமையார்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. †

என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

நிருபதுங்கனாகிய அபராஜிதவன்மனுக்குத் துணையாய்வந்த கங்கவரசனாகிய பிருதிவிபதியென்பவன் திருப்புறம்பியத்துப் போரில், வரகுணபாண்டியனாற் கொல்லப்பட்டான். ஆதித்தனுக்கு முதல் பராந்தகன், கன்னரதேவன் என இருபுதல்வரிருந்தனர்.

(இன்னும் வரும்.)

து. அ. கோபிநாதராவ்.

---

* Ep. An. Rep. for 1905 - 6, P. 67.

(†) தேவாரம். கோயில் பதிகம் - பா - 4.

# வித்யாதானம்.

[மகா-ா-ா-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்காதிரு ராவுத்தரவர்கள்உபந்நியாசம்.]

---

கௌரவம் பொருந்திய சபாநாயகரவர்கட்கும் சபையின் கண்ணுள்ள செந்தமிழபிமானச் செல்வர்கட்கும் வந்தனந்தந்து, யான் கூறும் புன்மொழிகளையும் செவியேற்றருள்வான் வேண்டிக் கொள்கின்றேன்.

ஐயன்மீர்!

முறைப்பட்ட நூலுணர்ச்சியிற்சிறந்து விளங்கும் நம் அவைக்களத்தின்கண்ணே வாய்திறத்தற்கு ஒரு சிறிதும் அருகனல்லாதயான் ஒரு வியாசம்வரைந்து நுமதுசெவியேற்றத் துணிந்ததை நினைக்குந்தோறும் என்னுதிலைமை எனக்கே நகைவிளைக்குமாயின் பிறிதுரைப்பதென்னே! 'காளமுயலெய்த அம்பினும் யானைபிழைத்தவேல் ஏந்தலே நன்று' என்றதல்போன்று கற்றறிவில்லாரவைக்கட்புக்கு மதிப்பெய்தப்பெறுதலினும் நும்மையொத்த வித்வன்மணிகண் மாட்டுப் பேசத்தொடங்கி யவமதிப்பெய்தலுஞ் சிறந்ததொன்றுமெனக் கொண்டும்; பிறர்பிறர் சீரெல்லாந்தூற்றிச் சிறுமைபுறங்காக்கும் பேரறிவாளராய நீவிர் எனது சொற்குற்றங்கருதாது கீடாக்கரம்போல் ஏதேனும் ஒரு நன்மொழியைக்கண்டு வியந்து மகிழ்வீர்களென்னும் துணிவுபூண்டும் இவ்வுணெய்தி வித்தியாதானம் இத்தகைத்தென என்னறிவிற்கேற்பக் கூறத் தொடங்குகின்றேன்.

"தானம்" என்பது பலபொருளொரு சொல்லேனும் ஈண்டுத் தம்முடைப் பொருளொன்றைப் பிறர்க்கின்பம்பயப்பான் கருதி மனமுவந்தளிப்பதையே பொருளாகக் குறிக்கும். இப்பொருட்டாயதா

---

* இவ்வுபந்நியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ஆறாவது வருஷோற்சவ தினங்களில் ஒன்றாகிய 1907ஆம் மேயீ 25உ மாலை கூடிய வித்வச்சபையில் உபந்நியாசகராற் படிக்கப்பெற்றது.

னம் பத்து வகைப்படும் என வொருசாராரும், பதினாறு வகைப்படுமென் மற்றொருசாராரும், இருபத்தைந்து வகைத்தெனப் பிறிதொரு சாராரும் கூறுப. ஆகவே அன்னதானம், சொன்னதானம், வஸ்திரதானம், பூதானம், கோதானம், கன்னிகாதானம், வித்தியாதானம் எனப் பலவகைப்பட்டு விளங்குமென்பதொரு தலையாம். இங்ஙனம் பல திறப்பட்டுள்ள இத்தானம் யாவும் தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம் எனமூவகையிலடங்கும். இவையே உத்தமதானம், மத்திமதானம், அதமதானம் எனவும் பெறும்.

தலைப்படு தானமாவது:— அறத்தானீட்டும் பொருளை யெடுத்துக் குற்றமற்ற பெரியாரையடுத்துக் கொள்கெனப் பணிந்து மனமுவந்தளித்தலாம்.

இடைப்படு தானமாவது:— வறியர் சிதடர் முதலினரைக்கண்டு அச்சோவென்று மனமிரங்கியீதலாம்.

கடைப்படு தானமாவது:— புகழ், அச்சம், ஆசை, கைம்மாறு முதலிய யாதானுமொன்றினிமித்தமாகக் கொடுத்தலாம்.

இவ்வாறுய தானங்களியாவும், பெறுவார்க்கு இன்பினைப்பயப்பனவே யெனினும், வித்தியா தானமொழிந்த பிறவெல்லாம் இம்மையின்பொன்றனையே பயத்தற்பாலவாம். அவற்றுள் அன்னதானம் பிறிதின்றும். இவ்வன்ன தானத்தையும் பின்ன தானமாக்கி முன்ன தானமாகி நின்று இம்மையின்பத்தையுமளித்து மறுமையின்புந் தரற்பாலது வித்தியாதானமொன்று மட்டுமே யென்பதொருதலை. என்னை? அன்னம் உடலை வளர்த்தற்குரியது. சிறிது நேரத்திலழிவது. இரப்பவர்க்குப் பெரிதும் இழிவுறுத்துவது. அன்னமேயாக, அதனை யொத்த பிறபொருளேயாக, அவற்றையிரப்பான் புகுவதினும் தானிறப்பான்றுணிதலினிதன்றோ?

இதனானன்றே,

“இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.



ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்” எனவும்,

“சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
யெனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்” எனவும்,

காவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.
புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்த
னன்ஞான நீக்கி நிறீஇ யொருவனை
யீயா யெனக்கென் றிரப்பானே லந்நிலையே
மாயானே மாற்றி விடின்.” எனவும்,

“கண்ணிற்சிறந்தார் தம்மிடத்துங் காழ்த்தமானங்கெட நாவாற்
பண்ணற்குரியவறங்குறித்தும்படார்ந் தொன்றிரவார்பெருமையினா
லெண்ணிற்சிறந்தார்” எனவும்,

“பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
யில்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும்.” எனவும்,

“மாசித் திங்கண் மாசின சின்னத் துணிமுள்ளி
னூசித் துன்ன மூசிய வாடை யுடையாகப்
பேசிப் பாவாய் பிச்சை யெனக்கை யகலேந்திக்
கூசிக் கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்.” எனவும்,

தமிழ் வல்லோர் கூறுப. அந்தோ! இரத்தலின் கொடுமை இறத்தலினும் பெரிதே. நண்பர்காள்! இங்கே யொருவிடயம் நினைப்பில் வருகின்றது. அதனை யறிவியாது செல்லற்கு மனந்துணிந்திலது. என்னெனில், இரவச்சத்தைப் பற்றி முன்னொருநாள் நமது தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதி பதியாகிய ஸ்ரீமான் - பாண்டித்துரைத் தேவரவர்கள் பிரசங்கிக்குங்கால், “மாபலியிடம் தானமேற்பான் புக்க மகாவிஷ்ணுவானவர் வாமனாவதார மெடுத்ததினுண்

மையொன்றுளது. இரப்பை நினைத்தவுடன் எண்சாணுடம்பும் ஒருசாணாக்குறுகியது. இஃதியற்கையன்றே. பின்னர் விரும்பியவாறே தானமீந்தானென்றவுடன் குறுகியவுடல் வானுறநீண்டு வளர்ந்தது." என்று வியப்புறக்கூறினார்கள். பார்த்தீர்களா! இவ்விடத்து இது எவ்வளவு பொருத்தமாயிருக்கின்றது.

இவ்வளவு பெருந்துயராற்றும் இரப்பாற் பெற்ற தானப்பொருளால் அடையும்பலனோ இம்மையிற் சின்னாளிலழியத்தக்கனவேயன்றி நிலைபேறுடையனவுமன்றாம். வித்தையோ எனின்? அறிவை வளர்ப்பது. இப்பிறவி முற்று முடனிருப்பதன்றியும் மறுபிறவிக் கண்ணும் தொடர்ந்துநின்று துணைபுரியும் பேராற்றலுடையதென்ப. கொடுக்கக் கொடுக்கப் பெருகுவது. தாயத்தார் முதலியபால் கவரற்கியலாதது. யாண்டும் மதிப்பளிப்பது. இணையிலா மகிழ்ச்சியை யீவது. இம்மையில் அறம், பொருள், இன்பம் என்னும்புருஷார்த்தங்களைக் கொடுத்து மறுமையில் வீடுபேறுந்தரவல்லது. இன்னுஞ்சிறப்பெனப்படுவன யாவும் ஒருங்குதவுந்திறத்தது. இதனை,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.
ஒருமைக்கட் டாங்கற்ற கல்வி யொருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து." எனவும்,

"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர்செறின் வவ்வா
ரெச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றில்லை பிற.

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுணராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து." எனவும்,



க்குப் பெரியோர் திருவாக்கில் ஆதாரமுண்டோ?' என்று வினவ, ஆண்டாள்.

*"கள்ளவிழ்சோலைக்கணபுரங்கைதொழும்
பிள்ளையைப்பிள்ளையென்றெண்ணப்பெறுவரே"

என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்ததை எடுத்துக்காட்டினள். இதனால், சிஷ்யர்களாயும் புத்ரர்களாயுமிருந்தாலும் ஞாநாதிகர் நன்குமதித்து வழிபடத்தக்கவரென்றபடியாம். † "அணங்காகும், தான் செய்த பாவை தனக்கு" என்ற பழமொழி இங்கு உணரத்தக்கது.

முன்பு ஸ்ரீ பாஷ்யகாரருடைய நியமனத்தால் அவர் சிஷ்யரான திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவாய்மொழிக்கு ஆறாயிரங் கிரந்தவளவிலே ஒருவியாக்கியானஞ் செய்தருளினர். அந்த ஆறாயிரப்படி வியாக்கியானத்தைப் பட்டர் நஞ்சீயர்க்கு ஐயந்திரிபறச்சொல்லியருளி, 'இதனினுஞ் சிறிது விவரணமாகத் திருவாய்மொழிக்கு நீர் ஒரு வியாக்கியானஞ்செய்யும்' என்று நியமிக்க, அந்நியமநத்தைச் சிரமேற்கொண்டு நஞ்சீயர், ஒன்பதினாயிரங் கிரந்தவளவுள்ளதாய் ஒரு வியாக்கியானம் இயற்றலாயினர். ஒன்பதினாயிரப்படியென்று வழங்குகிற அந்த உரையின் இயல்பை,

‡ "தஞ்சீரைஞானியர்கள் தாம்புகழும்வேதாந்தி
நஞ்சீயர்தாம்பட்டர்நல்லருளால்—எஞ்சாத
ஆர்வமுடன் மாறன்மறைப்பொருளையாய்ந்துரைத்தது
ஏரொன்பதினாயிரம்"

என்ற உபதேசரத்தினமாலைகொண்டு உணரலாம்.

பட்டர் தமது தந்தையாரான கூரத்தாழ்வான் போலவே ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் புராணம் வாசிக்கிற அதிகாரத்தைப்பெற்று 'ஸ்ரீரங்கேசபுரோகிதர்' என்று ஒரு பெயருடையராயிருப்பர். வருஷந்தோறும் கார்த்திகைமாதத்துச் சுக்கிலபக்ஷத்துவாதசியான

* பெரிய திருமொழி-௭௨-ஆந்திருப்பதிகம்-௯.
† பழமொழி-
‡ ௬௩-ஆஞ்செய்யுள்.

கைசிகத் துவாதசியினன்று காலையில் நம்பெருமாள் திருமுன்பே, பட்டர், யாழிசைவல்லனை நம்பாடுவானென்னும் பக்தன் எம்பெருமானைக் குறித்துக் கைசிகமென்னும் பண்பாடிப் பேறுபெற்றதிவ்விய சரித்திரத்தைக் கூறுவதும், கைசிகபுராணமென வழங்குவதும், பதினெண்புராணங்களுள் வராகபுராணத்தின் பகுதியுமான கைசிக மாகாத்மியத்தைப் படித்துப் பொருள்சொல்லித் திருமாலை திருப்பரியட்டம் முதலிய சிறப்புக்களைப் பெறுவது வழக்கம். அவ்வழக்கத்தின்படி பட்டர் தமது இருபத்தெட்டாவது பிராயத்திலே கார்த்திக சுத்தத் துவாதசியினன்று பெருமாள் முன்னிலையிற் பெரிய திருவோலக்கத்திலே கைசிக மாகாத்மியத்தைப் படித்துப் பொருள் சொல்லும்போது, என்றைக்கும் போலன்றி ஒரு சுலோகத்துக்குப் பலவாறாகத் தாத்பரியங்களை அருளிச்செய்து பரக்க உபந்யசிக்க, அதுகேட்டுப்பெருமாள் மிகவுந்திருவுள்ளமுகந்து தாம் சாத்தியிருந்த திருமாலை திருப்பரியட்டம் திருவாபரணம் இவைகளையும் தாம் எழுந்தருளியிருக்குந் திவ்விய சிங்காதனத்தையும் பட்டருக்குச் சன்மானமாகக் கொடுத்தருளி அதிக சந்தோஷபரவசராய், 'பட்டரே! உமக்குமேல்வீடுதந்தோம்' என்று அருளிச்செய்ய, பட்டரும் 'பேரருள்' என்று அங்கீகரித்தனர்.

அவ்வளவிலே அங்குப் பெருங்கூட்டமாக இருந்த அடியார்களெல்லாரும் கடல் குழம்பினாற்போலக் கலக்கமுறலானார்கள். பட்டரோ, பெருமகிழ்ச்சியுடனே பெருமாள் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்துக் கைகூப்பி நின்று நம்பெருமாளுடைய திருமேனியழகில் மிகவும் ஈடுபட்டு வரம்பு கடந்த அந்த ஈடுபாட்டினால் 'இப்படி திவ்விய சௌந்தரியத்துக்கு ஆகரமானதிருவடித் தாமரைகளையும், அஞ்சலென்றகையையும், கவித்தமுடியையும், குளிர்ந்த திருமுகமண்டலத்தையும், கஸ்தூரித்திருநாமத்தையும், பூத்தபுன்முறுவலையும், கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டபெரிய கண்களையும் பரமபதத்திற் கண்டேனில்லையாகில், ஒரு மூலையடியே முறித்துக்கொண்டு குதித்து மீண்டு இங்கு வந்து விடுவேன்' என்று விண்ணப்பஞ்செய்து நம்பெருமாளைப் பாதாதிகேசமாகக் கண்குளிரநோக்கி விடைபெற்று மீளுமளவிலே, பெருமாள் தம் வரிசைகளையெல்லாம் அனுப்ப, பட்டர் தொண்டர்கள் புடைசூழப் பிரஹ்மரதத்திலெழுந்தருளித் திருமாளிகை சேர்ந்து ஆண்டாளைச்சேவிக்க, ஆண்டாள் எல்லையில்லாத ஆநந்தத்தையுடைய பரமபதமாகிற திருநாட்டிலே புகப்பெறுவீரென்னுங்கருத்து அமைய, * "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்று ஆழ்வாரருளிச் செயல்கொண்டுவாழ்த்தினள். பட்டரும் அருளிச்செயல்கொண்டே † 'அம்மா அடியேன் வேண்டுவது ஈதே" என்று சொல்லி, பிறகு கோஷ்டியாக எழுந்தருளியிருந்து என்றைக்கும்போலத் திருநெடுந்தாண்டகத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கையில், "அலம்புரிந்த நெடுந்தடக்கை" என்று தொடங்கும் ஆறுவது பாசுரத்தில் 'அஞ்சிறைப்புள்தனிப்பாகன்' என்கிற இடம்வந்தபோது,

‡"பறவையேறுபரம்புருடாநீஎன்னைக்கைக்கொண்டபின்
பிறவியென்னுங்கடலும்வற்றிப்பெரும்பதமாகின்றதால்"

என்றதை ஒருமுறைக்குஇருமுறை உச்சரிக்க, அவ்வளவிலே ஸ்ரீவைகுண்டநாதன் கருடாழ்வான்மேல் எழுந்தருளிக் காட்சிகொடுத்தருள, அத்திருவுருவத்தை நோக்கினகண் இமையாதபடி மலர விழித்து ஆநந்தாதிசயத்தால் திருமேனிமுழுதும் உரோமாஞ்சங்கொண்டு புன்முறுவல் பூத்து $ "கருடனது திருத்தோளிற்கண்ட கோலம் கண்ணிலும் நெஞ்சிலும் நிற்கக் கருணைபாதி, புருடனது திருநாமம் தனது நாவிற் போகாமல் நனிவிளங்க"ச் சிரத்தின்மீது கூப்பியகரத்தராய் அணையிலே சாயுமளவிலே, கபாலம்வெடித்துத்திருநாட்டுக்கு எழுந்தருளினர்.

அப்போது அருகிலுள்ளார் உள்ளே சென்று 'பட்டர் இளைத்து எழுந்தருளியிருக்கிறார்' என்று திருத்தாயாரான ஆண்டாளுக்கு அறிவிக்க, அவள் சடக்கெனவந்து பட்டரை யெடுத்து மார்பிலணைத்துக்கொண்டு அவர் பரமபதமடைந்ததைக்குறித்து உள்ளங்கலங்

* திருவாய்மொழி - ௧௮ - ஆந்திருப்பதிகம் - ௪.
† " ௧௧ - ஆந்திருப்பதிகம் - ௧.
‡ பெரியாழ்வார் திருமொழி - ௪௪ - ஆந்திருப்பதிகம் - ௨.
$ வில்லிபுத்தூரார் பாரதம் - கன்னபருவம் - ௧௭-ஆம் போர்ச்சருக்கம் ௨௫.

குதல், முகங்கன்றுதல், கண்ணீர்மல்குதல் முதலிய சோகக்குறியொன்றுங்கொள்ளாமலே 'உடையவன் உடைமையைக்கைக்கொண்டால் நாம் வெறுக்கலாமோ?' என்று சொல்லிக்கொண்டிருந்தனள். அப்போது கோயிலிலுள்ளாரெல்லாரும் கடல் கலங்கினாற்போலக் கிடந்து துடித்தார்கள். நஞ்சீயரும் வேரற்றமரம்போல விழுந்து கண்ணீர்மல்கப் பலபலவாறு கதறியழுதார். பெருமாளும் நாச்சிமாரும் உட்பட அப்பொழுது சோகித்தார்களென்றால், மற்றையோர் செய்தியைக்குறித்துச் சொல்லவேண்டுவது என்னே! பிறகு நஞ்சீயர் முதலியோர் அனைவரும் பட்டர்க்குச் சரமகைங்கரியத்தைச் சிறக்கநடப்பித்தார்கள்.

அந்தக் கிரியைகளெல்லாம் முடிந்தபிறகு சீராமப்பிள்ளை சென்று பெருமாளைச் சேவித்தபோது பெருமாள் அவரை நோக்கி 'பட்டரை இழந்தோம் நாம், உமக்கு நாம் இருக்கிறோம், நீர் கிலேசிக்கவேண்டா' என்று தேறுதல் கூறி, கோயிலிலே பட்டருக்கு இருந்த வரிசைகளையெல்லாம் அவர்க்குக் கொடுத்தருள, பிறகு சீராமப்பிள்ளை தரிசநம் நிர்வகித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

'பட்டர் வைபவம் முற்றச்சொல்லி முடியாதிறே! யதாமதி யதாச்ருதமாகச் சொன்னதித்தனை' என்று குருபரம்பராப்ரபாவமுடையாரும், 'பட்டருடைய வைபவம் ரகுநாத சரிதம்போலே மிகவும் பரந்திருக்கும்; ஆகிலும், சிறிது எழுதிற்று' என்று பழநடைவிளக்கமுடையாரும் எழுதியிருத்தலால், பட்டர் சரித்திரம் முழுவதும் யார்க்குஞ் சொல்லத்தரமன்று; பெரியோர்களுடைய சொற்பொருட்கருத்துக்களைப் பெரும்பாலும் அடியொற்றிச் சுருக்கமாக எழுதப்பட்டது இது வென்றே கொள்ளத்தக்கது.

திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களுக்கும், ஸ்ரீராமாயணபாரதபாகவத விஷ்ணுபுராணாதி வடநூல்களிற் சிற்சில சுலோகங்களுக்கும் பட்டர் வியாக்கியானம் உபந்யசிக்கிறபோது உணர்த்திய விசேஷார்த்தங்கள் அநேகம் உண்டு; அவையெல்லாம், 'பட்டர் நிர்வாஹம்' என்று ஆன்றோராற் சிரமேற்கொண்டு கொண்டாடப்படுகின்றன. அவற்றையெல்லாம் எடுத்துத் தொகுத்து இதனுடன் சேர்ப்பின் மிகப்பெருகுமாதலால், அவற்றிற் சிற்சில விஷயங்கள் மாத்திரம் மாதிரிக்காக இந்நூலிற் காட்டப்பட்டன; மற்றவை மற்றொரு சமயத்தில் தொகுத்து அநுபந்தமாகச் சேர்க்கலாகும்.

முற்றிற்று.

---

## வசன நடை.

நடை என்பது தமிழிலே ஒழுக்கத்துக்கும் பேர், செல்லும் செலவிற்கும் பேர். வேறு அர்த்தமும் அதற்கு உண்டு. எந்த அர்த்தத்திலும் இம்மொழிக்கு நட என்பதே பகுதி. ஆகவே நடை என்பது செல்லும் செலவு என்னும் அர்த்தத்தில் தொழிற்பெயரும் மற்ற அர்த்தங்களில் தொழிலாகுபெயரும் ஆகும். சொன்னடை வாக்கியநடை உரைநடை செய்யுணடை நூனடை என்ற வழக்காறுகளில் நடை என்பது ஆகுபெயர்ப்பொருளதே. நூனடையாவது நூல் செல்லும் செலவு, நூற்பொருள் செல்லும் செலவு என்பதாம். காலனடையின் நோக்கமாவது ஒருவன் ஓரிடத்திருந்து பிறிதோரிடத்துச் சென்றுசேர்தல். நூனடையின் நோக்கமாவது ஒருகருத்து ஒருவன் மனத்திருந்து பிறனொருவன் மனத்துச் சென்றுசேர்தல். ஓரிடத்திருந்து பிறிதோரிடத்தில் ஒருவன் சென்று சேர்தற்குக் கால் கருவி. ஒருவன் மனத்திருந்து பிறனொருவன் மனத்தில் ஒரு கருத்துச் சென்று சேர்தற்குக் கருவியாவது சொல்.

ஆகவே நூனடையின் கூறுகளாவன, கருத்தும் சொல்லும் என இரண்டு. கருத்தாவது கருதிய பொருள்; சொல்லாவது அப்பொருளை உரைக்கும் உரை. ஒரு நூலின் நடை சிறந்தது என்பார் குறிப்பாவது, அந்நூல் தான் கருதிய பொருளை உரைக்கும் செவ்வி சிறந்தது என்பதாம். உரியசொற்கள் உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே நடை. கருதிய பொருளுக்கு உரிய சொற்களும் கருதிய பொருளுக்குரிய தொடர்களும் அவற்றுக்கு உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே முற்றுத் தொடர்மொழி என்பதான வாக்கியநடை. கருதிய பொருளுக்கு உரியசொல்லாவது மரபுவார்த்தை. "எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர், செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே". சொற்களும் தொடர்களும் உரிய இடங்களில் நிற்றலாவது, அந்தந்த பாஷையின் போக்குக்கு ஏற்றவாறாக எழுவாய்செயப்படுபொருள் பயனிலைமுதலிய அங்கங்கள் கருதியகருத்துக்கேற்ப வாக்கியங்களில் உரிய இடங்களில் பொருந்தி நிற்றல்.

வாக்கியநடையிலே, பொருளும் சொல்லும், உள்ளிட்ட பொருளும் அதனை வெளியிட்டசொல்லும், கருதிய கருத்தும் அதனை உரைக்கும் உரையும், பருந்தும் அதன் நிழலும், மலரும் அதன் நாற்றமும், மணியும் அதன் ஒளியும் போல்வன. சொல்லொடு பட்டுக் கருத்து நடைபெறுவது, உடலொடு பட்டு உயிர் இயங்குவது போலாம். பொருளும் சொல்லும் அபேதம். பொருளும் சொல்லும் அபேதமாயினும், தோற்றக்கிரமத்தில் பொருள் முற்பட்டது; சொல் அதன் வழிப்பட்டது. கருத்துமுற்பட்டது; உரை அதன் வழிப்பட்டது. சட்டியில் உள்ளது தான் அகப்பையில் வரும். பொருளின் செவ்வியே சொல்லின்செவ்வி: கருத்தின் செவ்வியே உரையின் செவ்வி. உரைக்கலான பொருள் இல்லையாயின் உரைக்கலான உரையும் இல்லை. உரைக்கலானபொருள் உள்ளத்தில் உருப்படுமாயின், அதனை உரைக்கலான உரையும் வாக்கில் உதித்தலாகும். உரைக்கும் பொருள் உசிதமாயின் உரைக்கும் உரையும் உசிதமாகும். நினைப் பின்வழியது உரை.

ஒருவனது நூனடை சிறந்தது என்ற குறிப்பு,அந்நூல் அவன் கருதிய கருத்தை உரைக்கும் செவ்வி சிறந்தது என்றகுறிப்பேயாம் என முன்னர்க் கூறப்பட்டது. அஃதாவது அந்தக்கருத்தை வேறு விதமாய் உரைக்கலான எவ்வகைத் திறத்தினுங் காட்டில் அந்நூல் அக்கருத்தை உரைத்துக் காட்டும் திறமே சிறந்தது; அந்நூல் அக்கருத்தை உரைத்துக் காட்டும் திறத்தினும் சிறந்தது வேறின்று என்பதாம். ஒரு கருத்தைப் பலவகைத் திறப்பாட்டினால் உணர்த்தக்கூடும். ஆயினும் உரைக்கும் உரையின் திறம் வேறுபட்டவிடத்துக் கருத்தின் திறமும் வேறுபடுவதாகும். கருத்தின் திறம் வேறுபடாது, அக்கருத்தைப் பிரதிசாயலாக பிடித்துக்காட்டவல்ல உரையின் திறப்பாடு ஒன்றே. அத்திறப்பாட்டினை உணர்ந்து உரைப்பதே நூனடை செவ்விபெறுதலான மர்மம். நூல் நவின்றொறும் நயம்பயத்தலான காரணம் இதுவே. இந்த மர்மம் எல்லாருக்கும் சித்தியாவதொன்றன்று. ஒவ்வொருகால விசேஷத்தில் ஒரொருவரே இந்தச் சித்தியை அடைபவர். "வார்த்தை பதினாயிரத்தொருவர்." தமிழிற் சொல்வன்மை நாநலம் என்பன இந்தச்சித்தியே.



கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

என்ற குறள் இந்த வாக்குச் சித்தியை நன்கு விளக்குகின்றது.

நூனடை செவ்விபெறுதலான இந்தச் சித்தி தொட்டுக் காட்டியும் சுட்டிக்காட்டியும் விளக்குவதான ஓர் வித்தை அன்று. "தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது" என்கிறவிதி இதற்கு முற்றும் பிரயோக மாகாது. கவிகள் போலவே கட்டுரை எழுதுவோரும் கருவிலே திருவுடையவர். நாநலமுடைமை பிறவிக் குணங்களில் ஒன்று. "தெய்வப்புலவனுக்கு நா உணரும் (சித்திர ஓடாவிக்குக் கைஉணரும்)"என்பது கவிநடைக்கு மாத்திரமேயன்றிக் கட்டுரைநடைக்கும் பொருந்துவதென்பது சிறந்த வசனநடையின் திறங்களைக் கூர்ந்து உய்த்துணர்ந்தவர் கண்டபடி. வசனத்தில் உரிய சொற்களாகிய நன்மொழி புணர்த்தியும் நவின்றோர்க்கினிமை தருவதான ஓசையூட்டியும் செவ்விசெய்த நடையாகிற நவநீதம் தெய்வப்புலவர் எனப்படும் வாக்கிகட்கே கைவல்யம்.

இவ்வித அமிர்தவாக்கு இவர்கட்கு இயல்பு. ஏனையோர் இவர்களைப் போலவாக்குச்சித்திஅடைவது டாமைமயிர்க்கம்பலம் அடைவதேயாம். நளபாகம் வீமபாகம் என்பன அனைவர்க்கும் கைவருவதில்லை. ஆயினும் பழக்கம் வழக்கம் அன்றோ. செந்தமிழும் நாப்பழக்கம்; நடையும் நடைப்பழக்கம்; ஆகையால் சிறந்த வசன நடைகளிற்பழகி அவற்றின் சூக்குமங்களை அறிந்து கடைப்பிடித்தலால், காரிகைகற்றுக் கவிபாடுவார் போல, வசனநடையில் சிலர் ஒரு பரியாயமாக வாக்குச்சித்தி அடையலாம்.

வாக்குச்சித்தி அடைவதில் ஒவ்வொருவரும் கவனிக்கத்தக்க சில அமிசங்கள் உண்டு.

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

என்னும் குறள் அமைச்சர் அவையறிந்துரைத்தலை நோக்கியதேனும், நூலாசிரியர் நூலோதுவாரை அறிந்துரைத்தலின், மேற்றாகவும் கொள்ளக்கிடக்கின்றது. இதன் பொருள், சொற்களின்நடையினை

ஆராய்ந்தறிந்த நன்மையினை உடையார் ஒன்று சொல்லுங்கால் அதன் செவ்வியை ஆராய்ந்தறிந்து வழுப்படாமல் மிகவும் தெளிந்து சொல்லுக என்பதாம். சொற்களின் நடையாவது சொற்கள்பொருள்களைப்பயக்குமாறு. செவ்வியாவது கேட்டற்கண் விருப்பமுடைமை. இங்ஙனம் கேட்டற்கண் விருப்பமுடைமைக்குக் காரணமான நடையின் குணங்களாவன:—வழுவின்மை சுருங்குதல் விளங்குதல் இனிதாதல் விழுப்பயன்றருதல் என்றிவை முதலாயின என்பர் பரிமேலழகர். அமைச்சியலுக்குரிய சொல்வன்மை இவற்றை உள்ளிட்டிருக்குமாறே, நூலுக்குரிய சொல்வன்மையும் இவைகளை உள்ளிட்டிருப்பது ஒருதலை.

இங்ஙனம் வள்ளுவரும் பரிமேலழகரும் கூறிய கூற்றை மூலபாடமாக வைத்துக்கொண்டு நடையின் திறங்களை ஒருவாறு விரித்துரைத்தல் ஆகும். சொற்கள் பொருள்களைப் பயக்குமாறு முன்னமே ஒருவாறு உரைக்கப்பட்டது. சொற்களின் திறங்களை முதலில் சிறிது ஆராய்ந்துகொள்வோம்.

சொற்களானவை, செஞ்சொல் ஆக்கச்சொல் குறிப்புச்சொல் என மூன்று வகைப்படும். அவற்றால் குறிக்கப்படும் பொருளும் செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப்பொருள் என மூன்று வகைப்படும். செஞ்சொல்லாவது நேராற்றலால், அதாவது இச்சொல்லால் இப்பொருளை அறிக என்னும் சங்கேதத்தால், பொருளைத் தருவது. இடுகுறி காரணக்குறி காரணவிடுகுறி என்பவை இதன்வகை. ஆக்கச்சொல்லாவது இலக்கணையால் பொருள் தருவது. ஆகுபெயர் உருவகம் முதலியன இதில் அடங்கும். குறிப்புச்சொல்லாவது குறிப்பால் பொருள் தருவது. குறிப்பாவது செம்பொருளும் ஆக்கப்பொருளும் அல்லாத வேறுபொருளைத்தரும் செய்கை. ஒட்டு (பிறிதினவிற்சி) - பரியாயம் - மாறுபடுபுகழ்நிலை - புகழாப்புகழ்ச்சி முதலியன இங்ஙனம் குறிப்பால்பொருள் தருவன. செஞ்சொற்கள் மாத்திரமே மரபுபற்றிவருவன. இவைகளே வெளிப்படையால் பொருள் உணர்த்துவன. ஆக்கச்சொற்கள் குறிப்பால் பொருள் உணர்த்துவனவாயினும் குறிப்புச்சொற்களின் வேறானவை.



இவ்வகைப்பட்ட சொற்களைக் கையாளும் திறம் நூலாசிரியருக்கு இன்றியமையாதது. இத்திறம் நிகண்டு திவாகரங்களை நெட்டுருப்பண்ணுவதனால் மாத்திரமே கைவருவதன்று. கல்வி கேள்விகளால் செய்யுள் வழக்கையும் உலகவழக்கையும் நுனித்தறிவதான பாஷாஞானமே சொற்களைக் கையாளும் திறத்துக்கு ஆதாரம். பாஷாஞானம் உள்ளவன் அகராதிகளில் உள்ள சொற்கள் எல்லாவற்றையும் கையாள்வது இயலாது. தான் இயற்றப்புகுதலான நூற்பொருளுக்கேற்ற சொற்களையும் அவற்றின் பிரயோகங்களையும் அறிவது ஒருதலை. இங்ஙனம் சொற்களைக் கையாள்வதில் தமிழ்ச்சொற்கள் மாத்திரமே சாலா. சிலபொருள்களையும் கருத்துக்களையும் சில வடசொற்களும் சில திசைச்சொற்களும் நன்கு விளக்குவனவாக இருத்தலால், அவற்றின் பிரயோகங்களை அறிவதும் ஒருதலையே. கற்போர் நெஞ்சம் காமுறுமாறு சொற்பொருளுணர்த்தும் சொல்வன்மை பெறவேண்டுவான் இங்ஙனமாக மொழித்திறத்தின் முட்டறுத்தலே முதன்மையாகக் கொள்ளத்தக்க விஷயம்.

மொழித்திறத்தின் முட்டறுத்து அவ்வவ்விடத்துக்குரிய நன்மொழி புணர்த்தலோடு நவின்றோர்க்கினிமை தருவதான ஓசையூட்டுந்திறமும் இனிதாதல் எனப்பரிமேலழகர் கூறிய குணத்தில் அடங்கும். செய்யுளில் எதுகைமோனையோடு சீர்களின்இயைபு சந்தவின்பந்தருவதுபோல, வசனத்திலும் சந்தவின்பந் தருவனவான கூறுகள் சில உண்டு. அவையாவன எதுகைமோனைகள் ஏற்றபெற்றி ஓரோவிடத்தியைவதும், குறில் நெடில்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப அளவுபட வருதலும், வன்கணமும் மென்கணமும் சாலமிகாது முக்கணமும் விரவி வருதலும், இன்றியமையாத சந்திகளைமாத்திரம் அமைத்து இசையறுப்பதும் முதலியனவாம். இவையெல்லாம் இரசிகர்க்கே இயல்பாக இயையும். இரட்டைக்கிளவி - அடுக்குத்தொடர் - மீமிசை - மடக்கு - சிலேடை - சொற்பின் வருநிலை - விரோதவணி - முரண் - முதலியவற்றால் சொல்லின்பம் பெறவைப்பதும் இங்கே கொள்ளத்தகும். பொருட்சுவைஇல்லாதவிடத்துச்சொற்சுவை உண்டாகாது. பொருட்சுவை சொற்சுவை என்னும் இரண்டும் இயைந்து நடத்தலே இனிதாதலாம்

வழுவின்மையை நடையின்செவ்விகளில் ஒன்றாக வைத்தார் பரிமேலழகர். வழுவாவன சொல்வழு பொருள்வழு என்பன. பொருள் வழுவைப்பற்றி ஈண்டு ஆராய்ச்சியின்று. சொல்வழுவாவது சொல்லின் குற்றம். சொல் இலக்கணப்பொருத்தம் இன்றிவருவது. வழூஉச்சொற் புணர்த்தல் என்ற குற்றம் இதுவே. சந்திவழு முடிபுவழு என்பனவும் ஓம்பற்பாலனவே. வலிமிகுதலான இடத்தில் இயல்பாக விடுதலும் இயல்பாமிடத்தில் மிகுதலாக விடுதலும் ஆகியவழுக்கள், கற்கறிக்குமாறு அட்ட அடிசில்போல் படிப்பவன் வாய்க்கும், அபசுவரங் கலந்த கீதம்போல் கேட்பவன் செவிக்கும் அருவருப்புத்தருவனவாகும். முடிபுவழுக்கள் வெளிப்படை. இன்னோரன்ன வழுக்களைத் தவிர்த்தற்கு எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அறிவது அவசியம்.

நடையின் செவ்விக்குரிய குணங்களில் சொல் சுருங்குதல் ஒன்று. அதாவது 'மிகபடச் சொல்லேல்' என்பதாம். பரந்துரைத்தலும் பாரித்துரைத்தலும் ஆகா. குன்றக்கூறலும் குற்றமே. 'ஒருங்கெனைத்தும், சில்லெழுத்தினாலே பொருளடங்கக் காலத்தால், சொல்லுக செவ்வியறிந்து' என்பதே சுருங்கச்சொல்லுதலின் சூட்சுமம். இது நூலினுக்கு அழகென்று வரையறுத்த பத்தில் ஒன்று.

பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

சுருங்கச்சொல்லுமிடத்து மயங்க வைத்தல் ஆகாது. நின்று பயனில்லாத சொற்களை நீக்குதல் வேண்டும். தொகுத்துச்சுட்டல் - வகுத்துக்காட்டல் - ஒப்பின் முடித்தல் - மாட்டெறிந்தொழுகல் - உரைத்துமென்றல் - உரைத்தாமென்றல் - எஞ்சியசொல்லினெய்தக்கூறல் - சொல்லின் முடிவினப் பொருண்முடித்தல் - ஒன்றினமுடித்தறன்னின முடித்தல் முதலியதந்திரவுத்திகளை அனுசரிப்பதுசுருங்கச் சொல்லுதலுக்குச் சிறந்த உாபயங்களாம்.

இனி விளங்குதல் என்பது தான் கருதிய பொருள் பிறருக்கு உள்ளவாறு விளக்கமாதல். அங்ஙனம் உரைப்பது விளங்கவைத்தல் என்னும் அழகு. அதாவது பொருளைச்சந்தேகத்துக்கு இடமா



காது விளங்கவைத்தல்- நூனடையில் இந்த அமிசம் மிகவும் முக்கியமானது. பொருள் கருகலின்றி வெளிப்படையாகத் தெளிந்து நிற்பதே விளங்கவைத்தலின் நோக்கம். சாஸ்திரசம்பந்தமான பொருள்களை விளக்குமிடத்தில் நூலாசிரியன் எவ்வளவு விளக்கமாகக் கூறினும், அந்தச் சாஸ்திரத்திற்குரிய பரிபாஷை பயிற்சியாகிற வரையில் மாணாக்கன் நூனுதலும் பொருளை எளிதின் உணர்தல் ஆகாது. இது நூலாசிரியனுடைய குற்றம் அன்று. பரிபாஷை இன்றியும் சாஸ்திரப் பொருள்களைத் திட்பமாகவும் நுட்பமாகவும் வரையறுத்துரைப்பதும் இயலாது. அந்தந்த நூலைக் கேட்டற்குரிய அதிகாரியின் திறத்துக்கேற்ப ஐயம் திரிபுகளுக்கு இடமின்றி, பொருள் உள்ளவாறு தெளிவாக விளங்குமாறு உரைப்பதே விளங்கவைத்தலின் நோக்கம். தன்மை நவிற்சி - உவமைகாட்டல் - உதாரணம் காட்டல் - மேற்கோள்காட்டல் - இன்னதல்லது இதுவென மொழிதல் முதலியன விளங்கவைத்தலுக்குரிய சாதனங்களாம். வாக்கியங்களையும் பந்திகளையும் இயல்களையும் முறையின் வைத்தலும் ஒருதலை.

விழுமியது பயத்தல் என்னும் அழகையே கருதிற்று விழுப்பயன்றருதல் என்பது. அது ஒண் பொருள் (உசிதமான பொருள்) பெறும்படி நிற்றல். "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" ஆதலால் இந்தப் புருஷார்த்தங்களில் ஒன்று தருவதாக நிற்றலே விழுப்பயன்றருதலாம். ஒருபயன் கருதாத நூல் இல்லை. புருஷார்த்தங்களுக்குக் கருவியான விழுப்பயன்றருதலாகக் கொள்ளலுமாகும்

இங்ஙனம் இழுமென் மொழியான் விழுமியது நுவலும் நோக்கம் இல்லாதவன் நூலெழுதப் புகுதற்பாலனல்லன். அவன் அதுசெய்வது வெறுஞ்சட்டிதாளிப்பதே. தனது மனத்தின் இயல்பான போக்குக்கு மாறான பொருள்களின் கூறுபாடுகளை விரித்தற்பொருட்டும் ஒருவன் நூலெழுதப் புகுதற்பாலனல்லன். அவன் அது செய்வது அகாரியமே. மனப்போக்கொடுமாறுகொள்ளாமற் பொருந்தியவிடத்தும், கூறலுற்ற பொருளின் கூறுபாடுகளைப் பூர்வோத்தரமாய்த் தீர்க்கமாக அறியாதவன் எழுதலான நூல் சென்று தேய்ந்

திறுவதாகும். அந்நூல் குறைகுடமே. பிறருடைய நடையின்
போலியாக எழுதப்புகுவது அன்னநடைநடக்கப்போய்த் தன்ன
டையும் கெடுவதே. பிறர் பின்பற்றத்தக்க நூனடை தீர்ந்த ந
டையாகக் கொள்ளப்படாது. பிறர் நடையைப் பின்பற்றிய நூல்
திட்பமும் நுட்பமும் இல்லதேயாகும். பிறநூற்பொருளையும் பி
றநூனடையையும் பின்பற்றித் தொடுத்த நூல்கள் ஒட்டிட்டுத் தை
த்த உடைகள்போலாம். அவை இராம்மியம் தருவதும் இல்லை: நூ
ற்கணக்கில் வைத்து எண்ணப்படுவதும் இல்லை.

நூனடையின் செவ்வியால் நூலாசிரியன் செவ்வி தானே விளங்
கும். உரையின் செவ்வி உரைப்போன் செவ்வியே. உரைத்தவ
னை உணராத விடத்தும் உரையின், செவ்வி அவனது செவ்வியை உ
ணர்த்தும். ஒரு நூலை இயற்றுவித்தோன் தான் அதனை இயற்றி
னானாக வெளியிடினும் உள்ளபடி இயற்றினான் பெயர் வெளிவராமற்
போவதில்லை. நூலாசிரியன் திறங்களெல்லாம் நூனடையால் விள
ங்கும். ஆசிரியனும் அவனியற்றிய நூலும் பிம்பப்பிரதிபிம்பங்கள்.
"செய்தானை ஒவ்வாத பாவையோவில்".

தி. செல்வக்கேசவராயன்.

---

உ

# சேனாவரைய வாராய்ச்சி.

(செந்தமிழ்த்தொகுதி-ச, பகுதி-கஉ, சுசுய-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

எச்சவியல் சூ. கரு.

"இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே."

"இ-ள். இசைநிறையும் அசைநிலையும் பொருள்வேறுபாட்டொடு
புணர்வதுமென ஒரு சொல்லடுக்கு அம்மூன்று வகைப்படும். எ-று."

"உ-ம். 'ஏஏ ஏஏ யம்பன் மொழிந்தனள்' என்றது இசைநிறை. மற்
றோ மற்றோ; அன்றே அன்றே என்பன அசைநிலை."



என்றவற்றின்பின், பொருளொடு புணர்தலுக் குதாரணமாக
"பாம்பு பாம்பு; அவனவன்; வைதேன்வைதேன்: உண்டுண்டு;
போம்போம் என்பன, முறையானே விரைவுந்துணிவும் உடம்பாடும்
ஒருதொழில் பலகானிகழ்தலுமாகிய பொருள்வேறு பாடுணர்த்த
லிற் பொருளொடு புணர்தல்" என்பது பிரதிகளி லெல்லாங் காணப்
படுகிறது.

இவ்வாக்கியம் பொருளொடு புணர்தல் நால்வகைப் படுமென்
றும், அவற்றிற்குதாரணம் இவையென்றும் காட்ட எழுந்தது. இத
னில், பொருளொடுபுணர்தலின் வேறுபாடு விரைவும், துணிவும்,
உடம்பாடும், ஒரு தொழில் பலகானிகழ்தலுமென நான்கென்று
சொல்லி, உதாரணம் ஐந்து காட்டப்பட்டிருக்கிறது. முறையானே
என்றதனால், பாம்புபாம்பு என்பது விரைவுப்பொருளில் வந்ததெ
ன்பதும், அவனவன் என்பது துணிவுப்பொருளில் வந்ததென்பதும்,
வைதேன் வைதேன் என்பது உடம்பாட்டுப்பொருளில் வந்ததென்
பதும் பெறப்பட்டுப் பொருத்தமாயின. இனி ஒருதொழில் பல
கானிகழ்தலுக்குதாரணமாக உண்டுண்டு; போம் போம் என்பன
எஞ்சிநிற்கின்றன. ஒன்றற்கே இரண்டுதாரணங் காட்டியிருக்கின்று
ரெனக் கொள்வோமெனின்:— அவ்வாறு கொள்ளினும் பொருள்
பொருந்தவில்லை.

இனி உண்டுண்டு போம்போம் என்பவற்றுள் ஈற்றிலுள்ள
போம் என்பதனை நீக்கிவிட்டு, உண்டுண்டுபோம் என்பதை உதாரண
மாகக் கொள்ளின், பயனின்றியே வேளைதோறுந் தின்றுதிரியும்
ஒருவனைப்பற்றி வேறொருவரிடம் பேசிக்கொண்டிருக்குங்கால், அவர்
"சாத்தன் என்னசெய்து கொண்டிருக்கிறான்" என்றவழி, "அவன்
உண்டுண்டுபோம்" என்பது வழக்காறுகலானும், இதில் உண்ணுதற்
றொழில் பலகால் நிகழ்கின்றமை கூறப்படுதலானும், ஒரு தொழில்
பலகானிகழ்தற்குப் பொருத்தமுடைத்தாம். ஆகவே ஒருதொ
ழில் பலகானிகழ்தலுக்கு உண்டுண்டுபோம் என்பதையே உதாரண
மாகக்கொண்டு ஈற்றிலுள்ள போம் என்பதை நீக்கிவிடவேண்டுமெ
ன்பது. இவ்வுதாரணத்தில் உண்டுண்டு என்பதே ஒரு சொல்லடுக்
காயினும் அவ்வாறு நிற்பின் வினையெச்சப்பொருள் படாமையின்

அப்பொருள்படுவான் போம் என்பதும் சேர்த்துரைக்கப்பட்டிருக்கிறது.

எச்சவியல். சூ-கக.

"வினையின் றொகுதி காலத் தியலும்."
"இ-ள். வினைத்தொகை காலத்தின் கணிகழும். எ-று."

"காலத்தியலுமெனப் பொதுவகையாற் கூறியவதனான் மூன்றுகாலமுங்கொள்க."

என்றவற்றின்பின்,

"தொகுதி காலத்தியலுமெனவே, அவ்வினை விரிந்து நின்றவழித்தோன்றாது தொக்கவழித்தொகையாற்றலாற் காலந்தோன்றுமென்றவாறும்" என்றிருக்கிறது. இவ்வாக்கியம், ஆடரங்கு முதலிய வினைத்தொகையெல்லாம் ஆடு, அரங்கு; செய், குன்று; என்பன இவ்விரண்டு சொல்லாகக்கூடியவழி அத்தொகையாற்றலால் ஆடிய ஆடுகின்ற ஆடும் எனவும், செய்த செய்கின்ற செய்யும் எனவும் முக்காலமுந் தோற்றுவிக்குமேயன்றி, அரங்கு, குன்று என்பவற்றினீங்கி ஆடு, செய் என்பன தனித்து நிற்பின் அவ்வாறு முக்காலமுந் தோற்றுவியா என்பதை உணர்த்துகின்றது.

இதனில் "அவ்வினை விரிந்து நின்றவழி" என்பது ஆராயத்தக்கது. ஈண்டுவினையென்றது முதனிலைத் தொழிற் பெயராய் ஆடு, உண், தின் என வினைமாத்திரமுணர்த்தி நிற்பனவற்றை. இதனை மேல் ஆசிரியர் சேனாவரையரே நன்குவிளக்கியிருக்கின்றார்.

இனி, "வினைவிரிந்து நின்றவழி" என்பதற்கு 'வேற்றுமைத்தொகை உருபுவிரிதல்போல வினைத்தொகையும் விரிந்து உண்ட, உண்கின்ற, உண்ணும் எனத்தொகாநிலையாய் நின்றவழி' எனப் பொருள் கொள்ளின், அவைதாமே காலங்காட்டி நிற்றலால் "விரிந்து நின்றவழி (காலம்) தோன்றாது" என்பதனோடு மாறுபடுகின்றது. அதனானும், மேல் "தொகைப்பொருளாகிய தாம் பிரிந்தவழிப்பெறப்படாமையின்" எனவும், "ஆசிரியர் இவற்றைப் பிரித்துப் புணர்க்கப்படா: வழங்கியவாறேகொள்ளப்படு மென்றது பிரித்தவழித் தொகைப்பொருள் சிதைதலானன்றே" எனவும் இச்சூத்திரவுரை



யிற் பலவிடத்தும் பிரித்தல் பற்றியே கூறுதலானும், ஈண்டும் அவ்வாறே பிரித்தல்பற்றிக் கூறிற் பொருட்பொருத்த முறுதலானும் "விரிந்துநின்றவழி" என்பதை "பிரிந்துநின்றவழி" எனத் திருத்திக் கொள்வதே செவ்விதாம்.

இவ்வாறுகொள்ளிற் பொருட்பொருத்த முறுதல்:—ஆடரங்கு என்பதில் ஆடுஎன்பது அரங்கு என்பதை விட்டுப் பிரிந்து நின்றவழிக் காலந்தோன்றாமையும் அதனோடு தொக்கவழித்தொகையாற்றலாற் காலந்தோன்றுதலுமாம்.

இதுகாறுங்கூறியவாற்றால், தொகுதல் என்பது சுருங்குதல், ஒன்றோடொன்று கூடுதல் என இருபொருள்படும் என்பதும், அவற்றுள் முன்னையதற்கு விரிதலும், பின்னையதற்குப் பிரிதலும் எதிர்மொழியாமென்பதும் பெறப்பட்டன. இச்சூத்திரத்துக்கூறப்படுந்தொகுதல் ஒன்றோடொன்று கூடுதலென்னும் பொருளில் வந்தது.

எச்சவியல். சூ. ருச.

"செய்யாயென்னுமுன்னிலைவினைச்சொற்
செய்யென்கிளவி யாகிடனுடைத்தே."

"இ. ள். செய்யாயென்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை முற்றுச்சொல் ஆயென்னு மீறுகெடச் செய்யென்னுஞ் சொல்லாய் நிற்றலுடைத்து. எ - று."

"ஆகிடனுடைத்தென்றதனான், செய்யாயென ஈறுகெடாது நிற்றலே பெரும்பான்மை யென்பதாம்."

"உ - ம். உண்ணாய், தின்னாய், கிடவாய், நடவாய், தாராய், வாராய், போவாய் என்பன, ஈறுகெட உண், தின், கிட, நட, தா, வா, போ எனச்
செய்யென்கிளவியாயினவாறு கண்டுகொள்க."

"செய்யாயென்னும் முன்னிலை யெதிர்மறை செய்யென்கிளவியாதற்கேலாமையின், செய்யாயென்னு முன்னிலை வினைச்சொலென்றது விதிவினையேயாம்."

என்றவற்றின் பின்னுள்ளதோர் வாக்கியம் இதுகாறும் வெளியப்பட்டுள்ள அச்சுப்பிரதிகளினும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துள்ள இ

ரண்டேட்டுப் பிரதிகளினும் ஒன்றேடொன்றெவ்வாமற் பிழைபட்டுக்கிடக்கின்றது. அது வருமாறு:—

"தன்னின முடித்தலென்பதனுன் என்பன மீன்கடல் மதமென நிற்றலும், அழியலை - அலையலை - என்னு முன்னிலை யெதிர்மறை ஐகாரங்கெட்டு - அழியல் - அலையல் - என நிற்றலுங்கொள்க." என்று ஒரு பதிப்புப்புத்தகத்திற் காணப்படுகிறது.

மற்றிரண்டு பதிப்புக்களில் "தன்னின முடித்தலென்பதனுன் அழியலை, அலையலை என்னு முன்னிலை யெதிர்மறை ஐகாரங்கெட்டு அழியல், அலையல் என நிற்றலுங்கொள்க." என்று இடையிலுள்ள சில சொற்களை நீக்கியச்சிடப்பட்டிருக்கிறது.

இனி ஓரேட்டுப் பிரதியில் "தன்னின முடித்தலென்பதனுன் [—எனபன மீனகட லமதம என நிறறலும] அழியலை அலையலை என்னு முன்னிலை யெதிர்மறை ஐகாரங்கெட்டு அழியல் அலையல் என நிற்றலுங்கொள்க." என்றிருக்கிறது.

மற்றொன்றில் "தன்னின முடித்தலென்பதனுன் [—எனபன மீனகட வமதம என நிறறலும] அழியலை அலையலை என்னுமுன்னிலை யெதிர்மறை ஐகாரங்கெட்டு அழியல் அலையல் என நிற்றலுங்கொள்க." என்றிருக்கிறது.

இவற்றைக்கொண்டுநோக்குமிடத்து, ஏட்டுப்பிரதிகளில் நெடுநாண்முன்னரே கைதவறியோ, அல்லது பாணம் விழுதல் முதலிய குற்றத்தினாலோ இவ்வாக்கியத்திடையில் இரண்டொரு சொல் விடப்பட்டிருந்தமையால், பிற்காலத்துப் பிரதிசெய்தோராலும் அவ்வாறே எழுதிவைக்கப்பட்டதென்றும், பின் அச்சிட்டவர்களும் அதனை நன்காராயாது, இருப்பதை வைத்துக்கொண்டு ஒற்றுப்போடக் கூடாதவிடத் தொற்றைப்போட்டும், போடவேண்டிய விடத்து ஒற்றுப்போடாமலும் ஒருபதிப்புக்காரரும், இருப்பதிலும் சில சொற்களை நீக்கி ஏனையோரும் அச்சிட்டுவைத்தார்களென்றும் தோற்றுகின்றது.

அற்றேல் இவ்வாக்கியந்தானிருக்கவேண்டுவது எவ்வாறோவெனின்:—"தன்னின முடித்தலென்பதனுன், வம்மின் தம்மின் என்பன மின்கெட வம்தம் என நிற்றலும், அழியலை அலையலை என்னுமுன்னிலை யெதிர்மறை ஐகாரங்கெட்டு அழியல் அலையல் என நிற்றலுங்கொள்க." என்றிருக்கவேண்டுமென்பது.



இஃதெங்ஙனம் பெறப்பட்டதெனின்:—மேலேகாட்டப்பட்டுள்ள பிரதிபேதங்களுள் ஈற்றிலுள்ள ஏட்டுப்பிரதிப்பாடமாகிய "தன்னின முடித்தலென்பதனுன்—எனபன மீனகட வமதம எனநிறறலும" என்பதில் 'வமதமஎனநிறறலும' என்பதை 'வம்தம் எனநிற்றலும்' என்று படிக்கவும், 'மீனகட' என்பதனிடையில் ஒருகொம்புபோட்டு மீ என்பதை மி எனவைப்பின்: 'மின்கெட வம்தம் என நிற்றலும்' என்றுபடிக்கவும், இதற்கிசைய 'எனபன' என்பதன்முன்—இவ்வடையாளமிடப்பட்டுள்ளவிடத்து 'வம்மின்தம்மின்' என்றிரண்டு சொற்பெய்துகொள்ளின் 'வம்மின் தம்மின் என்பன மின்கெட வம் தம் எனநிற்றலும்' என்று படிக்கவும் இடந்தருதலானும், இதிலுள்ள எண்ணும்மை, பின் "அழியலை அலையலை..................அழியல் அலையல் என நிற்றலும்" என்பதிலுள்ள உம்மையோடியைந்து பொருட்பொருத்த முறுதலானும், வம்மின் தம்மின் என்பன மின்கெட வம்தம் எனநிற்றல் - "கதுமெனக்கரைந்து வம்மெனக்கூய்" என்னும் பத்துப்பாட்டு; பொருநராற்றுப்படை ௧0௧-ம் அடியினும், "யாவரும் வருக வேனுருந் தம்மென" என்னும் மதுரைக்காஞ்சி ௭௪௭-ம் அடியினும் பிறண்டுங் காணப்படுதலானும் பெறப்பட்டதென்க.

(இன்னும் வரும்.)

அ. கோபாலையன்.

# நன்னூல் விருத்திக் குறிப்பு.

(செந்தமிழ்த் தொகுதி-ச, பகுதி-கக, ௬௦எ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## சொல்லதிகாரம்.

### பெயரியல்.

(உஎங) தொல்-செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்துந் தங்குறிப்பினவே திசைச் சொற்கிளவி.

" சிங்களம்—புவிதாமிவையே"

(உஎரு) " மலைமகள் மகனே மாற்றோர்கூற்றே"
(திருமுருகாற்றுப்படை)

மரபுப்பெயர் ஆகுபெயரெனப் பொருள்கொள்வார் இலக்கண விளக்கநூலுடையார். அவர்மரபுப்பெயரென்றது பாகன் இடையன் என்றற்றொடக்கத்தனவற்றை.

(உஎசு) ஏறுதி, காவிதி, எட்டி, குடுமி, செட்டி, வழுதி, சேய் ஏந்தல், செம்மல், அண்ணல், ஆண்மகன், மகன். மகன் என்பதுஈண்டு ஆடூஉ என்னும் பொருட்டு: முறைப்பெயரன்று.

(உஎஎ) பேதை, பெதும்பை, பாங்கி, பெண்டாட்டி, பெண்டு, பெண்மகள், மகள், பெண்மகன். மகள் என்பது ஈண்டு மகடூஉ என்னும் பொருட்டு: முறைப்பெயரன்று.

பெண்மகன் என்பது நாணின்றிப் புரிந்திருந்து விளையாடும் பருவத்துப்பெண்மகட்கு வழங்கும்பெயர். அகத்திருத்தற்குரியபெண்மகள் ஆண்மகன் போலப் பேதைப் பருவத்து நாணின்றிப்புறம்போந்தாடலிற் புறத்துத்திரிதற்குரிய பெண்மகட்குப் பெண்மகனெனப் பெயர் கூறப்பட்டது. பெண்டாட்டியென்பது பெண்மையை ஆள்கின்றவள். " ஊரார் பொண்டென மொழிகவென்னை நின்பெண்டெனப் பிறர் கூறும் பழிமாறப்பெறுகிற்பின்"எனச்செய்யுட்கண்ணும் பெண்டு வருமாறு காண்க.



(உஎஅ) மகார், சிறார், எல்லாரும், தந்தை, தாயர், பெண்டீர் பெண்டுகள், வேளிர்.

(உஎகூ) உள்ளது, இல்லது, என்றற்றொடக்கத்தன அஃறிணையொருமைப் பொருள் குறித்து நின்றன.

(உ அ0) யா, பல்லவை, சில்லவை, உள்ளவை, இல்லவை, உள்ளன, இல்லன, மற்றையன.

(உஅக) அஃறிணைப் பெயர்களுள் ஒன்றன் பெயரென்றும் பலவின் பெயரென்றும் விதந்து முற்கூறியபெயர்களைப்போலப் பால்பகா அஃறிணைப் பெயர். இ பகுப்பில்லாத பெயர்களெல்லாம் பால்பகா அஃறிணைப் பெயர். இவையே அஃறிணையியற் பெயரெனவும் படும்.

(உஅஉ) ஈண்டு முதற்பெயரென்றது நிமித்தமின்றிப் பொருள் பற்றி வரும் பெயர். சினைப்பெயரென்றது சினையுடைமையாகிய நிமித்தம் பற்றி முதன்மேல் வரும் பெயர்.

சினைமுதற் பெயர் சினைப்பெயரோடு தொடர்ந்துவரு முதற்பெயர். முறைப் பெயர் பிறவியானொருவரோடொருவர்க்குளதா மியல்பு பற்றி வரும் பெயர்.

(உஅங) முடஞ்சினையது விகாரமாதலிற் சினையாயிற்று.

(உஅரு) " பேய்பூத மந்தி கிளிபூவை பேசுதலா - னுகுமே தன்மை பொது" என்பதுபற்றித் தன்மையை விரவுத்திணை யெனச் சாதித் தாசிரியர்தொல்காப்பியனார்க்கு மறியாமையேற்றி யிலக்கண விளக்கநூலார் பேய்பூதந் தெய்வச்சாதியாதலாற் றெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவி யென்பதனுளடங்கு மாதலானு மந்திபேசுதல் யாண்டுமின்மையின், "ஈங்கு நீ யெம்மைநோக்கி" என்றாற் போல்வன, புனைந்துரைவகையாற் கூறியதன்றி, உண்மைபற்றிக் கூறியதன்றாகலானுங் கிளிபூவை கூறியவாறுகூறுவதல்லது இச்சொல்லை இவ்வாறு கூறவேண்டுமெனச் சொல்லுமையறிந்து கூறுதலுலகத்தின்மையால், " பூவையுங் கிளியையுங் கேட்டு"என்றாற்போல்வனவும், புனைந்துரைவகையாற் கூறியதேயாமாகலானுந் தன்மை விரவுத்திணையாகாதென மறுக்க. மாமுதலியன பேசுவனவாகச் சான்றோர்

செய்யுட்கண் வருதலினவை புனைந்துரையெனவேபடுமாகலா னிவையு மன்னவேயாமென்க. இனி மந்திமுதலிய வுண்மையாற் பேசினவேயாமெனினும் எறும்புகள்பேசினவற்றை ஒரு வேந்தன்கேட்டு நகைத்துத் தன்மனைவிக்குக் கூறித் தலையிழந்தானெனப் புராணங்கள் கூறுதலி னெறும்புகள்பேசுதல் பெற்றாம்; அவைபேசுதல் குறிப்பானுணர்த்துதலன்றி, மொழியாற்பேசுதலன்றென்பதெல்லார்க்கு மொப்பமுடிந்தது. முடியவே, அஃறிணைப்பெயர்களெல்லா மிவ்வாறுணர்ந்தற் கொன்று குறிப்பானுணர்த்து மென்பது பெறப்பட்டதாகலின் மந்திமுதலிய பேசுதலு மவ்வியல்பிற்றேயாமென்க. இங்ஙனமன்றாயி னுயர்திணையஃறிணை யென்னும் பகுப்பேலாமையறிக. ஒரோவழி யஃறிணைப்பொருள்கண் மொழியாற்பேசுவனவுளவாயினது தெய்வத்தன்மை முதலிய விசேடத்தானன்றிப் பொருட்டன்மையினமைத்துக் கொள்வதன்றி யதுபற்றி விரவுத்திணை யென்றல் சிறிதும் பொருந்தாதென்க. அற்றாதலினன்றே ஆசிரியர் தன்மையை யுயர்திணையெனவே கூறியதூஉமென்க.

(உ௯0). எண்ணுப்பெய ராகுபெயராகாவென்றா ரிலக்கண விளக்க நூலார். நெல்லையளந்துபார்த்தும், பொன்னை நிறுத்துப்பார்த்துமன்றி யவற்றிற்குப் பதக்குத் தொடியென்றளவு நிறையுமாகிய பெயர் கூறப்படாமைபோலப் பத்துப் பொன்னையும் எண்ணிப்பார்த்தன்றி யவற்றிற்குப் பத்தென்னும் பெயர் கூறப்படாமையானும், "ஆறறியந்தணர்" என்புழி, ஆறென்னும் வரையறைப் பண்புப்பெயர் அப்பண்பினை யுடைய அங்கத்தினையுணர்த்தி யாகுபெயராய் நிற்குமெனக் கூறிய நச்சினார்க்கினியார்க் கெண்ணுப்பெய ராகுபெயராதற்கேலாதென்றது கருத்தன்றாதலானும் உரையாசிரியர்க்கு மிவற்றை யாகுபெயரென்றலே கருத்தாகலானும் எண்ணுப்பெயரும் எண்ணப்படுபொருளையுணர்த்தும்வழி யாகுபெயரேயாமென்க. இது "இளந்தவல்ல" என்னு மாகுபெயர்ப்புறநடையாற் கொள்க. இன்னு முயர்திணைக்கண் மூவரென விகுதி நின்றே பொருளையுணர்த்துதலான் அல்லுழியாகுபெயராயே நின்று பொருளையுணர்த்துமெனவுணர்க. இன்னோரன்னவற்றிலெல்லாம் வடநூலார் விகுதி நின்று கெட்டதென்பர்.



"திரைத்த விருது குறளிரண்டளவடி தேம்பழுத்து" என வொரு செய்யுட்கு முதனிற்குஞ் சொற்கள் அவ்வச்செய்யுட்களைக் கூறி செய்யுட்கு முதனிற்குஞ் சொற்கள் அவ்வச்செய்யுட்களைக் கூறினமையின் இவையே சொல்லாகுபெயராமென்க. இது சினையாகுபெயருளடங்குமேனும் விளங்குதற் பொருட்டு வேறு கூறினார். அவை யாகுபெயர் குணவாகுபெயரு ளடங்குமேனும் அதனை வேறு கூறினாற் போலக் கொள்க. (இ - சூறாவளி)

ஆகுபெயரு மன்மொழித்தொகையு மொன்றென்றார் இலக்கண விளக்க நூலார்; "குறிப்பிற்றருமொழி" யிவையென்புழி யாகுபெயரெனவே யன்மொழித்தொகையு மடங்குமொன்றொழியாது "ஆகுபெயர் வினைக்குறிப்பின் மொழிவிகாரம்" என வேறுகூறலான் அவ்வார்க்குங் கருத்தன்மையுணர்க. பரிமேலழகர் "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை" என்புழிக் கனங்குழையென்றதை ஆகுபெயரென்றாரெனின், அவர் "அரியவென் றாகாதவில்லை பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்" என்பதில் பொச்சாவாக் கருவியென்பதற்கு, மறவாதமனமென அந்தக்கரணத்தைக் கருவியாக்கிக் கூறினார். அதனை மறுத்துப் பொச்சாவாமையாகிய கருவியெனத் தாமும் பெயரெச்சச்சூத்திரத் துரைத்தாராகலின், அவர் கூறியனவெல்லா முடன்பாடென்பது தமக்குங் கருத்தன்றென்க.

மக்கட்சுட்டு - மக்களாகிய நன்குமதிக்கப்படும் பொருளும் மக்களேயாகலின் மக்களாகியமக்கள் எனவருவதல்ல தின்னதிதுவென வாராமையின் மக்கட்சுட்டே யிருபெயரொட்டாகாதென்றார். உலகத்துப் பொருளெல்லா முயர்திணைப்பொரு ளஃறிணைப்பொருளென விரண்டாகப் பகுத்துக்கொண்டதற் கேற்ப மக்களென்பது பொருளென்னும் பொதுமையினீக்கி யுயர்திணைப்பொருளை விசேடித்து நிற்பச் சுட்டென்பதாகுபெயராய் அப்பொருளி னுயர்ச்சிதோன்றச் சிறப்பித்துநிற்ப இன்னதிதுவென வொன்றனை யொன்று விசேடித் திருபெயரொட்டிவருதலா னிருபெயரொட்டாகாமை யாண்டையதென மறுக்க.

அகத்தியனாற் செய்யப்பட்ட நூல், தொல்காப்பியனாற் செய்யப்பட்ட நூல் என்னும் பொருட்கண் அன் விகுதிகெட்டம்விகுதி

புணர்ந்து அகத்தியம் தொல்காப்பியமென முடிந்தன. “முதலிற்
கூறும்” என்னுஞ் சூத்திரத்திற் சேனாவரையரு மிவ்வாறே கூறியு
ரையாசிரியரை மறுத்தார். இனியுரையாசிரியரு நச்சினார்க்கினியரு
மிதனை யாகுபெயரென்று மீறுதிரிபுமென்றுங் கூறினாராலெனின், அ
வராகுபெயர்ப்பெற்றியறிந்திலர் போலுமென்க. ஆகுபெயர்களெ
ல்லா நின்றாங்குநின்றியற்பெயராய்ப் பொருளையும் வேறுணர்த்தி
நிற்குமாற்றலுடையவாதலும், அகத்தியம் தொல்காப்பியம் கபில
மென்பவற்றிற் கவ்வாற்ற லின்மையுமோர்ந்துணர்க. (தொ-விரு-
கூஉ-ம் பாட்டின் பிற்பக்கத்தினுங் காண்க. முதலிற் கூறுஞ்சினைய
றி கிளவியுஞ் - சினையிற் கூறு முதலறி கிளவியும், பிறந்தவழிக் கூற
லும் பண்புகொள் பெயரு - மியன்றது மொழிதலு மிருபெயரொட்
டும் - வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ - யனைய பெயரி
னவே யாகுபெயர்க் கிளவி” எ - ர். “அவைதாம் - தத்தம் பொ
ருள்வயிற் றம்மொடு சிவணலு - மொப்பில் வழியாற் பிறிதுபொ
ருள் சுட்டலு - மப்பண் பினவே நுவலுங் காலை” எ - ம், “அளவு நி
றையு மவற்றொடு கொள்வழி-யுளவெனமொழிப வுணர்ந்திசி னோரே”
எ - ம் “கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்-கிளந்தவற் றியலா
னுணர்ந்தனர் கொளலே)

குழிப்பாடி நேரிது:—குழிப்பாடி யென்னுமூரி லுள்ளோர் நேர்
மையிது.

(தொடரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை.

---

# பல்லவ சக்கரவர்த்திகள்.

என் ஆராய்ச்சிக்குள் இதுகாறும் வெளியாயுள்ள பல்லவ சக்கர
வர்த்திகளின் காலவரையறை இவ்வாராய்ச்சியை மேற்கொண்டவர்
களுக்குத் தூண்டுகோல் ஊற்றுக்கோல்களாகுமெனத் துணிந்து வ
ரையலுற்றேன். “செந்தமிழ்” இரண்டாந் தொகுதி 173-ம் பக்கத்
திற் பல்லவசக்கரவர்த்திகளைப் பற்றியெழுதிய ஸ்ரீமத்-மு. ஸ்ரீநிவா
ஸையங்காரவர்களுக்குச் சிறந்ததோர் துணையாகுமென்பதும் என
து முழுநோக்கம். இந்திய சரித்திர வாராய்ச்சிக்கு இந்நகரத்திற்
போதுமான சாவகாசங் கிடைப்பதெளிதெனினுந் தக்க தமிழ்நூல்
கள் கிட்டுவதரிதினுமரிது. எனினும், தெய்வானுக்கிரகத்தால் மது
ரைச் “செந்தமிழ்”ச்சங்கத்தின் கிளையொன்று இவண் நாட்டப்பெ
ற்றுள்ளமையால் இன்னஞ் சிறிதுகாலத்துள் அக்குறைநீங்குமென்ப
து எனது கொள்கை.

இது நிற்க; சிலாசாதனங்கள், பட்டயங்கள், நாணயங்கள் முத
லியவைகளினின்றும் இந்தியசரித்திரங்களை யாராய்ந்து மேல்நாட்
டார்கள் அப்போதைக்கப்போது தத்தங் கருத்துக்களைப் பத்திரிகை
வாயிலாக வெளியிட்டவைகளைக்கொண்டு நான்வரைந்துள இக்காலவ
ரையறை கிரமமாகத் தொகுதியுடைத்தன்று. நாமபேதங்களுமு
ள. எனினும், கௌதமபுத்தர் காலத்திலேயே காஞ்சிபுரத்தில் பு
த்தமதந் தோன்றி கி. பி. 8-ம் நூற்றாண்டினிறுதியிலழிந்து அப்பா
ல் சைனமதம் அரசமதமாயிருந்தது. அதற்கிடையில் கி. பி. 7-ம்
நூற்றாண்டில் சங்கராசாரியர் தம்மதத்தையும் போதித்து வந்தார்.
கிறிஸ்து பிறக்கிறதற்குமுன் சிலநூற்றாண்டுகளாகக் காஞ்சிபுரஞ்
செழித்தோங்கியதாகத் தெற்றென வெளியாகிறது. ஆயினும், பல்
லவர் தக்ஷிணமுற்றது கி. பி. 3-அல்லது 4-ம் நூற்றாண்டு; அரசுரி
மை பூண்டது கி. பி. 1-ம் நூற்றாண்டு; ஸ்திரமாய் நிலைத்தது கி. பி.
2 அல்லது 3-ம நூற்றாண்டு; வம்சம் நிறுவியவன் முக்குண்டிப்பல்
லவன்—என்பவை விளங்குகின்றன. நொளம்பர், குறும்பர், போத்தர்
முதலிய மறுநாமங்களு மிப்பல்லவர்க்குள. கீழமேலச் சளுக்கியர்,
கடம்பர், நிடதர், யாதவர், கொங்குகர்ஞடர், இராஷ்டிரகூட்டர்,

சோழபாண்டியர் ஆகவிப்பல்லவரைச் சுற்றியுளாரெவரு மிவர்கட்குச் சத்துருக்கள். சோழரால் குலமுமழிந்து, சோழபாண்டியர் தவிர்த்து மற்றும் பகைவம்சத்தவருடன் கலந்து இவர்கள் நாமமுமொழிந்தது. இக்காலம் ஏறக்குறைய கி. பி. 13, 14-ம் நூற்றாண்டு.

கி. மு. பல்லவர்காலவரையறை.

600 - 500.—"கௌதம புத்தர்" காஞ்சிபுரவாசிகளைத்தம்மதத்துட் படுத்தினர். "போதிசத்வதர்ம பாலன்" பிறந்தது காஞ்சிபுரம்.

315.—திராவிடத்தன் "சாணக்கிய விஷ்ணு குப்தன்" சந்திரகுப்தனின் முதன் மந்திரி.

"அசோகர்" அரசன் காலத்திற்குக் கொஞ்சம் பின்னல் இந்தியாவின் கிழக்கரையில் பல்லவர் மேம்படத் தொடங்கினர்கள்.

157—பல்லவ தேசத்தினின்று அநேக பிக்ஷுக்கள் இலங்கை சென்றார்கள்.

150 - 100—"தெலிங்கஞ" தேயத்தின் றலைநகர் "தாணிக்கோட்டை" யெனப்படுகிறது.

அத் "தாணிக்கோட்டை"யே ஆந்திரவரசரின் றலைநகர மெனவும் படுகிறது.

கி. பி.

31 - 536—ஆந்திரவரசரால் "அமராவதி" தோப்பு உண்டாக்கப் பட்டது.

1 - 100—பல்லவர் தென் தக்ஷிணம் ஆண்டுவந்தார்கள்.

குறும்பர் (பல்லவர்) பாலாற்றின் முகத்துவாரத்தில் கோட்டைகளும் மாளிகைகளும் கட்டினார்கள்.

குறும்பர் மேல் கீழ்ப்பாகங்களிலுள்ள அந்நியதேசம் வியாபாரம் மிகுந்து செய்தார்கள்.

காஞ்சிபுரத்தில் "விஷ்ணுபூபன்" அரசாண்டான்.

"ஹஸ்திவர்மன்" வேங்கை (Vengi) யிலாண்டான்.

78—முக்குண்டிப்பல்லவனின் முன்னவன் சாலிவாகனன்



கி. பி. 85—தெலிங்கஞதேசத்தின் கரையினின்று அநேகர் ஜாவாவிற் குடியேறினார்கள்.

90—கோதமிப்புத்ர சதகர்னி (ஆந்திரன்) அமராவதித்தோப்புக்கு அஸ்திவாரம் போட்டான்.

142—அமராவதித்தோப்பு முடிந்தது.

100 - 200—பல்லவவல்லமை வளர்ச்சி.

பாதவவர்மன், குலகேலனன், முக்குண்டிப்பல்லவன் தந்தை நீலகண்டன் இவர்கள் ஆளுகை.

காஞ்சிபுரவரசன் "விஷ்ணு".

200 - 300—வாரணாசியினின்றும் புத்தர்கள் காஞ்சிபுர நகரத்துக் கநகில் வந்திறங்கினார்கள்.

200 - 300—முக்குண்டிப்பல்லவன் ஆளுகை.

பல்லவதேசத்தில் பிராமணரைக்குடியேற்றியவன்.

அமராவதித் தோப்புக் கட்டினவன்.

தரணிக்கோட்டையைத் தலைநகராயுடையவன்.

பல்லவவம்மிசத்தலைவன்.

சாலிவாகனவரசனின்றும் நான்காவதாவன்.

300 - 400—சந்திரவர்மன் விஜயநந்திவர்மன், விஜயபுத்தவர்மன் வர்கள் ஆளுகை.

ஸ்கந்தவர்மன் ஆளுகை.

விஜயஸ்கந்தர்மன் ஆளுகை.

திரிலோசன பல்லவன் தக்ஷிணத்தில் அரசாட்சி செய்தான்.

"விஜயதுங்க" அல்லது விஜயபுத்தவர்மனின் பட்டயம்

விஜயசண்டவர்மனின் பட்டயம்.

திரிநேத்திர பல்லவனின் பட்டயம்.

சளுக்கியவரசன் ஜகசிம்மவிஜயாதித்தன் தக்ஷிணம் மீது படையெடுத்துச் சென்று பல்லவருடன் யோர் [illegible]

கி. பி. திறந்தான். அவன் குமாரன் விஷ்ணுவர்தனன் திரும்பவும் பல்லவருடன் போர்புரிந்து அவர்களை ஜெயித்து பல்லவஅரசகுமாரத்தியை மணந்தான்.

திரிநேத்திர பல்லவன் தன்னாட்டில் பிராமணரைக்குடியேற்றினன்.

300—சளுக்கியவேந்தன் - ஜெயசிம்மன் தென்பாகத்தை யாண்டுவந்த பல்லவ குலத்தை யடக்கத்தலைப்பட்டான்.

313—புத்தர்களின் பூஜ்ய வஸ்துக்கள் (relics) தரணிக் கோட்டையினின்றும் இலங்கைக்குக் கொண்டுபோகப் பட்டன.

400—அலஹபாத் சிலாசாதனத்தில் காஞ்சிபுரவரசன் விஷ்ணுஷாப்பாவமுக்தன் நாமம் வரைந்துளது.

கொங்கு கர்னாடன் துருவநிதியால் திராவிட இராஜ்ஜியம் ஜெயிக்கப்பட்டது.

வேங்கைபுரம் புல்லவரின் றலையாய நகரம்.

சீனயாத்திரிகன் Fa-Hian குறித்துள Tathisen இராஜ்ஜியம் பல்லவரின் இராஜ்ஜியமே.

கி. பி.

400 - 500—விஜயசண்டவர்மனின் ஆளுகை.

ஸ்கந்தவர்மன் I, வீரவர்மன், ஸ்கந்தவர்மன் II, சிம்மவர்மன் I, விஷ்ணுகோபவர்மன், சிம்மவர்மன் II, ஸ்கந்தவர்மன் III, நந்திவர்மன், விஜயபுத்தவர்மன், அத்திவர்மன், இவர்களின் ஆளுகை.

விஜய நந்திவர்மனின் பட்டயம்.

விஷ்ணுகோபவர்மனின் பட்டயம்.

சிம்மவர்மன் II பட்டயம்.

ஸ்கந்தவர்மனின் புத்திரன் சிம்மவர்மன். இவன் புத்திரன் ஸ்கந்தவர்மன் இவன் புத்திரன் நந்திவர்மனின் பட்டயம்.



கி. பி. சிம்மவர்மன் II பட்டயம். } இவன் பாரத்துவாச
அத்திவர்மனின் ,, } முனியின் சந்ததியின் பாப்ப படர்க்கன்சிஷ்யன்

சளுக்கிய வேந்தர் தக்ஷிணத்திற்கு முதன்முறை வருவதன் முன்னமே பல்லவ அரசாட்சி வெகு சிறப்புற்றிருந்தது.

இந்தியாவின் தென்பாகத்தில் சளுக்கியவேந்தன் தன் அரசாட்சியை நிலைநாட்டியது சற்றேறக்குறைய கி. பி 5-ம் நூற்றாண்டு.

பாலாற்றின் முகத்துவாரம் பல்லவராஜ்ஜியத்திேனார் பாகம்.

கீழ்க்கடலோரம் - ஒரிஸாவிலிருந்து தென்பெண்ணுற்றின் முகம்.

உள்நாடு - கொங்கு கர்னாடராஜ்ஜியத்தின் கீழ்எல்லை.

துங்கபத்ரா நதியின் குறுக்கே வடமேற்கு முகமாய் வடதக்ஷிணத்தில் வெகுதூரம்.

பல்லவர் கடம்பர்களால் அபஜயப் பட்டார்கள்.

கடம்பன் மிருகேசவர்மனால் பல்லவர் தோற்கப்பட்டார்கள்.

கடம்பன் இரவிவர்மனால் விஷ்ணுவர்ம பல்லவனிறந்தான்.

கடம்பன் இரவி வர்மனால் காஞ்சிபுரத்தலைவன் சண்டதண்டன் முற்றும் அபஜயப்பட்டான்.

ஜாவாவில் சிலாசாதனம், பல்லவ அக்ஷரம்.

450—ஜாவாவில் சிலாசாதனம், பல்லவ அக்ஷரம். ஜயசிம்மவல்லபை தக்ஷிணமீது படையெடுத்தான்.

468—ஜெயசிம்ம வல்லபை தக்ஷிணமீது படையெடுத்தான்.

480—கங்க அவினிதன் அல்லது துர்வினிதனுக்கு திராவிட அரசன் திறைகட்டினன்.

(இன்னும் வரும்.)

ஞானதிக்கமசாது.
இரங்கூன்.

*

# தென்னாட்டுப்பழையவழக்கங்கள்.

———:o:———

செந்தமிழ், ௬-ம் தொகுதி,௧௦ - ம் பகுதியில், பத்திராசிரியரால் "தென்னாட்டுப் பழையவழக்கங்கள்" என்ற குறிப்பின் கீழ் "வடக்கினுந் தெற்கினுமுள்ள ஐந்து வழக்கங்கள்" எனத் தொகை கூறப்பட்டிருக்கின்றது.

தென்னாட்டார்க்குரிய வழக்கங்கள் - "யோக்கியதையில்லாதார் கூட்டத்திருந்துண்பதுண்டு; பழஞ்சோறுண்பதுண்டு; தாயுடன் பிறந்தானுடைய அல்லது தந்தையுடன் பிறந்தாளுடைய மகளை மணம் புரிவதுண்டு" எனக்காணப்படுகின்றது.

இவ்வசனத்திலே நான்கு விஷயங்களன்றி ஐந்து விஷயங்கள் காணப்படவில்லை. "போதாயன சூத்திர" மொழிபெயர்ப்புக்காரர், "யோக்கியதையில்லாதார் கூட்டத்திருந்துண்பதுண்டு" எனப் பொதுவாகக் கூறினரன்றி விவரங்கூறுதொழிந்தனர் போலும்! மாதவியாசாரியர் பராசரஸ்மிருதிக்குச்செய்த வியாக்கியானத்திலே, "உபநயனமாகாத சிறுவனோடு ஒரு பந்தியிற் புசித்தல், தன் பத்தினியொடு புசித்தல், பழையதைப் புசித்தல், அம்மான்மகளை விவாகம் செய்தல், அத்தைமகளை விவாகம் செய்தல்" எனக்காணப்படுகின்றது. "யோக்கியதை யில்லாதார் கூட்டத்திருந்துண்பதுண்டு" என்பதினும், "உபநயனமாகாத சிறுவனோடு ஒரு பந்தியிற் புசித்தல், தன் பத்தினியோடு புசித்தல்" என்னும் பின்னையதே விஷயவிளக்கமும் தொகைச்சிறப்புமாதல்காண்க. யோக்கியதை யில்லாதார் கூட்டத்திருந்து உண்ணப்படாதென்பதே சாஸ்திர சம்மதம். அதனை யாசிரியர் ஆண்டுக் கூறல் பயனின்றாகும். என்னை? அது பிரமாணத்தின் பாற்பட்டதென்பது. ஆதலின், உபநயனஞ்செய்யப்பெறாத சிறுவன், தன் பத்தினி ஆதியர் யோக்கியதையுடையரேனும் அவர்களுடனும் பந்திபோசனஞ் செய்யப்படாதென்பதே ஆசிரியர் துணிபு.



இனி வடநாட்டார்க்கே யுரிய வழக்கங்கள் - (கம்பளி) மயிர்
வியாபாரஞ்செய்தலும், மதுவுண்டலும், இருவரிசையினும் பல்லு
டைய விலங்குகளை விற்றலும், ஆயுதவியாபாரஞ் செய்தலும், கடற்
பிரயாணம் பண்ணலும் ஆம்" எனக்காணப்படுகின்றது.

மாதவிய வியாக்கியானத்திலே, "பட்டு, கம்பளம் முதலியவை
களை விற்பது, மத்தியபானம் அல்லது சுருட்டுப் பிடிப்பது, ஆயுதம்
பிடித்து யுத்தஞ் செய்வது சமுத்திரத்திற் கப்பல் யாத்திரை செய்
வது" எனக்காணப்படுகின்றது. இருவரிசையினும் பல்லுடைய
விலங்குகளை விற்றலென்பதினும், சுருட்டுப் பிடிப்பதென்பதே சி
றப்புடைத்து. என்னை? (கம்பளி) மயிர்வியாபாரஞ் சொன்னபோ
ழ்தே மிருகமும் அதனுளடங்குமென்பது. ஆதலின், ஆயுதவியா
பாரஞ் செய்தல் என்பதினும், ஆயுதம் பிடித்து யுத்தம் செய்தல்
என்பதே சிறப்புடைத்து. என்னை? வியாபாரம் என்பது விற்றல்
தொழில் அப்பியசித்தல் என்னும் பொருடருமேயன்றி யுத்தம்
என்னும் பொருடராவென்பது, ஆதலின்.

இவற்றுள்ளே, அம்மான் மகள், அத்தை மகள் முதலியவர்க
ளை மணம் புரியும் வழக்கத்தைப்பற்றி மாதவிய வியாக்கியானமாவ
ன:—ஒருவன் தன்னுடைய அத்தை பெண்கள், சகோதரியின்
பெண்கள், அம்மான் பெண்கள், ஆகிய இவர்கள் தனக்குத் தர்மமா
கச் சகோதரிகள் (தங்கையர்கள்) ஆகையால் அவர்களைத் தான்
விவாகஞ் செய்துகொள்வது தகாதென்று பைடீநசியும், ஸுமந்து
வும், வியாசரும் ஸ்தாபித்திருந்தார்களே யாகிலும், பிராம்மம் முத
லான விவாகத்தினால் சபிண்டத்தன்மை அந்தக் கன்னிகைக்கு ஒழி
ந்துவிட்டபடியாலும், ருக்வேதத்தில் விதிக்கப்பட்டமையாலும்,
தென்தேசத்திலுள்ள கற்றுணர்ந்த சிஷ்டரால் அநுஷ்டிக்கப்படுகை
யாலும், அங்கு இது செய்யத்தகாததேயன்றி தென்னாட்டிற் செய்
வது தர்மமென்றும், கீழ்ச்சொன்ன விலக்குகள் சாஸ்திரீயமாகாத
காந்தருவம் முதலான விதிகளால் விவாகஞ்செய்வதைப்பற்றியவை
கள் என்பதே. தாய்சகோதரியின் பெண்களை மணம் புரியும் வழ
க்கம் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

காரை. கா. சிவசிதம்பரஐயர்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ:

# பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்.

(சேந்தமிழ்த் தொகுதி-௪, பகுதி-௬௨,௲௭௫-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

---:o:---

## 26. த்விதீயவித்தியாப்பியாஸத்தைப்பற்றிச் சுதேசவித்தியாபிவிருத்தி சங்கத்தார் செய்துவரும் முயற்சிகள்.

த்விதீய வித்யாப்யாஸ பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் அநேகமாய் 13 வயதிற்குட்பட்டவர்களாகையால், அவர்களுக்குப் பாஷையோடு ஸம்பந்தப்படாத சரித்திரம், பூகோளம், கணிதம் முதலான விஷயங்களைத் தேச பாஷையின் மூலமாகவே போதிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று வித்யாவிசாரணைத் தலைவருக்கு ஷை சபையார் விண்ணப்பமெழுதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தை கர்ஸன்பிரபு முக்கியமாய் 1901௵ டிசம்பர்௴ ஸிம்லாகான்பெரென்ஸில் எடுத்துப்பேசி அப்படியே செய்யவேண்டுமென்று 1904௵ மார்ச்சு௴ 11-உ விளம்பரத்தில் வெளியிட்டார். பிறகு சென்ற செப்டம்பர்-௴ செய்த உபந்நியாசத்திலும் அப்படியே செய்யவேண்டியது அவசியமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்:

இச்சென்னை ராஜதானியிலுள்ள 3-கோடியே 85-லக்ஷம் ஜனங்களில், 2-கோடியே 65-லக்ஷம் ஜனங்கள் விவசாயம் செய்து ஜீவிப்பவர்களாயிருக்கிறார்கள்; இவர்கள் தவிரவும் குயவன் கருமான் முதலிய தொழிலாளிகளும் பலருண்டு; இவர்களுக்கும் படிப்பு அவ்சியமல்லவா?

இராஜாங்கத்தாரால் பிரசுரஞ்செய்யப்பட்ட இந்த தேசத்து வர்த்தகக் கணக்கில், 03 - 04 - ல், 161-கோடி ரூபாய் சாமான் ஏற்றுமதியும், 116-கோடி ரூபாய் இறக்குமதியும் ஆனதாகவும், 04-05-ல் 165-கோடி ரூபாய் ஏற்றுமதியும், 129-கோடி ரூபாய் இறக்குமதியும் ஆனதாகவும் தெரியவருகிறது. இதைப்பற்றி இத்தேசத்து வியாபாரிகளுக்கு ஏதாவது தெரியுமா?



இவர்களுக்கு அவசியமாக வேண்டிய விஷயங்களைத் தேசபாஷைகளில் மொழிபெயர்த்து அதன் மூலமாகப் படிப்பித்தால், எவ்வளவு நன்மையுண்டாகும்?

எல்லாவிஷயங்களையும் அங்கிலேய பாஷையிலேயே படிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் ஒழுங்குபடாதென்றும் சிலர் பிடிவாதம் பண்ணுகிறார்கள். 50-வருஷகாலமாய் அங்கிலேயபாஷை படிப்பிக்கப்பட்டும்,

5,09,346 குடித்தொகையுள்ள இச்சென்னைப்பட்டணத்தில்,
81,549 பேர் 20-வயதிற்கு மேற்பட்ட படித்தவர்களும்,
29,945 பேர் 20-வயதிற்கு மேற்பட்டவரில் அங்கிலேயபாஷை படித்தவருமாயிருக்கிறார்கள்.

அதாவது படித்தவர் 100-க்கு 16-பேரும், இங்கிலீஷ்படித்தவர் 100-க்கு 6-பேருமாகிறார்கள்.

இதனால் கவர்ன்மெண்டு உத்தியோகத்தை அபேக்ஷிக்கிற சி
லர் தவிர மற்றவர்கள் அங்கிலேயபாஷை படிப்பதில்லையென்றும்,
அவர்களுக்கு இப்போதுள்ள இத்தேசத்துப் பாடசாலைப்படிப்புப்
பயன்படுவதில்லையென்றும் தெளிவாய் விளங்குகிறதல்லவா? அப்ப
டிப் படிப்பில்லாத இத்தேசத்தார் பலருக்குமே அவரவர் நிலைமைக்
கு ஏற்ற படிப்பு விருத்தியாகவேண்டுமென்று இப்பொழுது இச்சங்
கத்தார் முயற்சி யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது இத்தேசத்தார் செய்யவேண்டிய முக்கியமான காரியங்களாவன:—

1. ஒவ்வொரு கிராமத்தாரும் பாடசாலைச் சபைசேர்ந்து தங்கள் தங்கள் கிராமத்தில் பாடசாலைகள் ஏற்படுத்தி நடத்திவரவேண்டும்.

2. அங்கங்குள்ள லோகல்பண்டு போர்டார் தங்களில் சிலரையும், ரெவினியூ உத்யோகஸ்தர்களையும், ஸப்ரெஜிஸ்திரார்களையும், கீழுதவிப்பரீக்ஷாதி பாடசாலைத்தலைமை யுபாத்தியாயர் சிலரையும்,

காரிகளையும் ஒரு ஸபையாகச்சேர்த்து அவர்கள் மூலமாய்க் கிராம பாடசாலைகளை மேல்விசாரணை செய்துவரவேண்டும்.

3. முனிசிபாலிடியாரும் லோகல் பண்டாரைப்போலே தங்களுடைய விசாரணைக்குட்பட்ட இடங்களில் பாடசாலைச்சபைகள் ஏற்படுத்தி அங்குள்ள பாடசாலைகளைக் கண்பார்த்துவரவேண்டும்.

4. கிராமபாடசாலைகளுக்குக் கட்டிடம் கட்டவேண்டியது அவசியமே. தற்காலத்தில் கட்டிடம் கட்ட ஸாத்தியப்படாவிட்டாலும், கட்டிடமேற்படுகிறவரையில் அங்கங்குள்ள கோவில் முதலான பொதுஸ்தலங்களில் பாடம் நடத்திவரலாம்.

5. போதனுப்யாஸ பாடசாலையிற் பயின்ற உபாத்தியாயர் கிடைத்தால் நலமே. அப்படிக்கிடைக்காத பக்ஷத்தில் அங்கங்குள்ள படிப்பாளிகளைக்கொண்டு படிப்பித்துவரலாம்.

6. சித்திரப்படங்களுடன் சேர்த்து உரப்பான காகிதத்தில் அச்சிட்ட நல்ல புஸ்தகங்கள் சொற்பவிலைக்குக் கிடைத்தால் நாட்டுப்பிள்ளைகளுக்கு சகாயமாயிருக்கும். இவைசரிப்படாதபக்ஷத்தில், அந்தந்தச் சபையாருடைய ஆலோசனைப்படி அவர்களுதவியைக் கொண்டு அப்பிள்ளைகளின் படிப்புக்கு ஏற்றவையான வேறுபுஸ்தகங்களை அச்சிட்டுக்கொடுக்கத் தேசத்தார் பிரயத்தனமெடுத்துக் கொள்ளவேண்டும்.

7. பிரதமவித்யாப்யாஸ பிள்ளைகளுடைய பரீக்ஷை 25-வது பிரிவு 2-வது கேள்வி விடையில் கூறியபடியே நடத்தவேண்டியது.

8. த்விதீய வித்யாப்யாஸ அடிப்படைப்பரீக்ஷை 28-வது பிரிவில் கண்டபடி நடத்தவேண்டும்.

9. மடாதிபதிகள் அந்தந்தக்கிராமத்திலிருக்கும் ஸபையார்மூலமாய்ப் பிள்ளைகளுக்கு வைதிகவிஷயங்களைப்படிப்பிக்கப் போதுமான திரவிய சஹாயம் செய்துவருவது இத்தேசத்துக்கு அதிகமான நன்மையை விளைவிக்கும்.

10. இத்தேசத்திலுள்ள வர்த்தகர்களும் வியாபாரிகளும் மற்றுமுள்ள தனவான்களும், பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் வேண்டிய பற்பல விஷயமான புஸ்தகங்களை மொழிபெயர்ப்பது முதலிய காரியங்களுக்குத் தங்களாலான திரவியசகாயம் செய்து நாடுகளில் படிப்பு விசேஷமாக விருத்தியடையப்பாடுபடவேண்டும்.



11. உயர்தரப்பாடசாலைத்தலைமை உபாத்தியாயர்கள் போதுமான முயற்சி யெடுத்துக்கொண்டால்தான் இக்காரியங்களெல்லாம் நன்கு நிறைவேறும்.

சே. இராஜகோபாலாசாரியர்.

முற்றிற்று.

---

# இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

(செந்தமிழ்த் தொகுதி-௪, பகுதி-௧௨, ௩௪௫ ஆம் பக்கத்தொடர்ச்சி)

## அனுமப்படலம்.

எவ்வழி யிருந்தான் சொன்ன கவிகுலத் தரசன் யாங்க
ளவ்வழி யவனைக் காணு மருத்திபா ணுக வந்தோ
மிவ்வழி நின்னை யுற்ற வெமக்கினி யென்கொ லென்னச்
செவ்வழி யுள்ளத் தோனைக் காட்டுதி தெரிய வென்றான்.

என்னும் ௨௫—ம் செய்யுளில், 'இவ்வழிநின்னையுற்றவெமக்கினி யென்கொலென்ன' என்பது, 'இவ்வழிநின்னையுற்றவெமக்கு நீ யின்றுசொன்ன' எனக் காணப்படுகின்றது. 'யாம் அவனைக்காணும்படிவந்தோம் அவனைக்காட்டுதி' என நேரே முடிதலே சிறப்புடைமையின் பின்னையதே சிறப்புடைத்து. இன்றுகாட்டுதி எனக்கூட்டுக. முன்னைய பாடத்தில் 'என்ன' என்பதும் இயையாமைகாண்க. இனி இதனை 'இன்சொலன்ன' எனக்கொண்டு, 'உனது இன்சொற்போன்ற' என உரைத்தார்கள் ஸ்ரீமத் வை. மு. சடகோபராமானுஜாசாரியரவர்கள். இன்சொல்லைச் செவ்வழிக்குவமை கூறல் சிறப்பின்மை காண்க.

௸

ஒடுங்கலி லுலகம் யாவு முவந்தன ருதவி வேள்வி
தொடங்கின மற்று முற்றத் தொல்லறந் துணிவ ரன்றே
கொடுங்குலப் பகைஞ ருகிக் கொல்விய வந்த கூற்றை
நடுங்கினர்க் கபய நல்கு மதனினு நல்ல துண்டோ.

என்னும் உகூ-ம் செய்யுளில், 'ஒடுங்கலி லுலகம் யாவுமுவந்தன ருதவி' என்பது, 'ஒடுங்கலி லுலகம்யாவுமுயர்ந்தவர்க்குதவி' எனக்காணப்படுகின்றது. 'உன்னியதான முயர்ந்தவர் கொள்க' என்பது விதியாதலின் பின்னையதேபொருத்த முடைத்து. உலகம்-பூமி. 'உவந்தனவுதவி' எனப்பாடங் கொண்டாருமுளர். தானம் எல்லாருக்குங் கொடுப்பதின்றாகலின் அதுவும் பொருத்தமின்று.

௸

யாரென விளம்பு கேறு னெங்குலத் தலைவற் கும்மை
வீரநீர் பணித்தி ரென்றான் மெய்ம்மையின் வேலி போல்வான்
வார்கழ லிளைய வீரன் மரபுளி வாய்மை யாதுஞ்
சோர்வில நிலைமை யெல்லாந் தெரிவுறச் சொல்ல லுற்றான்.

என்னும் உ௮-ம் செய்யுளில், 'வார்கழலிளையவீரன்மரபுளிவாய்மையாதுஞ்—சோர்விலநிலைமையெல்லாந்தெரிவுறச்சொல்லலுற்றான்' என்பது, 'வார்கழலிளையமைந்தமற்றுநம்மரபியாவுஞ்—சோர்விலாதுரையென்றையன்சொல்லலுஞ்சொல்லலுற்றான்' எனக்காணப்படுகின்றது. ஸ்ரீராமன் கட்டளையின்றிச் சொல்லுதல் முறைமையன்றாகலானும், அனுமன் ஸ்ரீராமனையே வினவியதாகலான் அவனுத்தரவின்படி இலக்குவன் சொல்லத்தொடங்கினனென்றலே பொருத்தமுடைத்தாகலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. பிற்செய்யுளிலும் 'சூரியன்மரபிற்றோன்றி' எனமரபுகூறலினாலும் பின்னையபாடமே பொருத்தமுடைத்தாதல் காண்க.

௸

சூரியன் மரபிற் றோன்றிச் சுடர்நெடு நேமி யாண்ட
வாரிதி னமரர்க் காக வசுரரை யாவி யுண்ட



வீரியன் வேள்வி செய்து விண்ணுல கோடு மாண்ட
காரியன் கருணை யன்ன கண்ணனக் கவிகை மன்னன்.

என்னும் உகூ-ம் செய்யுளில், 'சுடர்நெடுநேமியாண்ட' என்பது, 'தொல்லுலகாண்டமேலோன்' எனக்காணப்படுகின்றது. உலகை வருவிப்பதினும் உலகாண்ட என வெளிப்பட்டு வருதல் சிறப்புடைத்தாதலின் பின்னையதே பொருத்தமுடைத்து.

௸

அன்னவன் சிறுவ னுமிவ் வாண்டகை யன்னை யேவத்
தன்னுடை யுரிமைச் செல்வந் தம்பிக்குத் தகவி னல்கி
நன்னெடுங் கானஞ் சேர்ந்தா னுமமு மிராம னென்பா
னிந்நெடுஞ் சிலைவ லானுக் கேவல்செய் யடியன் யானே.

என்னும் ௩க-ம் செய்யுளில், 'இந்நெடுஞ்சிலைவலானுக்கேவல்செய்யடியன்யானே' என்பது, 'தன்னொடும்பிறந்திங்கேவறலைக்கொள்ளுமடியன்யானும்' எனக்காணப்படுகின்றது. தம்மை யார்என்றுகூறுமிடத்துத் தம்பியென்னும் முறையுணர்த்தல் [illegible]றாதலின் பின்னையதே பொருத்தமுடைத்து. தன்னொடும் [illegible] கொள்க [illegible]

## நட்புக்கோட்படலம்.

சூழிமால் யானையான் றொழுகழற் றயாதன்
பாழியா லுலகெலா மொருவழிப் படாவா
ழாழியான் மைந்தர்பே ரறிவினா ரழகினா
ரூழியா ரெளிதுனக் கரசுதந் துதவுவார்.

என்னும் ௬-ம் செய்யுளில், 'ஊழியாரெளிதுனக் கரசுதந்துதவுவார்' என்பது, 'ஊழிவாழினியுனக்கரசுதந்துதவுவார்' எனக்காணப்படுகின்றது. ஊழிகாலத்துக்கு வாழ்பவர் அல்லது நற்குணமுடையவரென்றும், ஊழியாலெனக்கொண்டு முறைமையாலெனவும் பொருள் கோடலினும், 'ஊழிவாழ்' எனக்கொண்டு பொருளுரைத்தலே சிறப்புடைத் தென்க. நிச்சயமாக உனக்கு அரசுதந்துதவுவாரென்பதைப்புலப்படுத்துமாறும், வேறு புலனின்றிக்கேட்பிக்குமாறும், தம்மரசன் வாழ்வு தமக்கும் பிரீதியென்பது போதருமாறும் 'ஊழிவாழ்' என்றானென்க.

## சேந்தமிழ்.

ஷை

நீதியார் கருணையின் னெறியினர் நெறிவயிற்
பேதியா நிலைமையா ரெவரினும் பெருமையார்
போதியா தளவிலா வுணர்வினர் புகழினர்
காதிசேய் தருநெடுங் கடவுள்வெம் படையினர்.

என்னும் ௫-ம் செய்யுளில், 'காதிசேய்தருநெடுங்' என்பது, 'காதியார்சேய்தரும்' எனக்காணப்படுகின்றது. முன்னையது, இசைச்சிறப்பின்மையானும், மூன்றுமெழுத்தொன்றி வருதற் சிறப்பின்மையானும், பின்னையதே சிறப்புடைத்து.

ஷை

நல்லுறுப் பமையுநம் பியரின்முன் பவனயந்
தெல்லுறுப் பரியபே ரெழுசுடர்க் கடவுடன்
பல்லிறுத் தவன்வலிக் கமைதிலம் பகமெனும்
வில்லிறுத் தருளினன் மிதிலைபுக் கனையநாள்.

என்னும் ... ல், 'நல்லுறுப்பமையுநம்பியரின்முன்பவனயந் - ... ரெழுசுடர்க்கடவுடன்' என்பது, 'நல்லுறுப்பமையுநங்கையரின்மேலவள்பொருட் - டெல்லுறுப்புடைய பேரெழுபரிக்கடவுடன்' எனக்காணப்படுகின்றது. சீதை பொருட்டு என்பது ஈண்டுக் கூறல் வேண்டுமாதலானும், 'எல்லுறுப்பரியபே ரெழுசுடர்க்கடவுடன்' என்பதுபொருட்பொருத்த மில்லதுவாதலானும் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

கரன்முதற் கருணையற் றவர்கடற் படையொடுஞ்
சிரமுகச் சிலைகுனித் துதவுவான் றிசையுளார்
பரமுகப் பகைதுமித் தருளுவான் பரமரா
மரன்முதற் றலைவருக் கதிசயத் திறலினன்.

என்னும் ௧௦-ம் செய்யுளில், 'சிலைகுனித்துதவுவான்றிசையுளார்' என்பது, 'சிலைகுனித்துடையன் மற்றமரர்தம்' எனக்காணப்படுகின்றது. கரன்முதலியோரைக் கொன்றுள்ளவன், இன்னும் தேவர்களது பகைவராகிய இராவணன் முதலியோரைக்கொன்று அருள்செய்வான் எனப் பொருள்கொள்ளுமிடத்துச் சிறப்படைதலிற் பின்னையதே சிறப்புடைத்து. திக்கிலுள்ளாரது பகை என்றல் சிறப்பின்று.



ஷை

ஆயமா நாகர்தா ழாழியா னேயலாற்
காயமா னயினா னவனே காவலா
நீயமா னோர்தியா னேருமா ரீசனார்
மாயமா னயினன் மாயமா னயினன்.

என்னும் ௧௧-ம் செய்யுளில், 'நீயமானோர்தியானேருமாரீசனார் - மாயமானயினன்மாயமானயினன்' என்பது, 'நீயம்மாவோர்தியானேரின்மாரீசன - மாயமானயினன் மாயமானேயினன்' எனக்காணப்படுகின்றது. முன்னையதற்கு மாயமானயினனாகிய மாரீசனுக்குப் பெரிய யமன் ஆயினன் எனப் பொருள்கொள்ளுமிடத்து யமன் யமான் என நீண்டது என்பர். யமான் என்பது நீட்டும் வழி நீட்டலன்மையின், அங்ஙனம் கம்பர் கூறாராதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. பின்னையதற்கு மாயமானயினன் மாயுமாறு சீதையாலேவப்பட்டான் எனப்பொருள்கொள்க. மான் - மான்போல்வாளாகிய சீதை. விஷ்ணுமூர்த்தியே இம்மானுடரூபத்தையெடுத்தார் நீ இதனை உண்மையென்று அறிகுதி என்னுமிடத்து 'நீயம்மா வோர்தியால்' என்னும் பாடமே இயைபுடைத்தாதல் காண்க.

ஷை

மாயையான் மதியிலா நிருதர்கோன் மனைவியைத்
தீயகா னெறியினுய்த் தன்னவட் டேடுவார்
நீ[illegible]யா தவமிழைத் துடைமையா னெடுமனந்
தூயையா வுடைமையா லுறவினைத் துணிகுவார்.

என்னும் ௧௨-ம் செய்யுளில், 'தீயகானெறியினுய்த்தனன்' என்பது; 'தீயதாநெறியினுய்த்தனன்' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட்சிறப்பின்மையிற் பின்னையதே பொருட்பொருத்தமுடைத்து. தீயதாநெறி - களவு. களவாற்கொண்டு போனான் என்பது கருத்து.

(தொடரும்.)

சி. கணேசையர்.

உ

# நல்லொழுக்கம்.

(செந்தமிழ்த் தொகுதி-ச, பகுதி-கஉ, ௬அ௦-ஆம் பக்கந்தொடர்ச்சி.)

[ஸ்ரீ-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

காரிய நிர்வாகத்திற்கு உயிர் நிலையாகிய திட்டஒழுங்கானது குடும்பத்திற்கும் முக்கியபிரதானமாயுள்ளது. வேலைகள் ஒழுங்கினால் தான் சாதிக்கத்தகும்; கெடுதலானது அதன் முன் நிலைக்கின்றதின்று. குழப்பம் என்பது தெரியவே செய்யாது. காரியநிருவாகத்திற்கு ஒழுங்கு தவிர மற்றொரு முக்கியமான குணமாவது குறித்தகாலத்திற் செய்கையாம். காலந்தப்பி நடப்பவள் காலந்தப்பி நடப்பவனைப்போலவே வெறுப்பை உண்டாக்குகிறாள். ஏனென்றால் அவள் நேரத்தைச் செலவழித்து வீணாக்கில் அவளை மிகவும் ஜாக்கிரதைப்படும்படி செய்யத்தக்க மதிப்பை அவன் நம்பால் செலுத்தவில்லையென்று நினைக்க நமக்குக் கோபமுண்டாகின்றது.

வேலையுள்ள மனிதனுக்கு நேரமானது பணமாயிருக்கிறது. ஆனால் வேலையுள்ள ஸ்திரீக்கு ஒழுங்கானது அதினும் அதிகம். அதாவது அதுசமாதானமும் ஸௌக்கியமும் கிரகசம்பந்தமான ஆக்கமுமாயிருக்கிறது.

முன்கூட்டியறிதலானது புருஷர்களைப்போலவே ஸ்திரீகளுக்கும் காரியநிர்வாகத்திற்கு மற்றொரு முக்கியமான குணமாயிருக்கிறது. அவ்வறிவானது அனுபவஞானமாய்க் கற்றுணர்ந்த தீர்மானத்தினின்றும் உண்டாகிறது. அது, சகல காரியங்களிலும் செய்யத்தக்க சரியான காரியத்தையும், செய்யத்தக்க சரியான முறைமையையும் விவேகத்துடன் நிதானிப்பதால் காரியத்தின் தகுதியையும் நியாயத்தையும் குறித்துக் கொள்ளுகின்றது. அதுகாரியத்தின் சாதனத்தையும் ஒழுங்கையும், காலத்தையும், வழியையும், கணித்துக்கொள்ளுகின்றது. விவேகமானது அனுபவத்தினின்றும் கிளர்ந்து ஞானத்தால் வளர்கின்றது.



இத்யாதிகாரணங்களால் இவ்வுலக வாழ்க்கைக்கும், காரியத்திற்கும் தாங்கள் தக்க உபகாரிகளாயிருக்கும்பொருட்டு ஸ்திரீகள் காரிய நிர்வாகத்தின் பழக்கங்களைக்கற்றுணரவேண்டுவது இன்றியமையாததேயாம். இதுவுமன்றி குடும்ப அதிகாரத்தைச்சரியானபடி செலுத்தும்பொருட்டு ஸ்திரீகள் குழந்தைகளுக்குச் செவிலிகளாயும் சிக்ஷகராயும் போதகராயும் இருப்பதால் மன அறிவின் தேர்ச்சியாற் கிடைக்கத்தக்க உதவியும் பலமும் அவர்கட்கு அவசியமாகின்றன.

பிரகிருதி சம்பந்தமான பாசமாத்திரம் போதாது. கீழ்த்தரமான பிராணிகளைக் காக்கிற இயற்கை உணர்விற்கு சிக்ஷை அவசியமில்லை. ஒருகுடும்பத்தில் என்றும்வேண்டியுள்ள மனுஷிய அறிவானது சிக்ஷிக்கப்படவேண்டியது அவசியம். பின் உற்பத்தியாகிற சந்ததிகளின் சரீரஸௌக்கியமானது தெய்வீகமாக ஸ்திரீகள்பால் ஒப்புவிக்கப்படிருக்கிறது. சரீரசம்பந்தமான பிரகிருதியில்தான் சன்மார்க்கமும் மனோசம்பந்தமுமான பகுதி அடங்கியிருக்கிறது. அவள் தான் அனுஷ்டிப்பதற்குமுன்னமே அவசியமாய் அறியவேண்டிய பிரகிருதியின் சட்டப்பிரமாணங்களுக்கு இணங்க நடப்பதால் தான், சரீரஸௌக்கியம், மனோஸௌக்கியம், சன்மார்க்கஸௌக்கியம் ஆகிய பாக்கியங்கள் குடும்பத்திலே எய்தப்படும். அப்போர்ப்பட்ட பிரமாணங்களில் உணர்ச்சியில்லாத தாயின் அன்பானது குழந்தையின் மரணத்திலேயே முடிதல் பெரும்பான்மையும் காணப்படுகிறது.

மனிதருக்கும் ஸ்திரீகளுக்கும் கொடுக்கப்பட்ட புத்திதத்துவமானது உபயோகப்படுத்திப் பழக்குவதற்கேயன்றி உபயோகமின்றிக்கெட்டுப்போவதற்கு அன்று என்பது ஸ்வதஸித்தமானஉண்மை. அவ்விதம் கொடுத்ததும் ஏதாவது நோக்கமின்றியன்று. சிருஷ்டிகர்த்தாவானவர் அளவின்றிக் கொடுக்கலாம். ஆனால் அவர் கொடுத்தவற்றை வியர்த்தமாக்குகிறவரல்லர்.

ஸ்திரீஜன்மங்கள் யோசனையில்லாத அடிமையாகவாவது அல்லது மனிதனுடைய விட்டாற்றிக்குக் கேவலம் அழகிய ஆபரணமாகவாவது இருக்கும்படி கருதப்பட்டவரல்லர். அவள் தனக்காகவும்

பிறருக்காகவும்தான் வசிக்கிறாள். இவ்வுலகவாழ்க்கையில் அவள்
செய்யக்கடமைப்பட்ட உண்மையானவேலைகளுக்கு அறிவுவிருத்தி
யான மூளையும் உருகத்தக்கஇருதயமும் வேண்டற்பாலன. அவள்
சிருஷ்டிக்கப்பட்டதின் பயனானது, இப்பொழுது எவ்வளவோ பிர
யோஜனமான காலத்தை வீணாக்குவதாகிய அசித்தியமான நாகரீக
அலங்காரத்தையுடைமையால் நிறைவேறமாட்டாது. ஏனென்றால்
நாகரீக அலங்காரங்கள் போதுமான மனோகரமுள்ள வாலிபத்தின்
வசீகரத்தையும் அழகையும் விருத்திசெய்தபோதிலும், யதார்த்தமா
ன உலகவாழ்வில் யாதொரு பயனுமற்றனவாகவே காணப்படும்.

பூர்வீக உரோமர்கள் மேலானஸ்திரீகளைப்பற்றிக் கூறும் புகழ்ச்
சியானது அவள் வீட்டிலிருந்து நூற்றுக்கொண்டிருந்தா ளென்ப
தே. இப்பொழுது நம்முடையகாலத்திற் பானையைக் கொதிக்க
வைக்கிறதற்குரிய ரசாயன சாஸ்திரமும், அவளுடைய வீட்டில் பற்
பல அறைகளைத் தெரிவதற்குரிய பூகோளசாஸ்திரமுமாகிய சாஸ்தி
ர உணர்ச்சி எந்த ஸ்திரீக்கும் போதுமானதென்று சொல்லப்பட்டி
ருக்கிறது. ஆனால் ஸ்திரீகள் விஷயத்தில் மிகவும் குறைவான வித
த்தில் உருக்கங்கொண்டிருந்த ‘பைரன்’ என்பவர் ஸ்திரீகளுக்கு பை
பில்புஸ்தகமும் பாகசாஸ்திரமும் போதுமென்று சொன்னார். ஆனால்
ஸ்திரீகள் புருஷனுக்குச் . சமானமாயிருக்கும்படி கற்பிக்கப்பட
வேண்டுமென்றும் அவர்கள் புருஷனினின்றும் ஜாதிவேற்றுமையை
த்தவிர வேறொன்றிலும் வித்யாசமுடையவரல்லரென்றும்; பாத்தி
யதைகள் உத்யோகநியமநங்களில், அவனுக்குச்சமமென்றும்; உத்தி
யோகம், அதிகாரம், பணம் இவற்றிற்காக இவ்வாழ்க்கையை மூர்க்க
மும் தன்னயம் பாராட்டுதலுமான போராட்டமயமாக்குகின்ற எல்
லாவிஷயத்திலும் புருஷனுக்கு ஸ்திரீகள் போட்டிபோடத்தக்கவ
ரென்றும், அதிக்கிரமமாயும் இயற்கைக்கு விரோதமாயும் பிரதி
பக்ஷத்தார் ஒப்புக்கொண்டு அபிப்பிராயப்படுவதற்கு மாறாக இவர்,
(பைரன்) ஸ்திரீகளுடைய ஒழுக்கத்தையும் அறிவின்தேர்ச்சியையும்
பற்றிக்கொள்ளுகிற கருத்தானது ஒடுங்கியும் விவேகமற்றதாயுமிருக்
கின்றது. ஆகவே இருதிறத்தாருடைய கொள்கையும் நியாயவிரோ
தமாயிருக்கின்றது.



பொதுப்படப் பேசுங்கால், பாலிய வயசில் ஒருஜாதியாருக்குத்
தகுதியாயின படிப்பும் பழக்கமும் மற்றொருஜாதியாருக்கும் தகுதி
யாயிருக்கின்றன. மனுஷனுடைய மனசில் நிலைறகிற கல்வியும் அ
றிவின்தேர்ச்சியும் ஸ்திரீக்கும் சுபகரமாகவே காணப்படும். உள்ள
வாறே மனிதன்பொருட்டு உயர்தரக்கல்விக்குச்சொல்லுகிற நியாய
ங்களெல்லாம் ஸ்திரீகளுக்கும் உயர்ந்த கல்வியைக் கொடுக்கவேண்டு
மென்கிறதற்குப் போதுமானபடி அமைகின்றன. வீட்டுவிஷயமா
ன எல்லாக்காரியங்களிலும் புத்திக்கூர்மையானது ஸ்திரீயின் உப
யோகத்திற்கும் சகுதிக்கும் உபகாரப்படுகின்றது. அது அவளுக்கு
ஆலோசனையையும் முன் அறிவையும்கொடுத்து இல்வாழ்க்கைக்கு
வேண்டிய சாமான்களையும் முன்கூட்டிஅறிந்து சவுகரிக்க அவளைத்
திறமை உண்டாக்கி, சீர்திருத்தத்தோடு கிரககிருத்தியத்தை நடத்து
கிறதற்கு உதவி புரிந்து, எல்லாவழியிலும் அவளுக்குப்பலத்தைக்
கொடுக்கும். அவள் சிக்ஷிக்கப்பட்ட மனோசக்தியை உடைத்தாயிருந்
தால், கேவலம், அறியாமையும் நிஸ்ஸந்தேகமான விவேக சூன்னிய
மும் இல்லாதவளாய் பிறருடைய வஞ்சகத்திலும் மோசத்திலும் அ
கப்படாமல் தன்னை க்ஷேமத்துடன் ரட்சித்துக்கொள்ள சக்தியு
டையளாவாள். அவள் சரீரசம்பந்தமான மனக்கவர்ச்சிகளைவிட
சன்மார்க்கமும் மதசம்பந்தமுமான கல்வியில் அதிக சக்தியும் நிலைப்
புமான வசீகரத்தையுடையளாவள். பிறரைச்சாராமலும் பராதீ
னப்படாமலும் கிரகத்தின் சௌக்கியத்திற்கும் சந்தோஷத்திற்கும்
வேண்டிய உண்மையான காரணங்களைக்கண்டுபிடித்துக்கொள்வாள்.

ஆனால் ஸ்திரீகளுடைய சித்தமும் ஒழுக்கமும் தங்கள் சொந்த
நன்மைக்காகவே விருத்திசெய்யப்படுவனபோல, அவர்கள் பிறரு
டைய இன்பத்திற்கும் அமையுமாறு கற்பிக்கப்படல்வேண்டும் ஸ்
திரீகள் நிர்மலமான குற்றமற்றமனசு அல்லது நன்னெறியிலரேல், பு
ருஷர்களும் அவ்வாறேயாவர். ஓர்ஜாதியாரின் சன்மார்க்க ஸ்திதியான
து பெரும்பான்மையும் கிருகத்தினின்றே சிக்ஷிக்கப்படவேண்டு
மென்று நாம்சித்தாந்தம் செய்கிறதுகிரமமானால், ஸ்திரீகளுக்கு வித்
தியாப்யாசமானது, அச்சாதியாருக்குரிய முக்கியப்பொருளாக ம
திக்கப்படுவதாகின்றது. ஸ்திரீகளுக்கு நன்னெறித்தூய்மையும் நன்

மனப்பயிற்சியும் உளவேல், புருஷருடைய நல்லொழுக்கமட்டுமன்று மனோதிடமும் ரக்ஷிக்கப்பட்டு ஆதரவைப்பெறும். இருவருடைய திறமைகளும் முற்றும் தேர்ச்சியடைய அடைய ஜனசங்கமானது ஒற்றுமையும் நல்லொழுங்குமுடையதாய், தன் உயர்வையும் மேன்மையையும் பின்னமின்றி உறுதியாகப்பெறும்.

ஐம்பது வருஷங்களுக்குமுன், பிரான்ஸ்தேசத்திற்குப் பெருங்குறை 'தாய்மார்' என்று முதலாவதுநெப்போலியன் சொன்னபொழுது பிரான்சுக்காரருக்கு நற்குணமும் நல்லொழுக்கமும் தீக்ஷணபுத்தியுமுள்ள ஸ்திரீகளால் நடத்தப்பட்ட குடும்ப சிக்ஷை, அவசியமென்பது கருத்து. உள்ளவாறு ஸ்திரீகளின் சுத்திசெய்யும் சக்தியை அலட்சியம் செய்ததினாலெழுந்த ஜனசங்கத்தீமைகளுக்குப் பிரபலதிருஷ்டாந்தம் ஒன்று, முதலாவது பிரான்சுகலகத்தில் விளங்கிற்று. அந்தப்பெரிய கலகம் ஜனங்களுக்குள் ஜனித்தபொழுது அந்த ஜனசங்கத்தில் துன்மார்க்கமும் தீயொழுக்கமும் நிறைந்திருந்தன. சன்மார்க்கமும், மதமும், தர்மமும், காமபோகத்தில் அழுந்திக்கிடந்தன. ஸ்திரீகளுடைய ஒழுக்கமானது குறைவடைந்திருந்தது. விவாஹசம்பந்தமான விசுவாசம் அலட்சியம் செய்யப்பட்டது. மாதாவானவள் நிந்திக்கப்பட்டனள். குடும்பமும் கிருகமும் அவ்வாறே கெடுக்கப்பட்டன. ஜனங்களுக்குள் தூயகுடும்பத்தினர் கிடையாது. பிரான்சுதேசத்தில் தாயின் அன்பு கிடையாது. குழந்தைகள், தான்தோன்றிபாயின. ஸ்திரீகளின் அழுகுரலுக்கும், மூர்க்கமான அக்கிரமத்திற்கும் நடுவே கலகமுங்கிளர்ந்தது.

ஆனால் அந்தப்பயங்கரமான கேட்டைக்கவனியாமல் பிரான்சுதேசமானது பலமுறையும், கிரகத்தில்மாத்திரம் உள்ளபடியே பழக்கத்துக்க சிக்ஷை, பணிவு, அடக்கம், தன்மரியாதையாகிய இவையின்மையால் மிகவும் கஷ்டமடைந்திருக்கிறது. பிரான்சுதேசமானது ஜெயித்தவர்களுடைய அடியின் கீழ்ப்பட்டு உதவியற்று இரத்தம் சிந்தும்படி சொற்பகாலத்திற்குமுன்னர் சக்தியிழந்ததானது ஜனங்களுடைய அற்பத்தனத்தாலும் ஒழுக்கமின்மையாலும் காமவேட்கையாலும் நிகழ்ந்ததென மூன்றாவது நெப்போலியன் கூறுவாராயி



னர் எனப்படுகிறது. ஆனபோதிலும் அவற்றை வளர்க்கிறதற்கு அவர் செய்தது கொஞ்சமல்ல என்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டும். பிரான்சுதேசமானது நன்மையையும் கௌரவத்தையும் அடைய விரும்பினால் அது இன்னும் பழகுவதற்கு இன்றியமையாமையால் நேரிடுகிற சிக்ஷையானது, முதலாவதுநெப்போலியன் காட்டியபடி, நல்ல தாய்மாரால் வீட்டில் நல்லொழுக்கம் கற்பிக்கப்படவேண்டியதேயாம்.

ஸ்திரீகளின் வசவிருத்திசெய்யும் சக்தியானது எங்கும் ஒன்றுபோலிருக்கிறது. அவளுடைய நிலைமையானது எல்லாத்தேசங்களிலும் ஜனங்களுடைய சன்மார்க்கத்தையும் ஒழுக்கத்தையும் நன்னெறியையும் உண்டாக்குகின்றது. அவள் இழிவடைந்தால் அந்த ஜனசங்கமும் இழிவடைகிறது. அவள் சன்மார்க்கமானதூய்மையும் கல்வியறிவும் உடையவளாயின் அச்சனசங்கமும் அதற்குத்தக்க உயர்வையடையும்.

ஆதலால், ஸ்திரீகளைப்படிப்பித்தலானது புருஷர்களைப்படிப்பித்தலேயாம். அவளுடைய ஒழுக்கத்தை உயர்வுபடுத்தலானது அவனுடைய சொந்த ஒழுக்கத்தை உயர்த்துவதேயாம். அவளுடைய மனோசுவாதீனத்தை விசாலப்படுத்துவதானது மொத்தஜனங்களுடைய சுவாதீனத்தை அதிகப்பட அடைவிப்பதேயாம். ஏனென்றால் ஒரு ஜாதியார் ஒருகுடும்பத்திலிருந்து உண்டானவராகவும், குடும்பத்து ஜனங்கள் தாய்மாரிடத்தினின்றும் உற்பவித்தவராகவுமிருக்கின்றனர்.

(இன்னும் வரும்.)

௨

# மகாபாரதச் செய்யுட் பாடாந்தரம்.

(செந்தமிழ்த் தொகுதி-ச, பகுதி-கஉ, சுஅச ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## பன்னிரண்டாம்போர்ச் சருக்கம்.

சுய. உரமிக்கதனுசிலைகுனிவிந்துமதியின்வகிருவமிக்குமடு
பகழியால், வரமிக்கநவளநிறமதவெற்பையெதிர்கடவிவ
ருவெற்றியவனிபதிதன், கரமுற்றசிலைகவசமறவெட்டி
விடுகணைகள்கணைவிட்டுவிலகவவனுஞ், சரம்விட்டொர
யில்விசயனிரதத்தின்வலவன்மிசைதமாத்தினுடனெறி
யவே.

இக்கவியில் பதிதன் என்பதும் விலகவவனும் என்பதும் சந்தஞ்சிதைய நின்றமையால், "பதிநீள்" என்றும், "விலகவவன்மா" என்றுங்காணப்படுகின்ற பாடமே சந்தத்திற்கியைந்தமைகாண்க. இவ்வாறு சந்தத்திருத்தமுள்ளனபல. விரிவஞ்சி யவற்றை ஈண்டு வரையவில்லை.

## பதின் மூன்றாம் போர்ச்சருக்கம்.

௱௬ச. சரமறுத்தான்வில்லறுத்தான்றேரறுத்தான்கொடியறுத்
தான்சமரபூமி, புரமறுத்தான்முதற்பொருதவுதயதின
கரன்மைந்தனுடன்றுசிறிக்.

இக்கவியில், "கொடியறுத்தான் றேரறுத்தான் சமரபூமி" எனக்காணப்படுகின்றது. கோடியறுத்த பின் றேரறுத்தலே பொருத்தமுடைத்தாதலால் இப்பாடமே சிறந்ததென்க.

௱சஉ. பங்கெலா மரகதமாம் பவளநிறப் பொருப்புதவும் பைம்
பொற்கொன்றைத், தொங்கலாற் கோறுவித்த சூழ்ச்சி
யையின் றறிந்திலனே தோன்றலே நான்.

இக்கவியில், "தொங்கலாலுனைவளைத்த சூழ்ச்சியை" எனக்காணப்படுகின்றது. தொங்கலால் வளைத்தலே பொருத்தமுடைமையானு முன்னருங்கூறினமையானும் இப்பாடமே சிறந்ததென்க. உ௱அ-ஆங்கவி முதலாகஉ௱உ0-ஆங்கவிவரையுள்ள பாடபேதங்களை விரிவஞ்சி யீண்டுவரையவில்லை.

உஉ௬. "நம்மொழி விட்டொருமெய்ம்மொழிகேளென நோதகு
நெஞ்சினனும்.



இக்கவியில், "மெய்ம்மொழிகேண்மெனநோதகு நெஞ்சினனும்"எனக்காணப்படுகின்றது. நம்மெனப் பன்மைகூறியதற்கேற்பக்கேண் மெனப்பின்னும் பன்மையாற் கூறுவதே பொருத்தமுடையின் இப்பாடமே சிறந்ததென்க.

௱௫௬. அன்மருடிமிரமெய்தளவுநாளையிற்
றென்மருடெரியல்வேற்சிந்துவேந்தனைக்
கன்மருடிகிரியிற்காப்பன் யானென்றான்
றன்மருடணனெனுந்துணைவன்றானுமே.

இக்கவியில்; "அன்மருளிரவிவீழளவுநாளையித், தென்மருடெரியல்வேற்சிந்து வேந்தனை" எனக்காணப்படுகின்றது. அன்மருடிமிரமென்பதும், நாளையிலென்பதும் பொருத்தமுறுபொருடாராமையில் இப்பாடமே சிறந்ததென்க.

## பதினான்காம் போர்ச்சருக்கம்.

ய௬. கிட்டியாசிரியனுங்கிரீடியும்பொரப்பொரப்
பட்டவில்லையிருவர்மேலும்விட்டவிட்டபகழியே.

இக்கவியில், "கிட்டியாசிரியனுமக் கிரீடியும் பொரப்பொரப்" எனக்காணப்படுகின்றது. ரியனும் எனப்புளிமாவாய் நிற்பிற்றளை சிதையும் ரியனுமக்என க்கருவிளமாயிருப்பிற்றளை சிதையாது. ஆதலாலிப்பாடமே யிருத்தல்வேண்டுமென்க.

அச. கோமகக்குரிசின்முந்தவிடுமப்புபலகோறுடுத் தெதிர்வி
லக்கிவிசயன்றனது,நீமுகக்கணையகந்தநிலையொன் றின்மு
னைசேரவிட்டனன்விடுத்தபொழுதத்துவிறன்.

இக்கவியில், "விலங்கிவிசயன்" என்றும் "விடும்பொழுதினந்தவிறன்" என்றுங்காணப்படுகின்றன. இப்பாடமே சந்தஞ் சிதையாமையாற் பொருத்தமுடைத்தென்க.

அசு. வாகைநெட்டயிறுணிந்திடலும் வேகமுடன் மானிரைத்
திரதமுங்கடவிவந்துமுதல்.

இக்கவியில், 'துணிந்திடலும் வன்பினுடன் மானிரைத்து'எனக்காணப்படுகின்றது. இப்பாடமே சந்தஞ் சிதையாமையாற் பொருத்தமுடைத்தென்க.

(இன்னும் வரும்)

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# "மதுரைத்தலவரலாறு."

(செந்தமிழ்த் தொகுதி-ச, பகுதி- கஉ, கூகூஉ. ஆம் பக்கத்தொடர்ச்சி.)

———:o:———

"சகாப்தம் - கசஅக-க்கு மேற்செல்லாநின்ற ரௌத்திரி-௵ மார்கழி-௴ ராயர் உத்தரவுப்படிக்குக்கோடியம்நாகமநாயக்கர் மகன் விசுவநாத நாயக்கர் மதுரைக்குவந்து ரௌத்திரி-௵ மார்கழி-௴ முதல் ஆங்கிரச-௵ வைகாசி-௴ வரைக்கும் ௵-௰உஇ-க்கு ராஜ்ஜியம்ஆண்டு அஸ்தமனமானார். ௸ ௵ ஆனி௴ முதல் விஷ ௵ வைகாசி௴ வரைக்கும் ௵ கூ-க்கு, விசுவநாத நாயக்கர் குமாரன், கிருஷ்ணப்பநாயக்கர் ராஜ்ஜியம்ஆண்டு அஸ்தமனமானார். ௸ ௵ ஆனி௴ முதல் மன்மத௵ வைகாசி௴ வரைக்கும் ௵-௰ச-க்குக் கிருஷ்ணப்பநாயக்கர் குமாரன் வீரப்பநாயக்கர் ராஜ்ஜியம் ஆண்டு அஸ்தமனமானார். ௸ ௵ முதல் சுபகிருது ௵ ஆனி௴ வரைக்கும் ௵ எ-க்கு வீரப்பநாயக்கர் குமாரன் குமாரகிருஷ்ணப்பநாயக்கர் ராஜ்ஜியம் ஆண்டு அஸ்தமனமானார். ௸ ௵ புரட்டாசி௴ முதல் பிலவங்க௵ மாசி௴ வரைக்கும் ௵ ௫இ-க்குக் குமாரகிருஷ்ணப்ப நாயக்கர் தம்பி விசுவப்ப நாயக்கர் ராஜ்ஜியம் ஆண்டு அஸ்தமனமானார். ௸ தம்பி கஸ்தூரி ரெங்கப்ப நாயக்கர் பட்டத்துக்கு இருந்து ஆற்றுக்கு அக்கரையில் சந்தியாமண்டபத்தில் எட்டாம் நாளையில் அஸ்தமனமனமானார். ௸ விசுவப்பநாயக்கர் மகன் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரும், ௸யார் குமாரன் முத்துவீரப்பநாயக்கர் அவர்களும் ௸ ௵ பங்குனி௴ முதல் துந்துபி௵-கார்த்திகை௴ வரைக்கும் ௵-௰௫ஜ-க்குப்பட்டங் கட்டிக்கொண்டு ராஜ்ஜியம் ஆண்டு அஸ்தமனமானார்கள். துந்துபி௵ மார்கழி௴ எ-ஆந்தேதி முத்துவீரப்பநாயக்கனய்யரவர்கள் தம்பி முத்துத்திருமலைநாயக்கனய்யரவர்கள் சந்நிதியிலே ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் கடாக்ஷத்துக்கு மிகவும் பாத்திரராகி, சுவாமிக்கு அநேக திருவாபரணமுங்கொடுத்து, புதுமண்டபமுந் தெப்பக்குளமுங் கட்டிவைத்து, நாயகர் சந்நிதியில் தங்கமிலாம்போட்ட சிம்மாசனமும், தந்தச்சப்பாமும், கருங்கற்சவுக்கையும், இரத்தினசிம்மாஸந



மும் பண்ணுவித்துக்கொடுத்து, ஏழுகோவிலுக்கும் அநேகந்திருப்பணிகளும் கட்டுவித்து, நித்திய பூஜைக்கு, நாற்பத்து நான்காயிரம் பொன் (வருவாயுள்ள) சீமையும் விட்டுக்கொடுத்து, ஸ்தானீகர் பரிஜனங்களுக்கு அன்னபானாதிகளுக்காக சர்வமானியக்கிராமங்களும் விட்டுக்கொடுத்துக், தம்முடைய சொந்தத்தில் அறைக்கட்டளையுமுண்டுபண்ணுவித்துக் கட்டளைக்கிராமங்களும் விட்டுக்கொடுத்து, திருவிழா உற்சவாதிகளுஞ் சிறப்பாக நடப்பித்து, சுவாமி ஆண்டவன் அழகருக்குச் சித்திரைத்திருநாளுக்குச் சப்பரமுமுண்டுபண்ணிவைத்து, ஸ்தலங்களையெல்லாமிருந்த பிரபலமாகப் பண்ணிவைத்து, சுவாமிதெரிசனத்துக்கு வந்தால் சுவாமிக்குப் பாதகாணிக்கை அபிஷேக நைவேத்தியத்துக்கு ஆயிரம்பொன்கொடுக்கிறது; சுவாமி மாசிவீதியிலெழுந்தருளினால் சுவாமிக்குப் பாதகாணிக்கையில் ஆயிரம்பொன் கொடுக்கிறது. இந்தப்படிக்குத் துந்துபி௵- மாசி௴ எ-ஆந்தேதி முதல் விளம்பி௵ மாசி-௴ ச-ஆந்தேதி வரைக்கும் ௵ ௩கூ-க்கு ராஜ்ஜியம் ஆண்டு, விளம்பி௵ மாசி-௴ ச-ஆந்தேதி செவ்வாய்க்கிழமை இராத்திரி தெய்வீகமானார். விளம்பி௵ பங்குனி ௴ முதல், விகாரி ௵ வைகாசி ௴ வரைக்கும், ௴ ௩-க்கு ௸யார் குமாரன் முத்துவீரப்பநாயக்கரய்யரவர்கள் ராஜ்ஜியம் ஆண்டார். விகாரி௵ ஆனி௴ முதல், துந்துபி௵ ஆனி௴ வரைக்கும், ௵ உச-க்கு, முத்துவீரப்பநாயக்கரய்யரவர்கள் குமாரன்சொக்கநாதநாயக்கரய்யரவர்கள் ராஜ்ஜியம் ஆண்டார். ஆனி௴ ச-ஆந்தேதி, தெய்வீகமானார்."

"அவருடைய குமாரன் ரெங்ககிருஷ்ண முத்துவீரப்பநாயக்கரய்யரவர்கள் உருத்திரோத்காரி௵ ஐப்பசி௴ கஎ௳ முதல் பிரமோதூத ௵ எ-க்கு ராஜ்ஜியம் ஆண்டுதெய்வீகமானார். அதின்பிறகு அவர்குமாரன் விசயரெங்கமுத்துச் சொக்கநாத நாயக்கரய்யரவர்கள் குழந்தையாகையினாலே அவருடைய பாட்டி மங்கம்மாள் குழந்தையை மடியிலே வைத்துக்கொண்டு சிறிது நாள் ராஜ்ஜியம் ஆண்டாள். அப்போது அநேகம் அக்கிரகாரப் பிரதிஷ்டைகளும் சத்திரம் சாலை தேவதாய பிரம்மதாயமும் மாமூல்படிக்குத் திருமலைநாயக்கர் நாளையில் ஒப்பந்தம் நடப்பிவித்து வந்தாள். மங்கம்மாள் தெய்வீகமான

தின்பிறகு, விசயரெங்கமுத்துச் சொக்கநாத நாயக்கரய்யரவர்கள் ராஜ்ஜியம் ஆளுகிற முன்னுக்கு முன் திருமலை நாயக்கர் நாளையில் நடப்பிவித்தபடிக்கு நடத்திவைத்து வந்தார்கள். அப்படி நடக்கிற நாளையில் ஒரு நாள் நகரசோதனைக்குத் தனியே கோவிலுக்கு வந்து பார்க்கு மிடத்தில் கோயிற்பூஜை நைவேத்தியம் திருவிளக்கு இவைகள் பூச்சியமாய் நடந்தவயணமெல்லாம் பார்த்துக்கொண்டு, அவர்கள் அரமனைபோய்ச் சேர்ந்தார்கள். மறு நாள் உதயத்தில் ஸ்தலத்தார் பரிஜனங்கள் சகலத்திரானையும் வரவழைத்து நாம், கோவிலுக்குச் சர்வமானியமாக நாற்பத்தினாயிரம் பொன்சிமையும் விட்டிருக்க, இப்படிக் கோவிற்காரியம் தாட்சிவரவேண்டிய தென்? என்பதாய் கிரம்பவும் கோபம் பண்ணி, ஸ்தலத்தார் மாரிபத்திலிருந்த கிராமங்களைச் சர்க்காரிலே கட்டிக்கொண்டு ஸ்தலத்தார் கிராமாந்தரங்களிலே யொத்திவைத்திருந்த ஒத்திப்பட்டையங்கள் எல்லாம் வாங்கி பரிகரித்துப்போட்டு, ஏழு கோவில் பூஜைக்கும் நாற்பத்தினாயிரம் பொன்னும் அரமனைப்பொக்கிஷத்திலே இருந்து கொடுத்துக் கோவில் நித்தியப்படி, பூஜை, ஆட்டை விசேஷம், மாதவிசேஷம், திருவிழா உற்சவாதிகளும், சுவாமி ஆண்டவன் அழகர் சித்திரைத்திருவிழாச் சப்பரமும் நடப்பிவித்துக்கொடுத்து, ஸ்தலத்தார் கோவிலுக்கும் முன் திருமலைநாயக்கர் நாளையில் விட்டுக்கொடுத்தபடிக்கு நிர்வாகக்கிராமம், அர்ச்சினுபாக கிராமம், அறைக்கட்டளைக்கிராமம் (இவைகளைச்) சர்வமானியமாக விட்டுக் கொடுத்து விமரிசையாக நடப்பிவித்து வந்தார்கள்."

"அவர்களும் சய-ஹு ராஜ்ஜியம் ஆண்டு, விரோதிகிருதுஹு மாசிமீ சிவராத்திரிதினத்தில் தெய்வீகமானார். விரோதிகிருதுஹு மாசிமீ முதல் சித்தார்த்திஹு வைகாசிமீ வரைக்கும் ஹு கூ-க்கு விசயரெங்க சொக்கநாத நாயக்கர் பெண்சாதி மீனுக்ஷியம்மாள் பட்டங்கட்டிக்கொண்டு அவளுடனே கூடப்பிறந்த வெங்கிட்ட பெருமாள் நாயக்கர் ராஜ்ஜியம் ஆண்டார்கள்."

(தொடரும்.)

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 FEB 1907
MADRAS



கடவுள்துணை.

# செந்தமிழ்.

தொகுதி-ரு] பராபவஹு மார்கழிமீ [பகுதி-உ.

## புதுவைச் சேதிராயன்.

புதுவை நகர்க்கு அதிபனுன சேதிராயன் என்பான், கம்பர்
ஏரெழுபதுபாடி அரங்கேற்றும்போது, சபையிலிருந்து கேட்ட
வெண்ணெச்சடையன் முதலிய வேளாளச் செல்வருள்ளே ஒருவன்.
அந்நூல் அரங்கேறி வருங்கால், இச்சேதிராயனை நாகமொன்று கடி
க்க, இவன் அச்செய்தியை அவைக்கறிவியாமலே யிருந்து, ஏரெழு
பது கேட்டபடியே விஷந்தலைக்கேறிவீழ, அப்போதுதான், கம்பர்
"ஆழியான்பள்ளியணையே". "மங்கையாரு" என்னும் பிரசித்த
வெண்பாக்கள்பாடித் தம்தெய்வசக்தியால் அவ்விஷத்தை யிறக்கிச்
சேதிராயனை உயிர்ப்பித்தனர். இவற்றை, மேற்குறித்த வெண்பா
க்களின் தலைப்பில் "கம்பர், ஏரெழுபதுபாடி அரங்கேற்றும் போது
புதுவைச்சேதிராயனை விடந்தீண்ட, தீர்த்தவை" என்னுங் குறிப்புத்
தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுதலாலும்,

"அழுவதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண் டதும்மறைத்தே
ரெழுபதுங் கொண்டு புகழ்க்கம்ப வாண னெழுப்பவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட தாற்றொண்டை மண்டலமே
(தொண்டைமண்டல சதகம்)

"குணங்கொள்சடையன் புதுச்சேரிக் கொடையன்சேதி ராயன்முதற்
கணங்கொள்பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் களிகூர
வினங்கும்பரிசி லீந்துபுவி யேழும்புகழே ரெழுபதெனும்
மணங்கொள்பெருங்காப் பியப்பனுவல் வளஞ்சேர் சோழமண்ட
(சோழமண்டல சதகம்)

"பாவலர்தாம்—வரொழுப தோதியாங் கேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை" (திருக்கைவழக்கம்)

என்னும் பாடல்களாலும் நன்கறியலாம்.

இனி, இப்புதுவைச்சேதிராயன் என்பவன் யாவன்? என் நண்பர் ஸ்ரீமத்-பின்னத்தூர் - நாராயணசாமி ஐயரவர்கள், "செந்தமிழ்" நான்காந்தொகுதி ஐந்தாம்பகுதியிலே, "வெண்ணையூர்ச்சடையபிள்ளையென்கிற புதுவைச்சேதிராயர் கல்வெட்டுக்கள்" என்னுந் தலைப்பின் கீழ்ச் சிலஅரும்பாடல்கொண்ட சாஸனங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஐயரவர்கள்கருத்து, சடையனுஞ் சேதிராயனும் ஒருவரே யென்பதை, அவர்களிட்ட தலைப்பெயரே விளக்கும். அவ்வாறு கொண்டதற்கு, அவர்கள் வெளியிட்ட சாஸனங்களுள் "தேமாவயங்கு...... சேதிபர்கோன், மாமால் புதுவைச்சடையன்" என்னுந் தொடரே காரணமாதல் வேண்டும். ஏனெனில் அக்கொள்கையை ஆதரிக்கும் வேறுதொடர் அச்சாஸனங்களுள் காணப்படவில்லை. ஐயரவர்கள் கருத்துப்படி, அவ்விருவரும் ஒருவரே என்பது உண்மையானால், மேலே காட்டியவாறு, "குணங்கொள் சடையன் புதுச்சேரிக்கொடையன் சேதிராயன் முதற்கணங்கொள் பெரியோர் பலர் கூடி" எனவும் பிறவாறும், சோழமண்டல சதகமுடையார், சடையனின் வேறாக வைத்துப் புதுவைச்சேதிராயனைக்கூறியது தவறாம். ஆனால், ஐயரவர்கள் கூற்றும் சதகமுடையார் கூற்றும் மாறுபடுவதுபோற்றோன்றினும் உண்மையில்அவ்விருவர் கொள்கையும் தவறாகக்கொள்ளப்படா. என்னை?.சேதிநாடென்பது சோழதொண்டை மண்டலங்கட்கு இடைப்பட்ட பிரதேசமாம். இதுபற்றி அது 'நடுநாடு' எனவும் வழங்கும். சோழநாட்டு வெண்ணைநல்லூர்க் குரிய * சடையன் நடுநாட்டிலுங் காணிவளம் பெற்றவனாகலின், அவன் 'சேதிபர்கோன் மாமால் புதுவைச்சடையன்" எனச்சாஸனத்து அடுக்கப்பட்டான். அதுபற்றி, 'வெண்ணையூர்ச் சடையபிள்ளை யென்கிற புதுவைச்சேதிராயர்" என ஸ்ரீமத்-நாராயணசாமி ஐயரவர்கள் கூறியது அம்மட்டிற் பொருத்தமுடையதே. ஆயின், சடையனின்வேறாகப் புதுவைச்சேதிராயனை எண்ணிய சோழமண்டலசதகமுடையார் கூற்று இதனால் பாதிக்கப்படாதோவெனின், அடியிற் காட்டப்படும் பாடல் இதற்குத் தக்க விடையளிக்குமென்று நம்புகிறேன்.

"பழுத்துடைந்தகனி நெக்கு நெக்குருகு
சாறு வீழவடி சேறெழும்
பலபெருஞ் சுளையை யமுதமென்றுவெயில்
படவொணுதென மறைப்பபோல்
பொழிற்புறஞ்சொறியு முகிலினந்தழுவு
புதுவை வாழ்சடைய னுதவுசேய்
பூதலம்பரவு சேதிபன்றனது
பொன்னி நாடனைய பூவையாள்
விழித்தனந்தலொ டெழுந்திருந்ததுவ
மெய்த்துவட்சியு மகிழ்ச்சியு
மென்மருங்கினி லெடுத்துடுத்ததுவும்
மேகலைத்தலை யணைத்ததும்
வழுத்திநின்றுதிரு நீறுதந்துவிடை
தந்த பார்வையை மறப்பினும்
வாசலின்படி பிடித்துநின்றநிலை
ம[illegible]ம றப்பதிலை காணுமே"*

இப்பாட்டில், "புதுவைவாழ் சடைய னுதவுசேய் பூதலம்பரவு சேதிபன்றனது பொன்னிநாடு" என்னுந் தொடரால், சடையனின் வேறாகச் சேதிபன் ஒருவனுண்டென்பதும், அச்சேதிபனும் முன்னவனுக்கு மகனாதல் வேண்டுமென்பதும் தெளிவாதல் காண்க. ஸ்ரீமத்-நாராயணசாமி ஐயரவர்கள் காட்டிய சாஸனப்பாடல்களாலும் இவ்விஷயம் வற்புறுத்தப்படுவதை நாம் காணலாம். அப்பாடல்களில்,

† "தேமா வயங்குசெய் யா... ..மபாற்கடற் சேதிபர்கோன்
மாமால் புதுவைச் சடையன் னனென் மங்கை

* இது, நடுநாட்டுள்ள திருவெண்ணெய் நல்லூரன்றெனவும், சோழநாட்டு மாயூரத்துக்கு மேல் பக்கத்திருந்த தெனவும், இவ்வுண்மையை வற்புறுத்த லகாரணங்களுண்டெனவுங் கேள்வியால் அறியப்படுகின்றது. தொண்டை மண்டல சதகத்தால், "இவ்வெண்ணைச் சடையற்குத் தொண்டைநாட்டிலுங்காணிவளமிருந்த தென்பது வெளியாம்.

* சோழமண்டலசதகம் (மேற்கோள்;) தனிப்பாடற்றிரட்டு(ஈசுவரன் பதிப்பு) பக்கம் ௯௮.
† இப்பாடல் சிதைந்துள்ளது.

ஆமா மனையந்த வாயிழை செந்த...தாசை யெல்லாம்
போமாறு கண்டுவிட் டாளென்று கூறுமப் பூந்தொடிக்கே.”

“மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவிரியே—பொய்கழுவும்
(போர்) வேற் சடையன் புதுவையா னில்லறத்தை
யார்போற்ற வல்லா ரறிந்து”

என்னும் செய்யுளிரண்டும் சடையனையும்,

“காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலய
முள்ளத் தகும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து”

“பேரோசைப் பிள்ளைப் பெருமாளைச் சேதிபனைக்
காரோசைக் கையானைக் கண்டீரோ—பாரோர்
விடுங்கோள் கொடுங்கோ (ள்) விழிமருள்பூண் டன்ன
மிடுங்கோள் கொடுங்கே...

என்னும் வெண்பாக்கள் அச்சடையன்மகனையும் பற்றிவந்தன எனத் துணியப்படும். ஏனெனில், முதலிற் குறித்த பாடலிரண்டிலும் சடையனைப்பற்றித் தெளிவாகக் கூறப்பட்டிருக்க, பிற்காட்டியவற்றில் அவ்வாறு கூறப்படாததோடு, “பிள்ளைப்பெருமாள் பிறந்து” “பிள்ளைப்பெருமாளைச்சேதிபனை” என, அப்பிற் பாடல்களில், சடையற்கு மகன் சேதிபன் என்பது குறிப்பிக்கப்பட்டிருத்தல் நோக்குவார்க்குத் தெளிவா மன்றோ?

இவற்றால், சேதிபன் அல்லது சேதிராயன் என்பவன் வெண்ணைச் சடையற்கு மகனும் வள்ளலாயும் விளங்கினவனென்றும், அவனே - கம்பர் ஏரெழுபது அரங்கேற்றும்போது விடந் தீண்டப்பட்டு, அப்புலவர் பெருமானால் அது நீக்கப்பெற்றவனென்றும், அவன் தந்தையாகிய சடையற்கு வழங்கிய “புதுவையர்கோன்” “சேதிபர்கோன்” என்னும் விசேடணங்கள் அவன்றனக்கும் முறைப்படி எய்தினவென்றும், அவனுக்குப் “பிள்ளைப்பெருமாள்” என்பதும் பெயரென்றும், ஆகவே, ஸ்ரீமத்-நாராயணசாமிஐயரவர்கள் காட்டிய சாஸனம் வெண்ணைச்சடையனை மட்டுமன்று; புதுவைச்சேதிராயன் என்னும் பெயர்வழக்கை மிகவுடைய அச்சடையன் மகனையும் பற்றியதென்றும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

பத்திராசிரியர்.

# பாரதம்பாடிய பெருந்தேவனார்.

கடைச்சங்கப்புலவரென்று புகழ்பெற்ற பாரதம்பாடிய பெருந்தேவனார் தம் உத்தியோக பருவத்து முதலில்,

“வண்மையாற் கல்வியான் மாபலத்தா லாள்வினையால்
உண்மையாற் பாரா ளுரிமையாற்—றிண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோ
டியார்வேந்த ரேற்பா ரெதிர்”

என்றோரரசனைக்குறிக்கிறார். இவ்வரசனிவனை வெகுமானித்து வந்தவனென்றும், அதற்காக அவனைப்புகழ்ந்து இவர்பாடினார் என்றும் ஊகிக்கப்படுகிறது. ஆயின் இவ்வேந்தன் இன்னான் என்று விளங்காவரை இப்பாட்டு ஒருவகையாலும் உபயோகப்படாது. இவன் யாவனென்பது சிலாசாசனங்களாலும், நந்திக்கலம்பகத்தாலும் ஏற்படுகிறபடியால் இப்புலவர்காலம் நிர்ணயிக்கக் கூடியதாயிருக்கிறது. அதை அடியில் ஒருவாறு நிச்சயிக்க முயலுவோம்.

நந்திக்கலம்பகத்தில் பாடப்பெற்றவரசன் நந்திவர்ம்மனென்றும் அவன் பல்லவர் வம்சத்தானென்றும்,

மல்லைவேந்தன் மயிலைகாவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி, (பா-1)

என்றும்,

பல்லவர் கோனந்தி, (பா-15)

என்றும்,

புகட்பல்லவ
னமரர் கோமா னடுபோர் நந்தி, (பா-23)

என்றும்,

பைந்தார்நந்திப் பல்லவர் கோன் (பா-35)

என்றும் பற்பல விடங்களில் கூறியிருப்பதினா லறியலாம். இவன் அவனிநாராயணன், விடேல் விடுகு, குவலயமார்த் தாண்டன், மானோதயன், தேசபண்டாரி, வரதுங்கன், தியாகி, நந்திச்சீராமன், என்னும் பற்பல மறுபெயர்கள் பூண்டவன். இவ்வரசன், இக்கலம்பகத்தின்படி, குருக்கோட்டைவென்றதாயும், தெள்ளாற்றில் பகைவரைத்துரத்தி யடித்ததாயும், பழையாற்றுச்சண்டை வென்ற

தாயும் புகழப்பட்டுள்ளான். அன்றியும் இவ்வரசனுக்கும் இவன் தம்பியர்க்கும் விரோதமிருந்திருக்கவேண்டு மென்றும், இத்தம்பியர்க்குத் துணையாய்த் தமிழ்நாட்டுச்செம்பியர், தென்னர், சேரரிம்மூவரும் கூடியிருந்திருக்கவேண்டுமென்றும்,

> தம்பியரெண்ணமெல்லாம் பழுதாக வென்ற
> தலைமான வீரத்தவன்
> செம்பியர் தென்னர் சேரரெதிர்வந்துமாயச்
> செருவென்ற பாரில் (பா-81)

என்பதினாலும்,

> தங்கோல்வளைத்ததிகழ் சேரர்சோழர்தமிழ்
> மன்னர்நின்றநிலமேல்
> வெங்கோனிமிர்த்தவளையுஞ்சிவிர்க்கவிற
> னந்திமேன்மொழிவையே. (பா-4[illegible])

என்பதினாலும் விளங்குகின்றது.

இந்நந்திவர்மன் சோ—டு, கொங்கு வேங்கடம், தொண்டை முதலிய நாட்டிற்பதியென்று இக்கலம்பகம் கூறுகின்றது. அன்றியுமிவ்வரசன் தமிழ்ப்பாஷையில் அபிருசியுடையவ னென்னப்பட்டுள்ளான். இவ்வரசன் இராசதானி காஞ்சிபுரம். இதுவன்றி மயிலையும் மல்லை (மைலாப்பூர், மாபலிபுரம்) யும் இவன் இராசதானிகளென்று கூறப்பட்டுள்ளன. இவ்வரசன் பெயரால் ஒரு புலவர் ஒரு கோவை பாடி வெகு பரிசளிக்கப்பெற்றதாய்,

நந்தி.

> தடங்கைப்பூ பாலன்மேற் றண்கோவை பாடி
> யடங்கப்பூபாலரானார். (பா-91)

என்பதினால் தெரியவருகிறது. இக்கலம்பகத்து விஷய மிவ்வாறிருக்க.

சிலாசாஸனங்களில் நந்திவர்ம்மன், நந்திவர்ம்ம மகாராஜா, கோவிசைய நந்திவிக்கிரமவர்ம்மன், நந்திப்போத்தரசர், தெள்ளாற்றெறிந்த நந்திப்போத்தரசர், எனப்பலவாறாய்ப் புகழப்படும் பல்லவசக்கரவர்த்தியொருவனுளான். கலம்பகத்திற் குறிக்கப்பட்டுள்ள அவனி நாரா



யணனென்னும் பெயருமிவனுக்குள்ள தென்பது, இவன் மகன் நிருபதுங்கவர்ம்மன் காலத்ததும் அதற்கும் பிற்பட்டசோழர்கள் காலத்ததுமாகிய சாஸனங்களில், இவன் காலம் வரை காவதிப்பாக்கமென்னு மட்டுமே பெயர் கூவப்பட்டிருந்த காவேரிப்பாக்கமானது, அவனிநாராயணச் சதுர்வேதிமங்கலமாகிய காவதிப்பாக்கமெனப்பெயரடைந்ததால், ஏற்படும். திருச்சிராப்பள்ளிக்கடுத்த பற்பல விடங்களிற்காணப்படுஞ் சாசனங்களில் விடேல்விடுகுசதுர்வ்வேதி மங்கலமென்று ஓர் ஊரைக்குறித்திருக்கிறது. நார்த்தாமலையின் சாஸனத்திலொன்று, நிருபதுங்கவர்ம்மனாட்சியின் ஏழாம் வருஷத்தைச் சேர்ந்தது. அதில் விடேல்விடுகு முத்தரையன் மகனாகிய சாத்தன் பழியிலி என்பவன் அவ்வூரின்மலையி லொரு சிவக்கிரகம் கல்லுவித்தான் என்று கூறுகிறது. சாத்தப்பழியிலி நிருபதுங்கன் காலத்தானாயின் இவன் றந்தை, நிருபதுங்கன்தந்தை நந்திவர்ம்மன் காலத்தானாதல் வேண்டும். நந்திக்கு விடேல்விடுகென்னும் பெயரிருந்ததென்று, இச்சிற்றரசன் பெயரால் விளங்குகிறது. (நான் எழுதியிருக்கும் பல வியாசங்களிலும், சிற்றரசர், சா[illegible] சக்கரவர்த்திகள் பெயரைத்தரித்துக்கொள்ளல் சகஜமென்று கூறியுள்ளேன். அதற்கு இதுவுமோர் சான்று) இவ்வரசன் தெள்ளாற்றில் போர் வென்றவ னென்பது கலம்பகத்துக்கும், சாஸனங்களுக்கும் பொதுவான விஷயமாகையால் இவ்விரண்டும் ஒன்றையொன்று பலப்படுத்துகின்றன. ஆதலால், இவ்வரசனையே "தெள்ளாற்றில் வென்றா" னென்று பெருந்தேவனார் குறித்திருக்கவேண்டும். அப்படியாயின்,

இவ்வரசன் கால மின்னதென்றேற்படவேண்டும். இவ்வரசன் தந்தையாகிய தந்திவர்ம்ம னென்பான் இரட்டவம்சத்தானாகிய மூன்றாம் கோவிந்தனென்பவனுக்குப் பகைவனாயிருந்து (கி. பி. 804) பிறகு இவ்வரசன் பேரத்தியாகிய (அமோகவர்ஷன் மகள்) சங்கரதேவியைத் தன் மகன் நந்திக்கு மணம் புரிவித்து வைத்தானென்பது சரித்திரசித்தம். ஆகவே, தந்திமகன் நந்தி கி. பி. 804 க்குப் பிற்பட்டவன்; முதல் அமோகவர்ஷன் காலமாகிய கி. பி. 814 - 876 ல் இருந்திருக்கவேண்டும். இவ்வரசன் 62-வருஷ மரசாண்டவன். ஆதலால் இவன்கீழ் வாணவம்சத்தார் மூன்று தலைமுறை யாண்

டார்கள். இவ்வரசன் காலத்தார், கங்கவரசனாகிய முதல் பிருதிவி பதியும், பாண்டியன்வரகுணனுமாவார். இவ்வரசன் மகன் நிருபதுங்கனையெதிர்த்து வந்தபாண்டியன் வரகுணன்மேற்படையெடுத்துத்திருப்புறம் பியத்திற் பொருது உயிர்மாண்டவன் மேற்கூறிய பிருதிவி பதியே. இக்குறித்த விஷயங்களைக் கொண்டு இவ்வரசன் உத்தேசம் கி. பி. 815 முதல் 870-வரை யாண்டவனென்று கொள்ளலாம். இவனுடனெதிர்த்த மன்னனாட் பாண்டியன் வரகுணனொருவனென்று முன்னரே சொன்னோம். சோழர்களில் முதலாதித்தனாகவேண்டும்

மேற்கூறியவற்றால் பாரதம் பாடிய பெருந்தேவனார் 9 ம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியைச் சேர்ந்தவரென்னலாம்.

து. அ. கோபிநாதராவ்.

---

# இந்து சாகபட்சகனாய் இருப்பதேன்?

(தொடர்ச்சி.)

:o:

இந்துப்பிள்ளைகளும் பெண்களும் பாடசாலைக்குப்போய் முதற் பாடம் தொடங்கும்பொழுது உயர்ந்த நீதிமுறைகள் கற்கின்றார்கள்; அருள் வற்புறும் நூற்பாடங்கள் கற்கின்றார்கள். அவர்கள் வயது முதிர முதிர எல்லாப் பிராணிகளிடத்தும் கருணைபாராட்டுகின்றார்கள். (ஸவ-ஹ-டு-தெஷ-ஷிடு-தாஹவ) "பகுத்தறிவில்லாத ஜந்துக்களிடம் அன்புடையனாகு. மனிதனுக்கியற்கையுணவு மாமிசமல்லாததால், உணவின் பொருட்டு இவைகளைக்கொல்லாதே" என்னும் நீதிமுறை அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றது. "தாமாய்ப் பூமியில் முளைத்து வளரும் செடிகொடி முதலிய தாதுவர்க்கங்களினின்றும் போதுமான சத்தாக்கிடைக்கும்பொழுது தனது வயிற்றுக்குழியை நிரப்பி, நாவிற்கு அற்ப உருசியுண்டாக்குவதற்காகப் பிராணிகளைக் கொல்லும் மகாபாதகம் யார்செய்வார்?". என்று ஸம்ஸ்கிருத முதற் பாடப்புத்தகத்திற் படித்திருக்கிறேன். உண்ணப்படும் பிராணியையும் உண்ணுபவனையுமொப்பிட்டுப்பார். உண்பவனுக்குண்



டாகும் சுகம் நொடிப்பொழுதுள்ளது. உண்ணப்படும் பிராணிக்கோ அதனது வாணாண்முழுதும் அநுபவிக்குஞ் சுகமில்லாதுபோகின்றது.

"நமது வயிறுநிரப்பச் சாகபட்சணமே போதுமானதாயிருக்க ("தொக்க விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட, புல்லறிவாளர் வயிறு" என்றபடி,) அவ்வயிற்றினுள் சிறந்தபிராணிகளையிட்டு அடைக்கின்றோமே" என ஜைன ஞானியார் இக்கருத்தைவைத்தமைத்தே சொல்லியிருக்கின்றார். (மேலேகண்ட நாலடியார் வாக்கியத்தை யிங்குச் சேர்த்துக்கொள்க.)

உணவிற்காகவேனும், வேடிக்கைக்காகவேனும் பிராணிவதை செய்வது எப்படிப்பாவமென்று மேனாட்டார்களுக்குக் கொஞ்சமேனுந் தெரியவில்லை. இதையறிவதற்கு அவர்களது மதம் ஓர் பெரிய இடறுகட்டையாக நிற்கின்றது. இரியக்கு ஜந்துக்களுக்கு ஆத்துமாவில்லையென்றும், மனதில்லையென்றும், உணர்ச்சியில்லையென்றும், மனிதனது உணவின்பொருட்டு அவைகள் படைக்கப்பட்டனவென்றும். சர்வ ஜீவ்தயாபரக்கடவுள் தமதாகாரத்தின்பொருட்டு உண்டு பண்ணியவைகளைத் தாந்தின்றுவிட்டுக் கைம்மாறாக அவருக்கு முகமன் கூறுவதே தமது கடமையென்றும் அவர்கள் மதம் அவர்களுக்குணர்த்துகின்றது. இந்தக்காரணங்கொண்டே ஈசன் தான்படைத்தபிராணிகளிற் சிலவற்றை மனிதன் கொன்றுதின்றாலல்லது அவன் செய்யுந் தோத்திரங்களுக்கு அவ்வீசன் செவிசாயான்போலுமென வெண்ணிக் கிறிஸ்தவநாடுகளில் தேவாராதனகாலங்களிலும், கிறிஸ்மஸ்ப்பண்டிகைகாலங்களிலும், பல்லாயிரம் பிராணிகளை வதை செய்கின்றார்கள். சாய்கறியுணவைக்குறித்து நான் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த ஒரு சமயம் அங்கிருந்த லண்டன் நகர்ப்பெரிய பாதிரியாரொருவர் என் நண்பரை நோக்கி "இக்கோட்பாடுகளுக்குச் செவிசாயாதேயும்; பைசாசங்களின் கோட்பாடுகளிவையென நமது வேதங் கூறுகின்றது" என்றார்.

அவர் புது ஏற்பாட்டிலுள்ள ஓரிடத்தைச்சுட்டி அப்படிச் சொன்னார். அஃதாவது:—

“ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியிற் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்....விசுவாசிகளும் சத்யத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப்பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவர்படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது தேவவசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.”

(I. தீமோத்தேயு, iv; 1, 3, 4, 5)

இவ்வார்த்தைகளைத் தேவவாக்கென்று நம்பும் ஜனங்கள், உணவின்பொருட்டு ஜீவவதை செய்வது பாவமென எப்படி யெண்ணுவார்கள்? இந்த வார்த்தையை நம்பி விசுவசிக்கும் கிறிஸ்தவர்கள், தின்பதற்காகப் பிராணிகளைக்கொல்வதும் பாவமென எண்ணுவது எப்படியரிதோ அப்படியே, சர்வகாருணியமூர்த்தி மனிதன் தின்பதற்காகக் கீழினப்பிராணிகளைப் படைத்தாரென்று இந்துக்கள்நம்புவதும்அரி[illegible] மனிதனுணவிற்காகப் பிராணிகள் படைக்கப்பட்டனவென்றவெண்ணம் முதலில் செம்படவர்களுக்குண்டாகியது. சிம்மாஸநத்துப் பரமண்டலத்தில், ஏதோ ஓரிடத்துட்கார்ந்துகொண்டு, மனிதனுண்பதற்காகப் பிராணிகளையுண்டுபண்ணி அவைகளை யுண்ணும்படி அவனுக்குக் கட்டளையிட்டுக்கொண்டுமிருக்குந் தேவனொருவன் இவ்வுலகை முதற்காரண மெதுவுமின்றிப் படைத்தாரென இந்துக்களுக்கு அவர்கள் மதம் போதியாததால், அந்நற்கோட்பாட்டைக் கேட்க அவர்களுக்குத் தலை நடுக்கமுண்டாகிறது.

வேதாந்தமதம், புத்தமதம், சைனமதமுதலிய பன்முகமுடைய இந்துமதம், மனிதன் அற்பப்பிராணியாயிருந்து அதிலிருந்தும் பெருகினானென்னும் நியாயத்தை அடிப்படியாகவுள்ளது. ஒருவஸ்துவே கல், மண், புற்பூண்டு, பறவை, விலங்கு முதலிய பலவகைத் தோற்றங்கொண்டு விளங்குகின்றதென்றும், எல்லாம் ஆவிர்ப்பாவசக்தியென்றும், ஒரு பெரும் பந்தத்தால் எல்லாம் ஒன்றோடொன்று பிணிக்கப்பட்டுள்ளனவென்றும், ஒவ்வொரு ஜீவனிலும் பரமாணுப்பிண்டம் முதல் மனிதன் வரையில் எல்லாமொன்றோ



டொன்று அளவில் வேற்றுமைப்படுவனவன்றிப் பொருளில் வேற்றுமையில்லையென்றும் அம்மதம் அவர்களுக்குணர்த்துகின்றது. கீழினப்பிராணிகளுக்கு ஆத்துமாவில்லை மனமில்லையென்னுங் கொள்கையை அது அடியோடு மறுக்கின்றது. ஆத்துமாவும் மனமும் ஒரேகாலத்திலுண்டென்றும் புகட்டுகின்றது. எங்கு ஜீவன் உளதோ அங்கு பிரபுத்தியுண்டென்றும், ஆனால் வெளித்தோற்றத்தின் அளவுமட்டும்வேறுபடுமென்றுஞ் சொல்லுகின்றது. அத்தோற்றம் உலோகவர்க்கங்களில் கேவலம், அற்பம். தாதுவர்க்கத்தில் அதைவிட அதிகம். அதைவிட ஜீவவர்க்கத்திலதிகம். பரமசூட்சுமமான புழுப்பூச்சிக்கும் மனமுண்டு. அதற்கும் வலிதெரிகிறது. அவ்வுணர்ச்சிக்குத்தப்ப வழி தேடுகின்றது. முதிர்ந்[illegible]ற்கால சாஸ்திரிகள் அப்படியில்லையென மறுத்தனரில்லை. ‘ல்[illegible]ண்டு’ (Le Conte) என்னும் புலவர் இக்கருத்தைத் தமது பி[illegible]கங்கள் சிலவற்றில் மிகவற்புறுத்திச் சொல்லியிருக்கின்றார்.

இதற்குமேலுள்ள ஜீவவர்க்கப்படியை நாம் பரிசோதிக்கும்பொழுது, மிகப்பருத்து வளர்ந்த உடம்புகளில் இ[illegible]ச்சியும், அறிவுமிருப்பது நன்றாகத் தெரிகிறது. போகப்போகத் தனித்தனித்தோற்றமுஞ் சுழலுமுள்ள மனித சரீரத்தில் எல்லாவற்றிற்கு மேலாகத், தெரிகின்றது. இப்பிராணிகளொவ்வொன்றிற்கும் தனித்தனியே ஜீவனுண்டு: இருப்புண்டு: “நான்” என்னு மறிவுண்டு: இன்பதுன்பவுணர்ச்சியுண்டு: சாவைக்கண்டஞ்சும்: உயிர்வாழமன்றாடும்; இவைகளொவ்வொன்றிலுமுள்ள ஜீவவித்து, ஆவிர்ப்பாவப் பலபடிகளின் வழியே சிறுகச்சிறுகச்சென்று கடைசியாய், மனிதவுருவெடுக்கின்றது. உயிர் நமக்கெப்படி யருமையோ அப்படியே திரியக்கு ஜந்துக்களுக்கும் அருமையென ஆரியர்களது சுருதி முதலியன கூறுகின்றன. நமக்குச்சாக எப்படி மனமில்லையோ, அப்படியே அவைகளுஞ் சாவைக்கண்டு நடுங்கிச் சுருங்குகின்றன. “இன்பம் வேண்டி எந்தப்பிராணியையுங் கொல்லாதே; பிரகிருதியிலுள்ள எல்லாவற்றிலு மொற்றுமையான உயிருள்ளது; எதுவானாலும் அதற்கனுகூலியாயிரு’ என வேதமுறையிடுகின்றது. அதாவது அநாதியான வேதம் மாஹிம்ஸ்யாத்ஸர்வபூதாநி என்றோலமிடுகின்

றது. அதாவது உண்மையென்றேனும், வேடிக்கை கருதியேனும் எந்தப்பிராணியையுங் கொல்லாதே." என்பதே.

இராமனது சரிதையாகிய இராமாயணமென்னும் மஹாகாவியத்தில், மிருகாதிகளையும் நம்முடன் பிறந்தவர்கள் போலப் பாவிக்கவேண்டுமெனச் சொல்லியிருக்கின்றது. அவைகளால் நாமெய்தக்கூடிய பயன்களும், கவிசாதுரியமாகவும் வருணித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இரத்தமாமிச சரீரியாய்ப்பூமியில் ராமனென்னும் மனிதாவதாரமெடுத்துவந்த ஸ்ரீபகவான் இலங்கைக்கரசனை அரக்கன் [illegible]ந்துச்சென்ற தனதுயிர்க்கினிய சீதாபிராட்டியை மீட்க, அவ்வரக்கமன்னனுடன் போர்செய்தார். நானாஜாதி மிருகங்களே அவருக்குப் பெரும்படையாயின. ஆவிர்ப்பாவப்படியில் மற்றவைகளினுமுயர்ந்து மனிதனுக்கு அடுத்த கீழ்ப்படியிலுள்ள வானரமான அநுமானே அவரது படைத்தலைவன். (ஜாம்பவான் ஆகிய) கரடியே அவருக்குப் பிரதம மந்திரி. மற்ற விலங்குகளே படையாட்களெனவுஞ் சொல்லியிருக்கிறது. மகாநேர்த்தியாக எழுதப்பட்டுள்ள அக்கதையை முழுமுதல் நுனிவரையிற்படிக்குமெவனும் எந்தப்பிராணியினிடமும் அன்பிலாதிரான்; கொடுமையாயிரான்: என்றால், அவைகளைக் கொல்லானெனச் சொல்லவும் வேண்டுமோ?

ஆரியர்களுக்குள் காய்கறியுண்ணும் பழக்கமுண்டுபண்ணியது புத்தரென்று மேனாட்டோர் எண்ணியிருப்பது தவறு; அது முற்றுந்தவறு. அக்காலத்துள்ள ஆரிய இருடிகளிற் சிலர்மட்டும் அநுஷ்டித்து வந்த கொல்லாவிரதத்தை ஜனங்களெல்லோரும் அநுஷ்டிக்கும்படியாய்ப் புத்தர் உபதேசித்தார். யாகாதிகிரியைகளிற் செய்து வந்த பிராணிவதையுமுதவாதெனவாதித்தார். மாமிசமுண்ண வேண்டுமென்ற எண்ணத்துடன் அப்புரோகிதர்கள் பிராணிவதஞ் செய்யவில்லை. அக்கிரியைகளாற் றேவர்களுக்குத் திருப்தியுண்டாக்கினால், அவர்களது அருளால், சுவர்க்காதிபத்திய முதலிய கிடைக்குமென்றும், சத்துருக்களை வெல்லலாமென்றும் எண்ணியிருந்தார்கள்.

பிழைப்புத் திண்டாட்டமாகும்பொழுது ஒரு பறவை மற்றொன்றைத்தின்பது போலவும், மாமிசபட்சணிகள் மற்றப்பிராணிகளைத்



தின்பது போலவும், ஒன்று மற்றொன்றைத் தின்னவேண்டுவது முறையென்றும், அதனால் நாம் புலாலுண்ணுவது முற்றுஞ்சரியென்றும் சிலர் சொல்லுகின்றார்கள். உலகியலைப்பார்க்கும் பொழுது, இந்நியாயஞ் சரியென்று சொல்லும்படி தோன்றுகின்றது; ஆனால் இந்த நியாயம் திரியக்கு ஜந்துக்களுக்குமட்டும் பொருந்தும். அந்த நியாயத்தை மிருக நியாயமென்றே சொல்லலாம். அவைகளினும் மேலோரான நமக்கு மேலான விதிகளிருக்கின்றன. மிருகபக்ஷிகளிடம் விளங்காதனவும் மனிதனிடமட்டுமே விளங்குவனவுமான நீதிவிதிகளும், ஆசாரவிதிகளுமிருக்கின்றன. இவ்விதிகளுண்டென நாமொப்புக்கொள்ளாமல் மறுப்போமானால் விலங்குத்தன்மைக்கு மேற்றன்மை ஒருபொழுதுமெய்தோம். ஜீவர்களெல்லாவற்றினும் மனிதன் மேலாய் நிற்பது, விலங்கு பறவைகளுக்குள்ள அதே குணங்கள் அவனிடம் அதிகமாயிருக்கின்றனவென்பதற்காகவல்ல. ஆனால், நீதி லட்சணத்தாலும், தெய்வத்தன்மையறியும் இலட்சணத்தாலும் அந்தஜெந்துக்களை யடக்கியாளுந்திறமையிருப்பதினாலேயாம். எவனிடம் நீதி லட்சணமில்லையோ, ஆத்தும லட்சணமில்லையோ, அவன் இழிந்த விலங்கினும் மேலானவனல்லன். மகா இழிந்த ஜந்துக்களுக்கும் கீழிழிந்து செல்லுந்திறமையும், ஆத்தும லட்சணமறியும்படியான மேற்பதவிக்கு உயர்ந்து செல்லும் வல்லமையும், மனிதனொருவனுக்குத்தானுண்டு. அவனது தேவாம்சத்தை அவன் தெளியவெளிக்காட்டலாம். உற்றுணர்வோமானால், சூரியன் ஒளி எல்லாநன்மையுமுருக்கொண்டு விளங்குவதுபோல் அவனிருக்கலாம். அதே மனிதன் தான் செல்லுமிடமெங்கும் நாசம், கொலை, கலகம், விலங்கியற்கொடுமை இவைகளுண்டாக்கலாம். அவனே உபகாரம், நன்மை, சாந்தம், அன்பு, அனுக்கிரகம் இவைகளுமுண்டாக்கலாம். அதேசக்தி விலங்கியல்கொண்டு செல்லும்பொழுது சங்காரஞ்செய்யும் பேய்க்குணமாகிறது. உத்தமகுணமும் அன்புங்கொண்டு செல்லும்பொழுது உலகரஞ்சினியாகிறது.

கசாப்புக்கடைக் கொலைக்காரர்களது மனநிலைத்தாழ்வை யோஜித்துப்பார். ஓயாது கொலைத்தொழிலைக் கையாளுவதால், அவர்களது நல்லுணர்ச்சிபோய் வரவரக் கன்னெஞ்சினராய்விடுகிறார்கள்.

ஆதரவற்ற பிராணிகளை எந்தக்கத்தியாற் கொல்லுகின்றார்களோ அதே கத்தியால், தம்மினத்தாராய மனிதர்களது நெஞ்சிற் பாய்ச்சக்கூசார்கள். சிகாகோவிலுள்ள கசாப்புக்கடைகளே பூமியிலுள்ள எல்லாவற்றினும் முதன்மையானவைகள். கொலைத்தொழிற் கென்றே பழகிய சண்டாளர்களாகையால் மாதந்தோறும் பல்லாயிரம் பிராணிகள் வதையுண்கின்றன. கொலையாளிகளிற் பெரும்பான்மையோர் கசாப்புக்கடைக்காரர்களாகவே யிருப்பார்கள். அவர்களது இந்த மனநிலைத்தாழ்விற்கும், அவர்கள் செய்யும் பழிபாவங்களுக்கும் யாரை நாம் குற்றஞ்சாட்டுவது? இறைச்சியுண்பவர்கள் அவ்வுணவினாலாகும் இப்பயனைச் சிறிதேனும் யோசிக்கிறார்களா? இவைகளைக்கேட்க அவர்களுக்கு அங்கங்குலைவதால் அவைகளைக் கேட்கவேணும், நினைக்கவேணும் அவர்களுக்குப்பிரியமில்லை. அக்காட்சிகளைக்காணவும், அவ்வார்த்தைகளைக்கேட்கவும், மனம் பொறாது கண்காதுகளைப் பொத்திக்கொள்ளுகின்றார்கள். உண்மையையாராயின் இறைச்சிதின்பவர்களே இப்பழி பாவங்களுக்கெல்லாம் உத்தரவாதிகள். அக்கொலையாளிகள் செய்யும் எல்லாத்தீச்செயல்களுக்குந் தின்பவர்களும் முக்கிய காரணமாகின்றார்கள். அவர்களது மனத்தாழ்விற்கு மிவர்களே காரணம். இறைச்சியுண்போரில்லையேற் கொலையாளிகளுமில்லை. ("தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின் யாரும், விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.") செந்நீர்க்கைப்புடைய கொலையாளியொருவனை, மெல்லியளொருத்திகண்டால் தலைநடுங்குவாள். ஆனாலும், அவன்கொலைபாதகத்திலும், இழிவிலுந் தனக்குமொரு பங்குண்டென்பதையும் அவள்நினைக்கவேண்டும். தன்னுணவிற்கென்று தன்கையாலொரு பிராணியை வதைப்பாளாயின் அவள்பழி சிறிதுகுறையும். எப்படியெனின், வேறொருவன் தன்பொருட்டுக் கொடியபழிகாரனாகாது அவள் தடுப்பள். கொலையாளிகள், பாவிகள், கொடியர்கள் என்ற வசைச்சொற்கள் எந்நாட்டிலுமுண்டு. இந்தியாவில், மேன்மக்களிருக்குமிடத்துக் கொலையாளிகள் தலைநீட்டக்கூடாது. ஒருவனைக் கொலைகாரன், சண்டாளன் என்றுசொல்லித் திட்டுவதைவிடப் பெருஞ்சாபம், அவனுக்கில்லை. கொலைகாரர்கள் பிராணிகளைக்கொல்வதிலேயே பழகிவருவதால் அவர்களது மனமுங்குணமும், மரத்துப்போயிருக்குமென்றெ



ண்ணியே அத்தொழிலுடையோர் ஜூரிகளாயிருக்க வொண்ணாதென், ஐக்கியநாட்டிற் சிலமாகாணங்களில் விதித்திருக்கின்றார்கள். சுவைமிக்க இறைச்சித்துண்டொன்று பந்தியிற்பரிமாறியிருக்கக் காணுமொருவன், கொலைச்சாலையிலிருந்து சமையற்சாலைக்கு இறைச்சிகொண்டுவரப்பட்ட விதத்தைச் சற்று மனதால் நினைப்பானேல், இறைச்சி தின்பவர்களுக்குக் கொஞ்சமாவதிரக்கமிருக்குமாயின், அவர்களில் மூன்றிலிரண்டு பகுதியார் அந்தநிமிஷமே அவ்வுணவைத்தள்ளிப்போடுவாரென்பதிலையமில்லை. எனக்குத்தெரிந்த அமெரிக்க நண்பரொருவர், சிகாகோ கசாப்புக்கடைச்சாலைகளை ஓர்முறை பார்த்து அங்குநடக்குங் கொலை, கொடுமை, பழி, பாதகங்களைக் கண்டு மனநடுங்கி யுருகி, அன்றுமுதல் இறைச்சியுணவை விட்டுவிட்டார். புலா[illegible]பவன் எவனும் அப்பழிபாவத்திற்குத் தானுத்தரவாதியில்லை யெனச்சொல்லமுடியாது. உலகோரது மனத்தாழ்விற்கும் மானத்தாழ்விற்குந் தானுமொருபங்காளியாகவே வேண்டும்.

இறைச்சி யுண்பவர்கள் மரக்கறியுணவைக் குறித்துப்பலவித ஆட்சேபஞ் சொல்லுகின்றார்கள். இறைச்சியுண்ணாத முறையில், பிராணிகள் பூமியெல்லாம் பல்கிப்பெருகி விடுமென்கிறார்கள். ஆடு, மாடு, பன்றி, கோழி முதலிய உண்ணப்படும் பிராணிகளைக்குறித்து என்னவாதநியாயஞ்சொல்லுகின்றார்களோ அதேவாதநியாயம் உண்ணப்படாதபிராணிகளாகிய குதிரை, கழுதை, நாய், பூனை, எலி முதலிய பிராணிகளைக் குறித்துஞ்சொல்லலாமே? ஆரியவர்த்தத்தில் ஆரியர்கள் பசுக்களைக்கொல்வதில்லை. அப்படியிருந்தும் அவைகள் அளவு மீறிப்பெருகவில்லை. ஆங்கிலேய அரசாட்சி இந்தியாவிற்கு வருவதற்குமுன் இந்தியாவில் கசாப்புக்கடைகளே கிடையா. இப்பொழுதும் சுதேச அரசாங்கத்திற்குட்பட்ட நாடுகளில் காட்டுவிலங்கும் பறவைகளையுங்கூடக் கொல்லக்கூடாதென்று கடுமையான சட்டங்கள் உண்டு. ஆனாலும், இந்நாடுகளில் காட்டுப்பிராணிகள் அளவிறந்து பெருகவில்லை. அவைகளால் ஜனங்களுக்கு இமிசையுமில்லை.

பூர்வம் சிகாகோவாசியாகிய "Barrows" என்னும் அமெரிக்கப்புலவர் ஒருவர் (அல்லது வைத்தியர்) சிகாகோவில் அறுமாடுகளாகக்கொழுக்கவளர்க்கப்படுமாடுகளைவிட, இளைத்து மெலிந்துள்ள சில

எருதுகளை வாரணாசிநகர்த்தெருக்களிற் கண்டதாகப் புதுஆர்ங்கிஸ் பிரசங்க மொன்றிற் சொன்னார். அவைகளைக்காண அவருக்குத் தண்ணியாய் மனமுருகியது. இப்படி அளைத்தீனிதின்று அல்லது போதுமான தீனியின்றி வாழும் பாடுகளிருப்பதைவிட அவைகளை உணவின்பொருட்டுக்கொல்வது நலமாகுமென்றார். அவரது ஜீவகாருண்ணியக் கோட்பாடு வியக்கத்தக்கதே. நாம், மீன்றின்னாமற்போனாற் கடலெல்லாம் சீக்கிரம் மீன்குவியலாய்விடுமெனவுஞ்சொன்னார். கடல் மீன்கள் குறையவேண்டுமென எண்ணபாடுபட்டு மீன்களை நாம் வாரிவாரித்தின்னினும், அவைகளது பிறப்பையும், இருப்பையும் சமப்படுத்திக்கொண்டுவர ஈசனாணையில்லாவிடின், நம்பாடெல்லாம் வீண்பாடாகும். ஆனால் இவ்வித விரதங்களும் நியாயங்களும் பேசுவது புலாலுண்ணும் பழக்கமுள்ளவர்களுக்கியல்பே. புலாலுண்ணாவிடின் மனிதன் பலமற்று, வேலைக்குத் தகுதியற்றுத், துணிவுந் தைரியமுமின்றி ஆகிவிடுவானென்பது வேறு சிலரது அபிப்பிராயம். இஃதோர் பெருமதிக்குறைவு. இந்தியப்படையில் சீக்கிய காலாட்படையிருப்பது நீங்களறிவீர்கள். இங்கிலீஷ்ப்படையினுள் அவர்களைவிட வீரமுள்ளோரில்லை; பலவான்களில்லை; சண்டைக்களத்திலொருபொழுதும் அவர்கள் புறங்காட்டுவதில்லை; கைச்சண்டையில் ஒரு சீக்கியன் இறைச்சிதின்போர் மூவருடன் எதிர்த்து நிற்பான்; ஆனால் இவ்வீரர்கள் இறைச்சியுண்பதில்லை. மீனுண்பதில்லை; மதுபானஞ்செய்வதில்லை; சுருட்டுப்பிடிப்பதில்லை; முற்றுஞ்சாகபட்சகர்கள். ஓட்டு என்னுந் தானியவுணவுண்பதால் கோடிக்கணக்கான ஸ்காட்டுமென்கள் நோயற்றுப் பலமுற்று, வீரமெய்திப் புத்திமான்களாகவும் இருக்கின்றார்கள். ஜர்மனியில, ஏழுமல்லர்களுக்குள் நடந்த பந்தயவோட்டத்தில் அவர்களில் சாகபட்சகனான ஒருவனே மற்றவர்களை வெல்லக்கூடுமெனக் கண்டுகொண்டார்கள். சாகபட்சணத்தால், பொறுமையும், மிதவுணவுமுண்டாகும். மூர்க்கத்தனம் படபடப்பு துடுக்கு இக்குணங்களை வீரமென்றும் பலமென்றும் ஜனங்கள் தாறுமாறாக எண்ணுகின்றார்கள். இம்மனிதர்கள், புலி, ஓநாய் இவைகள், குதிரை, எருமை அல்லது யானை, இம்மிருகங்களினும் வலியுள்ளவையென்கின்றார்கள். வீரமுள்ளதா என்றறிய மூர்க்கத்தனம் வழி யென்கிறார்கள். ஒரு குதிரையை



ஒரு புலி கொல்லக்கூடுமென்பதுண்மையே. ஒருவனது பலத்தையறிய மூர்க்கக்குணம் பிரதானமென்கிறார்கள். ஆனால், நெடுந்தூரம் ஒரு பெரும்பாரச்சுமையை யிழுத்துச்செல்லும் தசைவலி அப்புலிக்குண்டோ? ஒரு புலி யானையைக் கொல்லக்கூடும். ஆயிரம் பவுண்டு நிறையுள்ள ஒரு பீரங்கியைத் தூக்கும் வல்லமை அதற்குண்டோ? மூர்க்கத்தனம் ஒரு பகுதி. தசைவலி ஒரு பகுதி. இரண்டனுக்குமுள்ள வித்தியாசம் நாமறிய வேண்டும். வலியுண்டாவது தாதுவர்க்கத்தாலன்றி இரத்தமாமிசத்தாலன்று. தசைவலியுண்டாவது புலாலுண்பதனாலென்போமானால், மனிதர்கள் மாமிசபட்சணிகளது மாமிசத்தை விரும்பாது சாகபட்சணிகளது மாம்சத்தை ஏன் விரும்புகிறார்கள்? சாகபட்சண சத்துப்பாகமெல்லாம் மாமிசத்திற் சுருக்கி யடக்கிவைக்கப்பட்டிருக்கிறதெனப் புலாலுண்போர்கள் சொல்லுகிறார்கள். புலாலுண்பதற்குஇஃதோர் காரணமாயின், மாமிசபட்சணிகளான புலி, ஓநாய், கழுகு முதலிய விலங்கு பறவைகளின் மாமிசத்தையே அவர்கள் உண்ணவேண்டும்.

(இன்னும் வரும்.)

ம. ஜகதீச ஐயர்.

## நல்லொழுக்கம்.

(௫௧-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

ஆனால் ஒரு ஜாதியாருடைய ஒழுக்கமானது ஸ்திரீயினுடைய கல்வியறிவாலும் சீர்திருத்தத்தாலும் உயர்த்தப்படுமென்பது நிச்சயமாயிருக்க, அவள் இனிமையற்ற உலககாரியத்திலும் இராஜதந்திர காரியத்திலும் புருஷனோடு போட்டிபோடுவதால் ஏதேனும் பயனையடையக்கூடியதுண்டாவென்பது சந்தேகத்திலும் சந்தேகம். புருஷர்கள் ஸ்திரீகளுடைய வேலையைச்செய்யமாட்டாமைபோல ஸ்திரீகளும் புருஷர்களுக்கென்று இவ்வுலகத்தில் ஏற்பட்ட, வேலையைச் செய்யமுடியாது. ஸ்திரீகள் மற்றவேலைகளில் பிரவேசிக்கும்படி

*

அவர்களுக்குரிய குடும்பகிரககிருத்ய காரியத்தினின்றும் இழுக்கப்பட்டவிடத்து அச்சனசமூகத்திற்கு கெடுதல் உண்டாயிருந்திருக்கின்றது. உள்ளபடியே சென்ற சிலவருஷங்களாய் நிலக்கரிச்சுரங்கத்திலும் பண்டசாலைகளிலும் கம்மியர்சாலைகளிலும் செங்கற்சூளைகளிலும் புருஷர்களோடு ஸ்திரீகள் வேலைசெய்வதைத்தடுக்கிறதற்குச்சிறந்த பரோபகாரிகள் முயற்சிசெய்து வந்திருக்கின்றார்கள்.

வடதேசத்தில் புருஷர்கள் வீட்டிலிருப்பதும் தாய்மாரும் புத்திரிகளும் வியாபாரஸ்தலங்களில் வேலைசெய்வதும் இன்னும் சாதாரணமாயிருக்கின்றன. அதினால் அநேக விஷயங்களில் குடும்பத்தினுடைய ஒழுங்கும் குடும்ப நடையும் குடும்பத்தின் விதிகளும் முற்றும் மாறுண்டுகிடக்கின்றன. சென்ற அநேக வருஷங்களாக காரியங்களின் இந்த ஸ்திதியானது பேரிஸ் நகரத்தில் முதிர்ந்து இருக்கின்றது. அதைச் சில ஸ்திரீகள் நமக்குள்தானே உண்டாக்க விரும்புகின்றனர். அங்கே வியாபாரசாலையில் வேலைசெய்து அல்லது கணக்கர்சாலையில் அக்கிராசனம் வகித்து வேலைகளிலே முக்கியமாய்க் கவனத்தைச் செலுத்துகிறார்கள். ஆனால் புருஷர்கள் பெரும் வீதிகளைச்சுற்றி சுகசஞ்சாரஞ் செய்கின்றனர். ஆனால் அதன் பயனானது வீடு இழந்து இழிவடைந்து குடும்பமும் அச்சனசமூகமும் அழிந்துபோயிருப்பதுதான்.

ஸ்திரீகளுக்கு இராஜ்ய அதிகாரம் கொடுப்பதால் அவர்களுக்கு உயர்வும் தேர்ச்சியும் கிடைக்கும் என்று நம்புவதற்கு நியாயமின்று. ஆகிலும் தற்காலம் ஸ்திரீகளுக்கு அரசாங்க உரிமை எய்துவதால் அளவற்ற நன்மையுண்டாமென்று நம்புவர் அநேகர்உளர். இந்த் சங்கையைத்தர்க்கிப்பதற்கு அவசியமும் சந்தர்ப்பமும் இஃதன்று. ஆனால் ஸ்திரீகள், ஆண்மக்களையாவது பெண்மக்களையாவது இவ்வுலககாரியத்தில் அவரவருக்குரிய வேலையில் கிரகத்தில்வைத்துப்பழக்குவதால் செலுத்துகிற அதிகாரமானது, அவர்களுக்கு ராஜ்யதந்திர அதிகாரமில்லாத தன்மைக்குஈடாக, எத்தனையோமடங்கு மிஞ்சிய பயன்தருவதென்று சொல்வது அமையும். மனிதன் ஸ்திரீகளிடத்திலிருந்து அதிகாரத்தை நிறுத்திக்கொள்ள விரும்பினாலும் முடியாதென்றும், ஏனென்றால் அவன் அடக்கியாளுகிற சக்தியானது அன்



பினாலிருந்தபோதிலும், ஏகராஜ்யாதிபதியின் முழுஅதிகாரத்தைக்கொண்டு ஆண்டாற்போல் இவ்வுலகத்தை முன்னமே ஆண்டுவருகிறாளென்றும் "ரேடிக்கல் பெந்தாம்" சொல்லியிருக்கிறார். ஸ்திரீகள் சகலமானமனுஷஜாதியினுடைய ஒழுக்கத்தையும் உருப்படுத்துவதானது. பார்லிமெண்டு சபைக்கு அல்லது சட்டநிரூபணசபைக்கு அவர்கள் மெம்பர்களைக்கோருவதில் செலுத்த எதிர்பார்க்கத்தக்க அதிகாரத்தைப்பார்க்கிலும் மிகவும் மேலானதென்பது நிச்சயம்.

ஆகிலும் உண்மையாய்ச்சீர்திருத்தஞ்செய்யும் சகலமான ஸ்திரீகளும் உண்மையுடன் கவனம் செலுத்தவேண்டியதும் இதுவரை முகாந்தரமன்றி அலக்ஷியம் செய்யப்பட்டிருப்பதுமாகிய, ஸ்திரீகளுக்குரிய விசேஷவேலையொன்றுளது. அது என்னெனின், மனுஷர்க்குரிய ஆகாரத்தை நல்லமாதிரியில் சுருக்கச்செலவுடன் பக்குவம் செய்வதேயாம். பாகஞ்செய்வதின் மிகச்சாதாரணமான ஞானமின்மையால் தற்காலம் அதில் வியர்த்தமாவதைப்பற்றி நிந்திக்கவேண்டியதாயிருக்கிறது. ஒரே நெல்வளருகிறவிடத்து இரண்டுவளரும்படியாகச்செய்கிற மனுஷன் தன்ஜாதிக்கு உபகாரியாகமதிக்கப்படும் விஷயத்தில், அவனுடைய சாமர்த்தியத்தாலும் உழைப்பாலும் உண்டாக்கியவிளைவுகளை நல்லவிதமானமாதிரியில் திருத்திச்சுருக்கமான செலவில் பக்குவஞ்செய்கிற ஸ்திரீயானவளும் வெகுஜன உபகாரியாகமதிக்கப்படுவாள். அப்படியே தற்காலமுள்ள சாமான்களை விசேஷதிருத்தத்துடன் உபயோகத்துக்குக்கொண்டு வருதலானது சுகத்தையும் செலவுச் சுருக்கத்தையும் குடும்பசௌக்கியத்தையும் வளர்ப்பது மட்டோ, நம்முடைய தேசத்தின் விளைநிலங்களை அதிகவிசாலப்படுத்தின பயனுக்கு நிகராகும். நம்முடைய ஸ்திரீகள் தங்களுடைய சாமர்த்தியத்தை இம்மார்க்கத்தில் பயனுடன் செலுத்திச்சீர்ப்படுத்துவரேல் அவர்களுக்குச்சகல குடும்பத் [illegible] ன்றி யறிவும் லபித்து அனுபவசித்தமான பெரிய [illegible]ரிகளா[illegible] கப்படுவர்.

௨-வது அதிகாரம் முற்[illegible]று.

165406.

## மூன்றும் அதிகாரம்.

# இணக்கமும் நிதர்சனமும்.

—————:o:—————

“நல்லாரோடு இணங்கு, நீ அவர்களில் ஒருவனாவாய்”—ஜார்ஜ்ஹெர்பர்ட்

“என்மட்டுக்கு, நான் கௌரவமான புருஷர்கள் மூலம் கற்பதில் சந்தோஷமுடையவனாவேன்”—ஷேக்ஸ்பீயர். “நிதர்சனங்கள் கண்ணிற்கு போதிக்கின்றன. ஆகையால் உங்களுடைய முடிவைப் பற்றி கவனியாதீர்; ஆனால் உங்கள் நாளை எவ்வாறு போக்குகிறீர் என்பதைக் கவனியுங்கள்”—ஷேக்ஸ்பீயர்.

“சித்திரவேலையிற் கைதேற விரும்புகிறவன் மிக நேர்த்தியான படங்களைப்பார்த்துவரையவும், அவன்முன்னர்க்காணப்படுகிற நல்ல மாதிரிகளைக் கண்டு தன் சித்திரக்கோலால் ஒவ்வொரு அடையாளத்தையும் தீட்டவும் நிச்சயங்கொண்டவனாயிருப்பன்; அவ்வாறே, தன் ஒழுக்கத்தின் நீதிகள் நல்லனவாக இருக்க விரும்புகிறவன், தனக்கு நல்ல நிதர்சனங்களைக் கோரிக்கொள்வதில் ஜாக்கிரதையாயிருப்பன். அவற்றிற்குச் சமானமாகிற அளவும் அல்லது அவற்றை மிஞ்சுகிறவரைக்கும், ஒருபோதும் சும்மா இரான்.”—ஒவன்பெல்தாம்.

வீட்டில் வைத்துண்டாகிற இயற்கையான சிக்ஷையானது வாழ்நாளில் வெகுதூரம் நீடிக்கின்றது; மெய்யாகவே அது ஒருக்காலும் முற்றும் ஒழிந்துவிடுகிறதில்லை. வயது ஆக ஆக, ஒழுக்கத்தை உருப்படுத்துவதில் பிரயோகித்த வீட்டின் ஏகசக்ராதிபத்யமானது நிலைக்கத்தக்க சமயம் உண்டாகிறது. அப்பால் கல்விச்சாலையினின்றும் சிநேகிதர் தோழர்களுடைய இணக்கத்தால் எழுகிற, பெரிதும் செயற்கையான சிக்ஷையானது தொடுத்துக்கொள்ளுகின்றது. அது திருஷ்டாந்தத்தின் வலிமைபெற்ற சக்தியால் ஒழுக்கத்தை உருப்படுத்தாநின்றது.

இளைஞரும் முதியோரும்—ஆனால் அவருள்ளும் விசேடமாய் முதியோரினும் இளைஞர்கள்—தாங்கள் கூடுகிறவர்களைக் கண்டபா



வனை செய்யாமல் இரார்கள். ஜார்ஜ் ஹெர்பர்ட்டின் மாதா தன் புத்திரரை நடத்துவதற்கு வேண்டிக்கற்பித்த வாக்கியம் வருமாறு:— “நமது சரீரங்கள் நாம் புஜிக்கிற இறைச்சிக்குத்தக்க வண்ணம் விருத்தியடைகிறதுபோல, நம் ஆன்மாவும், நல்ல அல்லது கெட்டசங்கத்தின் ஒழுக்கம் அல்லது சம்பாஷணையால் யோக்கியதை அல்லது அயோக்கியதையைத் தன்னறியாதே கிரஹித்துக் கொள்ளுகின்றது.”

உள்ளவாறே நம்மைச்சூழ்ந்தவர்களின் உறவானது, ஒழுக்கத்தை உண்டாக்குவதில் பலத்தபயனை உறுவியாமற்போகாது. ஏனெனின், மனிதர் இயல்பாகவே கண்டபாவனை செய்பவர். சகலமனிதர்களும் தங்கள் கூட்டாளிகளின் பேச்சு, நடை, உடை, பாவனைகளாலும் ஆலோசனைகளாலுங்கூட ஏறக்குறைய அழுந்தப்பெற்றவராகின்றனர். நிதர்சனமானது பயனற்றதா? சகலமும் அதுதான். “நிதர்சனமானது மனிதருக்குக் கல்விச்சாலையாகின்றது. அவர்கள் வேறொன்றிலும் கற்றுக்கொள்ளார்” என்று பர்க் கூறினர். ‘ராக்கிங்ஹாம் பார்க்குவிஸ்’க்காக அவர் எழுதிய கௌரவமானநீதிமொழியாவது; “ஞாபகப்படுத்து; அனுகரணஞ் செய்; உலைவின்றிமுயலு” என்பதேயாம்.

கண்டு-பாவித்தலானது அதன்பயன் கவனிக்கத்தகாதவாறு பெரும்பாலும் தன்னறியாதே சம்பவிக்கின்றது. ஆனால் அதுகாரணம் பற்றி அதன் பயன் நிலைபெற்றதென்பதில்லை. அழுந்தச் செய்யும் இயல்புடையோர், அழுந்தப்பெறும் இயல்பினர்பால் உற்றால் மாத்திரம், ஒழுக்கத்தின் மாறுதலானது தெரியக்கூடியதாகின்றது. மிகவும் துர்ப்பலமான சுபாவமுள்ளோருங்கூட, தங்களைச் சூழ்ந்தவர்களிடம் கொஞ்சம் பலனை உண்டாக்குகிறார்கள். உணர்ச்சி, ஆலோசனை, வழக்கம், இவற்றின் தொடர்பானது நிலைத்ததாயும், நிதர்சனத்தின் செய்கையானது, ஒழிவிலதாயும் இருக்கின்றன.

விருத்தரான நாயகநாயகிகள் அல்லது சில வருடங்கள் ஒரு வீட்டில் கூடி வசித்திருப்பவர்களுங்கூட நாளடைவில் ஒருவரைப் போலொருவர், ஒத்த சுபாவமுடையவராகின்றனர். ‘ஆகையால் அவர்கள் போதுமானபடி நெடுங்காலம் வசிக்கிறதானால், அவர்களை

ப்பிரித்து அறியமுடியாது. விருத்தாப்பியர்கள் விஷயத்திலேயே
இவ்வாறுயின், அதிக மிருதுவும், அழுந்தப்பெறத்தக்கதும், தங்களைச்
சுற்றிலுமுள்ளவர்களுடைய நடப்புச்சம்பாஷணையின் லக்ஷணத்தை
க்கொள்ளத்தக்கதுமான குழைவுள்ள சுபாவத்தையுடைய இளைஞர்
விஷயத்தில் அது எவ்வளவு விசேடமான பொருத்தமுடையது
என்றுஎமர்சன் சொல்லியிருக்கிறுர்.

"கல்விகற்பித்தலைப்பற்றி மிகுதியும் சொல்லப்பட்டிருக்கிறது.
ஆனால் சர்வவியாபகமாயுள்ள நிதர்சனத்தைப்பற்றிக் கவனியாத
தாகத் தோற்றுகிறது. என்னுடைய சகோதரர்களால் காட்டிய
நிதர்சனமானது எனக்கு விசேஷமான கல்வியாயிருந்தது. என்னு
டைய குடும்பத்தாரிட மெல்லாம் உண்மையான சுவாதீனமாகிய
தற்சார்பான குணமிருந்தது. அதைப்பார்த்து நான் அக்குணத்
தைஅடைந்தேன்" என்று ஸர் சார்லஸ் பெல் என்பவர் தம்முடைய
கடிதங்களுள் ஒன்றிற் கண்டிருக்கின்றனர்.

ஒழுக்கத்தை உருவமாக்குதற்குரிய சந்தர்ப்பங்கள் வயசு வள
ருகிறகாலத்திலேயே முக்யமாய் சம்பவித்தல் வேண்டுவது இயல்பு.
வயசாகவே நிதர்சனமும் கண்ட பாவனையும் ஆசாரமாக ஏற்பட்டு
வரவர சுபாவத்திற் கலந்து விடுகின்றது. நாம் அதனை யறியுமுன்ன
ரே நம்மை அது வசப்படுத்தும்படியான அவ்வளவு சக்தியுடைய
தாயிருக்கின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பையன் ஒரு புத்திஹீனமானவிளை
யாட்டு விளையாடினதற்கு பிளேட்டோ என்பவர் அவனைக்கண்டி
த்தது வருமாறு:—"மிகவும் அற்பமானகாரியத்திற்காக நீர் என்னை
க்கண்டிக்கிறீர்" என்று அந்தப்பையன் சொன்னுன். "ஆனால் வழக்க
மானது சிறியபொருள் அன்று" என பிளேட்டோ மறுமொழி
தந்தனர். சுபாவத்துடன் கலந்த கெட்டவழக்கமானது, மனிதர்
தாங்களே நிந்திக்கிறதுன்மார்க்கங்களைத் தாங்களே பற்றிக்கொண்
டிருக்கும்படியான அவ்வளவு கொடுமையுடையதா யிருக்கின்றது.
அவர்கள் வழக்கத்திற் பராதீனப்பட்டு அவற்றின் சக்தியை மீறத்
திராணியற்றவராகின்றனர். இதனால் வழக்கமென்னும் ராஜ்யத்து
டன் போராடத்தகுதியுள்ள மனஊக்கத்தை உண்டாக்கிவகித்து



க்கோடலானது சன்மார்க்கசிக்ஷையின் ஓர் முக்யபயனாக மதிக்கப்
படும் என்று லாக் என்பவர் கூறியிருக்கின்றனர்.

நிதர்சனத்தால் உண்டாம் ஒழுக்கத்தின் பயிற்சியானது பெ
ரும்பான்மையும் தானே தன்னறியாமல் எழுந்த போதிலும் இளை
ஞர்கள் தம்மைச்சூழ்ந்தவர்களை அமைதியுடன் பின்பற்றவாவது பா
ர்த்துப் பழகவாவது செய்தேதீரவேண்டுமென்பது அவசியமின்று.
தங்கள் கூட்டாளிகளின் நடக்கையைவிட வெகுதூரம் தங்கள் சொ
ந்த நடக்கையானது, தம் வாழ்நாளின் நோக்கத்தைக்குறித்துக்கொ
ள்ளவும் ஒழுக்கத்தை உருவாக்கிக்கொள்ளவும் இடந்தருகின்றது.
ஒவ்வொருவனும் தன்னிடத்தில் மனேசக்தியும் சுவாதீன காரியசக்
தியும் உடைத்தாயிருக்கின்றுன். அதைத் தைரியத்துடன் பழக்கி
ஞல் தனக்குத்தானே இஷ்டர்களையும் தோழர்களையும் தெரிந்தெடு
க்கும் திறமை உண்டாகும். இளைஞரும், முதியோரும் பலத்தமனக்
கொள்கையின்மையினுலேதான், தங்கள் மனப்போக்கிலே போகி
ன்றனர்; அல்லது மற்றவர்களைப்பார்த்து நடந்துகொள்ளும்படி
யான இழிவை எய்துகின்றனர்.

மனிதர் தாம் சார்ந்த இனத்தாரால் அறியப்படுகின்றனர் என்
பது சாதாரணமான வாக்கியமாயிருக்கிறது. குடியில்லாதவர் குடி
காரருடனுவது, நாகரீகமுற்றவர் நாகரீகமற்றவருடனுவது, சன்
மார்க்கர் துன்மார்க்கருடனுவது கூடுவது இயற்கையன்று. கெட்ட
மனிதர்களுடன் சேர்வதானது இழிவான குணத்தையும் துன்மார்
க்கமான மனேசுபாவத்தையும் காட்டுகின்றது. அவர்களுடைய கூட்
டிறத்திற்கு அடிக்கடி போவதானது நல்லொழுக்கத்திற்கு நிச்சயமா
ன குறைவை உண்டாக்குகின்றது. அவர்களுடன் பேசுதலானது
மிகவும் கெடுதல் உண்டாக்கத்தக்கது. ஏனெனின், உடன்கையில்
தீங்கைச் செய்யவில்லையானுலும் அது மனசில் அவ்விதை போட்டு,
நாம்பேசி நீங்கியபின், நம்மைத்தொடர்ந்து வருகின்றது. நிச்சயமா
கவே மறுபிறப்பில் உண்டாகத்தக்க ஒட்டுவியாதியாகின்றது.

இளைஞர்கள் தங்கள் விவேகஞானசக்தியால் நடத்தப்பட்டுத்
தங்கள் மனச்சான்றிற்கேற்பத் தங்களுக்குரியசுவாதீன மனேசக்தி

யைப் பிரயோகிப்பரேல், அவர்கள் தங்களைவிட நல்லவர்களுடைய கூட்டத்தை விரும்பி, அவர்களுடைய நடக்கையைப்பார்த்து நடக்கயத்தனப்படுகின்றனர். நல்லவர்களுடைய இணக்கத்தால் விருத்தியடையத்தக்க சுபாவங்களுக்கு நலம் சான்ற புஷ்டிவாய்க்கும். ஆனால் கெட்டவர்களுடைய இணக்கமானது தீங்காகவேமுடியும். கார்கேன்டியூப், உடைய படிப்பைப்பற்றி, ரேபிலேஸ்சொல்லுகிறபடி நாம் அறிகிற சில மனிதர்களை நேசித்து, கனப்படுத்தி, புகழவேண்டியதுண்டு. பின்னும் சிலரைவிலக்கி இகழவேண்டியதும் உண்டு. சிறந்த ஒழுக்கமுடையோருடன் வசித்தால், நீ சிறந்தவனாகவும் அவர்களிடத்தில் பிரகாசத்தைப் பெற்றவனாகவும் உன்னை அறிவாய். ஸ்பேனிஸ் பழமொழிப்படி "ஓநாயுடன் நீ வசித்தால் ஊளையிடத்தான் நீ படிப்பாய்."

சாதாரணமாயுள்ள தன்காரியக் குட்டிகளுடன் சம்பாஷணை செய்வதுகூட மிகவும் கெடுதலாய்ப் பலிக்கும். ஏனெனில் உண்மையான ஆண்தன்மைக்கும் மனவீதியாகிய ஒழுக்கத்திற்கும் ஏறக்குறைய விரோதமாய், கொடூரமும், மந்தமும், அகம்பாவமும், தன்ன [illegible] சாகவே நிலுமாகிய மனோசுபாவத்தைக் கொடுக்கின்றது. மனம் ஒடுங்கியதால் வழிஒடச் சீக்கிரம் பழகுகின்றது. தயாகுணமானது இறுகிச்சுருங்கிவிடுகின்றது. நீதி சுபாவமானது துர்ப்பலப்பட்டு, தீர்மானமின்றி வந்ததற்கெல்லாம் இடங்கொடுக்கின்றது. ஆகவே, உதாரம் பொருந்திய கௌரவம் அல்லது உண்மையான நற்குணம் அனைத்திற்கும் கேடுவிளைகின்றது.

ஆனால் நம்மைவிட அதிக புத்தியும், நன்மையும், அனுபவமுமுள்ளவர்களுடன் கூடினால் ஏறக்குறையமன ஊக்கமும் தைரியமும் எப்போதும் உண்டாம். நம் வாழ்நாளைப்பற்றிய ஞானத்தை நமக்கு அவர்கள் அதிகப்படுத்துகிறார்கள். நம்முடைய யோக்கியதையின் மதிப்பை அவர்களால் திருத்திக்கொண்டு அவர்களுடைய ஞானத்திற்கு நாமும் பாகஸ்தராகின்றோம். அவர்களுடைய கண்ணைக்கொண்டு விஷயங்களை நாம் விசேஷமாய் அறிகிறோம். அவர்களுடைய அனுபவத்தைக் கொண்டு லாபம் அடைகிறோம். அவர்கள் அனுபவித்த சுகத்திலிருந்து மட்டுமன்று, அதனினும் அதிகமாய், அவர்கள்பட்ட கஷ்டங்களினின்றும் அறிவையடைகிறோம். நம்மினும் அவர்கள் அதிக பலசாலியானால் அவர்களுடைய பலத்தில் நாமும் பாகமடைகிறோம். ஆதலால் புத்தியும், பலமும் உள்ளவர்களுடன் கூடுதலானது ஒழுக்கத்தை உருப்படுத்துவதில் மிகவும் மதிக்கத்தக்க பயனை அடைவிக்க ஒருக்காலும் தவறமாட்டாது. அது நம்முடைய சாதனங்களை அதிகப்படுத்தி, நம் தீர்மானங்களைப் பலப்படுத்தி, நம் நோக்கங்களை மேன்மைப்படுத்தி, நம்சொந்தக்காரியங்களில் மிக்க சாமர்த்தியத்தையும், திறமையையும், பிறர்காரியங்களில் பயனுள்ள உபகாரத்தையும் செலுத்தும்படிக்கான சக்தியைக் கொடுக்கின்றது.



"என் குழந்தைப்பருவத்தில் நான் தனித்திருந்ததால் உண்டாயிருக்கிற மிகுந்த நஷ்டத்தைப்பற்றி எனக்குள்ளே அடிக்கடி மிகவும் துக்கப்பட்டிருக்கிறேன். கல்வி கேள்வியில்லாத நம் சொந்த அறிவை — மிகவும் கெட்ட துணை நமக்கு வேறு வேண்டுவதில்லை. தனிமையாயிருப்பதால் தன் இனத்தாருக்கு உதவிசெய்யும் மார்க்கத்தை முற்றும் அறியாதவனாகிறதுமட்டுமன்று; பிறருடைய உதவி தனக்குவேண்டிய குறைகளைக் காணக்கூடாமலும் [illegible] தனித்திருக்கச் சாவகாசமின்றேனதவாறு, பிறருடன் கூடுதலானது ஓர் மனுஷனுக்குப் பெருகியவளமுள்ள அனுபவஞானத்தை மென்மேலுந் தருவதாக மதிக்கப்படும். இவ்வாறு கிரஹித்த சிநேகமானது அறத்தைப்போலாது வெளியே உண்டானபோதிலும் வளமான பலனைத் திரும்பத் தனக்குக்கொண்டுவராமற் போகாது. மற்றவர்களுடன் கூடுவதால் ஒழுக்கம் பலப்படுகின்றது. நம்முடைய பிரதான நோக்கத்திற்குக் கெடுதலின்றி நம் மார்க்கத்தை விவேகத்துடன் நன்கு கண்டுணர்ந்துகொள்ளச் சக்தி உண்டாகிறது" என்று ஸ்மிம்மெல் பென்னிக் என்பவர் சொல்லுகிறார்.

(இன்னும் வரும்.)

---

# பல்லவ சக்கரவர்த்திகள்.

முன்ரொடர்ச்சி.

கி. பி.

489. பாடமியன் மலைச்சாதனமொன்றில் அரசியற்றலை லன் பல்லவனென்று குறித்துளது.
சளுக்கியவேந்தன் புளகேஷியின் பட்டயம்.
பல்லவரின் கோட்டை பாடமிச்சளுக்கியரால் கவரப்பட்டது.
சளுக்கிய வேந்தரில் முதல்வன் புளகேசி காஞ்சி புரத்தைச் சுட்டெரித்தான்.

500—600. இராஜேந்திரவர்மன். இவன் புதல்வன் தேவேந்திரவர்மன்.
விஷ்ணுசிம்மன் அல்லது நரசிம்மவர்மன், சண்டதண்டன், அத்திரணசண்டன் இவர்களின் ஆளுகை.
பல்லவர் வேங்கைதேசம் ஆண்டார்கள்.
மிருகேசபல்லவன் பலாசிக்காவில் ஜினதேவாலயம் ஒன்றுகட்டுவித்தான்.

சகம் 550. விளந்தகங்கன் பல்லவேந்திர நரபதியை ஜெயித்து ...யதால் வழிஓடியவனை யானையிடறிக்கொல்வித்தான்.

570. தேவேந்திரவர்மனின் பட்டயம்.

585. சளுக்கியவேந்தன் புலிகேசி II (610—634).
(குறிப்பு:—மேலேகண்ட புளகேஷி- புளகேசி, புலிகேசியென்றிருக்கலாம்).

589—636. கங்காகர்ளுடன் கொங்கணிவர்மன் III திராவிடதேசத்தை ஜெயித்தான்.

600. சளுக்கியவேந்தன் விக்ரமாதித்தன் I காஞ்சியரசனை முடியை அடியில்வைக்கச்செய்தான்.

600—700. கலிங்கதேசத்தில் பல்லவ அரசாட்சி.
பல்லவரால் சளுக்கிய வேந்தன் அபஜெயமடைந்தான்.
கங்காகர்ளுடன் கண்டதேவன் காஞ்சிதேசத்தில் திராவிட அரசனை ஜெயித்துத், திறையளிக்கச் செய்தான்.

608. சளுக்கியவேந்தன் விக்ரமாதித்யன் காஞ்சித்தலைவனானன்.

610. சளுக்கியவேந்தன் குப்ஜவிஷ்ணுவர்தனன் வேங்கைப் பல்லவரை ஜெயித்தான்.



கி. பி.

சளுக்கியவேந்தன் விக்ரமாதித்யன் பல்லவவம்சத்தைத் தன்கீழ் அடக்கினன்.
மேலைச்சளுக்கிய வேந்தன் சத்யாசிரயன் பல்லவரையழித்து காஞ்சிமதிளுக்குள் ஓட்டினன்.

620. விளந்தராஜா கங்காவால் நரசிம்ம போத்தவர்மன் அபஜெயமடைந்தான்.

634. சளுக்கியவேந்தன் புலிகேசி II, பல்லவ அரசன் சண்டதண்டன் II—இவர்கள்சமாதானம்.

635. பல்லவர் காஞ்சியில் அரசாட்சி.

640. பல்லவர் கடம்பரால் தோற்கடிக்கப்பட்டார்கள்.
அத்திரணசண்ட பல்லவன் ஆளுகை.

650—670. காஞ்சிபுரத்தில் சங்கராசாரியர் தம்மதத்தை உபதேசித்தார்.

658—681. சளுக்கிய வேந்தன் விக்ரமாதித்யன் I பல்லவரை வென்று காஞ்சிபுரத்தைக் கைக்கொண்டான்.

658. மேற்படியரசன் இளவரசனா யிருக்கும்பொழுதே பல்லவரை ஜெயித்தான்.

660. மேற்படியரசன் ஜெயத்தேஷ்வரபோத்தராஜனைஜெயித்தான்.

668. கடம்பன் இரவிவர்மன் காஞ்சித்தலைவன் சண்டதண்டனை முற்றும்வென்றான்.

670. சளுக்கியரின் அரசைப் பல்லவர் அழித்தல்.

675. சளுக்கிய வேந்தன் விக்ரமாதித்யன் பல்லவரைவென்றான்.

677. பல்லவர் மீட்டும் ஜெயித்தல்.

679. சளுக்கியவரசன் விக்ரமாதித்யன் பல்லவரையழித்துக் காஞ்சியைக்கொண்டான்.

679. சளுக்கிய விநயாதித்யன் தன் தகப்பனுக்காகப் பல்லவரை வென்றான்.

692. மேற்படியான் காஞ்சியரசன் திரைராயன் சேனையைக் கைப்பற்றினன்.

700—800. கொங்குகர்ளுடன் ஸ்ரீ வல்லபை பல்லவரசன் நரசிம்மபோத்தவர்மனை வென்று மாயும்படிசெய்தான்.
அந்நாள்முதல் பல்லவர் மைசூர்தேசத்தின்கீழ்ப்பாகத்தை யாண்டுவந்தார்கள்.

705. சளுக்கியன் விநயாதித்யன் துவேராயனின் சேனையையழித்தான்.

கி. பி.

725. வடமைசூரிலுள்ள நிர்கண்டாவின் அரசன் மாருவர்மராஜன் பல்லவ அரசகுமாரத்தியை மணந்தனன்.

725—755. இராஷ்டிரக்கூட்டன் தந்திதுர்கன் காஞ்சியைத்தன்னாட்சிக்குள்ளாக்கினான்.

(குறிப்பு :— இராஜபுத்திர ஜாதியினரென்று சொல்லப்படுகிற இராட்டர் அல்லது இராட்டவர் (Rathor or Rathaur) யாதவகுலத்தினரென்றும் இரட்டர் எனமருவி வடமொழியில் இராஷ்டிரிக்கா அல்லது இராஷ்டிரக்கூட்டர்எனத் திரிந்ததாகவும் தெரிகிறது.)

725—755. கர்னாடகதேசச் சேனை காஞ்சித்தலைவன்சேனையை ஜெயிக்க மிக்க வல்லமையுள்ளது.

733. சளுக்கியவேந்தன் விக்ரமாதித்யன் II காஞ்சியரசனை வென்றான்.

மேற்படியரசன் பல்லவநந்தி போத்தவர்மன் I ஐ வென்றுகொன்றான்.

750. நொளம்பாதி ராஜனின் (பல்லவன்) சிலாசாஸனம்.

755. காஞ்சியரசன் ஸ்ரீஹர்ஷனை ஜெயித்ததாகப் பேர்படைத்த கர்னாடக சேனையை இராஷ்டிரகூட்டன் தந்திதுர்க்கன் ஜெயித்தான்.

கிவர்மன் காஞ்சியரசனைவென்று அவன்சேனை முறிந்து கலைந்தோடச்செய்தான்.

அதற்குப்பின் இருமுறை பல்லவரைவென்று காஞ்சியைக் கைக்கொண்டான்.

வீரமஹேந்திர பல்லவன் ஆளுகை.

758. சளுக்கிய வேந்தன் கீர்த்திவர்மன் II பல்லவ அரசன் நந்திபோத்தவர்மனை (II) வென்று காஞ்சியைக் கைப்பற்றினான்.

768. நொளம்பராஜன் (பல்லவன்) அஹவதுக்கன் அல்லது அஹிதர்ஜவனன் ஆளுகை.

770. இராஷ்டிரகூட்டன் துருவன் பல்லவர் பெருமையை மிகவுந் தாழ்த்தினான்.

777. பல்லவ அரச குமாரத்தி குண்டவி ஸ்ரீபுரத்தின் வடபாகத்தில் ஒரு ஜினதேவாலயம் கட்டுவித்தாள்.

778. இராஷ்டிரகூடன் துருவன் காஞ்சியரசன் தந்தியை வென்றல்.



கி. பி.

788. ஹேமசிதலவனால் புத்தர்கள் காஞ்சியினின்று முழுதுந் துரத்தப்பட்டார்கள்.

ஹேமசிதலன் அல்லது ஹேமசீதலன், அல்லது ஏமசிதலன் அல்லது ஹேமசீலன் அநேகம்ஜினரைத் தருவித்து காஞ்சியின் வடபாரிசத்திற் குடியேற்றினான். இவனே காஞ்சி புத்தவர சரிற் கடைப்பட்டவன்.

ஜினமதங் கைக்கொண்டான்.

700—900. சிம்மவிஷ்ணு, மஹேந்திரவர்மன் I, நரசிம்மவர்மன் I, மஹேந்திரவர்மன் II, பரமேசுவரவர்மன், நரசிம்மவர்மன் II, நந்திவர்மன்.

பல்லவமல்ல நந்திவர்மன் இவர்கள் ஆளுகை.

சிம்மவர்மன் I, சிம்மவிஷ்ணு, நந்திவர்மன், சிம்மவர்மன் II, அர்க்கவர்மன், உகரவர்மன், மஹேந்திரவர்மன் இவர்கள் நாமங்கள் அமராவதி சிலாசாசனத்திற் குறிக்கப்பட்டுள்ளன.

800—900. பல்லவமல்ல நந்திவர்மனின் பட்டயம்.

சபரரின் அரசனான உதயணனுடன் மேற்படியான் யுத்தம்.

உய்சலரின் அரசனான பிருத்வி வி[illegible]னுடன் மேற்படியான் யுத்தம்.

பாண்டியவரசனுடன் மேற்படி[illegible] யுத்தம்.

803. காஞ்சியரசன் தந்திகன் இராஷ்டிரகூட்டன் கோவிந்தன் III ஆல் வெல்லப்பட்டான்.

814—819. கொங்குகர்னாடன் கண்டதேவன்பல்லவவரசனைவென்று அவனுடன்பின் சமாதானமானான்.

830. நொளம்ப இறைவன் (பல்லவன்) ஆளுகை.

850. மேற்படியான் பட்டயம்.

894. வீரநொளம்பன் அல்லதுவீரமஹேந்திர பல்லவன் சாதனம்.

898. வீரநொளம்பன் ஆளுகை.

900—1000. பல்லவ அரசர்ஜெயவர்மதேவன், அவன்குமாரனான ஆநந்தவர்மதேவன் அவன் குமாரன் இராஜேந்திரவர்மதேவன் இவர்கள் கலிங்கதேசத்தில் ஆட்சிசெய்தார்கள்.

921. ஜாவா அரசன் தன் நான்கு குமாரர்களையும் ஒருகுமாரத்தியையும் தென்னிந்தியாவில் படிக்கும்படி அனுப்பினான்.

கி. பி.

944. வீரநொளம்பன், வீரதிரிநேத்ர பல்லவன் ஆளுகை.

973. நொளம்பர் (பல்லவர்) குலத்திற்கு அந்தகன் (யமன்) இராஷ்டிரகூட்டன் காக்கா III.

985. ஆநந்தவர்மதேவன் (பல்லவன்) ஆளுகை.

1000—1100. பல்லவரின் தலையாய நகரம் காஞ்சிவரம்.

பல்லவர் சோழவரசருக்குட்பட்ட சிற்றரசர்களாயிருந்தார்கள்.

பல்லவவம்சம் முடிந்தது.

பல்லவர்தேசம் சோழர்கைவசமாயது.

சளுக்கியவரசன் சோமேசுவரதேவ அஹவமல்லன் காஞ்சியைச்சுட்டெரித்தான்.

1042—1067. சளுக்கிய வேந்தன் அஹவமல்லன் II பல்லவராஜகுமாரத்தியை மணந்து சோழருக்கெதிராக அவர்களுடன் உடன்படிக்கைசெய்தான்.

1050. ஸ்திரகம்பீரநொளம்பன் (பல்லவன்) ஆளுகை.

1064. குலோத்துங்க இராஜேந்திரசோழன் I குமாரனுகிய ஆதொண்டை, பல்லவரை முற்றுங்கருவறுத்தான்.

ஆதொண்டை ஜினதேவாலயங்கள் ஐந்துதவிர மற்றனவகளை இந்து தேவாலயங்களாக மாற்றினன்.

1070. ... மல்லபல்லவன்.

சளுக்கியவரசன் புவனேகமல்லனுக்குப் பல்லவவேந்தன் திறைகட்டிவந்தான்.

1074. சளுக்கியவரசன் சோமேசுவரன் II பல்லவரசனை ஜெயித்தான்.

ஸ்ரீ பல்லவராசன் வங்கபுரத்தில் அரசாட்சிசெய்தான்.

1075. கொங்குகர்னுடன் உதயாதித்யதேவன் பல்லவவரசனையழித்தான்.

1077. காஞ்சியில் இராஜேந்திர பல்லவராயனின்பட்டயம்.

1079. ஜெயசிம்மதேவ நொளம்பபல்லவன் சளுக்கியருக்குள் வனவாசியையாண்டான். சளுக்கியவரசன் 6-வது விக்ரமாதித்யனுக்கு இளைய தம்பி இவன் (?).

1081. சளுக்கியவேந்தன் 6-வது விக்ரமாதித்யன் பல்லவவரசரைவென்று அவர்கள் சிம்மாசனமேறினன்.



கி. பி.

1100—1200. சோழர் தம் எல்லைகடவாவண்ணம் நொளம்பவாடி மாகாணத்தையேற்படுத்தி மேலச்சளுக்கிடர் பல்லவசிற்றரசனொருவனுக்களித்தான்.

1104. பல்லவர்தேசம் பேர்மாடி (Sinda) I வசமானது.

1114. சளுக்கியவரசன் 6-வது விக்ரமாதித்யன் பல்லவரைப் பல்லவம்பிடிக்கச்செய்தான் (Spronts).

1115. தொண்டமண்டலத்தில் பல்லவ சிற்றரசனின் பட்டயம்.

1120. வெள்ளாளன் (Ballala) விஷ்ணுவர்த்தனன் பல்லவ அரசனை வென்றான்.

நரசிம்மவர்மன் (பல்லவன்) ஆளுகை.

1140. சளுக்கியவரசன் ஜகத்தேக்கமல்லன் பல்லவரைத்துரத்தி அவர்கள் தேசத்தைத் தன்னிராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான்.

1200—1400. பல்லவவம்சம் அழிந்தது.

1223. யாதவகுல சிங்கணதேவன் பல்லவ அரசனை ஜெயித்தான்.

நாஞதிக்கமச்சாது,
இரங்கூன்.

---

# “மதுரைத்தலவரலாறு.”

(ருசா-ம் பக்கத்தொடர்ச்சி.)

“சகாப்தம்-கஅஅஅ-க்கு மேற்செல்லாநின்ற சித்தார்த்தி வருடம் வைகாசிமீ ௩ய-ஆந்தேதி செவ்வாய்க்கிழமை இராத்திரி, பங்காரு திருமலைநாயக்கரவர்கள் குமாரன் விசயகுமாரு முத்துத்திருமலை நாயக்கரவர்களும், சேதுபதி வாசல் தளவாய் வெள்ளையன் சேர்வைகாரனும் சந்தேகான் படேகானும் வந்து திண்டுக்கல்லைக்கட்டிக்கொண்டான் என்ற செய்திகேட்டு எடுபட்டார்கள். அந்தமுன்னுக்கு மீனாட்சிசுந்தரேசுவரர்களையும், கூடலழகரையும், வானரவீரர் மதுரைக்கு எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு ஸ்தலத்தார் அனந்த சொர்ண பூரிசனங்களுங் கூடப்போயிருந்தவிடத்தில் சேதுபதியவர்கள் சுவாமிக்குப் பூஜைநைவேத்தியத்திற்குங்கொடுத்துப் பரிஜனங்களுக்

கும் அன்னபானாதிகளுக்குங்கொடுத்துச் சித்தார்த்தி ௵ ஆனிமீ முதல் துன்மதி ௵ ஆனிமீ வரைக்கும் வருஷம் ௨-க்கு ஆகரித்துவந்தார். இப்படியிருக்கிறவிடத்தில், தேசிங்குராசாவும் அறுபதினாயிரங் குதிரையுடனே வந்து திரிசிரபுரம் கோட்டையை வளைத்துக்கொண்டு படேகானையும் வெட்டித் துலுக்கரையெல்லாம் எடுத்துவிட்டு திரிசிரபுரங்கோட்டைக்கு, முராரிராயரை நியமித்துச் சிவஸ்தலம் விஷ்ணுஸ்தலமெல்லாம் முன்பின்னத்துப்படிக்குச் சர்வமானியமாக விட்டுப் பூஜை நைவேத்தியங்களெல்லாங் குறைவராமல் நடப்பிக்கச் சொல்லி வடக்கே போய்விட்டார்கள். அதின் பிறகு முராரிராயரவர்கள் தர்மிஷ்டரானபடியினாலே அப்பாச்சிநாயக்கரவர்களைப் பயணப்படுத்தி இரண்டாயிரங் குதிரையும் பயணப்படுத்தி, மதுரைக் கோட்டைக்கு வந்து சுவாமியில்லாத பட்டணத்திலே நாமிருக்கிறது என்னவென்றுடனே பயணம் புறப்பட்டு வானரவீர மதுரைக்கு ஸ்தானீகாள் முதல், அநந்த கொத்துப்பரிஜனங்களையுங் கண்டு சுவாமி தெர்சனம் பண்ணிக்கொண்டு, சேதுபதி மத்தியஸ்தமுங்கொடுத்து, துன்முகி ௵ ஆனிமீ ௰-ஆந்தேதி சனிக்கிழமை நாள்போது போ[illegible] இரண்டு நாழிகை யளவில் மதுரைக்கு வந்துசேர்ந்துகோவிலிலே [illegible]ஞர்.

முன் கர்நாடகத்தில் அத்துப்படிக்கு கோவில்களும் பூமியும் விட்டுக்கொடுத்துச் சாந்தி, சம்புரோக்ஷணையும் பண்ணிப்பூஜை நைவேத்தியமுற்சவாதிகளும் விமரிசையாக நடப்பிவித்தார்கள்.

சகாப்தம் ௧௬௮௪-க்கு மேல் செல்லாநின்ற உருத்திரோத்காரி ௵ வடக்கே இருந்து நிசாம் என்கிற துலுக்கன் திரிசிரபுரங் கோட்டையும் மதுரைக்கோட்டையும், கைக்கொண்டு மாபோசிகான் சாயபு அவர்கள், மம்முதல்லீகான் நவாபுசாயபு அவர்களிரண்டு பேரையும் வைத்துப்போட்டு வடக்கே போய்விட்டான். உருத்திரோத்காரி ௵ முதல் ஆங்கிரச ௵ கார்த்திகைமீ ௨௬-ஆந்தேதி வரைக்கும் ௵ ௰-க்கும் மீ ௬-வரை துலுக்காணியமாய்ச் சிலநாள்ராஜ்ஜியம் ஆண்டார்கள். இப்படியாளுமிடத்தில் மதுரைக்கோட்டை அப்துலாக்குமுகான் நாளையில் மயானமைத்துனன் ஆல்முகான் தொண்டைமான் சீமைவழியே இரண்டாயிரம் குதிரையுடனே வந்து,



மதுரைக்கோட்டையைக் கட்டிக்கொண்டு ஒருவருஷம், திருவடிராஜ்ஜியம் முதல்கொண்டு மருட்டி திரிசிரபுரம் கோட்டைக்குப் பயணம் போகிறபோது மதுரைக்கோட்டைக்கு மயானவை வைத்துப்போட்டுத் திரிசிரபுரத்தில் சந்தேகான் பாளையத்திற்போய்ச்சேர்ந்து தர்க்கம் பண்ணினவிடத்தில் ஆல்முகானும் பட்டுப்போனான். மருட்டி மம்முதல்லீகான் நவாப்சாயபு அவர்கள் சந்தேகான் பாளையத்தை யெடுபடச்செய்வித்துச் சந்தேகானையும் பிடித்து வெட்டிப்போட்டார்கள்.

“அப்படியிருக்குமிடத்தில் மதுரைக்கோட்டையிலிருந்து மயாண் மைசூர் ராஜவட்டம்பண்ணி மதுரைக்கோட்டையை மைசூராருக்கு விற்றுப்போட்டுத் திருமூரிற் போய்விட்டார். அதின் பிறகு மைசூர்வகை கூகுசாய்பு ஆங்கிரச ௵ புரட்டாசிமீ ௩௰-ஆந்தேதி கோட்டையிற் பிரவேசமானார். இப்படி மைசூரார் மதுரைக் கோட்டையைக் கட்டிக்கொண்ட செய்திகேட்டுச் சேதுபதிவாசல் தளகர்த்தம் வெள்ளையன்சேர்வைகாரரும், உடையாத்தேவர் வாசல் பிரதானி தாண்டவராயபிள்ளையும் இருவரும் வெகுதளத்துடனே வந்து மதுரைக்கோட்டையை வளைத்துக்கொண்[டார்]கள். கூகுசாய்பு கோட்டைக்குள்ளே நாளது புரட்டாசிமீ ௩௰-ஆந்தேதி முதல் கார்த்திகைமீ ௨௬-ஆந்தேதி வரைக்கும் கோட்டைமுத்தினாயக்கி மத்தியஸ்தத்தின் பேரிற் கோட்டையைச் சேதுபதி வசம் விட்டுப்போட்டுத் திண்டுக்கல் முகமாய்ப் போய்விட்டான். இந்தப்படி உருத்திரோத்காரி ௵ முதல், ஆங்கிரச ௵ கார்த்திகைமீ ௰௬-ஆந்தேதி வரைக்கும் இந்தப்படியாகி நாநாவித சல்லியங்களாக இருந்தமையினாலே, கலியுகம்-௪௮௬௩-சாலிவாகன சகாப்தம்-௧௬௮௪-க்கு மேற்செல்லாநின்ற ஆங்கிரச ௵ கார்த்திகைமீ ௧௬-ஆந்தேதி சேதுபதி வாசல் தளகர்த்தம் வெள்ளையன்சேர்வைகாரரும் உடையாத்தேவர் வாசல் தளகர்த்தம் தாண்டவராயபிள்ளையும், மதுரைக்கோட்டையிற் பிரவேசமாகிக் கோவிலுந்திறந்து, பூஜைநைவேத்தியமும் நடப்பிவித்து, கூகுசாய்பு அடைகோட்டையிலே அனேகம் பசுக்களை வதைபண்ணித் தென்னமரங்களையும் வெட்டித்தின்று பட்டணமெல்லாம் அவுந்தரை பண்ணினபடியினாலே, எழுகோவிலுக்குஞ்சாந்தி சம்

ரோக்ஷணையும் பண்ணிவைத்து ராஜ்ஜியத்துக்கு ராஜாவில்லாமலிருக்
கலாகாதென்று, பங்காருதிருமலை நாயக்கரய்யனவர்கள் குமாரர், விசய
குமாரு முத்துத்திருமலை நாயக்கரவர்களை, வெள்ளிக்குறிச்சியிலிருந்
து அழைப்பித்து, ஆங்கீரசஸ்ரீ-மார்கழிமீ ௧௪-ஆந் தேதி சோம
வாரம் நாச்சியார் சன்னிதியில் பட்டாபிஷேகம் பண்ணுவித்துக்
கொண்டு செங்கோலும் வாங்கிக்கொண்டு அரமனை சேர்ந்தார்கள்.

"அதின் பிறகு ஆங்கிரசஸ்ரீ மாசிமீ ௰௪-ஆந்தேதி முதல்
ஸ்ரீமுகஸ்ரீ வைகாசிமீ ௨௰-ஆந்தேதி வரைக்கும் மீ ௰௯-க்கு ராஜ்
ஜியம் ஆண்டு வருகையில், மயாணாவும், மகதிமீயாவும், நபீகானும்
இந்த மூன்றுபேரும் கோட்டையிலிருந்த கர்த்தாக்களைக்கோட்டை
விட்டு வெளியே துரத்தி வெள்ளிக்குறிச்சிக்கு அனுப்புவித்துப்போ
ட்டு மதுரைக்கோட்டையுஞ் சீமையும் கட்டிக்கொண்டு பழையபடி
க்கு ஆண்டுவருகையில் கோவில் சீமை பூமியெல்லாம் அவாந்திரமாய்
க்கட்டிக்கொண்டு பட்டணத்தில் செட்டிவர்த்தகர்களையுங் கெடுத்து,
தோப்புத்துரவுகளையு மழித்து, இப்படிக்கெல்லாம் அவலம்பண்ணிக்
கொண்டு இருக்கிற வேளையில் மைசூரார் வகை கூகுசாய்பு வெள்ளை
யன் சேர்வைகாரரோடு வந்து கோட்டையைச் சுற்றிக்கொண்டு
பனையூர் அனுப்பாலடியில் ஆறுமாதமாய்ப் பாளயமிறங்கிக்கொண்டு
இருந்து சாதித்தவிடத்திலே வெள்ளையன் சேர்வைகாரரையும், கூகு
சாய்புவையும், மயாணா கூட்டம்வெட்டித் துரத்திப்போட்டு, ஸ்ரீமுக
ஸ்ரீ ஆனிமீ முதல் பவஸ்ரீ மாசிமீ ௨௧-௳ வரைக்கும் மதுரைச்
சீமையும் கோட்டையுங் கட்டிக்கொண்டு இருக்குமிடத்தில் கலியு
கம் ௪௮௫௫-சாலிவாகன சகாப்தம் ௧௬௭௫-க்கு மேற்செல்
லாநின்ற பவஸ்ரீ மாசிமீ ௨௨-௳ வடக்கே தேவனும் பட்டணத்தி
லிருந்து பரங்கிகளாயிரம் பேரும் இருபது பீரங்கியும், மாபோசு
கான் நவாபுசாய்பு அவர்களும் புறப்பட்டுவந்து நத்தத்துக்கணவாய்
வழியாகவந்து மதுரைக்கோட்டையைக் கட்டிக்கொண்டு மயாணா
இருந்த திருமோகூர்க்கோவிலையும் கோட்டையாகச்செய்துகொண்டு
சண்டைபண்ணினபடியினாலே அந்தக் கோவிலையெல்லாம் பரங்கி
கள்போய்க் கொள்ளையிடத் திருவாபரணங்களையு மெடுத்துக்கொ
ண்டு விக்கிரகங்களையுமெடுத்துக்கொண்டு மதுரைக்கோட்டைவந்து
சேர்ந்தார்.



"அதன்பிறகு திருநெல்வேலி வரைக்கும் போய் மதுரைக்
குவந்து வடக்கே திரிசிரபுரத்துக்குப் பயணம்போகிறபோது திரு
மோகூர் விக்கிரகங்களை ஒட்டகையின்பேரில் போட்டுக்கொண்டு
போகிறபோது அழகர்கோயில் பாதையில் நாட்டுக்கள்ளர்கள்வந்து
விழுந்து விக்கிரகங்களைக் கைவசப்படுத்திக்கொண்டு கோயிலிலே
கொண்டுவந்து சேர்த்தார்கள். அதன்பிறகு மதுரைக்கோட்டை
யிலே மாபோசுகான் நவாபுசாய்பு அவர்கள் மனுஷன்பருக்குதில்
லாவிருந்து அதிகாரம் பண்ணுகையில் ஒரு துலுக்கப்பக்கிரிவந்து
சுவாமிசன்னதியிலே திருமலைநாயக்கர் கட்டுவித்த புதுமண்டபத்து
க்கு முன்பாக ராயர்கோபுரத்துத் திருநிலைக்காலிலே நிசான்கட்டு
வித்துக்கொண்டு கோபுரத்தின் மேடையிலே கொடிகட்டுகிறதற்கு
இரண்டுபடைச்செங்கல் சுவரும் போட்டுவித்துக்கொண்டு இருக்கி
றவேளையில் ஸ்தலத்தார் அனந்தகொத்தும் பட்டணத்திலிருக்கிற
செட்டிவர்த்தகர்கள் சகல ஜனங்களும் சங்கேதமாகக் கூட்டங்கூடி
ஆனமட்டும் பிரயத்தினம் பண்ணின விடத்தில் காலம் திவாணமா
னதினாலே கோபுரத்தைவிட்டு இரங்கமாட்டோமென்று கோபுரத்தி
லேதானே யிருந்தான். ஸ்தலத்தார் நான்கு கோபுரவாசலையும்
அடைத்துக்கொண்டு சன்னதிவாசல் திட்டிதுறந்துகொண்டு கோவி
லுக்குள்ளே இருந்தார்கள். இப்படியிருக்குமிடத்தில் யுவஸ்ரீ
தைமீ ௩-௳ சுவாமிகோவில் ஆஸ்தான்மண்டபம் பொற்கம்பத்த
டிக்குத் தென் கீழ்மூலையில், இருக்கிற வாதாடும் பத்திரகாளியம்ம
னிட துகண் தைமீ ௩-௳ விடிந்து இரண்டு நாழிகையளவில் வி
ழித்த கண் ௫-௳ உதயகாலத்தில் மறைந்தது. இந்த அதிசயம்
நான்குமுகத்திலேயும் அறியப்பட்டு வெகு ஜனங்களெல்லாம் திரு
நாள்போலேவந்து பார்த்து அதிசயப்பட்டார்கள். அப்பால் ஈசுவ
ரஸ்ரீ சித்திரைமீ முதல் வடக்கே தேவனும்பட்டணத்திலிருக்கிற
பரங்கிகள் வகைக்கு முந்தான்கானுசாய்பு அவர்கள் தெற்கே திரு
நெல்வேலியில் போயிருந்தவர் மதுரைக்கோட்டையைச் சுற்றி வ
ளைந்துகொண்டு சித்திரைமீ முதல் ஆவணிமீ வரைக்கும் கோட்
டையடைபட்டு ஜனங்கள் எல்லாம் வெகு உபத்திரவப்பட்டு புரட்
டாசிமீ வரையில் கோட்டையிலேயிருந்த பராக்குதுல்லா கல்லின்
பேரில் இறங்கி திருப்புவனம் போய்ச்சேர்ந்தான். கானுசாய்பு அ

வர்களும் திரிசிரபுரம் கோட்டையிலிருக்கிற மீனாக்ஷிநாதபிள்ளை குமாரன் முத்தழகுபிள்ளை அவர்களும் வந்துகோவில்வாசல்பட்டணமெல்லாஞ்சுற்றிப்பார்த்து கானுசாய்பு அவர்கள் சமுகத்திலேபோய் இந்தச் சன்னதி மகாசன்னதி, மகாதெய்வங்கள், கர்னாடகத்திட்டம் நடப்பிவிக்கவேணுமென்று சொல்லி கோவிலுக்கு முன் பின் அத்துப்படிக்கு கர்னாடகத்தில் நடந்தபிரகாரத்துக்கு கோவில்சீமையெல்லா மேழுகோவிலுக்கும்விட்டு சுவாமி திருவாலவாயுடையார் கோவிலுக்கும் சாந்தி சம்ரோக்ஷணையும் பண்ணுவித்து ராயகோபுரத்திலிருந்து பக்கிரியினுடைய நிசானையும் பிடுங்கி அவனையும் அடிதண்டமாகவடித்து பேட்டுக்கு அப்பாலேகொண்டுபோய்விட்டு கோவில்களுக்கு நித்தியப்படி தேர், திருவிழா, உற்சவாதிகளும் நடப்பிவிக்கிறதற்கு ௴ ௧-க்கு ஆயிரம் பொன் வீதம் வருஷத்திலெ ௰௨ ௲ பொன் வீதம் நடப்பிவிக்கச்சொல்லி தலத்தார் நிருபகிராமங் கட்டளைக்கிராமம் அர்ச்சனாபாககிராமம் விட்டுக்கொடுத்து நடப்பிவித்துக்கொண்டு வந்தார்கள். இந்தப்பிரகாரம் ராஜ்ஜியம் ஆளுகையில் புதுச்சேரி பரங்கிகளுக்கும் தேவனாம்பட்டணம் பரங்கிகளுக்கும் கலாபமும்வந்து திரிசிரபுரம் கோட்டைவரைக்கும் புதுச்சேரியார் கட்டிக்கொண்டு இருந்தவிடத்தில், இவ்விடத்திலிருந்து கானுசாய்பு அவர்களும் முத்தழகுபிள்ளையும் திரிசிரபுரங் கோட்டைக்குப் போய், புதுச்சேரிப் பரங்கிகளைத் தொம்சமாய் அடித்து அவர்கள் கட்டின சீமையெல்லாம் கட்டிக்கொண்டு தேவனாம் பட்டணத்தில் கபித்தானை சந்திக்குமிடத்தில், கபித்தான் சகல விருதுங்கொடுத்து வெகுமதியுஞ்செய்து, பிரமாதி௵ வைகாசி௴ மதுரைவந்து சேர்ந்தார்.

“பிரமாதீச௵முதல் சித்திரபானு௵ வரைக்கும்ஸ்தலத்தார், கிராமம் பூமிகளுக்குள் பொறுப்பும் வாங்கிக்கொண்டு கிராமங்களும் விட்டு கோவில்பூஜைக்கு ௵ ௧-க்கு ஆயிரம்பொன் திட்டப்படிக்கு நடப்பிவித்துக்கொண்டு வந்தார்கள். சுபானு௵ புரட்டாசி௴ முதல் தாருண௵ புரட்டாசி௴ வரைக்கும் சென்னபட்டணம் வெள்ளைக்காரரில் மேஸ்தர் கர்னல்பிரேஷ்டனும் வெகுபேர் வெள்ளைக்காரரும் நவாபும் மமுதிலீகான் நவாபுசாயபு அவர்களும், மா



போசு கான்சாயபு அவர்களும் சேதுபதி உடையாத்தேவர் தொண்டைமான் முதலான பாளையப்பட்டுச்சனங்களும் வந்து கோட்டையைச்சுற்றிவளைந்துகொண்டு அடைகோட்டைப்பட்டது. சகாப்தம், ௲௬௱௮௰௬-க்கு மேற்செல்லாநின்ற தாருண௵ ஐப்பசி௴ ந-௨ மம்மது இசுபுகானையும் பிடித்துத்தூக்கிலே போட்டு நவாப்பு மம்மது லீகான்சாயபு அவர்களும் கோட்டைக்குள் பிரவேசமானார்கள். அப்போது ஸ்தானீகர் ஸ்தலத்தார் சகலமான பேர்களும் போய்க்கண்டார்கள். அப்போது மதுரைச்சீமை அமில் அபுதலுகான்சாயபு அவர்களுக்கு உத்திரவான வயணம்-ஏழு கோவிலுக்கும் ௵-க்கு, ஆறாயிரம் பொன் பூஜைதிட்டம் பண்ணுவித்துஸ்தலத்தார் கிராமம் பூமியும் விட்டு மாமூல்படிக்கு நடப்பிவைத்து கோவிலுக்கு ஐந்நூறு ரூபாயுங்கொடுத்துச் சம்ரோக்ஷணையும் நடப்பிவைத்தார்கள். இந்தப்பிரகாரம தாருண௵முதல் விகுருதி௵-வரைக்கும் மம்மது அபுதலுகான்சாயபு அவர்கள் துரைத்தனம் ௵-௭. கர௵-முதல் ஹேவிளம்பி ௵வரைக்கும் மோதீன்சாயபு அவர்கள் துரைத்தனம். மல்லாரிராயரவர்கள் துரைத்தனம் ௵-௨. அப்போது துபாசி வெங்கிடேசுவரமுதலியார் கோவில்பூஜைக்கு ஏற்றுக்கொண்டு ஆறாயிரம்பொன் ரொக்கம் வா[illegible] கோவிற் பூஜை நடப்பிவித்து வந்தார்கள்.

“விளம்பி௵ காதருசாய்பு அவர்கள் துரைத்தனம் ௵ ௧, விகாரி௵ கயாலாபெகுகான்சாய்பு அவர்கள் துரைத்தனம் ௵ [illegible] சார்வரி௵ முதல் பிலவ௵ வரைக்கும் ௵ ௨ மல்லாராயரவர்கள் துரைத்தனம். சுபகிருது௵ முதல் குரோதி௵ வரைக்கும் ௵ ந-க்கு மேஸ்த்தர்ட்டூரியன் துரையவர்கள் நாளையில் கித்தலூர் வெங்கிட்டராயரவர்கள் அதிகாரத்தில் நவாபு சாய்பு அவர்கள் பர்வானாப்படிக்குக் கோவிற் பூசை ஆறாயிரம்பொன் திட்டம் பண்ணினபடிக்கு நடப்பிவைத்து ஸ்தலத்தார் நிர்வாகக்கிராமங்கள், கட்டளைக்கிராமங்கள் அர்ச்சனாபாகக்கிராமங்கள் பட்டர்வீதி சகலமும் விட்டு நடப்பிவித்து வந்தார்கள். விசுவாவசு௵ தீவாணத்தமில் செகுமம்மதுசாய்பு அவர்கள், அமுல் பண்ணினார்கள். பராபவ௵ சுப்பராயரவர்கள் அமுல் பண்ணினார்கள். பிலவங்க௵ இரா

மசாமி ஐயனவர்கள் அமுல் பண்ணினார்கள். கீலக௵ முதல் சௌமிய௵ மாசிமீ வரைக்குர் சுப்பராயரவர்கள் அதிகாரம். சௌமிய௵ பங்குனிமீ முதல் சாதாரண௵ ஆவணிமீ வரைக்கும் ராமசாமி அய்யனவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். சாதாரண௵ புரட்டாசிமீ கும்பினியாருக்குச் சீமையாகி மேஸ்தர்மக்களுட்டு துரையவர்கள் விரோதிகிருது௵ வரைக்கும் அதிகாரம் பண்ணினார்கள். அவர்கள் அதிகாரத்தில் நவாபு சாய்பு அவர்கள் பர்வாணாப்படிக்கு நடப்பிவித்தார்கள். அதின்பிறகு, பரிதாபி௵ காதருசாய்பு அவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். பிரமாதீச௵ முதல் ஆனந்த௵ வரைக்கும் இரண்டு ௵ ராமசாமி அய்யனவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். ராக்ஷச௵ நள௵ ௵உ-க்கு பொக்ஷதார் வெங்கிட்டராயரவர்கள் அதிகாரம் பண்ணினார்கள்.

"பிங்கள,காலயுக்திக்கு ௵ உ ராமசாமி ஐனவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். சித்தார்த்தி௵ ராவோபண்டிதரவர்கள் அதிகாரம் பண்ணினார்கள். ரௌத்திரி௵ நாராயணராயரவர்கள் அதிகாரம். அதுவரைக்கும் கோவிற் பூசையும் மாமூல்படிக்கு நடப்பிவித்து நிர்வாகக்கிராமங் கட்டளைக்கிராமம் முதல் நடப்பிவித்தார்கள். ரௌத்திரி௵ ஆனிமீ ௫-உ முதல் துன்மதி௵ ஆடிமீ உயிரு-உ வரைக்கும் மீறு அஸ்தாகான்பாதரவர்களுக்குச் சீமையாய் ரெங்கராயரவர்கள் அதிகாரம்பண்ணினார்கள். அவர்களும் மாமூல்படிக்கு நடப்பிவித்தார்கள். அப்பால் துன்மதி௵ ஆடிமீ உயிச-உ மகாராஜ மான்யராஜ ஸ்ரீ: கும்பினியாரவர்கள் பாரிசமாகி மாமூல்படிக்கு நடப்பிவிக்கிறார்கள்.

"சாலிவாகன சகாப்தம் ௲௭௱உயிரு கலியப்தம் சது......உ இதன்மேல் செல்லாநின்ற துன்மதி௵ ஆடிமீ உயிசஉ திசா...ம ........... கோட்டுமாசதி மகாசாமானிய...ா......கும்பனியாரவர்கள் பரிசம் சீமை செப்பித்தியாய திண்டுக்கல் சீமைஒட்டுக்கும் கலெக்ட்டராயிருக்கிற மகா-ள-ள-ஸ்ரீ மேலூர் ஆற்டீசுசாய்பு அவர்கள் மதுரைச்சீமைக்குங்கலெக்ட்டராய்சீமைசேர்ந்தபடியினாலேஉடனே மதுரைக்குச் சின்னத்துரை மகா-ள-ள-ஸ்ரீ கியானே சாய்பு அவர்களும், பேஷ்கார் பீமராயரவர்களும் மதுரைச்சீமைக்குப் பேஷ்கார், நாராயணராயரவர்களும் உயிச-உ வந்துசேர்ந்தார்கள். உ௦௫-உ சின்னத்துரையாகிற மகா-ள-ள-ஸ்ரீ கியானே சாய்பு அவர்கள் உ௫-உ வந்துசேர்ந்தார்கள். சீமையெல்லாம் கும்பினியார் அவர்களுடையதாகையினாலே கான்சாய்பு அவர்கள் அரமனைக்கச்சேரியில் கச்சேரிபண்ணினார்கள். அவர்களுடைய பயத்தினாலே சீமையாதியந்தம் வணங்கிக்கொண்டு வெகுவாய்பயந்து நடந்தார்கள்."



---

# அருங்கலான்வயம், சீவகசிந்தாமணி, சூளாமணி.

கிறிஸ்தப்தத்துக்கு 50, 60 - வருடங்கட்கு முன்னர், ஸ்ரீபத்ரபாஹு ஸ்வாமிகள், தம்முடைய அஷ்டாங்க மஹாநிமித்த தத்துவஞானத்தால், முக்காலமு முணரவல்லாராதலால், ஏதோ சிற்சில துர்நிமித்தங்களைக்கண்டு, பன்னிரண்டுவருஷம் கொடியதுர்ப்பிக்ஷம் வரப்போகிறதென்றறிந்து தம் சங்கத்தார்க்குணர்த்த, அவர்களும் ஸ்வாமிகள் நியமனப்படி உஜ்ஜினியைவிட்டு நீங்கித் தென்றிசைநோக்கிப் பற்பல கிராமங்களையும் தரிசித்து, கடைசியாய், ஜனசங்கையாலும், தனதான்னியங்களாலும், பசுமுதலிய கால்நடைகளாலும் குறைவற்றிருந்த கடவப்பிர (1) க்ஷேத்திரத்தை வந்தடைந்தார்கள்.

இவ்வாறு குடியேறிய ஜைனர்களில் வெகுபிரக்கியாதியடைந்த மகான்கள் பலராவார்.

---

(1) இது பழங்கன்னடபாஷையில் கழ்வெப்பு என்றும் இக்காலத்து ஸ்ரீஜைனபெளகோளம், சிரவணபேள்குளம் என்றும் பெயர் பெற்றது. இது மைசூரிலாகாவைச்சேர்ந்த ஹாசனம் ஜில்லா, சென்னராயபட்டணந் தாலூகாவில், சென்னராயபட்டணத்துக்கு சமீபத்தில், 8-மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வூரில் 400-அடி உயரமுள்ள குன்றொன்றின்மீது 62-அடி உயரமுள்ள ஸ்ரீபாஹுபலி,கோமடேசுவரர், என்னும் ஸ்வாமியின் உருவஞ்செய்து நிறுத்தியிருக்கிறது. இக்கிராமமோர் அழகான முழு ஜைனக்குடியிருப்பு. இதனடுவில் தவளஸரோவரமென்னும் பெரிய அழகான குளமொன்றுண்டு.

தென்னாட்டில் ஆருகதமதம் பரவிச் செழிக்க மூலகாரணராயிருந்தவர் ஸமந்தபத்திரஸ்வாமிகள். இவர் ஆப்தமீமாம்சை யென்ற நூல் முதன்மையான கிரந்தமியற்றினார். இச்சுவாமி பர்த்திருஹரியை ஆங்காங்கே குறிக்கின்றமையால், இப்பர்த்திருஹரியின் காலமாகிய கி. பி. 650-க்குப் பிற்பட்டவராதல்வேண்டும். இவர்க்குப்பின் ஆப்தமீமாம்சைக்கு அஷ்டசதி என்ற வியாக்கினமொன்றருளிச் செய்தார் அகளங்கதேவர். இவர்காலத்துக்குப் பின்னரிருந்த சிம்மநந்தியாசாரியர் கங்கராஜ்ஜியம் ஸ்தாபித்தாரென்று கூறியிருக்கிறது. நவசப்தவர்ச்சியமியற்றிய வக்கிரகிரீவர் சிம்மநந்திகளுக்குப்பிற்பட்டவர். ஆப்தமீமாம்சைக்கு மற்றுமோர் உரை, ஆப்தமீமாம்சாலங்காரம் அல்லது [illegible] என்னும் பெயரால் பாத்திரகேசரியாசாரியராலியற்றப்பட்டது. இவருக்குச் சற்றேறக்குறைய சமகாலஸ்தரான மாணிக்கநந்தி என்பவர் பரீக்ஷாமுகம் என்னும் ஸ்யாத்வாத கிரந்தம் எழுதிமுடித்தார். மேற்கூறிய அகளங்கதேவர் சிஷ்யரான பிரபாசந்திரர் பரீக்ஷாமுகத்துக்கு பிரமேயகமலமார்த்தாண்டம் என்னுமோர்வியாக்கினமும் நியாயகுமுதசந்திரோதய மென்னும்நூலுமியற்றி [illegible] கி. பி. 750-ல் சல்லேகனவிதியால் (2) சமாதியடைந்தனர். இவரைக்குறித்த சாஸனமொன்று சிரவணபெள்குளத்திலிருக்கிறது.

இவ்வாசாரியர் வழியிலேயே தோன்றியவர் ஜினசேனர். இவர் ஜைனஹரிவம்சமும், பார்சுவாப்பியுதமும் மஹாபுராணத்தின் முதற்பாகமாகிய ஆதிபுராணமுமியற்றியவர். இவர் கி. பி. 783 முதல் 814 வரையிருந்தவர். இவர் சிஷ்யர் குணபத்திரமுனிவர். இவர் தம்மாசாரியரால் தொடங்கப்பட்டு செம்பாதிமுடிவுபெற்ற மஹாபுராணத்தின் பிற்பாகமாகிய உத்தரபுராணமெழுதிமுடித்தார். இவர் இரட்டவரசனாகிய முதல்அமோகவர்ஷன் காலத்தும், இவன் குமாரன் இரண்டாம்கிருஷ்ணதேவன் காலத்துமிருந்தவர். இப்புராணம் முடிவுபெற்றது கி. பி. 897 (3). இவ்வுத்தர புராணத்திற்றான் சீவகன் சரித்திரம் வருகிறது. இப்புராணமே தமிழிலக்கியங்களிலாங்காங்கு "புராணப்பொருளாதலின்", "மெய்யாகிய புராணப் பொருளாலே" என்று குறிப்பிட்டுள்ளது. இக்குணபத்திராசாரியர் சிஷ்யர்தான் தமிழில் சூடாமணிநிகண்டு செய்த மண்டலபுருஷன் என்று தமிழகம் 1-தொகுதி 136-ம் பக்கத்து ஸ்ரீமாந்—குப்புஸ்வாமி சாஸ்திரிகள் மிகத்தெளிவாய்க் காட்டியிருக்கிறார்.

(2) இடையூ றொழிவில்நோய் மூப்பிவை வந்தால்,கடைதுறத்தல் சீலே கனை". "அருங்கலச்செப்பு.

(3) தமிழகம் தொகுதி 1, பக்கம் 135-ஐப்பார்க்க.



மேற்கூறிய ஜைனாசாரியர்கள் பற்பல சங்கத்தாராகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு சங்கத்திலும் பலகணங்களுள; இக்கணங்களும் தம்முள்ளே பல [illegible] களடங்கியுள்ளன. தென்றேயச் சங்கங்களில் மிகப்பிரபலமாயிருந்தது திரமிளசங்கம். இத்திரமிள சங்கத்தில் பிரசித்தியடைந்தது நந்திகணம்; நந்திகணத்தில் அருங்கலான்வயம் (4) வெகுபிரக்கியாதியடைந்தது. அருங்க கலான்வயம் தியங்குடியின் நிடும்பறை தீர்த்தத்தின் அருங்களான்வயமென்று ஒருசாஸனத்தில் (5) குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வருங்கலான்வயத்தார் முதல் முதல் தீயங்குடியாராயிருந்திருக்க வேண்டுமென்பது பெறப்படும். இத்தீயங்குடி திருவாரூர்ப்பக்கத்து 4-மைல் தூரத்தில் தீபங்குடியென்ற பெயருடன் இற்றைக்கும் ஜைனஸ்தலமாக விளங்குகிறது. இவ்வன்வயத்தோ [illegible] யாயினும் தமிழ், கன்னட, சம்ஸ்கிருத பாஷைகளில் நிபுணர்கள். இவர்கள் தமிழரேயென்பது இவர்களுள் ஒருவராகிய புஷ்பசேனர் தம்பெய

(4) ஸ்ரீ [illegible] ॥

" [illegible] அருங்களான்வய [illegible] ....."

இந்தசம்பந்தத்தில் " அருங்கலச்செப்பு" என்னும் கிரந்தத்தின் பெயர் கவனிக்கத்தக்கது. அருங்கலான்வயத்தாரொருவராலியற்றியது என்பது தொனிக்கிறது.

(5) " ஸ்ரீமத்தியங்[illegible] நிடும்பவறை தீர்த்த[illegible] அருங்கலான்வய[illegible] ஸம்ப[illegible] நந்திகண"

(Ep. Carn-Shimoga Vol, II. No. 35).

ரைப் புஷ்பசேனன் என்றெழுதிக்கொள்வதனாலும் நன்குவிளங்கும்(6)

இந்நந்தி கணத்தாருள்ளொருவராகிய பூஜ்யபாதர் என்பவர் தான் ஜைனேந்திர வியாகரணகர்த்தா; இது,

இந்த்³ரஶ்சந்த்³ர: காஶக்ருத்ஸ்நாபிஶலீ ஶாகடாயந: ।
பாணிந்யமரஜைநேந்த்³ரா ஜயந்த்யஷ்டாதி³ஶாப்³தி³கா: ॥

என்று போபதேவரால் குறிக்கப்பட்டுள்ளது. அருங்கலான்வயத்தாரொருவராகிய தயாபாலர் சப்தாநுசாஸனத்துக்கு "ரூபசித்தி" என்றோர் பிரக்கிரியை செய்திருக்கிறார்.

குணபத்திரமுனிக்குப் பின் குமாரசேனரென்றொருவரும், அவர்க்குப் பின் சிந்தாமணியாசார்யரும், அவர்க்குப் பின் ஸ்ரீவர்த்ததேவருமிருந்தார்கள். அவர்களில் இரண்டாவரை—

யஶ்சக்ரே ருசிரம் வசோநிப³த்³த⁴க்ருதி சிந்தாமணிஶ்சிந்தாமணி: த்ரிதிவி
கேதோ ஸகாரியேந । ஸ ஸ்துத்யோ தவ ஸ்ரவஸ்ஸேவ்ய ஸாஜாஸ
ஜாதஶ்சிந்தாமணிஜூதநிஷ்ப்ரேஷா நக்ஷயம்ஜயேந ॥

என்று வர்ணித்திருக்கிறது. * "தர்மார்த்த காமமோக்ஷங்களைக்குறித்து விவரிக்கும் சிந்தாமணியை வீடுகடோறும் பரவச்செய்த அப்பெரும்புகழ்படைத்த சிந்தாமணி முனியை சிந்தாமணியால் மிக்க நன்மையை யடையுமாந்தர்களெவ்வாறு புகழாதிரார்'' என்பது இதன்கருத்து. ஜைனர்களால் சதுரார்த்தத்தையுந் தர வல்லதாய்க் கொள்ளப்பட்டது, சீவகன் சரித்திரம் என்பது ஜைனமதவிஷயமறி ந்தவரெவர்க்கும் தெரிந்தவிஷயம். இப்படியிருக்க, இச்சிந்தாமணியை சாகடாயன வியாகரணத்தின் உரையாகிய சிந்தாமணியாயிருக்கலாமோவென்று மைசூர் சாஸன பரீக்ஷகராகிய ரைஸ்துரையவர்கள் மயங்குகிறார். இவ்வுரை எவ்வாறு சதுரார்த்தத்தையுந் தரத்தக்கதோ விளங்கவில்லை. இது சீவகன் கதையேயாமென்பது எமது துணிவு. இதற்குச்சான்றாக இவ்வாசாரியரை மற்றோர்சாஸனத்தில்,

க்ருத்வாசிந்தாமணிம் காவ்யம் ஸர்வேஷ்டாத்யஸம்யதம் ।
சிந்தாமணிர்ஜைநாநாம் ஸத்யசிந்தாமணிர்முநி: ॥

"சர்வாபீஷ்டங்களையுந்தரவல்ல சிந்தாமணியென்னுங் காவ்யத்தைச்செய்த சிந்தாமணிமுநியானவர் ஸத்யர்கட்கு (ஜைனர்கட்கு.) ஓர் சிந்தாமணி (நினைப்பதெல்லாவற்றையும் தர வல்லதோர்மணி) யைப்போன்று துலங்கினர்'' என்று புகழப்பட்டுள்ளார்.*

இச்சிந்தாமணியாசார்யரின் பின் காலவரையறையில் ஸ்ரீவர்த்ததேவர் வைக்கப்பட்டிருக்கிறார். இவர் இச்சாஸனத்தில்,

சூடா³மணி: கவீநாம் சூடா³மணிநாமஸேவ்யகாவ்யகவி: ।
ஸ்ரீவர்த்³த⁴தே³வ ஏவ ஹி க்ருதபுண்ய: கீர்த்திமாஹர்த்தும் ॥

என்று வியந்துகூறப்பட்டுள்ளார். கீர்த்தியடையவேண்டியவளவுபெருமையையுடைய சூடாமணியியற்றிய ஸ்ரீவர்த்ததேவரானவர் புலவர்கட்கெல்லாம் ஓர் தலைச்சூட்டணியைப்போன்றிருக்கிறார் என்பது இதன்பொருள். இதையும் ரைஸ்துரையவர்கள் தத்துவார்த்த மஹாசாஸ்த்ரத்துக்கு சூடாமணியென்றெழுதப்பட்ட உரையாயிருக்கலாமென்று நம்புகிறார். இச்சங்கை தவறென்பது, சூடாமணியையோர் காவ்யமென்று கூறியிருப்பதாலுணரலாம். அன்றியும் திருமுக்கூடல் நரசிபுரந் தாலூகாச்சாஸனமொன்றில்,*

விது³ஷு சூடா³மணிஷு சூடா³மணிகாவ்யக்ருதே ।
சூடா³மணிஸ்ஸ்தவ்யோ ஸம்பூர்ணலக்ஷ்யலக்ஷ... லக்ஷண: ॥

(6) "ஸ்ரீமத்மஹாமண்டலாசாரியரும் ராஜகுருக்களும் அப்பஸ்ரீ புஷ்பசேனதேவரும்......"

தர்க்கவ்யாகரணாதி³ஶாஸ்த்ரஸஹிதம் ஸஜ்ஜ்ஞாநமேதத் புரா
ஸ்ரீராஷ்ட்ரத்ரயராஜஸேவிதமணி: ஸ்ரீவாதி³ராஜோமுநி: ।
தச்சிஷ்ய: பரவாதி³வல்லப⁴வதி³ஸ் ஸாஹித்யரத்நாகர:
ஜீயாத் உத்³ருதஜைநஸம்யகி³ந: ஸ்ரீபுஷ்பஸேனோமுநி: ॥

(ஷை No. 44.)

* Sravana Belgola. No. 54.

* No. 105. Tirumukudal, Narasipur Taluk.

அறிவாளர்க்குத் தலையணிபோன்று சூடாமணியென்று பெயர்கூறப்பட்ட சூடாமணி காவ்யமாக்கியோன் காவ்யாலங்காரங்களெல்லாம் எடுத்துக்காட்ட வல்லனாயிருந்தான் என்று ஒருவாறு பொருள்படும் சுலோகத்தால் சூடாமணியென்பவர் புகழப்பட்டிருக்கிறார். ஸ்ரீவர்த்ததேவர் தாமியற்றிய காவியத்தால் சூடாமணியென்று பெயர்பெறுவதை நோக்கின சிந்தாமணியாசாரியர் என்பதும் காரணப்பெயர் என்று சொல்ல ஐயமியாதுளது? மேற்காட்டியதில் சூடாமணி ஓர் காவியமென்பது நன்றாய் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு சிந்தாமணியையும் சூடாமணியையும் அடுத்தடுத்துக்கூறுவதனாலும், இரண்டுங் காவியங்களென்பதனாலும், இவைகளையியற்றினவர்கள் திரமிள சங்கத்தாராயிருத்தலானும், எழுதிய கிரந்தங்கள் முறையே சதுரர்த்தங்களைத் தருவன, தலைமேலணியத்தக்கனவென்று வர்ணிக்கப்பட்டிருத்தலானும், அவை, தமிழ்ச்சீவக சிந்தாமணியும் சூளாமணியுமாயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றன. இன்னும் இவ்விருகிரந்தங்களும் ஜைனசமயத்தன. இவையெழுதியவாசாரியர்கள் மஹாபுராணமெழுதியதற்குப் பிற்காலத்தாராகவுமிருக்கிறார்கள். ஆதலால் மேற்குறிப்பிட்ட ஊகம் சரியாயின், இந்நூல்கள் கி. பி. 897-க்குப் பிற்பட்டவையாகவேண்டும்.

சிந்தாமணி உரைச் சிறப்புப்பாயிரத்தில்,

"வையகம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்ன..........."

என்று இந்நூலைச் சிறப்பித்தும், அதன் ஆக்கியோன் பெயரையும், அவரைப்புகழ்ந்தோர் பெயரையும் தெரிவித்துமிருக்கிறது. சிந்தாமணியியற்றியவர் பெயர் இதன்படி திருத்தக்கதேவரென்பது. இஃது இவர் இயற்பெயராயும், சிந்தாமணியாசாரியரென்பது காரணப்பெயராகவுமிருக்கலாம்.



இதிலேயே கூறப்பட்டுள்ள பொய்யாமொழி யென்னும் தொடர் சத்தியவாக்கியன் என்னும் பொருள்படுமோவென்று ஸ்ரீமாந்- மகாமகோபாத்தியாயர்-சுவாமிநாதையரவர்கள் ஊகித்தார்கள். அது பொருந்தலாம் என்பது அடியில் வருமாற்றான் விளங்கும். கங்கராஜ்யத்தை அக்காலத்திலாண்டவன் சத்தியவாக்கிய கோங்குணிவர்ம்மபூதுகபெருமானடி என்பவன். இவ்வரசன் கி. பி. 908 முதல் 950 வரையிலரசாண்டவன். கங்கர்களிலனேகர் ஜைனமதாபிமானிகள். ஆதலால் இவ்வரசனேயாகக்கூடுமென்று தோற்றுகிறது. ஆயின், இவ்வரசனோ கங்கன்: உரைச்சிறப்புப்பாயிரத்துக் கூறப்பட்டுள்ளவனாகிய பொய்யாமொழியோ வஞ்சியானென்று தெற்றென விளங்குகின்றான். கங்கர்களும் ஒருக்கால் பழையகாலத்தில் வஞ்சிப்பிரதேசத்திலிருந்து வந்ததாகக் கொண்டனரோ அறிகிலேம். கங்கநாட்டுத் தகடூரிலுள்ள சிற்றரசனொருவன் "வஞ்சியர்குலபதி யெழினிவகுத்த வியக்கரியக்கியரோ டெஞ்சிய வழிவுதிருத்தியிவெண்குணவிறைதிருமலை வைத்தான்.—அஞ்சிதன்வழிவருபவன்வழிமுதலி கலி அதிகன்வ........................விடுகாதழகிய பெருமாளே." என்று தன்னுடைய குலம் கோத்திரம் முதலி[illegible]ல்லிக்கொள்வதனால் இக்கங்கனும் வஞ்சியிலிருந்து வந்தவர்கள் வழித்தோன்றலோவென்ன மனந்துணிகிறது. உண்மையுறியக்கூடவில்லை. இனி,

சூளாமணியின் "நூற்சிறப்"பில்

திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன் புயலனைய கையன் றெவ்வைக்
கைக்கொட்டி நகைக்குமிகற் கார்வெட்டி யனையன்வள நாடற் கேர்பப்
பொக்கெட்டு மில்லாதான் புகழ்தரும தீர்த்தன்மலர்ப் பதம்பூ சிப்போன்
சொற்கெட்டா வரன்றோலா மொழிசூளா மணியுணர்வோர் துறைகண்
[டோரே.

என்று அதைச்செய்தவர் பெயரையும், அவர்காலத்தரசன்பெயரையும் கூறியிருக்கிறது. தோலாமொழியென்பது ஒரு பட்டப்பெயரேயன்றி அவர் இயற்பெயராகாது. ஸ்ரீ வர்த்ததேவர்க்கே தோலாமொழியென்று பெயரிருக்கலாமென்று தோன்றுகின்றது. கார்வெட்டிவிஜயன் இன்னானென்று இப்பொழுது விளங்கவில்லை. ஆயின்

க்கநாட்டில் இவ்வாசாரியர்களிருந்தகாலத்து, நொளம்பபாடிப் பல்லவர்க * ளென்று ஒருவம்சத்தார்க ளாண்டுவந்தார்கள். இவன் இவ்வம்சத்தாரிலொருவனாக வேண்டுமென்பது நிச்சயம்.

மறுபடியும் சூளாமணிப்பாயிரத்தில்,

நாமாண் புரைக்குங் குறையென்னினு நாமவென்வேற்
றேமா னலங்கற் றிருமானெடுஞ் சேந்த னென்னுந்
தூமாண் டமிழின் கிழவன்சுடரார மார்பிற்
கோமா னவையுட் டெருண்டார் கொளப்பட்ட தன்றே (பா. 3.)

என்று கூறியிருக்கிறது. இப்பாடலிற் குறிக்கப்பட்ட திருமானெடுஞ் சேந்தனும், மேற்காட்டிய பாட்டில் புகழப்பட்ட விசயனும் ஒருவனென்று நினைக்கவேண்டியிருக்கிறது. இவை இவ்வாறு நிற்க,

முன்னர்ச் சிந்தாமணி சூளாமணி விஷயங்களை எடுத்துரைத்தது சரியெனக்கொள்ளில் இவையியற்றிய சிந்தாமணியாசிரியரும் ஸ்ரீவர்த்ததேவரும் சுமார் கி. பி. 900-ல் இருந்திருக்கவேண்டுமென்பது விளங்கும்.

சிந்தாமணியை நச்சினார்க்கினியரும் பழநூலாகப்பாவிக்கவில்லை. ஆதலால் மேற்கண்ட ஊகம் ஒருசால் சரியாகவும் கூடும்.

து. அ. கோபிநாத ராவ்.

* நுளம்பர், பல்லவர், காடுவெட்டி, காடவன், போத்தரையன் என்பன பல்லவவம்சத்துப்பெயர்கள்.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஏனாதிநாயனார் புராணம்.

(முன்றொடர்ச்சி.)

(௧) புண்டரிகம் - புலிக்கொடி. பொன்வரை - மேருமலை. வயல்கள் பொருந்திய மருதமாகிய குளிர்ந்த இடஞ்சூழ்ந்து. எயினனூர் - மதில்பற்றிவந்தபேரென்று கொள்வாருமுளர். அங்ஙனங் கொள்ளுங்கால் சீரையுடைய மதில் பொருந்திய பழைய ஊர் எயினனூரென்க.

(௨) நாணற்கரும்போடு மென்மையாகிய கரும்பும், குளிர்ந்த வயல்களிலே தாழ்ந்துபோகக் கதிர்களையுடையநெற்கள் உயருந்தன்மையதாகக் குடிகள் விருத்திபெற்றிருக்கின்ற அவ்வெயினனூரில் உள்ள ஈழக்குலத்தவதரித்த சான்றார் ஏனாதிநாயனார். ஈழக்குலச் சான்றார் என்பதைப் பிராமணகுலத்துப் பிறந்த பிராமணன் என்பதுபோலக் கொள்க.

(௩) திருநீற்றைப்பேணுதலாகிய தொண்டன் வழிபாடு.

(௪) அகங்காரத்தாலடியையும் முடியையுங்காணாதவிட்டுணு பிரமாக்களையும் பேரருளால் அடிமைகொண்டாளுகின்ற சிவபெருமானுடைய அடியார்களுக்கு ஆக்குவார். கடப்பாடு - கடமை.

(௫) தள்ளாத தங்களுடைய தொழிலுரிமையின் தாயபாகத்துள்ளான் அதிசூரனென்பவனொருவனிருந்தான்.

(௭) தான் ஆள்கின்ற விருத்திகெடத் தங்கள் குலப்பங்கினீங்காத செய்தொழிலாகின்ற ஆசிரியத்தன்மையாலாகும் வளமானது தனக்குக்குறைந்து அவருக்குமேம்படலால் நாயனார்மாட்டே இசையாத பகையைச் செய்தான்.

(௮) சூரியனுதிக்க ஒளிகுன்றித் தோற்றங்கெடுகின்ற உதயகாலத்துச் சந்திரன்போல.

(௧௧) சேர்வுபெறுமாறு கச்சால் புரையிற் செறிந்த உடைமேற்கட்டி.

(௧௨) வேறிடத்து நின்றவர்களாகிய மாணுக்கர்.

(௧௩) பெற்றிபொருந்திய ஆண்புலி.

(௧௫) வலியஇடியேறு, மேகராசிகளை முன்கொண்டு, மின்வரிசைகளைத்தன்னுடவிற்கொண்டு ஆகாயத்திலும் பூமியிலும் எதிர்செல்வனபோலாக நெடிய பரிசைக் கூட்டங்களையும் முயற்சிபொருந்திய தொழிலையுடைய வாளையும் உடைய ஆடவர். உருமேற்றிற்கு ஆடவரும், மேகத்துக்குப் பரிசையும், மின்னலுக்கு வாளுமாம்.

(௧௬) காலில் வீரக்கழல்கட்டிய வீரர்கள், கைகளிலுள்ள, சரீரத்தையடக்குமாறு மிகுந்த ஒளியையுடைய பரிசை முற்படவந்து இரண்டணிவகுப்புக்களிலும் முற்பட்டார்கள். வேலொடுவேல் எதிரே நீளுதல் தாமிருந்த பாதலத்தைவிட்டு உயர்ந்தபூமியிற் பொருந்திய நாகவீரர்கள் நாவைச்சுழற்றலையொத்தன. கைகளிலுள்ள வட்டமுனைத்திட எனக் கூட்டுக.

(௧௭) வேறுகிய இரண்டணியிலுமெதிர்ப்பவர்களாகிய வன்கண்மையையுடைய வலிமைபொருந்திய வில்வீரர்களுடைய விற்கூட்

[illegible] ல்லாத பாணங்கள் நெருங்குதல் சிவந்த அக்கினியானது கிளர்ந்தகோபாக்கினியி கொடிகளை வளைத்து எதிரே சிந்திய சிறி பாத்தன. விழிக்கனல்-எழுவாய்.

ல்கள் தகைந்தன. பரிசையோடு பரி ன. நாளொடு - வாழ்நாளொடு.

விசியறுதுடி - வார்க்கட்டறுந்த உடுக்

சமீபத்துநடந்து, நேரேயெதிர்த்த இரு டையகால்களும் இருதொடைகளுமற, கை முறைப்படி வெட்டினன். வெட் உடல் தன்னைவெற்றிகொண்டோனுடை ன்னரே எறிய, சிங்கேற்றைப்போன்ற



(௨௧) கூரியநுதிபொருந்திய வேற்படையைக் கொண்டெதிர்த்தோர் சேர்ந்து முன்னரே உருவும்படி பரிசையோடு நேரே மார்பூடுருவ உரப்போடு ஒருவர்க்கொருவர் நேரே யெதிரெதிராகக்குத்தினர்; அரிய ஆன்மா நீங்கவும், நிற்கின்ற அவர்களுடைய ஆண்கைமையில் இருவரும் ஒத்திருந்தமையைப் போரிலே பகைவரைக் கொல்கின்ற படைக்கலங்களைக்கொண்டு அளவிடுபவரைப்போல்பவர் அளவிறந்தோரிறந்தனர்.

(௨௨) சில வீரராயுள்ளோர் அழகிய வில்வளையும்படி எதிர்ந்தவர்கள் புற்றிலுள்ள பாம்புபோன்ற பாணங்கள்பட, வில்லாகியபடை வெட்டுண்ணவும், நில்லாதவர்களாய் வெற்றிபொருந்திய உடைவாளை வீசினர்; முதன்மைபொருந்திய கொடையானது நிலைநிற்க முதிர்ந்த பெரிய செல்வமின்றியும் தம்மிடத்துள்ள பொருளாயுள்ளவற்றையுங்கொடுத்த கொடைக்குணமுடையாரைப்போன்றனர். சிலகண்டகர்கள் உளர் எனமாறுக.

(௨௩) யுத்தமுனையில் இறந்தவர்களாகிய வீரர்களுடைய பரந்த முகங்களுநிருள்ளனவென்று வருகின்ற பரந்த சிறையையுடைய சூழ்கின்ற கரியகாகங்கள் செல்வன சுழல்வன நெருங்குதலில. ஒளியையுடைய கண்கள் கொல்லருடைய உலைமுகத்திலே பொதிந்த பக்கத்தே நெருங்கிய கரியின்கட் டங்கிய [illegible] புகையைவிடுகின்ற அக்கினியை நிகர்த்தன. அழல் கண்ணும், கரி காகமுமாம்.

(௨௭) எதிராதோர் யுத்தகளத்தைவிட்டு நிலையானமெய்யுணர்வுவந்தபோதே அலைவுபட்ட காமமுதலிய குற்றங்கள்போலாயினர். விட்டு ஆயினர் எனமுடிக்க. மெய்யுணர்வு வந்தபோதே குற்றங்கள் எவ்வாறோடுமோ அவ்வாறு இவரைக்கண்டோடினரென்பது கருத்து.

(௨௪) யுத்தகளத்தில் சிலபடைவீரர் புண்பொருந்திய வழியே சொரியுங் குடர்களைக் கிளர்ந்த கழுகு பருந்தோடு கொண்டெழுகின்ற பொழுதினும் முற்செய்கை குன்றுதலிலராய் அம்முயற்சியின் கணின்றனர்; அவர் ஆகாயத்திற்செல்கின்ற கொடியை விடுகின்ற குணம்பொருந்திய விளையாட்டுப்பிள்ளைகளை வென்றனர்.

(௨௫) இம்முனைய - இந்தப்பகையையுடைய.

(௨௮) மீண்டாராகிய படைஞரைக்கொண்டு. விறல் வீராகிய வெவ்வியபுலிப் போத்தையொத்த நாயனார்க்குமுன்.

(௨௯) அந்நாயனார் தமது சாதுரியத்தால் கூரிய வாளின்ஒளிகாணச்சுற்றிவருகின்ற இடசாரி வலசாரியாகிய வட்டணையிலேதோன்றுதபடி சேர்ந்து பிடித்துத்தாக்கும்பொழுது அதிசூரனும் போரிலே பிழைபட்டு. படையையெறிந்துவிட்டென்றும், படையை வெட்டுண்ணக்கொடுத்ததென்றுமாம்.

(௩௦) மண்படுவான் - மண்விழுவான். அதிசூரனை இங்ஙனமாசிரியர் கூறியது இவனதுவஞ்சகக்கொடுமைபற்றி யெனவறிக. பாயலின்றிப் பூமியிற்படுப்பவனெனக் கோடலுமாம். பூமியிலிறப்பவனெனக்கோடல் சிறப்பின்று.

(௩௧) சேட்டாரும் - நீடித்தல் நிறைந்த; சேடு, ஆரும் எனப்பிரிக்க. வாட்டாயம் வாளினதுரிமை.

(௩௨) தான் என்றது அதிசூரனை. மேற்கொள்வார் - உடன்படுவார்.

(௩௯) விடக்கு - தசை.

(௩௮) மேற்கண்டேன் - இப்பொழுதே கண்டேன்.

(௪௦) அறிவாரிவர்க்கருள - அறிபவராய் இவருக்கு அநுக்கிரகஞ்செய்ய.

(௪௧) இனி நாம் ஏனாதிநாயனாருடைய பெருமையைப் புகழ்வதென்னை, பகைவனது கையிலுள்ள வாளால் பாசத்தைக்கெடுத்துத் தேவநாயகராகிய சிவனருளைப்பெற்றவரை எந்நாளுந்தம்மோடுடன் பிரியாத அன்பைக்கொடுத்து.

(இன்னும் வரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

# தனிச் செய்யுட்கோவை.

---

திரிசிரபுரம், அஷ்டாவதானம் ஸ்ரீமத் - இராமலிங்கம்பிள்ளையவர்கள் அகவலில் அமைந்த பழைய விடுபாடலொன்றை உதவினார்கள். இது, தலைவனுடன் வாழ்தலைவிரும்பிய தலைவி தோழிக்குக் கூறியதாம். இது பிள்ளையவர்கள் கூறியவாறே வேறு சிலரிடத்தும் கேட்கப்பட்டது.

"இராமழை பெய்த வீரவீ ரத்துள்
பனைநுகங் கொண்டு யானையேர் பூட்டி
வெள்ளி விரைத்துப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வே;
செங்கேழ் வரகுப் பசுங்கதிர் கொய்து
கன்று காத்துக் குன்றி லுணக்கி
ஊடுபதர் போக்கிமுன் னுதவினோர்க் குதவிக்
காடுகெழி யிந்தனம் பாடுபார்த் தெடுத்துக்
குப்பைக் கீரை யுப்பின்று வெந்ததை
இரவற் றூலம் பரிவுடன் வாங்கி
சோறது கொண்டு பீற லடைத்தே
ஒன்றுவிட் டொருநாட் டின்று கிடப்பினும்
நன்றே தோழிநங் கணவன் வாழ்வே".

இதனை, " வேண்டேன் பிறந்தகத்தீண்டியவாழ்வே " என்பதுவரையுள்ள அடிகளைத் தனியாக்கி இரண்டுபாடலாகவும் வழங்குவர்.

---

திருவேகம்பமுடைய நயினார்பேரில் இரட்டையர் அருளிச்செய்தவண்ணம்.

மறுத்தோன்ற வெளுத்தபிறை படப்பாந்த ளிடைச்செருகி
வளர்த்தோங்கி முடித்த சடையார்—காஞ்சனைமனையார்
மலர்க்காந்தள் முருக்கவிழ யிதழ்த்தேன்கள் குறித்தொழுகி
மடைத்தேங்கி யடைத்து வருநீர்—பொஞ்சுழிவழியே
சிறுத்தாண்டில் முரித்தசுற வரக்காம்ப லுழக்கியொரு
சிறுச்சேம்பை முறித்து வெடிபோய்—வீழ்ந்தயலருகே

திடப்பாங்கர் மூடக்கமுகின் மடற்கீன்று களித்துவரு
திருக்காஞ்சி புரத்தி றைவரோ—காம்பாரடியே
குறித்தேர்ந்து தடிக்குளுடல் வளைத்தாம்பி மூளைத்தனைய
குடைக்காம்பு பிடித்து வரும்வே—தாந்தவிரதியீர்
குலக்காந்த ளொருத்தனொடு குலக்காந்தி யொருத்தியிரு
குடித்தீங்கு விளைத்து மிகுமால்—பூங்கொடியனையாள்
உறச்சேர்ந்து மடித்தலையள் வளர்த்தேங்கள் தமக்குமலை
உயிர்ப்பாங்கி தமக்கு மலடா—தாம்புயமலரே
உலைப்போன்ற பாற்பொதியி னடித்தீய்ந்து விரற்கருகி
யுலக்கான்ற சுரத்தில் வருநீர்—தேர்ந்துளிர்தெரிவிரே"

இப்பாடல், இச்சங்கத்துள்ள காஞ்சிபுராணக்கலித்துறைப் பிரதியினிறுதியில் எழுதப்பட்டிருந்தது.

---

சவ்வாதுபுலவர் சிவகங்கை கவுரிவல்லப மகாராசாவிடம் பரிசிற்காகப் பலநாட்காத்திருந்தும் அதுபெறாது,அரசனைக்கண்டபோது பாடியது.

வல்லவனு குன்றுவுரி வல்லவனைக் காத்திருந்தாற்
கல்லையிலைக் காசிலரைக் காசுண்டா—வல்ல
தபிமான முண்டா வருமையுண்டா வாய்ச்சொ
லுபசார மாயிலுமுண் டா.

இப்பாட்டுக் கூறவும் அரசனுக்குக் கோபம்பிறந்து, புலவரைச் சிறைப்படுத்தான். இவ்வாறு, புலவர் சிறைக் கூடத்திருந்தபோது, அரசன் மைத்துனராகிய திருமலைத்தேவர் வந்துபார்க்க, அப்போது படிக்காசுப்புலவர் கூறியது.

நாட்டிற் சிறந்த திருமலையா துங்க நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்னுமொர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்துவைத் தானிரை தாவென்றுகூப்பிட்டதே.

இப்பாடலைக்கேட்டு அரசன் மைத்துனர் புலவரைச் சிறைநீக்குவித்தார்.

---



கடிவாங்குங் கமழ்சேது ரகுநாத னேறிவருங் களிநல் யானை
அடிவாங்கி முன்னடந்தால் வடகலிங்கங் கிடுகிடென்றே யதிருமக்கங்
குடிவாங்கு மேழ்கடலு முள்வாங்கு மொன்னலர்கள் கோட்டை வாசற்
படிவாங்கும் பாராசர் முடிவாங்கும் சேடன்முடி பதைக்குந் தானே.

இஃது, இரகுநாதசேதுபதிபவனிவரும்போது யானைமேலேறிச்சென்ற சேதுஸம்ஸ்தானப்புலவரான சவ்வாதுப்புலவர் சேதுபதியேறிவந்த யானையைப் புகழ்ந்துகூறியது. இதில் "யானை அடிவாங்கிமுன்னடந்தால்" என்னுந் தொடர் பொருட்சிறப்பின்றி "பாகனால் அடிபெற்று முன்னடக்குமாயின்" என்னும் இழிபொருள் பயப்பதாக, அப்பவனியிலே சிவிகையிலேறிச்சென்ற மிழலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் சேதுபதிக்கு எடுத்துவிளக்கி தாம் வேறு கவி பாடிக்களிப்பித்தனரெனவும், சேதுபதி அதற்கு மகிழ்ந்து அக்கவிராயரைச் சிறப்பித்தனரெனவுங்கூறுவர்.

---

சவ்வாதுப்புலவர் புதுக்கோட்டைராசாவைப்பற்றிப் பாடியது.

காயாத தீயுமில்லை பாயாத புலியுமில்லை கற்றோர் வந்தால்
ஆயாத வேந்த னில்லை மடிக்கனத்தால் வழிப்பயமுண் டாய்ந்துபாராய்
சாயாத முடிவிசய ரகுநாத தொண்டைமான் சாற்றக் கேண்மோ
நீயாதி சேடனொப்பை கல்வியுண்டு கேள்வியில்லை நிசங்கண் டோமே.

பிரசங்கமாலையினின்றும் எடுக்கப்பட்டது.

எட்டைய புரநாக லாபுரம் மணியாச்சி யிரசக்க னூர்கோட் டையூர்
எழாயி ரம்பண்ணை சந்தையூ ரூற்றுமலை யெழுமலை மருங்கை நல்லூ
ரிலகுமன் னூர்கோட்டை பாவாலி சிவகிரி யிலக்கைய னூர்மூல் லையூ
ரிடையகோட் டைப்பதி நிலைக்கோட்டை தேவாரம் ராமகிரி கன்னிவாடி
தொட்டப்ப னூர்கம்பை காசைவா ராப்பூரு தோகைமலை யழகாபுரி [மாத்
சுராண்டைதலை வன்கோட்டை பழனியாய்க் குடிசமுத் தூர்விருப் பாச்சிபட
தூர்கடம் பூர்பெத்த னன்னூற்று நகர்குளத் தூர்காமனூர் சாப்பிடூர்
தும்பிச்சி நாய்க்கனூர் நத்தமூர்க் காடுசேற் றூர்வெள்ளி குன்ற மலைய
புட்டிவட கரையமைய நாயக்க னூர்கொல்ல பட்டிசக் கந்தி கோலார்
பட்டிமத வானையூர் மேன்மாந்தை ரோசலைப் பட்டிவீ ரமலை சிங்கம்
பட்டிநெற் கட்டுசெவல் நற்பெரிய குளமாத்தி பட்டிகுரு விகுளமதுவார்
பட்டிகரி சற்பட்டி நடுவூக் குறிச்சிகோம் பைகவண் டன்கோட் டையூர்

கட்டபொம் மன்னூர்கு மாவாடி கவினிளசை கடுவூர்நல் லுதயப்பனூர் [முங்
கனகொலங் கொண்டாரெனெ டெழுபத்தி ரண்டுடன் கருதுமெண்ணேழ்தேச
கவியருமை யறிபவர்க ளுண்டதினு நின்போற் கவித்திறமி யாவரறிவார்
கனமேவு புனல்சூழும் வயல்நீடு மலைமேவு கதிர்காம வடிவேலனே.

இக்கவியிற் பாண்டியநாட்டிலுள்ள எ௨ - பாளயப்பட்டுக்களும் கூறப்பட்டுள்ளமை காண்க.

இராமசாமிக் கவிராயர்,
சேற்றூர்ச் சமஸ்தான வித்வான்.

---

# சிற்றாராய்ச்சிகள்.

## க. காப்பியக்குடி.

உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள், "தொல்காப்பியன்" என்பதற்கு "பழையகாப்பியக்குடியிலுள்ளோன்" என்று பொருள் கூறுதலால், 'காப்பியம்' என்பது பார்ப்பாரது பழயகுடிவகையுள் ஒன்றென்று விளங்குகிறது. இக்குடியே "காப்பியத்தொல்குடி கவின்பெறவளர்ந்து" எனச் சிலப்பதிகாரத்துங் கூறப்பட்டுள்ளது. பல்காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் பழைய தமிழாசிரியரும் இக்குடியைச் சேர்ந்தவர்போலும். இனி, இருக்கு முதலாயவேதங்களில் இந்திரனுடைய நட்பாளராகிய உசனர் என்னும் இருஷி "காவ்யர்" என்று அழைக்கப்பெறுகிறார். அஃதாவது கவியின் வமிசத்தவரென்பது. காவ்யன், உசனன் என்பன சுக்கிரபகவானுடைய பெயர்கள். எனவே, தொல்காப்பியனார் முதலியோர் அக்காவியக்குடியில் உதித்தவரென்று நிச்சயிக்கலாம். இனி, தொல்காப்பியனார் என்னுந் தொடரிலுள்ள "தொல்" என்னும் அடை காப்பியக்குடிக்குப் புணர்க்கப்பட்டதென்று கொள்ளுதல் ஒன்று; அன்றி அதனை அக்குடிப்பிறந்த முனிவர்க்குரிய தாக்கலும் பொருந்தும்; வடமொழியில் பராசரர் என ஒரு முனிவர் காணப்படினும் அவரின்வேறாக "விருத்தபராசரர்" என்னும் அடையுட



னும் ஒருவர் வழங்கப்படுகின்றார். அதுபோலவே தமிழ்மொழியில் வழங்கும் காப்பியர் பலரினின்று பிரித்தற்குத் "தொல்" என்னும் அடை புணர்க்கப்பட்டதென்று கொள்ளலாம். தமிழில், "விருத்த" சப்தத்திற்கு நேராகத் "தொல்" என்பதை வழங்கல் பழையவழக்கமென்பது, கபிலர் எனப் பெயர்பெற்ற புலவர் பெருமானொருவர் இருப்பினும், அவரின்வேறாகத் "தொல்கபிலர்" என மற்றொருவர் சங்கச்செய்யுள்களில் வழங்குதலாலும் தெளியத்தக்கது.

## ௨. அந்தணர்.

இச்சொல்லுக்கு நச்சினார்க்கினியர் "வேதாந்தத்தையே பொருளென்றுமேற்கொண்டு பார்ப்பார்" எனப் பாலைக்கலியிலும் பத்துப்பாட்டிலொன்றிலும் பொருள் கூறியிருத்தல் பலர் அறிவர். அந்தத்தை அணவுவார் அந்தணர் என்பது அவர் பதப்பிரிப்பு.

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்பதனால், "அழகிய தட்பத்தினையுடையார்" என்னும் நேர்பொருளுடைய இச்சொல்லுக்கு, நச்சினார்க்கினியர் இவ்வாறுபொருள்கூறியது சிலர்க்குப் புதுமையாகத்தோன்றக்கூடுமாயினும், திருமந்திரத்தில் வரும் "அந்தண்மைபூண்ட அருமறையந்தத்துச் சிந்தைசெய்யந்தணர்" என்னும் பாசுரத்தினின்று அவ்வுரையாளர்க்கு இக்கருத்து உதித்திருத்தல் கூடுமென்று தோற்றுகின்றது. இத்திருமூல அடிகளில் அந்தணர் என்ற சொற்கு, அழகிய தண்மைபூண்டவரென்றும், வேதாந்தத்தைச் சிந்தைசெய்பவரென்றும் இரண்டுபொருள் கூறப்பட்டிருத்தல் கண்டுகொள்க.

## ௩. திருமந்திரப்பாடல்.

இலைநல வாயினும் எட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
இளையாள், முலைநலங் கொண்டு முறுவலிக் கின்ற
வினையுடை நெஞ்சினை வெய்து கொளீரே.

இத்திருமூலர்வாக்கு, யாப்பருங்கலவிருத்தியில், சீர்மிகுவந்த அடிச்செய்யுட்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. இப்பா

டலின் மூன்றுமடியின் முதற்சீராகிய "இளையாள்" என்பது இப்போது அச்சுப்பிரதிகளிற் காணப்படவில்லையாயினும், பழைய நூலாகிய அவ்விருத்தியில் அஃதிருத்தல் கண்டலால், முன்னையதே பழம்பாடமென்பது துணிவாகும்.

### சு. ஒட்டக்கூத்தர் ஊர்.

"கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியோட்டக்கூத்தனென்றுங், கும்பமுனி யென்றும்பேர் கொள்வாரோ" எனவரும் பாடலைப் பலர் அறிவர். இதனுள் "காளியொட்டக்கூத்த"னென்பது "காழியொட்டக்கூத்த"னென்று பிரதிபேதங் காணப்படுகிறது. எனவே சீகாழியே கூத்தரூர் என்பது பெறப்படும். இவ்வாறன்றிக் "காளியொட்டக்கூத்தன்" எனக்கொள்ளுமிடத்துச் சிறந்தபொருளின்மைகாண்க. அன்றியும், ஒட்டக்கூத்தர், தாம்பாடிய தக்கயாகப்பரணித் தொடக்கத்தே, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைத் தம் குலதெய்வமாகக்கொண்டு வாழ்த்துதலும் அவரூர் அதுவேயாதல் வேண்டுமென்பதற்கு ஒரு சான்றாகின்றது.

### எ. திருவள்ளுவர் ஊர்.

இத்தெய்வப்புலவர் மைலாப்பூருக்குரியவரென வழக்குளதாயினும், இவர் மதுரைமாநகரிலும் இருந்தவரென்பதற்குத் தக்க மேற்கோள் ஒன்றுண்டு. திருவள்ளுவமாலையில்,

"உப்பக்க நோக்கி உபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"

என்னும் நல்கூர்வேள்வியார் பாடலில், "உத்தரமதுரைக்குக் கீதாசாரியனாகிய ஸ்ரீ கண்ணபிரான் எத்துணை விசேடமுடையரோ, அத்துணை, தென்மதுரைக்குத் திருக்குறளாசிரியராகிய திருவள்ளுவர் விசேடமுடையர்" எனக்கூறப்படுதலினின்று, நம் தெய்வப்புலவரது ஊர் மதுரை யென்பது நன்கு பெறப்படுமன்றோ?

பத்திராசிரியர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
6 MAR 1907
MADRAS.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்.

தொகுதி-ரு] பராபவ௵ தைமீ [பகுதி-ங.

## நிகண்டுகள்.

வடமொழி தென்மொழிகளிலே, நிகண்டு என்பது, சொற்களின் பொருளை விளக்கும் நூல்கட்குப் பெயராக வழங்குகிறது. நன்னூல் விருத்திகாரர் நிகண்டு என்னுஞ் சொல் இடுகுறிப்பெயர் என்பர். இதனைச் (சொற்களின்) கூட்டம், தொகுதி என்னும் பொருளில் வந்த "நிக்ரந்து" என்பதன் றிரிபு என்று கூறுவாருமுண்டு. இந்நிகண்டுகள்; கவிரூபமாகவும் சூத்திரரூபமாகவும் மாணாக்கர் எளிதில் மனப்பாடம் பண்ணுதற்கு ஏற்றபடி, முன்னோரால் செய்துவைக்கப்பட்டுள்ளன. பாஷையில் அழுத்தமான ஞானத்தை நம்முன்னோர் இந்நிகண்டுப்படனத்தாலே மிகுதியும் அடைந்துவந்தனர். நச்சினார்க்கினியர் முதலிய புலவர்பெருமக்கள் எங்ஙனஞ் சதுரகராதி வின்ஸ்லோ அகராதிகளைக்கொண்டு தம் அருங்காரியங்களைச் சாதித்தார்? அவர்கள் மனத்தில் நின்ற சொற்கடல்முன் அவ்வச்சு அகராதிகள் குட்டங்களேயன்றே! ஆகவே, நிகண்டு கற்று இலக்கிய இலக்கணந்தொடங்கிய நம்முன்னோரது வழக்கம், அவரது அழுத்தமான பாஷாஞானத்துக்கு முக்கிய காரணமாயிருந்ததென்பதில் ஐயமில்லை. இத்தகைய நிகண்டுநூல்கள், அந்நியதேசத்தவர்க்குப் புதியனவாகத்தோன்றினும், நமக்கு அவை இன்றுநேற்றுக் கிடைத்தவையல்ல; ஆரியருஷிகள் வேதத்துக்கு அங்கங்களாக வகுத்த ஆறுவகைச் சாஸ்திரங்களுள்ளே நிருத்தம் என்பது ஒன்று. இஃது உலகியற் சொல்லொழித்து, வைதிகச்சொற்களின் பகுதி விகுதி முதலிய உ

றுப்புக்களைக்காட்டி, பதப்பொருள் முதலியவற்றை விளங்கவுரைக்கும் ஒரு கருவி நூலாம். இச்சாஸ்திரத்தை வேதத்திற்குச் செவியெனப் புனைந்து கூறுவர். "கற்பங் கைசந் தங்கால் எண்கண், தெற்றெ னிருத்தம் செவிசிக்கை மூக்கு, உற்ற வியாக ரணமுகம் பெற்றுச், சார்பிற் றோன்றும் ஆரண வேதா" என்பது மணிமேகலை. இந்நிருத்தவகையுள்ளேதான் நிகண்டு நூல்களையும் அடக்கிக் கூறுவர். இதனால், முற்காலந்தொடங்கியே, பதப்பொருள் கூறும் நூல்கள் பூர்வீகரால் கையாளப்பட்டுவந்தது என்பது வெளியாம். இந்நிருத்தம் வைதிகச் சொல்லையே ஆராய்வதாகலின், அதனுடன் உலகியற்சொல்லையும் ஆராய்கின்ற நிகண்டு நூல்களே யாவர்க்கும் உபயோகமாவன. இந்நிகண்டு: வடமொழியில், அமரசிஹ்மம், அம்ரதத்தம், விசுவம், விஷாமிர்தம், சப்தார்ணவம், சரஸ்வதிவிலாசம் முதற் பலவாகவுள்ளன. தென்மொழியில்; திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல், கயாகரம், அகராதி, ஆசிரியம் முதலியன. இந்நிகண்டுகளெல்லாம் தமிழ்மொழியுணர்ச்சிக்கு இன்றியமையாதனவாக முன்பிருந்தனவாயினும், அகராதிகள் வெளிவரவே, இவற்றின் பயிற்சி நின்று வருகின்றது. ஏனெனில், அவ்வகராதிப்பிரதியொன்று பக்கத்துக்கிடக்குமாயின் பதப்பொருள்களையெல்லாம் மனனம் பண்ணியதுபோலவே அஃது உதவுவதாகின்றது. ஆகவே, இன்னுஞ் சிலகாலத்துள் நிகண்டுகள் பழைமைபெருமைபற்றி மட்டும் போற்றற்குரிய நூல்களாய், முற்றும் வழக்கு ஒழிந்துவிடுமென்றே தோன்றுகிறது. இது பெரிதும் இரங்கத்தக்க சம்பவங்களுள் ஒன்றே.

## க. திவாகரம்.

தமிழில் வழங்கும் நிகண்டுகள், அவ்வக்காலத்து வழக்குகளைத் தழுவித் தக்கவர்களாற் செய்யப்பட்டன. இவற்றுள் திவாகரமே முன்னது. இதிற் சங்கத்துச்சான்றோர் வழக்குகள் மிகுதியாம். பிங்கலந்தை அதினும் பிற்பட்டது; பிறசான்றோர் வழக்குகளை இதிற்காணலாம். ஏனைய நிகண்டுகளில் பிற்கால வழக்குகள் பயிலும். இவற்றையெல்லாம் விளக்குதற்கு இஃது இடமில்லையாயினும், நிகண்டுகளைப்பற்றித் தனித்தனியேபேசும்போது முக்கியமானவற்றைக்



குறித்து எழுதப்படும். இனி, இந்நிகண்டுகளின் ஆதிவரலாறுகள் செந்தமிழ்மக்கட்கு இன்பந்தரத்தக்கனவாதலால், அவற்றை ஒவ்வொன்றாகக் காலமுறைப்படியே வைத்து என் சிற்றறிவிற்கேற்ப ஆராய்வேன். இம்முறையில் திவாகரம் முந்தியதென்று முன்னரே கூறினேன். இதற்கு முதனூல் ஆதிதிவாகரம்என்பதொன்று எனச் சிலர் கூறுவர். அவ்வாறு ஒன்றுண்டென்பது எதனாலும் பெறப்படாமையால் அஃதீண்டாராய்ச்சியில்லை. இந்நூல் சேந்தன் என்னும் சிற்றரசன் வேண்டுகோளின்படி திவாகரமுனிவராற் செய்யப்பட்டது; இதுபற்றிச் சேந்தன் திவாகரம் எனவும் வழங்கும். இச்சேந்தன் என்பவன், காவிரிக்கரையிலுள்ள அம்பர் என்னும் நகர்க்கு அதிபதியென்பதும், ஆரியகுலத்தவனென்பதும், கல்விகேள்வி மிக்கவனென்பதும், வடமொழி தென்மொழிகளிற் செய்யுளியற்றும் வன்மையுடையவனென்பதும், இரவலர்க்கும் புலவர்க்கும் பெரியகளைகணானவனென்பதும் திவாகரத்தால் விளங்குகின்றன. அன்றியும், சம்பாபதி என வழங்கப்படும் புகார்த்தெய்வத்திற்கு அந்தாதியும்; ஸ்ரீராமபிரான் கோதண்டம், அருச்சுனன் காண்டீபம், முருகக்கடவுள் வேலாயுதம்—இம்மூன்றற்கும் புகழ்ச்சிப்பாடலும் பாடினவனென்பதும், இத்தகைய குணவிசேடங்களுடைமையால் நல்லிசைப்புலவராகிய ஔவையாற் புகழப்பட்டவனென்றும் அந்நிகண்டின்தொகுதியிறுதிக்கட்டுரைகள் கூறுகின்றன. புறநானூற்றில் ௩௮௫-ம் பாடலாகிய "வெள்ளிதோன்றிய" என்னும்பாட்டுக் கல்லாடனார் இச்சேந்தனைப்புகழ்ந்து கூறியதாம். இவற்றால் திவாகரம் நல்லசங்ககாலத்தே தோன்றிய பெருமையுடையதென்பது ஐயமின்றிப் போதரும். வேறுவிதமாகச் சொல்லின், இற்றைக்கு 1800-வருஷங்கட்கு முந்தியது என்னலாம்.

இனி, திவாகரத்துள்ளே புகுந்தாராயின், அதிற் பிற்காலவழக்கொன்றும் காணமுடியாதென்பது திண்ணம். பிற்பட்ட நிகண்டுகளிற்போல, தமிழ்வள்ளலார் எழுவர்பெயர் இதிற் குறிக்கப்படவில்லை. இதன்காரணத்தை அறிதல்எளிது. அவ்வெழுவரும் திவாகரம் செய்யப்பட்டகாலத்தும் அதன்பின்னரும் விளங்கியவராதலின், இந்நிகண்டுடையார் அவரை வரையறுத்துத் தொகைகோடல் முடியா

தன்றோ. பின்வந்த பிங்கலர் முதலியோர்க்காயின், அவ்வாறு செய்தல் அமையும். இவ்வாறே பின்வந்தவராகிய குமணனையும் நல்லியக்கோடனையும் பாடியபுலவர்கள் அவ்வேழுவள்ளல்களையுஞ் * சுட்டித் தொகைகொண்டமை காண்க. இனி, பல்லவரென்னுஞ் சொல்வழக்கம் திவாகரர்க்குத் தெரியவராதது. பிந்திய நிகண்டுகளில் அது காணப்படும். ஆனால், சளுக்கியவரசரைப்பற்றித் திவாகரம் கூறுகின்றது. இவர் வேள்புலவரசர் என்று குறிக்கப்பட்டுள்ளார். வேள்புலம் என்பது இப்போது பம்பாய்மாகாணத்தைச் சார்ந்த ஒரு பகுதி யென்பதும் பிறசளுக்கியர்வரலாறுகளும் முன்னரே என்னால் விளக்கப்பட்டுள்ளன. இவ்வரசர் வராகத்துவசம் உடையவரென்பது, திவாகரத்தில், "கேழல் வேள்புல வரசர் கோடியே" எனவருவதனால் தெரிகிறது. பிற்பட்ட சளுக்கியசாஸனங்களில், "பாலித்துவசம்" என்பதன்றி இவர்க்கு வராகக்கொடி காணப்படவில்லையாயினும் வராகமுத்திரை அவற்றிற் கூறப்படுகிறது. பாலித்துவசமும், பிந்திய சளுக்கர்கொண்டதேயன்றி பழையசளுக்கியரதன்மை சாஸனத்தாலே அறியப்படுதலால், அப்பழையவர்க்கு, முத்திரை போலக் [illegible] புன்றிவரைந்ததாகவே யிருக்கலாமன்றோ! இனி, பூழியன் [illegible] லேயே னுக்கின்றி, சேரனொருவனுக்கே திவாகர என்னும் பெயர், பாண்டி[illegible] சங்கநூல் முழுதுந் தேடினும் இவ்வாறே த்திற் காணப்படுகிறது. [illegible] அதனைக் காணலாம். பதிற்றுப்பத்துப் பதிகம் [illegible] க்கண்ணி நார்முடிச் சேரல் என்பவன், "பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ" என்று புகழப்படுதலால், அவன் காலமுதல் 'பூழியன்' என்னும்பெயர் சேரற்கு வழங்கியதாகக் கருதலாம் இப்பெயர்வழக்கம், முத்தொள்ளாயிரமுடையார் திருமங்கையாழ்வார் காலம்வரையிலும் சேரற்கு வழங்கிவந்ததென்பது, † "பூழியர் கோக்கோதை" எனவும், "பரனே பஞ்சவன் பூழியன் சோழன் பார்மன்னர்மன்னர்" எனவும் வரும் அவ்விருவர் வாக்காலுந் தெரிகின்றது. பிற்பட்ட நிகண்டுகளிலும் நூல்களிலுந்தான் இப்பெயர் பாண்டியர்க்கு வழங்கத் தொடங்குகிறது. இவைபோன்ற சங்ககாலத்து வழங்கியசெய்

* புறம்-கடுஅ; சிறுபாணாற்றுப்படை.

† முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்-கூஎ (செந்தமிழ்த்தொகுதி-௪) பெரியதிருமொழி எ. எ. ௪.



திகள்பல திவாகரத்தில் அறியக்கிடத்தலால், சரித்திர வாராய்ச்சிக்கு இது பெரிதும் உபயோகமான தென்னலாம்.

## உ. பிங்கலம்.

இனி, அடுத்த பிங்கலத்தைப்பற்றிச் சிறிது ஆராயப்படும். இந்நிகண்டின் பாயிரத்தே இதனாசிரியராகிய பிங்கலமுனிவர் திவாகரர் புத்திரர் என்று கூறப்படினும், நூற்கணுள்ள சிலவழக்குகளை நோக்கும்போது, இது திவாகரத்திற்கு மிகவும் பிந்தியதாகவே எண்ணப்படுகிறது. உதாரணமாக:—பல்லவர் என்னும் பெயர் இழிஞர்க்கு இதிற்காண்கிறது. இதனால், பல்லவ அரசர் தம் நிலைகுலைந்து இழிவுற்றகாலத்தே பிங்கலந்தை செய்யப்பட்டதுபோலும் என்று கருத இடமுண்டாம். திவாகரத்தில் இச்சொல்வழக்கமே கண்டதில்லை. இவ்வாறே பிற்கால வழக்குகளை அங்கங்கே இதிற் காணலாம். ஆயினும், இற்றைக்கு 725-வருஷங்கட்கு முந்தியதென்று தெளியப்பட்ட நன்னூலுக்கு முற்பட்டதென்பது "பிங்கல முதலா நல்லோருரிச்சொல்" என்பதனாற் றெளிவாம். திவாகரத்திற்கண்ட சளுக்கியர் முதலியவழக்கு பிங்கலந்தையிற் காணப்படினும், அந்நூல் முன்னூலினின்று தழுவப்பட்டவை எனக்கொள்ளவே [illegible] இது நிற்க. "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, உடம்போ டுயிரிடை நட்பு" என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் கூறிய உரையில், குடம்பை—முட்டை என்றுரைக்கப்பட்டதை, அவ்வாறு முன்னூல்களிற்பொருள் வழக்கில்லை என்று மறுத்தாருமுளர். 'குடம்பை முட்டையுங் கூடு மாகும்" என்பது பிங்கலந்தைச் சூத்திரமாதலால், பரிமேலழகருரை முழுதும் ஆதாரவற்றதென்பது பொருந்தாமை காண்க. இச்சூத்திரம் ஏட்டுப்பிரதியிலுங்கண்டது.

## ௩. சூடாமணி நிகண்டு.

இனி, இப்பிங்கலந்தையைக் காலத்தாலடுத்துக் கூறற்குரியது சூடாமணி நிகண்டு. இது வீரைமண்டலபுருடர் என்னும் ஜைனரால் இயற்றப்பட்டது. இவர் ஆசிரியர் திருநறுங்குன்றை-குணபத்திராசாரியர் என்பவர். மண்டலபுருடர் கிருஷ்ணராயர் காலத்தவரென்பது "கிருட்டிணராயன் கைபோற் கொடைமடமென்ப தம்மவரையாது கொடுத்தலாமே" எனக் கூறுதலால் வெளியாகிறது.

இந்நிகண்டுடையாரே அருகதேவர்க்குப் புராணமொன்றும் இயற்றியிருந்தார் என்பது பாயிரத்தாலும், தொகுதியிறுதித் தற்சிறப்புப் பாடலாலும் அறியப்படும்.

இனித் தஞ்சைத் "தமிழகம்" என்னும் பத்திரிகையிலே ஸ்ரீமத். குப்புசாமிசாஸ்திரியவர்கள்,

"ஒருங்குள பொருளு மோர்ந்திட் டுரைத்தனன் விருத்தந்தன்னில்
இருந்தவை நல்லோர்குற்ற மியம்பிடா ரென்பதெண்ணித்
திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப் புராணஞ்செய்தோன்
பரந்தசீர்க்குணபத்ரன்றாள் பணிந்தமண் டலவன்றானே."

என்னும் பாடலில், "திருப்புகழ்ப்புராணஞ் செய்தோன்" என்னும் விசேடணத்தை "குணபத்திர" னுக்கேற்றி மகாபுராணத்தின் பிற்பாகமாகிய உத்தரபுராணத்தைச் செய்தவரும் இரட்டவரசனாகிய அமோகவர்ஷன் காலத்தவருமாகிய குணபத்திராசாரியரே மண்டலபுருடர் ஆசிரியரென்றும், அதனால் இந்நிகண்டின் காலம் இற்றைக்கு 1000-வருஷத்துக்கு முற்பட்டதாகல் வேண்டுமென்றும் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ச்சி உண்மையிற் புகழத்தக்கதாயினும், [illegible] எழுக்கு ஐயந்தருகின்றன. சூடாமணி நிகண்டுப் பாயிரத்திலே "சொல்லொடு பொருளுணர்ந்தோன்" என்னுங்கவி முதலாக "செகமெனும் பரிங்குமாட" என்னுங்கவியீறாக மண்டலபுருடராசிரியராகிய குணபத்திரர் புகழப்பட்டிருத்தலும், அவற்றுக்கு அடுத்தகவியிரண்டினும் மண்டலபுருடர் கூறப்படுதலும் நோக்குவார்க்கு நன்குபுலப்படும். இவற்றில் பிற்கூறியதிற்றான் "திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப்புராணஞ் செய்தோன், பரந்த சீர்க்குணபத்ரன் றாள்பணிந்த மண்டலவன்றானே" எனப்புராணச்செய்தி வருகிறது; இங்கேகூறிய "திருப்புகழ்ப் புராணஞ்செய்தோன்" என்பது உத்தரமகாபுராணஞ்செய்த குணபத்திரராயின், அவரைப்பற்றியபாடல்களிற் கூறும் விசேடணங்களோடு முக்கியமான இவ்விஷயமும் சேர்க்கப்படுவது முறையன்றோ? மண்டலபுருடரைப் புகழுமிடத்து, ஐயத்துக்கிடமான நிலையில், அத்தொடர் வைக்கப்பட நியாயமில்லை; ஆதலால் "திருப்புகழ்ப்புராணஞ் செய்தோன்" என்பது மண்டலவனுக்குக் கூறப்பட்ட அடையாகக் கொள்வதே நே



ரானதாம். சாஸ்திரிகள் சூடாமணி நிகண்டைப்பற்றி எழுதியத முன்பே வெளிவந்த மணிமேகலைப்பதிப்பில், மஹாமஹோபாத்யாய-ஸ்ரீ. சாமிநாதையரவர்கள் "இந்நூலாசிரியர் சைநமதத்தின் பெருமண்டூர் என்கிற வீரபுரத்திலிருந்தவரும் அருகதேவன் சரித்திரத்தைப்புராணமாகச்செய்தவருமாகிய மண்டலபுருடரென்பவர்" (பக்.௩௯௦) என்றெழுதியிருத்தலால், அத்தொடர்க்கு அவர்கள் கொண்ட கருத்தும் நான் கூறியதேயாதல் காண்க. அன்றியும், சூடாமணி வாக்கையும் போக்கையும் நோக்கும்போது, சாஸ்திரிகள் கூறியபடி அவ்வளவு பழங்காலத்துக்கு அஃதுரியதா என்ற ஐயம் தமிழுணர்ந்தோர்க்குத் தோன்றாமலிராது.

ஆயின் குணபத்திராசாரியர் வேறு யாவர்? என்னுங் கேள்வி இங்கே யுண்டாகலாம். விஜயநகர ராயர்காலத்தில் அப்பெயர் தரித்த ஒருவர் இருந்திருத்தல் கூடாதென்பதற்கு நியாயமில்லை. அன்றி, அமோகவர்ஷன் காலத்துக் குணபத்திரர் தமிழ்நாட்டவரே என்றற்கேனும் ஆதாரம் உண்டா? இவ்வாறு,குணபத்திரர் இருவராகவேண்டுமென்று நான் கூறுவது சிறிதும் ஆதரவற்ற விதண்டையன்று. சென்னைராசாங்கக் கைபெழுத்துப் புத்தகசாலையில் (Govermer Oriental Manuscript Library) "யதிதர்மம் ஸ்ரீ வகதர் ..." றொரு பிரதியுள்ளது. இதில் ஜைனமதவிதிகளும் ஆசாரங்களும் விரிவாக எழுதப்பட்டுள்ளன. முழுதும் வசனநடையில் அமைந்த இக்கிரந்தம் சிறந்த பண்டிதரால் எழுதப்பட்டதாகத் தெரியவில்லையாயினும், தம் சொந்தமதவரலாறுகளை நன்கறிந்த ஜைனரொருவரால் இஃதெழுதப்பட்டதென்று நிச்சயமாய் நம்பலாம். இதில் "பண்டிதர்வயணம்" என்பதன்கீழ், குணபத்திராசாரியர் என்பவர் ஐந்நூற்றுச்சில்லறைவருஷங்கட்கு முன் விஷ்ணுதேவராயர்காலத்தில்,* ஜைனமார்க்கத்திலே நடந்த சிலமாறுபாடுகளை நீக்கி அதைக்காத்தற்காக "பண்டிதர்களை" நியமித்தார் என்னும் விஷயங் கூறப்பட்டுள்ளது. இதனால், குணபத்திராசாரியர் என்பவரொருவர், பிற்காலத்து ராயர் நாளில் தென்னாட்டிலே விளங்கினரென்று தெரியவருதலால், இரட்டவரசனாகிய அமோகவர்ஷன் காலத்தவரொருவரை மண்டலபுருடர்

* கிருஷ்ணதேவராயர் என்பது இவ்வாறு பிறழ்ந்ததுபோலும்.

ரியராகக் கொள்ளவேண்டிய அவசியமில்லையென்றே தோற்று

து

இனி, சோதிட நூலாகிய "சூடாமணி உள்ளமுடையான்" இய ரியவர் இம்மண்டலபுருடரே யென்பது, அந்நூற்பதிப்பிலும் வே சிலவெழுத்துக்களிலுங் காணப்படுகிறது. இவ்வாறு கூறியதற்குக் ணம்:—"சூடாமணி" என்னும் விசேடணம், நிகண்டுக்கும் உள்ள டையானுக்கும் ஒப்ப அமைந்திருத்தலே போலும்! அவ்வுள்ள டையானூலாசிரியர், கடவூராரியன் திருக்கோட்டி நம்பி என்பது ந்நூலிறுதிச்செய்யுளால் நன்கறியப்படுவதை அன்னோர் பார்த்தி ர். "செந்தமிழ்" முதற்றொகுதி சகசக-ம் பக்கத்தும் அவ்வாசிரி ர் வரலாறு காண்க.

## ச. உரிச்சொல்.

இனிவரும் நிகண்டுகளைக் காலத்தால் ஒரு முறைபெறும்படி வைப்பதில் சிறிது இடர்ப்பாடுண்டாயினும், எல்லாவற்றுக்கும் பிந் திய ஆசிரியநிகண்டுடையார் நமக்கு ஒருவழி காட்டியுள்ளார். அந்நிக ண்டுப்பாயிரத்திலே,

'முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
..ந்துகாங் கயனுரிச் சொல்
முறைபெறு .. .. பகருமகராதியிவை
முற்றுமொன் றுந் திரட்டி"

என, நிகண்டுகளின் வரிசை கூறப்பட்ட அடிகள் வருகின்றன. இம்முறைப்படியே, சூடாமணியை யடுத்து உரிச்சொனிகண்டைக் கூறலாம். இவ்வாறு உரிச்சொனிகண்டைப் பிற்காலத்ததென்று கொள்வதற்குச் சிறந்த காரணமொன்றும் உண்டு. வணங்கற்பொ ருளில் சலாஞ் செய்தல் என்னும் சொல்வழக்கம் நம் நாட்டில் வழ ங்கத் தொடங்கியது துருக்கராட்சிக்குப் பிந்தியகாலத்தே என்பது யாவர்க்குந் தோன்றத் தக்கது. இச்சொல்வழக்கு பிங்கலந்தை சூடாமணி நிகண்டுகளில் காணக்கிடையாதாயினும், உரிச்சொனி கண்டில்.

"வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாஞ்செய்தல்"



(கூ-வது செயல் பற்றிய பெயர்த்தொகுதி-பாட்டு-உ.)

என வணங்கற்பொருளில் எடுத்தாளப்படுகிறது. இதனால், இந்நிகண்டுடையார்க்குப் பழமை கூறுதல் சிறிதும் பொருந்தாமை காண்க. இதே சொல்வழக்கை, துருக்கராட்சிக்காலத்து விளங் கிய ஸ்ரீ குமரகுருபரமுனிவர், தம் மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழில் "குறவர் மகட்குச் சலாமிடற் சேக்கறு, குமரனை முத்துக் குமார னைப் போற்றுதும்" என்னுந்தொடரில் ஆண்டனர். ஆகவே, உரிச் சொல் நிகண்டும், அம்முனிவர் காலத்தையடுத்துச் சிறிது முன்னே பின்னே இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று கருதலே பொருத் தமாகும்.

இனி, இந்நிகண்டியற்றிய காங்கேயரைப்பற்றி விசேடமொன் றும் அறிதல் கூடவில்லை. இவர் பெயரால், இவர் கங்கவம்சத்தவரா யிருக்கலாமென்று தோற்றுகிறது. "இம்முடி" என்னும் பட்டம் இவர்க்குக் கூறப்படுகிறது. இப்பட்டம், கொங்குநாட்டு வேளாள வகுப்பாராகிய "கவுண்டரில்" ஒரு பிரிவினர்க்குரிய குடிப்பெயராக இன்றும் வழங்குவதாகக்கேள்வி. இவர் நிகண்டு உ..அ - இனியவெ ண்பாவில் அமைந்தது.

இவ்வுரிச்சொல் நிகண்டு, சூடாமணிநிகண்டுக்கு முந்தியதென் பது, தொண்டைமண்டல சதகமுடையார் கொள்கை. இதனை:—

பண்டைநிகண்டு திவாகரம் பிங்கலம் பன்னுரிச்சொ
லெண்டிசையின்சொல்வடமொழிச்செய்யுளெல்லாமுணர்ந்தே
தண்டமிழ்கொண்டு நிகண்டு சூளாமணி தானுரைத்த
மண்டலவன் குடிகொண்டது நீதொண்டமண்டலமே.

என்பதனாற் காண்க. இப்பாடலால், மண்டலவனிகண்டுக்கு "நிக ண்டு சூளாமணி" என்பது பெயரொன்று தெரிகிறது.

## ரு. கயாகர நிகண்டு.

முன் கூறிய முறைப்படி, இக்காங்கேயனுரிச்சொல்லை நிற்பது கயாகர நிகண்டு. இந்நூல் இனிய கட்டளை றையில் அமைந்தது. இதன் சிதைந்த பிரதியொன்று

பாண்டியன் புத்தகசாலையில் உண்டு. இது கயாகரர் என்பவராற் செய்யப்பட்ட தாகலின் அப்பெயர்பெற்றது. [கயாகரர்-சொற்கிருப்பிடமானவர்; கை-சொல்.] இக்கயாகரர்—தேவை எனப்படும் இராமேசுவரத்தவரென்பதும், வேதம் வல்லஅந்தணரில் காசிபகோத்திரத்தவரென்பதும், கல்வி கேள்வி மிக்கவரென்பதும், இராமீசுவரர் பேரில் கோவையொன்று பாடினவரென்பதும் இவர் நூலாலே விளங்குகின்றன. இவற்றை:—

"பேதையர் பித்தர் அறியாத பாலர்சொற் பேதங்கொள்ளார்
ஓதினுங் குற்றந்தெரியார் பெரியவ ரோங்கிடப
கேதனன் பற்று மறவாத தேவைக் கயாத ரன்றுல்
வேதியன் சொற்ற வுரிச்சொற் பனுவலு மேம்படுமே."

"நீட்டு மறைபயில் நாவினன் என்றுஞ் செழுந்தமிழ் நூல்
கேட்ட செவியினன் கேளா வறிவன் கயாதரத்துள்"

"காசிப கோத்திரம் வாழவந் தோன்தென் கலைத்தமிழ்தேர்
மாசில் பெருந்தகை மாறா வறிவன் மலரயனும்
கேசவ னும்புகழ் தேவை நன்னுடன் கயாதரம்."

"மேவு யரும்பொரு ளந்தாதி கேட்டிந்த மேதினியோர்
... னகெடச் சாற்றிய தென்றமிழ்த்தேவை மன்னும்
கோவை யிராமீ சுரக்கோவை சொற்ற குருபரன்மற்
றேவுத லின்றி ... த் தாவ தொலியியலே."

என்பவற்றுற் காண்க. இவர்பாடியதாகத் தெரியும் இராமேசுரக் கோவை இப்பொழுது எங்குள்ளதோ தெரியவில்லை. இந்நிகண்டு முந்தியநிகண்டுச் சொற்களையே கொண்டுள்ளமையால், இதினின்று புதிய விசேடங்கள் என்பார்வையிற் பட்டில. இக்கயாகரத்தின் பெருமை, தொண்டைமண்டலத்தாராகிய ஆசிரியநிகண்டுடையார்க்கும் நன்கு தெரியவந்து அவராற் புகழப்படுதலானும், அகராதி நிகண்டுக்கும் முந்தி இதுவைத்துக்கூறப்படுதலானும் இஃது இற்றைக்கு ?00-வருஷங்கட்கு முற்பட்டதென்பது திண்ணம். அகராதி நிகண்டு காலம் பின்னர்த் தெளியக்காட்டப்படும்.

## ரு. அகராதி நிகண்டு.

"கரத்தையடுத்தது அகராதி நிகண்டு என்பது "முறை பகருமகராதியிவை" என்னும் ஆசிரிய நிகண்டுத் தொடரால் விளங்கும். இதன் பிரதியிரண்டு இச்சங்க புத்தகசாலையில் உள்ளன. இந்நூல், சிதம்பரமிரேவணசித்தர் என்னும் பெரியவரால் இயற்றப்பெற்றது. "இரேவணாராத்திரியர் சூத்திரவகராதி" என்று கேள்விப்படுவது இதுவேயாதல் வேண்டும். இச்சித்தர், தொண்டைநாட்டு வேளாளரென்பதும், சிதம்பரத்திலிருந்தவரென்பதும், கல்வி கேள்வி வல்லவரென்பதும், சிவஞானியென்பதும் இந்நிகண்டால் அறியப்படுகின்றன. இவ்வகராதிநிகண்டு சகாப்தம் கருகசுஎ-ல் (கி. பி. 1594) முடிக்கப்பெற்றது. இந்நிகண்டின் தொடக்கத்தே இவர் பாடியதாகக் காணப்பட்ட அகவலொன்று, இந்நூலின் வரலாற்றை நன்கு விளக்குதல் அடியிற் காண்க.

"உலகினர் பவமற மலைமக டவஞ்செயும்
தேசு கொளும்பட் டீசுரன் பதம்பணிந்
தொலிகெழு கடல்சூ ழுலகினிற் றெரிக்கும்
இயற்சொ றிரிசொ றிசைச்சொல் வடசொலென்
றுரைதரு சொற்கள் ஒருநான் கதனிற்
றிரிசொலின் பேத மிருவகை யதுதான்
ஒருசொற் றனே பலபொரு ளாகியு
பலசொற் றனே யொருபொரு ணிலவியும்
வருமிதி லொருசொற் பலபொரு ளதனைத்
தெரிதரு பிங்கலந் திவாகர முதலாப்
பரவிய நிகண்டு பலவெடுத் தாராய்ந்
தந்திற்சில திரட்டி அகர முதலா
மதித்தெழு வகர மீறாய் மொழிமுதல்
எழுத்து நாற்றொரு நாலி னடைவே
எழுத்ரு சூத்திர முதற்பதந் தோறும்
வருபெய ராதிப் பொருளா வெடுத்தே
ஒருபெயர் முதனூற் பத்தா றீறு
நிகழ்தரு வுரைக்குந் தொகை........பெயர்
அடைவினி லங்கங் கமர்ந்துள பெயரும்
இடையிடை யடைவிலங் கில்லாப் பெயரும்
மன்னுசூத் திரமூ வாயிரத் துடனே
முந்நூற் றறுபத் தெட்டெனுந் தொகையா
வந்திடந் தொகுத்தியி ரைந்தென வகுத்தே
அரிய சகாத்த மாயிரத் தைஞ்னூற்

றேநபத் தாறேன வுரைத்திடு மாண்டினில்
ஐந்ததி காரம் அறுபத்து நாற்கலை
உந்திய வறிவா லொருங்குட னுணர்ந்த
நாற்கவி வாணர் நகைதர யானும்
நூற்பா வதனு னுண்ணிய வுணர்வில்
ஆதர வாலக ராதி நிகண்டென
ஓதினன் யாவரு முணர்தர நினைந்தே."

இவ்விரேவணசித்தர், திருமேற்றளிப்புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருப்பட்டீச்சுரப்புராணம்—என்னும் மூன்று புராணங்கள் இயற்றியவரென்பது:—

"பவமறத் தெளிந்த சிவதரி சனத்தோன்
திருமேற் றளிக்குச் செழுந்தமிழ்ப் புராணம்
தெரிதரு சிதம்பர ரேவண சித்தன்."

"வாமிகு வலஞ்சுழி வாணர்தம் புராணமும்
உரைதரு ரேவணன்."

"திருப்பட் டீச்சுரச் செந்தமிழ்ப் புராணம்
தெரிந்தநற் சிதம்பர ரேவணன்."

என்னும் அடிகளிற் கண்டுகொள்க. திருமேற்றளி யென்பது காஞ்சிப்பிரதேசத்தைச் சார்ந்தது. திருவலஞ்சுழியும் திருப்பட்டீச்சுரமும் கும்பகோணத்துக்குப்பக்கத்தேயுள்ளசிவஸ்தலங்களாம். இவையன்றி,சிவஞானதீபம் என்னும் சைவசமய கிரந்தமொன்றும் இவராற் செய்யப்பட்டதென்று தெரிகிறது. இந்நூல், சுபாநுவருஷம் பதிப்பிக்கப்பட்டது.

## எ. ஆசிரிய நிகண்டு.

இனி, இந்நிகண்டுகளிலெல்லாம் பிற்பட்டது ஆசிரிய நிகண்டு. இஃது ஆசிரியவிருத்தத்தால் அமைந்தமையின் அப்பெயர் பெற்றது. இஃதியற்றியவர், தொண்டைமண்டலத்துச் செஞ்சிச் சீமையைச் சார்ந்த ஊற்றங்காலில் பாவாடை வாத்தியார் குமாரர் ஆண்டிப்புலவர் என்பார். இப்புலவர், இந்நிகண்டுடன், நன்னூற்கு ஓர் உரையும் இயற்றியவரென்று தெரிகிறது. இச்சங்கத்துப் புத்தகசாலையில் சங்கரநமச்சிவாயருரை யல்லாத வேறோர் உரைப் பிரதியுமுண்டு; ஆனால், அதுவே இந்நிகண்டுடையார் செய்தவுரை யென்பது துணியக்கூடவில்லை. இவர் நன்னூற்கு முரைசெய்தவரென்பதை ஆசிரிய நிகண்டுப் பாயிரத்தில் வரும், "இயம்பிய நிகண்டி னுரை யறிய நன்னூலினு டிரண்டுமே செய்துவைத்தான்" என்னுந் தொடரால் அறிக. இந்நிகண்டின் முதலிரண்டுதொகுதி சில வருஷங்கட்கு முன்பு அச்சிடப்பட்டன.



இவ்வாறு வழங்கும் ஏழு நிகண்டுகளை யன்றி வேறு சில நிகண்டுகளும் இந்நாட்டில் வழங்கலாம். ஆனால், பிரசித்தமானவை மேற்காட்டிய நூல்களேயாகும். ஐந்திணை நிகண்டு என்பதொன்றுள்ளதாகக் கேள்விப்பட்டதுண்டு. இந்நிகண்டுகளெல்லாம் பெரும்பான்மை வழக்கு வீழ்ந்தனவாயினும்,தமிழ்க்குப்பெரிதும் அலங்காரந்தருவனவாதலின் அவற்றின் வரலாறுகளை எழுதத் துணிந்தேன். என்னெழுத்திலடங்காத செய்திகள் பல இவற்றைக்குறித்திருத்தல் கூடும். அவையெல்லாம் அறிந்தார்வாய்க் கேட்டு மகிழ்ந்துகொள்க.

பத்திராசிரியர்.

---

# இந்துசாகபக்ஷகனுயிருப்பதேன்?

(தொடர்ச்சி.)

விலங்கினத்தில் மாமிசபக்ஷணிகள், சாகபக்ஷணிகளினும் அதிக அலைப்புள்ளவைகளாயிருப்பதுபோல், மனிதர்களுள்ளும், காய்கறியுணவினரைவிடப் புலாலுணவினர்கள் அதிக அலைப்புள்ளவர்களாகவும், தன்வசமானவர்களாகவுமிருக்கக் காண்கிறோம். சாந்தமும் சமமும் சுவாதீனமு (அல்லது தன்னடக்கம்) முள்ள குணமே,ஆத்துமலக்ஷண அறிவிருப்பதற்கு முகற்குறியாதலால், அவ்வறிவுவிருத்திக்குப்புலாலுணவு சிறிதேனும் உதவியாகாதென்பது திண்ணம். இறைச்சி தின்பவர்கள் ஒரு விஷயத்திலும் மனத்தை யொருமுகப்படுத்த முடியாமற் போவதற்கு இதுதான் காரணம். தமது ஆத்துமலக்ஷணம் தெய்வலக்ஷணமிவைகளைக்குறித்துத் தியானஞ்செய்ய அவர்களால் முடியாது. ஆத்துமலக்ஷண இரகசியத்தை யறிந்துள்ள ஆரியர்கள்

இதனாற்றான் இறைச்சி யுணவு உதவாதென்கிறார்கள். ஆத்துமலக்ஷண ஞானம் முற்றுப்பெறுவதற்குத் தமது வாழ்வையும் மனதையுஞ்செலுத்துமாரியர்களேயோகிகளெனப்படுவார்கள். ஆத்துமலக்ஷணஞானம் பெருகுவதற்குக் கொல்லாவிரதம் வேண்டுமென்பதும், உணவின்பொருட்டேனும் சுகத்தின்பொருட்டேனும் பிராணிவதைசெய்வது ஆத்துமலக்ஷணஞானத்திற்கோர் பெரிய இடறுகட்டையென்பதும் அவர்கள் கோட்பாடு. இதுவுமன்றி, பிராணிவதைசெய்வதையும் அல்லது பிராணி இம்சைசெய்வதையும் மூன்றுவகுப்பாகப்பிரித்திருக்கின்றார்கள். அவைகள்:—"செய்தல்" "செய்வித்தல்" "சம்மதித்தல்" என்பவைகளாம். அதாவது, ஒரு பிராணியை நானே வதைக்கலாம், யோகிகளது கொள்கைப்படி நான் செய்தவனாகிறேன். இரண்டாவது, வேறொருவனைக்கொண்டு செய்விக்கலாம். மூன்றாவது, கசாப்புக்கடைக்காரனிடமிருந்து வாங்கும்பொழுது, அவன் செய்வதற்கு நான் சம்மதித்தவனாகிறேன். வதைகூடாதென்பவன் வதைக்கக்கூடாதென்றும், வேறொருவனைக்கொண்டு செய்விக்கக்கூடாதென்றும், வேறொருவன் செய்வதற்கும் சம்மதிக்கக்கூடாதென்றும் அவ்யோகிகளது மதம். யோகியொருவன் வதைக்கவும் கூடாது, இம்சிக்கவுங்கூடாது என ஏற்பட்டால், அவனை யெவனும் இம்சியான்; புலிபாம்புகளும் இம்சியா. புலி பாம்புகளை இம்சிக்கவேண்டுமென்ற எண்ணம் நமக்குண்டாவதால், நம்மை அவைகள் இம்சிக்கின்றன. இந்தியாவில் இந்த உத்தமதருமத்தைச் சிறிதுங் குறைவின்றி அவ்யோகிகள் பரிபாலனஞ்செய்து, திரியக்கு ஜந்துக்களிடமும் அதைச்செலுத்திவர, அஃதெங்கும் விலக்கிலாப்பொதுவிதியாயிற்று. யோகிகளது சந்நிதியில் கொடுவிலங்கு முதலிய ஜந்துக்களும் சாந்தமாயடங்கி, அவர்களுக்குப் பணிவிடையுஞ் செய்கின்றன. ஆண்பாலர் பெண்பாலரிருவருள்ளும் பூர்வகாலத்திருந்த மகான்களது இந்நிலையைப் பதுமைகளிலும் படங்களிலுங்காணலாம். யோகிகளுக்கு யோகியான சிவபெருமான் கழுத்திலும் சிரசிலும் உடம்பிலும் விஷப்பாம்புகளை ஆபரணமாக அணிந்திருக்கிறார். பெண்யோகியாகிய துர்க்காதேவி கொடிய புலிசிங்கங்களது முதுகில் வீற்றிருக்கிறாள். அவ்வித யோகிகளுக்கு உண்மையில் சத்துருக்கள் கிடையார்.



ஆத்தும லக்ஷண அறிவு முதிர்ந்த ஓர் ஆரியன் இறைச்சியை வெறுப்பதற்கு மற்றோர் காரணமென்னவெனின், மாமிசவுணவும் மதுவுணவும் ஒன்றைவிட்டொன்று பிரியாதவை. இறைச்சி உணவைச் சீரணிக்கச்செய்வதற்குச் சாராய முதலிய லாகிரித்திராவகங்கள் வேண்டுதலால், அநேகர்களுக்குக் குடிப்பழக்கமுண்டாகி விடுகிறது. குடியால் வேறுபலவிதத் துர்க்குணங்களுண்டாவதால், மரக்கறியுண்ணுவதில் இவ்விதத்தீக்குணமெல்லாம் அணுகா; இலகுவாய் விலகுமென்பது ஆரியரது கொள்கை. இந்துக்களுக்குச் சாராயமுதலிய இலாகிரிப்பண்டங்களிடத்தும் வெறுப்பு. மேற்குல ஆரியனொருவன் பலரறியக்குடிக்கப்போவானேல், அல்லது பலரறியக்குடிப்பனேல் அவன் ஜாதிப்பிரஷ்டனாவான். ஆரியஸ்திரீகள் சாராயத்தைக் கையாற்கூடத் தீண்டுவதில்லை. மேனாட்டு நகரத்தெருக்களில் குடிவெறி கொண்ட மகளிரைக்காணக்கூடியது போல, இந்துப்பெண்களுள் ஒருவரையேனுங் காண்பதரிது. பெருநகரங்களிற் பஹிரங்க மதுபானசாலையுதவாதென்று இந்துக்கள் விதித்தார்கள். ஆங்கிலேய அரசாங்கச் சாராயவியாபாரத்தின் இழிந்த வாசனையால், சிலநகர்களில் அநேகம் சாராயக்கடைகள் இப்பொழுது இருக்கின்றன. சாராயவியாபாரமும், அபின் வியாபாரமும் சரியென்று ஒருநாகரீகமுற்றசாதியார் எவ்வாறொப்புவதென இந்துக்களுக்குத் தெரியவில்லை. கிராமங்கள்தோறும் சாராயக்கடைகளுண்டாக்கிச் சொற்பவிலைக்குச்சாராயம் விற்று, கூலிவேலைக்குக் கையாலுழைத்துப்பாடுபடும் ஏழைஜனங்களுக்குக் குடிப்பழக்கமுண்டாக்குவதும், தெள்ளறிவுடையோரை விலங்கினர்களாகச்செய்வதும் எப்படியென்பதும் அவர்களுக்குத்தெரியவில்லை. ஆங்கிலேய அரசாட்சி வந்ததன்பின், இந்துக்கள் நல்லொழுக்கத்திலுயர்ந்தனரா? என்று அநேகர் என்னை அடிக்கடி கேட்கிறார்கள். இந்தியாவில் நடக்கும் சாராயவியாபாரம் அபின்வியாபாரம் இவைகளாலாகும் இழிபயனின்னதென அவர்கள் அறிந்திருப்பரேல், கிறிஸ்துமதப்போதகர்கள் செல்லுமிடமெல்லாம் சாராயக்குப்பியும் பிராந்திக்குப்பியும் அவர்களைவிட்டுப் பிரியாது செல்வதையும் அவர்கள் அறிந்திருப்பரேல், இக்கேள்விகள் கேட்கமாட்டார்கள். மரக்கறியுண்ணுமோர் இந்து, மருந்தாகவேனுங்கூட, சாராயத்தைத்தீண்டான்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக ஆரியர்கள் சாகபட்சகரா யிருப்பதற்குப் பிரேமை (அல்லது அன்பு) யுங்காரணம். பிரேமை யென்றால் எல்லாமொன்றென் றுணர்த்துவதாகும்: எல்லா மொன்றென்ற காரணத்தாலேயே இந்துக்கள் தாழ்ந்த பிராணிகளிடமும் பிரேமையாயிருக்கிறார்கள்.

எல்லாவுயிர்களும் ஒரு பரம்பொருளின் பலவகைத்தோற்றமென்ற அறிவு அனுபவத்திற்கு வரவேண்டுமென்பதே அவர்கள் கருத்து. நம்முள் அந்தரியாமியாயிருந்து ஞானஒளியால் அஞ்ஞான இருளகற்றும் அந்தப்பரமாத்மாவே, திரியக்கு ஜந்துக்களுள்ளும் அந்தரியாமியாயிருக்கிறார். "சகோதரபாவம்." என்ற வார்த்தைபோல், அவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயம், தெளிவற்ற பொருளற்ற வெற்றுவார்த்தையல்ல. தாழ்ந்த பிராணிகளும், எந்த உயிருடைஜந்துவும் நாமும் ஒரேஜீவஸ்வரூபங்களென்று அனுபவத்திலறியவேண்டுமென்பது அவர்களது அபிப்பிராயம். எல்லாவற்றுள்ளும் ஒரே ஜீவனியங்குவதால், "எவ்வுயிரையுந் தன்னுயிர்போற்கருதி நேசி" என்பது அவர்கள் மதம். [ஆத்மவத் ஸர்வபூதாநி ய: பஶ்யதி ஸ பஶ்யதி] "உன்னுள்ளுள்ள ஜீவாத்மாவை அறி: பிறகு, எங்கும் அதே ஜீவன் இயங்குவதையறிவாயாக. எங்கும்விளங்குவது ஒரே ஜீவசொரூபமென அனுபவித்த ஒருவன் ஒரு ஜீவனையும் மற்றொன்றைக் கொல்வது முடியாது." அவனுக்கு அகங்காரமில்லை. எவருக்கும் உதவிபுரியச் சந்நத்தனாயிருப்பன். உணவின் பொருட்டேனும் சுகத்தின்பொருட்டேனும் ஜீவவதை செய்பவன் அகங்காரியாவான். மற்றப் பிராணிகளது உரிமையை மறப்பதற்கும், தீங்கற்ற அவைகளைக்கொன்றோ; இம்சித்தோ; அல்லது அவ்வுரிமையைப்போக்கியோ நம்மூளைவளர்க்கவும்-அம்மட்டுமோ - வேடிக்கைபார்க்கவும்வழி தேடுவதற்கும் இந்த அகங்காரந்தான் காரணம். இவ்வகையகங்காரமே துர்எண்ணங்களுக்கும், துர்நடத்தைகளுக்கும் பிறப்பிடம். எதனால் நாம் அகங்காரிகளாவோமோ, விஷயவாசனைகளில் எதனால் நமக்காசையுண்டாகின்றதோ அவையெல்லாம் இழிந்தவைகள்; கெட்டவைகள். அகங்காரத்தை விடுவதற்கு நமக்கு வழிகாட்டிகளெவையோ, அவையெல்லாம் மேம்பாடுடையவைகள்; நல்லவைகள்.



ஜீவனொன்றென்பதை நாமறியமுடியாமல் எதுசெய்கின்றதோ, அது பிசகு (தவறு); நமக்கு ஆத்மலக்ஷணஞானமுண்டாக்கித், திரியக்கு ஜந்துக்களது மூலமாகவும் ஜீவன் பிரகாசிக்கின்றதென்பதை நமக்குணர்த்தி, நம்மைப்போலவே அவைகளிடத்தும் அன்பையுண்டாக்குவதெதுவோ அதுவே தெய்வத்தன்மையானது.

நாமுட்கொள்ளும் எந்த ஆகாரமும் மனதுசரீரமிரண்டிலும் மாறுதல்களுண்டாக்குகின்றது. புலாலுணவால் வரும் மனஅலைப்பை ஊன்றிக் கவனிப்பவர்கள், சித்தசுவாதீனமுண்டாகவேண்டுமெனப் பாடுபடுபவர்கள்—இவர்கள், அப்புலாலுணவை விடாதவரையில், காமம், குரோதம், மனச்சஞ்சலம் இவைகளைப்போக்குவது அரிது என அறிவார்கள். சாகபட்சணம் பண்ணுவது எதற்கு எனப் பலவகையிலுமாராயின், ஆரியன் சாகபட்சகனாகான்; புலாலுண்பது சரியெனவுஞ் சொல்லான்.

(முற்றும்.)

ம. ஜெகதீச ஐயர்.

---

# நல்லொழுக்கம்.

உ0ரு.

(அ-ம் பக்கத் தொடர்ச்சி.)

ருஎ0.

(ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.)

ஒரு யோக்கியமான இஷ்டனுடைய பொருத்தமும் சமயோசிதமுமான குறிப்புமொழிகளாலும், பக்ஷமான போதனையாலும், ஓர் இளைஞன் முற்றிலும் புதிய நடையில் திரும்பலாகும். எவ்வாறெனின், இந்தியன் மிஷனெரியாகிய ஹென்ரிமார்ட்டின் என்பவர் பையனாயிருக்கும்போது ட்ர்ரோ கிராமபாடசாலையில் நேர்ந்த ஓர் இஷ்டனால் விசேஷமாய் ஒழுக்கம் சீர்பெற்றவராகத்தெரிகிறது. மார்ட்டினுக்குச்சரீர துர்ப்பலமும் நொய்யதொரு கோழைமனோசுபாவமும் உண்டு. மனோதைரியமின்மையால் பள்ளிக்கூடத்துவிளையாட்டில் அவருக்குப்பிரியம் இல்லை. அவர் கொஞ்சம் கர்வமுள்ளவராதலால் பெரியபையன்கள் அவரைக்கோபமூட்டியும், சிலர் அவரை உரக்க அதட்டியும் இன்புறுவாராயினர். ஆகிலும் அந்தப்பெரிய

பையன்களிலொருவன் மார்ட்டினுடன் சிநேகம் கொண்டாடி, அவரைத்தன்னுடைய பாதுகாப்பில் வைத்துக்கொண்டு அவரைத் துன்பப்படுத்துவோரை விலக்கி அவருக்காக மற்றப்பையன்களுடன் போராடினது மட்டுமன்று; அவருக்குப் பாடங்களிலும் உதவிசெய்தான். மார்ட்டின் கொஞ்சம் மந்தமுள்ள மாணவராயினும் அவருடைய தகப்பனுருக்கு, அவர் உயர்தரக்கல்விச்சாலையில் படிப்பதால் பெறும்பலனை யடையும் படியான விருப்பமிருந்தது. உத்தேசம் பதினைந்தாவது வயதில், கார்ப்பஸ், ஸ்காலர்ஷிப் என்ற மாணவர் பரிசிற்கு முயற்சிக்கும்படி அவரை ஆக்ஸ்போர்டுக்கு அனுப்பினுர். அதில் அவர் தவறினுர். பின்னும் இரண்டுவருஷம் டூர்ரோ கல்விச்சாலையில் வாசித்து அப்பால் கேம்பிரிட்ஜிக்குப்போயினர். அங்கே ஸெண்ட.ஜான்ஸ் காலேஜில் பதியப்பெற்றுர். அதற்குமுன்னமே மாணுக்கனுக அவ்விடம் வசித்திருக்கக்கண்டது யாரை? இவருக்கு டூர்ரோகிராமபாடசாலையில் முன்பு உபகாரம் செய்திருந்த அவனையேயாம். அவர்களுடைய சினேகமானது புதுப்பிக்கப்பட்டது. அக்காலமுதல் அந்தப் பெரியபையன் அந்த இளைனுருக்குச் சட்டம்பிள்ளையா[illegible]ந்துகொண்டான். மார்ட்டின் ஆனவர் தம்முடைய படி இயங்குவதையறிவ[illegible]னமுள்ளவராயும், முற்கோபியாயும் கர்வமுள்ளமென அனுபவிக்க[illegible] அடக்கமுடியாத மனஎழுச்சிக்கு உட்பட்டகொல்வுமா இருந்தார். அவருடைய பெரிய சிநேகிதனே உறுதியும், பொறுமையும், கடினமுயற்சியும் உடையவனுயிருந்தான். அவன் கோபமூளத்தக்க தோழமாணுக்கரை எப்பொழுதும்மேற்பார்க்கிறதிலும் நடத்துகிறதிலும், அவருக்கு நற்புத்தி சொல்வதிலும் ஒருக்காலும் பின்வாங்கினதில்லை. அவன் மார்ட்டின் என்பவரைக் கெட்ட இனத்தாரின் மார்க்கத்தினின்றுப் பாதுகாத்து, மனிதர்களுடைய புகழ்ச்சிக்காக அன்று; தெய்வமகிமைக்காகக் கடினமாய் வேலைசெய்யும்படி அவருக்குப் போதனைசெய்தான். இவ்வாறு அவருடைய படிப்புகளில் அவருக்குத்தப்பாமல் உதவிசெய்ததினுல் பின்வரும் கிறிஸ்துமஸ் பரீட்சையில் அவ்வருடம் அவர் முதற் பையனுயிருந்தார். ஆயினும் மார்ட்டின் என்பவருடைய பட்சமான இஷ்டனும் சட்டம்பிள்ளையுமான அவன் தனக்குயாதொரு கௌரவத்தையும் உண்டாக்கிக்கொள்ளவில்லை. அவன் வெளிப்பிரஸ்தாபத்திலில்லாவி



டினும், அநேகமாய் பரோபகாரமுள்ளவனுக வாழ்ந்து வந்தான். அவனுடைய மிகுந்த விருப்பம் யாதெனின், தன்னுடைய இஷ்டருக்கு நல்லொழுக்கத்தை உண்டாக்கவும், அவருடைய மனதில் உண்மையின் விருப்பத்தை உண்டாக்கவும், அவர் கொஞ்சக்காலத்திற்குப்பின் வஹித்துக்கொண்ட மேன்மையான இந்தியன் மிஷனரிஸ்தானத்துக்கு அவரைத்தகுதியாக்கவுமாக இருந்திருக்கின்றது.

டாக்டர் பெய்லி என்பவர் சர்வகலாசலையில் கற்கும்போதும், இவ்வாறுன ஒரு சமாசாரம் உண்டென்று சொல்லப்படுகிறது. காம்பிரிட்ஜின் கிறிஸ்து காலேஜ் என்னும் கல்விச்சாலையில்அவர் மாணுக்கராயிருக்கும் போது கூர்மையான புத்தியுடன் நாகரீகமின்மைக்கும் பேர்போனவராயிருந்தார். தவிரவும் தன் கூட்டாளிகளுக்குப்பிரியமுள்ளவராயும் அவர்களுடைய கவனத்திற்குப் பாத்திரராயுமிருந்தனர். அவருக்கு இயற்கையில் சாமர்த்தியங்கள் மிகுந்திருப்பினும், அஜாக்கிரதையும், சோம்பலும்,வீண்செலவும் உடையவராயிருந்தனர். அவர் மூன்றுவது வருஷத்தொடக்கத்தில் உத்தேசத்திற்கு மிகவும் குறைந்த தேர்ச்சியுள்ளவராயிருந்தனர். அவர் வழக்கமாய்த்தன்மார்க்கத்தில் வியர்த்தமாக்கிய ஓர் இரவின்மறுநாளையில் அவருடைய படுக்கையின் பக்கலில் ஓர் இஷ்டன் [illegible] உ0ரு.
"பெய்லிஎன்பவரே! உம்முடையநிமித்தம் யோசி[illegible] ருஎ0.
தூக்கப்பிடியாமல் இருக்கிறேன். உம்முடைய மூடத[illegible] ப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன். செலவு செய்வதற்கு என்னிடம் வகையுண்டு. நான் சோம்பேறியாகவும் இருக்கலாகும். நீரோ, எழை. நீர் அவ்வாறு இருக்கமுடியாது. ஒருக்கால் நான் முயற்சி செய்தபோதிலும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. எவற்றையும் செய்வதற்கு நீர் தகுதியுள்ளவராயிருக்கிறீர். இராத்திரிமுழுதும் உம்முடைய குற்றத்தை நினைந்துகொண்டே தூங்காமலிருந்திருக்கிறேன். சிரத்தையுடன் உம்மை எச்சரிப்பதற்கு இப்பொழுது வந்திருக்கிறேன். உள்ளபடியே உமது சோம்பலை நீர் விடாது இவ்வாறே நடக்கிறதானுல் முற்றிலும் உம்முடைய சாவபற்றி நாசத்தை நான் விட்டுவிடவேண்டும்" என்று சொன்னுன்.

இந்த எச்சரிக்கையானது மிகவும் பலமாய் அவரிடத்தில் அழுந்தினதால் அந்த நிமிஷமுதல் வேறுன மனிதனுயினர். முற்றிலும்

புதிய ஒழுங்கு ஏற்படுத்திக்கொண்டு அதனை ஜாக்கிரதையுடன் விடாது பற்றிவந்தனர். அவர் மிகவும் சுறுசுறுப்பான வித்யார்த்தியாய் விட்டனர். தன்னுடன் எதிர்த்த பையன்களையெல்லாம் ஒவ்வொருவராய்க்கடந்து அந்தவருஷாந்தத்தில் சீனியர் ரேங்கிளர் என்னும் ஸ்தானத்தை வகித்தனர். அப்பால், அவர் கிரந்தகர்த்தராயும் வைதீக சாஸ்திரியாகவுமானது எல்லாருக்கும் போதுமானபடி தெரிந்த விஷயமே.

இளைஞருக்கு நிதர்சனமாக நேரில் நடந்து காட்டுவதின் முழுப்பயனை உணர்ந்தவர், டாக்டர் ஆர்னல்ட் என்பவரைவிட வேறொருவருமில்லை. அவர், தம் கல்விச் சாலையின் ஒழுக்கத்தை உயர்த்த முயற்சித்த வேலைக்குரிய பெரியவந்துகருவியானது, நிதர்சனமாயிருந்தது. முதலில் பிரதானமான பையன்களுடையநன்மையும் மேன்மையுமான எண்ணங்களைக் கிரஹித்து, அவர்களிடம் சரியான கருத்தை உண்டாக்கவும், அப்பால் அவர்களைக் கொண்டே, அதேகருத்தை, கண்ட-பாவனை, நிதர்சனம், வியப்புகளால் மற்றப்பையன்களிடத்தும் வியாபிக்கும்படிசெய்விக்கவும் அவருடைய முக்கிய நோக்கமிருந்த[illegible] அவ்விடத்தைத் நல்லொழுக்கத்தில் நிறுத்துவதற்கான [illegible]யில், தம்முடன் அவர்கள் எல்லாரும் கூட்டுழை [illegible]யகாளிகளுமாகின்றனர் என்பதை அவர்கள் எல்லா [illegible]ரும்படி செய்ய முயற்சித்தார். இவ்விதம் பெருந்தன்மையாய் நடத்தினதின் முதற்பயன் பையன்களுக்குப்பலத்தையும், தன்மரியாதையையும் உண்டாக்கியது. அவர்கள் தங்களை நம்புதற் பாத்திராக உணர்ந்தனர். ஆகவே எல்லாக் கல்விச்சாலைகளிலுமுள்ள[illegible]வாறே ரக்பியிலும் வீணப்பையன்கள் இருந்தனர். இவர்களைக்கவ[illegible]த்து ஒருவருடைய துர்வழக்கம் மற்றவர்களைத் தொடராதபடித[illegible]க்கவேண்டுவது உபாத்தியாயருடைய கடமையாயிருந்தது. “அந்த இரண்டுபையன்களும் ஒன்றாய் நடப்பதை நீர் பார்க்கிறீரா? இதன்முன் ஒருக்காலும் அவ்விருவரையும்ஒன்றாக நான் பார்த்ததில்லை. அவர்கள் கூடுகிற இனத்தைக் கவனிப்பது முக்கியமான விஷயமாக நீர்வைத்துக்கொள்ளவேண்டும். ஒருபையனுடைய ஒழுக்கத்தில் விசேடமாறுதலை உண்டாக்குவது அதைவிட வேறொன்றுமில்லை.” என்று ஒருகாலத்தில் அவர் தன் கீழ் உபாத்தியாயருக்குச் சொன்னார்.



ஒவ்வொரு பெரிய உபதேசிகளுடையதைப்போல, டாக்டர் ஆர்னல்ட் உடைய சொந்த நிதர்சனமானது, ஓர் ஆவியின் பிரவேசம்போல இருந்தது. அவருடைய முன்னிலையில் இளைஞர்கள் தங்களைத் தாமே கண்ணியப்படுத்திக்கொள்ளப் பழகினர். தன்-மரியாதை காரணமாக மக்கட்குரிய சன்மார்க்கங்கள் வளர்ந்தேறின. அவரைப்பார்த்த மாத்திரமே, அவர்களுக்குள் புதுமையான சௌக்கிய களஞ்சியமும் பலமும் உண்டானதுபோலவும், அவரைவிட்டுப் பிரிந்த பின்னரும் வெகுகாலம் அவர்களுடனிருந்த சிரத்தையையும் கௌரவத்தையும் அவர்களுடைய ஆன்மாவுக்குக் கொடுத்ததுபோலவும் இருந்தது. அவருடைய ஸ்வரூபமானது அவர்களுடைய எண்ணங்களில் வழக்கமாய் உயிர்த்திருந்ததால், அவர் இறந்தபிற்பாடும் அவருக்கும் அவர்களுக்குமிருந்த பற்றானது விட்டொழியவில்லை அவரது வாழ்க்கையும் அவருடன் கூடிய இணக்கமும் தோஷரஹிதமாயிருந்தமைபற்றி அவ்விருதிறத்தினருள்ளும் பிரிவு என்னும் உணர்ச்சியே ஒழிந்து போயிற்றென்னலாம். இவ்வாறாக டாக்டர் ஆர்னல்ட் என்பவர் அனேகரைப் புருஷத்தன்மையும் மேன்மையுமுள்ள ஒழுக்கமுள்ளவர்களாகப் பழக்கினர். அவர்கள் உலகத்திலுள்ள எல்லாவிடங்களிலும் அவருடைய நிதர்சனத்தின்பயனைப் பரவச்செய்தனர்.

டியூகால்டு - ஸ்டியூவார்ட்டைப்பற்றியும் அவ்வாறே சொல்லப்படுகிறது. சன்மார்க்க விருப்பத்தை அவர் மாணாக்கருடைய சந்ததி முழுவதிலும் உயிர்ப்பித்தனர். “அவருடைய பிரசங்கங்கள் எனக்கு சொர்க்கத்தைத் திறந்தாற்போலிருந்தன. எனக்கு ஆன்மா உண்டென்னும் உணர்ச்சி உண்டாயிற்று. மகிமை பெற்றவாக்கியங்களிற் புலப்பட்ட அவருடைய கௌரவமான கருத்துகள் மேலுலகத்திற்கு என்னை உயர்த்தின. என்னுடைய சுபாவமுழுவதையும் மாற்றிவிட்டன” என்று லார்ட் காக்பர்ன் என்பவர் சொல்லுகிறார்.

ஒழுக்கமானது சகல முயற்சிகளிலும் பயன்கொடுக்கின்றது. தொழிற்சாலையிலுள்ள ஒரு மனிதன் நல்லொழுக்கமுடையனேல் அவன்கூட வேலைசெய்பவர்களுக்கும் தன்யோக்கியதையைக்கொடுத்து அவர்களுடைய இச்சைகள் அனைத்தையும் பெருந்தன்மைப்

படுத்துவான். இவ்வாறு 'பிராங்கிலின்' என்பவர் லண்டனில் ஒரு தொழிலாளியாயிருக்கையில் ஒரு தொழிற்கூடம் முழுவதையும் ஒழுக்கத்தில் சீர்திருத்தியதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறே கெட்ட ஒழுக்கமும் இழிவான குணமுமுடையோன் தன்னறியாமலே தன் கூட்டாளிகளைத் தாழ்த்தி இழிவுபடுத்துவான். ஒரு புதிய தேசத்திற் குடியேறுவோனுக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு நல்ல மனிதனானவன் யோக்கியதையில்லாத நூறு, அதுமட்டோ, ஆயிரம் மனிதருக்குச் சமானமாகின்றனன்." என்று காப்டென் ஜான்பிரௌண் என்பவர், எமர்ஸனிடம் ஒரு சமயம் சொல்வாராயினர். அவனுடைய நிதர்சனமானது, மற்றவர்கள் நேரில் அவனாற் பயனடையும்படி மிகவும் வியாபகத்தைப் பெறுகின்றது. அவன் தன்னுடைய மனவூக்கமான சுறுசுறுப்புள்ள நிலைமைக்கு அவர்களைத் தன்னறியாமலே கௌரவப்படுத்தி உயர்த்துகிறான்.

நல்லவர்களுடன் சம்பாஷித்தலானது நிச்சயமாய் நன்மைவிளைக்கின்றது. நல்லொழுக்கமானது வியாபகசக்தியை விசேஷமாக உடையது. "ரோஜாப்புஷ்பம் என்னிடம் பயிரிடப்படும்வரை நான் சாதாரணமான களிமண்ணாயிருந்தேன்" என்று கீழ்நாட்டுக்கதையில் ஒரு வாசனையுள்ள பூமி சொல்லுகின்றது. இனம் இனத்தை உண்டாக்குகின்றது. நன்மை நன்மையை உண்டாக்குகின்றது. நன்மையானது எவ்வளவு நன்மையை உண்டாக்குகிறதென்று ஆச்சரியப்படத்தக்கதாகிறது. நன்மையானாலும், தீமையானாலும் தனித்திருப்பதில்லை. அவை முறையே தன்னை அடுத்த மற்றவரை நன்மை அல்லது தீமையுடையவராக்குகின்றன. அவர்கள், தங்களையடுத்த மற்றவர்களை இவ்வாறே மென்மேலுமாக்குகின்றனர். எவ்வாறெனின், ஒரு குளத்திற்போட்ட கல்லானது ஒரு வட்டம் போடுகின்றது. அது, அதற்கடுத்த, அதிக விசாலமான வட்டம்; அப்பால், அது அதற்கடுத்த வட்டம்; இவ்வாறே கடைசிவட்டம் கரைசேருகிறபரியந்தம் நடக்கிறது. உலகத்திலுள்ள ஏறக்குறைய சகலநன்மைகளும் வெகுகாலத்தின் முன்னரே தொடங்கி இவ்வாறே நமக்குகர்ணபரம்பரையாக வந்திருக்கின்றன. அநேகம் இன்னநல்ல இடத்திலிருந்து வந்ததென்பது தெரியாது என்று கேனன் மோஸ்லி என்பவர்



சொல்லுகிறார். "அவ்வாறே தீமையிலிருந்து உண்டானது தீமையே கொடுக்கின்றது. பலம், கண்ணியதை இவற்றிலிருந்து உண்டாயது பலத்தையும் கண்ணியதையுமே கற்பிக்கின்றது" என்று ரஸ்கின் என்பவர் சொல்லுகின்றனர்.

ஆகையால் ஒவ்வொரு மனிதனுடைய ஒழுக்கமும் மற்றவர்களுக்கு நல்ல அல்லது தீய நிதர்சனத்தைத் தினமும் உபதேசிக்கின்றது. ஒரு நல்ல மனிதனுடைய நடத்தையானது சன்மார்க்கத்தை வெகு தெளிவாய்ப் போதிக்கின்றது. துன்மார்க்கத்தை மிக உக்கிரமாய்க்கண்டிக்கின்றது. டாக்டர் ஹூக்கர் என்பவர் தனக்குப்பழக்கமான ஒரு பக்தியுள்ள குருக்களின் நடத்தையானது பிரத்தியக்ஷமான வாக்கின்சக்தி என்றும் தெய்வஞானம் இல்லாதவருக்குங்கூட நற்குணத்தின் நன்மையைப் போதித்ததென்றும் சொன்னார். "ஒரு குருக்களின் நன்னடக்கையானது, அதைப்பார்ப்பவரனைவரையும் மரியாதை செய்யவும், அன்பு செய்யவும், குறைந்த பக்ஷம் அக்குருக்களைப்போல நடப்பதற்கு இச்சிக்கவுமாவது உட்படுத்துவதற்கு மிகவும் சக்தியுள்ளபோதனையாயிருப்பதால், எல்லாரையும்விட நான் நன்றாய் நடப்பது நிச்சயம்." என்று தன்மடாதீனத்தின் வேலையை ஒப்புக்கொள்ளும்பொழுது நல்லவரான ஜார்ஜ்ஹெர்பர்ட் என்பவர் சொன்னார். "விதியைவிட நல்ல அனுஷ்டானமானது அதிக அவசியமாய் வேண்டிய காலத்தில் நாம் வசிக்கிறதாக எனக்குத்[illegible]கிறபடியால் இதை நான் செய்வேன்" என்றும் சொன்னார். அதே குருக்கள் ஒரு எளிய மனிதனிடம் பக்ஷமாய் நடந்துகொண்டதானது அவருடைய உத்யோகத்தின் கௌரவத்திற்குக் குறையென்று நிந்திக்கப்பட்டபொழுது, அவ்வாறு செய்த செய்கையின் நினைப்பானது, நடுஇராத்திரியின் கானத்துக்குநிகர் என்று அவர் வெகு அழகாகச் சொன்னார். ஜார்ஜ் ஹெர்பர்ட் என்பவர் வைதீககாலக்ஷேபத்தைப்பற்றி ஆன்ட்ரூஸ் பிஷப்புக்கு எழுதியகடிதத்தை, ஆன்ட்ரூஸ் தன் மார்பினிடம் வைத்துக்கொண்டு தன்னுடைய மாணாக்கர்களுக்குக் காண்பித்தபிற்பாடு, தான் முதலில் வைத்த இடத்திலேயே எப்போதும் திரும்பவைத்துத் தன்வாழ்நாள் முடிவுவரை தன் இருதயத்திற்கு அருகே அவ்வாறு செய்துவந்ததாக ஐஸேக்வால்டன் எடுத்துப்பேசுகிறார்.

வசப்படுத்தி ஆளும் சக்தியானது நற்குணத்திற்கு விசேஷமாய் உண்டு. நற்குணம் தங்கப்பெற்றமனிதன் மனிதர்களுக்கு உண்மையான அரசனாகிறான். எல்லாருடைய மனதையும் தன்வயப்படுத்துகிறான். ஜெனரல் நிக்கல்ஸன் என்பவர் டெல்கிக்கு முன்பு மரணப்படுக்கையில் காயப்பட்டுக்கிடக்கையில், தனக்குச்சமானமான மேன்மையும் வீரமுமுள்ள இஷ்டனாகிய, ஸர் ஹெர்பர்ட் எட்வார்ட்ஸுக்குச் சொல்லிவிட்ட கடைசிச்சமாசாரம் வருமாறு:—"நான் அவர் கூடவேவசித்து வந்திருந்தாலும், எங்களுடைய கனத்த இராஜாங்க வேலைகள் அவரை அந்தரங்கமாய் மிகுதியும் வந்துபார்ப்பதைத் தடுத்திராவிட்டாலும், அதிக நல்ல மனிதனாயிருந்திருப்பேனென்று அவருக்குச்சொல்லு; அவருடனும், அவர் மனைவியுடனும் வெகு சொற்பகாலம் வசித்திருந்தபோதிலும் எப்போதும் அதிக நலம்பெற்றவனாகவேயிருந்தேன்; அவரிருவருக்கும் என்னுடைய அன்பைச் செலுத்து" என்பதாம்.

சில மனிதருடைய முன்னிலையில், உச்சுவாசம் செய்யப்படுகிறதென் மலைக்காற்றுப்போல அல்லது உஷ்ணகாலத்தில் ஸ்நானம் செய்வதுபோல, இளைப்பாறுதலையும் பலத்தையும் கொடுக்கிற ஆன்மஞானவாசனையைச் சுவாசித்தாற்போல் உணர்கின்றோம். ஸர் தாமஸ் மூர் என்பவருடைய சாந்தமான இயல்பின் சக்தியானது, கெட்டவர்களை அடக்குவதோடு நல்லவர்களுக்கு ஊக்கத்தைக்கொடுக்கும்படியான அவ்வளவு பெரியதாயிருந்தது. லார்ட் புரூக் என்பவர் அவருடைய காலஞ்சென்ற இஷ்டராகிய ஸர் பிலிப் ஸிட்னியைப் பற்றிச்சொல்லுமாறு 'அவருடைய ஊகமும் விவேகமும் வார்த்தையிலாவது அபிப்பிராயத்திலாவது அன்று. ஆனால் நடக்கையிலும் செய்கையிலும், தன்னையும் பிறரையும் நல்லவரும் பெரியவருமாகச் செய்யுங் கருத்தை உண்டாக்கின."

---



## முத்துக்குமார கவிராசர்

# முத்தகத்திரயம்.

### உபந்நியாசம்.

முத்துக்குமார கவிராசர், ஏறக்குறைய ஐம்பதுவருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்திலே நம்மூராகிய சுன்னாகத்திலே பாடும் புலமையிற் சிறந்தவராயிருந்த ஒரு புலவர். உடுவிற்பதியிலே வேளாளகுலத்திலே சந்திரசேகர மாப்பாணர் சந்ததியிலே தோன்றிய அம்பலவாணபிள்ளை என்பவரே இவருக்கும் எமது தாதைதன்றாதைக்கும் தந்தையார். இவ்வுரிமை பற்றி இவர் பாடல்களை நிலைபெறுத்தல் கடப்பாடாயிற்று. இவராற் பாடப்பட்ட தனிப்பாடல்களுக்கு அளவில்லை என்பர். அச்சிடப்பட்டிருக்கும் ஞானக்கும்மி யேசுமதபரிகாரம் என்னும் நூல்கள் செய்தவரும் இவரே. வேறும் சிறுநூல்கள் சில செய்துளர் என்பர். ஒன்றும் ஏட்டில் எழுதப்பட்டிருக்கவில்லை. அங்கில திராவிட பண்டிதராய் நன்கு விளங்கிய சி. வை. தாமோதரம்பிள்ளைக்கும் தமிழாசிரியர் இவரே. பிள்ளையவர்கள் தமது நூற்பதிப்புரைகளிலே இவர்க்குக் கூறிய வணக்கமே அதற்குச் சான்றாகும்.

இவர்பாற்கேட்டுப் பாடஞ்செய்திருந்த அப்பொழுதை முதியோர் வாய்க்கேட்டிருந்தோர் சிலருளர். அவருள்ளும் வயோதிகத் தளர்ச்சியினால் முழுப்பாட்டும் சொல்ல இயலாது மறந்தவரும் சிலர். சிலர் வாயிலாகச் சிலபாட்டுகள் அகப்பட்டன. அவைகள் அநுப்பிராசம், யமகம், பிரகேளிகை முதலிய சொல்லலங்காரங்கள் நன்கமைந்து விநோதகவிகளாயிருக்கின்றன. கிராமாந்தரங்களிலும் சில முதியோர் வாயிலாகச் சில கவிகள் பெறலாம் என்று சிலர் கூறுகின்றனர். அகப்படுவனயாவும் திரட்டிச் சடிதியில் அச்சிடப்படும். இப்பொழுது செந்தமிழ்கற்கும் தமிழ்ப்புலவர்கள் அங்கீகரணநிமித்தம் மூன்று கவிகளை மாத்திரம் ஈண்டுக் காட்டுதும்.

## கட்டளைக் கலிப்பா.

பன்னி ரண்டு கரகந் தனையெட்டு
 பானை யைத்துண் டதரக் குயவனை
முன்னி ரண்டு குடங்கையி லேந்திலை
 முட்டி முட்டிமல் லார்மாவைச் சாடியைப்
பொன்னி ரண்டு பெறும்பெருஞ் செட்டியைப்
 போற்று வீர்புல வீர்சக ரந்தனை
முன்னர் வைத்த கலசம்பத் தும்பெறீஇ
 முதன்மை சால்பெரு வாழ்வுறன் மெய்ம்மையே.

இது நாமாந்தரிதை என்னும் பிரகேளிகைவகையமைத்துச் சுப்பிரமணியக் கடவுண்மீது பாடிய கட்டளைக் கலிப்பா.

பிரகேளிகையாவது சொல்லக்கருதியபொருளை ஆழ்ந்து கிடக்குமாறு மறைத்து வெளிப்படையில் வேறொன்றுபோற்காட்டி வித்துவான்களை மயக்கி விநோதம் புரிதற்கேற்ற சொற்களாற் பாடப்படுவது. நாமாந்தரிதையாவது வெளிப்படையிலே நாமம் வேறொன்றாகக்காட்டிக் கருதிய பொருளை மறைத்திருப்பது.

இக்கட்டளைக்கலிப்பாவிலே கருதிய பொருளை மறைத்துக்கொண்டு வெளிப்படையில் வெறொருவகையாகித் தோன்றும் நாமங்களாவன;--கரகம், பானை, குடம், முட்டி, சாடி, கலசம், சால் என்னும் பாத்திரப்பெயர்கள். இவற்றுள்ளே சில பன்னிரண்டு கரகம், எட்டுப்பானை, இரண்டு குடம், கலசம் பத்து எனத்தொகை பூண்டும் நிற்கின்றன. செட்டி என்பது வந்த வரிசை நோக்கிச் சட்டி என்று பாடம் கொள்ளும்படியும் மயக்குகின்றது. குயவனை என்பது இப்பாத்திரங்களை வனைந்துகொடுக்கும் குலாலனை நினைப்பிக்கின்றது. கரகத்தைப், பானையைச், சாடியைச், சட்டியைத்துதித்தாற் கலசம் பத்துப்பெற்று வாழலாம் என இயையும். கரகந்தனை என்புழித் தன் சாரியை.

இங்கே மறைந்து நின்ற பொருளையும் கூறுதும். பன்னிரண்டு கரகந்தனை - பன்னிரு திருக்கரங்களையுடைய கந்தசுவாமியை—எள் துப்பு ஆனை ஐ துண்டம் அதரம் குயம் அனை முன் இரண்டு குடங்கையில் ஏந்திலை - எட்பூவினையும், பவளத்தினையும், யானையையும்



முறையே நிகர்த்த அழகிய மூக்கு, அதரம், முலை என்பனவற்றினையுடைய உலோகமாதாவாகிய உமாதேவியாரால் முன்னரே உள்ளங்கை இரண்டினாலும் ஏந்தி வளர்த்தருளப் பட்டவரை—முட்டி முட்டி மல்லார் மாவைச்சாடியை - பலமுறை எதிர்த்துப் போராடி வலிநிறைந்த மாமரவடிவாய் நின்ற சூரபன்மனைக் கொன்றருளினவரை—பொன்னிரண்டு பெறும் பெரும் செட்டியை - தெய்வயானையம்மை, வள்ளியம்மை என்னும் மகளிரிருவரையும் மனைவியாகப் பெற்றுக்கொண்ட பெரிய செட்டியை—புலவீர் போற்றுவீர் - புலவீர்காள் போற்றக்கடவீர்—சகரந்தனை முன்னர் வைத்த கலசம் பத்தும் பெறீஇ - சகலசம்பத்துக்களையும் பெற்று—முதன்மை சால் பெருவாழ்வுறல் மெய்ம்மையே - முதன்மை நிறைந்த பெருவாழ்வினையடைதல் சத்தியம் என்க.

கரகந்தன் என்பது வடநூன் முடிபு. கந்தன் - பகையை அழிப்போன். எள்+துப்பு+ஆனை - எட்டுப்பானை. எட்டுப்பானையைத் துண்டதரக்குயவனை என்பது கிரமம் என்னும் அலங்காரம். தமிழ்நூலார் நிரனிறை என்பர். ஸ்தனத்திற்கு உபமானமாகக் கூறப்படும் பொருள்களுள்ளே யானையும் ஒன்றாய் நிற்றலால் ஆகுபெயராக்கி அதன் கொம்பு எனக்கொள்ளுதல் அநாவசியகம். துண்டதரம் என்புழி அகரம் தொகுக்கும்வழித் தொகுத்தல். அனை என்பது இடைக்குறை. குடங்கை - உள்ளங்கை. ஏந்திலை என்பது இல்வாழ்வானென்பான் என்பதுபோல நின்ற நயக்கு. முட்டி முட்டி என்னும் அடுக்குப் பன்மைமேற்று. மா என்றது மாமரவடிவாய் நின்ற சூரபன்மனை. பொன் உவமவாகுபெயர். செட்டி என்பது "திருத்தமிழ் மதுரைதன்னிற் சிவன்பொருணிறுக்குமாறு - ருத்திர சன்மனாகி" வசியர் மரபிலே உதித்த காரணம் பற்றி வந்த பெயர். உருத்திரசன்மாதல் பற்றிப் பெருஞ்செட்டி எனப்பட்டார். கலசம்பத்து என்னுஞ் சொற்றொடரின்முன் சகரம் என்னும் எழுத்தினை வைக்குங்கால் அது சகல சம்பத்து என முடிந்து நிற்கும். சகலசம்பத்து என்றது வலி, ஆண்மை, கல்வி, பொருள், புகழ்முதலியவாய் இம்மையிற் பெறுதற்குரிய பெருஞ்செல்வங்களை. சம்பத்து - பெருஞ்செல்வம். முதன்மைசால் பெரு

வாழ்வு என்றது ஆன்மலாபமாகிய பேறிரண்டுள்ளும் வீடுடையதாய் முதன்மைசான்று விளங்கும் நிரதிசயானந்தமாகிய பேரின்ப வாழ்வினை.

புலவீர்காள்! முருகக்கடவுளைப் போற்றுவீராயின்; இம்மையிற் சகலசம்பத்துக்களையும், இறுதியின் முத்தியின்பத்தையும் பெறுவீர் என்பது தாற்பரியம்.

இது புலவீர்காள்! முருகக்கடவுளைப் போற்றக்கடவீர்கள் என்று நற்பயன் கூறி நெறிப்படுத்தலாற் புலவராற்றுப்படை என்னும் பாடாண்டிணைத்துறைமேற்று.

இக்கட்டளைக் கலிப்பாவினடிகளுள்ளே சில வடிகளின் பாதி ஒருமாமுக்கூவிளம் என்னும் விதியிலமையாது நிற்றல் என்னையோ? என்பாருமுளர். எண்சீரடியாகிய கட்டளைப்பாவினடி இருதூக்குற்று இரட்டைச்சந்தமாய் நிற்கும் என்றும், ஒரு தூக்காகிய பாதியடி ஒருமாமுக்கூவிளமாய் நிற்கும் என்றும் கூறும் விதியுமுண்டு. பாதியடியினுள்ளே தேமா, தேமாங்காய், புளிமா, கருவிளம், புளிமாங்காய் என்னும் வாய்பாட்டுச்சீர்கள்வரும் சான்றோர் கவிகளுமுள. ஆயினும் வெண்டளையியையும் நேரசைகொண்டு தொடங்கும் பாதியடிக்குப் பதினொன்று, நிரையசை கொண்டு தொடங்கும் பாதியடிக்குப்பன்னிரண்டு என்னும் எழுத்தளவையும் வழுவுவதில்லை. ஆதலின், ஒருமாமுக்கூவிளம் என்பது ஆதுனிகவிதிபோலும்.

வில்லிபுத்தூரர் பாரதத்திலே வரும் விருத்தங்களுள்ளே சில, கட்டளைப்பாவுக்கென்று இப்போதுகொள்ளப்படும் விதியும் இசையும் பிறழாது நிற்கின்றன. ஆதலால் அப்பொழுதைச் சான்றோர், இப்பொழுதைச் சான்றோர் கட்டளைக்கலிப்பா என்று கொள்ளுஞ் செய்யுளை விருத்தமென்றே கொண்டார் என்பது பெறப்படுகின்றது.

இக்கட்டளைக்கலிப்பாவிற்போலப் பாதியடிகளிலே கூவிளம் நிற்றற்குரிய இடத்திலே புளிமாங்காய்ச்சீரும், தேமா, கருவிளம், புளிமா, என்னும் வாய்பாட்டுச் சீர்களும், தேமாங்காய்ச் சீரும் வருதலைக் குமரகுருபரசுவாமிகளுடைய கலம்பகங்களிலே வரும் கட்ட-



ளைக் கலிப்பாக்களிலும், பாரதத்திலே கீசகன் வதைப்படலத்திலே விருத்தமென நிற்குங் கட்டளைக் கலிப்பாக்களிலும் காண்க. கலிவிருத்தபேதங்களுள்ளே ஒரு சந்தம் இரட்டித்து எண்சீராய் வருவதே கட்டளைக் கலிப்பாவினடியாகும் என்பாருமுளர்.

செந்தமிழ் படிக்கும் தமிழ்ப்புலவர்களுக்குக் காட்டுமாறு கருதியமூன்றனுள்ளே மற்றைக்கவிகள் இரண்டும் சாவகாசம் பெற்றுழி ஈண்டு வெளிப்படுத்தப்படும். இவைகள் எஞ்சியவற்றோடு சேர்த்துப் புத்தகவடிவமாகவும் பிரகடனஞ் செய்யப்படும்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

## *"மதுரைஸ்தானீகர்வரலாறு."

"சுவாமியுடையவர் திருவாலவாயுடைய தம்பிரானார் காடர்லியுடைய நயினார் திருக்கோவில், ஸ்தானீகருடைய, ஆதிவரலாறு:—

"ஆதியில் புராணசித்தமாய்க், குலசேகரபாண்டியமகாராஜா நாளையில் கலியாண நகரத்திற் பட்டாபிஷேகம் பண்ணுவித்துக்கொண்டு ராஜ்ஜியபரிபாலனம் பண்ணிவருகிற நாளையில், காரணேந்தரமாய் நகரிக்கு வந்து தேவதாநிர்மாணமாயிருக்கப்பட்ட இந்திரவிமான வாசராகிய ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுவரரையும் பொற்றாமரைத் தடாகத்தையுங்கண்டு தரிசனம்பண்ணி, சுவாமியைப் பூசைசெய்வதற்கு வடக்கேயிருந்து பிராம்மணர்களை வரவழைத்து, சாஸ்திரபிரகாரம் பூஜையும் நடப்பிவித்துச்சிறிது திருப்பணியும் நடப்பிவித்து, சுந்தரலிங்கமே குலதெய்வமென்பதாய் ராஜ்ஜியபரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தார்.

"உடையசிவன் புதல்வன் உக்கிரனுக்கப்பாலடையும் முடியையெட்டுலக்ஷம்" பாண்டியராஜாக்கள் மனுநீதி தப்பாமல் தெய்வதாமசமாயிருக்கப்பட்டவர்கள், அநேக கோடிகாலம் ராஜ்ஜியபரிபாலனம் பண்ணிவந்தார்கள். இது புராணசித்தமான விஷயம்.

* இவ்வசன நூல், முன்வெளிவந்த "மதுரைத்தலவரலாறு" போலவே, மதுரைத்திருக்கோயிற் சரித்திரங்கள் சிலவற்றை நன்குவிளக்குவது. முன்னதினும் சரித்திரமிகுதியுடையது. ப-ர்.

"ஆதியில், கலியுகம் ரத்தாக்ஷி-௵ சித்திரை௴ ௰௩-உ செவ்வாய்க்கிழமையிற் பிறந்தது. அன்றுமுதல் அநேக பாண்டியர் சுந்தரலிங்கமே குலதெய்வமென்று சுவாமியினிடத்திலே சதாபக்தி பண்ணிக்கொண்டு சிவாநுக்கிரகத்தினாலே ராஜ்யபரிபாலனம் பண்ணிவந்தார்கள்.

"கலியுகம் ௪௲௩௱௮௰-க்கு மேல் சகாப்தம் ௲௨௱-க்கு மேல் செல்லாநின்ற வெகுதானிய ௵ பாண்டிய ஆதீனம் அருதியில் வாளால் விழித்துறங்கும் பராக்கிரமபாண்டியன் ராஜ்ஜியபரிபாலனம் பண்ணுகிற நாளையிலே, அப்போது இருந்த ஸ்தானீகர்கள் முந்தின மடாதிபத்தியம் கெவுடப்பிராம்மணர்களில் சுந்தரபாண்டிய ப்பிரம்மாதிராயர் இரண்டு சந்நிதானம் சைவாசாரியம் பூஜாகர்ம்மம் தேவதாகாரியம் பண்ணிக்கொண்டு வந்தார். இரண்டாமடாதிபத்யம் ஆரியரில் மனுநீதிகண்ட பிரம்மாதிராயர் பிரதானமூர்த்தி இரண்டுசந்நிதானத்துக்கும் பரிசாரகத்தொழிலு முற்சவமூர்த்தி, இளையநயினார், மாறியாடுவார் மற்றப்பரிவாரதேவதைகளுக்கு முண்டான சைவாசாரியம் பூஜாகர்மம் தேவதாகாரியம் பார்த்து வந்தார்.

"௩-வது:—மடாதிபத்யம் கெட்டிமுதலியார், திருமாலை திருவிளக்கு ஸ்ரீபண்டாரங்காவல் திருமேனிகாவல் தூர்வைப்பணிவிடை வரைக்கும் அவர்செய்துவந்தார்."

"௪-வது அருந்தமன் விழுப்பாதராயன் சறட்டுக்கணக்கன், ஸ்ரீபண்டார முதல் கணக்கு மெழுதிக்கொண்டு வந்தான்."

"௫-வது முனிவறியாதபெருமாள் மடாதிபத்யமும் ஸ்ரீபண்டார முதல் ரிஷபமுத்திரையும், சுயம்பாகம், திருமஞ்சனம், பரிவட்டசுத்தி முதலான பணிவிடையுஞ் செய்துவந்தார்."

"௬-வது மடாதிபத்தியம் உலகுடைய பெருமாள் ஸ்ரீபண்டார முதல் ராஜகர முத்திரையு மிரண்டுசன்னிதியிலும் வேதபாராயணமும் தெய்வகாரியத்துக்கெல்லாம் புரோகிதமுஞ் செய்துகொண்டு வந்தார். இப்படிக்கு, ௬-பேர் மடாதிபத்தியக்காரருஞ் சுவாமிகாரியம் பிரதானமாகப்பார்த்து வந்தார்கள். சகாப்தம் ௲௨௱௪௰௫-க்கு மேல் ருத்திரோத்காரி௵ ஆனி௴ ௨௰௨-உ டில்லியிலிருந்து பாச்சாவா



சல் மந்திரி, ஆதிசுலுத்தானும் மலுக்கநேமியாரும், அறுபதினாயிரம் குதிரையுடனே புறப்பட்டுச் சீமையிலுண்டான சிவஸ்தலம், விஷ்ணுஸ்தலம், கோவில் குளமெல்லாம் இடித்து ஸ்ரீபண்டாரமுதல் கொள்ளையிட்டுக்கொண்டு பிம்பங்களைக்கூட மோசப்படுத்துவித்துத் திரிசிரபுரம் வந்து சேர்ந்தார். அவ்விடத்திலுள்ள ஸ்தானீகரு மெடுபட்டார்கள். ஸ்தலங்களுமெடுபட்டுப் போயின. இந்தசமாசாரம் வாளால் விழித்துறங்கும் பராக்கிரமபாண்டியராஜா கேட்டுப்பயந்து, காளையார்கோவில் அரண்போய்ச்சேர்ந்தார். அப்போது ஸ்தானீகர்கள் ராஜாவில்லாத பட்டணத்திலிருக்கிறது எவ்விதமென்று, அநேகஸ்தலங்கள் முழுகிப்போன வயணங்களுந் தெரிந்து கொண்டு அப்போதவர்கள் நடப்பிவித்த விதம்:—சுவாமியுடையவர் திருவாலவாயுடைய தம்பிரானாருக்குக் கெர்ப்பக்கிரகத்துக்குள்ளே சுவாமிக்குக் கிளிக்கூண்டுபண்ணுவித்து மண்மேடுகள் போட்டுக் கெர்ப்பக்கிரகத்து வாசலுங் கல்வரிதீர்ந்து அர்த்தமண்டபத்தில் வேறேயொருலிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணுவித்து மூலப்பேர்நாச்சியாரையும் அஷ்டபெந்தனம் செய்து விமானத்தின் மேற்போக்கிலே நாச்சியாரை யெழுந்தருளப்பண்ணுவித்து உற்சவமூர்த்தி இளையநயினாரையும் பின்னுமுள்ள பரிவாரவிக்கிரகங்களையும் முசுகுந்தீசுவரமுடையார் போக்கிலே பூ பதனம் பண்ணுவித்துப் போட்டு சொர்ன்ன நாயகரையுஞ் சிறிது சொர்ன விக்கிரகங்களையு மெடுத்துக்கொண்டு நாஞ்சில் நாட்டில் கிலுகிலுப்பைக்காடுபோய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் போகிறபோது கரியமாணிக்கப் பெருமாள் கோவிலில் முன்பூஜைபண்ணிவந்த சோழியரில் குலசேகரப்பெருமாளென்கிறவர் தாயாதிக்காரருடனே நெருசலாய் ஆரியரில் மனுநீதிகண்ட பிரம்மாதிராயருக்குள்ளே வந்து சரணம் புகுத, அவர் தமது பிள்ளையைப்போலே பாவித்து யாதொருவேலையிலும் நம்பிக்கையாய்த் தங்களுடைய பணிவிடைக்கெல்லாம் சகாயமாய்க் கூடவைத்துத் தொழில் பண்ணி வந்தார்கள். அந்தக் குலசேகரப் பெருமாளிடத்தில் குச்சிலையும் நம்பிக்கொடுத்துப் பிரதான மூர்த்திகள் பரிவாரதேவதைகள்—பூபதனம்பண்ணியிருக்கிற ஸ்தலமும் ஸ்ரீபண்டாரப்போக்குஞ் சொல்லித் தாங்கள் கைக்கொண்டுள்ள சைவாசாரியம் பூஜாகர்மம் தேவதாகாரியம் பார்த்துவரச்சொல்லித்திட்டம்

பண்ணுவித்து எங்கள்வழியிலேந்துவயதுக்குழந்தைவந்தாலுங்குச்சுக்கொடுத்து விடுவோமாகவும் என்று செப்பேடு வாங்கிக்கட்டிக்கொண்டு தாங்கள் ஸ்தலம் வந்து சேருகிறவரைக்கும் பூசைபண்ணிக்கொண்டுவரச்சொல்லி நியமித்துப் போனார்கள்.

“அதற்குமேல் திருச்சிராப்பள்ளியில் வந்திருந்தபாளையம் ஆனி மீ ௨௦-௳ மதுரைக்கோட்டையை வந்து கட்டிக்கொண்டு பாண்டியன் கோட்டையும் பிடித்துக் கோவில் திருமதில் கோபுரம் முதலான திருப்பணிகளனேக மிடித்துப்போட்டார்கள். அப்போது பாளையத்தில் காரியஸ்தராகவந்திருக்கும் திரியம்பகராயர் நிரம்பவும் சிவபக்தியுள்ளவரானதால் கோவிலுக்கு தெரிசனத்துக்கு வந்தார். தெரிசனப்பண்ணிக்கொண்டு பிரதக்ஷிணம்வருகையில் விமானத்திலிருக்கிற எட்டு யானைகளையும் பார்த்து இந்தவயணம் என்னவென்று கேட்டார். அப்போது சொக்கனென்றொரு தபசி, எல்லாம் வல்லசித்தமூர்த்தி சந்நிதானத்தில் தவசுபண்ணிக் கொண்டிருந்தார். அவரைக்கேட்கும்போது, முன்னொரு பாண்டியனாளையில் இந்த விமானத்திலிருக்கிற கல்லானையைக் கரும்புதின்னப் பண்ணுவித்தார். அப்படிப்பட்ட அருமையான ஸ்தலமென்று நிரம்பவுஞ்சொன்னார். அப்படியாவென்று அதிசயப்பட்டு, இப்போது நாம் கொடுக்கிறோம். சாப்பிட்டதானால் நீர் சொன்னவார்த்தை யொப்புக்கொள்ளலாமென்று சொன்னார். அப்படியே வாங்கிச் சாப்பிடுமென்று சொன்னார். இந்த அதிசயத்தைத் தங்கள் பாளையத்துக்கு எஜமான் ஆதிசுலுத்தானிடத்திலும் மலுக்கநேமியிடத்திலும் அறியப்பண்ணுவித்து அவர்களையுங் கோவிலுக்குள்ளே கூட்டிவந்து கரும்பு வரவழைத்து ஆதிசுலுத்தான் கையினாலேகொடுக்க விமானத்திலிருக்கிற யானையானது கையினாலே வாங்கிப்புசித்தது. இந்த அதிசயத்தைப்பார்த்தவுடனே ஆதிசுலுத்தானுக்கும் மலுக்கநேமியானுக்கும் கைகால் நடுக்கமுண்டாகி இதுவரையிலும் இப்படி அதிசயங்காணவில்லை; இதிலே அல்லாவிருக்கிறார் என்று மனமகிழ்ந்து அப்பால் எடுபட்டுப்போன திருப்பணிகள்போக காபாலியுடையவர் திருமதிலும் கெர்ப்பக்கிரக முதல் ஆறுகாற்பீடம்வரைக்கும் பாண்டியர்செய்த திருப்பணியில் இவ்வளவும் நிலைத்தது.



“அப்பால் தவசிரூபமாயிருந்த சொக்கநாதனைப் பார்க்குமிடத்தில் கண்மறைந்தார். இது சுந்தரலிங்கப் பண்ணின திருவிளையாடல்; தெய்வரகசியம். அப்பால் துலுக்காணமாய்ச் சீமையெல்லாம் கட்டிக்கொண்டு பாண்டியனையும் கைப்பிடியாய்ப் பிடித்துத் தங்கள் சீமைக்கு யனுப்புவித்துப்போட்டு மூன்று ௵ சீமையைக்கட்டிக் கொண்டார்கள். அப்போது சீமைகளில் நடப்பிவித்த அநீதமெழுதிமுடியாது. கலாபந்தெளிந்து, அட்சய ௵ முதல் பிரசோற்பத்தி ௵ வரைக்கும் உலாபதிகான் ஆறு ௵ சீமையாண்டான். ஆங்கிரச ௵ முல்லாவென்கிற துருக்கன் சாதாரண ௵ வரைக்கும் ஆண்டான். உருத்திரோத்காரி ௵ முதல் சாதாரண ௵ வரைக்கும் வருஷம் ௬௮-க்கு துலுக்காணமாயிருந்தது. அப்படியிருக்கையில் கலியுகம் ௪௲௪௱௭௰௨-க்கு மேல் சகாப்தம் ௲௨௱௯௰௩-க்குமேல் விரோதிகிருது ௵ மைசூர் இராஜாவின் வாசல் தளகர்த்தம் கம்பணவுடையார் வெகுபாளையத்தோடு வந்து துலுக்கரை யெடுத்துவிட்டுச்சீமையைக்கட்டிக்கொண்டார். அப்போ தந்தப்பிரபு லிங்கதாரியானதினாலேயும், வீரசைவமானபடியினாலேயும் கோவில் ஸ்தானீகர்களை விசாரிக்குமிடத்தில் குலசேகரப்பெருமாளென்கிறவர் நான்தான் ஸ்தானீகனென்று வந்து கண்டுகொண்டார். நீர் ஸ்தலத்துக்கு உடையவரென்றால் அத்தாட்சியொப்புவித்தாலொப்புக் கொள்வோமென்று சொல்லுமிடத்தில், முந்தின ஸ்தானீகருடனே கூடஇருந்து கருமானமெல்லாந்தெரிந்தவரானதினாலேயும், ஆரியருக்குள்ளே கூடவிருந்து தொழில் செய்துவந்தபடியினாலேயுங் கருநாடகம் பிறந்து நல்லராஜா வந்திருக்கிறபடியினாலேயும் ஸ்தலத்தைப் பிரபலப்படுத்திவைக்க வேணுமென்று பிரபுவைக் கோவிலுக்குள்ளே அழைத்துப்போய்க் கெர்ப்பக்கிரகம் கல்வரியும்பிரித்து மண்மேடுங் கிளிக்கூடும் பிரித்துப்பார்த்துவருகையில், மூலலிங்கத்தைக் கண்டு தரிசனம் பண்ணினார். அப்போது, இருந்தபடி;—முன்னிருந்த ஸ்தானீகர்கள் சாத்திவைத்த வெண்பட்டும் கர்ப்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, இதுமுதலான வாசனையிட்ட சேர்வை மலாக்காச்சந்தனமும் சாத்தினபடியேயிருக்கச் செண்பகப்பூமாலையும் இரண்டு வெள்ளிக்குத்துவிளக்கு நிறைய நெய்யும் இட்டபடிக்கு சொலிக்க, பிரபு சுவாமி திருவுருவைக்கண்டார்.

*

"அந்த மாலைசந்தனத்தைக்கழித்துப்பார்க்குங் காலையில் கால
சந்தியில் சாத்துவித்து, உச்சிக்காலத்தில் கழித்தாலெப்படியிருக்கு
மோ, அப்படிக்குச் சந்தனமுங் காயாமல் மாலையும் வாடாமலிருந்
தது. இந்த அதிசயத்தைப்பார்த்து மிகவுஞ் சுவாமியினிடத்திற்
பக்தியுண்டாகி இந்தப் பிரசாதத்தை மைசூரில் தங்கள் ராஜாவுக்கு
அனுப்புவித்தார். அதன்பேரில் மூலப்பேர் நாச்சியார் உற்சவ
மூர்த்தி இளையநயினாரிருக்கிற இடங்களையுங் காண்பிவித்த பிறகு,
இவர்தான் ஸ்தானீகரென்று நிசமொப்புக்கொண்டு, மூலப்பேர் நாச்
சியாருக்கு அஷ்டபெந்தனமுஞ் சாத்துவித்து, மகா சம்ரோக்ஷணை
யும், ௲-பொன்வரைக்குஞ் செலவழித்து நடப்பிவித்து மாளவச்
சக்ரவர்த்தி குலசேகரபட்டரென்று பேருங்கொடுத்து ஆசாரிய
அபிஷேகம் பண்ணுவித்து சுவாமிக்கு சைவாசாரியம் பூஜாக்கிரமம்
தெய்வதாகாரியம் நடப்பிவித்துக்கொண்டு வரச்சொல்லி நியமனம்
பண்ணுவித்தார்கள். முன்னிருந்த ஸ்தானீகர்கள் எடுபட்ட நாள் மு
தல் ஷ௱ நுய-க்கு குலசேகரப் பெருமாள் தாயாதிக்காரர் எ-பேரும்
ஏழுபங்காய்ப் பிரித்துக்கொண்டு பங்குக்கு நான்குநாள் வீதம் உஅ
நாள்திட்டமாய் சுவாமி பூஜாகாரியம் நடப்பிவித்துக்கொண்டுவருகை
யில் ஆறு பேர் வங்கிசமற்று ஒரு வீட்டுக்காரர் மிஞ்சினர். அப்
போது சகாப்தம் ௲உ௱கூ௰கூ-க்கு மேற்செல்லா நின்ற பிங்கள ஷ௱
வரையில் இந்த மாளுவச்சக்ரவர்த்தி குலசேகரப்பட்டரொருவராய்
அவர் செய்து வருகிற பூஜாக்கிரமம் பிரபுமனசுக்குச் சரிப்படாமல்
கம்பணவுடையார் குமாரன் எம்பணவுடையார் ராஜரீகத்தில் வடக்
கேயிருந்து பின்குடுமிக்காரரில் வடமன்-சதாசிவப் பட்டரென்கிற
வர் ஒருவரை வரவழைத்தார்.

"அவர் படித்தவரும் நல்ல யோக்கியருமானபடியினாலே, அ
வரைத்தினந்தோறும் இரண்டு சன்னிதானத்துக்கும் யோக்கியமாய்
பூஜைபண்ணி வரட்டுமென்று, அவருக்கு ஆசாரியாபிஷேகம் பண்
ணுவித்து, அருந்தமன் விழுப்பாதராயன் வகைக் காலிங்கராயன்
கணக்குப்படிக்கு, முந்தின ஸ்தானீகர் சுந்தரபாண்டியபிரம்மாதிரா
யர்-செய்கர்மமும் மடாதிபத்தியமும், சதாசிவப்பட்டருக்குக் கட்ட
ளையிட்டு விக்கிரமபாண்டிய பட்டரிரண்டுபேருக்குங் சைவாசாரியம்
பூஜாகர்மம் கொடுத்து நடப்பிவித்துக்கொண்டு வந்தார். மாளுவச்



சக்கரவர்த்திகுலசேகரப்பட்டருக்கு இரண்டாவதுமடாதிபத்தியமும்
மனுநீதிகொண்ட பிர்மாதிராயர் செய்கர்மஞ் சகலமுங் கணக்குப்
படிக்கு, இருவருக்கு மாசாரியஅபிஷேகம் பண்ணுவித்து உற்சவ
மூர்த்தி இளையநயினார் மாறியாடுவார் முதலான பரிவார தே
வதைகளுக்குமுள்ள சைவாசாரியம் பூஜாகர்மம் தெய்வதாகாரியஞ்
செய்துவரச்சொல்லி, இரண்டு சன்னிதான மூலஸ்தானத்திற்கும்
பரிசாரகமுங் கட்டளையிட்டார்கள். கெட்டி முதலியார் வழியில்
வளர்ப்பு வகையில் முதலியப்பனும், சொக்கமுதலியு மிரண்டுபேரை
யுந் தற்புருஷதேவ முதலியென்றும் பெரியதேவமுதலியென்றும்
பேருங்கொடுத்து கெட்டிமுதலியார் மடாதிபத்தியத்துக்குண்டான
தொழிலுங் கணக்குப்படிக்குக் கட்டளையிட்டார்கள். காலிங்கராயனு
க்கு விழுப்பாதராயனென்று பேருங்கொடுத்து சகலகணக்குங் கட்
டளையிட்டார்கள். முனிவறியாதவகைச் சோழியரில் பாண்டியநா
ட்டு முதலியாருக்கு அவருடைய மடாதிபத்யமுங் கட்டளையிட்டார்
கள். இந்தப்படிக்கு அவரவர் காணியாட்சி யாண்டுவருங்காலத்திற்
சிலநாளைக்குப் பிறகு குலசேகரபட்டர்வழிப் பெண்ணைச் சதாசிவ
ப்பட்டர் வழியில்கொடுத்துப் பெண்ணுக்குச் சீதனமாக, ஏழுநாள்
பரிசாரகமுறையையும் சக்கரவர்த்தி விட்டுக்கொடுத்தார். மற்றவை
சக்கரவர்த்தி யாண்டுவந்தார்.

"கிலுகிலுப்பைக்காடுபோன ஸ்தானீகர்களும்சொர்ணநாயகரும்
ஸ்தலம் வந்து சேரவில்லை. அப்பால், சதாசிவப்பட்டரொரு வீட்
டுக்காரராக இருந்தபடியால் தமக்குச் சூதகம் வந்தால் பூஜாகிரமத்
துக்குக் கையாள்வேணுமென்று, நெட்டூராரில், சோழியரில், ஒரு
வீட்டுக்காரரை வரவழைத்து, அவர், அவர்களுக்கு ஆசாரியாபிஷே
கம் பண்ணுவித்து நமக்குச் சூதகம் வந்தவேளையில் பூஜாகர்மம் செய்
யவும் மற்ற நாட்களில் தனக்குச் சீதனம்கொடுத்த எ-நாள் பரிசாரக
முறையும் நெட்டூராரைச்செய்துவரச் சொல்லித் திட்டம்பண்ணுவித்
துக்கொண்டு, இப்படிவுரவரப் பத்துஜனங்களுஞ்சேர்ந்து திரவியமு
ஞ்சேர, படித்துவாசித்து வாசாலகனுயிருக்கிறபடியினாலே சதா
சிவப்பட்டர்வழி வலிமைபெற்றது. சக்கரவர்த்தி கையிளைத்தார்.
அப்படியிருக்கையில் எம்பணவுடையார்மருமகன் பொற்காசுடையா

ர் சித்திரபானு௵ வரைக்கும்௵ ௩௨-க்கு ராஜ்ஜியம் ஆண்டார். சுபானு௵ முதல் விபவ ௵ வரைக்கும் ௵ ௯௰௬-க்கு லக்கண நாயக்கர் மதனநாயக்கர் ராஜ்ஜியமாண்டார்கள். சுக்கில௵ முதல் நள ௵ வரைக்கும் ௵ ௪௰௮-க்கு பாண்டியன் வைப்பாட்டி காளை யார்கோவில் தாசி அபிராமி வயிற்றுப்பிள்ளைகள் ௯-பேர்கள். அதில் மூத்தவர் சுந்தரமாவலிவாணதிராயர் பட்டமாண்டார். அவர் நாளையில் பாண்டியநாட்டாசாரியார் தீட்சை பண்ணாத நிமித்தம் அரமனையார் ஆயாசத்தினாலே யெடுபட்டார். பிங்கள௵ முதல் ஆங்கிரச௵ வரைக்கும் ௵ ௰௫-க்கு தேனாயக்கர் பட்டமாண்டார். ஸ்ரீமுக ௵ முதல் தாது ௵ வரைக்கும் ௵ ௪-க்கு இராமசாமி நாயக்கர் பட்டமாண்டார். ஈசுவர ௵ முதல் விஷு ௵ வரைக்கும் ௵ ௫-க்கு கூறகூறத்தி திம்மப்ப நாயக்கர் பட்டமாண்டார். சித்திரபானு ௵ முதல் சுபானு ௵ வரைக்கும் கட்டியம் காமய நாயக்கர் பட்டமாண்டார்."

(இன்னும் வரும்.)

---

உ

# மகாபாரதச்செய்யுட்பாடாந்தரம்.

முன்றொடர்ச்சி.

## பதினான்காம் போர்ச்சருக்கம்.

௱௮௬. எற்றருந்தபனனேகினனியெனக்குவாசிகொடிநீடுதேர்
முற்றருங்கனலினொளியெழுந்ததெனமுரணழிந்திடமொ
(ழிந்துபோர்.

இக்கவியில், "முரண்மிகுந்திடமொழிந்து" எனக்காணப்படுகின்றது "முரண்மிகுந்திட மொழிந்து" என்பதே பொருட் பொருத்தமுடைத்தென்க.

## பதினைந்தாம்போர்ச்சருக்கம்

௩௪. கற்கொண்டுகன்மழை முன்றடுத்தகண்ணன் கற்கறித்துப்
பன்முறித்துக்கழறத்தானு, முற்கொண்ட விரதமறந்தி



யாருங்கேட்பமுரசுயர்த்தோன்பொய்சொன்னான்முடிவி
லந்த...

இக்கவியில், "கண்ணன் கட்டுரைத்த மொழிப்படியே கருதார்போரின்" எனக்காணப்படுகின்றது. இப்பாடமே பொருட்சிறப்புடைத்தென்க.

## பதினாறாம் போர்ச்சருக்கம்.

௪௰. மாரனுக்கிளையாமலம்பையைமாதவத்துவிடுந்
தீரனுக்குமொர் வாளிகொண்டுசெலுத்துதேருடைவெஞ்
சூரனுக்கெதிராகிமேனி துளக்கமெய்தியதோள்
வீரனுக்குமிகுந்தபேரபர்விளையவேயொருபால்.

இக்கவியில், "தீரனுக்கு மொராழிகொண்டு" எனவும், "மேனிதுலங்குசோனனுந் தீரனுக்கும்" எனவுங்காணப்படுகின்றன. ஓராழியைக்கூறுதல் சூரியனிரதத்திற்குப் பொருத்தமுடைமையாலும், சேனையும் வெளிப்படையாகக் கூறவேண்டுமாதலாலும் இப்பாடமே பொருத்தமென்க.

## பதினேழாம் போர்ச்சருக்கம்.

௰௫. ஏவருஞ்சாபபண்டிதன்புதனேவியவேலினால்யாங்கள்
ஏவருந்தன்மையறிந்துவாகனமும்விறற்படைகளுமொழி
[த்திட்டாய்.

னைந்தாம் போர்ச்சருக்கத்தில் அசுவத்தாமன் நாராயணாஸ்திரமேவியதாகக் கூறப்படலால் "ஏவியவேலினால்" எனக்காணப்படும் பாடமே பொருத்தமுடைத்தென்க.

௩௩. கோவல்சூழ் பெண்ணைநாடன் கொங்கர்கோன் பகைஞர்
[வேந்தன்.

இக்கவியில், பகைஞர்வேந்தன் என்பது "பாகைவேந்தன்" எனக்காணப்படுகின்றது. பாகை என்பது வக்கபாகை என்னுநகரமாதலால் இப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

## பதினெட்டாம் போர்ச்சருக்கம்.

௯. தாமந்தராதிபர்கள்பலரொடும்வலப்புடைசலிப்பின்றி
யணியவிறல்கூர், மாமந்தராதிபர்கள்பலரொடுமிடப்புடை
வகுப்பொடணியத்தினகரன், கோமைந்தன் மைந்தரிரு

வோரொடுஞ் சேனையைக் கொண்டுற வணிந்தனனிகற்,
சாமந்தர்மண்டலிகர்முடிமன்னர் சூழ்வரத்தரணிபதிபின்
[னணியவே.

இக்கவியில், "தாமன்றராதிபர்கள்" என்றும், "மாமன்றராதிபர்கள்" என்றும், "கோமைந்தன் மைந்தரொரு மூவரொடு சேனையும் கொண்டுற" என்றும், "சாமந்தன் மண்டலிகர்" என்றும் காணப்படுகின்றன. தாமன் என்றது அசுவத்தாமனை. மாமனென்றது சகுனியை. மூவரென்றது, பின் ௩௪-ஆங்கவியிற் கூறியபடி, சித்திரசேனன், சூரியவன்மன், சித்திரகீர்த்தியென்பவரை. சாமந்தன் என்றது, தானைத்தலைவனாகிய சல்லியனை. இங்ஙனம் பொருள்கொண்டுரைக்கும் இப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

௨0௪. பூசுரர்பெருந்தகைபரித்தாமாவிரியல் போனகிருபன்கிரு
தவன்மன்மூவருமுன், வாசவன்விரிஞ்சனுமைபாகனிவர்
மூதல்வானவர்வழங்கியவிதப்போர்வாளிகளி, லாசுகன்
மகன்றனையுமப்போதேதுணைவரானவரையுந்தலைதுணிப்
பமெனநாடியவர், பாசறைபுகுந்தனர் பரித்தேரியானை
யொடுபாரதமுடிந்தபதினெட்டாநாளிரவே.

இக்கவியில், "கிருதப[illegible] மூவருமுன்" என்றும், "விரிஞ்சனுமைபத்தாமாயன் முதல்" என்றும், "[illegible]போர்" என்றும், "துணிப்பானுடியுமு" என்றும், "பரித்தேர் யானை" என்றும் காணப்படுகின்றன. இப்பாடமே சந்தஞ்சிதையாமலிருப்பதால் பொருத்தமுடைத்தென்க.

முற்றிற்று.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

---

# சேனாவரைய வாராய்ச்சி.

[௨௫-ம் பக்கத்தொடர்ச்சி.]

எச்சவியல்-சூ-௫௬.

"கடிசொல் லில்லைக் காலத்துப் படினே."

இச்சூத்திரவுரை, சிலவிடத்துச்சிலசொற்களைக் கூட்டியும், மாற்றியும், ஓரிடத்துச் சிலவாக்கியங்களையே அடியோடு களைந்துவிட்டு அவ்விடத்து நச்சினார்க்கினியருரை வாக்கியங்களைச் சேர்த்தும் இரண்டு பதிப்புப்புத்தகங்களி லச்சிடப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

"கடிசொல்லில்லைக் காலத்துப் படினே."

"இ-ள். இவை தொன்றுதொட்டன வல்லவென்று கடியப்படுஞ்சொல்லில்லை; அவ்வக்காலத்துத் தோன்றி வழங்கப்படுமாயின். எ-று"

"உ-ம். சம்பு, சள்ளை, * சட்டி, சமழ்ப்பு எனவரும். இவைதொன்றுதொட்டு வந்தனவாயின், † முதலாகாதனவற்றின்கண் "சகரக் கிளவியு மவற்றோ ரற்றே - அ ஐ ஔவெனு மூன்றலங்கடையே" என விலக்கார் ஆசிரியர்; அதனான் அவை பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாமென்பது."

"இஃது எழுவகை வழுவமைதியுள் ஒன்றாகாது ஓர் பாதுகாவலாதலிற் கிளவியாக்கத்திலையின்மையான் ஈண்டுக் கூறினாரென்பது."

‡ ["இனி ஒன்றெனமுடித்தலாற் புதியன தோன்றினாற்போலப் பழையன கெடுவனவும் உளவெனக்கொள்க. அவை அழான், புழான் முதலியனவும், எழுத்திற் புணர்ந்த சொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம்."]

இனி, பெரும்பாலும் ஏட்டிலுள்ளவையுள்ளவாறே பதிக்கப்பட்டுள்ள கோமளபுரம் இராஜகோபால பிள்ளையவர்கள் பதிப்பில் மட்டும் இச்சூத்திரவுரையும் ஏட்டிலுள்ளவாறே யச்சிடப்பட்டிருக்கிறது. அது வருமாறு —

---

* தடித்த எழுத்திலுள்ளவை ஏடுகளிலில்லை.
† கீழ்க்கோடிடப்பட்டுள்ளன மாற்றப்பட்டவை.
‡ [ ] இவ்வடையாளத்திற் குட்பட்டவை நச்சினார்க்கினியருரை வாக்கியங்களாகக் காணப்படுகின்றன. சேனாவரைய ஏட்டுப்பிரதிகளிலில்லை.

"கடிசொ லில்லைக் காலத்துப் படினே."

"இவை தொன்றுதொட்டனவல்லவென்று கடியப்படுஞ்சொல்லில்லை. யவ்வக்காலத்துத்தோன்றி வழங்கப்படுமாயின். எ-று. சம்பு, சள்ளை எனவரும். இவை தொன்றுதொட்டு வந்தனவாயின் முதலாகக்கரத்துட் 'சகரக்கிளவியு மவற்றோரற்றே, அ ஐ ஔ வெனுமூன்றலங்கடையே' என விலக்காராமாசிரியர்; அதனானவை பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாமென்பது. இஃதெழுவகை வழுவமைதியுமல்லதோர் பாதுகாவலாதலிற் கிளவியாக்கத்தியைபின்மையா னீண்டுக் கூறினாரென்பது. இஃதொரு சாரா ருரை. இன்னவனுவதிக்குங்காலமா மக்காலத்தவைவழுவன்மை யெல்லா வாசிரியர்க்கு முடன்பாடாகலி னதனைத் தழீஇக்கொண்டவாறென்க. இவையிரண்டு மிச்சூத்திரத்திற்குப் பொருளாகக்கொள்க."

எட்டி லுள்ளவா றச்சிடப்பட்டிருத்தலோடு பொருட்பொருத்தமு முறுதலின் இதுவே சுத்தபாடமாம். இது பொருட்பொருத்தமுறுமாறு கீழே காட்டப்படுகிறது.—

இச்சூத்திரத்திற்கு ஆசிரியர் சேனாவரையர் பிறர்கூற்றாக ஒருரையும், தங்கூற்றாக ஒருரையும் ஆக இரண்டுரை கூறுகின்றார். "இவை தொன்றுதொட்டனவல்லவென்று" என்பது முதல் "ஈண்டுக்கூறினாரென்பது" என்பதுகாறும் ஒருரை. இதில், சொற்கள் அவ்வக்காலத்துப் புதிதுபுதிதாகத்தோன்றி வழங்கப்படுமென்றும், அவ்வாறு வழங்குங்கால் இவை தொன்றுதொட்டு வந்தனவல்லவாதலாற் கொள்ளப்படாவென அவற்றை விலக்கலாகாதென்றும், இதற்குச் சம்பு, சள்ளை என்பன உதாரணமென்றும், ஆசிரியர் மொழிக்கு முதலாமெழுத்துக் கூறுங்கால் "கதநபமவெனு மாவைந்தெழுத்து, மெல்லாவுயிரொடுஞ் செல்லுமார் முதலே" என்பதனையடுத்துச் "சகரக்கிளவியு மவற்றோரற்றே, அ ஐ ஔவெனு மூன்றலங்கடையே" எனக்கூறி, சகரம் அகர ஐகார ஔகாரங்களோடுகூடி மொழிக்குமுதலாகாதென விலக்கியிருத்தலின் சம்பு சள்ளை யென்பன பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாமென்றும், இச்சூத்திரம் ஈண்டு வைக்கப்பட்டதற்குக் காரணமின்னதென்றுங் கூறப்பட்டிருக்கிறது.



"இன்னவனுவதிக்குங்காலமா மக்காலத்தவை வழுவன்மையெல்லா வாசிரியர்க்கு முடன்பாடாகலினதனைத் தழீஇக்கொண்டவாறென்க." என்பது மற்றோருரை. இதில், இன்ன என்றது சம்பு, சள்ளை முதலியவற்றை. அனுவதித்தலாவது முன்னருளதாகிய மொழியைப் பின்னர் வழங்குவதன்றே? அதனால், அக்காலத்தென்றது அவ்வாறு வழங்குங்காலத்தென்றவாறு. அவை என்றது அச்சொற்களை. எல்லாவாசிரியர்க்கும் என்றது; சத்தத்தை நித்தியமெனக்கொள்ளும் வையாகரணர் முதலியோரும், அதனை அநித்தியமெனக்கொள்ளும் தார்க்கிகர் முதலியோரும் ஆகிய இருதிறத்தினர்க்கும் என்றபடி. அதனை யென்றது அச்சொற்கள் வழுவன்மையை யென்றவாறாம்.

முன் உரையில் "அவ்வக்காலத்துத் தோன்றி வழங்கப்படுமாயின்" என்பதிலுள்ள "தோன்றி" என்பதற்கு அதுகாறுமில்லாத சொல் தோன்றி எனப்பொருள்படுதலானும், சத்தத்தை நித்தியமெனக்கொள்ளும் இலக்கண நூலார்க்கது பொருந்தாமையானும், அதனை "இஃதொரு சாராருரை" என்றும், இச்சொற்களின் வழக்கை அனுவாதமாகக் கொள்ளுதலே இலக்கண நூலுடையார்க்கு உடன்பாடாகலின் பின்னதைத் தம்மபிப்பிராயமாகவும் ஆசிரியர் சேனாவரையர் கூறியிருத்தல் கண்டுகொள்க.

## எச்சவியல் சூ-௫௪.

"குறைத்தன வாயினு நிறைப்பெ யரியல."

இச்சூத்திரவுரையும் சூ-௫௩ போலவே இரண்டு பதிப்புக்களில் மாற்றியுங் கூட்டியுங் குறைத்தும்,ஒருபதிப்பில் எட்டிலுள்ளவாறும் அச்சிடப்பட்டிருக்கிறது. அவைவருமாறு:—

"குறைத்தனவாயினு நிறைப்பெயரியல."

"இ - ள். குறைத்தனவாயினும் அவை குறையாது நிறைந்து நின்ற பெயரியல்பையுடைய எ - று. என்றது,முற்கூறிய உதாரணங்கள் தாமரை, ஓந்தி, நீலமென நிறைந்த பெயர்களின் பொருள்களைத்தந்தே நிற்குமென்றவாறாம்."

"குறைந்த வழியும் நிறைந்த பெயராகக் குறைக்கப்படுவன பெயரேயாகலின், நிறைப்பெயரியல வென்றார்."

இது மாற்றியுங் கூட்டியுங் குறைத்து மச்சிடப்பட்டது. இதனில், "என்றது முற்கூறிய..........என்றவாறும்." என்னும் வாக்கியம், சேனாவரைய ஏடுகளிலும் ஏட்டிலுள்ளவா றச்சிடப்பட்டுள்ள புத்தகத்து மின்மையானும், நச்சினார்க்கினியருரையிற்காணப்படுதலானும் அதிலிருந்தெடுத்துச் சேர்க்கப்பட்டதெனத் தெரிகிறது. "குறைந்த வழியும்.........என்றார்" என்னும் வாக்கியத்தின் முதலிலும் இடையிலும் சிலசொற்கள் விடப்பட்டும், இரண்டு வாக்கியங்களொன்றாக்கப் பட்டுமிருத்தல் பின்னர் வருவனவற்றால் விசதமாம்.

"குறைத்தன வாயினு நிறைப்பெய ரியல."

"குறைத்தனவாயினு மவை குறையாது நிறைந்து நின்ற பெயரியல்பையுடைய. எ - று. என்றது குறைந்தவழியு நிறைந்த பெயராகக்கொள்க. குறைக்கப்படுவன பெயரோயாகலி னிறைப்பெயரியல் லென்றார்."

இது ஏட்டிலுள்ளவா றச்சிடப்பட்டது. இதினில் "என்றது ..........கொள்க" என்னும் வாக்கியம் முடிவெய்தாமனிற்கின்றது. இதன்கடையில் என்றவாறு என ஒரு சொற்பெய்யின் "என்றது குறைந்தவழியுநிறைந்த பெயராகக்கொள்க என்றவாறு" என வாக்கியம் முற்றுப்பெறுதலோடு பொருட்பொருத்தமு முறுகின்றது. ஆதலின் அவ்வாறே பெய்து வாசிக்கவேண்டுமென்பது. இவ்வாறே மேல் "எஞ்சியமூன்றும்" என்னும் எச்சவியல் சரு-ம் சூத்திரத்தும், பிறண்டும் ஆசிரியர் சேனாவரையர் "என்றவாறு" என வாக்கியங்களை முடித்திருத்தல் கண்டுகொள்க. எழுதுவோர் கைதவறிவிடுதல், பாணம் விழுதல் முதலியவற்றால் ஏடுகளில் இவ்வாறிரண்டொரு சொல் விடப்பட்டிருத்த லியற்கையேயாம்.

இதுகாறும் முக்கியமான பிழைகளே காட்டப்பட்டன. இனியிரண்டொரு சிறுபிழைகளும் அவற்றின் திருத்தங்களுமட்டுங் காட்டி நிறுத்தப்படும். அவை வருமாறு;—

(க) வினையியலில் "முன்னிலைவியங்கோள்" என்னும் உரு-ம் சூத்திரத்துள்ள "பிரிபுவேறுபடூஉம்" என்பதை "திரிபுவேறுபடூஉம்" எனத்திருத்திக்கொள்க. ஏடுகளிலும் அச்சுப்பிரதிகளிலும் "பிரிபு வேறுபடூஉம்" என்றேயிருப்பினும் இச்சூத்திரவுரையின்



முடிவில் "திரிபுவேறுபடூஉஞ் செய்தியவாகியெனவே" என அனுவதித்திருத்தல் அவற்றிலெல்லாங் காணப்படுதலும், இப்பாடத்தில் மோனை நயமிருத்தலும், தமிழ்த்திரிசொற்கள் பல இயற்சொல்லாய் வழங்கப்படும் மலையாளத்தில் "திரிதல்" என்னுஞ்சொல் "பிரிதல்" என்னும் பொருளில் வழங்கப்படுதலும், பெயரியலில் "இருதிணைச் சொற்கு மோரன்ன வுரிமையிற், றிரிபு வேறுபடூஉ மெல்லாப்பெயரும்" என்னும் கஅ-ம் சூத்திரத்தும் திரிபுவேறுபடுதலென்பது இப்பொருளில் வந்திருத்தலும் இத்திருத்தத்திற்காதாரமாம்.

(உ) வினையியல் உரு-ம் சூத்திரத்தில் "ஒருவற்குமொன்றற்கும்" என்பதை "ஒருவர்க்குமொன்றற்கும்" எனவும், (ங) இடையியல் சு-ம் சூத்திரவுரையின் உதாரணத்தில் "பண்டுகாடுமனின்று கயல்பிறழும் வயலாயிற்று என்புழி அஃதாக்கங்குறித்து நின்றது" என்பதை "பண்டுகாடுமன் என்புழி இன்று கயல்பிறழும் வயலாயிற்றென அஃதாக்கங்குறித்து நின்றது" எனவும் திருத்திக்கொள்க. இத்திருத்தங்களுக்காதாரம், கோமளபுரம் - இராஜகோபால பிள்ளையவர்கள் பதிப்புப்புத்தகமும், ஏடுகளும், பொருட்பொருத்தமுமாம்.

பின்னுஞ்சில இவ்வாறுளவேனும் அவை விரிவஞ்சிவிடப்பட்டன.

அ. கோபாலையன்.

## மாட்சிதங்கிய பரோடாமகாராஜா அவர்கள்
## கைத்தொழிலைப்பற்றிச் செய்த
# மகோபந்நியாசம்.

[கல்கத்தாவில், சமீபத்திற்கூடிய 2-வது இந்தியக் கைத்தொழிற்
சங்ககாலத்தே, கல்விசெல்வங்களால் ஆன்ற பெரியோர்கள் நிறைந்
த மகாசபையில், மகாராஜசிரோமணியாயுள்ள மாட்சிதங்கிய கைக்
வாரவர்கள் ஆங்கிலத்திற் செய்த மகோபந்நியாசத்தைத் தழுவிய
தமிழ்மொழிபெயர்ப்பு அடியில் வருமாறு.]

கனம் அக்கிராசனாதிபதிக்கும், இச்சங்கத்துப் பிரதிநிதிகளுக்
கும் மற்றுமுள்ள கனவான்களுக்கும் விஞ்ஞாபனம்.

நான் ஐரோபா அமெரிக்காச் சுற்றுப் பிரயாணங்களிலிருந்து
திரும்பியபின், சென்றமாதந்தான், உங்களது அறிவாற்றல் மிக்க
காரியதரிசியாகிய ராவ்பஹதூர் ஆர். என். மதோல்கார் (R. N.
Mudholkar) என்பால் வந்து, நான் இத்தொழிற் சங்கத்தில் பிரத
மோபந்நியாசம் செய்தற்கு அவசியம் வரவேண்டுமென்றும், இது,
தொழிற்சங்கத்தாரின் ஏகோபித்த வேண்டுகோளென்றும் எனக்குத்
தெரிவித்தார். இயற்கையாகவே, இவ்வேண்டுகோட்கு இணங்குவதில்
நான் சிறிது பின்வாங்கினேன். ஏனென்றால், அந்நியதேசயாத்திரை
யிலிருந்து இப்போதுதான் திரும்பி வந்தபடியால் என்மேற்சுமந்து
ள்ள அரசியல்வேலை மிகுதியாலும், நீங்கள் கைக்கொண்ட இவ்வுத்தம
காரியத்தில் உங்களுக்குப் புத்திமதி சொல்லக்கூடியவர்கள், என்னை
விட, மேலானவர்களிருக்கிறார்களென்று நான் தெளிந்ததாலு
மேயாம். என்றாலும், கனவான்களே! இக்காரணங்களைச் சொல்லி
நான் உங்கள் காரியதரிசியிடமிருந்து தப்பிக்கொள்ள முடியவில்லை.
அவர், தொழிற்சங்கத்தாரது வேண்டுகோட்கு இணங்கும்படி என்
னைக்கட்டாயப்படுத்தினதுமன்றி, நான் அப்படி இணங்குவதானது
நம்மெல்லா இருதயத்திலுமுள்ள பெருங்காரியமாகிய தேசநன்மை
க்கு உழைப்பதாகும் என்று பக்ஷத்துடன் எனக்கு வற்புறுத்தினார்.
இம்மொழிக்கு நான் இணங்கவேண்டியது கடமையென்று நினைத்



தேன். தற்காலத்துக் கைத்தொழிலபிவிர்த்தியின் பொருட்டு உழை
க்க நாமெல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் திடசிந்
தையுடன் உணருகிறேன்.

நம் ஜீவனோபாயமுறை எதுவாயிருந்தாலும் சரி, நம்தேசக்
கைத்தொழிலபிவிர்த்தியைக் கருதாமல் அலக்ஷியம்செய்வது,நம்மை
யும் நம் நாட்டையுமே புறக்கணித்ததாகும். நான் அடிக்கடி உய்த்
துணர்ந்து வெளியிட்டிருக்கிறபடியே, இன்றைக்கும் வெளியிடுவ
தென்னவென்றால், பொது நன்மை என்பது எல்லாருக்கும் ஒரு
தன்மைத்தானது; உங்கட்கு எது நன்மைபெருமைகளைக் கொடுக்கி
றதோ அதுவே எங்களுக்கு நன்மைபெருமைகளைக் கொடுக்கிறது.
உங்கள் க்ஷேமலாபத்துக்கு எது இடையூறாயிருக்கிறதோ, அது எங்
களுக்கும் அப்படியே அமைகிறது. மேலும், நம் வாழ்நாளுடன்
சம்பந்தப்பட்ட பற்பல துறைகளில் நாம் உழைக்கும் உழைப்பு
ராஜகீய விஷயமானாலும் சரி, ஜாதியாசாரவிஷயங்களானாலும் சரி,
கைத்தொழில் விஷயமாயினும் சரி—இவையெல்லாம் ஒன்றோடொ
ன்று ஒற்றுமைபெற்றவையாதலால், ஒன்றில் நாம் விசேஷத் தேர்ச்
சியடையும்போது, மற்றத்துறைகளிலும் அவ்விதத் தேர்ச்சியை நாம்
அடைந்திருக்கவேண்டியது ஆவசியகமாகின்றது. மேல் தோற்றத்
தில் வித்தியாசப்பட்ட துறைகள்போலக் காட்டி, அபிவிர்த்தியாகிய
பலனையளிப்பதில் ஒத்தகாரணமாயுள்ள மேற்படி மனோவுழைப்புக
ளே வாழ்நாள்களைச் சிறப்பித்து ஓங்கச்செய்கின்றன. நாம் விஷய
ங்களைப் பரந்தகண்ணோடு பார்த்தால், "அபிவிர்த்தி" என்னும்
யந்திரத்தின் கூறுகளே மேற்குறித்த துறைகள்—என்பது வெளியா
கும்.

### கைத்தொழிலின் பூர்வசரித்திரம்.

கனவான்களே! பூர்வகாலத்து இந்தியக்கைத்தொழில்களைப்
பற்றி விவரமாய்ச்சொல்லி அதிக நேரத்தைக்கழிக்க மாட்டேன்;
என்றாலும், அவைசம்பந்தப்பட்ட குறிப்பான சிலவிஷயங்களை மாத்
திரம் சுருங்கச்சொல்லவேண்டுவது இதுபோன்றசந்தர்ப்பத்துக்கு
மிகவும் ஏற்றதாகும். முற்காலந்தொட்டே நம் இந்தியதேசம் அழ
கான வஸ்திரவகைகளுக்குப் பேர்பெற்றதாயிருந்ததென்பது உங்க

ளுக்குத்தெரியும். பழைய சரித்திரகாரர்கள், இந்தியப்பஞ்சு வியாபாரமானது பூர்வகாலத்தில் அஸிரியா, பாபிலோன் முதலிய இடங்களிலும் * பரவியிருந்ததென்று சொல்லுகிறார்கள். நம் இந்தியா ஒன்றிலேயாத்திரம் உண்டாகத்தக்க அவுரிநீலங்களின் சின்னங்கள், எகிப்தியர் காத்துவந்த பிரேதங்களின் (Mummy) †வஸ்திரங்களிலே பூதக்கண்ணாடியின் உதவிகொண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தியத் தந்தங்களும் மற்றுமுள்ள அநேக பண்டங்களும் எகிப்து தேசத்துக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. பிராசீனபிரசித்த வியாபாரிகளாகிய பினீஷியர்கள் ‡ நம் இந்தியாவோடு பிரபலமாக வியாபாரஞ்செய்தார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேல்நாடுகளுக்கு இவர்கள் கொண்டுபோய் வியாபாரஞ்செய்த வாசனைச்சரக்குகள், விலையுயர்ந்த கற்கள், கருங்காலிமரங்கள், தங்கவேலை சித்திரத்தையல்வேலைப் பண்டங்கள்—ஆகிய இவையெல்லாம் இந்தியாவிலிருந்து கொண்டுபோனவைகளே.

இவர்க்குப்பின் வெகுகாலம் கழித்துத்தான் கிரேக்கர்கள் நாகரீகமடைந்தார்கள். "சரித்திரகர்த்தர்கட்குத் தகப்பன்" என்னும் புகழ்பெற்ற ஹெரடோடஸ் (Herodotus) என்பவர், நம் இந்தியப் பருத்தியை "மரங்களில் வளரும் உரோமம்" என்றும், "ஆட்டுரோமத்தைக் காட்டிலும் நயமும் விலையுயர்ந்ததுமான" தென்றும் சொல்லுகிறார்.

கிறிஸ்தப்தத்துக்கு முந்திய நூற்றாண்டுகளில் இந்தியாவுக்கும் மேனாட்டுக்கும் பெருத்தவியாபாரம் நடந்துவந்தது. ரோமாபுரி வல்லமையும்கீர்த்தியும் அடைந்திருந்த காலத்தும், அலெக்ஸாண்டரியா செழித்தவியாபாரஸ்தலமாகிய காலத்திலும் நம்முடைய

* இவை ஆசியாகண்டத்தின் தெற்குக்கோடியிலுள்ள நாடுகள். பூர்வத்தில் நாகரீகம் பெற்றிருந்த தேசங்கள் இவை.

† இப்பிரேதங்கள், பூர்வீகஎகிப்துதேசத்தாரால் சுகந்ததிரவியமிட்டுப் பெரிதும் போற்றிக்காக்கப்பட்டன. இவைகள் நீலநதி (Nile) பாயும் பிரதேசங்களிலுள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

‡ இவர்கள் முன்னாளில் மிக்க நாகரீகம் பெற்ற வியாபாரிகள்; இவர்கள் பூர்வகாலத்தே கப்பல் வியாபாரத்தில் தேர்ந்தவரல்லராயினும், ஆசியாமைனர், சிரியா, மற்றும் மத்தியதரைக்கடலைச் சார்ந்த நாடு இவைகளில் இவர்கள் வியாபாரம் மிகுந்திருந்தது.



வியாபாரம் அதிதீவிரமாகவும் மிகுதியாகவும் நடந்தது. பட்டுநூல் வகைகளும், நீலக்கற்களும், அவுரி நீலங்களும், வஸ்திரவகைகளும் ஸிந்துநதி முகத்துவாரத்திலுள்ள துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. முக்கியமான கடல்வியாபாரஸ்தானமாகிய—இந்துக்களால் 'பாருகச்ச' என்றும், ரோமரால் 'பாரிகாஸா' என்றும் அழைக்கப்பட்ட—பிரீச் (Breach) துறைமுகத்தில், தங்கம்வெள்ளி முதலான லோகங்களும், கண்ணாடி பவளம் வாசனைத்திரவியம் இவைகளும் இறக்குமதியாகியும்; உயர்ந்த விலைபெற்ற கற்கள், மிகவழகான துணிமணிகள், மற்றும் வஸ்திரவகைகள், தந்தம், கருங்காலிவிரங்கள், மிளகு, பட்டு முதலிய பண்டங்கள் ஏற்றுமதியாகியும் வந்தன.

கி. பி. 3-வது நூற்றாண்டில், ரோமராஜ்யம் தளர்வடைந்தது. தளரவே, கான்ஸ்டான்டிநோபிள் துறைமுகமானது—முன்பு அலெக்ஸான்டிரியா மூலம் நிகழ்ந்துவந்த—ஆசியா வியாபாரத்தில் பெரும்பகுதியைக் கவர்ந்துகொண்டது.

கிறிஸ்தப்தத்துக்கும் பிற்பட்ட நூற்றாண்டுகளில், இந்தியாவானது அடிக்கடி படையெடுப்புகளுக்கு உட்பட்ட நிலைக்களமாயிற்று. சித்தியரும் ஊணரும் இந்தியாவின் மேற்கு பாகாணங்களைக் கொள்ளையாடி அழிக்கலானார்கள். ஆனால், ஒரு சிறந்த மகாவீரனும், நம்பாஷாபிவிர்த்தி சம்பந்தமாகப் பிரஸித்திபெற்றவனுமாகிய விக்கிரமாதித்தியன் இவ்வந்நியப்படையெடுப்புகளை எதிர்த்து ஒழித்தான். அப்பால், கி. பி. 6-ம் நூற்றாண்டுமுதல் 10-ம் நூற்றாண்டுவரை, இந்தியா, அந்நியர் முற்றுகையிலிருந்து தப்பி இருந்தது. இந்தக்காலமத்தியிலேதான், பாஹியான் (Fa-Hian) ஹியூந்த்ஸாங் (Hionen-Tsang) என்ற சீனயாத்திரிகர்களும் மற்றும் அநேகரும், மதசம்பந்தமானவிஷயங்களை அறிந்துபோவதற்காக, நம்நாட்டுக்குயாத்திரைவந்து; அப்போதிருந்த கைத்தொழில்களையும் நானாவித நாகரிகக்கல்வித்துறைகளையும் கண்டு வியப்படைந்ததோடு, ஒவ்வொரு நகரத்திலுமுள்ள இந்து தேவாலயங்களையும், அவற்றின் பக்கத்திலிருந்த பௌத்தப்பள்ளிகளையும் பற்றிக் குறிப்பெழுதியிருக்கிறார்கள். நம் இந்திய வியாபாரிகள் ஜாவாமுதலியதீவுகளிலும் குடியேறியிருந்

தனர். "தமிரலிப்பட்டி" அல்லது 'தமிழுக்' என்ற துறைமுகத்திலிருந்து ஓர் இந்தியக்கப்பலில் ஏறித்தான், பாஹியான் தன் தேசநோக்கிப் புறப்பட்டது.

ஐரோப்பிய நாடுகட்குப்போய் அதன் முக்கிய நகரங்களில் சுற்றுப்பிரயாணஞ்செய்திருப்பவர்கள், ஜாவாவிலிருந்து டச்சுக்காரரால் எடுத்துக்கொண்டு போகப்பட்ட இந்துதெய்வவிக்கிரகங்களை லீடன் நகர்ப் பொருட்காட்சிச்சாலையிற் பார்த்திருக்கலாம். இந்தியாவிலிருந்து சென்ற வியாபாரிகளாலும் மற்றும் குடியேறியவர்களாலும் ஜாவாத்தீவில் இந்துமதம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டுமென்பது நன்றாகத்தெரிகிறது.

அந்தகாரகாலம் (Dark ages) முடிந்தபின்பு இந்தியவியாபாரத்துக்கு வேனிஸ் துறைமுகம் வியாபாரவழியாயிருந்தது. 15-ம் நூற்றாண்டு முடிவில் வாஸ்கோடிகாமாவால், ஆபிரிகாத்தென்கோடியிற் கண்டுபிடிக்கப்பட்ட புதுமார்க்கத்தின் மூலம் நடந்த வியாபாரப்பெருக்கால் அவ்வேனிஸ் வியாபாரமகிமை போயேவிட்டது. வேனிஸ் சீர்குலையவும் போர்ச்சுகல் (Portugal) பிரதாபத்திலும் வாணிபத்திலும் வளர்ந்தோங்கியது. 16-ம் நூற்றாண்டில், சீனதேசம் வரையுள்ள ஆசியாத்தென்கடற்கரை முழுதிலும் வியாபாரத்தலைமை போர்ச்சுகீயரிடமேயிருந்தது. ஆனால், அடுத்த 17-ம் நூற்றாண்டில் டச்சுக்காரரே முன்னவர்வகித்த ஸ்தானத்தையடைந்து, இந்திய வியாபாரத்தால் தங்களை தனவந்தர்களாக்கிக்கொண்டார்கள். கொஞ்சக்காலம் கிரமித்து ஆங்கிலேயர்கள் அவ்வியாபார அரங்கில் ஆடத்தொடங்கினார்கள். தொடங்கி, 18-ம் நூற்றாண்டில், டச்சுக்காரரிடமிருந்து, அவர்கள் கீழைத்தேச வியாபாரத்தைப் பறித்துவிட்டார்கள். சென்ற ஆயிரவருஷகாலத்துக்குள் ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் ஒருவர்பின் ஒருவராய்ப் பிராபல்யத்தையும் ஐசுவரியத்தையும் அடைந்தது கீழைத்தேச வியாபாரத்தாற்றான். பிராசீன காலத்தில், பெருத்த வியாபாரிகளான பினீஷியர்கள், அரபியர்கள் —இவர்கள் அடைந்திருந்த ஸ்தானத்தை, கான்ஸ்டான்டிநோபிள், வேனிஸ், போர்ச்சுகல், ஹாலந்து, இங்கிலாந்து முதலியதேசத்தார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8 - AUG 1907
MADRAS.

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௫] பிலவங்க௵ ஆனி௴. [பகுதி-௮.

## பழைய கைத்தொழில்வியாபாரங்கள்.

இப்போது நம் தேசத்தார் மனதில் உதித்து விளங்கும் "சுதேசிய" உணர்ச்சியானது, பெரும்பாலும், கைத்தொழில்களாலும் வியாபாரத்தாலும் இந்தியாவின் பொருளாதாரநிலையை விருத்திசெய்தலைப் பற்றியதாகவே இருத்தல் பலரும் அறிந்தது. இவ்வுணர்ச்சி தேசாபிமானமும் ஊக்கமுமுடைய அறிவாளர் சிந்தையில் பல்லாண்டுகளாகவே விளங்கிவந்திருப்பினும், ஜனசமூகம் முழுதும் அதிற்றம் விருப்பத்தைக் காட்டத் தொடங்கியது சமீபகாலத்திலேதான் என்பது நாம் அறியாததன்று. இவ்வாறு சுதேசிய வுணர்ச்சியும் அதன்மூலம் முயற்சியும் 'புதியனவாயுண்டாயிருப்பதற்கு முக்கிய ஏது, நம் நாட்டார் உலகியல்களை முன்னிலும் அதிகமாகத் தெரிந்துவருதலேயாம். தேசத்தின் கைத்தொழில் வியாபாரங்கள், நெடுங்காலமாக, அந்நியரது யந்திரதந்திரோபாயங்களால் நசிப்புண்டு, இந்தியாவின் செல்வநிலையைப் பெரிதும் சீர்கெடுத்துவரும் செய்தி நம்மவர்க்கு எட்டி, அதிசயத்தையும் அச்சத்தையும் கொடுத்துவருகிறது. இது நற்காலத்தின் அறிகுறி என்பதில் சிறிதும் ஐயமில்லை. இக்காலத்துச் சீர்கேடான நிலைமையை மாற்றுதற்குச் சுதேசிய உணர்ச்சியும் முயற்சியும் தக்ககருவிகளாதலால், அவை பெரிதும் வேண்டப்படுவனவேயாம். ஆனால், முன்னாளிலே, நம்மவர்க்குப், பொருளாதார நிலையைப்பற்றிய கவலையேனும் அதன்மூலம் இத்தகைய முயற்சிகளேனும் அவசியமாக நேரிட்டனவல்ல.

அந்நிய வியாபாரிகளால் இந்தியக்கைத்தொழில் வியாபாரங்கட்கு எவ்வித இழுக்கும் அப்போது நேர்ந்ததில்லை. நாட்டில்விளைந்த இயற்கைப்பொருள்களில் வேண்டியவளவு இங்கேயே செயற்கைப்பொருள்களாகமாறி உபயோகிக்கப்பட்டன. அவை இங்குமட்டுமல்ல: அந்நிய வியாபாரிகளால் தேசாந்தரங்கட்கு மிகுதியாக 'ஏற்றுமதி' செய்யப்பெற்றும், பெருலாபம் தந்தன. இவ்விஷயங்களெல்லாம், இற்றைக்கு 1800-வருஷங்கட்கு முன் இந்தியாவுக்குவந்து சென்ற யவனர்களிலே பிளைநி, டாலமி, பெரிப்ளஸ், ஸ்ட்ரேபோ—முதலிய ஆசிரியர்கள் எழுதியுள்ள சரித்திரக்குறிப்புகளால் வெளியாகின்றன. இவருள் பிளைநி என்பவர், தம் குறிப்பில், நம்தேசம் "ஆண்டுதோறும் உரோமராஜ்யத்திலிருந்து 976, 979-பௌன் கவர்தற்குரிய பண்டங்களை 'ஏற்றுமதி' செய்துவர, அப்பண்டங்கள் அந்நியநாடுகளிலே நூறுமடங்கு அதிகவிலைக்கு விற்கப்பட்டன" என்று கூறியிருக்கின்றார்.* இவ்வாறு, முற்காலத்தே, பிறர்க்கு மிகவும் அருமையும் அதிசயமுந் தரத்தக்க பண்டங்களையளித்து இயற்கைவளமெல்லாம் நிரம்பிப் பொன்கொழிக்கும் பூமியாக விளங்கியது நம் பாரதவர்ஷம். பொன்கொழிக்கும் பூமி என்பது அதிசயோக்தியன்று: "இந்தியர் உங்களைவிட மகா பாக்கியசாலிகள்; நீங்கள் பொன்கொழிக்கும் அச்சாதியாரொழிய ஏனையரினும் பாக்கியசாலிகள்; உங்களுடைய துணையும் இதுவே" என்று, கி. பி. 117-ல் இறந்த கிரிஸாஸ்டம் என்னும் யவனாசிரியரே, தம் நாட்டாரை நோக்கிக் கூறுவதன்மூலம் நம்மவரை வாயாரப்புகழ்ந்திருக்கின்றனர்.† இவ்வாறிருக்கும்போது, பஞ்சமென்பதும் பட்டினியென்பதும் அக்காலத்து இருந்தன என்று சொல்ல விடமுண்டோ? இல்லை. இற்றைக்கு 2300-ஆண்டுகட்கு முன் விளங்கிய சந்திரகுப்த சக்கரவர்த்தியிடம் ராஜதூதராய் வந்து சென்ற மெகாஸ்தனிஸ் என்னும் யவனர், தாம் நேரிற்கண்டுகளித்த இந்தியவளத்தையும் ஏனைப்பெருமைகளையுங்குறித்தெழுதி—"இவற்றால், இந்தியாவுக்குப் பஞ்சமென்பது வந்ததேயில்லையென்றும், உணவு முதலியவற்றுக்கு வேண்டும் பண்டங்களில் யாதொரு குறைபாடும் இருந்ததில்லையென்றும் சொல்லப்படுகின்றன." ‡ என்று எழுதிப்போந்தனர்—என்றால், இக்காலநிலைக்கும் முற்காலநிலைக்கும் எத்தனைபெரிய வித்தியாசம் நேர்ந்துள்ளது! இப்படியே, அந்நியரெழுத்துக்களைக்கொண்டு, நம் நாட்டின் பூர்வநிலையை ஆராய்வதில்பல அரிய செய்திகள் தெரியக்கூடுமாயினும், அவ்வாராய்ச்சி மிக நீளுவதோடு, தக்க அறிஞரால் அவை முன்னரே வெளியிடப்பட்டிருத்தலால் மிகையுமாகும். ஆதலால், தமிழ்நாடு சம்பந்தப்பட்டமட்டில், இங்கே முற்காலத்தில் நிகழ்ந்த கைத்தொழில் வியாபாரப்பெருமைகளை முன்னூல்களைக்கொண்டு ஆராய்தல் "செந்தமிழ்"பிமானிகட்கு இன்பம்பயக்கக்கூடுமென்று எண்ணுகிறேன்.

* The Tamils 1800 years ago. P. 38.

† "செந்தமிழ்"—தொகுதி-௪, பக்-௧௭௬.



ஆரியமக்களால் புண்ணியபூமி என்று கருதப்படும் இந்தியாவுக்குப்பரதகண்டம், பாரதவர்ஷம், ஆரியவர்த்தமுதலிய பெயர்கள் முன்னாண்முதல் வழங்குவதுபோலவே, அதற்குக் "கர்மபூமி" என்னும் பெயர்வழக்கமும் உண்டு. "கர்மபூமி" என்ற தொடர்க்கு வெவ்வேறு பொருள்கள் கூறப்படுகின்றன. கேவலம் வைதிககர்மங்கள் பரதகண்டத்திலன்றி வேற்று நாடுகளிற் செய்யப்படின், பயனளியா வாதலால், அப்பெயர்பெற்றதென்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார், சுவர்க்க நரகங்கள் இன்பதுன்பங்களை அநுபவித்தற்குரிய இடங்களாதலால் அவை "போகபூமிகள்" எனவும்; அவ்வின்பதுன்ப அநுபவங்கட்குக் காரணமான நல்வினை தீவினைகள் செய்யப்படும் இடம் இப்பரதகண்டமன்றி வேறில்லையாதலால் இது "கர்மபூமி" என்னும் பெயர் பெறலாயிற்று எனவும் கூறுவர். இப்பொருள்கள் பிற்காலத்தாரால் ஒருவாறு இசைத்துக் கூறப்பட்டனவேனும், அத்தொடரை வழங்கிய முன்னோர்களது விரிந்த எண்ணத்தை இவை உள்ளபடியே உணர்த்துவனவாகா. அத்தொடரிலுள்ள "கர்மம்" என்பதை வைதிககர்மமொன்றற்கே கொண்டு பொருளைக்குறுக்கியும், நற்கருமத்துடன் தீக்கருமமும் செய்தற்குரிய இடம் என ஒன்றைக் கூட்டியும் கூறாமல், "நற்றொழில்களையே செய்தற்குரிய பூமி" எனப் பொருள்காணுதலே முன்னோர் கருத்தோடு ஒத்ததாகும். அஃதாவது—அவ்வவ்வருணத்தார் ஜீவனோபாயத்துக்குரிய நற்கர்

‡ Civilisation in Ancient India. Part I. P. 228.

மங்களை முறைப்படி செய்துவந்தபூமி இப்பரதகண்டமேயாதலால் அது “கர்மபூமி” எனப்பட்டது என்பதாம். பழைய செந்தமிழ் மக்கள் இக்கருத்தே படப் பொருள் கூறியிருக்கின்றனர் என்பது கடைச்சங்ககாலத்தாகிய திவாகரத்தில் கூறப்பட்ட பின்வருஞ் சூத்திரத்தால் விளக்கமாகும்.

“உழவு தொழிலே [1] வரைவு [2] வாணிபம்
வித்தை சிற்ப [3] மென்று இத்திறத் தறுதொழில்
கற்கும் நடையது கரும பூமி”—எனக்காண்க.

இதனால், முற்கூறிய பொருளே முன்னோர் கருத்து என்பது மலையிலக்கன்றோ? முன்பு, அவ்வவ்வருணத்தார் தத்தம் செய்தொழிலைக் குறைவறப் புரிந்து விளங்கிய பரதக்ஷேத்திரத்தே, பிற்காலத்தில் வர்ணங்களும் கர்மங்களும் தலைதடுமாறினமையால் கர்மபூமி என்னுந்தொடர்ப்பொருளும் தடுமாறியதுபோலும்! திவாகரர்கூறிய பொருளே, கர்மபூமி என்பதின் பழம்பொருள் என்பதற்கு மற்றொரு சிறந்த மேற்கோளுங்கூறுதும். ஜைனமத கிரந்தமும் மணிப்பிரவாள நடையினதுமாகிய ஸ்ரீபுராணத்தில், ஆதிதீர்த்தகரரது நாளில் நிகழ்ந்த விசேடங்கூறிச்செல்லுமிடத்தே, “பரதக்ஷேத்திரம் ஷட்கர்மங்களாலே பிரவர்த்தித்தலின் போகபூமி என்னும் பெயர் தவிர்ந்து, கர்மபூமி என்னும் பெயர்பெற்றது” எனவும், “பகவான் ஜனங்கட்கு ஜீவனோபாயமாக உழவு தொழில் வரைவு வாணிபம் வித்யா சில்பமென்னும் ஷட்கர்மங்களையும் உபதேசித்தருளி” எனவும் வரும் வாக்கியங்களால், பரதகண்டத்துக்குக் “கர்மபூமி” என்னும் பெயர்வந்தவாறும், ஷட்கர்மங்கள் இன்னவை யென்பதும் நன்குவிளங்குமாறு கண்டுகொள்ளத்தக்கது.

இனி, இக்கர்மபூமிக்குரிய அறுவகைத் தொழில்களிலே, உழவும்வாணிபமுமே தலைசிறந்தன என்பது அறிஞர்க்கெல்லாம் ஒத்தது. ஒருநாட்டின் மேம்பாட்டுக்கு இவ்விரண்டு தொழில்களும் செழித்திருத்தல் இன்றியமையாததன்றோ! இவ்விரண்டில் ஒன்றுசெழிக்க, ஒன்று செழித்ததில்லையேல், அந்நாடு பரிபூர்த்திபெற்ற வளமுடையதாகாது. தமிழகம் முற்காலத்தே இவ்விரண்டு தொழில்களும் குறைவறப் பெற்றிருந்ததென்பதற்கு எண்ணிறந்த சான்றுகளுண்டு. உதாரணமாக—மதுரைக் காஞ்சியில்,

1. கைத்தொழில்கள். 2. எழுதல், ஓவியத்துறை முதலியன. 3. “கல்லு முலோகமும் செங்கலு மரமும், மண்ணுஞ் சுதையுந் தந்தமும் வண்ணமும், கண்டசர்க் கரையு மெழுகு மென்றிவை, பத்தே சிற்பத் தொழிற் குறுப் பாவன”—திவாகரம்.



“வியன்மேவல் விழுச்செல்வத்து
இருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு.”

எனவரும் அடிகளாலும், அவற்றிற்கு ஆசிரியர்-நச்சினார்க்கினியர் “உலகத்துத்தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு வாணிகம் என்னும் இரண்டு கூற்றாலே, அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே புகழ்நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்குலத்து வாழ்வாருடனே” என்று கூறிய உரையாலும் தமிழ்நாட்டின் பழநிலை வெளியாவதோடு, விவசாயம் வியாபாரமென்னும் இரண்டும் தேசவிர்த்திக்கு இன்றியமையாதவை என்னும் இக்காலத்தறிஞர் கருத்து முன்னோர்க்குப் புதியதன்று என்பதும் விளங்கத்தக்கது. இவற்றுள், உழவின்பெருமை வேண்டியமட்டும் தமிழ்நூல்களிற் காணலாமாதலால் எடுத்துக்கொண்ட பழைய கைத்தொழில் வியாபாரப்பெருமைகளைமட்டும் இங்கேகூறுவோம். வணிகர்க்கு முக்கியமாக வேண்டப்படுங் குணங்கள் பின்வருமாறு திவாகரத்திலே கூறப்படுகின்றன.

“தனிமை யாதல் பணிவில னாதல்
இடனறிந் தொழுகல் பொழுதொடு புணர்தல்
உறுவது தெரிதல் இறுவதஞ் சாமை
ஈட்டல் பகுத்தல் என்றிவை யெட்டும்
வாட்ட மில்லா வணிகரது இயற்குணம்.”

வியாபாரமுறைக்கு இக்காலத்தாராற் சொல்லப்படுங்குணங்களில், முக்கியமானவை இவ்வெட்டுமேயன்றோ. இவற்றுள் “தனிமையாதல்”—என்னுங் குணம் வியாபாரத்துக்கு உரியதாக முன்பு கருதப்பட்டது. கூட்டுவர்த்தக முறையில், இக்காலத்துப்போல எண்ணிறந்த சௌகரியம் முன்பேற்படாமையால் அது நீக்கப்பட்டது போலும். ஆயினும் அக்கூட்டு வியாபாரமும் முன்னிகழ்ந்த

தேயென்பதும், அக்காலவியல்புக்கு அது பெரும்பாலும் ஒவ்வாதாயிற்றென்பதும் "தனிமையாதல்" என ஒன்றை எடுத்துக்கூறுதலானே உய்த்தறியப்படும். மனுமுதலிய நீதிநூல்களில் சொல்லப்படும் பதினெட்டு வியவகாரபதங்களில் "கூடிமேம்படல்" அஃதாவது "கூடியிலாபம் சம்பாதித்தலும்" ஒன்றாகவிருத்தலால், முற்காலத்தே அவ்வியாபாரமுறைமை தழுவப்பட்டிருத்தல் காண்க.

இத்தகைய குணங்களுடன், தமிழ்மக்கள், பண்டைக்காலத்தே அந்நிய நாடுகளிலும் உண்ணாடுகளிலும் தங்கள் வாணிபவிர்த்தியைப் பெருக்கிவந்தார்கள். வெளிநாடுகளுடன், இவர்கள், முக்கியமாகச் செய்துபோந்த வியாபாரம் துணி மணி மிளகு முதலியனவாம். நம் நாட்டில் நெய்யப்பட்ட துணிகள் மிகப்பழங்காலத்தேயே அந்நியரால் ஆச்சரியத்துடன் புகழப்பட்டுள்ளன. ஏறக்குறைய இற்றைக்கு 2400-வருஷங்கட்கு முன்பிருந்தவரும், "சரித்திரவாசிரியர்க்கெல்லாந் தகப்பன்" என்று புகழப்படுபவருமாகிய "ஹெரோடோடஸ்" என்னும்யவனர் நமதுபஞ்சைப்பற்றிப்பேசும்போது, "அங்கு (இந்தியாவில்) மரங்களில் வளரும் கம்பளி" "என்றும் "அது ஆட்டுரோமங்களால் உண்டாம் கம்பளிகளினும் விசேடமானது" என்றும் கூறுகின்றார்.* இத்துணி நெய்தற்றொழில், இலக்கியங்களில், "காருகவினை" என்று கூறப்படும். இதனை,

"பருத்திநூல் பட்டுநூல் அமைத்தாடை யாக்கலும்
சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்."

என்னுந் திவாகரத்தாலும் "காருகரிருக்கை" "காருகமடந்தை" என வரும் முன்னூற்றொடர்களாலும் உணர்க. தத்தம் கிரகங்களில் இருந்துகொண்டே செய்துவந்த தொழிலாதலால் அப்பெயர் பெற்றது. முற்காலத்தே, கிரகங்களில் இருந்துகொண்டே அருமையான ஆடைவகைகள் நெய்தற்கு வேண்டிய நுண்ணிய நூலிழைகள்முழுதும் வீட்டுப்பெண்பாலரால் நூற்கப்பட்டன என்பதற்கு அநேக மேற்கோள்கள் தமிழில் காணலாம். அவற்றுள் சிறந்த மேற்கோள் சில காட்டுதும். "பருத்திப்பெண்டின் பனுவலன்ன" என்வரும் புறநானூற்றடிக்கு "பருத்திநூற்கும் பெண்டாட்டியது சுகிர்ந்தபஞ்சுபோன்ற" என்று கூறப்பட்ட உரையாலும்,

* "செந்தமிழ்"—தொகுதி-௫, பக்-௧௩௮.



"பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு"

என்னும் நன்னூற் பாயிரச்செய்யுளாலும், முற்கூறிய விஷயம் தெளிவாம். இவற்றுள், பின்னதாகிய வெண்பாவிலே பஞ்சிநூலையும் படிப்பு நூலையும் உருவகப்படுத்துமிடத்து, புலவனுக்குச் சேயிழையைக் கூறிப்போந்த மாட்சியானே நூனூற்றல் மகளிர்தொழில் என்பது மலையிலக்காம். "நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவன்மகடூஉத் தனது செயற்கைநலந்தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூனூற்றல் என்பது" எனவரும் இறையனார்களவியலுரைவாக்கியமும் இங்கே கவனிக்கத்தக்கது. இழை நூற்றல் ஸ்திரீகள் கையாண்ட தொழிலென்பது இருக்குவேதத்திலும் அறியப்பட்டதென்பர் *. இவ்வழக்கம் இன்றும்பலவிடங்களில் நடைபெறுவதேயாம். இனிச் சிலப்பதிகாரத்தே,

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்"

என்னும் அடிகளினுரையிலே, "மயிரினும்" என்பதற்கு "எலிமயிரானும்" என்றுபொருள் கூறப்பட்டுள்ளது. இவ்வெலிமயிராடை மிகுந்தகுளிரையும் தாங்கக்கூடியதென்பது காஞ்சிப்புராணத்துக் கழுவாய்ப்படலத்தே, கூதிர்க்காலவர்ணனை கூறுமிடத்தில்,

"அழற்று வெம்மைய அங்க ராகமும்
செழித்த காரகிற் செறித்த தூமமும்
இழித்தி லாஎலிமயிரின் போர்வையும்
கழித்தி லாரைக் கணமுழ் யாவரும்."

என்று அவ்வாடை புகழப்படுதலால் வெளியாம். இவ்வெலிமயிராலமைந்த ஆடை எவ்வளவு அருமையாதல் வேண்டும்! இதுபோலத் [illegible]லே அப்போது வழங்கிவந்தபட்டாடைகளிற் "பலவகைப்பட்ட தொகுதி" சிலப்பதிகாரத்தாற்றெரிய வருகின்றன. அவற்றின் பெயர்கள், கேட்பதற்கு மிகவும் இன்பம்பயப்பனவாம். [illegible] வருமாறு:—

* Civilisation in Ancient India Part i, page-44.

"கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம் சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இலஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி" எனக்கண்டுகொள்க. (சிலப்பதி—336-பக்.)

இவற்றால் எண்ணிறந்த ஆடைவகைகள் முன்பு வழங்கின என்பது தெளிவாம். இத்தகைய ஆடைகளிலே சிறந்தவைகள் சில, சங்கவிலக்கியங்களில் பின்வருமாறு புகழப்பட்டுள்ளன:—

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை நல்கி (பொருநாற்-அஉ-அ௩.)

(உரை) "கண்ணிற் பார்வை, இஃது இழைபோனவழியென்று குறித்துப்பார்க்க வாராத நுண்மை உடையவாய், பூத்தொழில் முற்றுப்பெற்றமையால் பாம்பினது தோலையொத்த துகிலைக் கொடுத்து"

"காம்பு சொலித்தன்ன அறுவை" (சிறுபாண்-உ௩௬)

(உரை) மூங்கிலாடையை உரித்தாலொத்த மாசில்லாத உடை"

"கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை
வண்ண அறுவையர்"—(மணிமேகலை-காதை-உ அ.)

"ஆவி யன்ன அவிர்நூற் கலிங்கம்"

[ஆவி—பாலாவி]

"பாம்பு பயந்தன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண்பூங்கலிங்கம்" (புறம்-௩அ௩.)

(உரை) பாம்புச் சட்டை போறலால் அது பயந்தது போன்ற வடிவுடையனவும், மூங்கிற் கழையில் உண்டாம் ஆடைபோல, இழைப்பு கண்ணுக்குத் தோன்றாதனவும், ஒள்ளிய பூத்தொழில் உடையனவுமான ஆடை என்க.

இவைபோன்ற உண்மைப்புகழ்ச்சிகள் பழையநூல்களில் அதிகமாம். இத்தகை ஆடையாபரண முதலியவை செய்யுந் தொழிலைப் படித்தறிதற்குரிய கருவிகளும் முன்பு இல்லாமற் போகவில்லை. யாப்பருங்கல விருத்தியில், ஓரிடத்தே, "இவற்றை மந்திரவாத மருத்துவ நூலும் சாமுத்திரிகமும் நிலைத்து நூலும் ஆயுதநூலும் பத்துவிச்சையும் ஆடைநூலும் அணிகலநூலும் அருங்கலநூலு முதலியவற்றாலுணர்க" எனவரும் வாக்கியத்தால், முற்காலத்தில், பல தொழில்களை அறிதற்குரிய கருவிநூல்களும் இருந்தனவென்பது தெளிவாம். அன்றியும்,



"ஏரண முருவம் யோகம் இசைகணக்கு இரதம் சாலம்
தாரண மறமே சந்தம் தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள"

என்னும் பாடலும், புறம் ௧௬௬-ம் செய்யுளில் "மூவேழ் துறையும்" என்பதன் விசேடவுரையிலே "இருபத்தொரு கூறுபட்ட அர்த்தநூல்" (Economy) எனக் கூறப்பட்டிருப்பதும் "உல்லியர் கூவநூலுணர்வோர்" என்னுந் திவாகரசூத்திரமும்-முற்காலத்தே தொழினிலை பொருளாதாரநிலைகளை அறிதற்குவேண்டிய நூல்கள்மலிந்திருந்தன என்பதை நன்கு விளக்கக்கூடியன.

இந்நூல்களெல்லாம் இப்போது இறந்தொழிந்தன. இங்ஙனம் ஆடைக்குப்பேர்போன நாடாய் விளங்கி,மேனாடுகளின் மானத்தைக் காத்தும்வந்த நம்பாதகண்டம், நம் காலத்தில் ஏறக்குறைய அப்பெயர்போனதேயாகி, தன்மானத்தைக் காத்தற்குப் பிறர்கையை அபேக்ஷிப்பதாக மாறிவிட்டது. இது நம்மவர்க்குப் பெரிதும் துக்கமும் வெட்கமுந் தரத்தக்கதன்றோ. முன்னாளில், இவ்வருமையான துணிகளுடன்; மிளகு, தந்தம், முத்து முதலிய இயற்கைப்பொருள்களையும் வாங்கிச்செல்லும் பொருட்டு, காவிரிப்பூம்பட்டினம் முசிறி தொண்டி முதலிய கடற்கரைப் பட்டினங்களில் யவனவியாபாரிகள் மிகுதியாக வசித்துவந்தனர். சிலப்பதிகாரத்தே,

"கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்"

எனவும்; அகநானூற்றில்,

"யவனர் தந்த வினைமாண் கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி"

எனவும் பிறவாறுங்கூறப்பட்டிருத்தல் காண்க. இவ்யவனர் தம் நாடுகளிலிருந்து இங்கு 'இறக்குமதி' செய்த பொருள்கள், முக்கியமாக, சாராயம், பித்தளை, கண்ணாடி என்பனவாம். இவற்றுள் சாராயம் தமிழ்ப்பேரரசராலும் சிற்றரசராலும் விரும்பி உபயோகப்படுத்தப் பட்டுவந்தது. இச்செய்தி,

"யவனர்—நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சி[illegible]து
ஆங்கினிது ஒழுகுமதி ஒங்குவாள் மா[illegible] (புறம்—௫௬)

என நக்கீரனார், பாண்டியன் - நன்மாறனைநோக்கி வாழ்த்துதலால் தெளியப்படும். இவ்வாறு தமிழ்நாட்டில் மலிந்திருந்த யவனர் என்பவர், கிரேக்கம் அரபியா முதலிய மேனாடுகளிலிருந்து வந்தவர்களே. இவருள் கிரேக்கயவனர் இங்குவந்து வியாபாரஞ்செய்தவராயினும், சங்கநாளிலும் அதன்பின்பும் தமிழகத்தில் மிகுதியாகத்தங்கினவர் சோனகர்என்னும் யவனராவர். தமிழர்கூறும் பதினெண்தேயங்களுள் ஒன்றான சோனகம்என்பது, பரதகண்டத்துக்கு மேல்பாலுள்ள நாடுகளிலொன்று என்றுசொல்லப்படுதலால், அஃது அரபியா என்னுந் தேசமாகக் கருதப்படுகிறது. தென்னாட்டுக் காயற்பட்டினம் கீழைக்கரை முதலிய கடற்கரைப் பக்கங்களிலே இக்காலத்தும் இச்சோனகர் மிகுதியாக வசிக்கின்றனர். இவர்கட்கு வழங்கும் "லப்பை" என்னும் பெயர், இவர்களது பூர்வபாஷையாகிய "அரபி" ச்சொல் என்பர். இவரெல்லாம், பிற்காலத்தே, தங்கள் பூர்வதேசத்தாரைப்போல,முகமதியமார்க்கத்தைத் தழுவிக்கொண்டனர். இச்சோனகர், ஏனைத் தமிழத்துருக்கருடன் சம்பந்தமுடையவர் அல்லர். இவர்கள், முற்காலத்தே, காவிரிப்பூம்பட்டினத்து வசித்து வந்த வியாபாரக்கூட்டத்தைச்சேர்ந்தவரென்றும், பிற்காலத்தேதான் அங்குநின்றும் பாண்டிநாடு அடைந்தவரென்றும் தங்கள் ஆதிவரலாறு கூறுகின்றனர். தமிழ்மக்கள் இச்சோனகரை யவனரென்னும் பெயரால்அழைத்துவந்தனரென்பது,'சோனகர் யவனர்" என்னுந் திவாகரத்தாலும், பத்துப்பாட்டில், யவனரெனுஞ் சொல் வருமிடமெல்லாம் நச்சினார்க்கினியர் "சோனகர்" என்றே கூறி



போதலாலும் விளங்கத்தக்கது. அடியார்க்கு நல்லார் சோனகரெல்லாம் முகமதியராயிருத்தல் கருதி,யவனர்-துருக்கர் என்றார். (சிலப்-பக்-௩௩௩) இச்சோனகர்க்குள் "மரக்காயர்" என்னும் பட்டப்பெயர் வழங்குகிறது. இதனால் இவர் ஆதிமுதலே மரக்கலமியக்குந் தொழிலைக்கையாண்டவர் என்பது புலனாம். இச்சொல், அரபிபாஷையில் கப்பலின்பெயராக வழங்கும் "மார்கல்" என்பதினின்று வந்ததென்று கூறுதலும் உண்டு. இம் "மார்கல்" என்பதும் தமிழ் "மரக்கலம்" என்பதும் சொல்லினும்பொருளினும் ஒன்றியுள்ளமை கவனிக்கத்தக்கது. இது நிற்க. இனி, சிலப்பதிகாரத்து வரும்,

"ஓங்கிரும்பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
அகிலுந் துகிலும் ஆரமும் வாசமும்
தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்"

என்பதனுரையிலே, அகிலில்—அருமணவன்,தக்கோலி, கிடாரவன், காரகில் என்று சொல்லப்பட்ட பலவகைத் தொகுதியும்; ஆரத்தில்—மலையாரம், தீமுரண்பச்சை, கிழான்பச்சை, பச்சைவெட்டை, அரிசந்தனம், வேர், சுக்கொடி யென்னுந் தொகுதியும்; வாசத்தில்—அம்பரேச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, நிரியாசம், தைலம் என்னுந்தொகுதியும்; கர்ப்பூரத்தில்— மலைச்சரக்கு, கலை, அடைவு சரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மார்ப்பற்று, வாராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாறோசு, சூடன், சீனச்சூடன் என்னும் தொகுதியும் கூறப்பட்டுள்ளன. இவை உண்ணாடுகளினின்றும் வெளிநாடுகளினின்றும் தமிழகத்தில் அக்காலத்து, 'இறக்குமதியான' பொருள்வகைகளாதல் காண்க. "இங்குக்கூறப்படும் பெயர்கள் இக்காலத்து வழங்காமையால் கண்கு புலப்படவில்லை"என்று ஆராய்ச்சிமிக்க பதிப்பாசிரியரே கூறியிருக்கின்றனர்.

(தொடரும்)

பத்திராசிரியர்.

# கொல்லாமை.

———:o:———

[ஸ்ரீ: பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் உபந்நியாசம்.]

(௫ ௨௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆதியுகமாகிய கிருதயுகத்தில் உலகின்கண்பாபம்சிறிதுமின்றிப் புண்ணியமே நிறைந்தமையால் மானிடச்சிந்தையானது முழுமையும் நீதியினாலும், அதற்குப்பிந்திய த்ரேதாயுகத்தில் பாவம் விளைந்து அச்சிந்தையானது முக்கால் பாகம் நீதியினாலும், கால்பாகம் இச்சையல்லது ருசியினாலும், துவாபரயுகத்தில் பாவம் வளர்ந்து அரைப்பாகம் நீதியினாலும் அரைப்பாகம் இச்சையல்லது ருசியினாலும் கவரப்பட்டிருந்து-பாவமே மேலாகப் பரவிநிற்கும் இக்கலியுகத்தில் மானிடச்சிந்தையின்கண் கால்பாகம் நீதியும் முக்காற்பாகம் இச்சை அல்லது ருசியும் பொருந்தியிருக்கின்றன.

வேதவிதிகளனைத்தும் எக்காலத்திற்கும், எந்தநிலைமைக்கும் பொருந்தியவாறு பேதமொன்றையும் கருதாது பொதுவாகப் புகலப்பட்டுள்ளமையால் இன்னஇன்ன காலங்களில் இன்னஇன்ன விதிகள் இன்னஇன்ன முறையாக அனுஷ்டிக்கப்படவேண்டு மென்னும் விசேஷவிதிகளை ஸ்மிருதிகள் அறிவிக்கின்றன. இதிஹாசங்களும் புராணங்களும் அந்தந்தக்காலங்களில் அந்தந்தவிதிகளை யனுஷ்டித்துக்காட்டிய தர்மநூல்களாகையால் அந்த ஆசாரணைகளெல்லாம் அந்தந்தக்காலங்களுக்குப் பொருத்தமுள்ளனவாய் இருந்தனவேயல்லாது இக்காலத்தில் யாம் அனுஷ்டிக்கக்கூடியவைகளல்லவென்பது பெரியோர்களின்கருத்தாகும். ஆனதுபற்றி இச்சையென்பது சிறிதுமின்றி நீதியே முற்றிலுமமைந்திருந்த மானிடச்சிந்தைக்குப் பொருந்திய க்ருதயுகவிதிகளாவது அவைகளுக்குக் கீழான த்ரேதாயுகவிதிகளாவது அவைகளினும் கீழான துவாபரயுகவிதிகளாவது இச்சை மிகுதியால் அலங்கோலப்பட்டு, வெளிக்கோலம் எவ்வாறிருக்கினும் அந்தக்கரணமானது காமம், வெகுளி முதலிய ஆறுவிதப்பழுதுகளால் இழுக்குற்று இருக்கும் இக்காலத்திய மானிடப்பிறவிக்குப் பொருந்தாவெனக் கருதி அவைகளிற் பெரும்பான்மையை யகற்றி வெவ்



வேறு மாறுபாடுகளுடன் இக்கலியுகத்துக்குப் பராசரமுனிவர் முதலியவர் தாத்கால்ஸ்மிருதிகளாகிய தர்மநூல்களை வழுத்தியிருக்கின்றனர். அஃதெவ்வாறெனில், ஓர் பசுவானது இறந்து இறந்து பல ஜன்மங்களெடுத்து இறுதியில் பின்பிறவா மானிடப்பிறவியில் முத்திநிலை புகக்கூடியதாயிருக்கின்றது. தானொருபயனை யடையவேணுமென்கிற இச்சையன்றிக் காலமாரிசிறந்து பொழிய உலகத்தின்கண் எல்லாவுயிர்களும் நோய் முதலிய இடுக்கணின்றி வாழ்வுபெறவேண்டுமென்கிற பேரருளையுட்கொண்டுமட்டும் யாகங்களும் இஷ்டி முதலிய சிறியகிருதுக்களும் அநுஷ்டிக்கப்படவேண்டும். அப்படியனுஷ்டிக்கப்படும் யாகம் முதலியவற்றில் விநியோகிக்கப்படும் பசுவானது அந்தயாக முதலியவற்றிற்கு முக்கிய அங்கமாக இருப்பதால் அதன் ஆத்மாவானது உடனே புனிதமடைந்து இனிபிறக்கவேண்டிய நிர்ப்பந்தமின்றி, அக்கணமே சூரியமண்டலத்துட்புகுந்து பின்பு திரும்புதலற்ற பதவியை யடைகின்றதாகையால் அப்பசுவைக்கொன்று ஆகுதி கொடுப்பது கொல்லுதலாகாதென்று முன்காலத்திற்கைக்கொள்ளப்பட்டது. இக்காலத்தில் இச்சை மிகுந்து பழுதுற்ற சிந்தையினராகிய மானிடர்கள் இயற்றும் யாகம் முதலியவற்றிற்கு அவ்விதவலிமை பொருந்தாதாகையால் ஆகுதிக்காகப்பசுவினுயிரகற்றல் கொலைத்தொழிலேயாகுமெனக்கருதி கலியுகத்தில்யாகமியற்றுவது கூடாதென அம்முனிவர் முதலோர் விதித்திருக்கின்றனர்.

“நன்றாகு மாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.”—என,

தேவர்கள் பொருட்டு வேள்விக்கட்கொன்றால் இன்பமிகும் செல்வம் பெரிதாகுமென்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும் சான்றோர் விரும்பும் நித்தியமான நிலைமைபெற அது கடையாகுமென்று திருவள்ளுவ நாயனார் குறளிலும்,

“பிரிவறக்கொன்று தின்னும் கடைப்படும் பிறப்புநாரை
வரனுற் தேவராகி வான்புக விருப்பக்கண்டீர்
கருதுதியொன்றும் பொல்லாக்கடையராயினுங் கொல்லாமல்
அரனை வந்திப்பரேல்வாழுள்வதற்கையமின்றே”

எனப் பழையதிருவிளையாடற் புராணத்திலும் கூறப்பட்டுள்ளன.

துறவுநிலைபுகுந்தவனுடைய தண்டத்தின் வலிமையால் உடலொழிந்தவுடன் அவனுடைய ஆன்மாவானது இந்திரனுடைய சிம்மாசனத்திற்போய் உட்காருகிறதென்றும், அவன் இச்சையென்பது சிறிதேனுமின்றி நீதியின் பயனாகிய அருணிறைந்த மனத்தானாயிருக்கில் இந்திரன் மற்ற வானவர்களுடன் அவன் முன்னர்த்தோன்றி அவனை வணங்கியுபசரித்து அர்ச்சிராதி மார்க்கத்தைக்காட்டிப் பிரமலோகத்துக்கனுப்பிவிடுகிறானென்றும், அருள் குறைந்து சிறிதேனுமிச்சையுள்ளவனாயிருப்பனாகில் இந்திரன் வராமல் அவன் சிம்மாசனத்தின் கீழ்நின்று அத்துறவியினுடைய இச்சையின் பரிமாணத்துக்குத்தக்கபடி அநேகம் செந்நாய்கள் வந்து அவனைக்கடித்துத்துன்பப்படுத்தி நரகத்திற் கொண்டுபோய்த்தள்ளிவிடுகின்றனவென்றும், இந்திரனுடைய ஆசனத்தில் ஏறுவதற்காகத் தண்டத்தையும் அங்கு செந்நாய்களிருக்கின்றனவேயென்கிற சிந்தையொழியாதிருக்கும் வண்ணம் செந்நிறமுடைய காஷாயத்தையும் துறவிகள் புனையவேண்டுமென்றும் சாஸ்திரங்களின் கருத்து. ஆதலால், பராசர முனிவரால் துறவறமென்னும் சன்னியாசாசிரமமும் இக்கலியுகத்துக்குமறுக்கப்பட்டது. அந்தோ! ஜீவகாலமெல்லாம் அக்கினி ஹோத்திரத்தை அனுஷ்டிக்கவேண்டுமெனவும் காலந்தவறாது சந்தியாகருமத்தைச்செய்யவேண்டுமெனவும் சிலவர்ணத்தார்கட்கும்; பொய்யாமை அறம்வழுவாமை, அருளுடைமை,தென்புலத்தார், தேவர்,விருந்து, ஒக்கல்முதலியோரை வணங்கல் என்னும் முறைகளை எல்லாவர்ணத்தார்கட்கும் உபதேசிக்கும் வெளிப்படையான வேதவிதிகள் பொய்மொழிகளாயின. வேதம், ஸ்மிருதி புராணமுதலியவைகளில் அநுஷ்டான யோக்கியமற்றவும் பொருட்சந்தோஷமுடையனவுமான சிலமொழிகளைத் தேடி வாங்கிக்கொண்டு சுராபானம், புகைச்சுருட்டுண்ணல், கொலை, விதவாவிவாகம் முதலியமகா தருமங்களுக்கு இக்காலத்துப் புத்திமான்கள் ஆதாரம் உரைக்கின்றார்கள். அது நமது நாட்டின் துர்ப்பாக்கியம். இஃதன்றியும்உபாசகர்களுடையபாவனைக்குத்தக்கபடி ஆவிர்ப்பவிக்குந்தன்மை கடவுளுக்கிருப்பதனால் ஒருபாஸகன் இச்சையற்றமனத்தோனாகிஅக்கடவுள்எம்முறை ஆவிர்ப்பவிக்கவேண்டியதோ அம்முறை அவனைக்கூவி வழிபாடுசெய்து தானும் கிருத கிருத்யனாகி அவன் கொன்றளிக்குமுயிரும் மேம்பாடு பெறச்



செய்யும் தன்மையுள்ள காலத்தில் காணாபத்யம், சாக்தம், முதலிய தந்திரங்கள் உண்டாயினவாகையால் இக்காலத்தில் இச்சையென்னுமிழுக்கு நிறைந்தமனத்தோர்கள் அம்முறைவழிபாடுசெய்ய யோக்கியர்கள் ஆகார் எனவும், அவர்கொடுக்கும் உயிர்ப்பலி கொலையேயாகுமெனவும் கருதி நம் மதாசாரியர்களனைவரும் அத்தந்திரங்களை மறுத்திருக்கின்றனர். ஆனால் இக்காலத்தில் பசுவை ஆஹுதியிட்டு யாகம் செய்பவர்களையும், சன்னியாசி ஆசிரமத்தில் புகுகின்றவர்களையும் யான் இங்கு இகழ்ந்து பேசவந்தவனல்லன். அவர்கள் இச்சையெனும் பண்பை முற்றிலும் ஒழித்து நீதியினால் அருளே தம்மனத்திற் பெருகியோடும் தெய்வத்தன்மை பொருந்திய மகான்களாக இருக்கலாம். பிடாரிமுதலிய தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுவது மூடத்தனத்தினால் ஏற்பட்டு நான்முறையொன்றுங்கற்றறியாது மிருகங்கள் போல நடக்கும் கீழ்மக்களால் ஆசரிக்கப்படுவதாகையால் அது நமக்கோர்சான்றாகமாட்டாது. அட! கருணையையே தன்னுருவாகக் கொண்டு தீனதயாளுவாய்ப்பன்றிக்குட்டிக்குத் தாயெனவந்து பாலூட்டியும், ஓர் முதலையின் வாய்ப்பட்டுழன்ற யானையின் முன் தோன்றியுயிர் காத்தும் "கருப்பைக்குண் முட்டைக்கும் கல்லினுட்டேரைக்கும் விருப்புற்றமுதளிக்கும் மெய்யனே"னக் கங்கணம்புனைந்தும் எல்லாவுயிர்களையும் தன்னுடலின்கண் வைத்துப் பாதுகாப்பதையே தன்னுடைய நியமமெனக் கைக்கொண்டு எவ்வுயிரிடத்தும் நிறைந்து பொலியும் பரமேசுவரன் உயிர்ப்பலியை யங்கீகரிப்பானோ? நரகம் உண்டென்பதுண்மையாயின் ஊனாசையினாலாவது மடமையினாலாவதுஉயிர்க்கொலைபுரிவார்க்கும்,புரிவிப்பார்க்கும், அந்நரகங்களில்அமைக்கப்படும் இடங்கள்போக மீதம் இருந்தால்தான் மற்றத்தீவினை புரியும்மாந்தர்களுக்கு இடம் கிடைக்கும் என்று என்சிற்றறிவினால் ஆராய்ந்து புகலலாயினன்.

ஆனதுபற்றி முக்தியென்னும் கற்பகக்கனியைக் களிப்புறத்தானுமுண்டு உலகத்தின்கண் பிறவிப்பிணியால்வருந்தித் துன்புறும் மற்றைய மானிடர்களும் அதையுண்டு நிலையான சுகத்தையடையும் வண்ணம் தெய்வப்புலமை நிறைந்த இனிய மொழிகளால் தன்னுடைய அனுபவங்களை அன்னவர்க்குத் தேனும் பாலும் சீனியுமென விண்டருளியிருக்கும் அருட்கடலாகிய தாயுமானவரும்,

"கொல்லா விரதம் குவலயமெல்லா மோங்க
வெல்லார்க்கும் சொல்லுவ தென்னிச்சை பராபரமே." என்றும்,
"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே." என்றும்,

புகன்று, கொல்லாமை யென்னுமவ்வொழுக்கத்தை நன்குசிறப்பித்துப் பாடியிருக்கின்றனர்.

ஆகவே சாஸ்திரங்களின் நுண்ணியபொருள் கருதாது இக்காலத்திய அலங்கோலப்படிப்பினால் இச்சையே மேலாகி அருளென்பது சற்றேனுமின்றி தர்மங்களின் ஆராய்ச்சியற்றவர்கள் செய்யும் பூர்வபக்ஷங்கள் சிறிதேனும் செல்லக்கூடியனவல்லவென்பது திண்ணமாக ஏற்படுகின்றது. ஆனதால் எல்லோருநன்குவாழ்கவென்று மானிடர்களுடைய வாழ்வையும், காலந்தவறாமல் மும்மாரி பெய்யவேண்டுமென எல்லாவுயிர்களின் வாழ்க்கையும் அரசன்நீதிவழுவாது நடக்கவேண்டுமென உலகத்தின்கண் அறத்தின் அபிவிர்த்தியையும் எக்காலத்திலும் வேண்டுவதையே பண்பாகக்கொண்ட நம்நாட்டினருக்கு "கொல்லுதல்" என்னும் கொடியவினை எம்முறையாலும் பொருந்தாது என்பதே கடைப்பிடியான சித்தாந்தமாகும்.

---

# பூச்சிக்குழாம்.

——:o:——

(௩௩0-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## தேனீ

தேனீக்கூட்ட மொவ்வொன்றிலும் மூவகை வருணத்தாருளர். அரசியர் பருத்ததேகமும் அகன்ற இறகுகளுங்கொண்டவர்கள்; ஆண்தேனீக்களும் பலவுண்டு. பணியாளருட் சிலர், மெழுகு செய்வார். சிலர் செவிலித்தாய்கள். பின் சொல்லப்பட்டவர்களின் தொழில் குஞ்சுகளைப்பாதுகாத்து, அன்னமிட்டு வளர்ப்பதேயாம். இக்காரணம்பற்றியே அன்னார்க்குச் செவிலித்தாயென்னும் பெயரிட்டோம். கூடொவ்வொன்றிலும் ஓரரசியே யிருப்பள். யாதாமொரு



காரணத்தால் அரசி இறந்தாலாவது காணாமற்போனாலாவது, அக்காலத்துக் கூட்டத்திலுண்டாங் குழப்பத்திற் கீடொன்றுமில்லை. இராணியில்லையென்னும் விஷயம் கூடுமுழுவதிலும் ஒரு விநாடியிற் பரவிப்போம். அத்தருணத்து வேறோர் கூட்டினின்றும் ஓரரசியை இவ்வரசியில்லாக் கூட்டில்விட்டால், முதன்முதல் சற்றலட்சியமாய் நடத்தினாலும், பின்பு அவளுக்குச் சோடசோபசாரஞ் செய்து, அவளையழைத்து மகுடஞ்சூட்டித் தமக்கு இராணியாக்கிக்கொள்வர். இவ்வண்ணம் வேறோரரசி அகப்படாவிடின், பின்பு பணியாளருண்டாகு முட்டைகளிலொன்றைத் தேர்ந்தெடுத்து, தனியறையில்வைத்து, மிகுந்த தீனிகொடுத்து, அம்முட்டையினின்றும் ஊழியக்காரத் தேனீவருவதைத்தடுத்துப் பெண்டேனீயே வெளிவரும்பிரகாரம் தகுந்தசிகிற்சைகள் செய்து பாதுகாத்துவரும். இங்ஙனம் தங்களிஷ்டம்போல் எவ்வித முட்டையினின்றுந் தாங்கோரிய ஆணையோ, பெண்ணையோ, அலியையோ யுண்டாக்குஞ்சக்தி இச்சிறு பூச்சிகளிடமுண்டென்றால் பிரமனுஞ் சிறிதுவெட்கித் தலைகுனிதல் தகுதியன்றோ?

கூட்டில் அரசிக்காகத்தனியாய் ஓரந்தப்புர மமைக்கப்பட்டிருக்கும். அதைச்சுற்றி அவளாணையை எதிர்நோக்கிக் காத்திருப்பர் சில ஊழியக்காரர்கள். இத்தகைய வுபசாரம், அவள் கருப்பிணியானதும் பதின்மடங்கு பெருகும். நமதிந்துப்பெண்களும் கருப்பிணிக்கு ஏராளமான வுபசாரம் செய்வது இவற்றினிடமிருந்தே கற்றார்களோ?

ஆணும் பெண்ணு மற்புத சங்கீதம் பாடி ஆகாயத்தினிடையே பறந்து அங்கேபுணரப் பெண் கருப்பந்தரிப்பள். தனக்கிட்டகருமந் தான் செய்து முடித்ததால் ஆணுடனே மரிக்கும். பெண் கூட்டிற் புகுந்து ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் அலிக்கென்றுந்தனித்தனி கட்டிவைத்திருக்குஞ் சிறு அறைகளில், அவ்வவ்வறைக்கேற்ற முட்டையையிடும். முதன்முதல் வெளிவருங் குஞ்சு பெண்ணாகவேயிருக்கும். ஒரு பெண் மட்டுமே வெளிவரின், அது மற்றைப்பெண் முட்டைகளைத் தேடிப்பிடித்துப் பொறாமையாற் கொன்றுவிட்டுத் தானே யரசியாய் நிகரற்று நிற்பள். ஆனாலோ

காலத்து இரண்டு மூன்று பெண்குஞ்சுகள் வெளிவரின், இவற்றிற்குள் ஒரு சண்டை நடக்கும்; கடைசியாய் செயங்கொண்டதே கூட்டிற்கு இராணியாகும். இவ்வாறு ஜெயங்கொண்டு, ஜெயக்கொடிநாட்டி, ஜெயபேரிகையறைந்துநிற்கு பொப்பில்லாவரசியைப் பணியாளருடன் றொடர்ந்தழைத்துப்போய் மகுடஞ் சூட்டுவார்கள்.

கூடொவ்வொன்றிலும் சுமார் 18,000-தேனீக்களிருக்கும்; இவற்றுள் பெரும்பான்மை அலிகளே. தக்ஷணம் பொரிக்கப்பட்ட குஞ்சோ, தன் பொருட்டு மட்டுமே ஜன்மமெடுக்கவில்லை. தன்னினத்தார்க்காகவே ஜன்மபெடுத்ததாக அறிந்து தனக்கென்றேற்பட்ட கருமங்களை யுடனே செய்யப் புறப்படும். அலிகளின் தொழிலாவன:—மலரினின்றுந் தேனும், பூந்தூளென்று சொல்லப்படும் மகரந்தமுஞ் சேர்ப்பதும், மெழுகு செய்வதும், கூட்டைச்சுத்தியாக்குவதும், முட்டைகளுக்கு அன்னமிடுவதுமாம். தற்செயலாய்க் கூட்டிற்குள் வேறெந்தப்பிராணியாவது வந்தால், அதைக் கொடுக்காற் கொட்டியுடனே வெளிப்படுத்தும். தேனீக்களின்பலத்தால் வெளிப்படுத்த முடியாததாயிருப்பின், அச்சவத்தின் உடல் நாறுவண்ணம் மகரந்தப் பொடியைக் கொட்டி மூடிவைத்துப் பின்பு சிறிதுசிறிதாய் வெளியேற்றும். சிற்சில சமயத்துக் கூட்டிற் கரியமலவாயு அதிகரித்தால், சிலதேனீக்கள் கூட்டின் வாசலில் நின்றுகொண்டு தமது இறகை விரித்து முன்னும் பின்னுமாக வேகமாயடிக்க உள்ளிருக்கும் விஷவாயு வெளிப்போய், வெளியிலிருக்கும் நற்காற்று உள்நுழையும். இச்சிறுபூச்சிகள் சுகாதாரசாத்திரமுங் கற்றவையோ!

இனி, மேற்குறிக்கப்பட்ட பூச்சிக்கூட்டங்களின் சிற்பி வேலைத்திறத்தையும் அவைகட்டுங் கோட்டையையும்பற்றிச் சில சொல்லி, இவ்வியாசத்தை முடிப்போம். எறும்பின் கோட்டை சிக்குமுக்கின்றி மிகச் சாமானியமானது. வெளிப்புறத்திருந்து பார்க்க இது சிறுகுன்றுபோற் றோன்றும். காடுகளில் வசிக்கும் சிவப்பெறும்பின் புற்று வைக்கோற்றுண்டு, மரத்துண்டு, சிறுகல், இலை முதலியவற்றால் கட்டப்பெற்று, வெளிப்பார்வைக்கு அலங்காரமற்றிருப்பினும் உள்நுழைந்து பார்த்தால் மிகவழகாயிருக்கும். உட்புறம், சிலமாடங்கள் உண்டு. ஒவ்வொருமாடத்திலும் பலசிறுபெரு அறை



கள் நிறைந்து, அவ்வறைகளிற் சில தரைக்கு மேலுஞ், சிலதரைக்குக் கீழுமாக அமைக்கப்பெற்றிருக்கும். உள்ளிருந்து வெளிப்போகப் பலவாசலுண்டு. இராக்காலங்களி லிவற்றைமூடிவிடுவதுமுண்டு. சிலவற்றைமட்டுந் திறந்துவைத்து, அவற்றிற்குக் காவலாகச் சில எறும்புகள் காத்திருக்கும்.

வேறொரு ஜாதியெறும்பின் புற்று மண்ணினாலேயேயானது. தரைக்குக்கீழிருப்பதுமாடமுந் தரைக்கு மேலிருப்பதுமாடமுங் கொண்டது. தரைக்கு மேலிருப்பவை ஒன்றைச்சுற்றி யொன்றிருக்கும். மேன்மாடங்களு ளொன்றை யுற்றுநோக்கின், அதில், அலங்காரமண்டபங்களும், சிறிய வறைகளும், இவற்றை யொன்றோடொன்றுசேர்க்கும் நீண்டகூடங்களுங் காணலாம். பெருமண்டபங்களின் மேற்றட்டு பலதூண்களாலு முளைகால்களாலுந் தாங்கப்பெற்றவை. கோட்டை கட்டுவதற்கு மழைநீரால் நனைந்தீரமாயிருக்குங் கொழுந்துமண் ணுபயோகப்படும். வேலைக்காரரிற் சிலர் சிறுமண்துண்டுகளைத் தமதலகுகளாற்றூக்கிக்கொடுக்க, வேறுசிலர் அவற்றை வாங்கி எங்கெங்கு எவ்வண்ணம் வைக்கவேண்டுமோ ஆங்காங்கு அவ்வண்ணம் வைத்துக்கட்ட, இன்னுஞ்சிலர் தமது தும்பிகளாலும் முன்னங்கால்களாலுமழுத்திச் சமமாக்கிச்செப்பஞ்செய்ய, இவ்வாறுசுவர்கள் எழும்பிநிற்கும். முதன்முதல் மூலைக்குமூலை மண்துண்டுகளை அடையாளமாக நிறுத்தி, இவ்வாறு கட்டிடத்தினெல்லையை ஸ்தாபித்துக்கொண்டு பின்புசிறிதுசிறிதாய்க் கட்டிடங்கட்ட வாரம்பிக்கும். வேறொரு ஜாதியெறும்பு பட்டுப்போன அடிமரத்தைப் பலவிடத்தில் துளைத்தறைகளாக்கி அவற்றுள் குடிகொள்ளும். இன்னுமொருஜாதி மரத்தூளால் வீடுகட்டும். வேறுசில, இலைகளையே யொன்றாய்ச்சேர்த்துப்பின்னி அதனுள் காலங்கழிக்கும்.

இல்வாழ்வே பயனற்றதென்று வெறுத்த தத்துவசாஸ்திரியுந் தேன் கூடொன்றைப் பார்க்க அளவற்ற வியப்படைவான். ஒவ்வொருகூடும் ஒவ்வொரு நகரென்றே சொல்லவேண்டும்; வீதிகளும், வீதிகளினிருபுறத்தும் வீடுகளும், களஞ்சியங்களும், பண்டாரவறைகளுங் கொண்டிருக்கும். வீடுகளோ இரேகா கணிதசாத்திரத்துச்

செப்பிய இலக்கணங்கள் கொண்டு அமைக்கப் பெற்றிருக்கும். மிகத் தேர்ந்த சிற்பியும் அத்தகையவரண்மனைகளெழுப்புவது அரிதென்றே துணிந்து சொல்லலாம். தேன்கூடு ஆறுகோண வறைகள் கொண்டதாய் அகன்று தட்டையாயிருக்கும். அறைகள் மெழுகினாற் கட்டப்பட்டவை. மெழுகு மிகச்சிறிதுசிறிதா யுண்டாவதால், அதை வீணாக்காது, எல்லாவிதத்திலும் வசதியானதும், மெழுகு மிகச் செலவாகாததுமான அறைகள் அமைத்தல் எவ்வாறு என்பதையறிந்த தேனீக்கள், ஆறுகோணவறையே தகுந்ததென்று அறிந்துசெய்வது, கணிதசாஸ்திரங்கற்றோர்க்கு மிகவாச்சரிய முண்டாக்கும். சதுர வறைகளாகக்கட்டினால், திரண்டவடிவுள்ள தேனீக்கள் போவதற்கும் வருவதற்கும் பயன்படாது. ஆனால், அறைகளை வட்டவடிவாகக் கட்டினாலோ, தேனீ போய்வருவதற்குத்தக்கனவாயினும், மெழுகும், கட்டுமிடமும் வீணாகும். ஏனெனில், வட்டவடிவானவறைகளமைக்க, அறைகளின் சுவருக்கு வெளியே பயன்படாதவிடந் தங்கிப்போம்; அதுவுமன்றி மிகவருமையான மெழுகு வீணிற் செலவாகும். ஆகையால்,இயற்கை யறிவு நிறைந்த அப்பூச்சிகள், அவ்வியற்கை யறிவால் போதிக்கப்பட்டு, எவ்விதத்திலு மிகப் பயன்படும் ஆறுகோணவறைகளையே கட்டுகின்றன.

தேனீக்கூட்டறைக ளெல்லாம் ஒரேவிதமாயிரா. ஒவ்வொரு சமூகத்திலும் மூன்றுவகை வருணத்தாரிருப்பதால் அவ்வவற்றின் வாசத்திற் கேற்றவறைகள் கட்டப்பட்டிருக்கும். ஆண்முட்டையறை பணியாளர்முட்டையறையினும் பெரிது; இவ்விரண்டினும் பெரிது இராணியினறை. தேனும் பூந்தாதுஞ் சேர்த்து வைக்கப்படுமறைகளோ மிக ஆழ்ந்து விசாலமாயிருக்கும் பண்டசாலைகளாம். ஊழியக்காரத் தேனீ இருவகையென்று முன்பே சொன்னோம். சிலர் தேனினின்றாவது சர்க்கரையினின்றாவது மெழுகு செய்துகொடுத்துக் கூட்டிற்குத்தக்க அஸ்திவாரம் போட்டு நிற்க, செவிலித்தாய்கள் அவையினும் மெழுகைவாங்கி மேற்கட்டிடம் முழுவதுமெழுப்புவார்கள். ஆகவே மெழுகுசெய்வோரைக் கல்லும் மண்ணுங் கொணர்ந்து கொடுக்குங் கூலிக்காரர்களாகவும், செவிலித்தாய்களை வீட்டையொழுங்காயமைக்குங் கற்றச்சர்களாகவுங் கொள்ளலாம்.



இனி, குளவிகள் கூடுகட்டுவது தம் குஞ்சுகளைச் சிலகாலம் வரை வைத்துப் பாதுகாப்பதற்கே. ஒரு ஜாதிக்குளவி தரையின்கீழ்க் கூடு கட்டும். அது சுமார் ஒன்றரையடி நீளமு மோரடியகலமு முள்ளதாயிருக்கும். கூடுமுழுவதுங் காகிதம் போன்ற வொருபொருளாலானது. குளவி நிறைந்த தொருகோட்டையில் சுமார் 16,000 அறைகளிருக்கும். அறைகள் பெரிதுஞ் சிறிதுமாய்ப் பலதட்டுகளாக வமைக்கப்பட்டிருக்கும். கூடானது தரைக்குக்கீழ் ஒன்றரையடி யாழத்திலிருப்பதால், அதினின்று தரைக்குமேல் வருவதற்கு இரண்டுமொடிணபாதையுண்டு; ஒன்று உள்நுழைவோர்க்கே யென்றும், மற்றொன்று வெளிப்போவார்க்கே யென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். காகிதம்போன்ற ஒரு பொருளே இவை யுபயோகிக்குங் கல்லுஞ் சுண்ணாம்புமாம். இப்பொருள் இவற்றிற் கெங்கிருந்து கிடைக்கின்றது? ஜன்னல், கதவு, உத்திரமுதலியவற்றைத் தமது பற்களாற் கடித்தெடுத்த சிறு துண்டுடன், தம் வாயினின் றொழுகும் ஒருவிதஇரசத்தைச் சேர்த்தரைத்துப் பசைபோலாக்கி, அப்பசையை நாவினாலுங் கைகால்களினாலும், மெல்லிய செதிள்களாக நீட்டித் தகடுகளாக்கிக் காகிதத்தையொத்த அத்தகடுகளாற் கட்டிடமெழுப்பும்.

வேறுசில குளவி மண்ணினாலும் அரக்கினாலுங் கூடுகட்டும். அத்தகைய கூட்டை நாமடிக்கடி நமது வீடுகளிற்பார்த்திருப்போம்.

கறையான்புற்று முழுவதுமண்ணாலானது; சுமார் 12—அடி நீளமும்12-அடி அகலமுங்கொண்டது. பலபுற்றுகளொரிடத்தே சேர்ந்துநிற்கின் ஒருசிறு கிராமம் போற்றோன்றும். கூடு கட்டவாரம்பித்ததும், ஓரடி உயரமுள்ள தூணிரண்டுமூன்றை முதன் முதல் நிறுத்தி, அவற்றையாதாரமாக வைத்துக்கொண்டு, அவற்றின்மேற் பலவடிவுயர்ந்த கூடங்கள் கோபுரங்கள் எழுப்பும். இவ்வாறு முழுக்கட்டிடமுங்கட்டி முடிந்ததும் முதலி லுள்ளெழுப்பிய தூண்களை யிடித்துவிட்டு, அம்மண்ணை வேறுவிதத்திற் பயன்படுத்தும். கோட்டையின் மேற்பக்கத்தில் சாதாரணமாய்க்கறையான் வசிப்பதில்லை. கீழ்ப்புறத்து நடுவில் இராஜதம்பதிகளி னந்தப்புரமமைக்கப் பட்டிருக்கும். அந்தப்புரத்தைச்சுற்றிலும் வளைந்த மேற்றட்டுக்கொண்ட அறைகளனேகமுண்டு. இவற்றுள்ளனேகமாயிரம் போர்வீரரும் பணியா

ளரும் வசிப்பார்கள். இவ்வறைகளுக்கும் அப்பால், போஷணசாலை
யும், பண்டகசாலையுமிருக்கும். போஷணசாலை மண்ணாற் கட்டப்
படாது, மரச் செதிள்களாலேயே கெட்டியா யமைந்திருக்கும்.
கூட்டினின்று வெளிப்போவதற்கு இருட்டடைந்த சிறு பாதை
யனேகமுண்டு. அவற்றின் வழியே மரச்செதிள், தண்ணீர், மண்,
தீனி முதலியவற்றை வெளிப்புறத்திருந்து கொண்டுவருவது வழக்
கம். இப்பாதைகள் வளைந்து வளைந்து, சுற்றிச்சுற்றித் தரையின்
கீழோடி, கூட்டிற்குப்பலவடி தூரத்திற்கப்பால், யாவருமறியாவண்
ணந் தரையின் மேல் நிற்கும். காலங்குல நீளமுமில்லா இச்சிறுபூச்
சிகள் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், மண்டபங்கள், பண்டார
வறைகள், தரைக்கீழ்ப்பாதைகள், வாராவதிகள் முதலியன நிறையப்
பெற்ற இத்தகைய பென்னம்பெரிய கட்டிடங்கட்டுவதற்கு எத்
துணைப்பிரயாசை, ஊக்கம், சுறுசுறுப்பு, அறிவு வேண்டுமென்பதை
ச்சற்றுகவனிக்க, நமக்களவற்ற வியப்புண்டாக்குவதோடு, கடவு
ளின் பாரசக்தியையும் விளக்கிக்காட்டுகின்றதன்றோ?

வி. நரசிம்ம ஐயங்கார்.

---

# *ஐம்புலவொடுக்கம்.

—:o:—

[கீழக்கரை M. ஜோஸப்டையாஸ் அவர்கள் உபந்யாசம்.]

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக்—கைவாய்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்."—நாலடியார்.

வான்புவிபாதலமென்னு மூன்றுலகங்களையும் வகுத்தளித்தழித்
தலென்னு முத்தொழில்புரிந்துநடாத்தும் தன்வயத்தனை முதலும்
முடிவுமில்லாமுழுமுதற் கடவுள் பஞ்சபூதியங்களால்அண்டகோளமு
தலிய அசரப்பொருள்களை யுண்டாக்கியபின், ஒருகணக்கன் தான்

* இவ்வுபந்நியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ஆறுவது வருஷோற்
சவதினங்களில் ஒன்றாகிய 1907ஆ மேமீ 26உ காலை கூடிய வித்துவச்
சபையில் உபந்நியாசகராற் படிக்கப்பட்டது.



விரிவாய்ச் செய்த கணக்கைமுடித்து ஒரேவரியில் விடையெழுது
மாறு, பஞ்சபூதியங்களையு மமைத்துத் தமது சித்தாகிய அறிவான்
மாவையும் இஞ்சித்துச்சேர்த்து மனிதனைப்படைத்து, காணப்பட்ட
சகல உலகப்பொருட்களுக்கு முரியனாக்கி, நன்னெறியிலொழுகித்
தம்மை யடைய வப்பொருள்களை யுதவிக்கொண்டு, முடிவில் தம்
மையே நுகர்ந்தனுபவிக்க மோட்சசாம்பிராச்சியத்திற்கும் அவனை
அருகனாக்கினர். சருவாந்தர்யாமியாகிய அக்கடவுளே சுத்த சடப்
பொருள்களுக்குச் சடத்துவ ஒழுங்குகளையுண்டாக்க, அவ்வொழுங்
குப்படியே வானத்தில் நாம் கண்டதிசயிக்குஞ் சூரிய சந்திராதி கிர
கங்கள் தத்தம் நிலைதவறாதியங்கி, தாமெவைகளுக்காக வுண்டாக்
கப்பட்டனவோ அவைகளைச் சரிவர ஒழுங்காய் நிறைவேற்று
கின்றன. இராப்பகல் சீதோஷ்ணம் காலவேற்றுமை முதலியன
இடையறா ஒழுக்காயொரேநேர்மையாய் மாறிமாறி நிகழ்ந்தியலுகி
ன்றன. மேற்கூறியவாறு சடப்பொருள்களை ஓர் ஒழுங்குப்படி கிர
மமாய் நடத்துகிற சருவேசன் பகுத்தறிவுள்ள சித்துப் பொருள்
களாகிய மனிதருக்குத் தம்மையடைய ஒரே பொதுவழியை யேற்
படுத்தியுள்ளாரென்பதும் திண்ணம். அவ்வழியை யாமோவ்வொ
ருவருமறிந்து நெறியேயொழுகிக் கதிபெற நிற்றல் கடன்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்"— திருக்குறள்.

"நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்" — நாலடியார்

பஞ்சபூதங்களாலான சிற்றண்டமென்னத்தகும் பெற்றியுடைய
சிறுமனிதன் தேகத்தில் இயங்கிநுகர்தற்பாலன அவயவங்களும்
பஞ்சேந்திரியங்களுமே. இப்பஞ்சேந்திரியங்களையும் விசேஷமாய் நா
வையும் நாமெவ்வாறு அடக்கவொடுக்கத்தோடு பாதுகாத்தல் வேண்
டுமென்பதே இவ்வியாசத்தின் கருத்து. ஐம்பொறிகளின் அடக்க
வொடுக்கம் பிறருடைய நன்மாதிரிக்கும் உபயோகத்திற்கும் இன்றி
யமையாததென்பது ஈண்டு ஆராயத்தக்கது. நமது வெளிக்கிரியை
யைச் செவ்வனேஒழுங்குபடுத்தி நமது ஐம்புலன்களையும் சுசீலஒழுக்

க மரியாதையோடு அடக்கி, நமது வார்த்தை கிரியை எல்லாவற்றையும் ஒரு நேர்மையாகச்செய்து, நம்மை யுற்றுநோக்குகிறவர்களுக்கும் நம்மோடு கூட்டுறவுசெய்பவர்களுக்கும் நமதுவெளிக்கிரியை நன்மாதிரியாய் இருத்தல்வேண்டும். நமதுவெளிநடத்தைகளில் நம்மையுற்றுப் பார்க்கிறவர்களுக் கேற்காத காரியமொன்றும் இருத்தல் கூடாது. நமது நடக்கைகளையெல்லாம் சீராய்ஒழுங்குபடுத்தி, அவைகளால் எவர்க்கும் துர்மாதிரியாகாமல் யாவர்க்கும் நன்மாதிரியுண்டாகும்பொருட்டே நன்னெறியில் ஒழுகக்கடவோம். நமதுநிலைமைக்குரிய சுசீலவொழுக்கமரியாதையும் தாழ்மையும் கனமும் நமது வெளிக்கிரியைகளில் விளங்கும்படி முயல்வோமாக. அங்ஙனமாயின், அடக்கவொடுக்கத்தை அநுசரிக்கிறோமென்பது விளங்கத்தக்கது. சாதாரணமாயுலகமனிதர் வெளிக்கிரியை யொன்றையுமேகவனித்துநோக்குவதால், அடக்கவொடுக்கமுள்ள வெளிநடக்கையின் பொருட்டு அவர்கள் மனதைத் திருப்பி நல்வழிப்படுத்தி நன்மாதிரியுண்டாக்கலாம். இது அவர்கள் மனதைக்கவர்ந்து, இனிய பிரசங்கங்களைவிட அறிவைப்புகட்டும். பூர்வீக வனவாசிகளின் சரித்திரத்தில் எழுதியிருக்கிற ஒரு விசேஷமாவது:—ஒருநாள் ஒருசந்நியாசியார் வேறொரு சந்நியாசியாரை யழைத்து நாம்பிரசங்கம்பண்ணி வருவோம்; நீர் வருதிர்—என்று உடன்கூட்டி வெளியே சென்றார். ஊரைச்சுற்றி யுலாவியபின் மீளவும் அம்முனிவர் ஆச்சிரமத்தையடைந்து உட்பிரவேசிக்குங்காலையில், பிரசங்கம்பண்ணவில்லையே யென்று கூடவந்தசன்னியாசியார் கேட்க, அதற்கு மற்றவர், பிரசங்கம்பண்ணியாகிவிட்டதென்றும், துறவிகளுக்குரிய அடக்கவொடுக்கத்தோடு அவர்கள் அந்நகரின் தெருவிலே நடந்துசென்றதினாலவர்களைக் கண்ணுற்றோரெல்லார்க்கும் அதுவே மகாநல்ல பிரசங்கமாயிற்றென்றும், அவர்களின் தவமும் தாழ்மையுமுள்ள வெளிநடத்தையை நோக்கிய சனங்களுக்கு மனதில் பத்தியையும் உலகநன்மைகளின்பேரில் வெறுப்பையும்வருவித்து அவர்களுடைய பாபத்திற்கு மனஸ்தாபத்தையூட்டி அவர்களிருதயம் மோக்ஷநன்மையை நாடும்படி செய்ததென்றும் மறுமொழி சொன்னார். இதுவே உபந்நியசிக்காத பிரசங்கம். உன்னதமும் வாய்ஜாலமுமான பிரசங்கங்களைப் பார்க்கினும், அடக்கவொடுக்கத்தினால் அதிகப்பிரயோசனமுண்டாகும். மனுஷரிடத்தில் ஆத்துமாவும் சரீரமும் அந்நியோந்நியமா யொன்றியிருக்கிறதினால் ஒன்றில் தோன்றுகிறது வேறொன்றிலும் தோன்றும். ஆன்மநடத்தை ஒழுங்குபட்டிருந்தால் சரீரத்திலுள்ள வெளிநடத்தையும் ஒழுங்குபட்டிருக்கும். சரீரத்திலே குழப்பமும் கலக்கமுந் தோன்றினால் ஆன்மாவிலும் கலக்கமிருக்கும். கடிகாரத்திலுள்ள முள் சரியாய்ப்போனால் அதனுள்ளிருக்கிற சக்கரங்களுஞ் சரியாய் நடக்கின்றன வென்பதும் நிச்சயம். அவ்வாறே வெளியடக்கவொடுக்கம் உள்ளடக்கத்திற்கும் புண்ணியவிருத்திக்கும் ஸ்திரமான அடையாளமாகும். வெளியடக்கவொடுக்கத்தை மனிதர் கனமாகமதித்து அதினாலே அவர்கட்கு நன்மாதிரியுண்டாகிறதற்குக் காரணமேதெனில், வெளியடக்கவொடுக்கமுள்ளவர்களுடைய இருதயத்தில் சற்குணங் குடிகொண்டிருக்குமென்று சாதாரணமாய் மனிதரெண்ணிக்கொள்ளுதல் சகஜம். முகம் ஆன்மாவின் பார்வைக்கண்ணாடி போலாம். கண், பேசாதிருந்தாலும் மனதில் மறைந்திருக்கிற இரகசியங்களை வெளிப்படுத்தும். தண்ணீரிலே பார்க்கிறவர்கள் தங்கள் முகத்தைத் தெளிவாகக்கண்டுகொள்ளுவார்கள். அவ்வாறு புத்தியுள்ளவன் மனிதரைப்பார்த்து அவர்களிருதயத்தைத் தெளிவா யறிந்துகொள்ளுவானென்று சலமோ னென்னும் ஞானி சொல்லியிருக்கிறார். கண்ணாடியைக்கொண்டு பொருள்களை அதிகத்தெளிவாயறிந்துகொள்ளுவதைவிட அடக்கவொடுக்கத்தைக் கொண்டு மனிதனுடைய இருதயத்தையறிந்துகொள்ளலாம். இதனால் மனிதனை முகத்தினாலறிந்துகொள்ளலாம். முகச்சாடையைக்கொண்டு அவன் மனது தெரியவரும்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்" என்றார் திருவள்ளுவரும்.

ஒருவனுடையவுடையும் அவன் சிரிக்கிறவிதமும் நடக்கிறமாதிரியும் அவன் இன்னானென்று காட்டிவிடுமென்று சலமோன் வசனித்தார். வெளித்தவறு உட்டவறுக்குக் குறிப்பாயிருக்கிறதுபோல வெளியடக்கவொடுக்கம் மனதிலுள்ள சற்குணத்திற்கு குறிப்பாகும். இது நிமித்தமாகவே மனிதருடைய அடக்கவொடுக்கத்தின் வழியாக மனிதருக்கு நன்மாதிரியும் நற்புத்தியுமுண்டாவது வழக்கம். பஞ்சேந்திரிய அடக்கவொடுக்கம் நாம்புண்ணியத்தில் வர்த்திப்பதற்

கான முக்கிய வழிபாடாகின்றது. ஏனென்றால், இது, உள்ளடக்கத்திற்கு மிகவும் உதவியாயிருக்கும். சகல பொல்லாப்பும்நமதிருதயத்திற் பிரவேசிப்பதற்கு நமது பஞ்சேந்திரியங்கள் கதவாயிருப்பதினால், நமது இருதயத்தில் பொல்லாப்பு பிரவேசியாதபடி பஞ்சேந்திரியங்களாகிய கதவைச்சாத்தவேண்டும். வீட்டின் கதவைச் சாத்திக்கொண்டிருந்தால் அதிலே மோசம்வராது. கதவைத் திறந்து வைத்துக் காவலுக்கு ஒருவருமில்லாமல் சகலரும் அதிலேபோகவும் வரவுமிருந்தால், அதிலுள்ள பொருளுக்கு மோசம் வரும். அநேகர் அதிற் போகவும் வரவு மிருக்கிறதினால் ஆங்குக்கலக்கமும் குழப்பமுமுண்டாகும். இவ்வாறே தங்கள் பஞ்சேந்திரியக் கதவுகளைக் காக்கிறவர்களிடத்தில் புத்தியும் மனச்சமாதானத்தின் மதுரமுமுண்டாயிருக்கும். அதைக் காக்காதவனிடத்திலோ மனச்சமாதானமும் அமரிக்கையு மிருக்கமாட்டா. உன்னிருதயத்தை மகா எச்சரிக்கையோடு காத்துக்கொள். ஏனென்றால் இது உயிருக்கு ஊற்றாயிருக்கிறதென்று ஞானியானவர் வசனித்தார். பஞ்சேந்திரியமாகிய கதவை நன்றாகக் காத்தால் இருதயத்தைக் காத்தல்போலாம். வீண் காரியங்களின்பேரிலும் நமக்கு அடுத்ததாயிராத வேலையின் பேரிலும் அங்குமிங்கும் கண்ணைத்திருப்பிப்பாராதிருக்கப்பழகுவோமாக. அங்குமிங்கும் கண்ணைத் திருப்பினால் அது நம்முடைய பரிசுத்த கிரியைகளைக் கெடுத்துவிடும். பஞ்சேந்திரியமாகிய கதவை நாம் நன்றாய்க் காக்காவிட்டால் வெகுநாளாக வெகு வருத்தப்பட்டுச் சம்பாதித்த புண்ணிய சம்பத்தெல்லாவற்றையும் எளிதாகப் போக்கடித்துத் தரித்திரராவோம். அதிகமாய்ப் பேசுதலும் நம்மிடத்திலுள்ள புண்ணியத்தின் நல்லநினைவுகளைப்போக்கித் தேவஏவுதலையும் நம்மிடமிருந்தகற்றிவிடும். இவ்வுலக காரியங்களின் பேரிலுள்ள கவலை விசாரங்களையெல்லாம் நீக்கி இடைவிடாமல் மௌனமும் மன அமரிக்கையுமாயிருந்தால், நம்முடைய இருதயம்போக்ஷநன்மைகளைத் தியானித்துக் கடவுளிடத்தில் தாவியெழும். பூமியைப் பார்த்துக் கவிழ்ந்திருக்கிற முகம் இருதயத்தை மோக்ஷத்திலெழுப்புமென்று சொல்லப்பட்டிருக்கிறது. புண்ணிய சாங்கோபாங்கத்தைச்சம்பாதித்து இருதயபரிசுத்தத்தை யடைந்து உள்ளடக்கமாயிருக்க மனதுள்ளவன், குருடனும் செவிடனும் ஊமையுமாயிருக்கவேண்டுமெ



ன்று பூர்வீகவனவாசிகள் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், பஞ்சேந்திரியமாகிய கதவெல்லாமடைபட்டிருந்தால் அசுத்தமாகிற பாவம் ஆன்மாவிலே பிரவேசிக்கமாட்டாது.

அதனால், ஆத்துமா கடவுளோடு பேசுகிறதற்கு ஆயத்தமாயிருக்கும். ஆனால்,நாம்பிறரோடு இடைவிடாமல் சஞ்சரித்து நமக்குப் பிரியமாயிராத அநேக காரியங்களைப் பார்க்கவும் கேட்கவும் வேண்டியிருக்கையில் நாம் குருடரும் செவிடரும் ஊமைகளுமாகக்கூடுமோ என்று கேட்கலாம். இதற்கான நல்லதோர் பரிகாரம்:—பார்த்தாலும் பாராததுபோலேயும் கேட்டாலும் கேளாததுபோலேயும் பார்க்கிறகேட்கிறகாரியங்களின்பேரில் பற்றுதல்வைக்காதொழியக்கடவோம். நமதுள்ளத்தில் பற்றுதலெழுந்தால் அதற்கிடங்கொடாமல், க்ஷணமே தள்ளக்கடவோம். இதற்கு அநுகுணமாய் நடந்த ஒருவிருத்தாந்தமாவது:—ஒருநாள் ஒருவனவாசி விருத்தாப்பியரான வேறொரு வனவாசியிடத்தில் போய்ச்சொன்னதாவது: "உரொட்டிக் காரனுக் குதவியாகத் தினந்தோறும் உரொட்டிக் கிடங்கிற்குப் போகவேண்டுமென்று சிரேஷ்டர் எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார். ஆனால், வெளியேயிருந்து வாலிபர் அநேகர் அங்கேவந்து வெகு கெட்டபேச்சுப்பேசுகிறார்கள். அதைக்கேட்கிறது எனக்கு நன்றாயில்லை"யென்று சொன்னார். அதற்கு அந்தக் கிழச்சந்நியாசியார் சொன்னதாவது: "பள்ளிக்கூடத்திலே சிறுபிள்ளைகளை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் பாடம் படிக்கும்போது எவ்வளவு கத்துகிறார்கள். ஆயினும் ஒவ்வொருவனும் தன் தன் பாடத்தைப் படித்து ஒப்பிக்கவேண்டியிருப்பதனால் அந்நியருடைய பாடத்தைக் கவனிக்காமல் தன் பாடத்தைமாத்திரம் கருத்தாகப் படிக்கின்றானே. நீரும் இப்படி நடக்கவேண்டும். மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள்; என்ன செய்கிறார்களென்று கவனிக்கவேண்டாம். உமதுவேலையை மாத்திரம் பாரும்.ஏனெனில் இதற்காகமாத்திரம் கடவுளுக்குக்கணக்குக்கொடுக்கவேண்டும்." என்றார். வெளியடக்கத்தைக் கொண்டு உள்ளடக்கத்தையடையவும் காப்பாற்றவும் கூடுமேயல்லாமல் வேறுவிதத்திற் கூடாது. இருதயத்தைக் காப்பதற்கு வெளியடக்கம் முக்கியமாகும்; இலையும் பட்டையும் மரத்திற்குமுக்கியம்; தோலில்லாமல் பழமிருக்கக்கூடாது.

எந்தெந்தப்பொருளையும் காப்பாற்றிச்சிறப்பிப்பதற்கு வேறொருவெளிப்பொருள் எப்பொழுதும் அவசியமென்று கண்டு வருகிறோம். இவ்வாறு வெளியடக்கமில்லாமல் இருதயத்துக்குள்ளே புண்ணியமுண்டாகவேமாட்டாது. வெளியடக்கம், புண்ணியத்திற்குப் பட்டைபோலவும் தோல்போலவுமிருக்கின்றது. இந்த வெளியடக்கத்துக்குள்ளேதான் பத்தியும் உள்ளடக்கமும் இருதய பரிசுத்தமும் உடன்நிலைகொள்ளும். புண்ணியத்துக்குத்தோலும் பட்டையுமாகிற வெளியடக்கமில்லாவிட்டால் சகலபுண்ணியமும் கொஞ்சத்துக்குள்ளேகெட்டு அழியும். முகச்சாயலும் வெளிச்சாடையும் நன்றாயிருந்தால் சரீரத்துக்குச் சௌக்கியமும் அவை கெடுதலாயிருந்தால் சௌக்கியக் குறைவு முண்டென்று உடனே சொல்லக் கூடாதென்பது மெய்தான். சரீரத்திலுள்ள நீர் சரிசமமாயிருந்தால் சௌக்கியமும் சமமில்லாவிடின் சௌக்கியக்குறைவு முண்டாமென்பது திண்ணம். ஆகிலும், யாவனொருவனுடைய முகச்சாயல்கெடுதலாயிருந்தால், அவனுக்குச் சுகமில்லைபோலும்; அவன் நிறத்தைப்பார்: எவ்வளவு பஞ்சளாயிருக்கின்றது; அவன் கண் பஞ்சடைந்திருக்கிறதென்று சொல்லுவார்களல்லவோ? ஆத்மசௌக்கியவிஷயத்திலும் இவ்வாறேசொல்லலாகும். இவ்வுண்மையை ஓர் உவமையால் விளக்கிக்காட்டலாம். நமது பஞ்சேந்திரியங்கள் சாளரங்கள் போலிருக்கின்றன. ஆத்துமா அவைகளின் வழியாய் வெளியில் நடக்கிறதைப் பார்க்கும். அடக்க வொடுக்கமுள்ள ஆத்துமா குலஸ்திரீ போலவும், அடக்கமில்லாமல் பராக்குள்ள ஆத்துமா பரஸ்திரீ போலவுமிருக்கும். மானஸ்திரீ ஜன்னலாலே பார்க்கிறது மிகவும் அபூர்வமாயிருக்கும். ஆனால் பரஸ்திரீ அடிக்கடி ஜன்னலுக்கும் கதவுக்கும் கிட்ட நின்றுகொண்டு, வருகிறவர்கள் போகிறவர்களைப் பார்த்து, ஒருவனைக் கூப்பிட்டு இன்னொருவனோடும் பேசிச் சிரித்துக்கொண்டிருக்கிறது வழக்கம். அடக்க வொடுக்கமுள்ளவனுக்கும் இல்லாதவனுக்கும் இடையேயுள்ள வித்தியாசமிதுவே. அடக்கமுள்ளவன் பஞ்சேந்திரியங்களாகிற ஜன்னல்வழியாய்ப் பார்க்கமாட்டான். அவன் உள்ளத்திற்குள்ளே யொதுங்கியிருந்து இந்த உள்ளடக்கத்தை விட்டு வெளியே புறப்படமாட்டான். அடக்கமில்லாதவனோவென்றால் எந்நேரமும் ஜன்னலுக்குக்கிட்ட நிற்கிறதுபோலச் சொல்லுவதெல்லாவற்



றையும் கேட்டு, இவர்களோடும் அவர்களோடும் பேசி, வீண் நேரம் போக்குவான். மேற்சொன்ன உவமையில், குலஸ்திரீ ஜன்னல்வழியாய்ப் பார்க்காததினாலேயும் பரஸ்திரீ ஜன்னல்வழியாயும் கதவின் வழியாயும் பார்க்கிறதினாலேயுமாத்திரம் அவளிடத்தில் மானமுண்டென்றும் இவளிடத்தில் மானமில்லையென்றும் நிச்சயமாய்ச் சொல்லப்படாதென்பது உண்மையே. ஆயினும், அடிக்கடி ஜன்னலண்டை நின்றுகொண்டு தெருவில் நடக்கிறதை எந்நேரமும் பிரியமாய்ப் பார்த்து, இவர்களோடும் அவர்களோடும் பேசித்திரிகிறவளிடத்தில் நாணயமும் மரியாதையும் நல்லொழுக்கமுமில்லையென்று சொல்லும்படி அவள்மானம்அழியாதிருந்தாலும், சீக்கிரமழிந்து போகிறதற்கிடமாயிருக்கிறது. இவ்வண்ணமே பஞ்சேந்திரியங்களை அடக்குகிறதே புண்ணியவிர்த்தியல்லவென்பது மெய்தான். ஆகிலும் விநோதப் பிரியமாயிருந்து வெளிப்பராக்காய்த் திரிகிறவன் ஆன்மபரிசுத்தத்தையும் புண்ணியசாங்கோபாங்கத்தையும் அடையானென்பது திண்ணம். இன்னும் இதில் வேறொரு முக்கியமான சத்தியத்தையுமறிந்து கொள்ளவேண்டும். அஃதென்ன வென்றால், வெளியடக்கம், உள்ளடக்கத்தையடைவதற்கும் காப்பாற்றுவதற்கும் உதவியாயிருப்பதுபோல, வெளியடக்கத்தை யடைவதற்கு உள்ளடக்கம் உதவியாயிருக்கும். உள்ளத்திலே நிலையான புண்ணியமிருந்தால் வெளிநடக்கையில் அடக்கவொடுக்கமும் ஒழுக்குமரியாதையும் விளங்கும். மனச்சமாதானத்தினாலும் தாழ்ச்சியினாலும் உண்டாகிற அடக்கமே நம்மிடத்தில் இருத்தல் வேண்டும். கள்ள அடக்கவொடுக்கம் கூடாது. அது க்ஷணப்பொழுதே நிலைத்து வரவரக்கள்ளடக்கமென்று அறியப்படும். இருதயத்திலுள்ள தாழ்ச்சி அடக்கம் ஒறுத்தல் முதலிய புண்ணியங்களினால் உண்டாகிற நிலையான அடக்கவொடுக்கத்தை நாமநுசரித்து வரல் வேண்டும். நாம் ஞானவொழுக்கத்தில் விருத்தியடைகிறோமோ இல்லையோவென்று அறிந்துகொள்ளுவதற்கு இதுவே நிச்சயமான குறியாம். இப்பொழுது நாம் பெரிய
னிதரானதால் சிறுபிராயத்திற் செய்துவந்த விளையாட்டைத் தற்
பாது விரும்புவதில்லை. அப்போது நமது விளையாட்டை யாராயி
ம், ஒருவர் இடையிற்கலைத்தால் மிகுந்த கோபத்தை நாம்
டைவோம். ஆனால் இது சிறுபிள்ளை யாட்டமாயிருக்கிறதாலும்

எந்தெந்தப்பொருளையும் காப்பாற்றிச்சிறப்பிப்பதற்கு வேறொருவெளிப்பொருள் எப்பொழுதும் அவசியமென்று கண்டு வருகிறோம். இவ்வாறு வெளியடக்கமில்லாமல் இருதயத்துக்குள்ளே புண்ணியமுண்டாகவேமாட்டாது. வெளியடக்கம், புண்ணியத்திற்குப் பட்டைபோலவும் தோல்போலவு மிருக்கின்றது. இந்த வெளியடக்கத்துக்குள்ளேதான் பத்தியும் உள்ளடக்கமும் இருதய பரிசுத்தமும் உடன்நிலைகொள்ளும். புண்ணியத்துக்குத்தோலும் பட்டையுமாகிற வெளியடக்கமில்லாவிட்டால் சகலபுண்ணியமும் கொஞ்சத்துக்குள்ளேகெட்டு அழியும். முகச்சாயலும் வெளிச்சாடையும் நன்றாயிருந்தால் சரீரத்துக்குச் சௌக்கியமும் அவை கெடுதலாயிருந்தால் சௌக்கியக் குறைவு முண்டென்று உடனே சொல்லக் கூடாதென்பது மெய்தான். சரீரத்திலுள்ள நீர் சரிசமமாயிருந்தால் சௌக்கியமும் சமமில்லாவிடின் சௌக்கியக்குறைவு முண்டாமென்பது திண்ணம். ஆகிலும்,யாவனொருவனுடைய முகச்சாயல்கெடுதலாயிருந்தால்,அவனுக்குச் சுகமில்லைபோலும்; அவன் நிறத்தைப்பார்: எவ்வளவு பஞ்சளாயிருக்கின்றது; அவள் கண் பஞ்சடைந்திருக்கிறதென்று சொல்லுவார்களல்லவோ? ஆத்மசௌக்கியவிஷயத்திலும் இவ்வாறேசொல்லலாகும். இவ்வுண்மையை ஓர் உவமையால் விளக்கிக்காட்டலாம். நமது பஞ்சேந்திரியங்கள் சாளரங்கள் போலிருக்கின்றன. ஆத்துமா அவைகளின் வழியாய் வெளியில் நடக்கிறதைப் பார்க்கும். அடக்க வொடுக்கமுள்ள ஆத்துமா குலஸ்திரீ போலவும், அடக்கமில்லாமல் பராக்குள்ள ஆத்துமா பரஸ்திரீ போலவுமிருக்கும். மானஸ்திரீ ஜன்னலாலே பார்க்கிறது மிகவும் அபூர்வமாயிருக்கும். ஆனால் பரஸ்திரீ அடிக்கடி ஜன்னலுக்கும் கதவுக்கும் கிட்ட நின்றுகொண்டு, வருகிறவர்கள் போகிறவர்களைப் பார்த்து, ஒருவனைக் கூப்பிட்டு இன்னொருவனோடும் பேசிச் சிரித்துக்கொண்டிருக்கிறது வழக்கம். அடக்க வொடுக்கமுள்ளவனுக்கும் இல்லாதவனுக்கும் இடையேயுள்ள வித்தியாசமிதுவே. அடக்கமுள்ளவன் பஞ்சேந்திரியங்களாகிற ஜன்னல்வழியாய்ப் பார்க்கமாட்டான். அவன் உள்ளத்திற்குள்ளே யொதுங்கியிருந்து இந்த உள்ளடக்கத்தை விட்டு வெளியே புறப்படமாட்டான். அடக்கமில்லாதவனோவென்றால் எந்நேரமும் ஜன்னலுக்குக்கிட்ட நிற்கிறதுபோலச் சொல்லுவதெல்லாவற்



றையும் கேட்டு, இவர்களோடும் அவர்களோடும் பேசி, வீண் நேரம் போக்குவான். மேற்சொன்ன உவமையில், குலஸ்திரீ ஜன்னல்வழியாய்ப் பார்க்காததினாலேயும் பரஸ்திரீ ஜன்னல்வழியாயும் கதவின்வழியாயும் பார்க்கிறதினாலேயுமாத்திரம் அவளிடத்தில் மானமுண்டென்றும் இவளிடத்தில் மானமில்லையென்றும் நிச்சயமாய்ச் சொல்லப்படாதென்பது உண்மையே. ஆயினும், அடிக்கடி ஜன்னலண்டை நின்றுகொண்டு தெருவில் நடக்கிறதை எந்நேரமும் பிரியமாய்ப் பார்த்து, இவர்களோடும் அவர்களோடும் பேசித்திரிகிறவனிடத்தில் நாணயமும் மரியாதையும் நல்லொழுக்கமுமில்லையென்று சொல்லும் படி, அவள்மானம்அழியாதிருந்தாலும், சீக்கிரமழிந்து போகிறதற்கிடமாயிருக்கிறது. இவ்வண்ணமே பஞ்சேந்திரியங்களை அடக்குகிறதே புண்ணியவிர்த்தியல்லவென்பது மெய்தான். ஆகிலும் விநோதப் பிரியமாயிருந்து வெளிப்பராக்காய்த் திரிகிறவன் ஆன்மபரிசுத்தத்தையும் புண்ணியசாங்கோ பாங்கத்தையும் அடையானென்பது திண்ணம். இன்னும் இதில் வேறொரு முக்கியமான சத்தியத்தையு மறிந்து கொள்ளவேண்டும். அஃதென்ன வென்றால், வெளியடக்கம்,உள்ளடக்கத்தையடைவதற்கும் காப்பாற்றுவதற்கும் உதவியாயிருப்பதுபோல, வெளியடக்கத்தை யடைவதற்கு உள்ளடக்கம் உதவியாயிருக்கும். உள்ளத்திலே நிலையான புண்ணியமிருந்தால் வெளிநடக்கையில் அடக்கவொடுக்கமும் ஒழுக்குமரியாதையும் விளங்கும். மனச்சமாதானத்தினாலும் தாழ்ச்சியினாலும் உண்டாகிற அடக்கமே நம்மிடத்தில் இருத்தல் வேண்டும். கள்ள அடக்கவொடுக்கம் கூடாது.அது க்ஷணப்பொழுதே நிலைத்து வரவரக்கள்ளடக்கமென்று அறியப்படும். இருதயத்திலுள்ள தாழ்ச்சி அடக்கம் ஒறுத்தல் முதலிய புண்ணியங்களினால் உண்டாகிற நிலையான அடக்கவொடுக்கத்தை நாமநுசரித்து வரல் வேண்டும். நாம் ஞானவொழுக்கத்தில் விருத்தியடைகிறோமோ இல்லையோவென்று அறிந்துகொள்ளுவதற்கு இதுவே நிச்சயமான குறியாம். இப்பொழுது நாம் பெரியமனிதரானதால் சிறுபிராயத்திற் செய்துவந்த விளையாட்டைத் தற்போது விரும்புவதில்லை. அப்போது நமது விளையாட்டை யாராயினும், ஒருவர் இடையிற்கலைத்தால் மிகுந்த கோபத்தை நாம் அடைவோம். ஆனால் இது சிறுபிள்ளை யாட்டமாயிருக்கிறதாலும்

னாயிப்போது பெரியமனுஷராய்ப் போனதாலும் இப்பொழு அதை விட்டுவிடுகிறது கஷ்டமில்லை. ஞானவொழுக்கத்திலுமிப்படியே சொல்லவேண்டும். ஞானியொருவன் கடவுளையும் முத்தியின்பங்களையும் சுகிர்ந்தனுபவித்து ஞானத்திலும் புண்ணியவிர்த்தியிலும் தேர்ந்து வளரத்துவக்கினவுடனே, பஞ்சேந்திரியங்களினால் வரும் பிரியமெல்லாம் சிறுபிள்ளை விளையாட்டென்றும், நான் இப்போது உத்தமனாயிருக்கிறதினால் எனக்கு இது தகாதென்றும் வருத்தமில்லாமற் றள்ளிவிடுவான். நாம் புண்ணியத்தில் விர்த்தியாய்ப் பெரியமனுஷரானோமோ அல்லது இன்னும் புண்ணியத்திற் குழந்தைகளாயிருக்கிறோமோவெனப்பார்ப்போம். ஏனென்றால் குழந்தைப்பிள்ளை விளையாட்டும் பகடிபரிகாசமும் இன்னும் நமக்குப் பிரியமாயிருந்தால் பஞ்சேந்திரியங்களை யெப்பக்கத்திலுந் திருப்பி வீண்காரியங்களைப்பார்த்துச் சொல்லுகிறதெல்லாங்கேட்டு வாயில்வந்ததெல்லாம்பேசிக்கொண்டு திரிவோமாகில், சிறுபிள்ளைகளுக்குரிய விளையாட்டை நாம் செய்துகொண்டு வருகிறதினாலே, நாம் புண்ணியத்தில் இன்னும் சிறுவர்கள்தாம்: புண்ணியத்தில் குறையுள்ளவர்கள்தாமென்றறிந்து கொள்வோம். பெரியமனுஷன் குழந்தைகள் விளையாட்டைப்புறக்கணித்து அதைச் செய்கிறதற்கு வெட்கப்படுகிறதுபோல ஞானத்தில் வளர்ந்து புண்ணிய சாங்கோபாங்கமாக முயல்வோம். ஐம்பொறிகளையும் ஆமைபோலடக்கிக் கடவுட்சிந்தையராய்க் கதிவழிநின்று கரையேறுவாராக.

> "ஒருமையுள் ளாமைபோ லைந்தடக்க லாற்றி
> னெழுமையு மேமாப் புடைத்து." என்றார் வள்ளுவரும்.

---

# மெய்யொழுக்கம்.

———:o:———

மேற்றிசையாராகிய ஐரோப்பியர் கீழ்த்திசையாராகிய ஆசியர் மேற்கூறும் குறைகளில், கொள்கைக்கும் செய்கைக்கும் பொருத்தமின்றி ஒழுகுந்தன்மை முக்கியமானதொன்றும். ஆசியன் அஞ்ஞானத்தின் அடிமையென்றும், அறிவுதெளிந்து மனமொப்பியஉண்மைக்கும் மாறாக நம்பத்தக்கவன் என்றும், உதாரணமாக புவிசந்திர சாயைகளால் கிரகணங்கள் நிகழ்வதை அறிந்து அவை நேருங்காலங்களைப் பல்லாண்டுகளுக்குமுன்னரே ஒருநிமிடமும் தப்பாது கணிக்கவல்ல சோதிட வித்துவானும், தன்னறிவெல்லாம் ஒருபாற்கிடக்க, கிரகணங்கள் இராகு கேதுக்களின் தீச்செயலால் உண்டாவதாக நம்பி, அவ்வமயங்களுக்கு விதிக்கப்பட்ட கிரியைகளை விடாது சிரத்தையோடு செய்வான் என்றும், மேனாட்டுப் புலவர் சிலர் கூறியுள்ளார். ஐரோப்பியரிடத்தும் இக்குற்றம் உளதோ என்பதை ஆராய்ந்து அதை எடுத்துக்காட்டுவதினும், அவர் கூற்றை மேற்சென்றிடிக்கும் நட்புரையாகக் கொண்டு, நம்மவர் ஒழுக்கத்தையே உற்று நோக்கி வேண்டியவாறு திருத்தமுயல்வதே அதிகப் பயன்தருமன்றோ? மனச்சான்றொடு முரணிய ஒழுக்கம் மனமொப்பியதினும் இழுக்குடைத்தென்பதை நியாயங்கூறித் தெளிவிக்கப் புகுதல் அறிவாளருக்கோர் அவமதிப்பாம். "ஊருடன் ஒத்துவாழ்" "நிர்வாண தேசத்திலே கோவணங் கட்டியவன் பைத்தியகாரன்," என்று நமக்குள் வழங்குவனபோலவே, மேனாட்டிலும், "உரோமபுரியில் உரோமரைப்போல் ஒழுகு," "அஞ்ஞானம் ஆநந்தமாகுமிடத்தில் ஞானம் மதியீனமாம்" என்று பழமொழிகள் நடைபெறுகின்றன. ஆழ்ந்தாலோசிக்குங்கால், ஒவ்வொரு மனிதனும் தன்தன் மனமொப்பியபடியே எல்லாவிஷயங்களிலும் ஒழுகுவானாயின், பல்லோர் கூடிய ஜனசமூக நாகரீக வாழ்க்கை ஒருகணப்பொழுதும் நிலைபெறாதென்பது நன்குவிளங்கும். பல்வேறு ஜனசமூகங்களை ஒப்பிட்டு நோக்குங்கால், நாகரீகம் பெருகப்பெருகத் தன் மனப்படி யொழுகும் உரிந்தாம் குறைந்து வருவதைக்காணலாம். அதிமேதாவியாய் விளங்கிய ஆங்கிலகவிஞர் ஒருவர்கூறியுள்ளதிது:—"என் அண்டைவீட்டுக்

காரன் விஷசுரமுதலிய நோய்களை எனக்கு உண்டாக்கக் கூடிய அளவு யான் உட்கொள்ளும் காற்றைத் தன் வீட்டுச் சாக்கடைகளின் அசுத்தத்தால் கெடுப்பானாகில், ஒரு துப்பாக்கியை நீட்டி என்னைச் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தினால் எப்படியோ அப்படியே உயிர்வாழ்தற்குரிய என் சுதந்தரத்தைக் குறைக்கின்றான். தன்குழந்தைகளுக்கு வைசூரி குத்தாமல் அவனிஷ்டப்படி வளர்க்கலாமென்றிருந்தால் என்குழந்தைகள் கண்டெடுத்துஉண்ணுமாறு விஷங்கலந்த அப்பங்களை வைக்கலாமென்றும் இருக்கலாம்; அவர்களைப் படிப்பிக்காமலும் ஜீவனோபாயமுறைகளில் பயிற்றாமலும் அவன் வளர்த்துவரின், சிறைச்சாலைகளையும் வேலைக்கூடங்களையும் சம்ரக்ஷணை செய்தற்கு வேண்டிய பணவரிச்சும்மையை அதிகரித்து, என்சுதந்தரத்தைத் தன்னாலேன்றமட்டும் குறைப்பவனாகின்றான். ஜனசமூகத்தின் நாகரீகம் எத்துணையுயர்ந்ததோ, அத்துணை, அச்சமூகத்தில் ஒவ்வொருவன் செயல்களும் மற்றெல்லோரையும் பாதிக்கின்றன: அத்துணை, மற்றோரது சுதந்தரங்களைக் குறைக்காமல் யாவனாயினும் ஒருமனிதன் தவறி யொழுகுதல் அருமையாகின்றது". ஆகவே, முற்றும் துறந்து தனித்தனியே காடுகளில் வசிக்கும் நீத்தாருக்கன்றி மனம்போன்ற ஒழுக்கம் கைகூடாததாகின்றது. வேந்தனையும் துரும்பென்று மதித்துத்திரியும் துறவிகளுங்கூட நாடு நகரங்களில் சஞ்சரிக்குங்கால் உலகவழக்கங்களைச் சிறிது அனுசரிக்க வேண்டியதாகின்றது.

மனமொப்பாத ஒழுக்கம் இழுக்குடைத்தென்றும், மனம்போன்ற ஒழுக்கம் கைகூடாததென்றும் நாட்டிவிடின் விபரீதமாய் முடியுமன்றோ? சற்று ஊன்றிப் பார்க்கின், வரம்புற்ற அறிவும் ஆற்றலுமே யுடையமாந்தர் மனம்போன்ற ஒழுக்கத்தை அவாவுதல் எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடுவதுபோலும் என்பது விளங்கும். உலகவாழ்க்கையும், மனமொழிமெய்களால் மனிதன் இயற்றும் ஒவ்வொன்றும், ஒப்பிட்டறிந்து மதித்தற்கேயுரிய தாரதம்மியச் சார்பினவாயிருக்கின்றன. எல்லாம் அறிந்தவனுமில்லை, ஏதுமறியாதவனுமில்லை: எல்லாம் வல்லானுமில்லை, ஒன்றும் ஏலானுமில்லை; முற்றும் நல்லதுமில்லை: முற்றும் தீயதுமில்லை; நிலைத்த மெய்ம்மையுமில்லை, நிலை



த்த பொய்ம்மையுமில்லை. சம்பூரண அவஸ்தை சர்வேசுரனுக்கேயன்றிக் கர்மசக்கரத்திற்சிக்குண்டுழலும் ஆன்மகோடிகளில் ஒன்றுக்குமில்லை. ஆயின், இத்தீராக்குறையினால் பிரபஞ்ச வாழ்க்கையைத் துறந்துவிட முடியாது. தத்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏன்ற அளவு இயற்கையில் ஏற்பட்ட குறையை நிரப்பிக்கொண்டு,நாளுக்குநாள், பிறவிக்குப்பிறவி, மேம்பட்டு விருத்தியடைதலே மெய்யறிஞர் கடனாம். ஒழுக்கத்தூய்மையிலும் அவ்வாறே.

“வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம், தானறி குற்றப் படின்?” என்றுசாவிய நாயனாரும் உலகத்தோடொட்டிய ஒழுக்கத்தைச் சிறப்பித்திருக்கின்றார். “உலகம் என்பதுஉயர்ந்தோர் மாட்டே” என்றெண்ணியே அவர் இவ்வாறு சிறப்பித்தார்போலும். அஃதெங்ஙனமாயினும், உலகத்திலே யான் மட்டும் ஓரபிப்பிராயமும், என்னையொழிந்த மற்றெல்லோரும் பிறிதோரபிப்பிராயமும் கொண்டிருந்தவழியும், என் மனச்சான்றுக்கு விரோதமாக அவர் அபிப்பிராயப்படி யான் ஒழுகுவேனாயின், என்னொழுக்கம் பொய்யொழுக்கமேயாம். ஜீவனோபாயநிமித்தம் வனாந்தரத்திற் சென்று பயிர்செய்து குடிசையில் வாழ்ந்துவந்த ஓர் ஏழைக்குடியானவன் மகனாகப் பிறந்து, தமது மதிநுட்பத்தாலும் சீலத்தாலும் மனவுறுதியினாலும் ஊக்கத்தாலும் அமெரிக்கா ஐக்கியமாகாணங்களின் தலைவராகி அக்கிராசனாதிபத்தியம்வகித்த கார்பீல்டென்பவர் (President Garfield), தம்மைப்பற்றிச்சொல்லியிருப்பதாவது:— “தப்போ சரியோ, சாதகமோ பாதகமோ, என் மனக்கோளின்படி ஒழுகுவதே என் வாழ்க்கை முறை. பல்லாண்டுகளாக என்னைக் ‘காங்கிரஸ்’ மகாசபைக்குத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்து அனுப்பிவந்த ஜில்லாவாசிகள் என் செய்கைகளை மெச்சவேண்டுமென்று நான் மிகவும் விரும்பினேன்; ஆயினும், நான் கூறப்போவது ஒருவேளை தற்புகழ்ச்சிபோலத்தோன்றலாம். அவரினும் அதிகமாக என்னை ஒரு மனிதன் மெச்ச வேண்டுமென்று நான் மிகவும் அவாவுற்றேன்: அவன்பேர் கார்பீல்டுதான். அவன் ஒருவன்தான் தூங்கும்பொழுதும், உண்ணும்பொழுதும், ஜீவிய அவஸ்தைகளிலெல்லாம் நீங்காது என்னுடன் இருப்பவன்; அவன் என் செயல்களை ஒப்புக்கொண்டு

மெச்சாவிடின் என்மனம் நிராதசஞ்சலத்தால் வருந்தும்'' "தன்னெஞ்சறிவது பொய்யற்க: பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்றார் தெய்வப்புலவரும்.

இவ்விடத்தில்ஒருசங்கை உண்டாகலாம்: நல்லோரைப்போலத் தீயோரும் தம்மன மொப்பியபடியே ஒழுகுவராயின் பெருந்துன்பம் விளையுமே? முதற்கண், உலகம் பழித்த தீச்செயல்களை உள்ளமொப்ப நன்றென்று கருதுவார் கடைப்பட்ட மக்களிலும் அரியராவர். ஒருபண்டத்தைத் திருடவரும் நாய்கூட மெதுவாய் ஓசையின்றிப் பதுங்கி வருதலால் தன்செயலின் இழிதன்மையைத் தான் உணர்ந்திருப்பதைக் காட்டிவிடுமாயின்,பகுத்தறிவும் விவேகமுமுள்ள மாந்தர் தீமையை நன்மையாகப்பெரும்பாலும் நினைக்கக்கூடும் என்றெண்ணுதல் பொருந்தாது. உலகத்தே நிகழும் மிக்க தீச்செயல்களுக்குக்காரணம் கேவலம் அறியாமையன்று. ஆயின், பேதைமைத்தாய்வரும் தீமைகளும் சிறுபான்மையுள. மனமொப்பியவண்ணம் நடக்க வேண்டுவது போலவே, அறிவை விருத்திசெய்து, நமது மனக்கோள்களைச் சீர்திருத்தி, மனச்சான்றை வழிபடுதெய்வத்துக்கு ஒப்பாக்குதலும் நமது கடன் என்பது மறக்கற்பாலதன்று.

சாதாரணமாக்ர்து சுயநயச் சிந்தை, அவா, காமம், வெகுளி முதலிய தீக்குணங்களையும் அவற்றால் விளையும் கேடுகளையும் அநுபவத்திலறிந்து, அவற்றினின்றும் ஜனசமூகங்களை விலக்குமாறு, நல்லார் பொல்லார் எல்லாரும் கீழ்ப்படிந்து கவனிக்கவேண்டிய சில சட்டதிட்டங்களை முன்னோர் நியமித்திருக்கின்றனர். அவற்றை மீறிய ஒழுக்கம் அரசனால் ஒறுக்கப்படுகின்றது. அச்சட்டதிட்டங்களுள் அமையாது அவற்றின் புறமான ஒழுக்கமே ஈண்டுப்பேசப்படுவது. இவ்வொழுக்கத்தையே மனச்சான்று ஒப்பவேண்டும். இவ்வொழுக்கத்துக் குட்படும் செயல்களை முக்கியமானவையென்றும் முக்கியமில்லாதவையென்றும் பிரிக்கலாம். சாதாரண நடை உடை பாவனைகளை முக்கியமில்லாதவையெனக் கூறலாம். இவ்விஷயங்களில் பெரும்பாலும் ஊருடன் ஒத்துவாழ்வது நன்மதியாம். முக்கியமானவற்றையும் சில உதாரணங்களால் விளக்குவாம்.



மனச்சான்றோடு முரணிய ஒழுக்கம் தனக்கேனும் பிறர்க்கேனும் எவ்விதத் தீங்கையும் விளைக்குமாயின் அதை முக்கியமானதென்று மதிக்கலாம்: முற்கூறிய சோதிடனது நம்பிக்கையும் செயலும் தக்க உதாரணமாம்; அவன் கிரகணகாலத்தில் குளித்துத் தருப்பணம் முதலிய இயற்றி உண்ணுதிருப்பதால் தனக்கேனும் பிறர்க்கேனும் வெளிப்படையான தீங்கொன்றும் இல்லையாயினும், அவன் செயல் பெரும்பாலும் பிறர்க்குப்பயந்தே செய்யப்பட்டதால் அவன் மனத்தூய்மையையும் உறுதியையும் சிதைத்து அவனுக்குக் குணக்கேட்டையும், அவனைப் பார்த்துத் தாமும்நம்பிப் பிறர் ஒழுகுவதால், அவ்விதப் போலிக்கொள்கை உலகத்தில் நிலைபெற்றுப் பிறர்க்குக் கேட்டையும் விளைவிக்கின்றது. மனந்தெளிந்த அத்துவைதி ஒருவன் ஆலயங்களுக்குச் சென்று விக்கிரகஆராதனை செய்வானாயின், கடவுள் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆநந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்திருப்பதை'' உள்ளபடி காணவல்ல அவனுக்கு ஒரு குணக்கேடும் விளையாதாயினும், அவனை மேதாவியென மதித்துத் தமக்கு முன்வரிச்சட்டமாகக் கொண்டொழுகும் பெருந்திரளான பேதைமாந்தர், விக்கிரக ஆராதனையே வழிபாட்டுட் சிறந்ததெனக் கொண்டுமயங்கி, மதக்கோளுக்கும் உண்மைக்கும் நாகரீக அபிவிருத்திக்கும் விபரீதமாக ஒழுகுவாராதலின், அவனது செயல் பிறருக்குப் பெருங்கேட்டை விளைப்பதொன்றும். உலகத்திலே சாதாரணமாக்களான பெரும்பாலார் மேதாவிகளான சிறுபாலாரைப் பின்பற்றியொழுகுவதே இயல்பாதலின், அறிவிற்சிறந்தார் உலக அபிவிருத்திக்கு உத்தரவாதிகளாகின்றனர். ஞானிகளும் அஞ்ஞானிகளும், பண்டிதரும் பாமரரும், பேதமின்றி ஒரேவிதமாக ஒழுகின், ஞானமும் கல்வியும் பயன்பட்டுப் பெருகுவதெங்ஙனம்? அறிவுடையோரும் இங்ஙனம் மூடரைப்போல ஒழுகுதற்குக் காரணம், பழையவழக்கம் என்னும் பெரும்புலிக்கு அஞ்சாத மனவுறுதியும் தீரமும் இன்மையே. போர்க்களத்திலே புறங்கொடாது மாற்றலரைப் புடைத்து மடியும் போர்வீரன்தானே வீரன்? உலகமதிப்பையும் இகழ்வையும் பாராட்டாது, தன்மனச்சான்று மகிழ்ந்தொப்ப மெய்ந்நெறிக் கண்ணே ஒழுகும் உத்தமபுருஷன் அவனிலும் பதின்மடங்கு சிறந்த வீரனாவான்: எங்ஙனமெனின், முன்னவன் உலகமதிப்பையே அவாவி

அதன் வசையுரையை அஞ்சி மடிகின்றான்; பின்னவனோ, ஆன்ற பேருலகின் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒருங்கே திரணமென நினைந்து, கண்கண்டகடவுள்போன்ற தன்மனச்சாக்ஷியின் மெச்சுதலையே விரும்பியொழுகுகின்றான். மதாசாரவிஷயங்களிலும் விரதாநுஷ்டான விஷயங்களிலும் உபநயனம் விவாகம் முதலியபல்வேறு ஸம்ஸ்காரங்களைப் பற்றிய வழக்கங்களிலும், தினசரியொழுக்கத்திலும், நம்மவரில் அறிவாளர் எவ்வளவு தம் மனமொப்பாதவண்ணம் உலக வழக்கத்துக்குப் பயந்து நடக்கிறார்களென்பதை உற்று நோக்குவோமாயின், மேனாட்டார் நம்பாற் சுமத்தும் பழிப்புரையின் உண்மை விளங்குவதுமன்றி, நமது நாடு இங்ஙனம் சீர்கெட்டிருப்பதின் முக்கிய காரணமும் தெற்றென விளங்கிவிடும். தேசாபிமானிகள் ஒவ்வொருவரும் கவனிக்கத்தக்கது இது.

அ. மாதவையர்.

---

உ

முத்துக்குமாரகவிராசர்

# முத்தகத்திரயம்.

அறுசீர்விருத்தம்.

மல்லாக மாதகலான் மருகன்சுன் னாகத்தான்
 மகன்பா வாணர்
சொல்லாச்சீ ரீவினையான் றுன்னாலை யானத்தான்
 சுரும்ப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தானைச்
 சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத் திடைப்பவனி
 வரக்கண் டேனே.

இது மாவிட்டபுரக் கந்தசுவாமிகோவிலிலே சுப்பிரமணியக்கடவுள் பவனிவருதலைக் கண்ணுற்றபோது சொல்லிய அறுசீராசிரிய விருத்தம். இதுவும் நாமாந்தரிகை என்னும் பிரகேளிகை.



இங்கே கருதிய பொருளை மறைத்துக்கொண்டு வெளிப்படையிலே வேறொன்றாகத் தோன்றும் நாமதேயங்களாவன யாழ்ப்பாணத்திலுள்ள சில ஊர்களின் நாமங்கள். அவை யாவையெனின்; மல்லாகம், மாதகல், சுன்னாகம், ஈவினை, துன்னாலை, சில்லாலை, கொடிகாமம் என்னும் ஊர்ப்பெயர்கள் ஏழுமாம்.

மல்லாகம், சுன்னாகம் என்னும் ஊர்களிரண்டும் யாழ்ப்பாணப் பிரதான நகரியிலிருந்து காங்கேசன்றுறைக்குச் செல்லும் நெடுந்தெருவின் பக்கங்களிலே மத்தியிலுள்ள ஊர்கள். மாதகல், சில்லாலை என்னும் ஊர்களிரண்டும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும்மூன்றினாலும் சிறப்புற்று விளங்கும் கீரிமலை என்னும் புண்ணியக்ஷேத்திரத்திற்குச் சமீபமாய் விளங்கும் ஊர்கள். ஈவினை என்பது புன்னைநகரை அடுத்துக் கிழக்கே கிடக்கும் ஒரு சிற்றூர். துன்னாலை என்பது புலோலிமாநகரை அடுத்து விளங்கும் ஓரூர்.

இந் நாமங்களிலே மறைந்து நின்ற பொருளையுங் கூறுதும். மல் ஆகம் மாது அகலான் மருகன் - வலியமைந்த திருமார்பிலே ஸ்ரீதேவி நீங்காதிருக்கப் பெற்றவராகிய நாராயணக் கடவுளுக்கு மருகரும்; சுன்னாகத்தான் மகன் - திருக்கைலாசவாசராகிய ஸ்ரீகண்ட பரமேசுர மூர்த்தியுடைய திருக்குமாரரும்; பாவாணர் சொல்லாச்சீர் ஈவினையான் - (தம்முடைய மெய்யன்பராயுள்ளவருக்கு) யாவற்றினும் சிறந்ததாகிய முத்தியின்பத்தினைக் கொடுக்குந் தொழிலுடையவரும்;— துன்னாலையான் அத்தான் - நெருங்கிய கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கு மைத்துனரும்; சுரும்பர் ஓதிசில்லால் ஐ இருள் வென்ற-வண்டுவீழ்கின்ற கூந்தலிலுள்ள தகட்டணியால் செறிந்த இருளைவெற்றிகொண்ட; குறக்கொடி காமத்தானை- வள்ளிநாயகியின்மீது இச்சையுடையவரும்; சிகண்டிமா ஊர் வல்லானை - மயிற்பறவை யென்னும் புரவியைச்செலுத்த வல்லவருமாகிய முருகக்கடவுளை; மாவிட்டபுர நகரத்திடை - மாவிட்டபுர நகரத்திலே; பவனிவர கண்டேன் - திருவுலாவரக் கண்டேன். எ-று.

மல் - வலிமை. இலக்குமி வாசஸ்தானமாகக் கொண்டு வசித்தல்பற்றி ஆகமாதகலான் என்றார். சுல்லு நாகம் சுன்னாகம். சுல்லு

வெள்ளி. நாகம்-மலை. பாவாணர் சொல்லாச்சீர் என்பது வினையெதிர் மறுத்துப் பொருள்புலப்படுத்துதல். ஈவினைவினைத்தொகை. துன்று என்பதும் வினைத்தொகை. பரிமாபோலப் பாரந்தாங்கிச்செல்லல்பற்றிச் சிகண்டிமா என்றார். மாவிட்டபுரம் - யாழ்ப்பாணத்துள்ள பிரசித்தமான ஒரு சுப்பிரமணியஸ்தலம்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

உ

# பெரியபுராண அரும்பதவிளக்கம்.

## கண்ணப்பநாயனார் புராணம்.

(௭௫) காடுவெட்டிச் சரித்து வார்வலையைவிரித்து யோசனைப் பரப்புமுழுதும் நெடிய வலியவலைப்பந்தத்தைத் தூரத்தேகட்டி நேராக அச்சம்பொருந்திப்பரந்தகாட்டைக் காவல்செய்தமைத்தபின்னர், பற்றைபோன்றதலையையுடைய விற்கைவேடர்கள் திண்ணனாருக்குமுன்போனார்கள். ஒடியெறிதல் - மரங்களைவெட்டிச்சாய்த்தல்.

(௭௬) கொடியவிற்பொருந்திய கையையுடையதிண்ணனாரும் வேடர்களோடுகூடிமுன்னரேமேகங்களுலவுசெய்கின்றமலையின் வழிப்புறத்தேவந்தமிருகங்களைப்பயப்படச்செய்து கொல்கின்ற நாய்களை எட்டுத்திக்கினும் விட்டு நெடியசிவந்தபாணத்தோடு காவலைச்செய்த காட்டுளடைந்தார்.

(௭௭) . வேடுவர்கூட்டமானது (சிலரை) கொடியமிருகங்களையெழுப்பும்படி அனுப்பி ஓடி,நேரேசெலுத்தும்பாணங்களைத் தெரிந்துகொண்டுசெல்ல, எவ்விடங்களினுமொய்த்த ஓசையையுடையவுடுக்கைக்கூட்டங்களும் பம்பைப்பறைகளும் முறப்பட்டொலித்தெழுக்கையிற்றட்டி அதிர்த்துக் காடுகளினெல்லாம் மிருகங்களையெழுப்பினார்கள்.



(௭௯) உடலெழ-உடம்பு துள்ள.

(௮௦) முன்னரேபெரியபன்றி கொடியபாணங்கள்பட்ட பிடர்கிழியும் படிவிசையோடுடுருவிய ஆழ்ந்தவாய் சிவந்தஅக்கினியைச்சொரியப்பொருந்தியபுலிகளின் பற்களிற்போய்த்தைக்கச்சிலபுலிகள் அப்பன்றியைக் கிளர்ந்தகோபத்தோடு கவர்தலையொப்பன. முன்னிருகருமா,வெங்கணைபடுபிடர்கிழிபட,விசையுருவியகயவாய் செங்கனல்விட, செறிய அங்கெழுசிரமுருவியபொழுது, அதனொடுகணையடலெயிறுற, அதனைச்சிலபுலிகள் பொங்கியசினமொடுகவர்புரைவன எனமாட்டேற்றுக. பன்றிகளின்றலையிற்றைத்து அப்பன்றிகளையிழுத்துக்கொண்டுபோய்ப் புலிகளின்பற்களிலேஊடுருவ, அப்பன்றிகளைப் புலிகள் கோபத்துடன்கடித்தலைப் போன்றிருப்ப தென்பதிதன்கருத்து.

(௮௧) பின்பக்கத்தில் வேடர்கள் விட்டபாணங்கள் அப்பின்பக்கத்தாற்சென்று வயிற்றினிடைபோய் முன்னரே நடுமுகத்தை விசையோடுடுருவ மிகுந்தவிசையோடு அந்தநுதியையுடைய கொல்கின்றபாணங்கள் இனமாகஎதிரேவந்தமான்முகத்தை யூடுருவத் தங்களுக்கெதிராகப்பலகலைமான்கள்போர்செய்தலை நிகர்த்ததலையையுடையன. பின்காட்டியோடும் மானுக்கு வேடர் பின்புறத்தாலே பாணத்தைவிட அப்பாணம் நெற்றியிலுருவி முன்காட்டிவரும் மானுடைய நெற்றியிற்பட ஒன்றோடொன்றெதிராகப் போர்செய்கின்ற தலையையுடையனபோன்றிருந்தன என்பதாம்.

(௮௨) முனைநேர் - துணிவோடெதிர்க்கின்ற. அவை - அப்பாணங்கள். பொருகின்றயானையோடு கோபம்பொருந்திய சிங்கத்தின் இடையிலே இடையீடுநீங்கச் சரீரத்திற்புகுதலால் அக்கானம் வருமிரவோடு பகல்சேர்ந்திருப்பன என்னும்படிநெருங்கும்.

(௮௫) தூரத்திலே விசையோடுமேலேகுதிக்க, அதனால்நெடியமுகிலைத் தொடும்படிஎழுகின்றயானைக் காலில்வீரக்கழலைக்கட்டிய வேடர்களுடையபாணநிரைகள்தொடர்தல், ஒளியையுடைய காந்திபொருந்தியசந்திரன்பிரியவருமென்றுகண்டோர்கூற, விழுமுழையாகியமானைக் கிரகங்களோடு பொருந்திய இராகுவென்னுஞ் சர்ப்பம்

தொடர்கின்றநிலைமைபொருந்த, எதிரே பலமான்களுள்ளன. பயந்து பாய்தலால் ஆகாயம்வரைக்கும்போய் விழும்மான்களை வேடர்களுடையபாணங்கள்தொடர்தல், சந்திரன்பிரிய அதினின்றும்வீழ்கின்ற மான்களங்கத்தை இராகுஎன்னுஞ்சர்ப்பம் தொடரும்நிலைமைபொருந்த எதிரே பலமான்களுள்ளன என்பதாம்.

(௮௪) சமுத்திரத்திலேபரந்த நீரைப்பானிக்க விழுவனவாகிய கருமுகிலைப்போல வலிமைபொருந்திய பாணங்கள் சரீரத்திலேதைக்கச்சுழலுதலால், நெருங்கியகரிய மரைகளும் கரடிகளுடன்காட்டெருமைகளும் மலைச்சாரலிலுள்ள வரிசையாகப்படர்தலோடுகூட்டமாயதழைகள் நெருங்கியபொருந்தியபுதலாகிய வனமீது விழுவன.

(௮௫) பலவழிகளில் அஞ்சுதலோடு வளைத்த வலையறும்படி நுழைகின்றமிருகங்களாய்த் திரண்டகல்வழியாகப் படர்பவற்றைத் தடுத்தல்பொருந்த மிக்ககோபத்தோடு வரும்நாய்களானவை, விளங்கியஇருவினையாகிய வலையின்கண் நிலையாகச்சுழல்வோருடைய நல்வழியிற்சேர்கின்றமனத்தை இடையிலேதடுத்த பொறிகளினளவாயுள்ளன.

(௮௬) துட்டமிருகங்களுக்கு எதிரேபோயும் மிருகக்கொலைசெய்யும்வேடுவர்கள், உடுக்கைபோன்றகால்களையும் மடிந்தசெவிகளையுமுடைய நெருங்கியபாணைக்கன்றுகளைத் தொடரார், ஓசையுண்டாக ஓடுகின்றசிறியகுட்டிகளின்மீது பொருந்தியகொலையைச் செய்யார், கால்தளர்கின்றகருப்பத்தையுடைவாய் வரும் பெடைமிருகங்களை யலையார்.

(௮௯) ஞமலிகளுக்குவழுவி விரைகேழல் தருநீழலின் நீடிய சரிபடர்வது.

(௯௦) குன்றிமணியைநிகர ஏரியும் அக்கினி முற்பட்டனவற்றை அழிக்க. பொருந்திய ஒப்பற்றமலையின் அடியிடத்தேயுள்ள மரவரிசைகளுக்கிடையேபோய் வழிசுழல அதனிடத்து நின்றது.

(௯௧) அந்தவிருட்சங்கள் வளர்கின்ற இடத்தையடைந்த அப்பன்றியினிலையை யறிந்தவராகிய குலவேடர்களுடைய அதிபர் குத்தினார்.



(௯௨) வேடர்களுடைய கரியசெங்கண்ணையுடைய திண்ணனார். ஆடவன் - நம்மிளவரசன். அச்சோவென்பது வியப்பின்கட்குறிப்பு. பாதத்திலேவணங்கினார் அச்சோ என்று தங்களுட்பேசி.

(௯௪) நன்றும் - அப்படிச்செய்வேம். இவ்வனத்திற் றண்ணீரெங்கேயுள்ளதென்றுரைசெய. இனி நன்றும் என்பதின் உம்மையைச்சாரியை யெனக்கொண்டு, நன்று என்பதைத் தண்ணீர் என்பதனோடுகூட்டி நல்லதண்ணீரெங்கேயுள்ளது எனப்பொருள்கூறுவாரும், நன்று - பெரிது என்பாருமுளர்.

(௯௫) பொங்கியசினவில்வேடன் - நாணன். காவதமரையில் - அரைக்காததூரத்தில்.

(௯௬) என்ன-என்று திண்ணனார்சொல்ல. காணும்என்னும் பெயரெச்சம் மலையென்னும்பெயர்கொண்டது. காணப்படும் மலையென்பதுபொருள். முற்றுக்குவாருமுளர்.

(௯௭) சம்பவிப்பதென்னையோ அறியேன்: இதனைக்கண்டு அணையுந்தோறும் என்மேற்பொருந்தியபாரம் போகின்றதொரு தன்மைஉளதுபோலும்: ஆசையும்பொலிந்து மேலுமேலும்பொருந்திய மனமும்வேறாய் ஒருவிருப்பம்பொருந்தி விரைந்துநிற்கும்.

(௯௯) மரத்தால் தீக்கடைகோலையியற்றி யிப்பொழுதே நீ நெருப்பை உண்டாக்குவாய்.

(௧௧௧) தேன் - தேன்கூடு.

(௧௧௩) ஆணையாம் - தம்முடையஆணையினால் எல்லாமுண்டாகின்ற. ஆணையென்றது சிவசத்தியை.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை.

---

# ஓர் மிகப்பழைய தமிழ்ச்சாஸனம்.

இச்சாஸனஞ்செஞ்சிக்கடுத்த திருநாதர்குன்றிலொருபாறையின் மீது வெட்டப்பட்டிருக்கிறது. இஃது உத்தேசம் 20-அங்குலநீளமும், 15-அங்குல அகலமுமுள்ளவிடத்தை நயப்படுத்தினவிடத்திற்பதிக்கப்பட்டுக் கொஞ்சமேனும் கெடாதநிலையிலிருக்கிறது.

இத்திருநாதர் குன்றின்மீது இற்றைக்கும் ஜைனவிக்கிரகங்கள் பலவிருக்கின்றன. வெகுகாலமாக ஜைனர்களுக்கு இஃது இருப்பிடமாயிருந்ததென்பதற்கு ஐயமில்லை.

இதுதான் இதுவரைகண்ட தமிழ்ச் சாஸனங்களிலே பழமையானது. இதனெழுத்தை வட்டெழுத்தென்று மயங்குவாருமுளர்; அஃதன்று என்பதை தே, நோ, தி, கை என்னு முயிர்மெய்களின் எ, ஓ, இ, ஐ-களைக்குறிக்கும் குறிகளை உற்றுநோக்கின் நன்குவிளங்கும். இச்சாஸனமுழுவதிலும் ஐஎன்னுமுயிரெழுத்தைத்தவிர மற்றவையெல்லாம் தமிழெழுத்துக்களே. இச்சாஸனம் கி. பி. 5-வது அல்லது 6வது நூற்றாண்டைச் சேர்ந்ததென்னலாம். முக்கியமாய், தகர நகரங்களின்வடிவு கவனிக்கத்தக்கது. இவை பம்பாய்த்தேசத்துக் கற்கோயில்களின் எழுத்துக்களிற் காணும் தகரநகரம்போல இருக்கின்றன.

இச்சாஸனம் சந்திரநந்தி ஆசிரியரென்னும் ஜைனசந்நியாசி ஸல்லேகனத்தால் தன்னுயிரைமுடிப்பித்துக் கொண்ட விடயத்தைக்குறிக்கும். பிறவுயிர்களை வெகுகருணையுடன் போற்றிவரும் ஜைனர்கள் ஏனோ தன்னுயிரைமாய்த்துவந்தனர்! சல்லேகனவிதியை, சிராவகாசாரகர்த்தாவாகிய சமந்தபத்திராசாரியர் அடியில்வருமாறு வர்ணித்துள்ளார். "இடையூறொழிவில்நோய் மூப்பிவை வந்தால், கடைதுறத்தல்சல்லேகனை"*. சிநேகம், வைரம், ஸங்கம் முதலியவைகளினின்று சுத்தனாய், தனக்குற்றுறவினர்களை க்ஷமித்துத் தானுமவர்களால்க்ஷமிக்கப்பட்டுத் திடமனத்தனாய்த் தான் நினைக்கும் பெரிய விரதத்தை

* அருங்கலச்செப்பு.



ச்செய்யத்தொடங்கவேண்டும். பின் முறையே, ஆகாரத்தைக் குறைத்துவந்து காலாந்தரத்தில் பாலைமட்டும் உட்கொண்டு அதையுநீக்கி தண்ணீரருந்தியபின் அதையும்நீத்து சுத்தோபவாசமாய் மரணசம்சைபயம், சிநேகவாசனைகளின் ஸ்மரணை, கர்மம் என்பவைகளில் ஞாபகமற்று தேகத்தியாஜ்யம் செய்யவேண்டும் என்று ஜினேந்திரர்கள் கூறுப.

மேற்கூறியவாறு, சல்லேகனம்செய்து தேகநிவாரணமடைந்தவர்களிருந்தவிடத்தில் எடுப்பிக்கும் எவ்வகை ஞாபகசின்னத்துக்கும் நிசீதிகை என்று பெயர். இவை கட்டிடமாயேனும், வெறும் கல்வெட்டுச் சாஸனமாயேனு மிருக்கலாம்.

சாஸனத்தின் படம்.



1. ஐப்பத்தேழன—
2. சனந்நோற்ற
3. சந்திரநந்தி ஆ—
4. சிரிகர் நிசீதிகை.

தி. அ. கோ[illegible]

திருவல்லிக்கேணி.

உ

கடவுள் துணை.

# இயன்மொழிவாழ்த்து.

ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்களை, பின்னத்தூர் ஸ்ரீமத்: அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் சங்கத்தின் ஆறுவது வருஷோற்சவ காலத்தில் பாடியது.

நசைஇய யாணர் நன்வா யாகலி
னிசைவி னேன்று ளெண்கி னேற்றை
யிருப்பை யார்கழ னறுவீ முனைஇ
முயற்றின் மொசித்த முரிவாய்ப் புற்றங்
காழறக் கெண்டிக் கைக்கொடு தந்த
வீயன் மூதா யிறுனெய் வறைய
லசைமகி ழாடூஉ வாயிழை கொண்மோ
மகப்பெறு மகட்டிற் றகைக்கற் பால
நோய்மருந்து கடியார் நமவெனத் தரீஇக்
கருநனை நொச்சி விரியிலை யன்ன
மென்கான் மஞ்ஞை கரக்கொடு நன்கன
மாமா நன்பா லவைப்புறு பைஞ்சினை
தேக்கடை யேந்துபு மீக்கே மூவகையிற்
சுரிகையிற் சிதைத்துச் சூழ்குய் யட்டி
யமல்லே யரிசி யறையுரற் குறீஇய
ரகன்குழா யமைவா யந்தேன் வாக்கியிட்
டலம்பெரி வெந்த வகைஇத்த நெக்கல்
கலங்குனர்ப் பசிநோய் கடிதந்து நிறூஉங்
குன்றக நாடன் மன்றன் முல்லைப்
பைந்தா ரண்ணல் பாண்பசிப் பகைஞ
னீண்டித் துறையறி பாண்டித் துரையெனு
மாவண் டோன்றன் மருங்குவாழ் வனர்தா



மல்கிய வற்கடத் தலைக மருகினு
மொல்கினும் வான்கரந் துறுக ணீடினுஞ்
செருத்தற் றீம்பால் பகுட்பறக் கொளூஉங்
கணைக்கா னவ்வியின் காமர் மறியெனத்
தளர்வறி கல்லார் வளனுறு சிறப்பின்
வாழ்வுற வைத்த மாஅன் மருகன்
சூழ்கழன் மன்னர் பெருமா னுங்கவன்
மெய்பெறு மரபின் வாழிய
வையை யெக்கர் மணலினும் பலவே.

திணை - பாடாண்டிணை. துறை - இயன்மொழி.

---

உ

# புத்தகக் குறிப்பு.

1. **விசுவநாதம்:**— இப்பெயர்கொண்ட நூலொன்று எமக்கனுப்பப்பட்டுச் சிலகாலமாயினும், சமீபத்திலேயே யாம் அதனைப் பார்த்து இக் "குறிப்பு" எழுதும்படி நேர்ந்தமைக்கு வியசனிக்கின்றேன். இந்நூல் தஞ்சைத் "தமிழகம்" என்னும் அரியபத்திரிகையில், புத்தகரூபமாக வெளிவந்தசெய்தி பலரும் அறிந்திருத்தல் கூடும். அவ்வாறு வெளிவரும்போதே, இந்நூலின் வாக்கும் போக்கும் பெரிதும் சுவைதந்து நின்றமையால், அதன் முழுவுருவத்தையும் காண அவாவியதுண்டு. இப்போது, அந்நூன்முழுதும் செவ்விதின் வெளியிடப்பட்டிருப்பது எம்மைப் மகிழ்வுறுத்தியதுபோலவே, பலர்க்குமுமகிழ்ச்சி விளைத்திருக்குமென்பது திண்ணம். இந்நூல் மதுரையிற் சீருஞ்சிறப்பும் பொருந்த ஆட்சிபுரிந்த நாயகவரசரில் முதல்வராகிய விசுவநாதநாயகருடைய அரிய சரிதத்தை, நாடகப்போக்கில் வைத்து நன்கு விளக்குவது. இல்லோன்தலைவனை இல்லதுபுனைந்து கூறும் ஏனையசிலவற்றைப் போலாது, உள்ளோன்தலைவனை உள்ளதும் இல்லதும்கொண்டு படிப்போர்க்கு ஆனந்தம் தருகின்றது. காலஞ்சென்ற ஸ்ரீ-சுந்தரம் பிள்ளையவர்களது "மனோன்மணியம்" போல இந்நாடகநூலும் செய்யுள்வடிவில் அமைக்கப்பட்டதாம். இதனாசிரியர், இந்நூலை அகவற்பாவில்வைத்துக் கூறிச்செல்லும் திறமை,

அறிஞர்க்கெல்லாம் அகமகிழ்ச்சி விளைக்கத்தக்கதென்பது திண்ணம். இவர்பாடல்கள், ஒழுகிய ஓசையும் விழுமியபொருளுங்கொண்டு சிறக்கின்றன. இந்நூலை உபகரித்தவர் தந்தை ஸ்ரீமத்-C.S.முத்துசாமி ஐயரவர்கள். இதன் விலை ரூபா ஒன்று.

2. ஆரியர் சத்தியவேதம்:—1898ம்-வருஷத்தில் கோயம்புத்தூர் ஸ்ரீமத். S. P. நரசிம்மலு நாயுடு அவர்கள் எழுதி வெளியிட்டதன் இரண்டாம் பதிப்பாகும் இது. இந்நூல், தமிழ்வாசிபர்கட்கு உபயோகமாம்படி, ஆரியமக்களது சநாதனதர்மத்தை விளக்குவது. கடவுள்வணக்கம், பிரபஞ்சசிருஷ்டிவிவரம் முதலிய பல அரியவிஷயங்களை, வேதம் உபநிஷத் முதலிய பிரமாணவாயிலாக உணர்த்துவது. பிரசித்தமதங்களாகிய துவைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் என்னும் சமயங்களின் கொள்கைகள் வினாவிடைரூபமாக இதில் அமைந்திருத்தல் பலர்க்கும் உபயோகமாகும். இவ்விரண்டாம்பதிப்பு நல்லகாகிதத்தில் சிறக்க அச்சிடப்பட்டும், நான்முகம் விரிவாயெழுதப்பட்டும், நாயுடுஅவர்கள் படத்துடனும் பல பெரியோர்கள் அபிப்பிராயங்களுடனும் நல்ல கட்டடங்கொண்டு விளங்குகிறது. இதன்விலை ரூ 1—12—0.

3. பலிஜவாருபுராணம்:—இந்நூல், நம் தமிழ்நாட்டிலும் அதன் வடக்கண்ணுமுள்ள நாயகர்கள் என்னும் தெலுங்கு ஜாதியாரது வரலாறுகளை விளக்குவது. இம் மதுரைமாநகராண்ட நாயக்க அரசர்கள் இப்பலிஜவாருக் கூட்டத்தினரே யென்பர். இவர்களெல்லாம், முற்காலத்தே சந்திரவம்ச க்ஷத்திரியரென்றும், ஆந்திரகுலத்தவரென்றும், எண்ணிறந்த மேற்கோள்களால் இந்நூலில் நிறுவப்பட்டுள்ளது. இந்நூல், ஐந்துகாண்டமுடையது. இவற்றிற் பழைய அரசர்கள் சரிதமெல்லாம் ஏறக்குறைய வெளியிடப் பட்டிருத்தலோடு, முக்கியமாக நாயக்கஆந்திரராஜாக்கள் வைபவமெல்லாம் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தமிழில், இதுவரை இம்மாதிரி சரித்திரநூல்கள் அதிகமாக வெளிவந்ததில்லை எனலாம்.

நாயுடு அவர்கள் அனுப்பிய வேறு இரண்டு நூல்களைப்பற்றி அடுத்த பகுதியில் குறிப்பு எழுதப்படும்.

பத்திராசிரியர்.




முதற் பராந்தகன் ஆட்சியிறுதியி லிருந்த சோழராஜ்யத்தின் விஸ்தீரணம்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௫] பிலவங்க௵ ஆடி௴. [பகுதி-௯.

## பழையகைத்தொழில் வியாபாரங்கள்.

(முற்றொடர்ச்சி.)

இனி, பரதகண்டத்தேயுள்ள மற்றநாட்டுத்தொழிலாளரில் திறமைவாய்ந்தபலர் தமிழ்மக்களால் அபிமானிக்கப்பெற்று, தமிழ்த் தொழிலாளிகளுடன்கூடித் தங்கள் தொழிற்றிறமைகளைக் காட்டி வந்தார்கள். இது,

"மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை"

என்னும் மணிமேகலையடிகளால் தெளியப்படும். இவரது தொழில்களையன்றி, கூர்ச்சரச்சிற்பவேலையும்,* கோசலநாட்டு ஓவிய வேலையும், வற்சநாட்டுக்கம்மவேலையும் பிறவும் தமிழராற் பாராட்டப்பட்டன. † இவ்வாறு பூர்வீகர் பலவகைப்பட்ட கைத்தொழில்களிலும் பயிற்சிபெற்றிருந்ததோடு, கரும்பாலைகளில் விசேஷக் கவலைசெலுத்தியும், மிளகுவியாபாரத்தைப் பெருக்கியும், பல்வகைக் கள்ளுச்சாலைத்தும், வெள்ளுப்புண்டாக்கியும், வியாபாரஞ்செய்து பேருதியமடைந்து வந்தார்களென்பது முன்னூல்களால் தெளிவாகிறது. முற்காலத்தே தொழில்செய்மாக்கள் வியாபாரிகள் முதலியோரது ஆரவாரமும் அழகும் தெரியவேண்டின் சிலப்பதிகாரத்தே இந்திரவிழவூரெடுத்த காதையிலும் கடலாடுகாதையிலும் கூறப்பட்டனவற்றைப் படித்து மகிழ்தல் இன்றியமையாதது.

* மணிமேகலை, காதை - ௧௮, அடி ௧௦௨.

† ஷை, காதை - ௧௯, ௧௦௭-ம் அடி அரும்பதவுரை.

இவ்வாறு, இயற்கையும் செயற்கையுமான பண்டங்களைக்கொண்டு வியாபாரஞ்செய்து பெரும்பொருள்படைக்கும் வணிகரைத் தமிழரசர் பெரிதும் அபிமானித்து வந்தனர். வாணிபத்தால் செல்வமும் புகழும் சிறக்கப்படைத்த வணிகர்க்கு, அரசன் "எட்டி" என்னும் அரும்பட்டமும் அதற்கடையாளமான பொற்பூவொன்றும் அளித்து, அவரை ஊக்குதல் பண்டைமரபாக இருந்தது. மணிமேகலையில்,

"வாணிக மரபின் வருபொரு ளீட்டி
நீணிதிச் செல்வனாய் நீள்நில வேந்தனால்
எட்டிப் பூப்பெற்று இருமுப் பதின்யாண்டு
ஒட்டிய செல்வத்து உயர்ந்தோ னாயினன்"

என ஒரு வணிகன் இவ்வாறு புகழப்பட்டிருத்தல் காண்க.

பழையகாலத்தே, தமிழ்மக்கள் கப்பல்செய் தொழிலினும் வல்லவராயிருந்தனர். "கலஞ்செய் கம்மியர்" "கலம்புணர்மாக்கள்" எனவரும் மணிமேகலைத் தொடர்களால் இஃது உணரப்படும். கப்பல்கள் நடுக்கடலிற் சென்று திரியுங்காலத்தே, திசைதடுமாறாது கரைசேர்தற்கு அநுகூலமாக, காவிரிப்பூம் பட்டினத்தில் கலங்கரை விளக்கம் அமைக்கப் பட்டிருந்ததென்பது சிலப்பதிகாரத்துக் கடலாடு காதையிற் காணலாம். [கலம் கரை விளக்கம்- கப்பல்களை (கரைக்கு) அழைக்கும் விளக்கு. கரைதல்-அழைத்தல்.] சென்னை முதலிய பெரும் பட்டினங்களில் இக்காலத்து வைக்கப்பட்டுள்ள "லைட்- ஹௌஸ்" (Light-House) போன்றதே இவ்விளக்கமும். இதனால் பழையோரது நாகரிகம் இத்தன்மைத்தென்பது நன்கு விளங்கக்கூடியது.

இனி, உண்ணாடுகளிலே, வியாபாரிகள் ஓரிடத்திருந்து மற்றோரிடத்துக்குத் தங்கள் பண்டங்களைக் கொண்டுசெல்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் முற்காலத்தே அமைக்கப்பட்டிருந்தன. பெருங்காட்டுவழிகளிலே தக்கவூர்களிற் காவற்படைகள் வைக்கப்பட்டு, வழிப்போக்கர்க்கும் வணிகர்க்கும் திருடர்முதலியவராற் சிறிதும் கேடு வாராதபடி பாதுகாக்கப் பட்டன என்றும், அப்படைகளின் செலவுக்காக, அவ்வவ்விடங்களிலே சுங்கச்சாலைகள் அரசனாணை



யால் அமைந்திருந்தன என்றும் முன்னூலால் விளங்குகிறது. இவற்றை,

"நெரியற், புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன் காட்டியவு" எனவும், *
"அத்தஞ் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவும் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்று அவன் கடியுடை வியன்புலம்"

எனவும் வரும் பெரும்பாணாற்றுப் படையடிகளால் உணர்க. இனிப் புகார்முதலிய பெருந்துறைமுகப் பட்டினங்களிலுள்ள பண்டசாலைகளின் சிறப்புக்கள் பட்டினப்பாலை முதலியவற்றிற் கூறப்படுவனவற்றைப் படிப்பவர்க்கு, இக்காலத்துப் பெருந்துறைமுகங்களின் பண்டசாலைச் சிறப்பினும் குறைந்தவைகளல்லவென்று தோன்றும் என்பதில் ஐயமில்லை.

"நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
வைகல்தொறும் அசைவின்றி
† உல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிசெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேறவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
வலியுடை வல்லணங்கினோன்

* இதனுரை வருமாறு:—மிளகினது ஒத்தசனத்தைத் தாங்கிய, வடு வழுந்திய வலியினையுடைய முதுகினையும் எடுத்தசெவியினையுமுடைய கழுதையின்மேல் மிளகெடுத்துக்கொண்டு போகுங்கூட்டத்தோடே வியாபாரிகள் வழங்கும் பெரிய வழியில், சுங்கச்சாலைகளையுடைய கவர்பட்ட பாதைகளைக் காத்திருக்கும் விற்படையிருக்கும் ஊர்களைக்கொண்ட அகன்ற காட்டுமார்க்கம்—என்பது.

† சுங்கம் கொள்ள.

* புலிபொறித்துப் புறம்போக்கி
மதி நிறைந்த மலிபண்டம்" (பட்டினப்பாலை)

இவ்வடிகள், காவிரிப்பூம்பட்டினத்தில் சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதியாகும் அழகையும், அவற்றில் சோழவரசனது புலிமுத்திரை யிட்டெண்ணிச் சுங்கம் கொள்ளும் சிறப்பையும் எவ்வளவு நன்றாக விளக்கிநிற்கின்றன. இன்னும், இறக்குமதியாகும் பண்டங்களில் முக்கியமானவை சில பின்வருவனவற்றால் விளங்கும்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் †காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய வீண்டி" (பட்டினப்பாலை)

வியாபாரிகள், தாம் கொடுக்கல்வாங்கல்செய்யும் பண்டப்பொதிகளில், அவற்றின் நிறை, அளவு, எண் இவற்றை எழுதிச் சாலைகளில் அடுக்கிவைத்துப் பின்பு எடுத்துச் செல்வர். இவ்வுண்மை,

" வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொதி
கடைமுக வாயிலும் கருந்தாழ்க் காவலும்"

என்னுஞ் சிலப்பதிகாரவடிகளில் காண்க. தமிழ் வியாபாரிகள் அக்காலத்து விளங்கிய பெருந்தன்மை பின்வருமாறு புகழப்பட்டுள்ளது.

" நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடி

* பொதிகளில் சோழனது புலிமுத்திரையிட்டு வெளியேற்றி என்பது கருத்து.

† பர்மா.



"கொள்வதூஉ மிகைபடாது கொடுப்பதூஉங் குறைபடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டி துவன்றிருக்கை" (பட்டினப்பாலை)

எனக்கண்டு கொள்க. இவ்வியாபாரிகளில், கடற்கரையிலிருந்த அந்நியவணிகர், தாம் தாம் விற்கும் பண்டங்கள் இன்னவை யென்பதை ஒவ்வோர் அடையாளக்கொடிகளாற் குறிப்பித்து வந்தனரென்பது,

" கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி"

என்னும் சிலப்பதிகாரத் தொடர்களால் விளங்கும்.

இனி, பண்டைத் தமிழ்மக்கள், தம் நாடுவிட்டு அந்நிய நாடுகட்குச் சென்றும் பொருள் திரட்டி வந்தார்கள். சுமாத்ரா, ஜாவா, மலேயா முதலிய தீவங்களிலுந் தீவகற்பங்களிலும் முற்காலத்தே நம்மவர் குடியேறி அரசுமுறைநாட்டியும் வர்த்தகம்செய்தும் வந்த செய்தி மணிமேகலைநூலைத் தூருவியாராய்வார்க்குப் புலப்படத்தக்கது. அவற்றுள், சாவா என்பது "சாவகநாடு" என இலக்கியத்துக்காணப்படும். அங்கே புண்ணியராஜன் என்பவன் நாகபுரியென்னும் நகரியை ராஜதானியாகக் கொண்டு தர்மிஷ்டனாய் ஆண்டனனென்பதும், மணிமேகலை அவ்வரசனிடஞ்சென்றுவந்ததும், பிறவரலாறும் நமக்குத் தெரியவருகின்றன. இவற்றிற்கேற்ப, அந்நாடுகளில் நம்முன்னோர் முற்காலத்தே கட்டிய கோயில்களும் கட்டிடங்களும் அழிந்து கிடப்பவை இன்றும் காணப்படுகின்றனவென்றும், அங்கிருந்த விக்ரகங்கள், மேனாட்டு லீடன்நகர்ப் பொருட்காட்சிச் சாலையிலே இன்றும் உள்ளன என்றுங் கூறுவர் * "ஏறக்குறைய 2000-வருஷங்கட்கு முன் இந்தியரும் அவரரசரும் குடியேறி, மலேயதீபகற்பத்தின் தென்கோடிவரையிலும் ராஜாங்கம் வகித்து வந்தனரென்பது தற்காலத்தில் அங்கே நிலமாகக்கிடக்கும் பாகான் (Pagan) பட்டின

* "செந்தமிழ்"—தொகுதி-௫, பக்-௧௯௦.

த்தின் இடிபாடுகளை நோக்குவார்க்கு நன்கு விளங்கும்" என்று, அப்பிரதேசத்தேயுள்ள ஒரு தமிழ்ப் பத்திராசிரியர் கூறியிருக்கின்றார்.

"மேலும், கீழ்நாடாகிய காம்போதியாவில் வெகு நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஹிந்து அரசர்கள் அரசாட்சி செய்து வந்ததைக் காட்டும் சின்னங்களாக, அங்கே வெகு உன்னதமான அரண்மனைகளும், தேவாலயங்களும், ஹிந்து தேவதைகளின் பிரதிமைகளும் இப்போதும் காணப்படுகிறபடியால், அவைகளைப் பார்க்கும் ஐரோப்பிய யாத்திரிகர்கள் மூக்கில் கைவைத்துத் திகைக்கிறார்களாம். அவ்வாறே ஜாவா என்ற பஸிபிக்கடல்தீவிலும் ஹிந்துக்களின் நாகரிகம் ஒருகாலத்தில் மேம்பாடுற்றிருந்ததற்கு அறிகுறிகளான அநேக பாழான கட்டிடங்களும் கோயில்களும் காணப்படுகின்றன. இவ்வாறு ஒரு காலத்தில் ஹிந்துக்கள் ஊக்கப்பிரியர்களாய்க் கடல் கடந்து தூரதேசம்போய் ராஜாங்கஸ்தாபனம் செய்தும், பிற்காலத்தில் தாய்த்தேசமாகிய இந்தியாவில் நேரிட்ட அநேக கேடுகளால், ஜனங்கள் ஊக்கமும் பேரெண்ணங்களுமிழந்து, தூரதேசப் சென்றிருந்த தம்மினத்தாரை யாதரிக்காமல் கைவிட்டுவிடவே, அங்கு மகமதியர்கள் ஆக்கிரமித்து ஆரிய நாகரீகத்தை இருந்தவிடந் தெரியாமலழித்துவிட்டார்கள்." *

இவ்வாறு, பண்டைக்காலத்தே, தமிழ் மக்களது ஊக்கமும் உழைப்பும் பலவழிகளிலும் சென்று பயனளித்து வந்தன. காலகதி யாரையும் விடாதாகலின், அவரது பழைய உந்நதநிலை பிற்காலத்தே தாழ்ந்துவிடலாயிற்று. நம்நாட்டுத் தொழில்வியாபாரங்கள் நசித்துப்போனதற்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் முக்கியமானவை சில, நம் வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிடக்கூடியவையாதலால் அவற்றை இங்கே விவரிக்க எண்ணமில்லை. ஆயினும், நமதறியாமையால் நாமே கொன்றுவிட்ட தொழிற்றுறைகள் பல. இவைகளையெல்லாம் அறியவேண்டின், பேண்மைதங்கிய சுதேசமித்திரன் பத்திராசிரியரது அரியமுயற்சியால் சமீபத்தில் வெளிவந்த மொழிபெயர்ப்பு வியாஸங்களைப் படித்தல் இன்றியமையாதது. நம் நாட்டுத் தொழில்கள் நசித்தமைக்குரிய பலகாரணங்களில், முக்கியமானதொன்று

* ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களது "ஜப்பான்சரித்திரம்"--முகவுரை



வது:—தேசாபிவிர்த்திக்கு இன்றியமையாத தொழிற்றுறைகளை, அவ்வளவு கூரியவறிவுமாற்றலுமில்லாச் சிலவகுப்பினர்க்குரியவாக ஒழித்தமையால், அப்பழைய தொழிற்றுறைகள் காலத்துக்கேற்ற திருத்தங்களும் பெருமையும் பெறவியலாது, பழையநிலைமையிலே நிற்பனவாயின—என்று மகாநிபுணரும் தேசாபிமானியுமான மகாராஜரொருவர் சமீபத்தே அபிப்பிராயப்பட்டனர். இக்கருத்து, உண்மையிற் றிட்பநுட்பமுடைய தன்றோ! பண்டுமுதலே நல்லறிஞரெல்லாம் தொழிற் றுறைகளில் கவலைசெலுத்தி வந்திருப்பராயின், ஏனைய துறைகளில் அவரால் உண்டான பெருமைகள் கைத்தொழிற்கண்ணும் சென்றிருக்குமென்பதில் ஐயமில்லை. முன்னாளில் நல்லறிஞர்கள் யந்திரதந்திரங்களிலே தம்கவலையைச் செலுத்திவந்ததாலன்றோ, எத்தனையோ அருமையான யந்திரங்களும் ராஜதந்திரங்களும் பழைய சங்கநூல்களிலும் பிறவற்றிலும் காணப்படுகின்றன. "நிறைக்குறி னிறைதருப் போக்குறிற் போக்கும், பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை" என்னும் யந்திரவாவியும், சிலப்பதிகாரத்து அடைக்கலக் காதையிற் கூறப்படும்,

"வளைவிற் பொறியும், கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலுந் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமும்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்" என்ற—

அக்காலத்துபயோகப்பட்ட யந்திர ஆயுதங்களின் வகைகளும் பூர்வீகரது யந்திரஞ்செய்யுந் திறமையை நன்குகாட்டுவனவாகும். இவ்யந்திரங்களின் பொருள்கள் அவ்வடிகளின் உரையிற் கண்டுகளிக்கத்தக்கன. இவ்வாறே, முற்காலத்து வழங்கிய யந்திர ஆயுதவிசேடங்கள், சிந்தாமணி நாமகளிலம்பகம் ௭௨—௭௫-ம் பாடல்களிலும் மிகுதியாகக் காணப்படும். இவ்வாறு வழங்கியவைகளெல்லாம், விர்த்திமுகங் காட்டாமற்போயினும், இறந்துபோகாமலேனு

ம் நம்காலத்தில் இருத்தலாகாவோ? நாம் வரவர அறிவாற்றல்கள் குறைந்தவராகி நம் முன்னோர்கள் வைத்த பெருமையைக் காப்பாற்றாது கெட்டோம். அதனால் நம் தேசம் சிறுமைப்பட்டது. ஆயினும், "வறுமை" என்பது, ஒருஜனசமூகத்தை நெடுங்காலம் கண்ணை மூடிக்கொண்டு தூங்கும்படி விடாதன்றோ! கைத்தொழில் வியாபாரங்களால் தமக்கு நேர்ந்துள்ள குறைகளையும், அதனால் தம்வறுமை அதிகப்பட்டுவருதலையும், தேசக்ஷீணத்தையும் நம்மவரெல்லாம் அறியத்தொடங்கிவிட்டார்கள். ஆதலால், உயர்வகுப்பாருள்படியாவரும் தொழிற்றுறைவியாபாரத்துறைகளில் விருப்பத்துடன் புகுங்காலமும் நெருங்குகின்றதென்னலாம். இங்ஙனமாயின், இந்தியாவின் வருங்காலம் பழைமைபோலவே சீருஞ்சிறப்பும் பெற்றிருக்குமென்பதில் ஐயமில்லை. முற்காலத்தே விளங்கியதெய்வப்புலவராகிய திருவள்ளுவரினும் சீரிய அறிஞர் எக்காலத்தும் உண்டோ? அப்புலவர் பெருமானே தம்ஜீவனோபாயத்துக்காக மேற்கொண்ட விர்த்தி நெய்தற்றொழில் என்றால், கைத்தொழிலைப்பற்றி முன்னோர் கொண்டிருந்த எண்ணம் எவ்வளவுயர்ந்ததாகும்? "செய்யுந் தொழிலெல்லாஞ்சேர எடுத்துரைக்கின், நெய்யுந்தொழிற்கு நிகராகா" என்பதே தெய்வப்புலவர் திருவுள்ளமாம். அவர் நெய்தற்றொழில் செய்துவந்தவரென்பது "இழைநக்கி நூல்நெருடும் ஏழையறிவேனோ, குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து"—என வழங்கும் அவர்பாடற்பகுதியால் தெளிவாம். இப்புலவர் பெருமானைப்போலவே, முற்காலத்தே, கைத்தொழில் வியாபாரப்பெருமைகளை நன்குணர்ந்து அவற்றையே தம்விர்த்தியாகக் கொண்டுவந்த நல்லிசைப்புலவர்கள் பலர் உளர். மணிமேகலையாசிரியரான சீத்தலைச்சாத்தனார்க்குக் கூலவாணிகன் என்னும் அடையும் இளவேட்டனார்க்கு அறுவைவாணிகன் (அறுவை - ஆடை) என்னும் அடையும், சாத்தனார் என்பவருக்கு வண்ணக்கன் என்னும் அடையும் வழங்குதலானும், மதுரைப்பெருங்கொல்லனார், உறையூர் இளம் பொன்வாணிகன் சாத்தன் கொற்றனார், மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார், மதுரைப் பொன்செய்கொல்லனார் முதலிய நல்லிசைப் புலவர்கள் பெயர்களானும் மேற்கூறிய விஷயம் தெளியப்படும். இடைக்காலத்தில், கைத்தொழிற்பெருமையை, அறிஞர்கள்



அறியாது கைநெகிழவிட்டமையாலேயே, நம்தேசம் உண்டு உடுப்பதற்கும் கண்டுகளிப்பதற்கும் பெருக்கிமெழுகுவதற்கும் ஊர்ந்துஉலாவுவதற்கும் அந்நியக்கைத்தொழிற் பொருள்களையே எதிர்பார்க்கும்படி நேர்ந்துவிட்டது. இவ்வாறு அந்நியக்கைத்தொழில் வியாபாரிகட்கு நாம் அடிமைப்பட்டிருப்பதை நிவர்த்தித்து, உலகத்து நாகரீகமக்கள்முன் நம்மைக்காட்டிக் கொள்ளவேண்டுமாயின், எல்லா மேல்வகுப்பாரும் நல்லறிஞரும் நாகரீகம்படைத்தபிரபுக்களும் தேசவிர்த்திக்கு இன்றியமையாத தொழிற்றுறைகளிற் புகுவது ஆவசியகமாகும். இத்தேசத்துள்ள எல்லாரும் ஜாதிமதவேற்றுமையை அறவேயொழித்து, "தேசநன்மை" என்னும் பொதுநோக்கத்துக்காகத் தம்சக்திகளையெல்லாம் ஒருங்குதிரட்டி ஒற்றுமையுடன் உழைத்துவந்தால், நினைத்த எண்ணங்கள் யாவும் எளிதின் முற்றுப்பெறுதல் திண்ணம். சுதேசிய உணர்ச்சி எழுந்த இரண்டுவருஷங்களுள், நம் தேசத்தார் அடைந்திருக்கும் எண்ணிறந்தநன்மைகளே இதற்குத் தக்க சான்றாம்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"
"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்பவை பொய்யாமொழிகளன்றோ. "எல்லாப் பொருளிற் பிறந்துவிடு" மென்பது முதுமொழியாதலின், அப்"பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" யென்பது திண்ணம். அன்றியும் மறுமையின்பமுங்கூட, அப்பொருளில்லையேல் எளிதிற்பெற இயலாதென்பது மேலோர் திருவுள்ளமாகும். என்னை?

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா லுண்டு"

என, மறுமைக்குரிய அருள்வளர்ச்சிக்கு இம்மைக்குரிய பொருளைக் காரணமாகக்கூறுதலால் என்க. இதுபற்றியே, "ஆராயிற்றானே அறம்பொருளின்பமென்று, ஆராரிவற்றினிடையதனை யெய்துவார், சீராரிருகலையு மெய்துவர்" எனவும் "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான்முடியும்" எனவும் திருமொழிகள் பிறந்தன. செல்வப்

*

பெருக்குடைய தேசங்கள் "குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன், றுண்டாகச்செய்வான்வினை" என்றபடி, எந்த அருமையான காரியத்தையும் சாதிக்கவல்லன. இதற்கு மேனாடுகளே போதியசான்றாகும். பொருள்வருவாயின்றி ஏழைமையுற்ற நாடோ எத்தனை ஞானவலியைப் பழங்காலமுதலே பெற்றிருப்பினும், அஞ்ஞானம் ஒருகால் போலியாகி அஞ்ஞானமாக முடிதலும்கூடும். என்னை? இம்மையின்பத்துள்ளபற்று, அநுபவித்துக்கழிதற்கு இடமின்றாதலால். இதுபற்றியன்றே, போலி வேதாந்திகள் பலர் நம் நாட்டில் தலைப்பட்டு பொய்புரட்சிகளுக்காளாய், இருமையின்பத்தையுமிழந்து கெடுகின்றனர். ஆதலால், உலகவாழ்வுக்கு இன்றியமையாத பொருணிலையின் தத்துவத்தைச் செவ்வனேயுணர்ந்து போற்றுதல் ஒவ்வொரு தேசத்தாருடைய கடனுமாம். இம்முறைப்படி நோக்கின், இந்தியாதேசத்தின்நிலைமை மிகச்சீர் கெட்டுக்கிடக்கின்றது. இந்நிலைமை மாறவேண்டின், அது "சுதேசிய முயற்சி" யாலேயே நிறைவேறத்தக்கதென்பது அறிஞரெல்லாருடைய கொள்கையுமாம். ஆதலால், நம்மவரொவ்வொருவரும் இம்முயற்சியைத் தத்தம் அறிவாற்றல்களுக்கு ஏற்றவளவு கொண்டுசெலுத்துதல் தேசத்தின் பெருநன்மைக்குக் காரணமாகும்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்னும் அருமைத்திருவாக்குப்படி, நம்முடைய எண்ணங்களும் கர்மங்களும் மேன்மையுடையனவாகுக. நம்முயற்சி ஒருகால் தவறினும் அது பயனளித்தற்குரியதேயாகும். கைத்தொழில்வியாபாரமுதலிய துறைகளில் நிகரற்ற அறிவும் அநுபவமும் வாய்ந்து, நமக்கு அநுகூலிகளாயுள்ள அந்நியரிடம் மதிப்பும் அபிமானமும்காட்டி, அவரையொட்டியும் நம்பெருமைகளை முற்படுத்த முயலவேண்டும். உலகவியலறியாத பலர் கருத்தில் அந்நிய நாட்டாரெல்லாம் அநாகரிகத்தன்மை வாய்ந்த மிலேச்சரென்னும் எண்ணம் சிலகாலமாக இருந்ததாயினும், இப்போது, அவர்கள் உலகியல்விஷயங்களில் பெரிது உயர்ந்தவரென்றும், அன்னாரிடமிருந்து நாம்கற்றுக்கொள்ளற் குரியவை எத்தனையோ உண்டென்றும் நம்மவர்மனதில் உதித்துவருகின்றன. ஆமுஷ்மிகவிஷயங்களில் அவரறிவு கடைப்பட்டதாயினும் ஐகிகத்தில் அன்னோர் உயர்வுகருதி,

"தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணில்
அவன்றுணையா யாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்"—(நாலடியார்.)

என்னும் முதுமொழிப்படி, நடந்துகொள்ளுதல் இன்றியமையாதது. வானசாஸ்திரத்தில் உலகத்தே ஒப்புயர்வற்று விளங்கியவரும் இற்றைக்கு 2000-வருஷங்களுக்கு முற்பட்டவருமான கர்க்காசாரியர்மேல்நாட்டு அறிஞரைப்பற்றிக் கூறுவதாவது:— "யவனர்கள் மிலேச்சர்களே; ஆனால் அவர்கட்குள்ளே இந்தசாஸ்திரம் (வானசாஸ்திரம்) அநுபவசித்தமாக நிலைபெற்றுள்ளது; ஆதலால் பிராமணஜோதிஷ்கரினும் அவர்கள் ருஷிகளாக மிகுதியும் மதிக்கப்படுகிறார்கள்" என்பது.* இதனால், முற்காலத்தில் அறிவுஅநுபவமிக்க மேல்நாட்டார்களை ஆரியமக்கள் எவ்வளவு மேலாக மானித்திருக்கிறார்களென்பது விளங்கும். இத்தகைய விரிந்தசிந்தனையும் தேசாபிமானமும் கொண்டு, "உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி னூக்கி, இடைக்கண் முரிந்தார் பலர்" என்றவாறில்லாமல், தளராத உறுதியுடன் நின்று நல்லறிஞர்கள் நம்மவர்க்குவழிகாட்ட முயல்வராயின் உலகமுழுதும் அவ்வழியையே பின்பற்றி நல்வாழ்வுபெறும் என்பதுதிண்ணம். நம் தமிழ்ச்சங்கஸ்தாபகர்களும், அதன் அக்கிராசனாதிபதியும், கல்வியும் செல்வமும் ஒருங்கேகைவினப்பெற்ற வள்ளலுமாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள், சுபாஷாபிவிர்த்திமட்டுமேயன்றி, நாட்டுத்தொழின் முயற்சிகளிலும் பெருநோக்கங்கொண்டு நம்மவர்க்கு வழிகாட்ட முன்வந்திருப்பது இத்தமிழகம் செய்த தவப்பேறேயாகும். இவர்களைப்போலவே, ஏனைப் பெரியோர்களும் பிறரும் தேசாபிவிர்த்தியிற் கவலை கொள்ள முற்படுவார்களாயின், அப்போது, பாரதக்ஷேத்திரம், உழவுதொழிலே வரைவுவாணிபம் வித்யா சிற்பமென்னும் ஷட்கர்மங்களும் நிரம்பிக் "கர்மபூமி" என்னும் பழம்பெயரோடு நிலைபெற்று விளங்கத் தடையென்னை? ஆதலால், அறிஞர்காள்! தென்னாட்டு ஞானபூர்ணரான பெரியார் திருவாய்மொழியால் உங்கட்குக் கூறிமுடிப்பதாவது:—

"வம்மின் புலவீர்! நும் மெய்வருந்திக் கைசெய்து உய்ம்மினோ"—

பத்திராசிரியர்.

(முற்றும்)

* Civilisation in Ancient India. Part—II, p. 120.

# தவம்புரியுஞ் சில ஜீவஜந்துக்கள்.

———:o:———

*உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை*
*யற்றே தவத்திற் குரு—திருக்குறள்.*

"ப்ரெய்ட்" என்னுமாங்கிலராலாக்கப்பெற்று, 1850-வது வருடம் வெளிப்போந்த "மானுடத்தவம்" என்னுமோர்கிரந்தத்தே இவ்விநோதக்கதை சொல்லப்பட்டிருக்கின்றது. 1837-ம் ஆண்டு, லாகூர் நகரத்தில் துறவியொருவனிருந்தானாம். ரஞ்ஜீத்ஸிங்கென்னுமரசர்க்கும், ஸர்-க்ளாட்வேட் என்னும் வெள்ளையர்க்கு மெதிரில், அத்துறவியை உயிரோடு ஒருபெட்டியிலிட்டுத் தாள்போட்டு பூமியிலோர் குழிதோண்டி, அதிற்பெட்டியைப்புதைத்துச் சிலர் அக்கல்லறைக்குக் காவல்காத்திருந்தார்களாம். இங்ஙனஞ் சிலமாதஞ் செல்லப் பின்பொருநாள், அரசருமாங்கிலரும், சவக்குழியைத் தோண்டிப்பெட்டியை வெளியிலெடுக்க ஆணையிட, அவ்வாணைக்கேற்பப் பெட்டியும் வெளிவர, அதையுடைத்து, அதனுட்சவம்போற்கிடக்குந்துறவியைத் தட்டியெழுப்ப, அவருமெதிரில் நிற்போர்க்கு ஆச்சரியமுண்டாகத் தம் தவத்தினின்று மெழுந்தாராம்.

ஜர்மானிய தேசத்தவரும், ஜீவாங்கசாஸ்திரத்து மகா நிபுணருமான மாக்ஸ் வெர்வோர்ன் என்பவர், ஐந்தாண்டுகட்கு முன் வெளியேற்றிய தமது புத்தகமொன்றில் பின்வரும் வியக்கத்தக்க சம்பவமொன்று விவரித்திருக்கின்றனர். வட இந்தியாவில் ஓர் ஊரில் ஆண்டிவேடம்பூண்டு அங்குமிங்குமலைந்து திரியுமொருவரிருந்தனர். அவரிருந்தகாலம் ஏறக்குறைய இருபதுவருடங்கட்குமுன். அவரைச்சுற்றிலுமுள்ளோர் அவர் யோகசாஸ்திரத்துக் கைதேர்ந்தவரென்றும், அன்னமின்றி வருஷக்கணக்காய்க் காலங்கழிக்க வல்லவரென்றுஞ் சொல்லிக்கொண்டார்கள். இதைக்கேட்ட ஐரோப்பியர் மூவர் அவரிடஞ்சென்று தாம்பார்க்கவந்த விஷயத்தை அவரிடம் விண்ணப்பஞ் செய்துகொள்ளத், தவசியும் அவர்கட்கிணங்கினவராய், "நீங்கள் விரும்பும் விஷயம் நானேசெய்து காட்டொணாது: எனது மாணாக்கருள் ஒருவனைச்செய்யச்சொல்லுகின்றேன்" என்று விடைபகரவே வெள்ளையர்கட்கு ஆச்சரியம்பெருகிற்று. உடனே யோகி தமது சிஷ்யருளொருவனையழைத்துப் படுக்கவைத்துச் சுவாசத்தையடக்கச்சொன்னார். வேடிக்கைபார்க்கப்போன மூவருள் ஒருவர் வைத்திய சாஸ்திரத்துத்தேர்ந்தவராதலால், மாணாக்கன் மார்பிற்கையைவைத்துப்பார்க்க, அவன் சுவாசம் நிறுத்திநிறுத்தி விடுவதையும், அவன் நாடிவரவர மெதுவாயடிப்பதையுங் கண்டார். ஐந்து நிமிஷமானதும் மாணாக்கன் பிணம்போற்கிடந்தான். பின்பு அவனையொருபெரும்பையிற்போட்டுக்கட்டி, ஓரறையில்வைத்து இரவும்பகலும் மாற்றிமாற்றிக் காவல்காத்து வந்தார்கள். இடையிடையே வைத்தியர் அப்பிணத்தை உருட்டியுருட்டிப் பார்ப்பார்; ஒன்றிற்கு மசைவதில்லை. இங்ஙனஞ் சிலநாட் சென்றன. பின்பொருதினம் ஆங்கிலர் யோகியையழைத்து மூட்டையையவிழ்த்துவிடும்படி கேட்டுக்கொண்டார்கள். யோகியும் அவ்வண்ணமேசெய்து, மாணாக்கன்காதில் ஏதோ மந்திரம் முணுமுணுத்தார். மாணாக்கனும் சிறிதுசிறிதாய்ச் சுவாசம் உள்வாங்கி வெளிவிட ஆரம்பித்தான்! நாடியும் மெல்லமெல்ல அடிக்க ஆரம்பித்தது. இரண்டுமூன்று நிமிஷமானதுந் தூக்கத்தினின்றெழுந்தவன்போல் மாணாக்கன் எழுந்துட்கார்ந்தான். வியப்படைந்தெதிரில் நின்று நோக்குமாங்கிலர்க்கு அவன்தேகஞ் சிறிது மெலிந்ததாகவே காணப்படவில்லை. ஒருவரையொருவர் ஏறிட்டுப் பார்த்து இவ்வதிசயத்துக்குக் காரணங்கண்டிலராய், யோகிக்குவந்தனமளித்து வந்தவழிபார்த்துத் திரும்பினார்கள்.



இச்சிறுகதையிரண்டையும் வாசித்தும் எமக்குண்டான ஆச்சரியமளவிடத்தக்கதன்று; ஆனால் அவை நம்பக்கூடியனவா? என்று வினவுவார்க்கு ஜர்மானியவிற்பன்னர் கொடுக்குமுத்தரமே தகுதியுடைத்து. இக்கதைகள் நம்பக்கூடியனவோ, அல்லவோ? இத்தகையதிறமை வாய்க்கக்கூடியதே. ஏனெனில், மனிதரினுங் கீழ்ப்பட்ட எத்தனையோ ஜீவராசிகளிடத்து இச்சக்தி மிகுதியு மிருப்பதாதலின். நம்மவர்களோ இக் கதைகளை உடனே நம்புவார்கள். இவ்வாறு அன்னஞ்சுவாசமின்றி நாட் கணக்காகவும், மாதக்கணக்காகவும், வருடக்கணக்காகவும் காலங்கழிக்கும் பலயோகிகள் நம் பரதகண்டத்துளர்

என்று அவர்கள் சொல்ல நாம் பன்முறையுங் கேட்டிருக்கின்றோம். மற்றெத்துணையோ விடயங்கள் மானுடரினுங் கீழ்ப்பட்டபிராணிகளிடமிருந்து அவர்கள் கற்றிருப்பதுபோல், இவ்வற்புததிறமும் அவற்றினிடமிருந்தே யோகிகளறிந்தார்களென்பது எமது கொள்கை. இதற்குதாரணமாகச் சில ஜீவப்பிராணிகள் தவஞ்செய்தலைப்பற்றிச் சில சொல்லுவோம்.

மாரிக்காலத்து இரவில் "க்ணங் க்ணங் க்ண க்ண" என்று பல்லவிபாடுந் தவளையை நம்மவரிற் பலருங் கண்டிருப்பார்கள். அதன் வயிறு பருத்துத் தலை சிறுத்திருக்கும்; கண்ணைப்பறிக்குமழகிய வர்ணந்தீட்டப்பட்டது; வெகுதுரிதமாய் மண்ணைப் பறிக்குங்கால்களுடையது. அது வாய்விட்டிடு மகோரமான சத்தம் ஆண்பெண்ணையழைக்கு மற்புதசங்கீதமாம். இரண்டங்குலமழையாவது பெய்தாற்றான் தரையின் கீழிருந்து மேல்வரும்;. மற்றையகாலங்களில் தரைமட்டத்திற்குக்கீழ் மூன்று நான்கடி தாழ்ந்திருக்கும் பாழில் வசிக்கும். தரையின்மேல் நான்குமாதமும் தரையின்கீழ் எட்டுமாதமுஞ் சாதாரணமாய்க் காலங்கழிக்கின்றது. மாரிக்காலத்து மழையேயில்லாவிடின், இவையுந்தரையின்மீது தலைகாட்டுவதில்லை. மாரிகாலத்துமாத்திரமே உண்பதும், ஆண் பெண் சேர்ந்து வாழ்வதும் குஞ்சுபொரிப்பதுமாம். கோடை முழுவதுந் தரையின்கீழ்க் காற்றன்னமின்றிக் கொடுந்தவம்புரியும். அவைசெய்யும் யோகம் பற்றியன்றே இந்திரனுமிரங்கி மழைபொழிகிறான். சிலவருடங்களில் மழையில்லாமற் போவதற்குக் காரணம் இத்தவளையின் யோகஞ் சற்றுக்குன்றியிருக்கவேண்டுமென்பதே யெமது அபிப்பிராயம்.

மாரிக்கால முழுவதும் பனிக்கட்டியால் மூடப்பட்ட உத்தரப் பிரதேசங்களிலுள்ள வெண்கரடி போன்ற சில பிராணிகள் அம்மாரிக்காலஞ் செல்லும் வரையில் மண்ணிற் குடையப்பட்ட பெரும் வளைகளுட் பதிந்து கிடக்கும். ஆதவனுக்கிரத்தால் சிறிதுஷ்ணம்பட்டுப் பனிக்கட்டிகளுடைந்து அவை நீங்கித் தரை கண்ணுக்குப் புலப்படவே, ஆறுஏழு மாதமாக யோகஞ் செய்துகொண்டிருந்த இப்பிராணிகள் மிகக் களிப்புடன் வெளிப்போம். மானுடயோகிகளோ தேஜோமயமான கடவுளைக் காணுதற் பொருட்டு யோகத்தி



றங்குகிறார்கள். இச்சில ஜந்துக்களோ தன்னொளியால் இருட்டை நீக்கி உலக முழுதையும் உற்சாகப்படுத்தும் சூரியனைக் காண்டற்குத் தரையின் கீழ்த்தவம் புரிகின்றன.

இங்ஙனமே எய்ப்பன்றியும், வௌவால்களிற் சிலவும் ஊண் சுவாசமின்றி வருடத்திற் சில மாதத்தை உறக்கத்திலேயே போக்கிவிடும். அக்காலத்து வௌவாலானது மலைக் குகைகளிலாவது, மரப்பொந்துகளிலாவது மறைந்திருக்கும். எய்ப்பன்றியும், மலைப்பாறையின் சிறுபொந்துகளிலும், மரத்து வேரடிகளிலும் பாரிகால முழுவதையுங் கழிக்கும். அப்போது அதனுறக்கத்தை யாரேனுங் கலைத்தால், பெருஞ் சுவாசமொன்று உள்வாங்கிப் பின்பு சலனமின்றி ஓய்ந்து கிடக்கும்; கோடை திரும்பவே தன்னுறக்கத்தினின்று வெளிவரும்.

நத்தை முதலிய அற்பப் பிராணிகளும் இவ்வதிசய சக்தியைக் கொண்டிருக்கின்றன. தமதுடம்பினின்றிழியுமோர் பொருளால் சிறு தட்டொன்று செய்து, அதனுதவியால், தங் கூட்டின் வாயை மூடிக்கொண்டு, கூட்டிற்குள் மோனத்திலிறங்கும். லண்டன் மாநகரத்தமைத்திருக்கும் பலபொருட் காட்சிச்சாலையில் நான்கு வருடகால மிவ்வாறு யோகத்திலிருந்த ஒரு பனிநத்தையைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அது கூட்டினின்று வெளிவந்த பிறகு இரண்டாண்டுவரை உயிரோடிருந்ததாம். இன்னணமே பூச்சிகள் யாவையும் கூட்டுப்புழு உருவாயிருக்கும் நிலையில், காற்று அன்னம் முதலியனவன்றிக் காலஞ் செலுத்துகின்றனவென்று "செந்தமிழ்" முற் பகுதியிற் சொல்லப்பட்டிருந்தது. சாதிக்குத்தக்கவாறு நாட் கணக்காகவும், மாதக்கணக்காகவும் அந்நிலையிலிருக்கும். மூன்றாண்டுமட்டுங் கூட்டுப்புழுவாயிருந்து பின்பு வெளிவந்தவன்றே முட்டையிட்டிறந்துபோம். ஒரு பூச்சிக்கு இது காரணம்பற்றி 'அற்பாயுளுள்ளது" என்னும் பெயரே யிடப்பட்டிருக்கிறது. அம்மூன்று வருடகாலமும் ஊணின்றிக் காற்றின்றித் தன்னை யறியாப்பெருந்தவத்திலிருக்கும்.

வேறு சில பிராணிகள் வருஷக்கணக்காக உறக்கங் கொள்ளும். இவற்றைப் பார்க்கப் பூதக்கண்ணாடி யுபயோகிக்கவேண்டும். ஆறு,

குளம், ஏரி இவற்றிலவை அபரிமிதமாயுண்டு. இவை அங்குமிங்கு மோடுவதற்கு ஏதுவாயிருப்பது இவற்றின் தலையின் கீழிருக்கும் சக்கரம் போன்ற ஓரங்கம். அவ்வுறுப்பு ஓயாது சுழலுவதால் இவற்றிற்கு "சக்கரக்கிருமிகள்" என்று பெயர். இச்சிறு பிராணிகளுட் சிலவற்றைப் பிடித்து ஒரு சமமான வெள்ளைக் கண்ணாடித் துண்டின்மேல் சிறிது தண்ணீரோடு வைத்துப் பூதக்கண்ணாடியால் நோக்கத், தண்ணீருள்ளளவுங் கண்ணாடியின்மேல் வெகு சுலபமாய் அங்குமிங்கு மோடும். தண்ணீர் சிறிது சிறிதாய் நீராவியாகமாறவே இவற்றின் சுறுசுறுப்பும் நிற்கத் தொடங்கும். கடைசியாய் நீர் முழுவது மறையவே இவை தஞ்சக்கரவங்கத்தை உள்ளிழுத்து, ஓடுதல் நின்று, உயிரிழந்த பிணம்போற் கிடக்கும். அவ்வமயத்து தம்மைச் சுற்றிக் கண்ணாடி போன்ற ஒரு பொருளால் கூடொன்று கட்டிக்கொண்டு அதனுள் வசிக்கும். கூட்டிலிருக்குங்கால் உண்ணுவதுமில்லை, சுவாசம் விடுவதுமில்லை; ஒரே உறக்கந்தான். இக்கூட்டிற்குள் மூன்று வருஷப்போதிருக்கும். சிற்சில சமயங்களில் இச்சிறு கூடுகள் ஆகாயத்தில் தூசிபோற் பறக்கும். பிறகு முன்போல் ஒரு கண்ணாடியின்மேல் வைத்துச் சிறிது தண்ணீரைச் சேர்த்துப் பூதக்கண்ணாடியால் பார்க்க, கூடுடைந்து இச்சிறு பிராணி வெகு சுறுசுறுப்பாய் வெளிவந்து, சிறையினின்று விடுபட்டவன்போல் ஆனந்தத்துடன் ஆடும். இவை இவ்வண்ணம் உயிர் காப்பாற்றிக் கொள்வதற்குக் காரணம் என்னை? ஆறு குளங்கள் மாதக்கணக்காய்த் தண்ணீர் வற்றிப்போகின்றமையால், அக்காலத்து இவை வேறு எவ்விதத்தால் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும்? சிறு கூடு கட்டி அதனுள் ஏரிகளில் தண்ணீர் வருமளவும் அபாயமின்றி வாழ்கின்றன. இவ்விதமே சில மீன்களும், அவற்றின் முட்டையும் கோடைக்காலத்தைச் செலுத்துதல் நம்மவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயமன்றோ?

(இன்னும் வரும்.)

வி. நரசிம்ம ஐயங்கார்.

---

௨

# பண்டித சங்கம்.

:O:

[எமக்கு, சுதேசவித்தியாபிவிர்த்திசங்கத்தார் அனுப்பியவிளம்பரமொன்றில், சென்னையில் பண்டிதசங்கமொன்று ஸ்தாபிக்கப்பெறும் விஷயத்தையும் அதனாலுண்டாகும் நன்மைகளையும் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இதன்விஷயமாகச் சென்னையிலுள்ள பிரபல புத்திமான்கள் சிரத்தை கொண்டுள்ளார்களென்று தெரிகிறது. இச்சங்கங் கூடுவதன் நோக்கம், அதில் எழுதப்பட்ட பின்வரும் விஷயங்களால் வெளியாம். பத்திராசிரியர்.]

## பண்டிதசங்கம் சேர்ப்பதன் கருத்தும் பயனும்.

"ஸங்கே ஶக்தி: கலௌ யுகே" என்று வசனமேற்பட்டிருப்பதால், கூட்டத்தாலேயே பல காரியங்கள் நடத்தப்படும் என்ற கருத்து நமது தேசத்திற்கு நூதனமல்லவென்று தெளிவாகிறது. பலவிதமான அசௌகரியங்களால் அந்தவழக்கம் இக்காலத்தில் மாறிப்போயிருக்கிறது. நாகரீகம்பெற்ற இதர தேசங்கள் பலவற்றில் பலவகைத் தொழிலாளிகளும் கூட்டங்கூடிப் பற்பல நன்மைகள் செய்துவருகிறார்கள். அவையாவன: 1-பொருள் சம்பாதிப்பது, 2- ஜனங்களுக்கு வேண்டிய உபகாரங்கள் செய்வது. 3-துரைத்தனத்தாரிடத்தில் விசேஷமான செல்வாக்குடையவர்களாய், அவர்களுடைய ஆதரவும் அபிமானமும் பெற்று, அதனால் அநேகம் காரியங்களைச் சாதிப்பது முதலியவைகளாம். இப்போது இத்தேசத்திலுள்ள முனிசிபாலிடிகளும், லோகல் பண்டு சபைகளும், யூனிவர்சிட்டி என்கிற கலாசாலைகளும், இருப்புப்பாதைச் சங்கங்களும் இப்படிப்பட்ட சங்கங்களேயன்றோ? இவை துரைத்தனத்தாருடைய அபிமானம்பெற்று, தத்தம் காரியங்களை ஒருவாறு செய்துவருகின்றன. மற்றும்பலதொழில் துறைகளிலும் இப்படியே சங்கம்கூட்டத் துரைத்தனத்தாருக்கு அவகாசமில்லாமையால் அவர்கள் உபேக்ஷையாயிருக்கிறார்கள். அங்கங்கே தேசத்தாரே சபை

கள் சேர்ந்து துரைத்தனத்தாருடைய உதவியைவேண்டினால், அவர்கள் தங்களாலான சகாயம் செய்வார்கள். தற்காலம் இச்சென்னையிலேயே 'டீச்சர்ஸ்கில்டு' என்கிற உபாத்தியாயர்சபையும் பிரதமவித்தியாப்யாஸ பாடசாலை உபாத்தியாயர் சபையும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனாலும் இச்சபைகளில் பண்டிதர்களுக்குச் சேர்ந்துகொள்ள வழியில்லை; தம்பிள்ளைகளின் படிப்பு சரியாக நடக்கிறதா வென்று விசாரிக்க ஆவல்கொள்ளும் பெற்றோர்களுக்கும்சேர்ந்துகொள்ளவழியில்லை.

பண்டிதர்கள் சபைகூடினால் பின்வரும் காரியங்களிலுள்ள குணதோஷங்களைக் கண்டறிந்து துரைத்தனத்தாருக்கு எடுத்துக்காட்டித் தேசத்திற்கு வேண்டிய நன்மைகள் செய்யலாம்.

1. இப்பொழுது ஐந்து (5) வருஷகாலத்தில் அரைகுறையாக நடத்திவருகிற பிரதம வித்யாப்யாஸத்தை இரண்டு மூன்று வருஷத்தில் இத்தேசத்து முறைப்படி பூர்ணமாகப் படிப்பிக்கலாம்.

2. காங்கிரெஸ் மஹாஸபையாரும், மாகாண ஸபையாரும், ஜில்லாஸபையாரும்,நாகரீகமுள்ள இதரதேசங்களிலிருப்பது போல் இத்தேசத்திலும் நிர்ப்பந்தப்படிப்பு அவசியம் வேண்டு மென்று விண்ணப்பம் செய்துகொண்டபடி ஸெக்ரிடெரி அவ்ஸ்டேட் ஆகிய மார்லி பிரபுவும், நமது கவர்னர் ஜனரலாகிய மிண்டோ பிரபுவும் இத்தேசத்திலுள்ள அறியாமையின் அளவைக்கண்டு விசாரப்பட்டு, அதுவிஷயத்தில்எவ்வளவுபணம்வேண்டுமானாலும் செலவழிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். படிப்பென்பது, பண்டிதர்களாலேயே முடியவேண்டிய காரியமாகையால், இப்படிப்பட்ட நல்லகாலத்தில் பண்டிதசங்கமேற்பட்டுப் பற்பல தொழில் துறைகளிலும் வித்தியாபிவிருத்தி செய்யவேண்டிய விஷயங்களை நன்கு ஆலோசித்து அதற்காகப் பொருட்செலவு செய்யவேண்டிய விதங்களைக் கண்டறிந்து துரைத்தனத்தாருக்குத்தெரிவித்தால்,தேசத்தில் வித்தியாபிவிருத்தியுண்டாக மிகவும் அனுகூலமாகுமே. இச்சென்னையில்மட்டும் நிர்ப்பந்தப்படிப்புக்கு லக்ஷம் ரூபா செலவாகுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வளவு செலவுசெய்தும் படிப்பிக்கும்படிப்பு எழுதப்படிக்கத்தெரிந்துகொள்வதற்கு, அதிகமில்லையே.



சுதேச வித்தியாபி விருத்தி சங்கத்தார், முன் பிரசுரம்செய்த பிரதம வித்யாப்யாஸ பத்திரிகையிலே எடுத்துக்காட்டிய குறைகளில் 1-பரீக்ஷை வேதனப்படிப்பு முறை—2-கட்டிட நிர்ப்பந்தம், 3-தாறுமாறான ஒழுங்கற்ற படிப்புமுறை இவைகள் நிவர்த்தியாகிவிட்டன. போதிக்கும் திறமையுள்ள நல்ல உபாத்தியாயர் இல்லாமையும்,படிக்க நல்ல புஸ்தகங்கள் இல்லாமையும் மாத்திரம்இன்னும் மாறவில்லை. நூதனமாக வேறு சில இடையூறுகளும் உற்பத்தியாயிருக்கின்றன.

3. த்விதீய வித்யாப்யாஸப் படிப்பில், பாஷையிலே சம்பந்தப்படாத விஷயங்களைத் தேச பாஷையிலேயே படிப்பிக்கவும் கூடும், கற்றுக்கொள்ளவும் கூடுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் பிரசுரம் செய்திருக்கிறபடியால், அதற்குத் தக்க புஸ்தகங்கள் இருக்குமிடங்களைக் கண்டறிந்து தெரிவிப்பதும், இல்லாத புஸ்தகங்களை நூதனமா யியற்றுவதும், அவைகளைத் தக்கபடி போதிப்பதும் பண்டிதர்களுடைய காரியமே யன்றோ? சுதேச வித்யாபி விருத்தி சங்கத்தார் ஏற்றுக்கொண்ட பல முயற்சிகளில் முக்கியமானது இதுவே. இதனை இந்தியா கவர்ன்மெண்டாரும் அங்கீகரித்து அப்படியே நடத்தும்படி அநுமதி கொடுத்திருக்கிறார்கள். பண்டிதர்களுடைய ஒற்றுமை யிருந்தால் இக்காரியம் சீக்கிரம் கைகூடித்தேசத்திற்கு நன்மையுண்டாக்குமல்லவா?

4. பாஷையில் சம்பந்தப்படாத விஷயங்களைத் தேசபாஷைகளிலேயே கற்பிக்கவேண்டுமென்று சுதேச வித்யாபி விருத்திசங்கத்தார் எடுத்துக்கொண்ட முயற்சி, இப்பொழுது வித்யாவிசாரணாதிகாரிகள் செய்திருக்கிற (எலிமெண்டெரி பாடசாலை, ஸெக்கெண்டெரி பாடசாலையென்கிற) பிரிவினையினால் ஈடேறத் தடையா யிருக்கிறது. சுதேச வித்யாபி விருத்தி சங்கத்தாருடைய கருத்தாவது, பாஷையில் சம்பந்தப்படாத பூகோளம், சரித்திரம், கணிதம் முதலானவைகளைத்தேச பாஷைகளிலேயே படிப்பித்தால்,சீக்கிரத்தில்சுலபமாய்த் தெளிவாகக் கற்றுக்கொள்ளக்கூடு மென்பதும், ஆங்கிலேய பாஷையில் விசேஷமான பாண்டித்தியம் சம்பாதித்துக்கொள்ளக்கூடுமென்பதும், இப்படி நாட்டுப்புறத்திலேயே பிள்ளைகள்கற்றுக்கொ

ள்ளக் கூடுமாகையால் அவர்கள் பட்டணம் வரவேண்டிய அவசிய மில்லை யென்பதுமேயாம்.

5. உயர்தரப் பாடசாலைகளில் சுதேசபாஷைப் படிப்பு முறைகளிலுள்ள குணதோஷங்களைக் கண்டறிந்து சீர்திருத்தப் பாடுபடலாம்.

6. சகல கலாசாலையார் செய்த நூதன ஏற்பாடுகளால் தேசபாஷைகளுக்குப் பலவிதமான குறைபாடுகள் நேர்ந்திருப்பதைக் கண்டு மதுரை, பாலக்காடு, தஞ்சாவூர் இவ்விடங்களிலுள்ள தமிழ்ச் சங்கத்தார் அவைகளைப் போக்கிக்கொள்ளச் சென்னை துரைத்தனத்தாருக்கு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். கலாசாலையாருடைய நூதன ஏற்பாடுகளில் குறைபாடுகள் உண்டென்பதைத் துரைத்தனத்தாரும் கண்டு, முதலில் கலாசாலையாருடைய கருத்தைத்தெரிந்துகொண்டு அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தமக்குத் தெரிவிக்கும்படி அவர்களுக்கு உத்தரமெழுதி யிருக்கிறார்கள். அதன் மேல் அவர்கள் செய்த காரியமின்னதென்று தெரியவில்லை. பண்டித ஸபைகள் அநேகம் ஏற்பட்டிருந்தால் அப்போதப்போது விண்ணப்பமெழுதி அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டுவேண்டிய ஏற்பாடுகள் செய்யக்கூடுமல்லவா?

7. பண்டிதர்கள் வெகுவாய்த் தனவந்தர்களாயில்லாமை பற்றிப் பணத்தால் தருமம் செய்யக்கூடாதவர்களாயிருப்பதால், அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களில் முயற்சியெடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் வித்தியாதானம் செய்த பெரிய தருமம் அவர்களுக்கு உண்டாகாதா?

8. என்னால் என்னகாரியம் முடியும், என்னால் என்ன காரியம் முடியும் என்று சொல்லி அநேகர் பின்வாங்குவார்கள். பல பேர் ஒன்றுகூடினால் செய்யக்கூடாதகாரியமும் ஒன்று உண்டோ? பல புற்கள் ஒன்று கூடிக் கயிறாகிப் பெரியயானைகளையும் கட்டிவிடுகின்றனவல்லவா?

---

# யாப்பருங்கலக்காரிகை.

யாப்பருங்கலக் காரிகை என்பது யாப்பருங்கலம் என்னும் யாப்பிலக்கணநூலை அநுசரித்தெழுந்த ஒருயாப்பிலக்கணநூலெனப் பொருள்படும். காரிகை என்பது பல்வகைப் பொருள்களைச் சில்வகை எழுத்துக்களாய சொற்றொடரிலே அடக்கி, யாவரும் பாடஞ் செய்தற்கு இயைபுடையதாகச் செய்யப்படும் பாட்டு எனப்பொருள்படும். காரிகா என்னும் வடமொழி காரிகை எனத் தற்பவமாயிற்று. காரிகை என்பதற்குக் கட்டளைக் கலித்துறை எனப் பொருள்கூறுவாருமுளர்.

இந் நூலாசிரியர், தம் நூற்கு யாப்புறவாக எடுத்துக்கொண்ட செய்யுளாகிய கட்டளைக் கலித்துறையிலே எல்லாப்பாகங்களையும் இலக்கணவிடயத்தால் முடித்தாரல்லர். பல பாகங்களை மகடூஉமுன்னிலையால் நிரப்பி முடித்தனர். இலக்கணவிடயம் கூறும் பாகமெல்லாம் சூத்திரம் என்றேசொல்லத்தகும் அத்துணைத்திட்பநுட்பங்கள் அமைந்திருக்கின்றன; ஆரியவியாகரணசூத்திரம் போன்று சுருங்கிய சொற்றொடராய் விளங்குகின்றன, உரைகூறுங்கால் பலவாகிய பொருள்கள் விரிந்து பரந்து வெகுதூரம் போகின்றன. இவ்வளவு சுருங்கக்கூறற்குக் கிரமாலங்காரமும் வேறுசூத்திரமுங்கொண்டு சொல்வருவிக்குமாறு உய்த்துணர வைத்தலும் பிறவும் இவர்க்குப் பெருந்துணையாயின.

இந்நூற்கு முன்னோர்சிலரியற்றிய உரைகளுள்ளே பலபாகங்களினுரை விடுத்துரைகூறற்கு இயைவுறாது விலக்கற்பாலனவாகத் தோன்றுகின்றன. பின்னோருரைகளும் கதாநுகதிகநியாயமாக முன்னோருரைகளின்வழியே சென்றன. அவற்றின்கண் எமக்குத் தோன்றும் ஆக்ஷேபங்களையும் உரைகளையும் உரைத்துக் காட்டுதும். அசங்கதங்களை விடுத்து விலக்குதல் அறிஞர் கடப்பாடு.

## க. தன்சீர் தனதோன்றிற் றன்றளையாம்.

இது, நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர்வெண்டளை, ஒன்றியவஞ்சித்தளை என்னும் நால்வகைத்தளைகளை

யும் விவரத்தோடு உரைகூறி அறியுமாறு சுருக்கிக் கூறிய ஒரு சூத்திரம். இப்பாகத்திற்கு முன்னெழுந்த சில உரையை முன்னர்க் கூறுதும்.

"தன்சீர் தனதொன்றிற்றன்றளையாம். எ - து. தன்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது தன்றளையாம். எ - று. எனவே, ஆசிரியவுரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடு நேரா யொன்றுவது நேரொன்றாசிரியத்தளையாம்; நிரையாயொன்றுவது நிரையொன்றாசிரியத்தளையாம். வெண்பாவுரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவதுவெண்சீர்வெண்டளையாம். வஞ்சியுரிச்சீர் நின்று தன்வருஞ்சீர்முதலசையோடொன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம். தணவாதவென்று மிகுத்துச்சொல்லிய அதனால் தன்சீர்நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடொன்றுவதூஉம் தன்றளையே சிறப்பின்றாயினும் எனக்கொள்க."

தணவாத என்பதுகொண்டு பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடொன்றுவது எங்ஙனம் பெறப்படும்? தணவாத என்பது தன்றளையாம் என முதல்விடயம் முடிந்தபின் அடுத்துவரும் வஞ்சியை விசேடித்து நின்ற அடைமொழியன்றோ? அது முதற்காவதெப்படி? சிறப்பில்லாத்தளையும் இவராற்கூறப்பட்டதோ? தன்சீர் எனக் கிளந்ததற்கும் தனது என உய்த்துணர வைத்தற்கும் பேதமில்லையா? தன் என்றது வெண்பா, அகவல், வஞ்சிப்பா என்னும் மூன்றினையுந் தனித்தனி குறித்து நின்றது என்றது எனவும், தனது என்பது சீரின் இறுதியசைகளைத் தனித்தனி சுட்டிநின்றது எனவும் கொண்டால் என்னை? ஒன்றின் என்பதனாற் குறித்துவருவது பெறப்படாதா?

"தனது தன்சீர்" எனஇயைத்துப் பொருள்கொள்வாருமுளர். அதுவும் பொருந்துமா? ஆறாவது அந்தத்திலும் வருமா? அந்தத்தில் வருவது உருபுபோலத்தோன்றினும் குறிப்புமுற்றே என்றார்கருத்தொடு முரணாதா? அவகாசம் வாய்ப்புழி இன்னும் வரும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

# ஓர் சாஸனம்.

கீழ்ப்பதிப்பிக்கும் சாஸனமானது, ஸ்ரீ: ஆண்டாள் கோயிலின் மணி மண்டபத்தும் மஹாமண்டபத்தும் தென்சுவர்களில்வரைந்துள்ளது. இச்சாஸனம் முற்றமுழுவதும் இந்நாச்சியார் பாசுரங்களின் பகுதிகளைச் சேர்த்து ஒரு முழுவாசகமாக்கியிருப்பதை யிட்டு அச்சிடப்படுகிறது. ஸ்ரீ:ஆண்டாள்கோயில் கர்ப்பக்கிரஹம் அர்த்தமண்டபம் மஹாமண்டபம் முதலியவைகள் சுந்தரத்தோளுடையார் மஹாவலிவாணாதிராயர் கட்டுவித்தனவென்று அவ்வவைகளில் கல் வெட்டப்பட்டிருக்கின்றன, இச்சிற்றரசன் சாஸனம்பல இக்கோயிலிலுள. அவற்றிலொன்று 1399-ம் சகவருஷத்தது. இதனால் இவன் தன் "குறையறுப்புக்காக" நாச்சியாருக்குச் சுந்தரத்தோள் நல்லூர் என்று தன் பெயரால் ஓர் கிராமம் விட்டானென்று தெரியவருகிறது. மற்றொன்று சக 1398ல் எழுதப்பட்டது. இதில் இவன் தாயார்பெயர் ஸ்ரீரங்கியார் என்றும் இவன் தகப்பனார்பெயர் திருமாலிருஞ்சோலைநின்றார் மாவலிவாணாதராயரென்றும் விளங்குகிறது.

ஸ்ரீ: ஆண்டாள்கோயிலுக்குப் புராதனமான விஷ்ணுவாலயமொன்றிருக்கிறது. இக்கோயிலிற் பள்ளிகொண்டிருக்கும் ஸ்வாமிக்கு வடபெருங்கோயிலுடையான் என்று பெயர். இக்கோயிலின் ஓர் பாகம் சிவாலயமாயிருந்திருக்கவேண்டுமென்பது பலர்களுடைய சங்கை. ஆயின், ஆதாரங்கள் வெகுவாய்க்கிடைத்தில. மஹாமண்டபத்தின் தென்கிழக்குமூலையிலிருக்கும் வட்டெழுத்துச் சாஸனமொன்றில் "மல்லிநாட்டு ப்ரஹ்மதேயம் வில்லிபுத்தூர் ஸபாவ்யோமும் ஊரோங்கூட்டஞ்சாற்றிக் கூட்டக்குறைவின்றித் திருக்கற்றளி மஹாதேவர் கோயிலிற் கூடியிருந்து இவ்வூர் ஜயஸ்தம்பத்துக்கிடந்தருளின பரமஸ்வாமிக்குமிவ்வூர் ஸ்ரீஸபாநகர்க்கும் ........" என்று கூறியிருக்கிறது. இக்கோயிலின் கர்ப்பக்கிரஹத்து வடபுறத்திலோர்சாஸனம், "இக்கோயில் புறச்சாறணையாயிருந்தமையில்" அதைப்பலப்படுத்த எடுத்தகட்டிடங்களில் மறைந்துபோன சில சாஸனங்களை மேற்கூறிய அவ்விடத்து எடுத்தெழுதப்பட்டனவென்று கூறுகிறது. சிவாலய

த்தைப்புதுக்கட்டிடத்தால் மறைத்திருக்கிறார்கள் என்பது இப்புறச் சாறணையாயிருந்தவிடமாகவேண்டும். இதில் இப்பொழுது பிற்காலத்து எழுந்தருளுவிக்கப்பட்ட நாரசிம்மமூர்த்தி ஒருவர் எழுந்தருளியிருக்கிறார். பரஸ்லாலயமும் இக்கோயிலிற்றானிருந்ததோ இல்லையோவென்பது இப்பொழுது சொல்லமுடியவில்லை.

இக்கோயிலின் கீழ்புறம் உன்னதமான கோபுரம் ஒன்றிருக்கிறது. இது பாண்டியர்கள் திருப்பணி. மீனலாஞ்சனத்தால் அறியத்தக்கது. இதை அடியில்வருமாறு ஒருகவி வருணிக்கிறார். இவ்வர்ணனை அக்கோபுரத்தின் தென்னிலைக்காலில் பொறித்துளது :—

"இருக்கோதுமந்தணர்சூழ் புதுவாபுரியெங்கள்பிரான்
மருக்கோதைவாழும்வடபெருங்கோயில்மணிவண்ணனார்
திருக்கோபுரத்துக்கிணையம்பொன்மேருச்சிகரமென்றே
பருக்கோதலாமன்றிவேறுபமானப்பணிப்பில்லையே."

---

## சாஸநம்.

1. ஸ்வஸ்தி பெத்ரவொக்ர நிஜ-ஹாண த்ராணஸம்ஹாரகாரண: ஸ்ரீரங்க ஸ்ரீ ராமநாயஸ்ய ஸாஸநம் ஸாஸ்வதம் பரம்:। பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவையர்கோன் விஷ்ணுசித்தன் கோதை (1) க்கு நாம் வரக்காட்டின புண்யபத்ரிகை; பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்முனிவர்களும் பரந்தநாடுஞ் சித்தர்களுந்தொழுதிறைஞ்ச திசைவிளக்காய் நிற்கின்ற (2) நல்லார்கள்வாழுஸ்ரீரங்கப்பெருநகருள் (3) நம்வீட்டில் சேரனைவென்றான் மண்டபத்து சுந்தரபாண்டியன் பந்தற்கீழ் அரியராயன் கட்டிலில் இருந்து உம்பரும் தும்புரு நாரதரும் வந்து முகங்காட்ட அவர்களுக்கு அழகோலக்கம் குடுத்து இருக்கச்செய்தே நம் வீட்டில் குடவர் கோவணவர் பூவிடுவார் தழையிடுவார். தண்ணீர்சுமப்பார் தண்டெடுப்பார் அணுக்கர் கணக்கர் மற்றும் நம் காரியத்துக்குக்கடவார்.

(1) நாச்சியார் திருமொழியில் 2-ம் திருமொழி 10-ம் பாட்டு.
(2) பெரியாழ்வார் திருமொழியில் 4-ம்பத்து 9-ம் திருமொழி 10-ம் [பாட்டு.
(3) நாச்சியரர் திருமொழியில் 11-ம் திருமொழி 5-ம்பாட்டு.



2. எல்லாரும் வந்து நம்கோதைவீட்டில் நின்றும் சுவடிகள் குடவர் கோவணர் தண்டெடுப்பார் இராமானுஜஉடையார் வந்தார்களென்று சொல்லி நாமும் ஸ[ஹு] பரிகாரமும் அனைத்துக்கொத்துள்ளாரையும் எதிரேபோகவிட்டு தம் வீட்டில் உள்ளாரையும் கூட்டிவந்து காண்பித்துக்கொள்ளும் அடைவிலே காண்பித்துக்கொண்டு, தாம் வரக்காட்டின ஸம்மாநமும் (4) ஸ்வீகரிக்கும் அடைவிலே ஸ்வீகரித்தோம்; தாம் வரக்காட்டின ஸாஸ[ன] (5) மும் வாசித்துக்காட்ட அறிந்துகொண்டோம்; தாம் சொல்லிவரக்காட்டினபடி ஆவது:— நாம், பதினாறுமாயிரவர் தேவிமாருடனே (6) பெரியமண்டபத்திலே வீற்றிருந்தோம் என்று, தம் சுற்றத்துத்தோழிமார் (7) தமக்குச்சொல்ல அப்பொழுது, தாம் புண்ணிற்புளிப்பெய்தாப்போலவும் (8) வேலாற்றன்னம் பெய்தாப்போலவும், (9) நெஞ்சூடு:—

3. நிலைமையுந்தளர்ந்து, (10) கொள்ளும் பயனொன்றில்லாக்கொங்கைதன்னைக் கிழங்கோடும் அள்ளிப் பறித்திட்டவன் மார்பிலெறிந்தென்னழலைக் காவேனென்று, (11) உள்ளே யுருகிநைந்து, (12) தாம் நம்மைப் பொருத்தமிலியென்றும் புறம்போல உள்ளுங்கரியான், பெண்ணின் வருத்தமறியாத பெருமான் (13) வஞ்சக்கள்வன், மாமாயன், பாம்பணையாற்குந் தம்பாம்புபோல நாவு இரண்டுளவாயநாணிலி (14) யென்றும் தாய்சொல்லிவரக்காட்டினது, தாம் மாமிமார் மக்களாகையாலும் (15) நாம் மாமன்மார்மக்களாகையாலும் (16) நந்திறத்

(4) திருப்பாவை, பாட்டு 27.
(5) இவ்வெழுத்து வரிபிளந்தெழுதப்பட்டுள்ளது.
(6) நாச்சியார் திருமொழி ; 8-ம் திருமொழி, பாட்டு 8.
(7) திருப்பாவை, பாட்டு 11.
(8) நாச்சியார்திருமொழி, 13 திருமொழி. பா 1.
(9) ௸ ௸ ௸ பா 2.
(10) நாச்சியார் திருமொழி. 13 திருமொழி. பா. 3
(11) ௸ ௸ ௸ பா. 8
(12) ௸ ௸ ௸ பா. 8
(13) ௸ ௸ ௸ பா. 1
(14) ௸ ௸ 10 திருமொழி பா. 3
(15) ௸ ௸ 3, க்கு பா 8.
(16) 2 ம் திருமொழி பா. 1. திருப்பாவைப்பா 9.

தூடல்கண்டு(17)வப்பவேண்டிச் சொன்னதாயிருக்கும்; நாமுப் பத்து மூவாயிரமார்க்கு முன்சென்று கப்பம்தவிர்ப்பது(18) காரியம்ஆகவும் ஜெவாஹஸ்ரம் ஆகவும் பெரியமண்டபத்திலே இருந்தோம். தாம் மணவாளர்வைத்த பரிசிலே இருந்தோம் என்றும், நாங்களெம்மி லிருந்தோட்டியகைச்சங்கம் நானுமவனும் அறிந்தும் (19) என்றும் பாசிதூர்த்துக் கிடந்தபார்—

4. மகட்குப்பண்டொருநாள் மாசுடம்பில் நீர்வார மானமிலாப்பன் றியான தேசுடைதேவர் திருவரங்கச்செல்வனார் பேசியிருப்பனகள் பேற்கவும் பேராது(20)என்றும், திண்ணார்ந்திருந்தசிசுபாலன் தேசழிந் த அண்ணாந்திருக்கவே யாங்கவனைக்கைப்பிடித்த பெண்ணாளன் (21) என்றும், செம்மையுடைய திருவரங்கரென்றும் (22)சொன்னபடியே நாம் தம்மை யல்லது வேண்டுவது இல்லை தம் வீட்டில் உள்ளவர்க ளைத் தாட்க நிறுத்தி நில்லாமல் வரக்காட்டச் சொன்னபடியே அவர்களுக்கு வேண்டு[ம்] ஸத்காரங்களும் செய்து தமக்கு நாம் ஏறும்பல்லக்கும், நாம் இருக்குங் குடையும், நாம் பூணும்கண்ட மாலை ஆபரணங்களும், பட்டுப்பருத்தி, ஸுகந்தத்திரவ்யங்களும் வேண்டுமதுங்குடுத்து தமக்கு அடுக்களைப்புறம்ஆக நமக்கு வ-ஙவ-ழ நடந்துவருகிறசீர்மையில் விட்ட ஶகாப்தம் ௲௩௱௰௫ன் மேல் செல்லாநின்ற ஸ்ரீமுக வருஷம்மீனஞாயற்று வ-ஙவ-ழவக்ஷத்துவனகா ஊமியும் வெள்ளிவாரமும் பெற்ற உத்தி[ர]த்துநாள் உறங்காவில்லி தா[ஸ]ு ஆன ஶோவலிவாணதராயர்23சீர்மை ஆனமதுரைமண்ட லத்து முட்டநாட்டு திடியன்ஆன திருவரங்கநல்லூ[ர்]ற்கு எல்லை ஆவது மேல் எல்லைபுத்து[ர்]மலைக்கும் வயிரன்பற்[று]க்கும் கிழக்கு

(17) ஷை 4-ம் திருமொழி பா 11
(18) திருப்பாவை பா 20.
(19) நாச்சியார் திருமொழி 5. பா. 8.
(20) நாச்சியார் திருமொழி; 11 ம் திருமொழி; பா 8.
(21) ஷை ஷை ஷை பா. 9.
(22) ஷை ஷை ஷை பா. 10.
(23) வாணதராயர்.



வடவெல்லை வாராந்தூர்பற்றுக்கு தெற்கு கீழ் எல்லைக்கு மாத்தூரில் குளத்துக்கு மேற்கு தென் எல்லை புளியஞ்சோலைக்கும் குத்துக்கல் லுக்கும் வடக்கு ஆக இன்னான்கெல்லைக்கு உட்பட்ட மாவடைமர வடை பட்டடைபதிமுதல் மற்றும் ஏற்பட்ட ஸகலஸ்வாம்யங்களும் கைக்கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளவும். இப் படிக்குத்திருவாய்மொழிந்தருளினமைக்குஅருளால் திருமந்திரஓலை நாயகம் ஸ்ரீராமனுதை 24 வ்யயநு எழுத்து.

து. அ. கோபிநாதராவ்,

# பொன் தோண்டி எறும்புகள்.

இவ்வாராய்ச்சி பழஞ்சரிதங்களுக்கோர் துணையின்றெனினும் நமது "செந்தமிழ்" ப்பத்திரிகையில் வெளிப்போந்தமட்டுக்கும் இத னுண்மை இவ்வளவிற்றென்பதை அறவிசாரித்து அதன் முடிவைக் கூறின் மற்றவரும் தத்தம் கருத்துக்களை வெளியிடுவர். அப்பால் அக்காரியம் நன்கு விளக்கமாகி அதனுண்மையும் எளிதிற் புலப்படு மென்ற முழுநோக்கங் கொண்டெழுதலாயிற்று.

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின்"—அறிதற்கருங்காரிய முளதோ ?

"செந்தமிழ்" நான்காந்தொகுதி ௯௱-வது பக்கத்தில் ஸ்ரீமத்- R. அரங்காசாரியரவர்கள், இக்கதைகளினுண்மை யின்மையுதன்று கண்டுரைத்தற்குத் தக்கசான்று கிடைத்தில. அவ்வெறும்புகளோ தற்காலத்தேஇலவாயின. அவற்றைப் பற்றிய விஷயங்களும் வட மொழி தென்மொழி நூல்கள் ஒன்றிலேனுங் கிடையாவெனக் கூறு கிறார்.

ஊர்வபதிஜென்றில் தோன்றிமறைவன அபூர்வம். இவ்வெ றும்புகளைக் குறித்தகதைகள் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னர் மட்டு

(24) ஸ்ரீராமநாய.

மல்ல. பின்னரும் பதினாறும் நூற்றாண்டு வரை அரபியர், துருக்கியர்களுக்குள் பெருவழக்காயிருந்தன. பூர்வசரிதவாராய்ச்சியரும் இவ்வெறும்புகளைக்குறித்த சரிதங்கள் யாவு முண்மையன வென்றனர். ஆயினும் அவருள்ளே "ஸற்றிராபோ" என்பவர், இவை கட்டுரைகளெனவும், "ஆல்பெர்ட்டுஸ் மாக்னுஸ்" என்பவர் இவ்வெறும்புகளைக் கண்ணாரக்கண்டவர் யாருமிலரெனவுங் கூறியுளர். இருந்து மென்னை? பூர்வகொள்கையே கொள்கையாயிற்று. 18-ம் நூற்றாண்டில் "லார்ச்சர்" என்பவரும் 1788-ல் "மேஜர் ஜேம்ஸ் ரென்னெல்" என்பவரும் இவற்றின் உண்மையைச் சாதித்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் எறும்புகள் குழிநரிமுதலிய மிருகங்களிலொன்றன் ஜாதியாயிருந்திருக்கலாமென்பது வதந்தியாயிற்று. மகாபாரதத்தில் யுதிஷ்டிர மகாராஜாவுக்கு வடபாலுள்ளதேயத்தினின்றுங் கொண்டுவரப்பட்ட காணிக்கைகளில் "பிபீலிகை" என்னும் எறும்புகளாற் கூட்டப்பட்டமையின் "பைபீலிகா" வெனப்பெயரிய தங்கமுமெனக்கூறப்பட்டுள்ளமையின் இவ்வதந்தியு மொழியலானது. இந்தியாவின் நாகரிகஜாதிகளின் பெயர்களில் "எறும்பு" எனும் பெயரையுடைய ஓர்ஜாதியாரிருந்திருக்கலாம்; அவர்களே இப்பொன்தோண்டி யெறும்புகளென்பீவர் என்றூர்—1819-ல் "மால்ட்டி-பிரன்" என்பார்.

இது நிற்க, பொன்கவரச் செல்பவர் "காஸ்பாட்டிரஸ்" "பாக்டீக்" எனும் நகரங்களை யடுத்துளாரென "ஹெரொடோட்டஸ்" கூறியிருக்கிறூர்.

"கோடெக்ஸ் சாங்கிராப்பட்டியானுஸ்" "ஸ்றெபானுஸ் பைஸான்றினுஸ்" ஆகிய நூல்களில் இக்"காஸ்பாட்டிரஸ்" எனும் பதம் "காஸ்பாபிரஸ்" என்பதாகக் காணப்படுவதாகவும், அது "காசியப்பபுரம்" அல்லது "காசியபுரம்" எனும் காஷ்மீரதேயத்தின் நகரென்பதாகவும்; கிறிஸ்தாப்தத்திற்கு முன் 5-ம் நூற்றாண்டில் பாரஸீகராட்சிக்குட்பட்ட பஞ்சாப்தேசத்தின் ஓர் மாகாணத்தினின்றும் மற்றைய மாகாணங்களைவிட அநேகந்திரளான அரசிறை'டேரியஸ் ஹிஸ்டாஸ்பிஸ்" எனுமரசனுக்குச்செலுத்தியதாகவும் அம்மாகாணத்தைச்சேர்ந்த நகரமே"காஸ்பாட்டிரஸ்"என்றும், சிந்துநதியின் கடற்



சங்கமம்யாது தூரமெனவறியுமாறு "ஸ்கைலாக்ஸ்" என்பவன் இந்நகரினின்றும் நதியின் மார்க்கம் புறப்பட்டான்; என்றும் கூறுவர். இப்பெயரையே "டாலமி" யென்பவர் 'காஸ்பெய்ரா' வென்றதும், அபூரிஹான் "காசியப்பபுரமென்றதும். இதுவே மூல்தானுக்குப் பூர்வத்தில் வழங்கியபெயரென்றும் தெரிகிறது. காஷ்மீரதேசத்திய சிக்கியர் 'திபேத்' தைக்கைப்பற்றப்பலமுறை முயன்றனர். பஞ்சாப்தேசத்தினின்றும் "காக்கர்" எனும் ஜாதியார் 'திபேத்'தைக் கைப்பற்றிப் பத்துத்தலைமுறையாண்டபின் காஷ்மீரத்தை ஜெயித்துப் பதினாறுதலைமுறை யாண்டதாகவும், யுதிஷ்டிர மகாராஜாவுக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்ட பொன்னுடன் தேனுஞ் சாமரமுங் குறிக்கப்பட்டுள்ளன என்றும், இவை கொணர்ந்தவரான "காசர்" அல்லது'காசியர்'என்பார், "காக்க"ராயிருக்கலாமோ வெனச் சந்தேகிக்கக்கூடியதாகவுந் தெரிகின்றன. இவை யெவ்வாறாயினும் சாமரம் "திபேத்" "யாக்" எனும் எருமையின் வாலினின்றுஞ் செய்யப்படுவது. இச்சாமரங் கொணர்ந்தவரே பொன்னுங்கொணர்ந்தவராவர். ஆகையினால் இப்பொன்னுந் 'திபேத்'தில் விளைவதாகவே கொள்ளலாம்.

இப்பால் 1865, 67, 68- இவ்வாண்டுகளில் திபேத்தேயத்தினுளவறியச் சிலபிராமணபண்டிதர் சர்க்காரால் அனுப்பப்பட, அவர்கள் கண்டுங் கேட்டுந் தெரிந்தவைகளை "மேஜர் மண்ட்காமரி" என்பவர் வெளியிட்டிருக்கிறூர். இப்பண்டிதர்கள் அத்தேயத்தைச்சுற்றியேறக்குறைய முழுவதும் பார்த்துவந்ததுடன் பொன்விளையுமிடங்களாகிய 'தொக்ஜலுங்' முதலிய விடங்களையும் கவனித்தவராவர். ஒருவர் ஆவணிமீ இவ்விடத்திற்றங்க நேர்ந்தவமயம் குளிரினாற்பட்ட அவஸ்தையே அவஸ்தை யென்றும், அவ்விடமானது கடல்மட்டத்தினின்றும் 16,330 அடி உயரியதென்றும், குளிர்காலங்களிற் சுரங்கவேலையாட்கள் மிருதுவான மயிர் நிறைந்துள்ள எருமையின் தோலை அங்கமுழுவது மணிந்து கொள்வரென்றுங் கூறுகிறூர். ஆவணிமீயேயவ்வளவு குளிரானாற் கார்காலத்துக்குளிரெவ்வளவிருக்குமென வியம்பவேண்டாததன்றே. ஐரோப்பா கண்டத்திலுள்ள நார்வே ஸ்வேதக தேயவடபாலுள்ள 'லாப்லாண்டர்' என்னும்சாதியார் குளிருக்காக அத்தேயயான்றோலைப் பாதாதிகேசம் வரை அணிந்

துகொள்வர். அத்தோடுடன் கண்ணுற்ற "ற்றோர்னியஸ்(Tornaeus) என்பவர், இவை மான்கள் தானோவென ஐயுற்றதாகக் கூறுகின்றனர். அங்ஙனமே இச்சுரங்கவேலையாட்களும் தோல்போர்த்திருப்பதுடன் அவர் நடை பாவனைகளையுங்கண்ட ஆரியர் இவர்களையும் மிருகக்குழாங்களிலொன்றெனக் கூறியிருந்திருக்கலாமெனல் தகுதியுடைத்தே. இவர்கள் மூக்குதட்டையினுந்தட்டை. வாலில்லாக்குரங்கின் அம்சமுற்ற முழுவது மிவர்களுக்குப் பொருந்தி யிருக்கின்றனவென்று 'Pallas' (பல்லாஸ்) என்னுமாசிரியர் கூறுகிறார். அன்றியும் ஒருவரையொருவர் சந்தித்தளவளாவுதல்-தலையசைப்பது நாநீட்டல் பல்இளித்தல் காது சுரண்டலாம். நித்திரைசெய்யும் விதம் விந்தை. குந்தி முழங்கால்களையுயர்த்தி அதன்மேல் தலைவைத்துத் தூங்குவர். இவ்வண்ணம் மயிர்த்தோலையும் போர்த்துக்கொண்டு தூங்கும் ஒருநூறு பெயர்களைக் கண்டவர் இவர்களை மானிடரென் றேனுஞ் சொல்லக்கூடியதோ? ஆயின் இவர்களையெறும்புகளென்று கூறற்குக்காரணமென்னையென்பது விசாரிக்கற்பாலது.

இவ்வெறும்புகள் வளைகளைத்தம்மிருப்பிடமாகக் கொண்டுவாழ்கின்றனவென்று 'ஹெறொடோட்டஸ்' கூறுகிறார் 'மெகாஸ்தனிஸ்' என்பவர் இந்தியாவைப்பற்றி யெழுதிய சரித்ங்கள் முற்றுங் கிடைத்திலவெனினும், ஆங்காங்கு எஞ்சியவையுஞ் சிதறுண்டிருப்பதில் 'ஸ்ற்றிராபோ' என்பவர் இவ்வெறும்புகள் குளிர்காலத்திற்றான் மண்தோண்டியங்கே குவிக்கின்றனவென்றும் 'பிளைனி' என்பவர் இவ்வெறும்புகள் குளிர்காலத்திற் சேர்த்துவைக்கும் பொன்னை இந்தியர் கோடைகாலத்திற் கவர்ந்து செல்கின்றனரென்றும் கூறுகின்றனர். அன்றியு மிவ்வெறும்புகளுக்குக் கொம்புகளுமுளவென்கின்றார்.

சர்க்காரால் அனுப்பப்பட்ட பண்டிதரில் ஒருவர்பொன்விளைதலங்கள் மிகவுமுயர்ந்தனவாகலானும் அதிககோரமான பனிக்காற்றுவீசுவதனாலுண்டாகுங் கொடிய குளிரினாலும் சுரங்க வேலைக்காரர் "யாக்" எனும் எருமைத்தோலினாற் செய்யப்பட்ட கூடாரங்களை பூமியின்கீழ் 8-10அடிவரை தோண்டி யவண் நட்டுச் சுற்றிலும் மண்ணைகுவித்துக்கொள்வது வழக்கமென்கிறார். குளிர் அதிகமாயிருந்தபோதிலும் அக்காலத்திற்றான் நிலம் இறுகி வெகு ஆழந்தோண்டி



னும் இடிந்துவிழாவண்ணம் இருப்பதினால் கோடைகாலத்தில் வெகு சொற்பமாக வேலைசெய்து குளிர்காலத்தில் வேண்டியமட்டும் ஆட்கள்சேர்ந்து அதிகமான வேலைசெய்வது வழக்கமென்று மற்றொரு பண்டிதர் கூறுகிறார்.

இன்னும் திபேத்தியரிடம் ஒருவகை நாய்களுண்டு. அவை கழுதையவ்வளவு பெரியனவென்கிறார். "மார்க்கோபோலோ"என்பவரும் மீர் இஸ்ஸெ உல்லா என்பவரும் இந்துஸ்தான்நாய்களைவிட இந்நாய்கள் இரண்டத்தனை பாரியன, பாரியதலை நீளியஉரோமம் அதிகபலம் மிகு தைரியமுடையன, சிங்கத்தை யெதிர்க்கவல்ல பலமுடையனவென்றுங் கூறுகிறார்.

ஒருகாலத்தில் உவில்லியம் ராபின்சின்(Willam Robinsin, Inspector of schools in Assam) என்பவர் குமாரி திபேத்தியரைக்காண நேர்ந்தது. அவர்கள் "காமரூபம்" என்ற அஸாமுக்கு வந்திருந்தபொழுது "யாக்" என்னுமெருமைத்தோலைக் கொம்புகளுடன் போர்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் இவை யேதோ ஓர்வகைமிருகங்களென ஐயுற்றுப்பின் விசாரித்துத் திபேத்தியரென வறிந்ததாக அந்த அம்மாள் (prof) ஷியெர்ன் என்பவரிடம் கூறியதில் அம்மேதாவியர் "பொன்தோண்டி யெறும்புகள்" எனக்கூறப்பட்டவர் பொன்தோண்டி திபேத்தியர்தாம்: அவர்களை யெறும்புகளென்று சொல்லவேண்டியதன்காரணம் மண்ணைத்தோண்டிக்குளிருக்காகத் தம் கூடாரங்களைச் சுற்றிக்குவித்துக் கொள்வதனாலாகுமெனக் கூறுகின்றார். பொன்கவரச் செல்பவரைத்தாக்குவது அவர்களிடமுள்ள நாய்களே. எறும்புகள் அவ்வளவு வேகமாயோடி மனிதரைத்தாக்கிக் கொல்வதென்றால் நம்ப மார்க்கமில்லை. ஆகவே, சுரங்கவேலைக்காரர்தாம் பொன்எறும்புகள் என்பதை ஒருவாறுநிச்சயிக்கலாம்.

ஞானதிக்கபச்சாது

திருச்சிற்றம்பலம்.

# தணிகைப்புராண அரும்பதவுரை

## கடவுள் வாழ்த்து.

(௪) ஒங்குஒளியாய்- பரஞ்சோதியாய். விசும்பாதி - ஆகாயம் முதலியபஞ்சபூதங்கள். தனது இயல்பை-தமது (சொயம்பிரகாசசத்திச்)சுபாவத்தை. உரு-தூலபூதங்கள்.தெளிநீர்-கங்கையும்,சரவணவாவியும். வாழ்வையுடையபொருள்,"வாழ்வு"என்றுபசரிக்கப்பட்டது.

(௫) இறை - இறைமைத்தொழில். முறை - செல்லும்முறை; ஒளிவிடுகிறமுறை யெனக் கூறுவாருமுளர். நளினம்-வெண்டாமரை. இடமும்வலமும் என்னும் உம்மைகள் தொக்கன.

(௬), கள் அகம் தளித்த மலர்த்தலைச்சேக்கும் கடவுள் நாரணன் முதல்-தேனை து உண்ணின்று துளித்தலையுடைய தாமரைமலரின் கட்டங்கும் - நான்முகக்கடவுள் நாரணக்கடவுள் முதலிய, வானோர் உள் அகம்தழும்ப-தேவர்களுடைய உள்ளங்கள் தழும்பேற, மலர்ப்பதம் அமைத்திட்டு-மலர்போலும் திருவடிகளை அமையச்செய்து, உடல்எல்லாம்தழும்ப-அவர்களுடல்முழுதுந் தழும்பேற,திண்-வலிய.

* இத்தணிகைப் புராண உரையைக் குறித்து யான் 'செந்தமிழ்' எ-ம் [?] பத்திரிகையிற் றெரித்துள்ளேன். இவ்வுரையை 'செந்தமிழ்' மூலம் வெளியிடுவதிற் கல்வியிற்பெரியரும், செந்தமிழ்ப் பத்திராசிரியருமாகிய ஸ்ரீமத் ரா. இராகவையங்கார் அவர்கள் தம் நல்லபிப்பிராயத்தை அவ்வுரைமுடிவிடத்தின்கீழ், குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் குறிப்பிட்டன முற்றுமுண்மையே. முன்னேறியே என்னுள்ளக்கிடக்கையுமது;எனினும் இவ்வுரையை எவ்வாற்றானே வெளியிடுவதன்முன், பத்திராசிரியரவர்கள் விடுத்தலிகிதப்படி, தணிகைப்புராண அரும்பதவுரையைத் தொடர்ந்தெழுத அவாவுகின்றேன். இதனினும் செந்தமிழ்க்கவிஞர் கருத்து யாதாகுமோவெனப்பெரிதுமஞ்சுகின்றேன். இவ்வுரையை எழுதுவதில் எமது தமிழாசிரியரும்மஹாவித்துவானுமாகிய ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் செய்துவரும் பரோபகாரம் என்றும் மறக்கற்பாலதன்று.



வள்ளல் அம்கமலம் தனிக்கரவேத்திர மமைத்தவரதனை-வள்ளற்றன்மைபொருந்திய அழகிய தாமரைமலரை நிகர்த்த ஒப்பற்றதிருக்கரத்திற்றாங்கிய பிரம்பை யமையச்செய்த மேலானவரை, ஈற்றை வெண்கதிர்கால்- கூட்டமாகிய வெள்ளொளி வீசாநின்ற, வெள்ளி அம்கயிலை காவல்பூண்டருளும் வீரனை- வெள்ளியங் கயிலாயகிரியைக் காக்கும் திருத்தொண்டு பூண்டருளும் வீரராகிய திருநந்திதேவரை, வார்கழல் பணிவாம்- நெடியதிருவடிகளின்கண் வணங்குவாம்.

அம்-சாரியை யெனினுமமையும். சாம்பவிதீக்கையாகிய திருவடித்தீக்கை செய்தமையால் உள் அகம்தழும்ப மலர்ப்பதமமைத்திட்டென்றும், பிரம்பாலடித்து நிரைபெறச் செய்தலால், உடலெலாந் தழும்பக் கரவேத்திரமமைத்தவரதனை என்றுங் கூறினார். கரவேத்திரமமைத்தல் பரிசதீக்கையெனினுமாம். 'முதலையையுறிற் சினையைக் கண்ணுறும்' என்பதோத்தாகலின், கழலின்கணென்றுரைக்கப்பட்டது. வேண்டுவார் வேண்டியன ஈதலின், வள்ளலங்கமலத் தனிக்கரமென்றார். சேத்தல்-இருத்தல்.

(௮) நாலும்- தூங்கும். 'பொன்றூவித்து' என்பதின் பிறவினைப்பொருளையுணர்த்தும் விவ்விகுதி தொக்குப் பொன்றியெனநின்றது. தாவப்பின்னாலும் என்பதற்கு, தாவுதலினாற் பின்னே யாடுமென உரைப்பினுமமையும். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் என்பைப் பெண்ணாக்குதல், பொற்கிழிபெறல் என்னு மிவற்றானும், திருநாவுக்கரசுநாயனார் படிக்காசுபெறல், உழைவாரப் பணியிலகப்பட்ட பொன்னைத் திருக்குளத்தெறிதல், தம்மை மயக்கும்படி இந்திரனாலேவப்பட்ட தேவதாசிகளுடைய லீலாவினோதங்கட்குள்ளங் கொடாமை என்னுமிவற்றானும், மாணிக்கவாசகசுவாமிகள் ஊமைப்பெண்ணைப் பேசுவித்தல், பாண்டியன் குதிரைகொள்ளக் கொடுத்தபொன்னை விருப்பின்றி இறைவன் றிருவடிக்கீழிடுதல் என்னுமிவற்றானும் சுந்தரமூர்த்திநாயனார் திருமுதுகுன்றரிடம் பெற்றபொன்னை மணிமுத்தநதியிலிட்டு திருவாரூர்க் குளத்திலெடுத்தல், பரவையாரிடத்திறைவனைத் தூதுவிடுதல், "வனப்பகை, சிங்கடி" என்னும் பெண்களில் விருப்பின்றி அவர்க்கப்பனாதல் என்னுமிவற்றானுந் தெரிவித்

*

தமையின், "திருத்தொண்டின் பெருக்கவீறுபொன்னையும் பெண்ணையுமறிவுறுத்து" என்றார். அகரம்-பண்டறிசுட்டு.

(கூ) பாதகம் புண்ணியம் ஆகப்போற்றிய-தந்தை வதையாகிய பாதகம் புண்ணியமாகும்படி செய்தருளிய. அம்-சாரியை. தக்கனார்-இகழ்ச்சிக்குறிப்பு. "அரனடிக்கன்புசெய்யும்பாவமுமறமதாகும்-பரனடிக்கன்பிலாதார் புண்ணியம்பாவமாகும்-வரனுடைத்தக்கன்செய்த மாவேள்விதீமையாக - நரரினிற்பாலன்செய்த பாதகநன்மையாய்த்தே" என்னுஞ் சிவஞான சித்தித்திருவிருத்தமும் ஈண்டு நோக்கத்தக்கது.

(கக) தெருள்-மெய்யுணர்வு. மேதகை என்பதில் வினைமுதற்பொருளுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டது. அன்மொழித்தொகையெனக் கூறுவாருமுளர்.

## அவையடக்கம்.

(க) என்னுள்ளே அந்தரான்மாவாய் வியாபித்துநின்று கருவிகளையெல்லாம் தொழிற்படுத்துகின்ற (சேதனனாகிய) முதல்வனையன்றி யான் வேறொரு தொழிலைச்செய்தல் முடியாமையினாலே எனது இந்தப்பாடலிற் பொருந்துங் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லற்கும், அங்ஙனம் நினைத்தற்கும் நாணமுற்று, கல்விச்செல்வ மமைந்தார்மாட்டு ஒன்றுஞ் சொல்லாதொழிந்தேன்.

கருவிகளாவன:—ஆன்மதத்துவம்,வித்தியாதத்துவம்,சிவதத்துவம் என்னும் அகக்கருவி முப்பத்தாறும், நால்வகைவாக்கு முதலிய புறக்கருவிகள் அறுபதுமாம். என்னுட்கலந்து நிற்றன்மாத்திரத்தாலமையாது, யானறிதற்குக் காரணமாகிய கருவிகளினுங்கலந்து அவற்றையுந் தொழிற்படுத்தும் முதல்வன் செயலேயன்றி, என்செயலன்றென்பார் "ஒருவனையன்றி" எனவும், என்பாடலென்றுகூறின் அறிவுடையோர்க்கு நகையாகுமென்பார், "பொறுமெனமதிக்க" என்றும், குணவசப்பட்டு எவற்றையும் யான்செய்தேன், செய்கின்றேன், செய்வேன் என்பீர்; இதற்குமாத்திரம் இங்ஙனங்கூறுவது என்? எனவாசங்கை நிகழுமாதலின், "ஒன்றுஞ் செய்திலேனால்"



என்றுங் கூறினார்; எனவும், மதிக்கவும் என்னும் எண்ணும்மைகள் தொக்கன.

(உ) வசி-வசிக்கப்படுதல். வசிபெறுமென்பதற்கு,"முத்திபஞ்சாக்ஷரோபதேசம்பெற்றவர்க்கு"என்றுரைப்பினு மமையும். அவரின்-அவ்வடியார்கூறுதல் போல. அவரினன்றேயெனக்கொண்டு, அவரின்வேறாய ஆன்றோர்க்கு என வுரைப்பினுமமையும். இப்பொருட்கு அன்றும், ஏயும் அசை.

(ங) முதுக்குறைவு-பேரறிவு. புதுக்குபு-புதுக்குவித்து. கேட்குமார்வம்-கேட்டற்கணுண்டாகிய விருப்பம். கேட்குமார்வம்; வழிநடந்த இளைப்பு என்பதுபோல நின்றது. நிற்பவும் என்னும் எச்ச உம்மை தொக்கது. புன்மை ஈண்டு இளமைமேற்று.

(தொடரும்)

அ. க. வைத்தியலிங்க உபாத்தியாயன்.
இணுவில், யாழ்ப்பாணம்.

---

# ஸ்ரீமத்-கம்பராமாயண ஆராய்ச்சி.

:0:

ஸ்ரீமத்-கம்பராமாயணம் அயோத்தியாகாண்டத்தை நாம் பற்பல ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து வந்ததில், பின் வரும் சிலபாட்டுக்கள் புதியனவாய் இடையிடையே காணப்பட்டன. இப்பாடல்கள் திருநெல்வேலி, மதுரை, தஞ்சை முதலிய இடங்களில் சிறந்த வித்வான்களது வீட்டிலிருந்த பழைய ஏடுகளிலெல்லாம் இருக்கவும் அச்சுப்புத்தகங்களில் மாத்திரம் காணப்படாமைக்கு யாது காரணமோ தெரியவில்லை. கீழ்க்குறிக்கப்படும் பாடல்கள் அவ்வவ்விடங்களில் அவசியம் இருக்கவேண்டியவைகளாகவும் காணப்படுகின்றன. இன்றியமையாச் சிறப்பினவாகிய இக்கவிகள் நம் நண்பர்கட்கு மிகவும் பயன்படுமாறு இச்"செந்தமிழ்" ச்சஞ்சிகை மூலமாய் வெளிப்படுத்தலானோம்.

முதலாவது, மந்திரப்படலத்தில்,

மன்னனே யவனியை மகனுக் கீந்துநீ
பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்னமூ லத்தினிற் கழற வந்தென
மின்னெனக் கருமைபோய் வெளுத்த தோர்மயிர்.

தீங்குழ லிராவணன் செய்த பாவந்தான்
ஆங்கொரு நரையதா வணுகிற் றாமெனப்
பாங்கில்வந் திடுநரை படிவக் கண்ணடி
யாங்கெதிர் கண்டன னவனி காவலன்.

இந்த இரண்டு விருத்தங்களும் ஆரம்பத்தில் 'மண்ணுறு முரசினம்' என்னுங் கவிக்கு முற்பட்டுக் காணப்படுகின்றன. இவை, சக்கரவர்த்தி தனது நரையைக் கண்ணாடியிற் கண்டு தனக்கு மூப்பு வந்துவிட்டமையையறிந்து ஸ்ரீராகவனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நினைந்தனன் என்பதாக ஸ்ரீராகவனுக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்யத் தசரதன் நினைந்ததற்கு ஓர் காரணங்காட்டுதலால் பொருத்த முடையனவாகவே யிருக்கின்றன. ஸ்ரீ வான்மீகத்திலும் இவ்வாறு கூறப்பட்டிருத்தல் கருதத்தக்கது.

பின், 'மூவெழு முறைமை' என்னும் 77-ம் கவிக்குப் பின்னர்

1. நறைக்குழற் சீதையு ஞால நங்கையும்
மறுத்துமீங் கொருவர்க்கு மணத்தின் பாலரோ
கறுத்தமா மிடற்றவன் கடவுட் காலவில்
இறுத்தவர்க் கன்றியென் றிரட்டர் கூறினர்.

2. ஏத்தவந் துலகெலா மீன்ற வெந்தையைப்
பூத்தன னல்லனேற் புனித வேள்வியைக்
காத்தவ னுலகினைக் காத்த னன்றென
வேத்தவை யுவப்புற விதர்ப்பர் கூறினர்.

3. பெருமையா னுலகினைப் பின்னு முன்னுநின்
றுரிமையோ டோம்புதற் குரிமை பூண்டவத்
தருமமே தாங்கலிற் றக்க தீண்டொரு
கருமம்வே றிலதெனக் கவுடர் கூறினர்.

4. கேடகல் படியினைக் கெடுத்துக் கேடிலாத்
தாடகை வலிக்கொரு சரமன் றேவிய



வாடக வில்லிக்கே யருள்க பாரெனத்
தோடவிழ் மலர்முடித் துருக்கர் சொல்லினர்.

5. கற்றநான் மறையவர் கண்ணை மன்னுயிர்
பெற்றதா யெனவருள் பிறங்கும் வாரியை
யுற்றதே யுலகினி னுறுதி யாதெனக்
கொற்றவேல் வனைகழற் குருக்கள் கூறினர்.

6. வாட்டொழி லுழவநீ யுலகை வைகலும்
ஊட்டினை யருளமு துரிமை மைந்தனைப்
பூட்டினை யாதலிற் பொருவி னன்னெறி
காட்டினை நன்றெனக் கலிங்கர் கூறினர்.

7. தொழுகழல் வேந்தநின் தொல்கு லத்துளோர்
முழுமுத லிழித்தகை முறைமை யாக்கியீண்
டெழுமுகில் வண்ணனுக் களித்த விச்செல்வம்
விழுமிது பெரிதென மிலேச்சர் கூறினர்.

8. கொங்கலர் நறுவிரைக் கோதை மௌலியாய்
சங்கநீ ருலகத்துத் தவத்தின் றன்மையால்
அங்கண னரசுசெய் தருளு மாயிடில்
சிங்கள ரிங்கிதிற் சிறந்த தில்லென்றார்.

9. ஆதியின் மனுவுநின் னரிய மைந்தற்குப்
பாதியு மாகலன் பரிந்து வாழ்த்துமவ்
வேதியர் தவப்பயன் விளைந்த தாமெனச்
சேதியர் சேதனை தெரியச் செப்பினர்.

10. அளம்படு குரைகட லகழி யேழுடை
வளம்படு நெடுநில மன்னர் மன்னனே
உளம்படி யுயிரெலா முவப்ப தோர்பொருள்
விளம்பினை பெரிதென விராடர் கூறினர்.

11. வாய்நனி புரந்தமா மனுவி னுன்முறை
தாய்நனி புரந்தெனத் தரும வேலியாய்
நீநனி புரத்தலின் நெடிய காலநின்
சேய்நனி புரக்கெனத் தெலுங்கர் கூறினர்.

12 வையமும் வானமும் மதியும் ஞாயிறும்
எய்திய வெய்துப நிகழும் யாண்டெலாம்

நெய்தவழ் வேலினாய் நிற்கும் வாசகம்
செய்தவம் பெரிதெனச் சேரர் கூறினார்.

13. பேரிசை பெற்றனை பெருத தென்னினிச்
சீரிய தெண்ணினை செப்பு கின்றதென்
ஆரிய நங்குடிக் கதிப நீயுமோர்
சூரிய னாமெனச் சோழர் சொல்லினார்.

14. ஒன்றிய வுவகைய ரொருங்கு சிந்தையர்
தென்றமிழ் சேணுற வளர்த்த தென்னரும்
என்றுநின் புகழொடு தருமமேமுற
நின்றது நிலையது நினைந்து கூறினார்.

இப்பதினான்குபாட்டுக்களும் காணப்படுகின்றன. இவற்றுள், ‘தொழுக்ழல்’ என்னும் 7-வது செய்யுள் தஞ்சைப் பிரதியில் மட்டுந் தானிருந்தது. இவை, “சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்-காவ விவ் வுலகமென் றறைகின் றாரரோ” என்பதற்கும், “வேறெலாமன் னரும்” என்பதற்கும், இடையில் இன்றியமையாமல் வேண்டப்படு தலின் பொருத்தமுடையனவாம். இத்திருவிருத்தங்கள் இல்லாக்கால் ‘அறைகின் றாரரோ’ என்பதற்கும், ‘வேறெலாமன்னரும்’ என்பதற் கும் தொடர்ச்சி இனிது காணப்படாமையோடு, ‘வேறெலாமன் னரும், என்பதற்கும் நலிந்து பொருள் கொள்ளவேண்டி வருதலை யும் நோக்குக.

பின், நகர்நீங்குபடலத்தில், ‘நிறைமகவுடையவர்’ என்னும் 195-ம் பாட்டுக்குப் பின்னர்,

வானமே யனையதோர் கருணை மாண்பலால்
ஊனம்வே றிலானுட னுலகம் யாவையுங்
கானமே புகுமினிக் காதன் மைந்தனுந்
தானுமே யாளுங்கொ றரையென் றார்சிலர்.

என்னுங் கவி காணப்படுகின்றது. மிகச்சிறப்புடைய இச்செய் யுள் ஈண்டுச் சாலவும் பொருத்தமாயிருத்தலின் வேண்டப்படு மெ ன்க. ‘ஊனமே வேறிலா னுலகம் யாவையும்’ என்றும் பாடபேதம்.

பின், தைலமாட்டு படலத்தில், (இப்படலப்பெயர் ‘இலம்பாட்டு ப்படலம்’ எனக் காணப்படுகின்றது. இதுவே, பொருத்தமாமென்



பதைப் பின்னர் விசாரிப்போம்) ‘மாதரார்கள் அறுபதினாயிரர்’ என் னும் 74-ம் கவிக்குப் பின்னர்,

வந்த முனிவன் வரங்கொடுத்து மகனை நீத்த வன்கண்மை
எந்தை தீர்த்தா னெனவுள்ளத் தெண்ணி யெண்ணி யிரங்குவா
னுந்து கடலிற் பெருங்கலமொன் றுடையா நிற்பத் தனிநாய்கன்
நைந்து நீங்கச் செயலோரா மீகா மனைப்போ னைவுற்றான்.

என்னும் இவ்வரியசெய்யுள் காணப்படுகின்றது. “சோதி மணித் தேர்ச் சுமந்திரன்சென் றரசன் றன்மை சொலவந்த-வேத முனிவன் விதிசெய்த வினையை நோக்கி விம்முவான்” என்று கூறியவர் அம் முனிவன் நைவுற்றதாக ஒரு செய்யுளேனும் கூறாதொழிந்தார் என்று சொல்வது ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. இச்செய்யுள், அவ்வசிட்ட முனிவரன் மற்றையோரினும் பெரிதும் வருந்தி, மனம் நைவுற்ற தன்மையை மிக அழகாகக் கூறுகின்றமையின் இங்கு இன்றியமை யாது வேண்டப்படுமென்க.

பின், கங்கைப் படலத்தில், (இப்படலப்பெயர் குகப்படலம் என்று காணப்படுகின்றது) ‘சுற்றம்ப்புறநிற்க’ என்னும் 37-ம் கவிக் குப் பின்னர்,

நின்று னெஞ்சி னிரம்புறு மன்பா
லின்றே நின்பணி செய்திட விறைவா
நன்றே வந்தன னடியே னியான்
என்றே கூவினன் எயினரி னிசையோன்.

என்னும் செய்யுள் காணப்படுகின்றது. ‘கூவாமுன்னம்’ என்னும் அடு த்தகவியோடு இனிது தொடர்கின்றமையின் இஃது ஈண்டுப் பொருத் தமுடைத்தாமென்க. ‘கூவாமுன்னம்’ என்னுங்கவிபோல இக்கவியும் சந்தம் வேறுபட்டிருத்தலும் கவனிக்கத்தக்கது.

பின், ‘கோதைவிற்குரிசிலன்னான்’ என்னும் 45-ம்கவிக்குப்பின் னர்.

அடிதொழு துவகை தூண்டி யழைத்தன னாழி யென்னத்
துடியுடைச் சேனை வெள்ளம் பள்ளியைச் சூழ வேலி
வடிசிலை பிடித்து வாளும் வீக்கிவா யம்பு பற்றி
யிடியுடை மேக மென்ன விணையடி யேத்தி நின்றான்.

என்னும், இத்திருவிருத்தம் காணப்படுகின்றது. இச்செய்யுள், "இருத்தியீண் டெம்மொடென்றான்' என்னுங்கவியோடு இனிது தொடர்கின்றமையின் பொருத்தமுடைத்தாம். 'சுற்றமப்புறநிற்க' என்றுசுற்றங்களைத் தனியேவிட்டுவந்த குகப்பெருமான் எம்பெருமானைத் திருவடி தொழுதபின்னர், அச்சுற்றத்தை யழைத்து ஸ்ரீராகவனைச் சூழநின்று காக்குமாறு ஏவினன் என்பது நன்கு பொருட்டொடர்ச்சியெய்தப் பெறுதல் காண்க.

பின், 'மாலைவாய்நியமஞ்செய்து' என்னும், 48-ம் கவிக்குப்பின்னர்,

(1) வெயில்விரி கனகக் குன்றத் தெழில்கெட விளங்குஞ் சோதி
கயில்விரி வயிரப் பைம்பூட் கடுந்திறன் மடங்க லன்னான்
துயிலெனு மணங்கு வந்து தோன்றலு மவளை நாமே
யெயிலுடை யயோத்தி மூதா ரெய்துநா ளெய்து கென்றான்.

(2) மறக்கண்வா ளிளைய வீர னணையை மறுத்தல் செல்லா
உறக்கமா மாது மண்ண லுபயபங் கயங்கள் போற்றித்
துறக்கமா மென்ன லாய தாய்மதி லயோத்தி யெய்தி
யிறுக்குநா ளந்தை பாத மெய்துவ னென்னப் போனாள்.

(3) மற்றவ ளிறைஞ்சி யேக மாமலர்த் தவிசு நீங்காப்
பொற்றொடி யோடு மையன் றுயிறரும் புன்மை நோக்கி
யிற்றதோர் நெஞ்ச னாகி யிருகணீ ரருவி சோர
வுற்றவோ வியம தென்ன வொருசிலை யதனி னின்றான்.

என்ற இம் மூன்று திருவிருத்தங்களுங் காணப்படுகின்றன. இவை இளையபெருமாளான இலக்ஷ்மணன், ஸ்ரீ இராகவனோடு மீண்டும் திருவயோத்திபெய்துமளவுமபதினான்குவருஷமும் துயிலொழிந்திருந்தசெய்தியைச் சாதுர்யமாகக் கூறுதலின் பொருத்தமுடையனவாமென்க.

பின், சித்திரகூடப்படலத்தில், 'மேவுகானமிதிலையர் கோன்மகள்' என்னும் 52-ம் கவிக்குப்பின்னர்,

எய்த வின்னல் வந்த போது யாவ ரேனும் யாவையும்
செய்ய வல்ல ரென்று கொள்க சேணெ றிக்க ணீங்கிட
மைய கண்ணி செய்ய பாதம் வல்ல வாய வெம்பிதன்
கைக ளின்று பன்ன சாலை கட்டும் வண்ண மாயவே.



என்னும் செய்யுள் காணப்படுகின்றது. 'தீநெறிக்கணெய்தவாண்' என்றும் 'மற்றிவன்' என்றும், 'கட்டவல்லவாயவே' என்றும் பாடம். இச்செய்யுள் 'புறத்திரட்டு' என்னும் நூலில் இடுக்கணழியாமை என்னும் அதிகாரத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே இன்றியமையாமல் வேண்டப்படுமென்க.

பின், பள்ளியடைப்படலத்தில், 'சுழியுடைத்தாயுடைக்கொடிய சூழ்ச்சியால்' என்னும் செய்யுளின் பின்னர்,

கவ்வர விதுவென விருத்திர் கற்பெனு
மவ்வரம் பழித்துமை யகத்துளே வைத்த
வெவ்வரம் பொருதவே லரசை வேரறத்
திவ்வரங் கொண்டநீ ரினியென் கோடிரோ.

என்னுந் திருவிருத்தம் காணப்படுகின்றது. ஸ்ரீமத் பரதாழ்வான் தன் தாயான கைகேயியை நிந்தித்துரைத்த பிரகரணத்தில் வந்துள்ள இச்செய்யுள் முன்பின் தொடர்ச்சிக்கு இயைந்து நிற்றலிற் கொள்ளத் தக்கதென்க.

இவற்றைத்தவிர மற்றும் இரண்டொரு செய்யுட்கள் சில பிரதிகளின்மட்டும் காணப்பட்டன. அவை பிழைபொதிந்தும் சந்தர்ப்பத்துக்கு ஒட்டாமலு மிருந்தமையின் எடுத்துக்காட்டப்படவில்லை.

பி. ஆர். கிருஷ்ணமாசாரியன்.

---

[ஸ்ரீ கிருஷ்ணமாசாரியரவர்கள் இராமாயண அயோத்தியாகாண்டத்தைப் பல ஏடுகளைவைத்து ஆராய்ச்சிசெய்து சில அரிய பாடல்களை வெளியிட்டிருத்தல் "செந்தமிழ்" அபிமானிகட்கு இன்பம் அளிக்கத்தக்கது. இவர்கள் கம்பராமாயணத்தில் மிக்க பரிசயமுடையவர்கள் என்பதும், அவ்விராமாயணத்தைப் பல ஏடுகளைவைத்து ஆராய்ந்து "ஸ்ரீ வாணிவிலாச" அச்சுக்கூடத்திற் பதிப்பித்துவருவதும் பலர்க்குந் தெரிந்திருத்தல் கூடும். இவர்கள், புதியனவாக ஏட்டுப்பிரதிகளிற் கண்டதாக எழுதியுள்ள பாடல்கள், இச்சங்கத்துப் புத்தகசாலையிலுள்ள பல ஏடுகளிலும் காணப்படுகின்றன. அப்பாடல்கள், ஆசாரியரவர்கள் கூறியவாறே, சந்தர்ப்பங்களை நோக்கும்போது பெரிதும் பொருந்துவனவாதலோடு, கம்பர்வாக்கென்று கருதற்கேற்றவாறு சொற்செறிவும் பொருட்பொலிவுங் கொண்டுள்ளன. ஆசாரியரவர்கள், இவ்வாறே, தம் ஆராய்ச்சியிற் கண்டவிஷயங்களை தமிழ்நாட்டார்க்கு வெளியிட்டு மகிழ்வூட்டுவார்களென்று நம்புகிறேன். —பத்திராசிரியர்.]

*

# நாவடக்கம்.

——:0:——

[கீழக்கரை M. ஜோஸப் டையாஸ் அவர்கள் எழுதிய வியாசம்.]

பொதுவாக ஐம்புலஅடக்கவொடுக்கத்தைப் பற்றிச்சொல்லிய பின் நாவடக்கத்தைப்பற்றிச் சிலகூறி இவ்வியாசத்தை முடித்தல் தகுதியாம்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"என்றார், பெருநாவலரும்.

புண்ணியஞ்செய்யத் தொடங்குகிறவர் மௌனம் காக்கவேண்டுமென்றும் மௌனங்காப்பதே நன்றாய்ப் பேசுவதற்கான வழியாடென்றும் நன்றாய்ப்பேசுவது மிகவும் பிரயாசையாயிருப்பதினால் இதற்கு அதிக எச்சரிக்கைவேண்டுமென்றும் நன்றாய்ப்பேசுவதில் தேர்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். யாதோர் கல்வித் துறையிற் றேர்ந்த பாண்டித்திய மடையவேண்டு மென்றால், அநேகவருஷமதைப் படிக்கவேண்டுமன்றோ? நன்றாய்ப் பேசுகிற சாஸ்திரத்தை நாம் படிப்பதற்கு சில வருஷமாயினுஞ் செலவழித்தல் சால்புடைத்தாம். ஆனால், மற்றச் சாஸ்திரங்களிலே இடைவிடாமற்பழகுவதினால் அதைக் கற்றுக்கொள்ளுகிறார்களே, அவ்விதமே வெகுவாய்ப் பேசில் நன்றாய்ப் பேசுகிறசாஸ்திரத்தைக் கற்றுக்கொள்வோமெனின், இதற்கு மறுமொழியாக, பேசாமலிருந்து மௌனங் காப்பதினால் மாத்திரம் நன்றாய்ப் பேசுகிற சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளலாம். ஏனெனில், நன்றாய்ப்பேசுகிறதற்கு மிக்கவெச்சரிக்கை அவசியமாயிருக்கிறதினாலும் நாம் இவ்வாறு எச்சரிக்கையாயிராமல் மனதுக்கானபோது நமக்குப்பிரியமான சத்தத்துடன் ஓர் ஒழுங்குமின்றி வாயிலே வந்ததெல்லாம் பேசப் பழகியிருந்தாலும் இக்குறைகளையெல்லாந் திருத்திக்கொண்டு நன்றாய்ப்பேசுவதற்குமௌனமாவசியகமென்று பேசில்ஸன்பவர் சொல்லுகிறார்.

மௌனத்தினா லிரண்டுபிரயோஜனங்களுண்டு. யாதொருவன் யாதொரு கல்வித்துறையில் விற்பன்னனாவதற்கு அதன்பேரில் அவனிடத்தில் முன்னேயிருந்த தப்பிதமான எண்ணங்களையெல்லாம் தள்ளி ஒழித்துவிடுமாறு, அவன் முன்னார்த்தகாத விதமாய்ப் பேசிப்பழகியிருந்த பழக்கத்தை மறந்தொழிப்பது அத்தியாவசியகமாயிருக்கிறது; இரண்டாவது, நெடுங்காலம் மௌனமாயிருப்பதினாலே நன்றாய்ப் பேசப் படிப்பதற்குச் சாவகாசமுண்டாகும். ஏனெனில், நன்றாய்ப்பேசுகிற சாஸ்திரத்தில் மிகவும் தேர்ந்தவர்களையுற்றுப்பார்த்து அவர்களைக் கண்டுபாவித்து அவர்களுடைய பேச்சில் விளங்குகிற எச்சரிக்கையையும் மதுரகுணத்தையும் ஒழுக்கமரியாதையையும் நாமடைவதற்கான சாவகாசம் மௌனத்தினாலுண்டாகும். நன்றாய்ப் பேசத் தெரிந்தவர்களைப் பார்த்து நாமுமவர்களைப் போலப் பேசப்பழக வேண்டும். பித்தாக்கோரென்பவன் தன் சீடர்கள் துவக்கத்தில் ஐந்துவருஷம் வரைக்கும் பேசாமலிருக்க வேண்டுமென்று கற்பிப்பான். ஏனெனில், இவ்வைந்து வருஷத்திற்குள்ளாக அவர்கள் முன் படித்திருந்த தப்புக்களை மறந்து இவ்வைந்துவருஷந் தான்போதித்த சத்தியங்களை மாத்திரம் அவர்கள் கேட்டுப் படித்துக்கொண்டு, அதன்பின்னவர்கள் நன்றாகப் பேச்சுக்கெட்டிக்காரர்களாகலாமென்பான். வெந்நீருள்ள பெரிய அண்டாவை அடிக்கடி திறந்தால் சூடெல்லாம் சீக்கிரத்தில் பறந்துபோம். இவ்வாறே வீண்பேச்சுப் பேசுகிறதற்கு அடிக்கடி வாய்திறந்தால் பத்தியுருக்கமெல்லாமெளிதாய் வாய்வழியாகப்பறந்துபோம். இருதயம் உடனேபலவீண்காரியங்களின் பேரில் பராக்குக்கொள்ளும். ஆத்துமாவைவிட்டு நல்லநினைவு அகன்றுபோம். இதனால் கொஞ்சநேரத்தில் பத்தியெல்லாம் புகையாய்ப் பறந்துபோனதாகக் கண்டு ஆச்சரியப்படுவோம். பேச்சினால் நாம் குற்றங்குறைகளைக் கட்டிக்கொள்ளாமலிருக்கிறது அபூர்வமென்றறிந்திருந்தாலும், நாமொருவரோடொருவர் அவ்வளவு சந்தோஷமாய்ப்பேசித்திரிகிறதற்குக்காரணத்தைநோக்கின், பேச்சினால் ஒருவரிடத்திலொருவ ராறுதலைத் தேடுகிறோம்.

ஆபிரமநினைவு வந்து நமதிருதயத்தை யமுக்குவதினால் அந்த வருத்தத்தைத் தணிக்க ஆசைப்படுகிறோம். நாம் சிநேகிக்கிற காரியங்களின்பேரில் பேசப் பிரியப்படுகிறோம். அல்லது நமது ஆசைக்கு விநோதமென்றெண்ணுகிற காரியங்களின்பேரில் சம்பாஷிக்க அபேக்ஷிக்கிறோம். ஒரு சந்தோஷமுமில்லாமல் உயிரோடிருக்கக் கூடா

தென்பதுமெய்தான். ஆனால் கடவுளோடு நமக்குஉள்ளத்திற்சந்தோஷமில்லாததினால் உலகத்தில் வெளிச்சந்தோஷத்தை நாடித்திரிகிறோம். எங்கே அதிகப்பேச்சுண்டோ அங்கே நிர்ப்பாக்கியமுமுண்டாயிருக்குமென்று ஞானியானவர் வசனித்தார். லிக்கூர்க்கென்பவன் லாசதேமோனியருக்குக்கொஞ்சபொழுங்குமாத்திரம் கொடுத்ததற்குக் காரணமென்னவென்று லாசதேமோனியனான ஓர்ஞான சாஸ்திரியிடத்திற் கேட்க அவன் சொன்னமறுமொழியாவது:—கொஞ்சம்பேசுகிறவர்களுக்கு அதிக ஒழுங்கு கொடுக்கவேண்டியதில்லை என்றான். வாக்கினாற்குற்றங்கட்டிக்கொள்ளாதவன் உத்தம புண்ணியனாவான். நாவை யடக்காமற்தன்னிருதயத்தை அங்குமிங்குபசிதறவிடுகிறவன் பத்தியுள்ளவனென்று நினைத்திருந்தால் அவன் பத்தி வீணும் வியர்த்தமுமென்று யாகப்பர் தம்முடைய நிருபத்தில் எழுதுகிறார்.

தவிரவும் மூடியை வைத்து மூடாமல் திறந்திருக்கிற பாத்திரம் அசுத்தப்படுமென்று வேதாகமத்தில் சொல்லியிருக்கின்றது. தன் வாயை மூடாதவன் மூடியைவைத்து மூடாதபாத்திரம் போலிருக்கிறான். பாத்திரத்தை மூடாவிட்டால் அதிலே எவ்வித அசுத்தமும் தூசியும் மண்டும். இவ்வாறே யாதொருவன் பேசுகிறதற்கு வாய்திறந்தால் அவன் ஆத்துமா சீக்கிரமாய்ப் பாவமுங் குற்றங்குறைகளும் நிறைந்திருக்கும். இதனால் முழுதும் பேசாமலிருக்க வேண்டுமோ: நாம் ஊமைகளாக வேண்டுமோ? என்று கேட்போம் போலும். இல்லை, இல்லை. நாம்ஊமைகளாக வேண்டியதில்லை. பேசாமலிருக்கிறது மௌனமென்னும் புண்ணியமல்ல. வேண்டியபோதுபேசி வேண்டாதபோது பேசாமலிருப்பதே மௌன மென்னும் புண்ணியமாம். பேசுவதற்கும் நேரமுண்டு; பேசாதிருப்பதற்கும் நேரமுண்டு. இவ்விரண்டையுஞ் சரியாய்ச்செய்வதற்கு விவேகம வேண்டும். ஏனென்றால், வேண்டியபோது பேசாதிருந்தால் குற்றமாகலாம். அப்படியே அவசியமில்லாதபோது பேசினாலுங் குற்றமாயிருக்கும். தகுந்த விதமாய் விவேகத்தோடு பேசுவதற்கு ஓர் எச்சரிக்கையும் விடாமல் சகல எச்சரிக்கையும் அனுசரிப்பது அத்தியாவசியகம். நன்றாய்ப்பேசுவதற்கான எச்சரிக்கை யின்னதென்று மகாத்துமாக்களாகிய "பேசில். அம்புரோஸ், பெர்நார்துஸ் முதலிய முனிவர்கள்" சொல்லியிருக்கிறார்கள்.

(தொடரும்.)




முதலாம் இராஜராஜனது ஆட்சியிலிருந்த
சோழராஜ்யத்தின் விஸ்தீரணம்.

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-௫] பிலவங்க௵ ஆவணிமீ. [பகுதி-௧௦.


## வீரத் தாய்மார்.

புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டம், முற்காலத்தே தன தான்யாதி சம்பத்துக்களுக்கு நிலைக்களமாயிருந்தது போலவே, வீரலக்ஷ்மி மகிழ்ந்து விளையாடற்குரிய களமாகவும் விளங்கியதென்பதற்கு எண்ணிறந்த உதாரணங்களுண்டு. இவ்விஷயம், இராமாயணம் பாரதாதி இதிகாசங்களாலும் பிறவற்றாலும் எளிதிலுணரப்படும். இவ்வாறு வீரச் செயல்கட்குப் பேர்போன பூமியாக நம்தேசம் விளங்கியதற்கு அநேக காரணங்கள் கூறலாம். ஆயினும், அவையெல்லாவற்றிலுஞ் சிறந்தகாரணமாகக் கூறத்தக்கது, அந்நாளில்தோன்றிய தாய்மாரது பெருமையேயாகும். தாய்மார்மட்டும் அறிவும் ஆற்றலுமுடையராய்த் தம்மக்களை நல்வழிகளிற் கவலையோடு பழக்கிவருவராயின் அம் மக்கட்கூட்டம் உலகத்தே பெருமையும் புகழும் பெற்று விளங்கத் தடையென்னை? முலைப்பாலோடு தீரமோ வீரமோ தியாகமோ கலந்து ஊட்டப்படுமாயின் அவை என்றும் அழியாது உயர்வுமுறுதியும் பெறுமென்பது திண்ணம். "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பவை முதுமொழிகளன்றோ. அத்தகைய தாய்மார்களையுடைய தேசங்களே உலகத்தார்கண்முன்னே உயர்ந்து தோன்றுவன. உதாரணமாக—ஜப்பான்தேசத்தை எடுத்துக்கொள்வோம். சமீபத்தில் நடந்த "ருஷ்ய-ஜப்பானியப்" பெரும்போரிலே, ஜப்பானியர் உலகம் வியந்து புகழத்தக்க வெற்றியை அடைந்த விஷயம் நாம் அறியாதன்று. தேசவளவிலும் ஜனத்தொகையிலும் தம்மினும்மிகப்பெரிய

*

இராஷியருடன் எதிர்த்து ஜப்பானியர் வெற்றிபெற்றதற்கு, வேறு
காரணங்களு முண்டாயினும், முக்கியமானது, அவர்கள் தாய்தந்தை
யரால் குழவிப்பருவமுதலே பெற்று வந்த வீரப்பயிற்சியே யன்
றே. ஜப்பானியச்சிறுவன் கொஞ்சிப் பேசும்படி பெற்றவளால்
முதலிற் கற்பிக்கப்படும்வார்த்தைகள்—தேசாபிமானமும் தியாகமு
மாகும். அவனது விளையாட்டுப்பொருள்கள் யுத்தாயுதங்களின் போலி
கள். அவனுக்குப்போதிக்கப்படும் முதற்பாடங்கள்—அவ்வாயுதங்
களை உபயோகிக்கும் முறையும், தீரமும், தன்மறுப்பும், பிறவீரக்
குணங்களுமே. அவன்சிறுவயதிற்கற்றுக்கொண்டவை, தன்னாட்டின்
க்ஷேமத்தின் பொருட்டு ஆத்மபரித்தியாகஞ் செய்வதே பெருங்கீர்
த்தி யென்பதும், மானங்கெடவரின் மரணமே உத்தமமென்பதுமே.
இத்தகையபயிற்சி சிறுபருவமுதலே நிகழ்ந்து வருமாயின், அந்த
ஜனசமூகத்தை வெல்லவல்லவர் உலகில் யாவர்? ஐந்தில் வளையாதது
ஐம்பதில் வளையாதன்றே. இவ்வுண்மையை அறிந்துநடத்தி, ஜப்
பானாட்டின் சரித்திரத்தை உயர்வுபெற வைத்தவர், முக்கியமாக,
அந்நாட்டுத் தாய்மார்களென்றே சொல்லவேண்டும். அத்தாயர்
தம்மக்களைக் கூட்டங் கூட்டமாகத் தைரியங்கூறி போர்க்கனுப்பி
வந்ததும், யுத்தகளத்தில் சிறிதுந்தளர்வின்றிப் போர்புரியவும், சம
யம் நேரும்போது நாட்டின் பொருட்டு மகிழ்ச்சியுடன் உயிரைப்
பரித்தியாகம். செய்யவும் கடிதமூலம் எழுதித் தம்மக்களை ஊக்கப்
படுத்திவந்ததும் நாம்படித்துங் கேட்டு முள்ளனவேயாம். இன்னும்,
யுத்தகாலத்தில் ஜப்பானியத்தாய்மார்கள் காட்டிய தேசாபிமான
வீரச் செயல்களை, அப்போது வெளிவந்த இரஷ்யோ-ஜப்பானிஸ்
வார் என்னும் புத்தகத்தொகுதிகளிற் பரக்கக்காணலாம். இவ்வர
லாறுகள் இக்காலத்தவரான நமக்கு அருமையுடையனவாகத் தோன்
றினும், நமது பழையசரிதங்களை ஆராயின், நம்நாட்டிலும் அத்தகை
ய வீரத்தாயரையும் வீரமக்களையும் மிகுதியாகக் காணலாம். மேற்
கூறிய உண்மைகளையெல்லாம் அறிந்து நடத்தவல்ல தாய்மார்களா
கவே முற்காலத்து மகளிர் இந்நாட்டில் விளங்கினர் என்பதற்கு
வடநூல்களிலும் தமிழ்நூல்களிலும் அநேக மேற்கோள்கள் உள்ள
ன. அவற்றில் வடமொழியிலுள்ள விசேடங்கள் மிகுதியாக அறி
ஞர்வாய்க் கேட்கக்கூடுமாதலின், செந்தமிழபிமானிகட்கு ம[illegible]



தரும்படி, தென்மொழியில் அன்னோரைப் பற்றியுள்ள விசேடங்களை
மட்டும் இங்கேகூறுவோம்.

தமிழ் மொழியிலுள்ள புராதன நூல்களாகிய புறநானூறு
முதலியவற்றில் வீரச்சுவையே ஏனைய சுவைகளினும் மிகுதியாகக்
காணப்படும். அவ்வீரம்பற்றி நிகழ்ந்த அற்புதச் செயல்களை யெல்
லாம் கூறுதற்கு இஃது இடமன்று. ஆயினும், அக்காலத்தே தாய்
மார்களால் சிறந்த வீரர்கள் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்
பது மட்டில் கவனிக்கத்தக்கது. இவ்வீரத்தாயர்க் கிருந்ததாக
நூல்களிற் காணப்படும் குணவிசேடங்களை நோக்கும்போது, உலக
சரித்திரத்திலேயே இத்தகைய பெருமை காண்டற்கரிது என்று
தோன்றுமென்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டில் முற்காலமுதலே
இவ்வீரப்பெண்டிர்களது பெருமையைப் புகழ்ந்து வந்த வழக்கமும்
இருந்தது. புறப்பொருட்டுறைகளில் இது "மூதின் முல்லை" என்று
கூறப்படும். அஃதாவது,

"அடல்வே லாடவர்க் கன்றியு மவ்வில்
மடவான் மகளிர்க்கு மறமிகுத் தன்று."

"கொல்லும் வேலினையுடைய வீரர்க்கல்லது அந்தமறக்குடியில்
மடப்பத்தினையுடைய அரிவைமார்க்கும் சினத்தைச் சிறப்பித்தது."
எனக்காண்க. இவ்வீரப்பெண்டிர் செய்கைகளாகத் தமிழ்நூல்களிற்
கண்ட பாடல்கள் முழுதும் நல்லிசைப்புலமை வாய்ந்த பெண்டிர்க
ளாலேயே பாடப்பட்டிருத்தல் வியக்கத்தக்கதாயுள்ளது. "—பொன்
முடியார்" என்னும் பெண்புலவர், தாய் தந்தை அரசன் மகன் முதலி
யவர்க்குரிய கடமைகள் இன்னவென்பதை அடியில் வருமாறு கூறு
கின்றார்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம்-௩௧௨)

இப்பாட்டால் அக்காலத்து வீரத்தாயரது மனநிலை இத்தகைய
தென்பது தெளியப்படும். "என்றலைக்கடனே" என்பதனால், பொன்

முடியார் தம்மையே தாயாகக் கூறுதல் காண்க. பொருள் வெளிப்படை. இதுபோலவே, தகடூர்யாத்திரை என்னும் பழைய நூலிலுள்ள பாட்டொன்று வருமாறு:—

"தருமமும் ஈதேயாந் தானமும் ஈதாம்
கருமமும் காணுங்கால் ஈதாம்—செருமுனையிற்
கோள்வாண் மறவர் தலைதுமிப்ப என்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்." (புறத்திரட்டு.)

இப்பாட்டில், தாயொருத்தி 'தன்மகன் யுத்தகளத்தே சாகப்பெற்றால், அதுவே தர்மமும் தானமும் கர்மமுமாகும்' என்றுகூறிய அற்புதவிஷயம் குறிக்கப்பட்டுள்ளது. தன் மகன் யுத்தத்தே மடிதல், தன் நாட்டின் க்ஷேமங் கருதியேயன்றித் தன்னலங்கருதியதன்றாதலால், அச்செயலினும் சிறந்ததர்மமும் தியாகமும் கர்மமும் பிறிதில்லை என்பது கருத்து. எவ்வளவுஉயர்வும் பெருமையும் கொண்டசிந்தை முற்காலத்துப்பெண்டிர்கட்கு இருந்ததென்பது இப்பாட்டை நோக்குவார்க்கு விளங்கும். இனி, மற்றொரு வீரத்தாயைப்பற்றிப் பூங்கணுத்திரை என்னும் பெண்புலவர் பின்வருமாறு புகழ்கின்றார்.

"மீனுண் கொக்கின் றூவி யன்ன
வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை யலம்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே" (புறம்-௨௭௭)

இதன் கருத்து:—கொக்கின் இறகுபோல நரைத்த கூந்தலையுடைய முதியவள் தன்புதல்வன் போரிலே யானையை வீழ்த்திக்கொன்று தானும் மடிந்தான் என்னுஞ் செய்திகேட்டு, தான் அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியினும் அதிகமகிழ்ச்சியை அடைந்தாள்—என்பது. இதனால், அக்காலத்தே, வீரத்தாயரான பெண்டிர் தாம்புதல்வரைப் பெறுவது, ஓர் அற்புதவீரச் செயலையேனும் அவரிடம் கண்டு மகிழ்தற்கே என்று கருதினவரென்பதும், அவர் வீரச்சாவில் அப்பெண்டிர்க்கு மனமகிழ்ச்சியேயன்றித் துக்கமில்லையென்பதும் நன்கு விளங்கும். இப்பாட்டில், தாய் கண்ட அற்புத



வீரச்செயல் தன் சிறுவன் ஒருபெருங்களிற்றைக் குத்திக்கொன்றது. "வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்" என்பதனால், நெடுங்காலத்திற்குப்பின் ஒரே புத்திரனைப்பெற்றவள் என்பதுபெறப்படும். "தன் புத்திரன் மூடனாகவே பூர்ணாயுளுடன் இருந்தாற்போதும்' என்று கருதும் இக்காலத்துப் பெண்டிரியல்பும் மேற்குறித்த வீரத்தாயர் இயல்பும் எவ்வளவு விரோதங்கொண்டுள்ளன! இனி, மற்றொருபாடல் பெரிதும் உருக்கங்காட்டி நிற்கின்றது. வீரத்தாய் ஒருத்தி தன் ஏகபுத்திரனையே போர்க்கு அனுப்புகின்ற மாட்சியை, ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்புலவர் வியந்தும் இரங்கியும் அடியில் வருமாறு கூறுகிறார்.

"கெடுக சிந்தை: கடிதிவள் துணிவே:
மூதிற் பெண்டி ராதல் தகுமே.
மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே;
நெருநல் உற்ற செருவிற் கிவள் கொழுநன்
பொருநரை விலங்கி ஆண்டுப்பட் டனனே;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇ
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே." (புறம் ௨௭௯)

இதன் கருத்து—(ஒருதாய்) முன்பு அவள் தகப்பன் யுத்தகளத்தில் யானையையெறிந்து இறந்துபோயிருப்பவும், சமீபத்தில் நடந்தபோரில் தன் புருஷன் எதிரிகளைக்கொன்று தானும் மடிந்துபோயிருப்பவும் இவற்றிற்காக மனத்தளர்வின்றி, எதிரிகளின் யுத்தப்பறை ஒலிப்பதைக் கேட்டு மகிழ்ச்சிமிகுந்து, தன் சிறுவனுக்கு ஆடையணிவித்து அவன் குடுமியை எண்ணெயிட்டுச் சீவிமுடித்து, தான் ஒரேபுத்திரனை உடையளாயிருந்தும் சிறிதும் மனங்கவலாது, போர்க்களநோக்கிச் செல்க என்று அவனை அனுப்புகின்றாள். இச்செய்கையைக்கண்ட என் மனம் கெடுவதாக. இவள் துணிவு அஞ்சத்தக்கதா, பழையவீரக்குடியிற் பிறந்தவளென்பது இவட்குத் தகும்'—என்பது. என்ன வீரம்! இதனினும் ஆச்சரியகரமான

செய்தி கேட்டதுண்டோ. இதுபோலவே, வெண்பாமாலையுடையா ரும்,

* "வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து
வெந்திறலெஃக மிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கற் றன்காட்டி மூதில் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு"

† "கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் பின்னோடி
எய்போற் கிடந்தானென் னேறு"

என்று கூறுதல் காண்க. இனி, மற்றொருபாடல் மேற்கூறியதினும் மிக்க வீரத்தன்மையைக் குறிப்பதென்னலாம்: இதுவும், காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்புலவர் பாடியதேயாம்.

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைந்து
கொண்ட வாளொடு படுபிணம் பெயர்த்துச்
செங்களந் துழாவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" (புறம்-உஎஅ)

---

* இதன் பொருள்—தங்கள்மேல் எதிர்த்துவந்த சேனையைக்கண்டு பொறுதவளாய், பிள்ளை வாயிலுள்ள முலையைவாங்கி, கொடிய வலிதங்கிய வேலாயுதத்தை, முன்பு பகைவரைக் குத்திவளைந்த வளைவுகளைநீக்கி, தன் முன்னோர்களது நடுகல்லைத் தான் அவனுக்குக் காட்டி, பழைய மறக்குடிப் பெண்ணானவள், தன் மகனைப் போர்க்குச் செல்க என்றாள் என்பது.

† இதன் பொருள்—கல்லிலே பொருந்திநின்றான் என் தகப்பன்; என் கணவன் போர்க்களத்திலேபட்டான்; பகைவர் முன்புநின்று எதிர்த்து யுத் தத்திலே விழுந்தார் என் தமையன்மார்; தன்சேனை அழியவும் தான் அழி யாமல் பின்னே நின்று, தன்கைசென்று அம்பைச்செலுத்தப் பகையரசன் மேலேபாய்ந்து, பின் முள்ளம்பன்றிபோலப் பட்டுக்கிடந்தான் என்னுடைய புதல்வன்—என்பது.



இதன் கருத்து—வயதுமுதிர்ந்த ஒருதாய் தன் சிறுவன் யுத்
தத்தில் வலியழிந்து புறங்கொடுத்தோடினன் என்று பலர் சொல்
லக் கேட்டு, 'அவ்வாறு அவன் போரிற் புறங்கொடுத்தோடினவனு
யின் அவன் பாலுண்டு வளர்தற்குக் காரணமாயிருந்த என் முலைகளை
அறுத்திடுவேன்'என்று,வாளைக்கையிற்கொண்டு போர்க்களம்புகுந்து,
வீழ்ந்துகிடக்கும் பிணங்களைப் புரட்டித் தேடிவருபவள், இருதுண்
டமாகக்கிடந்த தன் மகனுடலைக்கண்டு, அவனைப்பெற்றபோதடைந்த
மகிழ்ச்சியினும் அதிக மகிழ்ச்சியடைந்தாள்—என்பது. இப்பாட்
டில் கூறப்பட்டதை நோக்கும்போது, இத்தகைய வீரத்தாய்மார்
உலகத்திலேயே அரியர் என்று தோன்றுமென்பதில் ஐயமில்லை.
இவ்வாறே, ஔவையாரும்,

"கடல்கிளர்ந் தன்ன (த)கடூர் நாப்பண்
வேந்துவாய் மடித்து வேறலைப் பெயரித்
தோறுகைத் தெழுதரும் தூங்கெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்படை விலங்கி
இடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச்சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே." (புறம் உகரு)

இப்பாட்டிலே, தகடூரில், எதிர்த்தபகைவர் சேனையின் ஊடே
இப்பாட்டிலே, அவரை வெட்டிக் கொண்டே சென்று, அச்சேனைநடுவில்
விழ்ந்து அவரை வெட்டுண்டு இருதுண்டமாகக்கிடந்த தன் புத்திரனது மாட்
தானும் வெட்டுண்டு இருதுண்டமாகக்கிடந்த தன் புத்திரனது மாட்
சியைக் கண்டு அகங்குளிர்தலால், அவனைப்பெற்ற வயதுமுதிர்ந்த
தாய்க்கு முலையூறிப் பால்சுரந்தது என அழகுபெறக் கூறியிருத்தல்
படித்து மகிழத்தக்கது. இன்னும், புறத்திரட்டிலே தகடூர் யாத்தி
ரைப்பாடல்களாகக் கண்டவை தம்வீரப்புதல்வர் செயலைக் கண்டு
தாயர் கூறியனவாகவே அமைந்தொளிர்கின்றன.

"எற்கண் டறிகோ எற்கண் டறிகோ
என்மக னாதல் எற்கண் டறிகோ
கண்ணே கணைமூழ் கினவே தலையின்
வண்ண மாலையும் வாளிவிடக் குறைந்தன

வாயே, பொருநனைப் பகழி மூழ்கலிற் புலால்வழித்து
ஆவ நாழிகை அம்புசெறித் தற்றே
நெஞ்சே வெஞ்சரங் கடந்தன குறங்கே
நிறங்கரந்து பலசர நிரைத்தன அதனால்
அவிழ்பூ அம்பணைக் கிடந்த காளை
கவிழ்பூங் கழற்றின் காய்போன் றனனே.''

"இத்தகடூர் யாத்திரை, துறக்கத்துப் பெயர்ந்த நெடுங்கோளன்தாய் இறந்துபட்ட தலைப்பெயனிலை" என்பர் நச்சினார்க்கினியர். (தொல், புறத்திணையியல், சூத்-உச.)

"குரங்கு மேனித் திரங்குமுகச் செதுமுலை
நரைமூ தாட்டி வினவுதி யாயின்
நும்மகன் கொல்லோ அறியேன் இம்மகன்
கொற்ற வெண்குடை மன்னர்க்கு உதவிச்
செஞ்சோற் றருங்கடன் வெஞ்சமத் தாற்றி
களிறுதலை யடுத்து மாகா வீட்டிப்
பிளிறுகுரன் முரச மெத்தணை யாக
பருந்தின் செருநிழற் பந்த ராக
அழிபிணக் குன்றே வேலி யாக
கழுகுணக் கிடந்த காளை நும்
மகன்கொலோ யானறி யேனிம் மகனே."

"வாழிய துடிய வாழிய துடிய
என்மகன், ஆர்த்தெறிந் தனனோ எறிந்தார்த் தனனோ
ஆர்த்து மெறியான் எறிந்து மமரான்
கையது வேலே காலது கழலே
மெய்யது சினமே மேற்சென் றனனே
வேந்த ரெல்லாந் தன்னோக் கினரே
நோக்கி னோக்கா முறுவலன் ருக்கி
தழீஇந் தாமெனத் தண்ணுமை
கழித்தா னொள்வாள் வீழ்ந்தன களிறே.''

இனி, புறநானூற்றில், ஒருவன்,காவற்பெண்டு என்னும் பெண் புலவரை நோக்கி 'நும் மகன் யாண்டுளான்' என்று கேட்ப, அதற்கு அவர் கூறிய அழகிய பாடல் பின்வருவது.—



"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன் ஓரும்.
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே."

இதன் பொருள்—சிறிய வீட்டிலே நல்லதூணைப் பிடித்துக்கொண்டு, உன் மகன் எங்குள்ளான் என்று கேட்கின்றாய்; என்னுடைய மகன் எவ்விடத்திருப்பினும் யான் அறியேன். புலிதங்கிப் போன மலைக்குகை போல அவனைப்பெற்ற வயிறோ இது; அவன் யுத்தகளத்திலே தோன்றுவன்; ஆண்டுச் சென்று காண்பாயாக—என்பது. இதனால், இப்பாட்டுப்பாடியவர் மறக்குடிப் பெண்டிராதல் வேண்டுமென்பதும், புலியொத்த போர்வீரனை மகனாக உடையவர் என்பதும், அத்தகை வீரமகனைப் போர்க்களத்தே போக்கியபின் அவனைப்பெற்ற தம்வயிற்றைப் புலிகிடந்து போன கன்முழையாகக் கருதினாரென்பதும் விளங்கும். இது பாடியவர் மனநிலை எவ்வளவு அருமை பெருமை வாய்ந்துளது! வீரமக்களைப் பெறுவதில், பழைய காலத்துப் பெண்டிர் அடையும் மகிழ்ச்சியும் பெருமிதமும் இத்தன்மையன என்பது இதனால் நன்குவிளங்கும்.

இனி, தம் வீரமக்கள் போர்க்குச்சென்று அங்கே சிறிது மானத்தாழ்வான செயலைச் செய்ததாகத் தெரியவரின், அவர் தாயர் அம்மக்களை மிகச்சினந்து வெறுப்பர். ஒருதாய், தன் மகன், பகைக் களிற்றின் மேலே வேலையெறிந்து, அவ்வேலைத் திரும்பப்பெறும் ஆற்றலில்லாது வெறுங்கையனாய்ப் புறங்கொடுத்தது கண்டு,

"வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நோகேன் அத்தை நின்னீன் றனனே
பொருந்தா மன்னர் அருஞ்சம முருக்கி
அக்களத் தொழிதல் செல்லாய் மிக்க
புகர்முகக் குஞ்சர மெறிந்த எஃகம்
அதன்முகத் தொழிய நீபோந் தனையே
அதனால், எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை ஈன்ற வயிறே''

என்று கூறி மிகவும் வெறுத்தனள். இப்பாட்டின் கருத்தாவது—பகையரசரைப் போரில் வென்று அக்களத்திலே தானும் இறந்துபடாமல், யானைமுகத்தெறிந்த தன்வேலை அதனோடே போகவிட்டு நீ புறங்கொடுத்துத் திரும்பினை; இதனால் எமது முன்னோர் செய்யாத பெரும்பழியை விளைத்த மூடனாகிய உன்னைப் பெற்ற என் வயிற்றை அறுப்பேன்: அறுப்பேன்—என்பது. இவ்வாறு நிகழும் வீரத்தாயர் கூற்றுத் தொல்காப்பியத்தில் "தாய்தபவந்த தலைப் பெயனிலை" என்று கூறப்பட்டுள்ளது. அஃதாவது—போர்க்களத்துப் பொருதுபாயும் சிறப்பிற்றீர்ந்து தன்மகன் புறங்கொடுத்தானாக அதுகேட்டுத் தாய் சாக்காடு துணிந்து சென்று மகனைக்கூடும் கூட்டம்" என்பர் நச்சினார்க்கினியர். இவ்வாறு, தமிழ்நாட்டு வீரப் பெண்டிர்செயல் பழங்காலத்தே புகழ்ச்சிக்குரியதாக இருந்ததாலன்றோ, அவர்களைப்பற்றிப் பழைய இலக்கண நூல்களும் பெருமைகூறத் தலைப்பட்டன. போர்க்களத்தே தம்குடிக்குச் சிறிதுமானங்கெட வரும்போது அக்காலத்துப் பெண்டிரியல்பு இத்தன்மையதாயின், வேறு கெட்டவழியால் தம் குடிக்குவரும் இழிவை அவர்கள் எவ்வாறு கருதுபவராதல் வேண்டும்? சோழவரசன் ஒருவனது ஏக புத்திரனாகிய உதயகுமாரன் என்பவன், மணிமேகலைமேல் வைத்த கழிபெருங் காமத்தனாகி, அவள் தனியே சோலையிலிருந்தபோது அவளிடம் செல்ல, அங்கே ஒரு விஞ்சையனால் அவ்வரசகுமாரன் கொலையுண்டனன். இச்செய்தியைக் கேள்வியுற்ற சோழன், தன் மகன், தன் பெருங்குடிக்கு ஒரேவழித் தோன்றலாயிருப்பவும், அவனது இழிவானசெய்கையால் அவன் சாவைப் பொருட்படுத்தாது,

> "மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
> துயர்வினை யாளன் தோன்றினன் என்பது
> வேந்தர் தம்செவி உறுவதன் முன்னம்
> ஈங்கிவன் றன்னையு மீமத் தேற்றிக்

கொளுத்திவிடுக" என்று ஆணையிட்டான். அன்றியும் அச்சோழன் மனைவிக்கு, ஒருத்தி, அவள் மகனது சாவைக்கூறும்போது,

> "தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்று
> என்னெனப் படுமோ நின்மக னிறந்தது



> மன்பதை காக்கும் மன்னவன் தன்முன்
> துன்பங் கொள்ளேல்"

என்று இழிவுபடுத்தி, அவளைத் தேற்றுவாளாயினள். இவற்றால் ஒழுக்கங்கெட்ட மக்களை, அவர்கள் எத்தகைய உயர்பதவியிலிருப்பினும், அரசரும் குடிகளும் பெரிதும் வெறுத்துவந்தமை புலப்படும்.

இவ்வாறு, தமிழகம், முன்னாளில் அறிவாற்றல் மிக்க வீரத்தாயர்களை உடையதாகி, அருமையும் பெருமையுங் கொண்ட செயல்களுக்குரிய நிலைக் களமாயிருந்தது. அவர்கள் பெற்ற வீரர்கள், குடிகளின் க்ஷேமத்தின்பொருட்டும் தந்நாட்டு அரசன்பொருட்டும் ஆத்மபரித்தியாகம் செய்வதிற் பயிற்சிமிக்கவர்களாய், சமயநேர்ந்தபோதெல்லாம் அவ்வாறு செய்து, தமிழகத்தின் பெருமையை மலைமேலிட்ட தீபம்போல விளக்கிவந்தனர். சங்கநாளில், தமிழ்நாட்டின்மேல் வடவரசர் படையெடுத்து வென்றசெய்தி கேட்கப்படுதலே அரிது. ஆனால், தமிழரசர் வடவருடன் போர்புரிந்து வெற்றிகொண்டவிஷயம் காணலாம். இதன் காரணம், அக்காலத்து விளங்கிய தமிழர் வீரத்தின் பெருமையேயாம். அத்தகைய வீரத்தை வளர்த்துவந்தவர் யாவர்? தமிழத் தாயர்களேயாவர். அச்சங்ககாலத்துக்குப்பின்பு, வீரத்தாயர்களும் ஆத்மபரித்தியாகம் செய்யவல்ல வீரமக்களும் குறைந்துவந்தமையாற் போலும், வடவேந்தர் பலர் தமிழகத்தே பிரவேசிக்கத்தொடங்கிய செய்திகள் கேட்கப்படுகின்றன. சங்ககாலத்துக்குப்பின்புவடவர்தமிழர்க்குள் நிகழ்ந்துவந்தபோர்கள் அளவுபடுவனவல்ல. பல்லவரென்றும் இரட்டரென்றும் சளுக்கரென்றும் கடம்பரென்றும் கூறப்படும் வடவரசர்தொகுதிபல தமிழகத்தைக் கைப்பற்றின. அதனால்தமிழ்வேந்தராகிய சேரசோழபாண்டியரும் பிறரும் தம்பழம்பெருமை குன்றினர். முடிவில், ஆண்மையும் தியாகமுமாகிய பயிற்சிகள் குறையத் தமிழர்வீரம் முற்றும் தலைகவிழ்ந்தது. இக்காலத்தவராகிய நமக்கோ, மேலே கூறிவந்த அற்புத வீரச் செயல்களெல்லாம் வெறுங்கற்பனைக் கதைகளாவே தோற்றும் என்பது திண்ணம். ஏனெனில், நம்மவரது மனநிலை அவ்வளவுகுன்றியொழிந்தது. காலசங்கரத்தின் சுழற்சியால் உலகத்தில் ஓரிடத்திற்குள்ளே உண்டாம் அற்புதமாறுதல்கள் இவை.

பத்திராசிரியர்.

# யாப்பருங்கலக் காரிகை.

எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு முதன்மொழிக்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.

இக்காரிகை அடிமோனை, அடியியைபு, அடியெதுகை, அடிமுரண், அடியளபெடை என்னும் ஐவகைத் தொடையுங் கூறுமாறெழுந்தது எனக்கொண்டு ஐந்து கூறுபாடுசெய்து அடிதோறும் என்பதனை முன்னையவற்றிற்குஞ் சேர்த்துச் சிலர் உரை கூறுவர்.

இவ்வுரை நூலாசிரியர்க்குக்கருத்தாகுமா? கருத்தாகுமாயின்; மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை என்னும் ஐந்தனுள்ளே ஒன்றின் முன்னுவது அடி என்பதனைச் சேரக் கூறி ஏனையவற்றிற்குஞ் சேர்த்துரைக்குமாறு கூறுதொழிவாரா? ஒன்றற்கேனும் இல்லையே! பின் அடி மோனை முதலியன கூறுமாறெழுந்தது என்பது எங்ஙனம் பொருந்தும்? மோனையாவது யாது? இயைபாவது யாது? எதுகையாவது யாது? முரணுவது யாது? அளபெடையாவதுயாது? இவற்றின் இலக்கணங்களை விளக்கும் காரிகையாது? இவற்றின் இலக்கணங்களை விளக்காது அடிமோனை முதலிய கூறினுரென்பது அநுசிதமாகாதோ? அடிமோனை முதலியவற்றின் இலக்கணம் இணைமோனை முதலியவற்றில் எங்ஙனம் செல்லும்! மோனைமுதலியவற்றின் இலக்கணமறியாதவர் 'இருசீர் மிசையிணை' என்பது முதலியவைகளை எங்ஙனமறிவர்! நாற்பது தொடைகளுள்ளே முப்பத்தைந்து தொடைகளையும் 'இருசீர்மிசை' என்னும் ஒரு காரிகையிற்றனே அடக்கிக் கூறினுர்க்கு எஞ்சியதொடைகள் அஞ்சும் கூறுதற்கு ஒரு காரிகை வேண்டுமா?

அன்றியும் "இரண்டாம் வழுவா வெழுத் தொன்றின்" என்பதை ஒரு வாக்கியமாகக்கொண்டு "வழுவா இரண்டாமெழுத்து" என்று அந்நுவயஞ் செய்து உரைகூறுவர். இரண்டாம் என்பது எழுத்து என்பதோடன்றி வழுவா என்பதனேடு இயையுமா? இங்



ஙனமும் பாடுவாரா? இடைப்பிற வரலாயினும் இயைபுவேண்டாமா? "மொழியான் வரினும்" என்புழி யும்மையாற் பொருண்முரணையுந் தழுவி இருவகைமுரணுங் கூறினுர்க்கு இயையின் வகையிரண்டும் கூறுமை எங்ஙனம் இயையாகும்!

இக்காரிகையை எழுகூறுக்கி வேறோர் உரை கூறுதும். அவ்வுரைகூறுங்கால் இத்தடைகளெல்லாம் வருவதில்லை. மோனை, இயைபு முதலிய ஐந்தனிலக்கணமும், எழுத்து சொல் என்னும் இருவகை இயைபும், அடிமோனை, அடியியைபு முதலிய ஐந்தனிலக்கணமும் அவ்வுரையாற் செவ்வே புலப்படும். முன்னர்க் கூறுபாடேழாமாறு அந்வயத்தொடு காட்டுதும்.

க. எழுவாயெழுத் தொன்றின்மோனை.
உ. இறுதி இயைபு.
ங. இரண்டாம்.
ச. வழுவாவெழுத் தொன்றினெதுகை.
ரு. மறுதலைத்தமொழியான்வரினுமுரண்.
சு. மொழிக்கண்அளபெடுத்தொன்றுவதாகுமளபெடை.
எ. அடிதோறும் முதல்.

மாதே என்பது மகடூஉ முன்னிலை. அழியாது என்பது பாதபூரணவிசேடணம். இனி முறையே உரைகூறுதும்.

---

மோனை.

க. எழுவாய் எழுத்தொன்றின் மோனை—எ-து.

அடியின் முதற்கணின்றதாகிய எழுத்து அவ்வடியிலே சீரின் முதற்கணின்ற எழுத்தோடாவது மற்றையடிதோறும் முதற்கணின்ற எழுத்தோடாவது ஒன்றத் தொடுக்கப்படுமாயின்; அத்தொடை மோனைத் தொடை எனப்படும் எ-று.

எழுவாயை எழுவாயாகவும், எழுத்தினை மூன்றுவதாகவுங் கொண்டு வேறு கூறுதலும் அமையும். எழுவாய்என்பது வாய்என்னுந் தத்திதம் பெற்ற ஒருபெயர். இதனுல் மோனையினிலக்கணங் கூறப்பட்டது.

## இயைபு.

௨. இறுதி இயைபு—எ-து.

அடிதோறும் இறுதியாவது அடியொன்றிலே சீர்களினிறுதியாவது ஒன்றத் தொடுக்கப் படுமாயின்; அத்தொடை இயைபுத் தொடை எனப்படும் எ-று.

இதனா லியைபினிலக்கணம் கூறப்பட்டது.

௩. இரண்டு ஆம்—எ-து.

அவ்வியைபு எழுத்தானியைவதும், சொல்லானியைவதும் என இரண்டுவகையாகும் எ-று.

எழுத்தானியைவதனை எழுத்தியைபு என்றும், சொல்லானியைவதனைச் சொல்லியைபு என்றுங் கூறுவர். இதனால் இயைபு இருவகையாம் என்பது கூறப்பட்டது.

---

## எதுகை.

௪. வழுவா வெழுத்தொன்றின் எதுகை—எ-து.

அடிதோறும் ஆதியாவது அடியொன்றினுள்ள சீர்களினாதியாவது இரண்டாமெழுத்தினால் ஒன்றத் தொடுக்கப்படுமாயின், அத்தொடை எதுகைத்தொடையாகும் எ-று.

மோனைக்குப் பின்னிற்றலின்லே வழுவா முறைமையுடைமையின் இரண்டாமெழுத்தினை வழுவாவெழுத்து என்றார். இதனால் எதுகையிலக்கணம் கூறப்பட்டது.

---

## முரண்.

௫. மறுதலைத்தமொழியான் வரினும் முரண்—எ-து.

அடிதோறும் முதலாவது அடியொன்றின்கணுள்ள சீரின் முதலாவது முரணுபுள்ள சொல்லான் வரினும், முரணுபுள்ள பொருளான் வரினும் அத்தொடை முரண்டொடை எனப்படும். எ-று.



முரண் - பகை, போர், மாறுபாடு. மறுதலைத்தல் - மாறுபடுதல். உம்மையாற் பொருண்முரணும் இனிதுபுலப்படவைத்தார். இதனால் இருவகை முரணுங் கூறப்பட்டது.

---

## அளபெடை.

௬. மொழிக்கண் அளபெடுத்து ஒன்றுவது அளபெடை. எ-து.

சொல்லின்கண் அளபெடுத்து ஒன்றுந் தொடை அளபெடைத் தொடையாகும். எ-று.

இதனால் அளபெடை கூறப்பட்டது.

---

## அடிமோனை முதலியன.

௭. அடிதோறும் முதல் எ-து.

அடிதோறும் மோனைமுதலிய ஐந்தும் வருவது பொதுவே அடியெனப்படும். எ-று.

அடியெனினும் முதலெனினும் ஒக்கும். மோனைமுதலிய ஐந்தும் என்பதும், வருவது என்பதும் வருவிக்கப்பட்டன. இதனால் அடிமோனை, அடியியைபு, அடியெதுகை, அடிமுரண், அடியளபெடை என்னும் ஐந்தும் கூறப்பட்டன.

இவ்வாறே இக்காரிகையிலே மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை என்னும் ஐந்து தொடைகளினிலக்கணமும், அவற்றின் வகையாய் முதற்கணின்ற அடிமோனை, அடியியைபு, அடியெதுகை, அடிமுரண், அடியளபெடை என்பவற்றின் இலக்கணமும், இயைபு, முரண் என்பவற்றின் வகையுஞ் சுருக்கிக் கூறப்பட்டன.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

# நன்னூல் விருத்திக்குறிப்பு.

## பெயரியல்.

(உகூக) தொல் "வேற்றுமைதாமே யேழெனமொழிப - விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே."

(உகூஉ) தொல். "அவைதாம் - பெயரையொடுகுஇன் அது கண் விளியீற்றது"

(உகூங) பிறிதுபிறிதேற்ற லென்னுஞ் சூத்திரத்துக்குச் சேனாவரையருரையை மறுத்துரைகூறுமாறு தொல்-விரு-36 ம் வட்டின் பிற்பக்கத்திற்காண்க. "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்-பிறவுந் தமபோற் செயின்"

(உகூச) அகத்தியம். "வினைநிலை யுரைத்தலும், வினாவிற் கேற்றலும், பெயர்கொள வருதலும் பெயர்ப்பய னிலையே"

(உகூஎ) எழுவாய்க்கருத்தாவை அபிகிதகருத்தா வெனவும், மூன்றனுருபின் கருத்தாவை அநபிகிதகருத்தா வெனவும், ஏவும் வினைமுதலை ஏதுகருத்தாவெனவும், இயற்றும் வினைமுதலைப் பிரயோச்சியகருத்தாவெனவும் கூறுவர் வடநூலார்.

(ங௦௦) சிறுபான்மை அரனதுதோழன், குன்றவர் தமதுசெம்மல், என உயர்திணை யொருமைப் பொருண்மைக்கும், நினதடியாரொடல்லால், எனவுயர்திணைப்பொருண்மைப் பன்மைக்கும், எனது கைகள் என அஃறிணைப்பொருண்மைப் பன்மைக்கும், அது உருபு வரும். "அரனதுதோழன்" சூடாமணிநிகண்டு, முதற்றொகுதி. "குன்றவர் தமதுசெம்மல்" கந்தபுராணம் வள்ளியம்மை கல்யாணப்படலம். "நினதடியா ரொடல்லால்" திருவாசகம் திருச்சதகம் உ-ம் கவி.

(ங௦ரு) ஐகாரவீற்றுப்பொதுப்பெயர்க்கு ஐகாரம் எகரமாய்த் திரிதலுமுருபார்; உ-ம் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்.

"பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கிசைத்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே."



இதனுள் 'அன்னே'யெனவும், சௌந்தரியலகரி, ஙகூ-ம் பாட்டு

"நிலைபெறுசுவாதிட்டான நின்சிவவனலுநீயு
மிலகியதன்மை நெஞ்சத்திறைஞ்சுவமுரைக்கமாட்டே
முலகமப்பார்வைசெந்தீக்குருகினின்கருணைபொங்கி
யலைபெறியமுதப்பார்வை யளித்தினிதருளுமம்மே"

இதனுள் 'அம்மே' எனவும்வந்தன.

## வினையியல்.

(ஙஙஅ) அகரவீறும், வியங்கோள் விகுதியாம்; உ-ம். சௌந்தரியலகரி, உகூ: "முதுமறைசொல்லிளவனிதை" இக்கவியில், அமர, வர எனவும், வைராக்கியசதகம் "தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டருள் - தூயவன் சரணமே சுமக்க வென்றலை- வாய்துதி செயகரமலர்க ளேய்த்தொழ - நேயமோ டனுதின நினைக்க நெஞ்சமே" இதில், செய, தொழ, எனவும்வரும். பழனியந்தாதி "அகல்வஞ்சந்தகரத் தம்படுகண்ணியர்" இக்கவியினீற்றடியில் "அகல" எனவும் வரும். திருச்சதகம் (கரு) "வானநாடருமறி" என்பதில், நைய வையகத்துடைய விச்சையே. "நைய" எனவும் வரும்.

(ஙஙகூ) உளன், உளள், உளர் என்பனபோலக் குறிப்புணர்த்தி இன்றென்பதற்கு மறுதலையாய் அஃறிணையொருமைப் படர்க்கைக்குரிய "டு" விகுதிபெற்று நிற்கும் உண்டென்னுஞ்சொல்லும் வேறே. இல்லென்பதற்கு மறுதலையாய் உண்மைத்தன்மை யுணர்த்தி வேறு, இல், யார், எவன் என்பன போல, விகுதியின்றிப்பொதுச் சொல்லாய் நிற்கும் உண்டென்னுஞ் சொல்லும் வேறே யெனக்கொள்க; இதுயாரெனவகரங் கெட்டு நிற்கும் பலாறிசொல்லும் வேறே. யாரென்னும் வினாவினைக் குறிப்பும் வேறே யாமாறுபோலக் கொள்க. தொல்-விரு-ச௦-ஏடு பிற்பக்கம்.

* நாலடியார்கல்வி-ங. 'களர்நிலத்துப் பிறந்தவுப்பினைச் சான்றோர், விளை நிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர், கடைநிலத்தோராயினுங் கற்றறிந்தோரைத்-தலைநிலத்து வைக்கப்படும்.'' ஷ கீழ்மை

" 'மைதீர் பசும்பொன்மேன்மாண்ட மணியழுத்திச் - செய்தநெனி
ஞ் செருப்புத்தன்காற்கேயா - மெய்திய செல்வத்தராயினுங் கீழ்
ளைச்செய், தொழிலாற் காணப்படும்"

(௩௪0) " தினைத்தாளன்ன சிறுபசுங்கால வொழுகுநீராரல பார்க்குங்குருகுமுண்டு" என்புழிக்காலவென்பது பெயரெச்சவினைக் குறிப்புச்சொல்; கால வென்புழி அகரம் பால்காட்டுமீறென்றூற்படுமிழுக்கென்னையெனின்:—அஃதுண்டென்னு மொருமைச்சொற்கொண்டுமுடிதலிற் பால்வழுவாய் முடியுமென்க. இவ்வுண்டென்னுஞ்சொல் ஐம்பான் மூவிடத்திற்கும் பொதுவன்றோ வெனின், அறியாது கடாவினாய். (தொல்-விரு-௨0-ஏடு-பிற்பக்கம்) இங்கேயுண்டென்பதாகுறிப்புணர்த்தி நிற்றலின் அஃதொருமைச் சொல்லே யாமெனவுணர்க. அற்றேற்கால, குருகென்பது பன்மையொருமை மயக்கமெனக்கோடுமெனின், அற்றன்று. "மாடமதுவார் சடையவள்ளலையுமொக்கும்" என உயர்திணைக்கண்ணும் பயின்றுவருதலினொருகாரணமுமின்றித் திணைமயங்குதல் பொருந்தாமையி னின்னோரன்னவை யெல்லாம் பெயரெச்சக் குறிப்பேயாமென்க.

(௩௪௩) செயவென்னும் வாய்பாட்டெச்சம் முக்காலத்திலும் வரும். நிகழ்காலத்தின்கண் இது நிகழாநிற்க இது நிகழ்ந்தது என்னும் பொருட்டாயும் இறந்தகாலத்திற் காரணப் பொருட்டாயும், எதிர்காலத்திற் காரியப்பொருட்டாயும் வரும்.

(உ-ம்.) ஞாயிறுபடவந்தான் நிகழ்வு. மழைபெய்யக் குளம் நிறைந்தது இறப்பு. உண்ணவந்தான் எதிர்வு.

நகுபுவந்தான் என்பதற்கு நகாநின்றுவந்தான் எனப் பொருள் கொள்ளப்படுதலில் புகரம் நிகழ்காலத்தினும் வருமெனக் கொள்க.

(தொடரும்.)

ஜி. சதாசிவப்பிள்ளை.

---



[ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

௨௯௫-ம் பக்கத்தொடர்ச்சி.

'ஹேல்டன்' தானே 'ஹேண்டல் என்பவரை வியந்து பேசுதலில் சிரத்தையுள்ளவராயிருந்தார். "அவர் நம்மனை வருக்கும் தந்தை" என்று ஒரு காலத்தில் சொன்னார். 'ஸ்கார்லிட்டி' என்பவர் இத்தாலிதேசமுழுவதும் ஹேண்டல் என்பவரை வியந்தவராகத் திரிந்தார். அவருடைய நாமம் உச்சரிக்கப்பட்டபொழுது அவருக்கு மரியாதையாகவணங்கிக்கொள்வார். அந்தப்பெரிய கவிஞரை 'மோஸர்ட்' என்பவர் தெரிந்துகொண்டதானது குறைந்த பிரியமுள்ளதன்று. 'ஹேண்டல்' என்பவருக்குப் பிரியமுண்டானபொழுது அவர் மின்னலைப் போலப் பிரகாசிப்பிக்கின்றார் என்றார். 'பித்தோவன்' என்பவரைக் கானராஜ்யத்திற்கு அரசனாக வாழ்த்தினர். 'பித்தோவன்' இறக்கும்போது, ஹேண்டல் உடைய கிரந்தத்தை நாற்பது தொகுதிகளாக அவருடைய இஷ்டர்களில் ஒருவர் அவருக்குப் பரிசாக அனுப்பினார். அவைகள் அவருடைய அறைக்குள் கொண்டுவரப்பட்டன. உயிர்த்தெழுந்த கண்ணால் அவற்றை திறுதிறென்று பார்த்து அவருடைய விரலை நீட்டி அவற்றைக்காட்டிக்கொண்டு "அதோ, அதோ உண்மையிருக்கிறது" என்று உறக்கச் சத்தித்தார்.

ஹேல்டன் ஆனவர், சென்றுபோன பெரியவர்களுடைய பூ... தை மட்டுமன்று, அவர்காலத்தில் இருந்த இளைஞராகிய மோஸ... பித்தோவன், இவர்களுடையதையும் மதித்துக்கொண்டனர். அ... மனிதர் தங்கள் தோழர்களைப்பற்றிப் பொறாமைகொள்ளலா... ஆனால், உண்மையான பெரிய மனிதர்கள் அவர்களைத் தேடி ஒ... ரோரொருவர் அன்பினராகின்றனர். மோஸர்ட் என்பவரைப்பற்றி 'ஹேய்டன்' எழுதியது வருமாறு:—"மோஸர்ட் உடைய கம்பீரமான கானத்தைப்பற்றி நான் உணர்ந்து அனுபவிக்கிற அளவுக்கு, கான சாஸ்திர பரிச்சயம்பெற்ற ஒவ்வொருவரும், விசேஷமாய் பெரியவர்

...யார் மற்றொருவரைப்பார்த்துப் பொறாமை கொள்வார்கள். 'பிரேகு' வானது இந்த அருமையான மனிதனை வைத்துக்கொள்ள முயற்சிப்பது மட்டுமன்று. ஆனால், அவருக்கு வெகுமானஞ் செய்யவும் வேண்டும். ஏனென்றால், இவ்வளவு இல்லையானால் ஓர் பெரிய யூகியின் சரித்திரமானது உள்ளபடியே துக்ககரமானதே. ஒப்பற்ற மோஸார்ட் என்பவர் சக்கரவர்த்தியால் அல்லது அரசரால் ஆதரிக்கப் படாமலிருப்பதை நினைக்க எனக்குக் கோபம் உண்டாகிறது. என்னுடைய கோபத்தை மன்னியுங்கள். ஆனால் அந்த மனிதனை அவ்வளவும் பிரியமாய் நேசிக்கிறேன்."

ஹேய்டன் உடைய யோக்கியதைகளை மதித்துக்கொள்வதில் அவரைப்போலவே, மோஸர்ட் என்பவரும் பூர்ண அபிப்பிராயமுடையவராயிருந்தார். ஓர் கிரந்த யோக்யதா பிரகாசகர்பால், ஹேய்டனைப் பற்றிப் பேசுங்கால், அவர் சொன்னதாவது "ஐய, நீரும் நானும் ஒன்றுகூட்டப்படினும் ஒரு 'ஹேய்டனுக்கு ஈடாகோம்'. மோஸர்ட்', முதல் முதல், 'பித்தோவனை' ப்பற்றிக் கேள்விப்பட்டபொழுது அவர் சொன்னதாவது:—"அந்த வாலிபன் சொல்வதைக்கேளுங்கள். உலகத்தில் பிற்காலத்தில் பெரிய பெயர் எடுக்கக்கூடியவன் அவன் என்றும் உறுதியாயிருங்கள்" என்பதாம்.

'பப்பன்' என்பவர் நியூட்டன் என்பவரைத் தத்துவ சாஸ்திரிகள் எல்லாரையும்விட மேலாகக்கொண்டு, தான் வேலைசெய்யத்தொடங்கும்பொழுது தன் முன்பாக அவருடைய படத்தை எப்பொழுதும் வைத்துக்கொள்ளும்படி அவ்வளவு உயர்வாக அவரை மதித்துக் கொண்டனர். அப்படியே 'ஸ்ச்சில்லர்' என்பவர் 'ஷேக்ஸ்பியரை' மதித்தும் மாரியாதையுடனும் வைராக்கியத்துடனும் அநேக வருஷங்களாய் அவர் நூலை ஆராய்ந்து முதலில் உலக சுபாவத்தை அறியத் தகுதியுள்ளவரானார். அப்பால் அவரைப்பற்றிய மதிப்பானது முன்னினும் அதிக ஆவலுடன் கிளர்ந்தது.

டைய முழு மனதையும், புத்தியையும், நான் செலுத்தியது, ஜீவித்துக்கொண்டிருந்த ஒரே புருஷருக்கு ஆம். மிஸ்டர் பிட் இறந்த. முதல் என்னை நடத்தத் தலைவர் இல்லை. என்னுடைய இராஜதந்திரத்தொழிலானது அவருடைய கல்லறையில் புதைபட்டுக் கிடக்கின்றது" என்பதாம்.

பிரான்ஸ் தேசச் சரீர தத்துவசாஸ்திரி ஒருநாள் மாணாக்கர்களுக்கு பிரசங்கஞ் செய்கையில், வெளி ஜனங்கள் அதிகமாய்த் தெரிந்து விசேஷமாய் மதிக்கப்பட்ட ஆராய்ச்சிகளையுடைய, ஸர்-சார்லஸ் பெல், என்பவர் அவருடைய வகுப்பு அறைக்குள் வந்தார். அப்படி வந்தவரை அந்த வித்துவான் உபசரித்துத் தன்னுடைய பிரசங்கத்தை உடனே நிறுத்திவிட்டுப்பெரிதும் புகழ்ந்தனர்.

சிற்ப வித்தையின் பெரிய நூலை முதலில் அறிவதானது ஒவ்வொரு இளைஞராயுள்ள சித்திரவேலைக்காரரின் வாழ்க்கையில் முக்கியமான சங்கதியாக ஏற்படுவது வழக்கம். 'கரிக்கோ' என்பவர் 'ராபியல்' உடைய 'ஸெண்ட் ஸிஸிலியா' வை முதலிற் பார்த்த மாத்திரமே அவர் தனக்குள் ஒரு சக்தி யெழுந்ததுபோல் உணர்ந்து "நானும் கூட ஒரு சித்திரவேலைக்காரனாய் இருக்கின்றேன்" என்று உரக்கச் சொன்னார். அப்படியே 'கான்ஸ்டேபில்' என்பவர் 'கிளாட்' உடைய 'ஹேகர்' படத்தை முதலிற் பார்த்ததை அவருடைய ஜீவகாலத்தில் ஒரு குறித்த காலமானதாக நினைப்பது வழக்கம். 'ஸர் ஜார்ஜ் பியூமண்ட்' என்பவரும் அதே படத்தை மிகவும் வியந்து தம் வீட்டைவிட்டுச் சவாரி போகும்பொழுது எப்பொழுதும் தன்னுடைய வண்டியில் வைத்துக்கொண்டுபோவார்.

பெரியவர்களாலும் நல்லவர்களாலும் ஸ்தாபித்த நிதர்சனங்கள் அழிகிறதில்லை. அவை அவர்களுக்குப்பின் வருகிற சந்ததிகளிடத்தில் நின்று பேசிக்கொண்டிருக்கின்றன. மிஸ்டர் 'காப்டன்' உடைய மரணத்திற்குப்பிற்பாடு உடனே 'காமன்ஸ்' சபையில் 'மிஸ்டர் டிவ்

'நம்முடைய ரூபபறறதும் நிவிர்த்திக்கக்கூடாததுமா... களை நான் ஞாபகத்துக்குக் கொண்டுவரும்போது அந்தப் பெரிய மனிதர்கள் நம் விஷயத்தில் முற்றிலும் இழக்கப்பட்டவரல்லரென்றும், அவருடைய மொழிகள் இந்தச் சபையில் அடிக்கடி எடுத்துக் கூறப்படுமென்றும், அவர்களுடைய அனுஷ்டானங்களை நாம் அடிக்கடி குறிப்பிட்டு மேற்கோளாக எடுக்கலாகுமென்றும் அவர்களுடைய மொழிகளுங் கூட நம்முடைய தர்க்கத்திற்கும் விவாதத்திற்கும் உரிமைப்படுமென்றும் கொள்ளுகிற இச்சமாதானமானது நம்மிடத்தில் சேஷித்திருக்கின்றது. பார்லிமென்டின் சில மெம்பர்கள் காலஞ்சென்று போனபோதிலும் இப்பொழுதும் மெம்பர்களாகவேயிருக்கிறார்கள். அவர்கள் இறந்தவர்களல்லர்; அவர்களுக்குக் கையொப்பக்காரர் தேவையில்லை; கால நடப்பும் அவர்களைப் பாதிக்க மாட்டாது. மிஸ்டர் காப்டன் என்பவர் அப்பேர்ப்பட்டவர்களில் ஒருவர் என்று நான் நினைக்கிறேன்'' என்பதாம்.

ஜீவ்ய சரித்திரத்தின் முக்கிய கற்பனை என்னெனின், மனிதன் எவ்வாறு இருக்கக்கூடும்; கூடியவரை எவ்வளவு செய்யக்கூடுமென்பதைக் கற்பிக்கின்றது; ஆகவே ஒவ்வொரு மனிதனுக்கும் புதிய பலத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கலாகும். மிகவும் பெரியோரைப் பார்த்து மிதவும் தாழ்ந்தவர்களும், புகழ்ந்து நம்பித் தைரியங் கொள்ளலாம். இரத்தத்திலும் வம்சத்திலும் நமக்குச் சம்பந்தப்பட்ட இந்தப் பெரிய சகோதரர்கள் சர்வ வியாபகமாக வசித்துக் கொண்டு, அவர்களுடைய கல்லறையினின்றும் நம்மிடம் இப்பொழுதும்பேசி, அவர்கள் அனுசரித்துவந்த மார்க்கங்களைநமக்கு சம்க்ஞையாற் காட்டுகின்றனர். நம்மை நடத்தி, வசப்படுத்தி ஆஞ்ஞை செய்வதற்கு, அவர்களுடைய நிதர்சனம் இன்றும் நம்முடன் நிகழ்கின்றது. ஏனென்றால் மேன்மையான ஒழுக்கமானது சந்ததி பாரம்பர்யமாக நின்று இடையறாத தன்னைப்போல உற்பவிக்கத்தக்கதான நித்யமான பிதிரார்ஜிதமாயிருக்கிறது.

ஸ்ரீ:

# ஜீவஜந்துக்களின் நிறமும் அதன் பயனும்.

——:O:——

பண்டைக்காலந்தொட்டு ஆடுதலிற் பெயர்பெற்ற ஆண்மயில்மட்டுமழகிய தோகைகொண்டிருப்பதேன்? நல்லரவந் தனது படத்தை விரிக்க அதனிடையில் அரக்கன் கண்போலிரண்டு பயங்கரமான இரேகை தோன்றுவதேன்? பச்சோந்தியோ பன்முறையுந் தன்னிறத்தைமாற்றியொளிப்பதேன்? சிலந்திப்பூச்சிபுட்சில எறும்பைப்போல்வேடம்பூண்டு பார்ப்போரை ஏமாற்றுவதேன்? இன்னனவினுக்கட்கு ஒருவாறு விடைபகர்வான் எடுத்துக்கொள்ளப்பட்டது இச் சிறு வியாசம். ஜீவப்பிராணிகளிற்சில ஒருவர்ணங்கொண்டும் வேறுசில பலவர்ணங்கலந்தது மாயமேனியுடையனவாம். அங்ஙனம்பூண்ட வர்ணத்தால் அவற்றிற்கு எத்துணைப் பயனுண்டாம் என்னும் விஷயத்தைப் பற்றி விசாரித்தல் தகுதியுடைத்து.

ஜீவப்பிராணிகளின் நிறத்தை, அதுபயக்கும் பயனுக்குத்தக்கவாறு உயிர்நூல் வல்லார் பிரிவு செய்திருக்கின்றனர். அப்பிரிவுகளில் மேம்பட்டவை ஆறேயாம். அவையாவன:—பயன்படாநிறம், தற்காப்புநிறம், வசீகரநிறம், எச்சரிக்கைநிறம், போலிநிறம், சம்போகநிறம் எனப்படும். இனி, இவையொவ்வொன்றைக்குறித்துச் சில சொல்லிவிடுப்போம்.

காகங் கறுத்திருப்பதனால், அதற்கு யாதானும் பயனுண்டாவென்ற கேள்விக்குப் பயனின்று என்றுத்தரமுரைத்தலே தகுதியாம். இத்தகைய நிறத்திற்குப் பயன்படா நிறமென்று (Non-significant coloration) சாஸ்திரிகள் பெயரிட்டிருக்கின்றனர்.

தாங்கொண்ட வர்ணத்தால் தம்மைத் தம்மெதிரியிடமிருந்து காப்பாற்றிக்கொண்டு இடையூறின்றிக் காலங்கழிப்பன சிலபிராணிகள். இங்ஙனம் பயன்படும் நிறத்திற்குத் தற்காப்பு நிறமென்று (Protective coloration) பெயர் கொடுத்திருக்கின்றனர். மரங்களில் பசுமைவாய்ந்த இலைகளினிடையே இலைக்குந் தனக்கும் பேதம்

புலப்படாவண்ணம் பச்சைப்பாம்பு ஜீவிப்பது யாவருமறிந்தவிஷயம். அதனைச் சுலபமாய் இலைகளின் மத்தியினின்று வித்தியாசப்படுத்திக் காண்பது மிகவரிதாகும். கூர்மையான கண்ணுள்ளவர்களே அது மரக் கொம்புகளின்மேல் நேராய் இழைந்தோடுவதைக் கண்டு ஆச்சரியப் பட்டிருப்பார்கள். அது இவ்விதம் தன்னையுங் காப்பாற்றிக்கொண்டு, மரங்களின்மேல் வந்துட்காரும் சிறு பறவைகளையும் ஆகாரமாகக் கொன்று விழுங்குவதற்குப் பெரிதும் பயன்படுதல் அதன் பசுமைநிறமேயாம். இவ்வண்ணமே, வேறொருபாம்பு பாலைவனங்களிலும் மணற்சாரலான விடங்களிலும் வசிக்கின்றது. அதை நம்மவர் இரட்டைத்தலைப் பாம்பென்றழைத்து, ஆறுமாதம் முன்புறத்தாலும் பின்னாறுமாதம் பின்புறத்தாலும் ஊர்ந்து காலங்கழிக்குமென்று சொல்லி, இப்பெரும்பொய்யை மெய்யென்றுநம்பி, அதைப்பற்றி இன்னும் அசம்பாவிதக் கதைகளைப் புனைந்து வழங்குகின்றனர். மற்றப் பாம்புகளைப்போல் இதற்கு மொருதலைதானுண்டு; ஆனால் இதன்வால் கூர்மையாயிராது சற்றுக்கூழையாயிருக்கும்; இப்படி யுருண்டிருக்கும் வாலின்மேல் இரண்டு கறுத்த புள்ளிகளுண்டு. இப்புள்ளிகளைக் கண்ணென்றுகொண்டு மயங்கி வாலையுந் தலையென்பார்களோ? இம் மணற்பாம்பு தன்னைச் சுற்றிலுமுள்ள மணலின் நிறத்தையே கொண்டது; மணலின்மேல் புரளுங்கால், மணலுக்குமிதற்கும் பேதங்காண்பது மிகக்கடினமே. இங்ஙனமே தம்மைச் சுற்றியிருக்கும் பொருள்களினிறத்தை மேற்கொண்டு வாழ்வன, தோட்டங்களிற் செடிகளின் மேலகப்படுஞ் சில சிலந்திப்பூச்சிகளாம். சில சிறுகொம்புகள் போலும், சில சிறு விதைகள் போலும், சில சிறுபூவரும்புகள் போலும் வேஷம் பூண்டு பார்ப்போரையும், தம்மெதிரிகளையும் ஏமாற்றுவன. "தேவடியாப்பூச்சி"யென்றும், "வண்ணாத்திப்பூச்சி" யென்றும் பலபேர்கொண்டு வழங்கும் அழகிய பூச்சிகளின் கூட்டுப்புழுக்களும் இன்னணமே மரக்கொம்புகள்போல் வேடந்தரித்து மரத்தினிலைகளைச் சிறிதுசிறிதாய்த் தின்று அழிக்கின்றன. இவற்றைக் கண்டு பிடித்து ஓட்டிச் செடிகளைப்பாதுகாக்க யாம் எத்தனிக்கும் போது அவற்றிற் சில கைகால்களைச் சுருக்கிக் கொண்டு, எதிர்த்து நின்று நம்மைப் பயமுறுத்துவது நமக்குப் புன்னகை யுண்டாக்கும்.



கோயமுத்தூர், பழனி, நீலகிரி முதலிய இடங்களில் இலைப்பூச்சியென்றொரு பிராணியைக்காணலாம். அதற்கும்அது தின்னுமிலைக்கும் எவ்விதமாறுபாடுங் காண்பதரிது. நமது கண்களுக்கெதிரிலேயே இலையைத்தின்றுகொண்டிருக்க, அதை நாம் காண்பது மிக்க அசாத்தியமாகும். நிறமட்டுமே இலையைப் போன்றது மன்றி, இவற்றின் அங்க வமைப்பும் இலையின் அங்க வமைப்பைப் பெரிது மொத்திருக்கும்; ஆகவே இது இலையோ இலைப்பூச்சியோ என்று சந்தேகப்படுவது சாதாரணமாம். இதைப்போலவே செடிகளில் வசிப்பது இன்னுமொருபூச்சி; அதைக் 'கொம்புப்பூச்சி' யென்றும், "இடையன்" என்றும், "தயிர்கடையும் பூச்சி" யென்று மழைப்பார்கள். அதற்கு ஆங்கிலத்தில் "ஜெபப்பூச்சி" யென்னு மறு பெயருமுண்டு. இப்பெயர் கொள்ளவேண்டிய காரண மென்னை? நாம் ஜெபஞ் செய்யுழி இரண்டு கைகளையுஞ் சேர்த்துக்கூப்புவதுபோல், இதுவுமுட்காருங்கால் தன் முன்னிரண்டு கால்களையுஞ் சேர்த்து உயரத்தூக்கி உட்காரும். இது இலையுருவங்கொள்ளாதுகொம்புகளைப்போல்நீண்டு மெலிந்திருக்கும்.

முதுகெலும்பில்லாச் சில பிராணிகள் கடலின் மேற்பக்கத்துச் சீவிக்கின்றன. அவற்றைப் பெரு மீன்களும் மற்றைக் கடல்வாசிகளும் ஆவலாயுண்ணுமாதலின், எதிரியிடமிருந்து தப்பியோடிப் பிழைக்கும் பொருட்டு இவற்றுட்சில கண்ணாடிபோற் றெளிவான தேகமுடையன. தண்ணீர்க்கு மேல் நின்று இவற்றை நோக்கின் கடல்நீர் நிறங்கொண்டிருக்கும், கடலின் கீழிருந்து பார்க்க, ஆகாயத்தின் நீலவர்ணங்கொண்டதாகப் புலப்படும். ஆகவே எவ்வண்ணம் நோக்கினும் இவற்றின் சுயவுருவந்தோன்றாது. இத்தகைய உதாரணமும் இவ்வகுப்பிற் சேர்க்கப்படுதல் வேண்டும்.

இன்னு மோருதாரணம். கணவாய் மீன் என்று சொல்லப்படும் ஒருவிநோதப்பிராணி கடலில் வசிக்கின்றது; சென்னபட்டணத்துச் செம்பட்வர் அதைக் 'கடமான்' (கடல்மான்) என்று விளிப்பார்கள். அதன் தலையைச்சுற்றிப் பத்துக்கைகளும், தலையின்மீது விசாலமான இரண்டுகண்களுமுண்டு. கண்கள் மானின் கண் போன்றமையால், இதற்குக் கடமானென்று பெயரிட்டார் போலும்! பச்சோந்தியைப்

போற் கணவாய் மீனும் தன்னிறத்தை யடிக்கடி மாற்றும். வினோத தீபிகையில் நாம் பன்முறையும் பார்த்திருக்குஞ் சில சுழலும் புஷ்ப பிம்பங்கள் போல இதன்நிறம் கண்ணைப்பறிக்குமளவு இடைவிடாது மாறும். இந்த வேடிக்கையைக்கண்ணுற்ற இதனெதிரிகள், "இஃதென்னை? ஓர் இராக்கதன்போலும் 'கிட்டநெருங்கினால்விழுங்கிவிடுமோ' என்று நினைத்துப்பயந்து பலதிக்குகளிலுமோடும். ஆனால் இது வெறும் மாயவித்தை என்று பழக்கத்தாலறிந்த சிலபெருமீன்கள் கடமானை விழுங்கப் பின்றொடர்ந்தோடும்; அக்காலத்துக் கடமான் வேறொருபாயத்தால் மீனை வென்று ஓடி யொளிக்கும். எதிரியைத் தன்னருகிற் கண்டதும், தன்னிடத்துள்ள மைநிறைந்தஓர் பையைத் திறக்கவே, அந்தோ! கறுப்புமை கடல் நீரிற் கலக்கக் கடமானைச் சுற்றிலுமிருளடர்ந்து போம். அவ்விருளில், தூரத்தும் மீன் வழிதடுமாறித்திகைத்து நிற்க, கணவாய்மீன் கண்ணுக் கெட்டாத தூரம் நீந்தி யோடி மறைந்து போம். என்னவாச்சரியம்! இவ்வண்ணமே, கடவுளும் நம்மை மாயையாகிய இருளில் நிறுத்தி நாம் அங்கொன்றுந் தெரியாது பிரமித்து நல்வழிகாணாது வருந்தத் தாம் மறைந்தொளிந்து வேடிக்கை பார்க்கின்றாரன்றே!

கணவாய் மீன் போலவே, பச்சோந்தியும் பன்முறையுந் தன்னிறத்தை மாற்றுகின்றது. பல்லிக்கூட்டத்துள் வெகு அதிசயமான இப்பிராணி மிகுதியும் ஆபிரிக்காவிலுண்டு; தென்னிந்தியாவிலுமிரண்டொரு விதம் வசிக்கின்றது. அடிக்கடி தன் வர்ணத்தை மாற்றுவதால் கண்ணுக்குச் சுலபமாய்ப் புலப்படுவதில்லை. சிற்சில சமயத்து மிக வொடுங்கிமெலிந்து தானிருக்குங் கொம்பொடு கொம்பாய் மறைந்து போம். வேறு சிலசமயத்துக் காற்றை நிறைய உள்ளிழுத்துச் சுய உருவினும் நான்கு மடங்கு பருத்துக் காட்டும். நாக்கு மிகநீண்டது; நுனியில் பருத்துள்ளது; 7, 8, அங்குலத்திற் கப்பால் உள்ள பூச்சியை ஒரு விநாடி நேரத்துட் கவரக்கூடியது. இவற்றினும் வியக்கக்கூடியது பச்சோந்தியின் கண்ணே; ஒரு கண் நேரில் பார்க்க, மற்றொருகண் பின்னால் பார்க்கு மமைப்புடையது. ஆச்சரியம்! ஆச்சரியம்! நமக்கு மங்ஙனம் கண்களை யமைத்திரானே, என்று பிரமனை வசை கூறுவோர் எத்தனைப்பேர்!



இனி, சில ஜீவஜந்துக்கள், தமது நிறத்தையே ஒருபாயமாகக் கொண்டு, அவ்வுபாயத்தால் பிறபிராணிகளை வசீகரித்து அவை கிட்டநெருங்கவே அவற்றைத் தம் மிரையாக்கிக் கொள்ளுகின்றன ஆசியாகண்டத்துச் சில பாலைவனங்களில் மணல் வர்ணங்கொண்ட ஓர் பல்லியுண்டு. அதன் வாயினிரு மூலைகளிலும் இராகின்ற மிகச் சிவந்த இரண்டு இரேகைகள் தூரத்துப்பார்வைக்கு அழகிய மலர்கள் போற்றோன்றும். பூவிலுள்ள தேனைக்குடிக்க அலைந்துதிரியும் சிலபூச்சிகள் அப்போலிமலர்களைக்கண்டு மயங்கிநெருங்கவே, வஞ்சனையிற்றேர்ந்த மணற்பல்லி பூச்சிகளைப்பிடித்து வெகு களிப்புடன் தின்னும். தூண்டிற்காரமீனென்று பெயர்பெற்ற ஒருமீனும் இதே மாதிரி சூது செய்கின்றது. இதன் வாயைச்சுற்றிலும் ஓயாது அசைந்தாடுஞ் சிம்புகளுண்டு; அவற்றைச் சிறுபுழுக்களென்று நம்பி வேறு சிறுமீன்கள் தின்பதற்காக அருகிற்போனவுடன், "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற் கேற்பத் தாமே இரையாகிவிடும். இத்தகைய நிறத்திற்கே வசீகரநிறமென்று (aggressive coloration) பெயரிட்டோம்.

சிலபிராணிகள் தாங்கொண்ட வர்ணத்தால் பிறரைப்பயமுறுத்துகின்றன; "என்னருகில் வரேல்,வரினபாயம்" என்று தந்தமது நிறத்தால் எச்சரிக்கை செய்கின்றன. (Warning coloration) விஷப்பாம்புகட்கெல்லாம் அரசனாகிய நல்லரவத்துக்கு, இந்நல்லகுணம் பற்றியன்றே அப்பெயர்வந்தது. ஒருவனைக்கண்டதும் சீறிக்கொண்டு படத்தைவிரித்து ஓடிவருகிறதே—அதுவிஷத்தால் தீண்டி உயிரை மாய்ப்பதற்கே அங்ஙனஞ் செய்கின்றதென்று கொள்வதுசரியன்று. ஏனெனில், அதுநமக்குண்டாகக்கூடிய அபாயத்தைப்பற்றி அதனால் எச்சரிக்கை செய்கின்றதே யொழியக், கண்டதையெல்லாம் விஷந்தீண்டிக்கொல்வதற்கன்று. நஞ்சோ அடிக்கடி அபரிமிதமாயுண்டாவதில்லை; சிறிது சிறிதாகவும் மிகச்சாவகாசத்துடனும் உண்டாகும். அவ்வளவு அருமையாயுண்டாம் விஷத்தாற் கண்டவற்றை யெல்லாந் தீண்டி விஷத்தை வீணாக்குவதில் நல்லபாம்புக்குச் சிறிதும்பிரியம் இராது. ஆகவே அதை எவ்வளவுக் கெவ்வளவு சுருக்கமாய்ச்செலவிடுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு பாம்பிற்குப் பயனுண்டாம்.

# நாவடக்கம்.

——:o:——

கீழக்கரை M. ஜோஸப் டையாஸ் அவர்கள் எழுதியது.

(முற்றொடர்ச்சி.)

பேச முன்னமே என்னசொல்லவேண்டுமென்று நன்றாய் யோசிக்கிறது முக்கியமான முதல் எச்சரிக்கையாகும். நமது அவயவங்கள் இருக்கும் வகையை யோசித்தால், இந்த உண்மையை நன்றாய் அறிந்துகொள்ளலாம். ஏனென்றால் எல்லாச்சத்தத்தையும்கேட்பதற்காகக் காதுகள் எப்போதும் திறக்கப்பட்டிருக்கின்றன. நாவுக்குப்பல்லும் உதடுமாகிய இரண்டுவேலிகள் அல்லது இரண்டுசுவர்கள் இடப்பட்டிருக்கின்றன. இதனாலே நாம் பேசுவதற்கு எப்போதும் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்றுங் காட்டியிருக்கிறது. ஒவ்வொருவனும் கேட்பதற்கு மதுரமாயும் பேசத்தாமதமாகவுமிருக்க வேண்டுமென்று யாகப்பர் வசனித்தார். நாவின் கூறுபாடே இதை நமக்கு நன்கு விளக்கிக்காட்டும்.

அஃதென்னவென்றால், நாவிலே இரண்டு இரத்தத்தாரைகள் உண்டு. அவைகளிலொன்று சகல கிரியைகளுக்கும் ஊற்றாகிய இருதயத்திற்போய்ச் சேரும். வேறொன்று மூளைவரைக்கும் போகும். மூளை புத்திதங்குகிற இடமென்று ஞானசாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார்கள். இதினால் நாம் சொல்லுவதெல்லாம் இருதயத்திலிருந்து வரல்வேண்டுமென்றும் புத்தி அதை நடப்பிக்கவேண்டுமென்றும் தெளிவாய்க் காட்டியிருக்கின்றது. ஒவ்வொரு வார்த்தையும் நாவிலேயிருந்து புறப்படுமுன்னே அதை ஆத்தினாலே ஆராயவேண்டுமென்று அகுஸ்தின் சொல்லுகிறார். முந்தமுந்த வார்த்தையை இருதயத்தில் பிறப்பிக்கவேண்டும். அப்புறம் வாயைவிட்டுப் புறப்படுமுன்னே புத்தியைக் கொண்டு அதை ஆராயவேண்டும். பைத்தியக்காரனுக்கும் புத்தியுள்ளவனுக்கும் உள்ள வித்தியாசமேதென்றால், பைத்தியகாரனுடைய இருதயம் வாயிலிருக்கும். புத்தியுள்ளவனுடைய வாய் இருதயத்திலிருக்கும்; பைத்தியகாரனுடைய நாக்கு அவனிருதயத்தை வெளியே இழுக்கிறதினால் அவனுடைய இருதயம்வாயிலிருக்கும். வாயிலே வருகிறதற்கெல்லாம் அவன் இருதயம் சம்மதித்துக்கொள்ளும். ஆகையால் அவன் இருதயமும் நாக்கும் ஒன்



றுபோலிருக்கும். ஆனால் புத்தியுள்ளவனுடைய வாய் இருதயத்திலிருக்கும். ஏனென்றால் அவன் சொல்லுகிறதெல்லாம் இருதயத்திலிருந்து புறப்படும். அது புத்திஞாயத்துக்கு ஒத்திருக்கும். அவனுடைய நாக்கு இருதயத்துக்குப் பணிந்திருக்கும். பைத்தியகாரனுடைய இருதயம் நாவுக்குக்கீழ்ப்படிந்திருக்கும். அடக்கமிகுதியும்ஒழுக்கமரியாதையுமுள்ளவன் முந்தமுந்த வாயில்வைத்த உணவை மென்றுமென்று அப்புறம் விழுங்குவான். அப்படியே புத்தியும் விவேகமுமுள்ளவன் வார்த்தையை இருதயத்தில் வைத்து வெகுநேரம் சீர்தூக்கிப் பாராமல் வாயைவிட்டுப் புறப்பட விடமாட்டான். புத்தியும் யோசனையுமில்லாமல் சொன்னவார்த்தையினாலே சண்டையும் சச்சரவுமுண்டாகிறது வழக்கம். செலவுபண்ண எவ்வளவு எச்சரிக்கையோடு மனுஷர் பணப்பையைத் திறப்பார்களோ அவ்வளவு எச்சரிக்கையோடு நாமும் பேசுகிறதற்கு வாயைத் திறக்கவேண்டும். யாதொருவனுக்குப் பணம் கொடுக்கவேண்டுமோ எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று முந்தமுந்தக் கணக்குப்பார்ப்பார்களோ, அவ்வண்ணமே இவ்வளவு எச்சரிக்கையோடும் யோசனையோடும் பேசவாய் திறக்கவேண்டும். முந்தமுந்த பேசவேண்டுமோ வென்றும், அதின்பின் என்ன பேசவேண்டுமென்றும் யோசித்துப்பார்த்து, ஒருவன் வேறொருவனுக்குக்கொடுக்கவேண்டிய பணத்தைப்பார்க்க அதிகமாகக்கொடாமைபோல் நாமும் பேசவேண்டியதைப் பார்க்க அதிகம் பேசாதிருக்கக் கடவோம். பொருளாசைக்காரன் பணத்திலே செட்டாயிருக்கிறது போல் நாமும் வார்த்தையிலே செட்டிகளாகவிருப்போமாக. பேசுவதற்கு நாம் அனுசரிக்கவேண்டிய 2-ம் எச்சரிக்கை யேதென்றால் நாம் ஏன் பேசவேண்டுமென்று யோசிக்கவேண்டும். நாம் சொல்லுகிறது நல்லதாயிருக்கிறது போதாது; அதை நல்ல கருத்தோடு சொல்லவேண்டும். சிலமுறை மனுஷர் பத்திக்குரிய பேச்சுப் பேசுவார்கள். ஆனால் தங்களைப் பத்தியுள்ளவர்களென்றும் செட்டிக்காரரென்றும் மற்றவர்கள் எண்ணும்படியாகப் பேசுவதுண்டு. இது கள்ளஞானமும் வீண்மகிமையும் பைத்தியமுமென்று வேறொரு முனிவர் சொல்லுகிறார். மூன்றாவது, பேசுகிறவன் தான் யாரென்றும் யாரோடு பேசுகிறானென்றும் யார்முன்பாகப் பேசுகிறானென்றும் யோசிக்கவேண்டும். குருக்களும் பெரியோர்க

ளும் கூடினசங்கத்தில் வெகுபேச்சுப் பேசாதிருப்போமாக. வாலிபர்
பெரியமனுஷருக்கு முன்பாக பேசாதிருக்கிறது பெரியமனுஷருக்கு
ச்சமானமாகும். மௌனம் பயத்துக்கும் மரியாதைக்கும் அடையா
ளமாயிருக்கிறதினால் எவரொருவர்முன்னர் மௌனமாயிருக்கிறானோ
அவருக்கு வெகு கீழ்ப்படிதலையும் ஒழுக்க மரியாதையையுங் காட்
டுகிறான். எப்பொழுது பேசவேண்டுமென்று யோசிக்கிறது நான்
காம் எச்சரிக்கையாகும். தகுந்த நேரத்தில் பேசுவது புத்தியுள்ள
வனுக்கு அடுத்தகுணமாம். இதினாலன்றோ, புத்தியுள்ளவன் தகுந்த
நேரம் வருமட்டும் பேசமாட்டான். ஆனால் புத்தியில்லாதவனும்
துருதுருத்தவனும் தகுந்த நேரத்தைப் பார்க்கமாட்டார்களென்று
ஞானியானவர் வசனித்தார். தகுந்தநேரத்தில் சொன்னவார்த்தை
வெள்ளிக் கட்டிலின்மேல் இருக்கிற தங்கப் பழத்துக்கு ஒப்பாகுமெ
ன்று விவிலிய நூலில் சொல்லியிருக்கிறது. தகுந்தநேரத்தில்சொல்லா
தவார்த்தை வீணாகும். தகாதநேரத்தில் எவ்வளவு நல்லகாரியம் சொ
ன்னாலும் அது அருவருப்புக்குரியதாகும். பைத்தியகாரனுடைய வா
யிலிருந்து புறப்படுகிறவார்த்தை தள்ளுபடியாகும். ஏனென்றால் அ
வன் தகுந்தநேரத்தில் அதைச் சொல்லுகிறதில்லை. அன்றியும் மற்ற
வர்கள் பேசும்போது குறுக்கே பேசப் படாது. ஏனென்றால் இது
மரியாதைக்கும் தாழ்மைக்கும் அடாத காரியமாம். வேறொருவர்பே
சும்போது ஊடேபேசுகிறவன் தகுந்த நேரத்தில்பேசுகிறவனல்லன்.
ஒருவன் சொல்லுகிறதைச்சொல்லி முடிக்குமட்டும், காத்திருந்து
அப்புறம் பேசுவோமாக. இதுவிஷயத்தில் சலமோன் சொல்லுகி
றதாவது:—உன்னிடத்தில் சொல்லுகிறதைக் கேட்டுக்கொண்டபின்
மறுமொழி சொல்லு. கேட்கிறதற்குமுன் மறுமொழி சொல்லுகிற
வன்தான் பைத்தியகாரனென்றும் இகழ்ச்சிக் குரியவனென்றும் கா
ட்டுகிறான். நன்றாய்ப் பேசுவதற்கு 5ம் எச்சரிக்கை ஏதென்றால் பே
சும்போது சாடையும் சத்தமும் ஒழுக்கமரியாதைக்கடுத்ததாயிருக்க
வேண்டும். பக்கத்திருக்கிறவர்கள் கேட்கும்படியாய்ப் பேசுவது
போதும்: தூரத்திலிருக்கிறவனுக்கு யாதொருகாரியஞ்சொல்லவேண்
டுமென்றால் அவன் கிட்டப் போய்ச் சொல்லுவது நலம். தூரத்தி
லிருந்து பேசுகிறதும் தலைதெறிக்கக் கத்துகிறதும் ஒழுக்கத்துக்கு
அடாதகாரியம், கடைசியாய் நன்றாய்ப் பேசுவதற்குத்தகுந்த எச்ச



ரிக்கை அவசியமாயிருப்பதினால் பேசும்போது அதில் யாதோர்
எச்சரிக்கையை விட்டுவிடுகிறதுஎளிதாயிருக்கும். ஆகையால் கப்பல்
துறைமுகத்தில் ஒதுங்கி யிருக்கிறதுபோல நாமும் மௌனத்தில்
ஒதுங்கியிருப்பதே குற்றத்தில் விழாமைக்கு உத்தம பரிகாரமாகும்.
பேசுகிறதினால் வருகிற சகல பொல்லாப்பும்ஆபத்துக்களும் பேசாதி
ருந்தால் விலகிப்போமென்பதற்குச் சந்தேகமில்லை. வாயையும் நா
வையும் காக்கிறவன் தன் ஆத்துமாவுக்கு அநேக உபத்திரவம் வரா
தபடி காப்பானென்று ஞானியானவர் வசனித்தார். எங்கெங்கே
யிருந்தாலும் மௌனங்காத்தால் எப்பொழுதும் மன அமரிக்கையா
யிருக்கலாமென்று பூர்வீக வனவாசியொருவர் சொல்லிக்கொண்டு
வருவார். மற்றவர்களோடு கொஞ்சமாத்திரம் பேசித் தன் மனதுக்
குள் ஒதுங்கித் தன்னோடு வெகுவாய்ப் பேசுகிறதைவிட உத்தமமா
னகாரியம் ஒன்றுமில்லையென்று கிரேக்க சாஸ்திரியாகிய செனேக்
காவென்பவரும் சொல்லியிருக்கிறார். சோக்கிரெட்டெஸ் என்னும்
பெரிய சாஸ்திரியும், பேசினதினாலே நான் அநேகமுறை துக்கப்பட்
டேன்: பேசாதிருந்ததினாலே எப்பொழுதாவது நான் துக்கப்படவில்
லை—என்று சொல்லிக்கொண்டுவருவார். இதற்குக் காரணம்என்ன
வென்று காட்டுவதற்காகச் செனக்கா வென்னுஞ் சாஸ்திரி சொல்
லுகிறதாவது—ஒரு சமயத்திலே சொல்லாதகாரியத்தை மறு சமய
த்தில் சொல்லலாம். ஆனால் ஒருமுறை சொன்னதைச் சொல்லாத
படி நிறுத்த முடியாது. ஒருமுறை வாயைவிட்டுத் தப்பிப்போன
வார்த்தை ஒருக்காலும் திரும்பி வராதென்பதாம. வாயைவிட்டுப்
புறப்பட்டவார்த்தை கையைவிட்டு எறிந்த கல்லுக்குச் சமானம்.
ஆகையால் பேசவதற்கு முன்னரே வெகுநேரம் நினைப்பது அவசியம்.
ஏனெனில் பேசினபின் நினைப்பதற்கு நேரமில்லை. இதுவே முன்கூ
றிய முதல் எச்சரிக்கையுமாகும். ஆகையால் நாவுக்கு நல்லகாவல்
வைப்போமென்றுஸ்திரமான பிரதிக்கினைபண்ணி கடவுளைப்பணிந்து
கதிவழியொழுகிக் கடைத்தேறுவோமாக.

# காதம்பரி.

காதம்பரி என்பது ஒரு வடநூல்; இது வசன காவ்யம்; கந்
தருவ கன்னிகையாகிய காதம்பரி என்பவளை உச்சைனி நகரத்தரச
ஞகிய சந்திராபீடனென்பவன் மணம்புரிந்த சரித்திரம் இதில் விரி
த்துக் கூறப்படும்; இது பூர்வகாதம்பரியென்றும் உத்தரகாதம்பரி
யென்றும் இருவகைப்படுமெனவும், அவற்றுள், பூர்வகாதம்பரி பாண
கவியாலும் உத்தர காதம்பரி அவருடைய புத்திரராலும் செய்ய
ப்பட்டனவெனவும், இந்நூல் பன்னீராயிரங் கிரந்தமுடைத்தெனவுங் கூறுவர்; "காதம்பரீ ரஸஜ்ஞாநா மாஹாரோபி நரோசதே"
என்று பண்டையோர் இதைச் சிறப்பித்துப் பாராட்டியிருத்தல்
காண்க; 'காதம்பரியின் சுவையை யறிந்தவர்களுக்கு ஆகாரங்கூட
இனியாது' என்பது இதன் பொருள். ('கள்ளின் சுவையை யறிந்
தவர்களுக்கு ஆகாரங்கூட இனியாது' என்பது மற்றோர் பொருள்.)
"பாணோச்சிஷ்டம் ஜகத் ஸர்வம்" என்ற வழக்காலும் இந்நூ
லின் பெருமை நன்கு விளங்கும். கல்வியிற் பெரியராகிய கம்பரது
பாடல்களில் ஆங்காங்கு இக்காதம்பரியின் கருத்துக்களும் அழகான
கற்பனைகளும் அமைந்து கிடத்தல்கொண்டும் இந்நூற்சிறப்பு விளங்
கும். இத்துணைப் பெருஞ்சிறப்பினதாகிய காதம்பரியைத் தமிழ்
மக்களும் நன்குணர்ந்து களிக்குமாறு செய்யுள் வடிவமாக உபகரித்த
மகோபகாரி ஆதிவராககவி யென்னும் இயற்பெயருடைய ஒரு
ஸ்ரீவைஷ்ணவ பிராமணோத்தமரென்று தெரிகின்றது. இந்நூற்பாயி
ரம் 9, 10, 11, முதலிய கவிகளால் இந்நூலாசிரியராகிய ஆதிவராக
கவி யென்போர் அருளாளர் என்பவரது புத்திரரென்றும், ஆபஸ்
தம்ப ஸூத்திரமும் பாரத்துவாச கோத்திரமு முடையவரென்றும்,
சோழநாட்டிற் பிறந்தவரென்றும், பாண்டி நாட்டில் சுந்தராபுரி
யென்னுமூரில் சிற்றரசு புரிந்துவந்தவரும் பாவலர்களை யாதரித்துத்
தமிழணங்கைப் பெரிதுமேம்படச்செய்து புகழ்பெருகவாழ்ந்துவந்த
வருமாகிய தேவர்கோன், அமரர்கோன், தேவர்நாயகன் என்றித்தகைப்
பெயர்களையுடைய ஒரு வைசியகுல பிரபுசிகாமணியால் சன்மா
னிக்கப்பெற்று அத்தேவர்கோன் வேண்டுகோளால் இந்நூலை "அரு



ங்கலியுகத்து நாலாயிரத்தைஞ்ஞூற்றிரண்டு— திருந்திய வருடந்
தன்னில்" இயற்றி யுபகரித்தாரென்றும் விளங்குகின்றது. வட
மொழிப்பயிற்சி பெரிது முடையராய இந்நூலாசிரியர், பாற்கடல்
போலப் பெரிதும் பரந்து கிடக்கின்ற காதம்பரியை யுள்ளவாறே
மொழிபெயர்த்துதவ விருப்பங்கொண்டெழுந்தவராயினும், விரிவஞ்சி
அருமையான கற்பனைகளைமாத்திரம் தழுவிக் கதைத்தொடர் இனிது
நடக்குமாறு சுருங்கவுரைத்திருக்கின்றார்.

"பாற்கடற்சென்ற பூசை பாலின்மே லாசை வைத்து
மேற்கொள வரினு மெல்லா வெள்ளமுங் கொள்ள வற்றோ
பாற்கட லனைய காதம் பரிக்கடற் பரப்பி லாசை
மேற்கொளு மென்ற னெஞ்சம் வேண்டுவ கொள்ளுமன்றே."

என்ற பாயிரம் 14-ம் செய்யுளும் இங்கு நோக்கத்தக்கது. இந்
நூலாசிரியர் தமக்குள்ள வைஷ்ணவ மதாபிமானத்தை நூலில்
சமயம் நேர்ந்துழி இனிது காட்டிச் செல்லாநிற்பர். இது "மா
யோன்-பன்னிரண்டு திருநாம மெனவேதீ வினைகளைவேர் பறிய
வோட்டி." [செய்யுள்-161] என்பது முதலியவற்றால் தெரியலாம்.
எனினும், பிறமத தூஷணஞ்செய்யும் வழக்கம் இந்நல்லிசைப்புலவர்
பாலில்லையென்பது.

"சொல்லும் பொருளுங் கனியுஞ் சுவையுஞ் சுடரு
மெல்லுஞ் சசியு நிசியு மியலு மிசையு
மொல்லும் முடலு முயிரும்மென நாளு மொன்றிச்
செல்லும் பரசத்தி சிவந்தனைச் சிந்தை செய்வாம்."

எனச் சிவபெருமானையும்,

"செங்கோல மேனிச் சிவனார்திரு மைந்த னெங்கேள்
பங்கோன் முராரி மருகன்கடம் பர்க்கு முன்னோன்
வெங்கோப வேழ முகவன்வினை வேர றுக்கும்
எங்கோ னடிசேர் பவரிந்திர னென்ன வாழ்வார்."

என விநாயகக் கடவுளையும்,

"மஞ்சுண்ட கோல மயிலுண்டயில் வேலு முண்டு
துஞ்சுண் டினிநான் மறலிக்குயிர் தோற்ப துண்டோ

நஞ்சுண்ட நாதர் மகனார்திரு நாம முண்டு
நெஞ்சுண்டு பாட நினைவுண்டதி னேயுமுண்டே."

என முருகக்கடவுளையும் பெய்யன்போடு துதித்திருப்பதனு லறியலாம். இந்நூலாசிரியரையும் இந்நூலையும் பற்றிப்பின் ஒருமுறை விரிவாக எழுதவேண்டுமென்றிருப்பதனுல் இம்முறைசுருக்கமாகவே எழுத நேர்ந்தது. இந்நூற் செய்புளின் ரீதி இன்னதென்பதைச் செந்தமி ழபிமானிகள் தெரிந்துகொள்ளுமாறு மாதிரிக்காக ஒருபகுதியை அடியில் எழுதியிருக்கின்றேன்.

---

[சந்திராபீடனுக்குச் சுகநாதன் கூறிய அபிஷேகபுத்தி.]

தளையவிழ் மாலைச் சந்திரா பீட னமைச்சர்கோன் றன்மனைச்செல்ல
விளவர சுரிமைக் குரியனு மிவனுக் கினியுப தேசநாஞ் செய்யும்
அளவிதென் றெண்ணி யருட்சுக நாத னவன்முக நோக்கியே லுரவோ
யுளதுரை செய்வ தவ்வுரை யெல்லா முவந்துநீ கேளென வுரைப்பான்.

அறிவன வெல்லா மறிந்துநூ லனைத்து மாய்ந்தவற் றடைவிலே யொழுகிப்
பிறிதொரு நெறியா...............வுனக்கு...............தொன்றுநானில்லை
சிறிதினி யொன்றுண் டாகிலு மின்பச் செவ்வியாம் யௌவனத் தேவர்க்கு
மறுவறு சு... ........களாலகற் றெண்ணு வலியதா மதவிருண் மூடும்.

திருவினு மதங்கண் மூப்பினுந் தணியா செல்வமா இயவிருட் படலம்
ஒருவரான் மருந்தா லொன்றினுற் பரியா தூக்கமா மதனினும் வெம்மை
விரவினுர் செய்யுங் குளிர்ச்சியிற் சமியா விஷயமா இயவிஷ மோகம்
விரமரு மூல மந்திரத் தகலா மாபினு லுரைசெய்வேன் வேண்டும்.

தோன்றுநா டொடங்கி யிடைவிடாக் கெற்ப சுகம்புதி தாகிய விளமை
யென்றபே ரழகு நிகரிலா வலிமற் றீதெலாஞ் சேரவோ ரிடத்தி
லூன்றுமேற் றேன்று மொழுக்கறுத் தீமை யுரைக்கவுந் தக்கதோ வவற்றி
லான்றவோ ரொன்றே போதுமே தினியி லாடவர்க் கனர்த்தகா ரணமே.

பளிங்கிலே வீழ்ந்த சந்திர கிரணம் பற்றுவ போலவே முற்றும்
களிம்பிலா நெஞ்சிற் குருவுப தேசங் கடுகவே பற்றிநின் றெளிரு
மிளிர்ந்தபூண் மார்ப நின்னையே யன்ன மிகுதியோர் தகுதிநெஞ் சல்லா
லிளிம்பரா னவர்கள் களங்கமா நெஞ்சிற் கேற்குமோ விந்தவாய் மைகளே.



நீயிதன் முன்னம் விஷயமோ கத்தி னேர்ந்தனை யில்லையா கையினு
லேயிது கால முனக்குப தேச மியம்புதற் கிந்தமோ கத்தி
லாயவர்க் குரைக்கி லவ்வுப தேச மவர்மனத் தற்பமுந் தேங்கா
மாயமன் மதனன் சாயகந் துளைத்த வழிகளா லொழுகிவீழ்ந் துவிடும்.

நல்லுப தேசஞ் செய்யுநல் லோரை நாடிலெங் கேனுமோ ரொருவ
ரல்லவ ரஞ்சி நின்றெறதி ரொலிபோ லரசர்தா முரைத்ததே யுரைப்பர்
சொல்லிய பொழுதே யதனையுட் கொள்ளுந் தூயவ ருஞ்சிலர் கண்டாய்
மல்லுயர் தோளாய் மற்றுளார் கேளார் கேட்பினு மதத்தினுன் மறப்பர்.

திருமக ளென்றென் றுலகுளோ ரெல்லாஞ் சிறப்புடன் வியந்துபா ராட்டும்
பரிசய மறியா தவள்குண வேற்றுப் பன்மைதா னெப்படிப் பகர்வேன்
அரிதவ ளணையப் பெறவுமப் படியே யரியன தவத்தினுற் பெறினும்
கருமுகி லனையா யரிதுபோ காமற் காக்கவுங் காக்குயா றெளிதோ.

பரிசய மறியாள் மரபினை யோராள் பழுதிலா வொழுக்கமும் பாராள்
வரிசையை நினையாள் கல்வியை நாடாள் மருவிய மானமுங் கொள்ளாள்
பெருகிய வண்மை தன்னையு மெண்ணுள் பெரியமா தவத்தையா தரியாள்
பொருவற விசும்பிற் றோன்றிடு மின்போற் புகலறக் கடிதுபோய் மறையும்

பெருமையு முயர்வுந் தகுதியு நலனும் பிற்கா..........மற் றெல்லாந்
தருமிவ ளெனினு மிவளைநாம் வியக்கத் தகுமதோ விருளிரிந் தோட
வொருசுடர்க் கொழுந்து விட்டுவிட் டெரிய மையையே யுமிழுமா போலத்
திருவெனு மிவளு நிற்கநிற் கவெறுந் தீயொழுக் கங்களே விளைக்கும்.

மின்மினி யொளிபோற் சிறிதுபோ தற்பம் விளங்குறு செல்வமெய் யென்று
தன்மையு மறந்து மனமுமிந் தியமுந் தாமெனு கோடியுள் ளவர்போ.
லுன்மத ராகி யொருவழிப் படாம லோங்குபே ராசையிற் படர்ந்து
வன்மையு மறமு மிகுந்துகண் டறியா வாழ்வினுன் மயங்குவார் சிலர்கள்.

பூதமும் பசாசும் வந்தமுக் கியவர் போனகை செய்வதே செய்வர்
சாதல்வந் தணுகி யவரென மயங்கிச் சதமுக விகாரமே விளைப்பர்
வாதம்வந் தடைசி வயிறளைந் தவர்போல் வலத்திலு மிடத்திலும் புரிவர்
தீதுறும் படிக்குத் துண்டவர் போலத் தியங்கியோய்ந் துடல்சுழன் றிருப்பார்.

மூடவர்போல் வேறு சிலர்களா னடப்பர் முதுமுக வாதமுள் ளவர்போன்
மிடைபடா நடுங்கி யோரொரு வார்த்தை மிகுவருத் தத்தினே டுரைப்பர்
அடையவே பத்தா மவத்தையுற் றவர்போ லருகிருந் தவரையு மறியார்
உடையனோய் கண்ணி லுள்ளவர் போல வொளியுடை யவர்களைப் பாரார்.

தங்கள்கா ரியமே முடித்திடு கைக்குச் சமத்தரா கியசில கயவ
ரெங்களு யகனே யென்றுநின் றேத்தி யிவரிவ ரிதத்திலே யொழுகிப்
பங்கமாஞ் சூதை விநோதமே யென்றும் பானமே சுகமென வுரைத்து
மங்குநா ணறவே பிறர்மனைச் சேர லானதே யுலாத்தென மொழிந்தும்.

தாங்களு முள்ளே சிரித்துநின் றவர்க்குத் தகாதன சொல்லியே துதிப்ப
ஆங்கவை யெல்லா மெய்யெனக் கருதி யருந்திச் செருக்கினன் மயங்கி
யீங்கனல் விழியி லீசனே யென்று மிருபுய முகுந்தனே யென்றுந்
தேங்கம லத்தி லிராவய னென்றுஞ் சிந்தையாற் றம்மையுட் கொண்டு.

கடவுளா னவரை யுட்பட வணங்கார் காணிலுங் குரவரைப் பேணார்
அடைவுளார் சிலரை யறிந்துகொண் டாடா ரந்தணர் பூசையுஞ் செய்யார்
முடிவிலா வறிஞர் தம்மையே யிகழ்வர் மூத்தவர் மொழிகளுங் கேளார்
படியுறு லமைச்சர் வார்த்தைகேட் குமது பரிபவ மாகவே நினைவர்.

இராப்பக லிங்ஙனே சிறிதிடை விடாம லிருந்திதம் பேசிவா விகளிற்
பராக்கற விருந்து தாங்குகொக் கன்ன பண்பிலா தவர்களே யவர்க்குப்
பிராத்தரா னவரு மமைச்சரு மொன்றிற் பேதமில் தோழன்மார் தாமும்
விராய்க்கொள்பே ருறவு மவரவர் தமக்கே வேந்தர்தாம்வேண்டுவதளிப்பார்

சுந்தரா புரிவா ழமரர்கோன் றேவன் றாயெனுஞ் சனையநின் னெஞ்சம்
எந்தரா சதம்வந் தெதிர்ப்பினுங் கலங்கா தென்னுமந் தாரறி யாதார்
அந்தவா றமைந்த தாகிலு மிந்த வழகுமிவ் விளமையும் வலியும்
வந்தடர் செலவு மிசைசெ..................மாற்றொரு ததனைநீ மாற்றி.

மிகமிக வருந்தி யாகிலு மிந்த மேதினி தீதுறை யாமல்
தகைமிகு முதிய குரவர்நிந் தியாமற் சதிராரா னவர்க்ககப் படாமல்
அகமகிழ் தோழன் மாரிக ழாம லாசைக டம்வசத் திழாமல்
திகழ்தரு நல்லோர் தாமக லாமல் தீயவர் தாமணு காமல்.

மஞ்சுசேர் குழலார் மிகவணு காமல் வாழ்வினன் மதிமயங் காமற்
செஞ்சொல்வாழ் தெய்வ மாதுகை விடாமல் செருக்குளந் தனைக்கலக் காமல்
விஞ்சுநூ லமைச்சர் மொழிகளை மறாமல் விஷபமா னவைநலி யாமல்
நெஞ்சுதா னேடி வகைகட வாம னீதிநூ லடைவிலே யொழுகி.

மணமகி ழுந்தை தருமபி ஷேக மங்கல மதனையும் பெற்றுன்
னினமிகு குரவர் வழிவழி யாக வேந்துபூ பாரமுந் தாங்கிக்
கனைகழல் பணியா தவர்களை வணக்கிக் கண்டுவாழ் பவர்களை யுயர்த்திப்
புனைகதிர் முடியா யுந்தையே போலப் புகழுடன் வாழ்ந்திரு நீயே.

எனச்சுக நாத னியம்பிய மொழியி னியல்பினுற் சந்திரா பீடன்
மனத்திருள் கழுவித் துடைத்ததே போலமாசற விளங்கிநித் திரைகொண்
டனைத்தையு மறந்தோர் விழித்துணர் வுடையோ ரானது போலவே முழுது
நினைத்தவ னருகே சிறிதுபோ திருந்து நீடுதன் மாளிகை சேர்ந்தான்.

பி. ஆர். கிருஷ்ணமாசாரியன்.

ஸ்ரீ:

# ஆசிரியமாலைச்செய்யுள்கள்.

:o:

[ஆசிரியமாலை என்னும் பழைய நூலின் பாடல்கள் சில புறத்திரட்டில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் சங்ககாலத்ததாகவே அதன் வாக்கு முதலியவற்றால் கருதப்படுகிறது. அன்றியும், இம்மே பதிப்பிக்கப்பட்ட ஆசிரியமாலைப்பாடல்களுள் "குடிப்பிறப்புடுத்து" என்பது, தொல்காப்பியப்புறத்திணையியல் உஉ-ம்சூத்திரத்து "எட்டுவகை நுதலிய அவையத்தானும்" என்பதற்கும்; "இருசுடர் வழங்கா" என்னும் பாடல் ஷை இயல் கஉ-ம் சூத்திரத்து "தோலின்பெருக்கமும்" என்பதற்கும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இவற்றால் பழைய உரைகளிற் பயிலும் பெருமையுடையது இந்நூல் என்பது விளங்கும். இந்நூல், இன்ன விஷயம் பற்றியதென்பது தெரியவில்லையாயினும், ஸ்ரீராமபிரானைப்பற்றியும் பலநீதிகளைப் பற்றியும் இதிற் பாடல்கள் காணப்படுகின்றன. புறத்திரட்டில் கண்டபழைய நூல்களில், வளையாபதி முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், முன்பு "செந்தமிழ்" மூலம் வெளியிடப்பட்டிருத்தல் போலவே, ஆசிரியமாலைப்பாடல்களும் இப்போது வெளியிடப்படுகின்றன. இந்நூலில் கசு-செய்யுட்களே காணப்பட்டன. புறத்திரட்டுப்பிரதிகள் சிலவற்றைக்கொண்டு, அவற்றிலுள்ளவாறே பரிசோதித்தமையால் நேரும் பிழைகளை அறிஞர் பொறுத்துத் திருத்திக்கொள்வார்களென்று நம்பி இதனை வெளியிடத்துணிந்தேன் பத்திராசிரியர்].

க. மூவிலை நெடுவே லாதி வானவ
னிடமருங் கொளிக்கு மிமையக் கிழவி
தனிக்கண் விளங்கு நுதற்பிறை மேலோர்
மிகைப்பிறை கதுப்பிற் சூடி வளைக்கையின்
வாள்பிடித் தாளி யேறித் தானவன்
மாளக் கடும்போர் கடந்த குமரி
மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்கவிம் மலர்தலை யுலகே. (புறத்-கடவுள்வாழ்த்து)

௨. எளிதென விகழா தரிதென வுரையாது
நுமக்குரீர் நல்குதி ராயின் மனத்திடை
நினைப்பினுட் பிறக்கு மொழியினும் வளருந்
தொழிற்படிற் சினைவிடூஉப் பயக்கு முணர்த்தி
னிவணு மும்பருந் துணையே யதனாற்
றுறைதொறுந் துறைதொறு நோக்கி
யறமே நிறுத்துமி னறிந்திசி னோரே. (அறன்வலியுறுத்தல்)

௩. வரிக்கடை நெடுங்கண் விளங்க மேதக
மணித்தோடு பெய்து வாண்முகந் திருத்தி
நானிலம் விளைத்த பரவையொடு கெழீஇய
கான்யாற்று வருபுன லாடலுந் தேமலர்
வல்லிப் பந்தர் வண்டுவா ழொருசிறை
நிலபகட் புணருஞ் சேக்கையு மரமுதன்
மெல்லுரி வெண்டுகி லுடையுந் தொல்வகைப்
படையுழா விளையுளி னுணவு மந்திரத்துச்
சுடர்முதற் குலமுறை வளர்த்தலும் வரையாது
வருவிருந் தோம்புஞ் செல்வமும் வரைமுதற்
காடுகைக் கொள்ளு முறையுளு மென்றிவ்
வெண்வகை மரபி னிசைந்த வாழ்க்கை
யைம்பொறிச் சேனை காக்கு மாற்றலொடு
வென்றுவிளங்கு தவத்தின ரரசியற் பெருமை
மாக்கட லுடுத்த வரைப்பின்
யார்க்கினி தன்றஃ தறியுநர்ப் பெறினே. (தவம்)

௪. அரையது துகிலே மார்பின தார
முடியது முருகு நாறுந் தொடையல்
புடையன பால்வெண் கவரியின் கற்றை
மேலது மாலை தாழ்ந்த மணிக்காற்
றனிக்குடை முன்னது முரசு முழங்கு
தானை யிந்நிலை யினைய செல்வத்
தீங்கிவர் யாரோ தேவ ரல்லர்



இமைப்பதுஞ் செய்தனர் மாந்த ரேயென
மயக்க நீங்கக் களிற்றுமிசை வந்தனர்
நெருந லின்றிவர் பசிப்பிணி காய்தலி
னுணங்கிய துணியு முடுத்து மாசுமீப்
போர்த்த யாக்கை யோடு
தாமே யொருசிறை யிருந்தனர் மன்னே. (செல்வநிலையாமை)

௫. யாணர் வரவின் மேனா ளீங்கிவ
னிளமைச் செவ்வி நயந்த பேதையர்
காத லுண்கண் வருபனி நீங்கி
யின்னுந் துயில்கொண் டிலவே யின்றிவன்
போர்வை பசையற வுணங்கிப் பாணர்
பழந்தலைச் சீறியாழ் போலக் குரலழிந்து
நரம்புமடித் தியாத்த யாக்கை மூப்புறப்
பதிகெழு மூதூர் மன்றத்துப்
பொதியிற் புறஞ்சிறைச் சார்ந்தனன் மன்னே.
(இளமைநிலையாமை.)

௬. உள்ளது காக்குமிக் கள்ள யாக்கை
மேம்படு குற்ற முன்னொடு வழங்கலி
னுண்டி நல்லரசு தண்டத்தின் வகுத்த
நோன்பிணி யகப்பட் டிருப்பினுந்
தோன்றுவது பின்னர்க் காப்பது முன்னே.
(யாக்கைநிலையாமை.)

௭. நெருந லைம்பது சென்றது நின்ற
வின்றுஞ் செல்லா நின்றமுன் சென்று
வருநாள் கண்டார் யாரே யதனா
லொருநா ளகப்படுத் துடையோ ரின்மையி
னில்லது நாடுமி னுள்ளது கோடுமின்
வாழ்வி லின்பமும் புணர்மி னஃதான்று
கீழது நீரகம் புகினு மேலது
விசும்பின் பிடர்த்தலை யேறினும் புடையது
நேமி மால்வரைக் கப்புறம் புகினும்

கோள்வாய்த்துக் கொட்குங் கூற்றத்து
விளிக் கொடுநா விலக்குதற் கரிதே. (பலவகைநிலையாமை.)

அ. தற்பாடு பறவை பசிப்பப் பசையற
நீர்சூல் கொள்ளாது மாறிக் கால்பொரச்
சீரை வெண்டலைச் சிறுபுன் கொண்மூ
மழைகா லூன்று வளவயல் விளையா
வாய்மையுஞ் சேட்சென்று காக்குந் தீதரப்
பிறவு மெல்லா நெறிமாறு படுமே
கடுஞ்சினங் கவைஇய காட்சிக்
கொடுங்கோல் வேந்தன் காக்கு நாட்டே. (கொடுங்கோன்மை)

கூ. * குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற்
காத லின்பத் துடங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலு
மழுக்கா றின்மை யவாவின்மை யென்றுங்
இருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
யுடன்மரீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனிற்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே. (அவையறிதல்.)

௰ தாமரை வண்கிழங்கு விரவி யொராங்குக்
கருமலங்கு மிளிரக் கொழுமுகந் தியக்கிய
பழஞ்சேற்றுப் பரப்பிற் பருமுத லெடுத்து
நெடுங்கதி ரிறைஞ்ச வாங்கிக் கால்சாய்த்து

* தொல்காப்பியம், புறத்திணையியல்; உ௰ஆம் சூத்திரவுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.



வாளிற் றுமித்த சூடே மாவின்
சினைகளைந்து பிறக்கிய போரே யெருத்தின்
கவையடி வைத்த வுணவே மருதின்
கொழுநிழற் குவைஇய குப்பையோ டனைத்தினும்
பலர்மகிழ் தூங்க வுலகு புறந்தரூஉ
மாவண் சோணாட் டேர்தொறு
மேரோர் களவழி வாழிய நெடிதே. (நாடு)

கக. சிறுபுன் சில்லி நெடுவளி யானை
மரம்பயில் கானத்துப் பரற்புறங் கொண்ட
வடியா நெடுநெறிச் செல்லா புடையது
முல்லை வகுந்திற் போகிப் புல்லருந்திக்
கானியாற்றுத் தெண்ணீர் பருகிக் காமுற
முன்ப லரும்பிய பாணு செவ்வாய்
புன்றலை மகாஅர் தந்தை
கன்றுசூழ் கடிமனைக் கவைஇய நிரையே. (நிரைகோடல்)

கஉ. மாமுது தாதை யேவலி னூர்துறந்து
கானுறை வாழ்க்கையிற் கலந்த விராயன்
மாஅ விரலை வேட்டம் போகித்
தலைமகட் பிரிந்த தனிமையன் றனாது
சுற்றமுஞ் சேணிடை யதுவே முற்றியது
நஞ்சுகறை படுத்த புன்மிடற் றிறைவன்
உலகுபொதி யுருவமொடு கோதையைத் தலைநாள்
வெண்கோட்டுக் குன்ற மெடுத்த மீளி
வன்றோ ளாண்டகை யூரே யன்றோர்
சொன்முறை மறந்தனம் வாழி
வில்லு முண்டவற் கந்நா ளாங்கே
மாதர்க் கெண்டை வரிப்புறத் தோற்றமு
நீலக் குவளை நிறமும் பாழ்பட
இலங்கை யகழி முற்று மாக்கிய
கருங்கா னெடுமழைக் கண்ணும் விளிம்பழிந்து

பெருநீ ருகுதன் மாதோ .........
குரங்குதொழி லாண்ட விராமன்
அலங்குகடற் றெள்வா ......ஞான்றே. (எயில்கோடல்)

க௩. இருசுடர் வழங்காப் பெருமூ திலங்கை
நெடுந்தோ ளிராமன் கடந்தடு ஞான்றை
யெண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
யெச்சார் மருங்கினு மெயிற்புறத் திறுத்தலிற்
கடல்சூ ழரணம் போன்ற
துடல்சின வேந்தன் முற்றிய வூரே. * (ஷ)

க௪. மேலது வானத்து மூவா நகருங்
கீழது நாகர் நாடும் புடையன
திசைகாப் பாளர் தேயக் குறும்புங்
கொள்ளை சாற்றிக் கவர்ந்துமுன் றந்த
பல்வேறு விழுநிதி யெல்லா மவ்வழி
கண்ணுதல் வானவன் காதலி னிருந்த
குன்றேந்து தடக்கை யனைத்துந் தொழிலுறத்
தோலாத் துப்பிற் றுணிழல் வாழ்க்கை
வளம்படு மன்னர்க்கு வீசி யிலங்கையில்
வாடா நொச்சி வகுத்தனன்
மாலை வெண்குடை மறக்கர் கோவே. (எயில்காத்தல்)

க௫. இருபாற் சேனையு நனிமருண்டு நோக்க
முடிகியற் பொருளிசை முரவுக்கடுங் கொட்பி
னெண்டிசை மருங்கினு மெண்ணிறைந்து தோன்றினு
மொருதனி யனுமன் கையகன்று பரப்பிய
வன்மரந் துணிபட வேறுபல நோன்படை
வழங்கி யகம்பன் றோள்படை யாக
வோச்சியாங் கவனு முன்கையி னழுத்தலிற்
றனது வன்றலை யுடல்புக்குக் குளிப்ப

* தொல்காப்பியம், புறத்திணையியல், ௧௨-ஆம் சூத்திரவுரை மேற்கோள்.



கரிந்துயிர்போகு செந்நெறி பெறுமையிற்
பொருகளத்து நின்றன நெடுஞ்சேட் பொழுதே. (தானைமறம்)

க௬. சிறுசெவி யன்னே பெருங்கேள்வி யன்னே
குறுங்கண் ணினனே நெடுங்காட் சியனே
யிளைய னாயினு மறிவின்மூத் தனனே
மகளி ரூடினும் பொய்யறி யலனே
கீழோர் கீழ்மை செய்யினுந் தான்றன்
வாய்மை வழுக்க முறுத்த லஞ்சி
மேனெறி படரும் பேரா ளன்னே
மீண்டுநலந் தருதல் வேண்டிப் பாண்டியர்
பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாது
பல்குடி துவன்றிய கள்ளியம் பெரும்பதிச்
சால்பு மென்மேற் றோன்றிய வாளி
காதலின் மேவலன் பிறர்பிறர்க் கீயுந்
தானு முண்ணுர் விருந்துண்டு மிகினே. (புகழ்)

---

# புத்தகக் குறிப்பு.

——:o:——

பிரமோத்தரகாண்ட வசனம்:—நம் தமிழ்நாட்டில் வழங்கும் பழைய தமிழ்ப்புராணங்களுள்ளே வரகுணபாண்டியரால் இயற்றப்பெற்ற பிரமோத்தரகாண்டமானது சொன்னோக்கம் பொருணோக்கந் தொடைநோக்க நடைநோக்கங்களிற் சிறந்ததொன்றென்பது அறிஞரெல்லாம் நன்கறிந்தது. இப்புராணம் சிவபூஜாவிருதாதி தர்மங்கள் பலவற்றின்விசேடங்களை நன்கு விளக்குவது. இதுகாறும் இதனைப்படித்து இம்மைமறுமைப்பயன்களுக்குரியராய் நின்றவர் பெரும்பான்மை பண்டிதரே என்னலாம். நந்நாட்டில் தமிழ்ப்பாவினங்களில் அமைந்த நூல்களை அப்பண்டிதரன்றிப் பிறஜனங்களும் அறிந்து களித்தல் முடியாதன்றோ. ஆயினும், இப்போது

பிரமோத்தரகாண்டத்தைப்பற்றிய அக்குறையும் நீக்கப்பட்டுவிட்டதையறிந்து மகிழ்கின்றோம். வரகுணபாண்டியரது அப்புராணப்பொருளைச் சிறிதும் விடாமல் இனிய எளிய வசனநடையில், அரசாங்கத்தே வெகுகாலம் நீதிபதியாயிருந்து இப்போது இளைப்பாறிவரும் ஸ்ரீமத்-த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதிவெளியிட்டிருக்கிறார்கள். இவர்கள் உரைநடை மூலபுராணத்தின் பொழிப்புரைபோலவே அமைந்து, உரியவிடங்களில் அப்புராணச் செய்யுள்களையேமேற்கோளாகப்பெற்று நன்குவிளங்குகின்றது. இதன் பதிப்பும்கையடக்கமான அழகிய மாதிரிகையில் அமைந்துளது. இதற்கு முன்னும், இவ்வாறே,திருப்புகழ் முதலிய நூல்களை அழகாக வெளியிட்டுதவிய பிள்ளையவர்கள், இப்போது தென்னாட்டார் கண்டுகளிக்கத்தக்க பிரமோத்தரகாண்டத்தை வசனமாக்கியுதவியது போலவே, இன்னும் தமிழ்வளர்ச்சி புரிதற்கேற்ற அறிவாற்றல்களை அளிக்குமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.

**சித்தாந்தம்:**—இப்பெயருடன் ஒருசிறுவசனநூல் ஸ்ரீமத்-பூவை கல்யாணசுந்தரமுதலியாரவர்களால் இயற்றி வெளியிடப்பட்டுள்ளது. இதில் சைவசமயம் சித்தாந்தமென்று கூறப்படுதற்கு வேண்டிய காரணங்கள் எழுதப்பட்டுள்ளன. எடுத்துக்கொண்ட விஷயங்கள் இனிய நடையில் மிக வழகாக விளக்கப்பட்டிருக்கிறது. சைவர்கட்கு இச்சிறுநூல் சமயவுணர்ச்சியை யளித்து மகிழ்ச்சிதரக்கூடியதென்பதில் ஐயமில்லை. இதுபோலச் சமயமுதலிய அரியவிஷயங்களைப்பற்றி, யாவரும் எளிதிற் படித்தறியத்தக்க சிறுபுஸ்தகங்கள் வெளியிடுதல், பரோபகாரமாம். இது டெம்மி ௩௨-பக்கச்சிற்றுருவில், 40-பக்கங் கொண்டுளது. எமக்கு அன்புடன் ஒரு பிரதியனுப்பிய முதலியாரவர்கட்குப் பெரிதும் நன்றிகூறுகின்றேன்.

பத்திராசிரியர்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 14 NOV 1907 MADRAS.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௫] பிலவங்க௵ புரட்டாசி௴ [பகுதி-௧௧.

## பொய்யாமொழிப் புலவர்.

பொய்யாமொழிப் புலவரைப்பற்றித் தமிழ்நாட்டில் வழங்கும் கர்ணபரம்பரைகளை நோக்கும்போது அவர் ஒப்புயர்வற்று விளங்கிய திப்பியப்புலவர்களில் ஒருவரென்பது தெரிகிறது. ஆனால், இவர் வரலாறுகள் முழுதும் ஒழுங்காகக் காணப்படவில்லை. இக்குறை, ஏறக்குறைய நம் நாட்டுக்கவிஞர்கள் எல்லாரைப்பற்றியுமே அமைந்துள்ளது. நாகரிகமிகுந்த தேசத்தாரனைவரும் தங்கள் நாட்டிற் கண்மணிபோல்விளங்கிய கவிஞர் சிகாமணிகளது நூல்களைப்படித்து மகிழ்வதோடு அவர்களது அழகியசரிதங்களைப் பலவழியாலும் ஆராய்ச்சி செய்து நூல்கள்மூலமாக வெளியிட்டுப் போற்றுவதைப் பெருங்கடமையாகப் பூண்டுளார்கள். உத்தமமக்களது சரித்திரங்களை நன்றாகப் பரிசீலனை செய்து வெளியிடுவதால், அவர்களிடம் கௌரதாபுத்தி அதிகமாதலோடு, ஜனஸமூகவாழ்வை உயர்வும் ஒழுங்கும் பெறச்செய்வதற்கு அது முக்கிய ஏதுவுமாமென்பது அன்னோர்கருத்தாகும். ஆனால் பழையநூலாசிரியர் வரலாறுகளைத்தெரிந்துகொள்வதில் நம்முன்னோர் முற்றும் கவலை செலுத்தாதவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆக்கியோன்பெயர் முதலான பதினொரு விஷயங்களடங்கிய பாயிரத்தை ஒவ்வொரு நூலுமுடைத்தாகல்வேண்டுமென்றும், நூல்கேட்கப்புகுவோன் நூல் கேளாமுன் அதன் புறவுரையாகிய பாயிரங்கேட்டல் இன்றியமையாதெனவும், அவை கேளாக்கால் நூல்கேட்டற்கண் மனவூக்கஞ் செல்லா வெனவும் கருதி, "ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிர மில்லது பனுவ லன்றே" என்று, அவர்கள் கூறியிருப்பதொன்றே மேற்கூறிய உண்

*

மையைத்தெளிவுறுத்தும். இப்பாயிரம் ஒருநூற்குப்போலவே ஒரு சாஸ்திரத் தொகுப்பிற்கும் ஒரு பாஷைக்குமே வேண்டப்படும். "அருந்தமிழ்க்குப் பாயிரம்" என்றார் கம்பர் திருவாய்மொழியை. அத்தகைய நூலால் பாஷாஞானம் பெறுவது யாவருக்கும் எளிதாம். ஆனால், தமிழ்மொழியில் அத்தகைய நூல்கள் எழுதற்கு இன்றியமையாது வேண்டத்தக்க புலவர்சரிதங்கள்பல, எத்தனையோ மாறுபாடுகளும், புனைந்துரைகளுமாக இப்போது வழங்குகின்றன. அவற்றைத் தக்க ஆதாரங்களுடன் தூய்மைசெய்து வெளியிடின், அவையெல்லாம் திரண்டு பின்பு தமிழ்மொழியின் பாயிரத்திற்கு ஓர் அங்கமாக உபயோகப்படும். நிற்க.

பொய்யா மொழிப்புலவர் வரலாறு முழுமையும், நாம் ஒழுங்காக அறிந்து மகிழ்தற்கிடமில்லையாயினும், தமிழ்நாவலர்சரிதையென்னும் நூலிலும், சோழமண்டலசதகத்திலும் பிறவற்றிலும் காணப்படும் சிலவிசேடச்செய்திகளை வைத்து நாம் ஒருபடியாக அவர் வரலாற்றைக் காணக்கூடும். இக்காலத்தவர் வழங்கும் புலவர் சரிதங்களிலும், நமக்கு இருநூறு மூன்றூறாண்டுகட்குமுன் வழங்கிய வரலாறுகள் பெரிதும் உண்மையுடையனவாகக்கருத இடமுண்டென்பதுபற்றி, இப்புலவர்சரிதமெழுதற்கு அந்நூல்களே ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன.

இனிப், பொய்யாமொழிப் புலவர் வரலாறு வருமாறு:—பொய்யாமொழிப் புலவரதுநாடு தொண்டைமண்டலமென்பது;

"கையா திரண்டுடைக் காளைதன் வாயிற் கவிதைகொண்ட
பொய்யா மொழிக்கும் புகலிட மானது பொய்கையெல்லாம்
செய்யார் கமல மலரவண் டானங்கள் சென்றுதிகழ்
மையார் குவளை வயல்புடை சூழ்தொண்டை மண்டலமே"

என்னுஞ் செய்யுளால் அறியப்படும். "வஞ்சிப் பொய்யாமொழி" என நச்சினார்க்கினியருரைப் பாயிரத்தும்,

"பொதியி லகத்தியனைப் பொய்யா மொழியாய்
*அதிகை யமரப்பர்க் காளாய்த்—துதிபெருகு
செங்காட்டுக் கோட்டந் துறையூ ரெனுந்தலத்துச்
சங்காத்தங் கொண்டிருப்பாய் தான்." (தமிழ் நாவலர் சரிதை)

*"யதிகவமணபபாகவிழாய்" என்றுள்ள பிரதியிலிருந்து, இவ்வடி ஒரு படியாக அமைக்கப்பட்டது, உண்மைப்பாடந் தெளியப்படவில்லை.



எனத் தமிழ்நாவலர்சரிதையினும் வருதலால், வஞ்சி, திருச்செங்காட்டங்குடி, துறையூர் என்னுந் தலங்களில் இவர் வசித்தவரென்பது விளங்கும். இவர் சிறுபருவத்தே தெய்வாநுக்கிரகம் பெற்றுச் சாவவும் வாழவும் பாடவல்ல ஆற்றலுடையவராயினர். இது,

"வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த அருகா ரணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ" (ஷை)

எனத் தமிழ்நாவலர்சரிதையில் இவர் பாடியதாகக்கண்ட பாடலால் புலப்படும். இப்பாட்டுக் கம்பர் இளம்பருவத்தே தாம் காத்துவந்த வயற்கதிரை மேய்ந்த காளிங்கராயன் குதிரை சாகும்படிபாடியதாக இக்காலத்து வழங்குகின்றதாயினும், பழையவழக்குப் பொய்யாமொழியார்க்கே காணப்படுகிறது.

இவர் கலைமகள் அருள்பெற்றுப் புலவர்சிகாமணியாய் விளங்கிய காலத்தே, சங்கமிருந்து தமிழாராய்ந்ததும், செந்தமிழ்க்குப் பிறப்பிடமுமாகிய மதுரையில், பாண்டியனநுமதி பெற்றுப் பழைய சங்கத்தை மறுமுறைகூட்டித் தமிழ்வளர்ச்சிபுரிதலிற் பேரவாக்கொண்டவராய், பாண்டிநாடு நோக்கிப் புறப்பட்டனர். புறப்பட்டு, திருச்சிராப்பள்ளியை அடைந்து அங்குச் சிலநாள் தங்கியிருக்கும்போது சிவபிரான் அவர்முன் புலவர்வேடம் புனைந்து,

"கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுக்கும்—காட்டானைத்
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை." (ஷை)

எனத் தாமுவந்தஸ்தலம் இஃதென்பதைப் புலவர்க்கு ஞாபிக்கவும், அவர் பெரிதும் வியந்தவராய் மலைமேல் திருக்கோயில்கொண்ட நயினாரை வணங்கி, அபராதக்ஷாபணம் செய்துகொண்டு,

"அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே." (ஷை)

என்று துதித்தனர். பின்பு, அதனை விட்டு நீங்கி, மதுரை நோக்கிப் புறப்பட்டு இடையிற் பாலைவனத்தைக் கடந்து பெரிதும் இளைப்புடன் வரும்போது, முருகக்கடவுள் ஒருவேடுவ வுருக்கொண்டுவந்து 'நீவிர் யாவர்' என்று கேட்ப, "பொய்யாமொழி யென்னும் பெயருடைய புலவன் யான்" என்றிவர் கூற, 'ஆயின் என்மீது ஒருகவி பாடும்' என்று முருகர் சொல்ல, புலவர் 'உன் பெயர் யாது' என்று கேட்ப, முருகர் 'முட்டை' என்றனர்; என்றலும் புலவர்:—

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு" (ஷை)

என்று அம்முருகவேளாகிய வேடனைப் பாடினர். இது கேட்ட அக்கடவுள் உண் மகிழ்ந்தவராயினும், இப்பாலையைப் "பொன்போலும்" என்று தொடங்கியது பொருந்தவில்லையென்று தமக்குத் திருப்தியின்மையைக் காட்டுவார்போலக் கூறி, புலவர் பாடிய அச்சுரம்போக்குத்துறையிலேயே,

"விழுந்துளி யந்தரத்தே வேமென்று வீழ்ந்தால்
எழுந்த சுடர்வருமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினள்
பொய்யா மொழிப்பகைஞர் போல்" (ஷை)

என, அப்பொய்யாமொழியாரைப் புகழ்ந்துபாடித் தம் உண்மையுருவத்தைப் புலவர்க்கு வெளிப்படுத்தி அவர் வழியிளைப்பையுமாற்றி அவர் நாவில் தம்வேலால் எழுதி அநுக்கிரகத்துச் சென்றருளினர். இதனை, அருணகிரி நாதரும்,

"முற்றித்திரி வெற்றிக் குருபர
முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப்பெயர் செப்பிக் கவிபெறு—பெருமாளே"
"முற்பா டப்பா டற்று ருக்கோர் முட்கா டறகப் பொருளீவாய்"

"புகல்கலை கற்றூர்சொற் கேட்கத் தனிவழி வருவோனே" எனப் பலமுறை திருப்புகழிற் பாடினர். மார்க்கசகாய தேவரும், திருவிரிஞ்சைப் பிள்ளைத்தமிழில்:—



"பொய்யா மொழிப்புலவர் மதுரையிற் சங்கம் புரக்கவெழு நாள்மறவனாய்ப், புறவுற வளைத்தெனது பெயர்முட்டை பாடெனப் பொன்போலுமென்றுபாட, வெய்யான பாலைக்கி தேலாது நும்பெயர் விளம்பென விளம்ப வவர்மேல், விழுந்துளி யென்றெடுத் துப்பாடி யவர்நாவில் வேல்கொடு பதித்தசதுரா"

என்று இக்கதையினைக் குறிப்பிட்டனர். முருகக்கடவுள் தம் பெயர் "முட்டை" என்று கூறியது, இடுகுறியாக்க மென்பர் நன்னூல் விருத்திகாரர் (பெய. சூத்-கஎ. உரை). இவ்வாறு பாலைவனத்தைக் கடந்து இடைவழியிலுள்ள க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு, திருக்கானப்பேர் என்னும் காளையார்கோயிலை அடைந்தனர். அங்கே புலவர் நிசியிற் பசியால்வருந்திக் கூத்தாள் என்னுந் தாசியின் வீட்டை யடைந்து, அவர்களை உசாவ, பூர்வபாவவிசேடத்தால் அவளும் அவள் தமக்கையும்தாயும்பாட்டியும், இடையே, குருடிகளாகிப் பெரிதும்வருந்துவது கண்டு இரங்கி,

"கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீலம்—மூத்தாடன்
அன்னை முகத்தி லரவிந்த மன்னை தன்
அன்னை முகத்திலிரண் டம்பு." (ஷை).

என்னும் பாடலைக்கூற, அவர்கள் நால்வரும் முன்போற் கண்தெரிந்து, தம் மியற்கையழகுசிறக்க விளங்கி, புலவர்பெருமானைப் புகழ்ந்துபசரித்தனர். இச்செய்தி அவ்வூராரை யெல்லாம் பெரிதும் அதிசயப்படுத்தியது. அப்போது அவ்வூர்த்தாசிகளில் எழுபதின்மர் புலவரது அருள்பெற்று அவராற் பாடல்பெறவேண்டி, எழுபதினாயிரம் பொன்கொணர்ந்து அவர் பாதத்தில் வைத்து, 'அநுக்கிரகிக்க வேண்டு' மென்று பிரார்த்திக்க, புலவரும் அவர்களது உண்மையபிமானத்தைக்கண்டு உவந்து,

"வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன்றன் மக்க ளெழுபதின்மர்—தேசத்
திரவலர்மே னீட்டுவர்கை யீண்டுலகங் காக்கும்
புரவலர்மே னீட்டுவர்பொற் கால்" (ஷை)

என்று பாடி அருளினர். இனிப், புலவரால் குருடு நீங்கப்பெற்ற தாசிகள், எல்லாரும்விரும்பத்தக்க பேரழகும் ஆடல்பாடல்வன்மை

புமுடையாய்ப் பெருஞ்சம்பத்தெய்திநின்ற காலத்திலே, பொய்யாமொழியார் வேற்றுருமையத்து அவர்களைக்கண்டு மகிழவேண்டி இரவில் அவர்கள் வீட்டையடைந்து கதவைத் தட்ட, செல்வச்செருக்கால் அத்தாசிகள் சிறிதும்பொருட்பண்ணாது உள்ளிருந்தபோது, புலவர் வெகுண்டு "பழைய குருடிகாள்! கதவைத்திறவுங்கள்" என்று கூறினரெனவும், உடனே அவர்கள் நால்வர்க்கும் முன்போற் கண் தெரியாதுபோக, அதற்குக் காரணம் புலவரென்பதறிந்து அவர் காலடியில் வீழ்ந்து அபராதக்ஷாபணம் செய்துகொண்டார்களெனவும், "பழையகுருடி கதவைத் திறவடி" என வழங்கும் பழமொழி அதன் பின்னரே வழங்கியதெனவும் கூறுவர்.

பின்பு, புலவர் திருக்கானப்பேரைவிட்டு நீங்கி மதுரைப்பக்கமடைந்து, அப்போது பாண்டியன்மந்திரியாய்ப் புலவர்பாடும் புகழுடையோனாய் விளங்கிய மாறனுடையனென தஞ்சைவாணனைக்கண்டு அவன்பேரில் "தஞ்சைவாணன் கோவை" என்றதொரு அரியபிரபந்தமியற்றி அவனைப்புகழ்ந்து பாடினர். இவரியற்றிய தஞ்சைவாணன் கோவையின் சொன்னயம் தொடைநயம் பொருணயங்கள் அறிஞரெல்லாமறிந்து சுவைத்தவைகளே. கோவைகளிலே, திருச்சிற்றம்பலக்கோவையையடுத்துப் பழமை பெருமைகளாற்சிறந்து விளங்குவது வாணன்கோவையே. "மீனவர்தம் செங்கோல் முறைமை செலுத்திய வாணன்" "தென்னன் றன்னைப் பணிந்துகுற்றேவல்செய்யாது சமர்க்கெழுந்த, மன்னைப் புறங்கண்ட வாணன்," "வேளாண் மரபு விளக்கிய வாணன்" என அக்கோவையில் வருவனவற்றால், தஞ்சைவாணன், பாண்டியற்கு மந்திரியும்படைத்தலைவனுமானவனென்பதும் வேளாள மரபினன் என்பதும் விளங்கும். இப்பெருந்தகையைக் கோவையாற்புகழ அவனும் பொய்யாமொழியார்க்கு வேண்டிய வரிசைகள் அளித்துபசரித்தான். புலவர் பாண்டியனை முதன்மையாகக்கொண்டு மதுரைச்சங்கங்கூட்ட வெண்ணிய தம் கருத்தை அவனுக்கு எடுத்துரைத்து, அவனால் அதற்குரியவுதவியுடன் மதுரையடைந்து அரசனைக் காணவேண்டி அரமனை செல்ல, அரசன் திருவாலவாய்க்கோயிலுள்ளே சுவாமிதரிசனஞ் செய்யப்போயிருந்ததையறிந்து, நேரே அக்கோயிலை அடைந்தனர். அங்கே பாண்டியன்



சுவாமிதிருமுன்பு தண்டனிட்டுவணங்குகின்ற நிலையைப் பார்த்து, 'பாதிவசையும் பாதி நசையுமாக'

"குழைக்கா லரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் றோநின் றிருக்குல நீயவன்றன்
அழற்கா லொளிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே" (ஷை)

எனச், சிவபிரான் திருமுடியை இருப்பிடமாகக் கொண்டு விளங்கும் சந்திரனதுவமிசத்து நீபிறந்தவனாயினும், அப்பிரானது திருவடிகளை வணங்குதல், என்ன பொருத்தம்!' என்னும் கருத்தமைந்த பாடலைக் கூறினர். இதனை கேட்ட அரசன், தரிசன முடிந்ததும், புலவர் பக்கந் திரும்பி, அவர் ஊர் பெயர் முதலியவைகளையெல்லாம் விசாரித்தறிந்து, கோயிற்பிரதக்ஷிணஞ்செய்துகொண்டே, புலவர்தம்பால்வந்த நோக்கத்தை உசாவுவானாயினன். அவரும், மதுரையிற் பழைய சங்கத்தைக்கூட்டித் தமிழாராய்ச்சி செய்வித்தலே தம் முள்ளக்கிடக்கை என்று கூற, "தெய்வப்புலமை வாய்ந்த அச்சங்கத்தைக் கூட்டல் சிற்றறிவினராய நம்மால் ஆவதோ" என்று புலவரருமையறியாது சிறிது இகழ்ச்சிக்குறிப்புத் தோன்றக் கூறிவிட்டு, சங்கத்தார்சந்நிதி நெருங்கியவளவில் "புலவரே! இச்சங்கத்தாரது திருவுருவங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்யும்படி ஒரு பாடலியற்றவல்லீரேல், இறந்த சங்கத்தை நீர் எழுப்பவல்லீர் தாம்" என்று கூற உடனே புலவரும் அங்ஙனமேயாகவென்று சங்கப்புலவரை நோக்கி,

"உங்களிலே யானொருவ னொப்பேனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழென் பன்னூலு மேற்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீ ரின்று" (ஷை)

என்றுபாட, அப்புலவர் திருவுருவங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்தன. பாண்டியன் அதிசயமுற்று, மற்றும் சோதிக்கவெண்ணிப் புலவருடன் பொற்றாமரைக்கரையடைந்து 'இப்பொய்கையில் முன்பிருந்ததாகச் சொல்லப்படும் சங்கப்பலகை மேலேமிதக்குமாறு செய்து உமது தெய்வப்புலமையைக் காட்டுவீரேல், எண்ணிய கருமம் நிறைவேற்றுவல்' என்றாங்கூற, புலவரும், "தமிழைப்போற்றும் அரசர்கள்

இப்போதில்லையேயன்றி, புலவர் சிகாமணிகள் உலகில் உளரென்னும்
விஷயத்தைப் பாண்டியன் நன்கறியும்படி சங்கப்பலகைநீபமித"
என்னுங் கருத்துப்பட,

"பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீற்ணையே சற்றே மித" (ஷை)

எனப்பாடலும், சங்கப்பலகை மிதந்தெழுந்து பின் தாழ்ந்ததென்பர்
பாண்டியன் இவற்றையெல்லாங் கண்டு வியப்புமுவப்பும் அடைந்து.
பொய்யாமொழியார்பாற் றுனிமைத்த பிழைகளைப்பொறுக்குமா
றுவேண்டி, "பொய்யாமொழியாரே! நீர் நல்ல புலவர்" என்று அவர்
தெய்வப்புலமையைப் பலவாறுபுகழ்ந்து கூற, அதுகேட்ட புலவர்,

"அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
றிறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனின்" (ஷை)

என்று கூறினர். இப்பாட்டின் அருமைபெருமைகள் தமிழ்மக்
கட்கெல்லாம் ஆனந்தந் தரத்தக்கன. இவ்வாறு பழைய தமிழ்ச்சங்
கத்தைப் புதுப்பிக்கவேண்டிப்பாண்டியனிடம் முயன்றுவந்த பொய்
யாமொழிப்புலவர், முடிவில் அச்சங்கத்தை ஸ்தாபித்திருத்தல் வே
ண்டுமென்றே கருதப்படுகிறது.* கடைச்சங்கத்துக்குப் பின்பு மது
ரையிலே சிலசங்கங்கள் கூட்டப்பட்டிருந்தன என்பதற்குத் தக்க
ஆதாரங்களுள்ளன. விக்கிரமசகம் ருஉ௬ (கி. பி. 470)-ல் பூஜ்யபாத
ரென்பவர் மாணாக்கருளொருவராகிய வச்சிரநந்தியென்பவரால் தென்
மதுரையில் ஒரு திராவிடசங்கம் கூட்டப்பட்டதென்னுஞ் செய்தி, திக
ம்பரதரிசனமென்னும் ஜைனமதகிரந்தத்திற் காணப்படுதலாலும்; ஸ்ரீ

* கர்ணபரம்பரையில், அவர் சங்கம் ஸ்தாபிக்கவில்லையென்றும், அக்
கோபத்துடன் புலவர் பாண்டியனைவிட்டகன்றாரென்றும் வழங்குகிறது.
ஆனால் அதற்காதாரமில்லை. பாண்டியனிடம் தம் தெய்வப்புலமையைக் கா
ண்பித்தும், அவனால் புகழ்ப்பெற்றும் புலவர் விளங்கினரென்பது மேற்
கண்ட அவர்வரலாறுகளால் விளங்குதலின், அக்கர்ணபரம்பரையே உண்
மையென்று கொள்ளமுடியாது.



சடகோபர்காலத்தே மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கமிருந்ததாகவும் அச்சங்கத்தை ஆழ்வார் †மானபங்கப்படுத்தினதாகவும் ஸ்ரீ வைஷ்ணவகுருபரம்பரைகளாலும், "சங்கக் குவடிறக் குத்திய மாறப்பெயர்க்கொலையானை" என்னும் கம்பநாடர் வாக்காலும் விளங்குதலாலும் அச்சங்கங்களின் உண்மை விளங்கும். இவற்றுள் பிற்கூறிய ஆழ்வார்காலத்துச்சங்கமே பொய்யாமொழிப் புலவராற் கூட்டப்பட்டதெனவும்; அப்புலவரைத் தலைமையாகவுடைய கூட்டத்திலேயே திருத்தக்கதேவரால் சீவகசிந்தாமணி அரங்கேற்றப்பட்டதெனவும் ஊகிக்க இடமுண்டு; ஏனெனில், "வஞ்சிப்பொய்யாமொழிபுகழ்மையாறு காட்சித் திருத்தகுமுனிவன்" என நச்சினார்க்கினியருரைப்பாயிரத்திலிருதலாலும், அச்சிந்தாமணி மதுரைச்சங்கத்தே அரங்கேற்றப்பட்டதாகக் கதையுண்மையாலும், அச்சங்கமும் கடைச்சங்கமன்றென்பது "பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி"‡ என்னும் நச்சினார்க்கினியர் கூற்றால்விளங்குதலாலும் மேற்குறித்த ஊகம் பொருத்தமுடைத்தாதல் காண்க.

(இன்னும் வரும்)

பத்திராசிரியர்.

குறிப்பு:—இப்பொய்யாமொழியார் வரலாற்றில், ருகஉ-ம் பக்கத்து வரும் "அறமுரைத்தானும்" என்னும் வெண்பாவில், 'அறமுரைத்தான்' என்றது, "ஆலமர நீழ லறநால்வர்க் கன்றுரைத்த-ஆலமமர் கண்டத்தான்" என முதற்றிருவந்தாதியினும், 'அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி' எனத் திருவாசகத்தும் வருவனவற்றால், தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபிரானை யுணர்த்தி, ஈண்டு முதற்சங்கப்புலவராய் வீற்றிருந்தருளிய இறையனார் என்னும் மாத்திரையாய் நின்றது.

†இச்சங்கம் முந்தூற்றுவாடங்கியதெனக் குருபரம்பரைகள் கூறும். இச்சங்கத்தார்க்கு, பொருள்காணும்படி ஆழ்வார்விடுத்த பாசுரம் "அண்டகோளத் தாரணுவாகி" என்று தொடங்கும் அகவல்; செந்தமிழ் மூன்றாந் தொகுதி, ௪0௫-ஆம் பக்கம் பார்க்க.

‡ தொல்காப்பியம், செய்யுளியல் நச்சினார்க்கினியம் "பாநிலைவகையே" என்னுஞ் சூத்திரவுரை.

உ

சிவமயம்.

# தமிழ்மொழி "தூரானிய"மொழியினமா?

தமிழ்நிலம் பாரத வருஷத்திலே தென்பாலிலுள்ளது. அது பற்றி அது தென்மொழி எனப்படுவதாயிற்று. அதற்கு "வடவேங்கடந்தென்குமரியாயிடைத்தமிழ்" எனத் தற்காலத்துள்ள தமிழ்நூல்கட்கெல்லாந் தாய்நூலாக விளங்குந் தொல்காப்பியமும் நிலவரைப்புக் கூறும்.

தமி என்பது தனிமை; ழகரம் தமிழொன்றுக்குமேயுரிய சிறப்பெழுத்து. ழகரத்தாற் றனிச்சிறப்புற்றுத் தனித்து விளங்குமொழி என்பது தமிழ் என்னுஞ் சொற்குப்பொருளாம். தான் பிறிதொரு மொழிக்கட்பிறவாத தனிமொழி யென்பது அதன் முடிந்த பொருளாம்.

இவ்வாறன்றித் திரமிளமென்னுஞ் சொல் தமிழெனத் திரிந்ததென்றாலோ அது பொருந்தாது. என்னை? தானொருமொழியேயாகவும் அது தனக்கொருபெயரின்றி வேற்றுமொழிப் பெயர்கொண்டு வழங்குதல் அசம்பாவிதமென்க. தமிழ் என்னுஞ் சொல்லே வடமொழிக்காரரால் தமது பாஷாரீதிக்கியையத் திரமிளமெனத்திரித்து வழங்கப்படுவதாயிற்று. அதற்குச் சான்றாக வெண்ணெய்நல்லூர் என்பது 'வேண்ணுநல்லூரம்' என வடமொழியிலே அதன் ரீதிக்கியையத் திரித்து வழங்கப்படுதல் ஸ்காந்தத்திற் காண்க. அது நிற்க.

தமிழ் இயல்பிலே இன்னிசையுடையது. அது தன் இசையொழுக்குப் பிறழப்பெறுவதில்லை. அது பிறழ்தற்கேதுவாக வெழுத்துக்கள் கூடுமிடத்து அவ்வாறே தழாநிலையாக நில்லாது தம்முட்பொருத்தமுறக் கலக்கத்தக்கவாறு திரிந்து கூடப்பெறுமியல்புடையது. "பத்மம்" "பக்தி" "சிகித்சா" "சப்தம்" என்றிவ்வாறு எழுத்துக்கள் இயைபின்றி மயங்குதல் தமிழுக்கியல்பன்று. அஃதன்றிக் ஊனத்தும் அசைத்தும் தள்ளியும் நலிந்தும் வருந்தி உச்ச



ரித்தற்குரிய எழுத்தொலிகளில்லை. அவற்றாலாய சொற்களுமில்லை. பெரும்பாலும் ஒன்றையொன்றோசை யிணக்கமுடையனவாய் ஆற்றொழுக்குப்போலொழுகிச்செல்லு மெழுத்துக்களாலமைந்ததே தமிழ்மொழியாதலின் தமிழுக்கு இனிமை யென்னும் பொருளும் கௌணலக்கணத்தாற் கொள்ளப்படுவதாயிற்று.

தமிழிலேயுள்ள எழுத்துக்களெல்லாம் மயக்க வரம்புபெற்றுத் தம்முட்கூடி இயைந்து நின்று ஒழுகிய இசையும் செவிக்குக் கர்க்கசமின்றி இனிமையும் சாந்தமும் பயந்துநின்று தமிழை ஏனையமொழிகளோடினமாக்காது வேறுபடுத்தித் தனிமைபெற நிறுவுவனவாம்.

ஏனைய மொழிகளோ எழுத்துக்களது மயக்க விஷயத்திலே தமிழ்போல அத்தனை வரம்புடையனவல்ல. அவற்றுள்ளும் தூரானிய வகுப்பு மொழிகளிலே எழுத்துமயக்கவரம்பு சிறிதுமில்லையென்னலாம்படி நியதியின்றி எழுத்துக்கள் மயங்குவனவாம்.

இனி மொழிக்கண் ஈறாகவரும் எழுத்துக்கள் இவை யெனவும் முதலாக வரும் எழுத்துக்கள் இவை யெனவும் தமிழுக்கு வரம்புண்டு. தூரானிய வகுப்பு மொழிகளிலே அவ்வரம்பு நியதியும் காண்கின்றிலம். தமிழிலே, க், ச், த், ப், ட், ற். என்பன ஈறாதலில்லை. தூரானிய வகுப்பு மொழிகளிலே இவை ஈறாக வருதலுண்டு.

தூரானியவகுப்பு மொழிகளுள்ளே பீனபாஷாவாக்கியங்கள் சில எடுத்துக்காட்டுதும்:—

## பீனபாஷை—Finnic.

Isä meidän, joka olet taiwaisa, pyhitetty olkon sinum nimes; lahestykon sinum waldakundas; இவற்றைத் தமிழெழுத்தாற் கூறுதும்;—"இச மெயிதன், ஜோகா ஒலெத் தயிவயிசா, பிஹிதெத்தி ஒல்கோன் சினம் நிமெஸ்; லகெஸ்திகொன் சினம் வல்டாகுண்டாஸ்."

## லாப்பிய பாஷை—Lappic.

Attje mijen, jukko leh almesne, ailesen sjaddes to namma; pates to rik; "அத்ஜெ மிஜென், ஜக்கொ, லெஹ அல்மெஸ்னெ, அயிலெஸென் ஸ்ஜத்தெஸ் தொ நம்ம; படெஸ் தொ ரிக்."

மேலே முதலிற்காட்டிய“பீன”பாஷாவசனங்களின் தமிழ்மொழி
பெயர்ப்பு வருமாறு:—விண்ணுலகத்திலிருக்கும் எங்கள் பிதாவே,
உமது நாமம் பூசிக்கப்படுவதாக. உமது ராச்சியம் வருவதாக; என்
பது. “லாப்பிய”பாஷா வசனங்களின் மொழிபெயர்ப்பு மிதுவேயாம்.
பீனபாஷைச்சொற்களின் இறுதியெழுத்துக்களையும் அவற்றின் சந்
திநிலையையும் நோக்குமிடத்து அவை தமிழியல்புக்கு ஒருசிறிதும்
நிகராவதுகூடாதாம். தகரவொற்றை யீறாகவுடைய சொற்களும் சகர
வொற்றை யீறாகவுடைய சொற்களும் தமிழிற்கிடையா. ஹகரம் தமி
ழுக்குரியவக்ஷரமன்று. சகரவொற்றும் லகரமு முடன்மயங்கி வருத
லில்லை. இனி அவற்றுள் மிகவேண்டியவிடத்துமிக்கும் திரியவேண்டி
யவிடத்துத்திரிந்தும் கெடவேண்டியவிடத்துக்கெட்டும் தோன்றவே
ண்டியவிடத்துத்தோன்றியும் வந்தவேறுபாடுகள்புலப்படவில்லை. ஒரு
கால் நாம் அவற்றை உச்சரிப்பது பிழைபடுகினும் அக்ஷரநிலை நன்கு
புலப்படுகின்றது. நமது தமிழ்மொழிக்கும் “பீன” மொழிக்கும்
பொதுவியல்பாகவுள்ளது யாதுங்காண்கின்றிலம். தமிழிலே எழுத்
துக்களும் சொற்களும் ஒன்றோடொன்று சம்யோகப்படும் பெருஞ்
சிறப்புத் திராவியவகுப்புப் பாஷைகளிலே காணப்படுதலால் தமி
ழும் அவ்வகுப்பு மொழியேயாகற்பாலதென ஐரோப்பிய பண்டிதர்
சிலர் துணிவாராயினர். அங்ஙனந் துணிந்தாரும் அப்பாஷைகளை
நன்குகற்றார்போலத் தோன்றவில்லை. நன்குகற்றாராயின் அங்ங
னம் துணியார். சம்யோகப் பெருஞ்சிறப்பு அப்பாஷைகளிலே உள
தாகத் தோன்றவில்லை. அவ்வகுப்பினதாகிய “லாப்பிய” பாஷா வா
க்கியங்களை நோக்குதும். முதற்சொல்லாகிய “அத்ஜெ” என்பதில்
மயங்கியநடுவெழுத்தையும் இறுதியெழுத்தையும் நோக்குமிடத்து
அதனைத் தமிழுக்குரியஇயல்பெனப்போமா? “ஸ்ஜத்தெஸ்”என்பதை
நோக்குமிடத்துத்தமிழ்ச்சொல்லியல்பு ஓரற்பமாயினுங் காணப்படுகி
ன்றதா? யாவர்க்காயினுங் காணப்போமா? இல்லையே. பின்னர் யாது
கொண்டு தமிழை ஐரோப்பியபண்டிதர் திராவிய பாஷை வகுப்
பிற் புகுத்தினரோ அறிகின்றிலம்.

“பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப்பசுந்தமிழேனை, மண்ணிடைச்
சிலவிலக்கணவரம்பிலாமொழிபோ, லெண்ணிடைப்படக் கிடந்ததா
வெண்ணவும் படுமோ”

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்.

# இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

## வாலிவதைப்படலம்.

வள்ளற் கிளையான் பகர்வானிவன் றன்முன் வாளுள்
கொள்ளக் கொடுங்கூற் றுவனைக்கொணர்ந் தான்குரங்கி
னெள்ளற் கரும்போ ரஃதிசைக்கிலெ னென்னு மின்ன
லுள்ளத்தி னூன்ற வுணர்வுற்றில னென்று மென்றான்.

என்னும் ௯உ-ம் செய்யுளில், ‘எள்ளற் கரும்போ ரஃதிசைக்கிலெ னென்னுமின்னல்’ என்பது, ‘எள்ளற்குறும்போர்செயவெய்தின மென்னுமின்னல்’ எனக் காணப்படுகின்றது. குரங்கினெள்ளற் குறும் போரை யாமும் செயவந்தேமே என்கின்ற இன்னல் எனப்பொருள் கொள்ளுமிடத்துப் பொருத்தமுடைமையிற் பின்னையதே இயைபுடைத்து.

௸

குலமிது கல்வியீது கொற்றமீ தற்று நின்ற
நலமிது புவன மூன்றி னுயக முன்ன தன்றோ
வலமிதிவ் வுலகந் தாங்கு வண்மையீ தென்னே திண்மை
யலமரச் செய்யலாமோ வறிந்திருந் தயர்ந்த வார்போல்.

என்னும் ௯௯-ம் செய்யுளில், ‘நலமிது புவன மூன்றி னுயக முன்ன தன்றோ’ என்பது, ‘நலமிது புவன மூன்றி னுயகமீது நின்றோள்’ எனக்காணப்படுகின்றது. முன்னும் பின்னும் ‘ஈது’ ‘ஈது’ எனக் கூறி இடையில் ‘உன்னதன்றோ’ எனக் கூறல் பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. ‘வலமிது’ என்பதற்கு ‘நின்றோள்’ என்பதும் இயைபுடைத்தாதல் காண்க.

## அரசியற்படலம்.

என்றா னின்னன பன்னி யின்னலோ
டொன்றா னுணர் வேத முற்றிலா
னின்றா னந்நிலை நோக்கி நீதிசால்
வன்றாண் மால்வரை யன்ன மாருதி.

என்னும் ௧௭-ம் செய்யுளில், 'நின்ரு ளங்கிலே நோக்கி நீதிசால்' என்பது 'நின்றாளைத் தனிநெடிதுதேற்றியே' எனக் காணப்படுகின்றது. புலம்பியோரைத் தேற்றல் வழக்காதலானும், வான்மீகராமாயணத்திலும் தாரையை அநுமன் பலவாறு தேற்றியதாகக் கூறியிருத்தலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. வான்மீக ராமாயணத்திற் பலவாறு தேற்றியதாகக் கூறியிருத்தலாற்ருன் இங்கும் கம்பர் 'நெடிதுதேற்றியே' என்ருர்.

ஷை

அப்போ தேயரு ணின்ற வண்ணலும்
மெய்ப்போர் மாருதி தன்னை வீரநீ
இப்போ தேகொண ரின்ன செய்வினைக்
கொப்பா மியாவையு மென்று ணர்த்தலும்.

என்னும் ௨௩-ம் செய்யுளில், 'அப்போதே யருணின்ற வண்ணலும்' என்பது 'அப்போதே யருளண்ணல் பின்னரும்' எனக்காணப்படுகின்றது. 'இலக்குவனை முடிசூட்டுமாறு கூறிப் பின் அநுமனை அதற்குரிய உபகரணங்களைக் கொண்டுவருமாறு கட்டளையிட்டான்' என்றலே பொருத்தமுடைத்தாதலிற் பின்னையதே இயைபுடைத்து. 'அருணின்ற வண்ணல்' என்பதற்கு இலக்குவனெனப் பொருள்கூறுவாருமுளர். அதற்கு 'அருணின்ற' என்னும் அடை இயைபின்ருதல்காண்க.

ஷை

ஆக்கமுங் கேடுந் தாஞ்செ யறத்தொடு பாவ மாய
போக்கிலே துண்மை தேருர் பொருவரும் புலமை நாலோர்
தாக்கின வொன்றே டொன்று தருக்குறுஞ் செருவிற் றக்கோய்
பாக்கிய மன்றி மற்றும் பாவத்தைப் பற்ற லாமோ.

என்னும் ௩௯-ம் செய்யுளில், 'பாக்கியமன்றி மற்றும் பாவத்தைப் பற்றலாமோ' என்பது 'பாக்கியங்கெடுத்துச் சூழும் பாவத்தைப்பற்றலாமோ' எனக்காணப்படுகின்றது. 'செருவில்' என்பதற்கு 'கெடுத்துச்சூழும்' என்னும் வினைகளியையுடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. முன்னைய பாடத்தின்படி 'செருவில்' என்பதற்கு இயைபான முடிபின்மை காண்க.



ஷை

ஆழியா னனைய கூற வாணையீ தாயி னஃதே
வாழியான் புரிவ னென்று வணங்கி மாருதியும் போனன்
சூழிமா லியானை யன்ன தம்பியுந் தானுந் தொல்லை
யூழிநா யகனும் வேரு ருயர்தடங் குன்ற முற்ருர்.'

என்னும் ௫௧-ம் செய்யுளில், 'தம்பியுந் தானுந் தொல்லை' என்பது 'தம்பியோடெழுந்து தொல்லை' எனக்காணப்படுகின்றது. 'தானுந் தொல்லை ஊழிநாயகனும்' என்பது பொருள் கோடற்குரியதாயினும் தொடர்ச்சிறப்பின்ருதலிற் பின்னையதே சிறப்புடைத்து. உடனிகழ்ச்சிக்கிசைய 'உற்ருன்' என்னும் பாடமுங் காணப்படுகின்றது.

## கார்காலப்படலம்.

விழையேன் விழைவா னவைமேன் மையினின்
றிழையே னுணர்வே னவையின் மையினாற்
பிழையே னுயிரோடெபிரிந்தனரா
லுழையே யவரெவ் வுழையா ருலாயாய்.

என்னும் ௫௫-ம் செய்யுளில், 'விழையேன் விழைவானவை மேன்மையினின்-றிழையே னுணர்வே னவையின் மையினால்' என்பது, 'இழைதோய் முலையாள் விழைவெண் ணுகினும்—முழைதா னுணர்வே னுயிரின் மையினால்' எனக் காணப்படுகின்றது. முந்திய பாடத்தின்படி பொருள் கூறுமிடத்து உழைக்கும் அப்பொருட்கும் இயைபின்மை காணப்படுதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. பிந்திய பாடத்தின் பொருள் உழைக்கு இயைபுடைத்தாதல் நன்றுகாணப்படுதல் காண்க. நும் என்றது மான்களை நோக்கி. முந்திய உயிர் சீதை.

ஷை

நிறங்கருகு கங்குல்பக லின்றநிலை நீங்கா
தறங்கருது சிந்தைமுனி யந்தணரி னலிப்
பிறங்கரு நெடுந்துளி படப்பெயர்வில் குன்றி
னுறங்கலில் விலங்கலில நின்றவுயர் வேழம்.

என்னும் ௭௬-ம் செய்யுளில் 'உறங்கலில் விலங்கலில நின்ற' என்பது 'உறங்கிய விலங்கறனி நின்ற' எனக்காணப்படுகின்றது. 'உறங்கலில் விலங்கலில' என்பது பொருட்சிறப்பின்ருதலிற் பின்னையதே சிறப்

புடைத்து. யானைகள் மலைகளினும் சரிப்பனவாதலின் உறங்கியு விலங்கலில் தனியே நின்றன என்றார். பெயர்வில் குன்றின் என்பதில் இன் உவம உருபு. 'பெயர்விலாமல்' எனவும் பாடம்.

கிட்கிந்தைப்படலம்.

பெறலருந்திருப் பெற்றுத விப்பெருந்
திறநி னைந்திலன் சீர்மையிற் றீர்ந்தன
னறம றந்தன னன்பு கிடக்கநம்
மறம றிந்திலன் வாழ்வின் மயங்கினன்.

என்னும் ௫-ம் செய்யுளில், 'உதவிப்பெரும்' என்பது 'உதவப்பெறும்' எனக்காணப்படுகின்றது. நாமுதவப் பெறுதற்கரிய திருவைப் பெற்றுவைத்துய பின்பெற்ற தன்மை [illegible] என்றாகத் பிடித்துப் பொருள் சிறத்தலிற் பின்னையதே [illegible]து.

ஷெ

மந்திரத்தனி மாருதி தன்னொடும்
வெந்திறற்படை வீரர் விராய்வர
வந்தரத்தின்வந் தன்னை தன் கோயிலை
யிந்திரற்கு மகன்மக னெய்தினன்.

என்னும் உஎ-ம் செய்யுளில் 'வெந்திறற் படைவீரர் விராய்வர' என்பது, 'வெந்திறற் கதவீரன் விறைவிடே' எனக்காணப்படுகின்றது. அனுமனைக் கூவியது விரைவுதற்கேயாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்தென்க.

இங்ஙனம்,
சி கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன்.

# நல்லொழுக்கம்.

(ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.)

(௬0௯-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஞானியானவர் நூற்றுக்கணக்கான சந்ததி பரம்பரைக்குப் போதகராயிருக்கிறார். 'லூ' என்பவருடைய ஒழுக்கங்கள் கேள்விப்படுகிறபொழுது, மந்தர்கள் தீக்ஷண்யமுடையோராகவும், சலனமுடையோர் ஸ்திரசித்தமுடையோராகவும் ஆகின்றனர்" என்று சினர்கூறுகின்றனர். இவ்வாறு ஒரு நல்ல மனிதன் நடந்த நடக்கையானது அவனுடைய பின்னோருக்கெல்லாம் சுவாதீனத்திற்கும் நிவிர்த்திக்கும் தோவவாக்காக நிகழ்கின்றது.

"நமக்குப் பின்னர் வாழ்வோர்களின் கருத்தில் வசிப்பதே, மரணமின்மையாகின்றது."

நல்ல மனிதர்கள் மொழிந்த பொன்போன்ற மொழிகளும் அவர்கள் ஸ்தாபித்த நிதர்சனங்களும் எப்பொழுதும்நிலைக்கின்றன. அவைகள் அவர்களுடைய பின்னோரின் சிந்தனைகளிலும் கருத்திலும் புகுந்து இப்பிறவி மார்க்கத்தில் அவர்களுக்கு உதவி செய்து மரண சமயத்தில் அவர்களுக்கு அடிக்கடி ஆறுதல் செய்கின்றன. சிறைச்சாலையில் இறந்த ஹென்றி மார்ஷன் சொன்னவாறு:—"மிகவும் துக்கமும் மிகவும் துன்பமுமான மரணமானது நல்லொழுக்கத்தில் செலவு செய்யப்பட்ட வாழ்நாளின் ஞாபகத்துடன் ஒத்துப்பார்க்கையில் ஒன்றுமில்லாததாகவிருக்கிறது."

---

## நான்காவது அதிகாரம்.

### வேலை.

"ஆகையால் எழுந்திரு, செய்துகொண்டேயிரு. இறைவன் உன்னுடன் இருப்பார்"—கிரானிகில்ஸ்.

"நீ எப்பொழுதும் வசிக்கிறதாக நினைத்து வேலை செய். இப்பொழுதே சாகிறதாக நினைத்து வணக்கஞ் செய்":—பதினுன்காம் லூயி.

"பாக்கியம்பெற்ற வேலையே! நீ எப்பொழுதாவது கடவுளின் சாபமாக இருப்பின், அவருடைய அனுக்கிரகந்தான் யாது?—ஜெ. பி. ஜெல்லக்கர்க்.

"ஒவ்வொரு மனிதனும் பிரவிர்த்தி செய்யட்டும். தன்னுடைய
சுபாவத்துக்குத்தக்க உயர்ந்த வேலையில் பிரவிர்த்தி செய்து தன்ை
ற் கூடியவரை செய்ததாலாய திருப்தியுடன் ,சாகட்டும்"—ஸிட்னி
ஸ்மித்.

வேலை செய்தலானது அனுஷ்டான சித்தமான ஒழுக்கத்தைக்
கற்பிப்பதிற் சிறந்ததாயிருக்கின்றது. அது பணிவையும் மன அடக்
கத்தையும், கவனத்தையும், உழைப்பையும், விடாமுயற்சியையும்
பெறும்படி பழக்குகின்றது. ஒரு மனிதனுக்கு அவனுடைய விசே
ஷமான தொழிலிற் சிறப்பையும், சாமர்த்தியத்தையும் கொடுக்கின்
றது. சாதாரண உலக காரியங்களை நடத்துவதில் தகுதியையும்
சாதுர்யத்தையும் கொடுக்கின்றது.

வேலை செய்தலானது மனிதர்களையும் ஜாதியாரையும் மேல் நட
த்துகிற அழியாத சட்ட விதியாகி, நம்முடைய வாழ்க்கைக்குப்
பிரமாணமாக இருக்கின்றது. மனிதருட் பெரும்பாலார் ஜீவனம்
செய்யும்பொருட்டு அவசியமாய்த் தங்கள் கைகளால் வேலை செய்ய
வேண்டியிருக்கிறது. ஆனல் இவ்வாழ்க்கையை அனுபவிக்கவேண்
டிய முறைமைப்படி அவர்கள் அனுபவிக்க விரும்பினல் ஏதாவது
ஒரு விதத்தில் எல்லாரும் வேலைசெய்யவேண்டும்.

உழைப்பானது பாரமாகவும் தண்டனையாகவும் இருக்கலாம்.
ஆனல் அது கண்ணியமாகவும் மகிமையாகவுமிருக்கின்றது. அஃ
தின்றி ஒன்றும் முடியாது. மனிதனிடத்திலுள்ள பெருமையெல்
லாம் உழைப்பின் வழியே உண்டாகின்றது. நாகரீகமும் அதின்
பயனாக இருக்கின்றது. உழைப்பு எடுபட்டுப்போனல், ஆதாம் உ
டைய சந்ததியார் உடனே சன்மார்க்கத்தை இழந்துவிடுவார்.

மனிதனுக்கு நிர்ப்பாக்கியமாயுள்ளது சோம்பலேயன்றி உழை
ப்பன்று. சோம்பலானது மனிதர்களின் தைரியத்தையும் ஜாதியா
ரின் தைரியத்தையும் தின்று, இரும்பைத் துருநாசமாக்குகிறதுபோ
ல, அவர்களை நாசப்படுத்துகின்றது. அலெக்ஸாண்டர் என்பவர் பா
ரசீகரை ஜெயித்து அவர்களுடைய நடை உடைகளைக் கவனிக்கும்
படியான சந்தர்ப்பம் வாய்த்தபொழுது காமவின்ப ஒழுக்கத்தைவிட
அதிக இழிவானதாவது உழைப்புள்ள ஜீவனத்தைவிட மிகவும்



கௌரவமானதாவது வேறொன்றிருக்கக் கூடுமோவென்று அவர்கள்
அறிந்ததாகத் தோற்றவில்லையென்று அபிப்பிராயப்பட்டனர். 'செவ
ரஸ்' சக்கரவர்த்தி, 'யார்க்' பட்டணத்திற்கு 'கிராம்பியன்ஸ்' அடிவா
ரத்தினின்றும் தொட்டிற்பல்லக்கிற் கொண்டுபோகப்பட்டு அங்கே
மரணப்படுக்கையிற் கிடக்கையில் "நாம் வேலை செய்யவேண்டும்"
என்பது அவருடைய அந்தியமான உபதேச மொழியாயிருந்தது
ரோமன் சேனதிபதிகளின் அதிகாரத்தைக் காத்து விசாலப்படுத்தி
யது இடையறாத முயற்சியன்றி வேறொன்றுமில்லை.

விவசாய ஜீவனத்தின் சாதாரண கைத்தொழில்கள் மிகவுமுய
ர்வுற்ற நாகரீகமான கௌரவத்துடன் சமத்துவமாய் நின்ற காலத்தி
லுள்ள, இத்தாலியா தேசத்தின் பூர்வீக ஜனசங்க ஸ்திதியை விவரிக்
கையில், வெற்றி பெற்ற வீராதிபர்களும் வீரர்களும், உழவு செய்
தற்குத் திருப்தியுடன் திரும்பினர் என்று பிளினி என்பவர் பேசுகி
றார். அக்காலத்திற் சேனவீரர்களும் தங்கள் கைகளால் நிலத்தை
உழ அந்நிலமானது, வாகைசூட்டப்பெற்று வெற்றியுற்ற உழவர்க
ளால் நடத்தப்பட்ட கொழுவின் கீழ்ச் செழித்திருந்தது. எல்லா
விதமான தொழில்களிலும் அடிமைகள் பெரிதும் நியமிக்கப்பெற்ற
பின்னரே, வேலை செய்வதானது, கண்யம் பெறாத இழிவுற்றதாய்
மதிக்கப்படலாயிற்று. சோம்பலும், சுகபோகமுங், ரோம் தேசத்து
அரசாங்க வகுப்பினர்க்குள் இலக்ஷணமாக ஏற்படவே, ஏறக்குறை
ய விரைவில் அந்த ராஜ்ஜியத்தின் அழிவானது அவசியமாயிற்று.

நாம் மிகவும் ஜாக்கிரதையுடன் காத்துக்கொள்ளவேண்டிய கெ
ட்ட சுபாவத்தில் சோம்பலுக்கு மிஞ்சினது வேறொன்றுமில்லையெ
ன்னலாம். உலகத்தில் அநேக தேசங்களுக்கு யாத்திரை செய்திரு
ந்த, ஓர் புத்திசாலியான அயல் நாட்டானை நோக்கி, நம் ஜாதியாரி
டம், சர்வ சாதாரணமாய் எல்லாவற்றினும் அதிகமாய்ப் பொருந்திய
விசேஷித்த குணம் யாதென்று கவனித்ததுண்டா என்று, மிஸ்டர்
கார்னி' கேட்டபொழுது, சகலமனிதரும் சோம்பலை விரும்புகின்ற
னர் என்று கொச்சையான இங்கிலீஷில் அவன் மறுமொழி சொன்
னன். அச்சோம்பலானது கொடுங்கோல் மன்னருக்கும் கொடிய
ஜனங்களுக்கும் ஒத்தஇலட்சணமாய் நிகழ்கின்றது. உழைப்பின்

ஊதியத்தைப் பிரயாசைப்படாமல் உண்ணத்தனிப்பது மனிதரின் இயல்பாக விருக்கின்றது. உள்ளபடியே இவ்விருப்பமானது எங்கும் வியாபித்திருந்தால் அது ஜன சமூகங்களில் வியாபித்துக் கெடுக்காதவண்ணம் தடுத்தற்கு இராஜாங்க முறைமையானது, ஆதியில் உண்டாக்கப்பட்டதென்று 'ஜேம்ஸ் மில்' என்பவர் விவரித்திருக்கிறார்.

சோம்பலானது ஒவ்வொரு மனிதனையும் இழிவுபடுத்துவது போல ஓர் ஜாதியாரையும் ஒருங்கே கீழ்மைப்படுத்துகின்றது. சோம்பேறிகள் உலகத்தில் இதுவரை பெருமையடைந்ததுமில்லை. இனியடைவதுமின்று. சோம்பேறிகள் ஒரு குன்றின்மீது ஒருக்காலும் ஏறினதுமில்லை. நீக்கத்தக்க கஷ்டத்தை ஜெயித்ததுமில்லை. சோம்பேறிகள் எப்பொழுதும் அபஜெயமடைந்தனர். எப்பொழுதும் அபஜெயம் அடைவர். அவர்கள் ஒன்றிலும் மேற்போகக்கூடாதென்பது பிரகிருதிசுபாவத்தில் தானே அமைந்து கிடக்கின்றது. அவர்கள் உலகத்திற்குப் பாரமாயும், இடையூறாயும் அருவருப்பாயுமிருந்து எப்பொழுதும் உபயோகமற்றவராய்த் துக்கமும் துன்பமுமுள்ளவராய், முறைபாடு செய்யா நிற்பர்.

ஜான்ஸன் சொல்லுகிறபடி, தன்னை நித்திரையிலிருந்து எப்பொழுதும்; தான் எழ விரும்புவதற்கு இரண்டுமணி நேரத்துக்கு முன்னரே எழுப்பியது 'பர்டன்' என்பவருடைய நூலாம். அப்பர்ட்டன் என்பவர், துக்கத்திற்குக் காரணங்கள் முக்கியமாய் சோம்பலைப் பொறுத்துண்டாகின்றனவென்று தம்முடைய விசேஷமும் விநோதமுமான புத்தகத்தில் விவரித்திருக்கிறார். அவர் சொல்லுமாறு— "சோம்பலானது உடலுக்கும் மனதிற்கும், விஷமும்; துன்மார்க்கத்திற்குச் செவிலியும், சகல தீமைகளுக்கும் தாயும், சப்தமகா பாதகங்களில் ஒன்றும், பிசாசினுக்குத் திண்டு, தலையணை, மெத்தையுமாக இருக்கின்றது. ஓர் சோம்பலுள்ள நாயே சொறி சிரங்கை யடையுமாயின், சோம்பலுள்ள மனிதன் எவ்வாறு தப்பிக்கொள்வான்? உடற் சோம்பலினும், மனச்சோம்பல் மிகுதியும் கெட்டது. உபயோகப்படுத்தாத யுக்தியானது நோய் ஆகின்றது. ஆத்மாவினுக்குத் துருவும், ஓட்டுவாரொட்டியும் நரகமயமுமாகின்றது. கட்டுக்கிடையான குட்டத்தில், புழுக்களும் கெட்டபடர்கொடிகளும் மிகுவது போன்று சோம்பேறியிடம் தீமையும் கெடுதலுமுள்ள நினைவுகள் உண்டாகி ஆத்மாற்போதத்தைக் கெடுத்துவிடுகின்றன."

(இன்னும் வரும்)

ஸ்ரீ:
ஸ்ரீராமஜயம்.

# நன்றியில் திரு.

["செந்தமிழ்"ப் பத்திராசிரியராய் விளங்கியவரும், ஸேதுஸம்ஸ்தானவித்வானுமாகிய ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள், நன்றியில் திரு என்னும் விஷயமாகத் தாம்பாடிய சில அகவல்களை அவற்றின் பொருட்குறிப்புடன் எழுதி, அன்புடன் எனக்கு அனுப்பியுள்ளார்கள். அப்பாடல்களைப் படிப்போர், அவற்றின் சொன்னயம் தொடைநயம் பொருணயங்களால் பெரிதும் வியப்பும் உவப்பும் அடையாதிரார். அப்பாடல்களின் சொற்செறிவைநோக்கின் அவை ஆன்றோர்வாக்கை யொப்ப அமைந்துளவென்று கூறத்தக்கனவாயினும், பொருட்பொலிவை நோக்கும்போது, இத்தகைய பாடல்களே அருமையென்னும்படி ஒளிர்கின்றன. இவ்வாறு சொற்செறிவுடன் பொருட்பொலிவும் பெற்று விளங்கும் பாடல்களே அறிஞர்களால் விரும்பிச் சுவைக்கத்தக்கவையென்பது சொல்லவேண்டா. ஐயங்காரவர்கள் அனுப்பியவற்றில், இடமின்மைபற்றி, இம்முறை இரண்டு பாடல்களே அவற்றின் குறிப்புரையுடன் வெளியிடப்பட்டன; ஏனையவை அடுத்துவரும் பகுதிகளில் வெளியிடப்பெறும்-பத்திராசிரியர்.]

ஆரா வருந்தலன் சேர வழங்கலனை
வைக லீட்டிய பெய்கல வெறுக்கை
மாந்தி மகிழ்ச்சியு மீந்து புகழ்ச்சியு
மெய்த லுரிய பொய்யில் கிழவோர்
வேற்றுப்பிற ரென்பது தேற்றத் தெளிவாக
அன்னவ ருடையன தன்னவாப் பேணிக்
காக்கும் பருவரன் மீக்கொள லன்றியு
மீயா திவறும் பேயாம் பதடி
யிவனெனப் பல்லோர் தவனனி கழறு
மிகழ்வுரை பொறுத்தலிற் புகழ்பெறு பொறையுந்
தனாஅ தின்மையி னுஅது தன்பா
லிரப்போர்க் கில்லெனுங் கரப்போய் வாய்மையு

முள்ளிய வுதவும் வள்ளன் மையினர்க்
கரும்புகழ் நல்கலி னிரம்பிய வீகையுஞ்
செறிபொருள் கெடுமெனப் பொறியுறு மின்பெலாந்
துவரத் துறத்தலிற் கவரைந் தடக்கலும்
வெங்கதம் விரவிய வங்கதப் பெயரிற்
சான்றோர் வகுத்த வான்ற பனுவற்
பாடல் புனைதலி னீடுபெயர் நிறுவலும்
இட்டி துடை யானென வுரிதினிற் றுனே
யிற்ழ வுணர்ந்த வுறழா மாறுகொல்
நிதியெலாந் தன்கீழ்ப் பொதியும் வச்சையை
யிந்திர மமிழ்துந் தந்தன ருவக்கும்
பசிப்பிணி மருத்துவர் விசிப்புறு முடலுயிர்
யாவும் பிறர்க்கென மேவும் வாழ்க்கைய
ரிடர்ப்பாடு நோக்காது கடப்பா டாற்றும்
மாரி வண்மைப் பாரி யனைய
பெருங்கொடை யாளரோ டொருங்குகினி தாக
"ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை" யெனத் தேற்றித்
திருத்தகு தெய்வப் பொருத்தபு புலவன்
கோணு அறவுரை கொளுத்தவும்
பேணு பொறப்பதிப் பேதைமை யுலகே.

## குறிப்புரை.

க. ஆர - நிறைய, "வதில்ராரா" என்புழிப் போல (திருக்குறள்.) சேர - திரள; "சேரேதிரட்சி" (தொல். உரி.) ஆரசேர என்பன, அருந்தற்கும் வழங்கற்கும் ஏற்ற பொருள்கள் நிரம்பவுண்மை விளக்கிநின்றன.

உ. இவறுமியல்பினன் வைகலுந் துய்த்து மகிழாது ஈட்டியே மகிழ்வன் என்க. பெய்கலவெறுக்கை - பெய்யப்பட்ட கலத்தின்கணுள்ள செல்வம்; கலத்திற் பெய்யப்பட்டுக் கிடத்தலன்றி வேறுபயன்படாமை குறித்து நின்றது.

ங. மாந்துதற்குப் பயன் மகிழ்ச்சி. ஈதற்குப் பயன் புகழ்; புகழ் இருமைக்குமுறுதியாய அறமென்பர் பரிமேலழகர் (திருக் - ௧௦௩.) வெறுக்கையை, ஈந்து என இயையும்.



ச. கிழவோர் - பொருட்கு உரிமையுடையோர்; கிழவோ[illegible] அவ்வெறுக்கையினை அருந்தலன்வழங்கலன் கிழவோனு[illegible] உணர்[illegible] யது.

ரு. வேற்றுப்பிறர் - இவறுமியல்பினற்கு வே[illegible] பிறர்.

சு. அன்னவருடையன - அப்பிறருடையன.

எ. காக்கும் பருவரல் - காத்தலால் வருந்து[illegible].

அ. ஈயாது இவறுவான் மறுபிறப்பிற் பேயாவ[illegible]து; [illegible] கண்டு மாற்றுமையின் பசித்துன்பமே எய்தும் பிற[illegible] "ஈயாதிவறு, மருளாறு மாணுப் பிறப்பு" "பேஎய்ப் பிறப்பி[illegible] யும்" எனவருவன காண்க. பதடி என்பது அப்பிறப்பின் பயனாகிய உள்ளீடின்மை நோக்கி.

கூ. கழறுதல் - இடித்துரைத்தல்.

க௦. காக்கும் பருவரன் மீக்கொள லன்றியும், பல்லோரும் பேயாம் பதடியெனச் சுட்டிக்கழறும் இகழ்வுரையும் பொறுத்தலால், புகழ்பெறுகின்ற பொறையும் என்க; "உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும் இன்னுச்சொல் நோற்பாரிற் பின்" என்பதனுல், இகழ்வுரை பொறுத்தல் பெரும்பொறையாதல் உணர்க.

கக. க௨. தனுஅதின்மையின் என்றது, தானீட்டிய வெறுக்கைக்குரியோர் வேற்றுப்பிறராகத் தெளிந்தது நோக்கி. உன்னுது - அவனதின்மையை நினையாது; "கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய, கோடியுண் டாயினு மில்" என்றார் தேவரும். தன்பால் உன்னுது இரப்போர்க்கு என்க. இவறு மியல்பினன், தனதின்மையால் தன்பாலிரப்போர்க்கு இல்லையென்றல், ஒளித்தலில்லாத வாய்மொழியாயிற்று.

கங. இரவலர் நினைத்தனவெல்லாம் அவர் கூறாமலே அறிந்து வழங்கும் வள்ளற்றனம்.

கச. அரும்புகழ் என்றது, பொருள் உடல் உயிர் இவற்றை நல்கிப் பெறுதற்குரிய புகழ். ஈகைக்குப் பயன் புகழென்ப: இவன் அப்புகழையே அவர்க்கு நல்கலால், "நிரம்பிய வீகை" எனப்பட்டது.

கரு. செறிபொருள் - மேன்மேற் செறிகின்ற பொருள்.

கசு. துவரத் துறத்தல் - முற்றத்துறத்தல். தவர் ஐந்து - மனத்தைக் கவர்கின்ற ஐவகை வேட்கை.

கஎ. வெங்கதம் விரவிய - வெய்ய வெகுளி கலந்த. அங்கதப் பனுவல் என்க. சான்றோர் - தொல்காப்பியனார்.

உ௦. ஆரவருந்தலன் சேரவழங்கலன், பொறையும் வாய்மையும். ஈகை யும் ஐந்தடக்கலும் நீடுபெயர்திறவலும் பெரிதுடையானென. உரிதினின் என்றது, இவறுமியல்பினன் தானீட்டிய நிதியெல்லாம் தன்பாலகழ்ந்து புதைக்கும் ஒரியைபுடைமையால் எ-று. தானே என்பது, பேதைமை யுலகு அறிஞர்பாற் கலத்தலின்றி எ-று.

உக. திரியத் தெளிந்த பொருந்தா விதங்கொல்.

உஉ. வச்சை - உலோபன். தன்கீழ் - உலகின் கீழ்.

உஙு. இந்திரர் - தேவர். தந்தனர் உவக்கும் எ-து, தாமுண்டே மகிழாமை உணர்த்தி நின்றது.

உச. விசிப்புறும் உடல் - கட்டுற்ற உடல்.

உரு. யாவும் - பொருண்முதலியன. மேவும் - விரும்பும்.

உசு. கடப்பாடு - ஒப்புரவு. தானிடர்ப்படுதலைக் கருதாமல்.

உஎ. பாரி - தமிழ்வள்ளல்களிற் றலைவன்; இவன் ஓரறிவுயிராகிய சிறுவீ முல்லைக்கும் பெருந்தேர் நல்கியோன். ஒருங்கு - ஒருசேர.

உஅ, உகூ. ஈட்டம் இவறி - யாம் பிறரின் மிகவீட்டுது மென்று பொருளினை யீட்டன் மாத்திரத்தையே விரும்பி. இசை இருமைக்கும் உறுதியாய அறமாதலின், ஈகையான் அதனையே வேண்டல் செய்யாது, ஈட்டற் றுன்பத்தையும் காத்தற்றுன்பத்தையும் வேண்டிய அறிவின்மைபற்றி, 'நிலக்குப் பொறை' என்றார். தேற்றி - தெளிவித்து.

ஙக. திருத்தகு - அறிவாளரெல்லாராலும் விரும்பப்படுந் தன்மை நோக்கம் தக்க. பொருத்தபு - ஒப்பு அற்ற.

ஙஉ. கோணு - மாறுபாடில்லாத. அறவுரை - தர்மோபதேசம். கொளுத்தவும் - அறிவுறுத்தவும். பேணுது - அவ்வறவுரையினைப் போற்றிக் கொள்ளாது.

புலவன் தேற்றி "ஈட்டமி..... நிலக்குப் பொறை" என அறவுரை கொளுத்தவும், பேதைமையுலகு பேணாது, வச்சையைப்பெருங்கொடையாளரோடொருங்கு பொறுப்பது,அருந்தலன் வழங்கலன் அவன் பொறையும் வாய்மையும் ஈகையும் ஐந்தடக்கலும் நீடுபெயர் திறவலும், பெரிதுடையானெனத் தானே பிறழவுணர்ந்த மாறுகொல் என வினைமுடிவுசெய்க.

அருந்தலன் வழங்கலன் என்னும் பெயர்கள், விலக்ஷணத்தால் சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றன; "தானே தனியா னான்சேவக சாமி யென்பான், வானேற நீண்ட புகழான் சரிதம்" என்புழிப் புகழான் என்பது சொல்லுவான் குறிப்பான் அவன் என்னும் சுட்டுப்பெயர்மாத்திரையாய் நின்றாற் போலக் கொள்க.



(உ.) தாமரை யுறையுங் காமர் பேதாய்
நின்றுழி நில்லாய் சென்றுழி தருவாய்
கயவர் பெரியர் நயவ ரெனாஅ
தியாங்கணும் புகூஉந் தீங்கினை யாதலின்
வள்ளியோ ராய தெள்ளியோ ரெல்லாம்
நின்னை வளர்த்தே மன்னு மின்புறாஅ
ரொப்புர வுக்காந் துப்புர வெனைப்பல
நின்னை மாற்றி நன்ன ரீட்டியு
மோம்பா தருந்தியுங் கூம்பாது வீசியும்
நீகடைக் கணியா தீகடைக் குழலும்
வறியர் மனைக்கே செறியநிற் போக்கியும்
நீபுலந் தகலு மாபுல நாமகள்
நகுமிடன் முழுதும் புகவுனை யுய்த்தும்
நசையற நின்னீத் திசைமகட் டழுவியும்
நீடுவாழ் வுகப்ப பீடுமா ணவர்பா
லலைபல வுண்ணலி னிலையிழை கிலையாற்
பசியட வுயங்கினும் பொசியவு நினைவிடான்
சாத லெய்தினு மீத லெண்ணுன்
துன்ப முழந்து மன்பினிற் காப்பன்
வச்சை மகனென நச்சினை முன்னைப்
பெய்யின் ணிகர்த்த கைவண் மையினார்
பல்லா றலைத்த வொல்லா வசைவெலாம்
நனிகெட வயாவுயிர்த் தினிதா
விழிதுஞ் சுதியவன் வழியெஞ்சு மருங்கே.

## குறிப்புரை.

க. காமர் பேதாய் - எல்லாரானும் விரும்பப்பட்ட பேதையே.

உ. சென்று உழிதருவாய் - சென்று திரிவாய்.

ங. கயவர் - இழிந்தோர். நயவர் - விரும்பப்பட்டோர்.

ரு. யாக்கை நிலையாமையினையும், செல்வநிலையாமையினையும், அறமும் புகழும் நிலைத்தலையும் உணர்ந்தே வழங்குவோராதலின் வள்ளியோரைத் தெள்ளியோர் எனவுரைத்தது.

௬. வளர்த்தே - பெருக்கியே; பொருள்களின் எண்ணைப் பெருக்குதல் குறிப்பு.

௭. ஒப்புரவிற்காம் துப்பரவு - உபகரித்தற்காம் பண்டங்கள். எனைப்பல - எத்தனையோபல.

௯. ஓம்பாது அருந்தியும் - நாளைக்கென்று பாதுகாவாது உண்டும். கூம்பாது வீசியும் - சுருக்காது கொடுத்தும்.

௧௧. ௧௧. நீ கடைக்கண்ணோக்கஞ் செய்யாமையால் ஈகின்ற தலைவாயிலுக்கே திரியும் வறியர்.

௧௨. நீ புலந்து அகலும்-நீ ஊடி நீங்கும். மாபுல நாமகள் - பெருமையுடைய புலமைக்குரிய கலைமகள்.

௧௩. நகும் இடம் - விளங்கும் இடம். வறியர்க்கும் புலவர்க்கும் மிகவளிப்பர் என்றபடி.

௧௪. நசை அற - பற்றுள்ளம் அற. நின்னீத்து-நின்னை விடுத்து. இசைமகள் தழுவியும் - கீர்த்தியைப் பொருந்தியும்.

௧௫. நீடு வாழ்வு உகப்ப - புகழுடம்பால் நெடிது வாழ்தலை விரும்புவர். பீடு மாண் அவர் - பெருமையால் மாட்சிமைப்பட்ட அவர்.

௧௬. அலைபல உண்ணல் - பலவாக அடியுண்டல். நிலை விழைவிலை - நிலைத்தலை விரும்பினையில்லை.

௧௭. பசி அடுதலால் உயங்கினும்.

௧௮. சாதல் எய்தினும் - ஈயாமையால் சாவு எய்துமாயினும். அன்பு அப்பொருண்மேலுள்ள பற்று.

௨0. வச்சை மகன் - உலோபி.

௨௧. பெய் விண் - பெய்கின்ற மேகம். முன்னை வண்மையினோர் - முற்காலத்து வள்ளல்கள்.

௨௩. அயா உயிர்த்து - வருத்தநீங்க நெடுமூச்சு விட்டு.

௨௪. அவன் வழியெஞ்சு மருங்கே விழிதுஞ்சுதி-அவன் சந்ததி குறைகின்றபக்கத்தே இனிதாகக் கண்ணுறங்குதி; உலோபிக்குச் சந்ததியில்லையாம் என்பது.

பேதாய்! நில்லாய்; உழிதருவாய்; நீங்கினையாதலின் தெள்ளியோரனைவரும் நின்னை வளர்த்தே இன்புறூர்; நின்னை மாற்றி எனைப்பல வீட்டியும் அருந்தியும் வீசியும் போக்கியும் உய்த்தும் நின்னீத்து இசைமகட்டழுவியும் நீடுவாழ்வுகப்ப; அவர்பால் அலையுண்ணலின் நீ நிலைவிழைவிலை; வச்சைமகன் விடான் எண்ணான் காப்பனென நச்சினையாய், முன்னை வண்மையினோர் அசைத்த அசைவெலாம் கெட அவன் வழியெஞ்சுமருங்கே இனிதா விழிதுஞ்சுதி என்க.

---

௨

# சாதுரியவசனங்கள்.

:o:

முற்காலத்தும் பிற்காலத்துமிருந்த தமிழ்ப்புலவர்கள், பிரபுக்கள்முன்பும் பிறர்முன்பும், அவ்வப்போது பாட்டாகவன்றிப் பேச்சாகக் கூறியவற்றில், எத்தனையோ விநோதவார்த்தைகள் உண்டு. அவற்றில், பழைய புலவர்கள் கூறிய சாதுரியவசனங்கள் இப்போது வழக்கிலருகிவிட்டன வாயினும், பிற்காலத்தவர் சமயோசிதமாகக் கூறிய தொடர்மொழிகள் அங்கங்கே சிலர்பலர்வாய்க் கேட்கப்படுகின்றன. அவற்றை, இறந்து போகாது சேமித்துவைத்தல் நமக்கே இன்பமளிப்பதோடு அவர்கள் பாடல்களைப் போற்றுதலுக்கொப்பாகும். இச்சாதுரியவசனங்களிலுள்ள வியப்பெல்லாம், புலவர்கள் நினைத்து வைத்துச் சொல்லாது, அவ்வப்போது சமயோசிதமாக உடனுக்குடனே கூறிவந்தமை தான் என்பது பலருமறிவர். அத்தகைய சக்தி நம்மால் என்றும் போற்றத்தக்க தன்றோ. ஆதலால், இவ்விஷயம்பற்றி யான் தெரிந்தவைகளைக் கூடியவரை சரித்திரக்குறிப்புடன் வெளியிட்டுவரக் கருதியுள்ளேன். ஏனைச்செந்தமிழறிஞர்களும் கொச்சையின்றி நல்லவித்வான்கள் வழங்கியவிநோதவார்த்தைகளைத் திரட்டியனுப்புவார்களாயின் பெரிதும் நலமாகும். இப்போது சிலவற்றைக் கீழே தருகின்றேன்.

௧. எட்டயபுரத்திலிருந்த கடிகைமுத்துப்புலவர், தம்மனைவி திவசத்தின் பொருட்டுக் கடையிலிருந்து வேண்டிய பண்டங்களை வாங்கிச் சுமந்துகொண்டு வீடுநோக்கி வரும்போது, அவ்வூர் மகாராஜா வெளியுலாச் செல்கையில் புலவரை அக்கோலத்துடன் கண்டு "என்னவிசேடம்"என்று கேட்ப, புலவர் "தலைவிதிவசம் என்றனர். இவ்விநோதக்கூற்று, இவ்வாறு சுமப்பது தலைவிதி வசம் எனவும், இப்பண்டங்கள் தலைவி திவசத்துக்காக எனவும் பொருள்தருதல் காண்க. இவ்வார்த்தை நம் நாட்டிற் பலருமறிந்ததாயினும் அறியாத சிலர் பொருட்டு எழுதப்பட்டது.

௨. இராசபாளையத்திலிருந்த சங்கரமூர்த்திக்கவிராயர் கன்னிவாடியிற் சென்றிருக்கும்போது, ஒருகூடையைக் கவிழ்த்து அதன்

மேல் விளக்கைவைத்துப் படித்துக்கொண்டிருக்குங்காலையில், அக்கன்னிவாடி ஜமீந்தார் மலையாண்டியப்பநாயுடு அவர்கள், அவரைக் காணவேண்டி அவர் வீட்டுள் நுழைந்து புலவரை நோக்கி "இஃதென்ன கூடைவிளக்கு" என்றார். அதற்குப் புலவர், "தங்களரண்மனையிலே தங்களுக்கு முன் ஒரு குத்துவிளக்கு வைக்கப்பட்டிருக்கும்; என் வீட்டில் நான் ஒரு கூடை விளக்கு வைத்திருக்கிறேன்" என்றனர். உடனே ஜமீந்தாரவர்கள் வியந்து ஒரு குத்துவிளக்கைக்கொண்டுவந்து வைக்கும்படி உத்தரவு செய்தார்கள்.

௩. கடிகை முத்துப்புலவரது அந்தியகாலத்தே, பாலை அழுக்குத்துணியால் நனைத்து மகள் அவர்வாயிற் பிழிய, அப்பால் நாற்றம் பெற்றமையால் உட்கொள்ளாது வெளியிடும்படி யாயிற்று. அப்போது, மகள், புலவர்க்கு மரணக்குறியாகப் பால் கசக்கிறதுபோலும் என்றுகருதி, "பால் கசக்கிறதோ" என்று புலவரைக்கேட்க, பாலுங் கசக்கவில்லை துணியுங்கசக்கவில்லை" என்றனராம். பின் அவர் புத்திரர் எங்களை விட்டுப் போகிறீர்களே யென்று வருந்த, புலவர் "நானோர் அப்பன் போனாலென்ன, உங்கட்கு எட்டப்பனிருக்கும் போது" என்றனராம். புலவர், அந்திய நிலையிலேயே இவ்வழகிய வார்த்தைகளைக் கூறினரென்றால், வாழ்ந்த காலத்தில் வழங்கிய வசனங்கள் எத்தனையாதல் வேண்டும்!

௪. சேதுபதி தம்வாயில் வித்வானாகிய சர்க்கரைப்புலவர் சவ்வாதுப்புலவர்களது கவித்திறமைகளைக் கேட்டுக் களித்துவரும் போது, சர்க்கரைப்புலவர் பாட்டை அரசன் சிறிது மெச்சிக்கூற, அது கேட்ட சவ்வாதுப்புலவர் விநோதமாக "சர்க்கரை தொண்டை மட்டும்; சவ்வாது கண்டமட்டும்" என்றனராம்.

௫. எட்டயபுரத்தில் கல்வியறிவொழுக்கங்களால் மேன்மை பெற்று விளங்கிய சமரதிமகாராஜா அவர்களிடம் பிரசித்த வித்வானொருவர் இருந்தனர். அவ்வரசனும் வித்வானும் நின்றுகொண்டே அற்புதமாகப் பேசிக்கொண்டிருக்கும் போது, அரசர் நெடுநேரம் நிற்பதறிந்த வித்வான் வேலைக்காரனொருவனைப்பார்த்து, "அப்பா! கம்பளரத்னம் உட்காருதற்கு ரத்னகம்பளமொன்று கொண்டுவா"



என்றனராம். (எட்டயபுர அரசர் கம்பளவம்மிசநாயகராதலின் கம்பளரத்னமென்பது கம்பள குலத்தாருள்ளே . சிரேஷ்டமானவர் என்பது பயக்கும்) அப்போது,ஒருவன் துடைப்பங்கொண்டு தரையைப்பெருக்கத் தொடங்கவும் "அடே! நம் வித்வான் வாயிலிருந்து இப்போது உதிர்ந்த முத்துக்கள் சிதறுண்டு கிடக்கும் இடமிது; பெருக்காதே" என்று அரசர் புகழ்ந்தனரென்பர்.

௬. ஒரு தம்பிரான் படிப்பேயின்றிப் பிழைதழும்பச் சில பாட்டுக்களை முடைந்து கொண்டு, நல்ல புலவர் சிலர் கூடியிருந்தவிடத்து அவற்றை அவர்க்குக் காட்டினர். அவர்கள் தம்பிரானியல்லை நன்கறிந்தவராதலால், அவர்க்குப் புகழ்ச்சியாகவும், அறிஞர்க்கு இகழ்ச்சியாகவும் தோன்றும்படி, "சாமிபாடும் பாடல்களெல்லா மருள்வாக்கு;அழுக்கற்றவர்கள்; அதனோடு நல்ல வித்வான்; ஆனந்த முண்டாகக் கேட்பானேன்? தமிழ்ப்பாஷையையே எழுத்தெண்ணிப்படிப்பவர்க்கு இவை இயல்புதானே" என்றனராம். இவ்வாக்கியத்தில்—மருள்வாக்கு, அழுக்காறு, அவித்வான், ஆனந்தக்குற்றம், என்னும்பொருள்களும் "தொல்காப்பியத்தை எழுத்தெண்ணிப்படித்த 'சுவாமிநாததேசிகர்' என்பதுபோல எழுத்தெண்ணிப்படித்தல் உயர்பொருளும், விரவிற்படிக்கு மாற்றமின்றி எழுத்துக்கூட்டிப் படித்தல் என்ற இழி பொருளும் பயத்தல் காண்க.

௭. ஊற்றுமலை ஜமீந்தாரவர்களாகிய, இருதயாலயபாண்டியனவர்கள் வண்டானமுத்துச்சாமி ஐயர் என்னும் ஒரு புலவருக்கு ஒரு நூறு ரூபா கொடுப்பதாக ஒரு சமயம் வாக்களித்திருந்தனர். புலவர் அதனைப் பெறவேண்டி அரசனிடஞ் சென்று, "அரசே! "நானூறு ரூபாகொடுக்கிறேன் என்று உத்தரவாயிற்றே, கொடுத்தருள்க" என்றனர்; ஜமீந்தார் "நான் அங்ஙனம் சொல்லவில்லையே" யென்றனர். பின்பு அப்புலவர் "முன்னூறு ரூபாகொடுக்கிறேனென்று சொல்லவில்லையோ" என்று கேட்டனர். அங்ஙனமுங் கூறவில்லை யென்று ஜமீந்தார் கூறினர். புலவர் "இருநூறு ரூபா கொடுக்கிறேனென்று சொன்னது திருவுளத்து மறந்துவிட்டதோ" என்றனர். ஜமீந்தார் உடனே அவர் கூறிய கருத்தைக்கண்டு வியந்து நானூறு ரூபாவினையுமே புலவர்க்குக் கொடுத்தனுப்பினர் என்

பர். நான் நூறு என்றும், மூன் நூறுஎன்றும, இரு நூறு என்றும பிரித்துப்பொருள்கொள்ள நின்றமை காண்க.

௮. கந்தபுராணச்சுருக்கம்பாடிய தருமபுர ஆதீனத்துச் சம்பந்த சரணாலயத்தம்பிரானவர்கள், மைசூர்சென்று அவ்வரசனேக்காண நேர்ந்தது. தம்பிரான் மிகவும் கருப்புநிறமுடையவராயிருந்தமையால் மைசூர் அரசர் அவரைப்பார்த்தபோது "இவர் அண்டங்காக்கைக் குப்பிறந்தவரோ" என்று பரிகாசமாகக்கூற, தம்பிரான் "அண்டங் காக்கைக்குப் பிறந்தவன் நானல்லன், தாங்களே" என்று கூறினர். சபையோர்களும் அரசனும் தம்பிரானை வியந்து புகழ்ந்தனராம்.

௯. கல்போது ஜமீனில் புலவராயிருந்த பெரிய தம்பியாசாரியென்னுந் தட்டாரொருவரும் அந்த ஜமீன்தாராதிபதியான வேளாளரொருவரும் மழைபெய்தோய்ந்த சமயத்தில் புன்செய்ப்பக்கத்தே சேர்ந்துசென்றபோது, ஒரு தட்டாரப்பூச்சி அதன் குஞ்சுடன் பறந்து செல்லுதலைக் கண்ட தாருபதிப்பிள்ளை கூடவரும் ஆசாரியை நோக்கி "அதோ தட்டான் பறக்கிறான் காணும்" என்று பரிகாசமாகக் கூற, "அதனுடன் பிள்ளையும் கூடப்பறப்பது காணும்" என்று பிள்ளையை ஆசாரிப்புலவர் பரிகாசமாகக் கூறினராம்.

௧௦. திருவாவடுதுறை ஆதீனத்துச் சின்னப்பண்டாரசந்நிதிகளாயிருந்த நமசிவாயதேசிகசுவாமிகளைத் தேவகோட்டை வித்வான் வன்றொண்டச்செட்டியார் கண்டுதரிசிக்கும்போது, செட்டியாரது கல்வித்திறமையைப்பற்றிப், பண்டாரசந்நிதிகள் புகழ்ந்துகூற, செட்டியார் "நான் சந்நிதானத்துக்குக் குறைபப்படித்திருந்தாலும் கூடப்படித்தவன் என்பதுபற்றிச் சந்நிதானத்தில் இவ்வாறு அருளியது" என்றார். சின்னச்சந்நிதானமும், செட்டியாரும் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடத்தில் ஒன்றாகப் படித்தவர்களென்பது அறியத்தக்கது.

(இன்னும் வரும்.)

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

---

# புத்தகக்குறிப்பு.

பொருநராற்றுப்படைப்பொருள் விளக்கம்:— இவ்வாண்டில், பி. ஏ.—வகுப்புப்பாடங்களில் ஒன்றாகிய பொருநராற்றுப்படை நச்சினார்க்கினியருரை பற்றி, மேற்குறித்ததலைப் பெயருடன் வெளியிடப்பட்ட ஓர் ஆராய்ச்சியுரை எனது பார்வைக்கு வந்துளது. இதனை எழுதியவர்கள்—சென்னைக் கிறிஸ்துவகலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்களாகிய ஸ்ரீ. உ. வே: கா. ஸ்ரீ.கோபாலாசாரியரவர்களும் ஸ்ரீமகாதேவமுதலியாரவர்களுமே. பழையபாடல்களில் ஒன்றாகிய அவ்வாற்றுப்படையின் பொருளும் அருங்கருத்துக்களும் பிறவிசேடங்களும் மாணாக்கர் எளிதில் உணர்ந்துகொள்ளவேண்டி இவ்வாராய்ச்சி வெளியிடப்பட்டிருக்கிறது. சங்கத்துச் சான்றோர்பனுவல்களில் இயற்கைவருணனைகளுட் ஆழ்ந்தஅரிய கருத்துக்களும் சரித்திரவாராய்ச்சிக்குரிய குறிப்புக்களும் பிறவும் நிரம்பவுண்டாயினும், அவற்றின் பழையநடையினிடர்ப்பாட்டால் அறிஞர்களும் அதனை அறிந்து சுவைப்பதருமையாகின்றது. ஆயின், மாணவர்க்கு அஃது எவ்வளவு சிரமமாம்! ஆதலால், அத்தகைய நூல்களில் அவர்கட்குப் பரிசயமும் சுவையுமுண்டாக்குதற்கு, இவ்வாராய்ச்சியுரைபோன்ற கருவிகள் இன்றியமையாதனவேயாகும். இவ்வுபகாரத்தைச் செய்துதவிய ஆசாரியரவர்கட்கும் முதலியாரவர்கட்கும் தமிழகமும் முக்கியமாக மாணவரும் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். இவர்கள், அவ்வாற்றுப்படையில் அமைந்துள்ள விசேடங்களையெல்லாம், பலவகுப்புக்களாகப்பிரித்துக்கூறியும் நூலாசிரியர் உரையாசிரியர்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்தும் இனிமையுமெளிமையும்வாய்ந்த அழகிய நடையில் விளக்கியிருக்கிறார்கள். இந்நூலை மாணாக்கர்களும் பிறரும் பெற்றுப்படித்தல் இன்றியமையாததென்று யான்வற்புறுத்தல் மிகையேயாம். இதன் விலை அணா-8.

காசிமாகாத்மியம்:—இப்பெயர்கொண்ட சிறுவசன நூலொன்று ஸ்ரீ வ. சு. செங்கல்வராயபிள்ளை M. A. அவர்களால் மலையாளபாஷையினின்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மலையாளநாட்டில், இற்றைக்கு 300-ஆண்டுகட்கு முன் பிரபலகவிஞராய் விளங்கிய இராமாநுஜ எழுத்தச்சன் என்பவரால் இயற்றப்பெற்றதும், பிரமோத்தரகாண்ட சரிதங்களையே கொண்டதுமான சிவபுராணம் என்ற மலையாள கிரந்தத்தேயுள்ள, சிம்ஹத்துவஜன் என்னும் அரசன் சரித்திரபாகமே இவ்வசனநூல் என்று தெரியவருகிறது. வரதுங்கபாண்டியரியற்றிய தமிழ்ப்பிரமோத்தரகாண்டத்திலே அவ்வரசனைப்பற்றிய கதைப்பகுதி காணப்படாமையால், காசிமாகாத்மியத்தை நன்கு

விளக்கும் அப்பாகத்தை நம்மவர் அறிந்து பயனடையுமாறு இது
மொழிபெயர்க்கப்பட்டதாம். இதனுள் ஆளப்பட்ட வசனநடை
இனிமையும் எளிமையுங்கொண்டு சிறக்கின்றது. இந்நூலிற்கண்ட
கதைச்சுருக்கமாவது:—சிம்மள தேவத்தரசனுன் சிம்மத்துவசனென்
பான் புத்திரப்பேறின்றிக் கவல்வுற்று, அப்பேறின்மைக்குக் கார
ணம் தன்பனைவியுந்தானும் பூர்வஜன்மத்திற்செய்த கொடுஞ்செயல்
களே யென்றும், புத்திரகைய இடையூறுண்டாயினும் மனங்கலங்
காது காசியாத்திரைசெய்துவரின் அப்பாவநீங்குதலோடு, புத்திரப்
பேறுமுண்டாமென்றும் நாரதபகவானால் அறிந்து, பின், அவ்வா
றே தன்பனைவி பரிவாரங்களுடன் காசிநோக்கிச்செல்கையில், விந்
தமலைச்சாரலினின்று வந்த பலதிருடர்கள் தம்தலைவனுடன் வந்து
அரசன்பண்டங்களைக் கொள்ளையிட்டதோடு அவன் மனைவியையுந்
தூக்கிக்கொண்டு சென்றுவிட்டனர். அரசன் கடுங்கோபங்கொண்டு
அவர்களோடு பெரும்போர்புரிந்துந் தோல்வியுற்று, அகதியாய்ப் பெ
ரிதும் வருந்தி, "எவ்வாறாயினும், நாரதமுனிவர் வாக்குப்படி, விசுவே
சுரைத் தரிசிப்பேன்" என்று சென்று காசியையடைந்து ஆனந்தக்
கண்ணீர் சொரிய ஸ்ரீவிசுவேசுரைத் தரிசித்துக் கோயில்வலம்வருங்
கால், முன்பு திருடராற் கவரப்பட்ட தன் மனைவி கங்காநதிப்பக்
கத்தே மிக்கசிறப்புடன் விளங்குதல் கண்டு திப்பிரமைகொண்டு
நிற்க, கங்காதேவி அரசன்முன்வந்து அவன் மனைவியைக்காட்டிக்கொ
டுத்து அவன் கையில் ஒப்புவித்தனள்; உடனே சிவபிரானும் பிரத்
தியக்ஷமாகி, "அரசனே! நாமும் நம்கணத்தலைவருமே திருடராக
வந்து உன்மனவுறுதியைச் சோதித்தற்கு இவையெல்லாம் செய்
தோம் என்றறி" என்று சொல்லியருளி மறைந்தார். அரசன் தன்
பாக்கியங்களைக்கண்டு பரவசனாகி, தன் மனைவியுடன் மந்தாகினியில்
சிவத்தியானத்துடன் மூழ்குதலும் தங்கள்நகரத்து அரமனையில் தா
ங்கள் நிற்பதுகண்டு, இன்னதென்பதறியாது பெரும்பிரமை கொண்
டான். இவ்வாறு அவன் தன்னகரத்தேயிருந்து, தாலத்துவசன் என்
னும் சற்புத்திரனையும் பெற்றுப் பன்னெடுங்காலம் வாழ்ந்து முடி
வில் முத்தியுமடைந்தனன்—என்பது. இவற்றின் விரிவான கதாபா
கங்களெல்லாம் நூலினுள் விசேடமாகக் கூறப்படுகின்றன; இக்
கதையை இனிய நடையில் மொழிபெயர்த்துதவிய பிள்ளையவர்கட்
குத் தமிழுலகமும் முக்கியமாகச்சைவரும் பெரிதுங்கடமைப்பட்டுள்
ளார்கள். இதன் விலை அணா-8.

பத்திராசிரியர்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௫] பிலவங்க௵ ஐப்பசி௴ [பகுதி-௧௨.

## பொய்யாமொழிப்புலவர்.

(முற்றொடர்ச்சி)

இனி, பொய்யாமொழியார் தம்முழுவாணாளையும் மதுரையிலே கழித்தாரென்று தோன்றவில்லை. இவர் எக்காரணத்தாலோ *பாண்டி நாடு நீங்கிச் சோணாடடைந்தனர். அங்கே அக்காலத்துத் தமிழரு மையுணர்ந்த பெருங்கொடைவள்ளலாய் விளங்கியவனும் சிற்றாகூர் பேராகூர் தென்மாவை பூந்துருத்தி கொத்தமல்லி கண்டி குருகாவூர் என்னும் ஊர்களுக்குத்தலைவனுமான சீநக்கன் என்னும் சீமானைக்க ண்டார். கண்டபோது, புலவர் பெரிதும் பசியால் வாட்டமுற்றிருந்த மையால், சீநக்கன் முதலில் அவர்பசியாற்றிப் பின் அளவளாவக்க ருதி, அவர்க்குப் பிரியமாயிருந்த புளிஞ்சோற்றை யளித்து உபசரி த்தான். புலவர் அதனை உண்டு பசியாறி, அச்சோற்றின் சுவைக் குப் பெரிதுமகிழ்ந்து,

"அளிகொ ளூந்தொடை யன்னா சைக்குமன்
ஒளிகொள் சீநக்க னின்றவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே."

* "சுவடிறக்க" என்னுஞ் சடகோபரந்தாதிச் செய்யுளில் "சங்கக்குவ டிறக்குத்திய மாறப்பெயர்க்கோலையானை" எனக்கம்பர் கூறுதலாலும், ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைகளாலும், ஸ்ரீ சடகோபர்காலத்தில் மதுரைச் சங்கம் பங்கமுற்றதென்று காணப்படுதலால், ஏதோர்காரணத்தால்,பொய்யா மொழியார்காலத்துச் சங்கம் கலைந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அவ்வாறு கலைந்தமைபற்றிப் புலவர் பாண்டிநாட்டை நீங்கியிருக்கலாம்.

என, "செந்தமிழ்ச்சுவை தெளியும்போதெலாம் புளியஞ்சோற்றின் சுவை அதற்கேற்ற உவமானமாக ஞாபகத்திற்கு வருகின்றது" என்னுங் கருத்துக்கொண்ட பாடலை அவன்முன்பு கூறினர்; இதனைச் சோழமண்டலசதக முடையாரும்,

"பொய்யா மொழியார் பசிதீரப் புளியஞ் சோறு புகழ்ந்தளித்த
செய்யா ராகூர்ச் சீநக்கர் செய்த தெவருஞ் செய்தாரோ
கையா றுதவி பொறையுடைமை காணி யாளர் கடனன்றே
மையார் புவியில் முதன்மை பெற்றோர் வளஞ்சேர் சோழமண்டலமே."

எனக் கூறுதல் காண்க. இதுமுதலாக, புலவரது அருமை பெருமைகள் பழகுந்தோறும் தன்னை அதிக வியப்புறுத்தினமையால், சீநக்கன் அவரை ஒரு கணத்தும் விட்டுப்பிரிய ஆற்றாதவனாய், அவரைத் தன் ஆருயிர்த்துணைவரெனமதித்து வேற்றுமையின்றிக் கலந்து களித்துவந்தான். இச்சீநக்கனைச் சோழனது மந்திரிகளில் ஒருவன் என்பர். இவ்வாறு ஒழுகுநாளில், இப்பிரபு மூலம் சோழவரசனையும் பார்க்க விரும்பினவராய், அவ்வாறே, அப்போது தஞ்சையிலிருந்து ஆட்சி புரிந்துவந்த சோழனிடம் சென்று அவனைக்கண்டு,

"இன்றையின் முறைகொணர்ந்து தெவ்வேந்த ரெல்லா
மிறையு முறைகழிக்க வொண்ணா—அறைகழற்காற்
போர்வேந்தர் போர்மாளப் போய்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் தஞ்சைத் தெரு."*

என, தாம் அவனகரிற்கண்ட சிறப்பைக் கூறினர். இப்பாடலைக் கேட்டும், மற்றும் புலவரருமைபெருமைகளை அறிந்தும் அரசன் புலவர்க்குப் பெருவரிசையளிக்க, அதனுடன் அரசூர் சென்று அங்கே சீநக்கனோடு முன்போலக் கலந்து வாழ்ந்துவந்தனர். இதனை,

"இறையின் முறையென் றுலகறியச் செப்பும் பொய்யா மொழிதமிழ்க்காத்
துறையி னளகை ராஜேந்திர சோழன் வரிசை தொகுத்தளித்தே
அறையும் பெருமைச் சீநக்க ராசூர் முதலா வேழூரும்
மறுவி லாது விளங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே."

* இப்பாட்டில் வருந் தஞ்சையை, மாறநாட்டுத் தஞ்சாக்கூர் என்று கருதுவாருமுளர்.



எனச் சோழமண்டலசதக முடையார் கூற்றால் உணர்க. பொய்யாமொழியாரை அபிமானித்த சோழன் இராஜேந்திரன் என்று அச்சதகமுடையார் கூறுதலால், அவர்க்கு அவ்விஷயம் ஏதோ ஓர் ஆதாரத்தின்மேலேயே தெரிந்திருக்கவேண்டுமென்று கருத இடமுண்டாகிறது.*

இவ்வாறு, அரசூரில், சீநக்கவள்ளலுடன் புலவர் விளங்கிவருநாளில், அடுத்த கண்டியூரிலிருந்த வண்ணாத்தி யொருத்தி புலவர்க்குப் பெருமகிழ்ச்சி தரும்படி அவராடைகளை மாசு நீக்கி வெள்ளையாக்கிக்கொடுத்து உபசரித்தமைக்கு உவந்து,

"தூசுதூ சாக்குவார் பாவை சுடர்த்தொடிக்கை
யாசிலாக் கண்டியூ ராரணங்கு—வாசமலர்க்
கண்ணங்கை கொங்கைமுகங் காலுங் கடிக்கமலம்
கண்ணங்கை கொங்கைமுகங் கால்" †

என்று அவளைப் புகழ்ந்தனர். பின், குலோத்துங்கச்சாவகன் என்னும் புலையன் புலவர்க்குப் பெருங்கோபமுண்டாம்படியான கொடுமையொன்று செய்ய, அது பொறுக்காத புலவர்,

"கோதில் குலமங்கை குலோத்துங்கச் சாவகனென்
றோதினேன் றன்னை யொறுப்பதனால்—மாது
துளையாத முத்து வடந்தூக்கி னாளாம்
விளையாடாச் செப்பிரண்டன் மேல்" ‡

* இவ்விராஜேந்திரப்பெயர், கி. பி. 1012-ல் பட்டம்பெற்ற, இராஜராஜன் புத்திரனுக்குமுந்திய சோழஅரசர் தரித்திருந்ததாகச் சாஸனங்களாற் றெரியவில்லை.

† வாசமலர்க்கண் நங்கை - இலக்குமி போன்றவள். நங்கையின் கண் அங்கை கொங்கை முகம் கால்—இவைகள் கடிக்கமலம் என்க. கொங்கை முகங்காலும் கடிக்கமலம் - தேனைத் தன்னிடத்திருந்து கக்குகின்ற வாசனை பொருந்திய தாமரை. கொங்கு - தேன்.

‡ குலோத்துங்கச்சாவகன் என்று கூறிய என்னை அவன் ஒறுத்தமையால், கோதில் குலமங்கையாகிய அவன்மாது கண்ணீர் பெருக்கினாள் என்க; என்னை ஒறுத்தலால் அவனுடல் வெடிக்க, அதனால் அவன் மனைவி கண்ணீர்வடித்தாள் என்பது குறிப்பு. துளையாத முத்துவடம்-கண்ணீர்த்துளிகள். விளையாடாச்செப்பு - தனங்கள்; வெளிப்படையணி.

என்று வசைபாட, அப்புலையனுடல் வெடித்ததென்பர்; தமிழ்நாவலர் சரிதையில் "புலையன் உடல் வெடிக்கப்பாடிய வெண்பா" என்ற தலைப்புடன்மட்டும் இப்பாடல் காணப்பட்டமையால், இதன் கதை செவ்வையாக விளங்கவில்லை.

இவ்வாறு புலவர் சீநக்கவள்ளலுடன் தமிழகம் புகழவாழ்ந்து வருநாளில், ஒருநாளிரவிலே, சீநக்கன் சயனிக்குங் கட்டிலிலே, அவனும் பொய்யாமொழியாருமாகவிருந்து நெடுநேரம் அளவளாவிக்கொண்டிருக்கையில், நாழிகையானமையாற் புலவர் சீநக்கனைப் போஜனத்துக்குப் போகுமாறு செய்து, அயர்ச்சிமிகுதியால் அக்கட்டிலிற்றானே ஓர்புறமாக நித்திரைபோயினர். சீநக்கன் போசன முடித்துக்கொண்டு நிலாமணிமேடையிற்சென்று சிறிதுநேரம் போக்கி மீளுமுன்னே, அவன் மனைவியும், கட்டிலிற் படுத்துறங்குகின்றவரைத் தன் கணவனென்றெண்ணி, அதில் ஒரு பக்கத்திற் படுத்து நித்திரை போயினாள். சீநக்கன், கிரமப்படி, அங்கே படுக்கப்போக, கட்டிலிற் புலவருடன் தன் மனைவி படுத்திருத்தலைக்கண்டு, 'இஃது என் மனைவியின் அறியாமையால் நிகழ்ந்த செயலேயன்றிப் பிறிதன்று' என, புலவரது அருமை பெருமைகளையெல்லாம் நன்கறிந்தவனாதலின் அவர்பாற் குற்றத்தை நினையாதவனாய், இவ்வுண்மையைப் புலவர்க்குத் தெரிவிக்கவெண்ணி, புலவரைச் சிறிது விழிக்கும்படி தட்டியெழுப்ப, அவர் விழித்தலும், 'சிறிது விலகுதிர்; ஓர் புறமாக யானும் படுப்பேன்' என்று கூறினன். புலவர் 'இங்கே படுத்தோமே' என்று கருதினவராய் அயலிற்பார்க்க, அரசன்மனைவி தம்முடன் நித்திரைபோகின்றமை யறிந்து, 'இஃதென் விளைந்தது' எனச் சரேலென்று விலகி நின்று திப்பிரமை கொண்டார். இவற்றைக்கண்ட சீநக்கன் புன்முறுவல் கொண்டு 'புலவரே அஞ்சற்க; ஒன்றும் நிகழ்ந்திலது' என்னலும், இவ்விருவரது சம்பாஷணைகளால் சீநக்கன்மனைவி நித்திராபங்கமுற்று விழித்துக்கொண்டு, தான் செய்ததவற்றையறிந்து வெட்கி அந்தப்புரநோக்கி ஓடினள். பொழுதுவிடியவும், இச்செய்தி சிலர்பலர்க்குத் தெரிந்து சிலநாளெல்லாம் எங்கும்பரவ, ஊர்முழுதும் புலவர்பேரிற் பேரபவாதத்தைச் சுமத்தியது. இவ்வாறு அநியாயச்சொற்பரவிப் புலவர்காதிலுங் அஃதெட்ட, அப்போது,



"தேரையார் தெங்கிளநீ ருண்ணார் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய் பொன்சொரியுங் கொற்றவன் றன்கண்டி
யூரைவாய் மூட வுரையறிந்தோ மில்லையே." *

என, 'இளநீரை யுண்ணாமலே பழியடைந்த தேரைபோல, அரசன் மனைவியை விரும்பாதிருப்பவும் பழிசுமந்தேன்' எனப் பெரிதும் இரங்கிக் கூறினர். ஆயினும், சீநக்கவள்ளல் இவரொழுக்கவுயர்வுகளை நன்கறிந்தவனாதலால், முன்னிலும் பதின்மடங்காக மதித்துத் தம்முயிர்த்துணைவராகக் கொண்டு புலவருடன் கலந்துகளித்துவந்தான். இவ்வாறு, ஓருயிரீருடற் கென்னும்படி அவ்விருவரும் நெடுநாள் வாழ்ந்துவருமிடையே, "உடனுயிர் நீங்குமுரிமைத்தாயது"† என்று முன்னோராற்புகழப்பட்ட உணர்ச்சியொத்த உத்தமநட்பு அவ்விருவர்க்குள்ளும் விளங்குகின்றமாட்சியைச் சோதிப்பவன்போல, யமனவன், சீநக்கனதாருயிர்க் கிறுதிதேடவும், அப்பெருந்தகை உடனொத்த புலவர்பெருமானைத் தனியேவிட்டுத் தன்னுடலாமிரங்க வானுலகடைந்தான். இவ்வாறு தாம்வேறு அவன்வேறென்னாது அபிமானித்த பெருந்தகையும் தன்னாருயிராயிருந்தவனுமான பெருவள்ளல் சென்றதற்கு ஆற்றாதவராய், தம்வெற்றுடலைக் கொண்டு உலகில்வாழ்வொருப்படாது, சீநக்கனுக்கென்று மூட்டப்பட்ட பேரெரியில் அவனுடன் விழுந்துயிர்துறப்பதே உத்தமமென்று கருதி, அப்பிரபுவினுடல் அவ்வெரியில் வைக்கப்பட்டபோது அவனை நோக்கி, "என் ஆருயிரே! அன்றுகட்டிலில் யான் உன் மனைவியுடன் அறியாதுறங்கியபோது, என்னை "அங்கே சிறிது நகர், ஒருபுறம் யானும் படுப்பேன்' என்றாய்; அத்தகைய நீ, இன்று இவ்வெரியில் நின்னுடன் யானும் ஒருபுறம்படுக்கும்படி சிறிது விலகுதி' என்னும் கருத்தமைந்த—

* "தேரையார் செவ்விளநீர்" எனவும் பாடம்.

† "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான், நட்பாங் கிழமை தரும்"— என்னுந் திருக்குறளுரை காண்க.

'அன்றுநீ செல்லக் கிட*வென்றாய் ஆருயிர்விட்
டின்றுநீ வானுலக மேறினாய்—நன்றுநன்று
வானக்க பூண்மடவார் மாரனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக் கிட.''

என்னும் அருமைப்பாடலைக்கூறி அவனுடன் தீப்பாய்ந்து உயிர்நீத்தனர். 'உடனுயிர்நீங்கு முரிமைத்தாய' பெருநட்பு, முன்னர்க்கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார்க்குள்ளே இருந்ததாகக் கேள்விப்பட்டது,† இப்போது சீநக்கன்பொய்யாமொழியாரிடத்தே நன்கு காணப்பட்டதென்று உலகம் புகழ்ந்து இரங்கியது. இவ்வாறு, பொய்யாமொழியார் தீப்புகுந்த அருஞ்செயலை, முன்னம் புலவர்மேற் சீநக்கன்மனைவிசம்பந்தமாக அபவாதங்கூறிய ஊரரெல்லாம் கேள்வியுற்று, இப்பெருந்தகைபால் அபராதம் விளைத்த எமக்கு உய்வின்மையால் "யாமும் இறப்பதே கருமம்" என்று அவர்களிற் பலரும் தீப்பாய்ந்து குற்றநீங்கினர். இச்செய்தியை,

"புரைதீ ரரசைப் பதிபுகுந்து பொய்யாமொழியார் புகழ்தமிழ்க்கா
ஆரூர் முதலா வெழுரு மழலிற் புகுந்த தரிதாமோ
தரைசூழ் மதிய மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற் றாரெனுஞ்சொல்
வரையா துலகிற் பெற்றோரும் வளஞ்சேர் சோழமண்டலமே"

என்னுஞ் சோழமண்டல சதகச்செய்யுளாலும்,

"சிற்றாரூர் பேராரூர் தென்மாலை பூந்துருத்தி
கொத்தமலி கண்டி குருகாவூர்—இத்தனையும்
வாய்ப்பா யமர்ந்தருளு மன்னுகுடி யத்தனையும்
தீப்பாய்ந்த நல்ல திறம்.

என்னும் அதன் மேற்கோளாகிய பழையசெய்யுளாலும் அறிக.

* "அன்று நீ செல்லக் கட'' எனவும், "சீநக்கா செல்லக்கட'' எனவும் பாடம்; அக்கட நீ செல் - அங்கே நீ விலகு. "அக்கட விராவணற் கமைந்த வாற்றலே'' எனக் கம்பர் வாக்கினும் 'அக்கட' என்னுஞ் திசைச்சொற் பயிறல்காண்க.

† "புணர்ச்சிபழகுதல்வேண்டா'' என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையிற் காண்க.



இவ்வளவே, பொய்யாமொழியார் வரலாறாகத் தெரிந்தவை. இச்சரிதங்களால், பொய்யாமொழியார் தெய்வப்புலமைவாய்ந்தபெரியாரிலொருவரென்பதும், சிவபிரானாலும் முருகவேளாலும் வலிந்தாட்கொண்டு பாடப்பெற்ற பேரடியாரென்பதும், தமிழ்வளர்ச்சிபுரிதற்காக அரும்பாடுபட்டவரென்பதும், தம்மூப்தார்களிடத்தில் இவர்வைத்திருந்த பேரபிமான மளவற்றதென்பதும், மற்றும் இவரது உத்தமகுணவிசேடங்களும் நன்குவிளங்கும். இவர்க்கு வழங்கிய பொய்யாமொழிப்பெயர், இவரதுசத்தியவாக்கின் விசேடத்தால் எழுந்த சிறப்புப்பெயராக விருக்கலாம்; முன்னர்த் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்க்குப் "பொய்யில்புலவன்'' *என வழங்கியமை காண்க. இப்பெருந்தகை விளங்கிக்கீர்த்திபடைத்தது, நம்தமிழகமெனின், இதற்கு அதனினும் சிறந்தபெருமையாதுளது? இனி, இப்புலவர்பெருமான் பாடியனவாக மேலேகுறித்த பாடல்களில், "வாய்த்த வயிரபுரம்'' என்பதும் "வாசமலர் மடந்தைபோல்வார்'' என்பதும் "தேரையார் தெங்கிள நீர்'' என்பதும் கம்பர் வரலாற்றுடனும், "கூத்தாண்முகத்திரண்டு'' என்பது காளமேகப்புலவர் வரலாற்றுடனும் இக்காலத்தார் வழங்கினர். அன்றியும், "உமையாளு நீயுமொருங்கொப்பே'' † என்னும் கம்பர்வாக்குப் பொய்யாமொழியாரதாக இப்போது காணப்படுகிறது. இப்பாடல்களிலே பாடபேதங்களும் நிரம்பவுண்டு. ஆயினும், இவை யெல்லாம், தமிழ்நாவலர்சரிதை, சோழமண்டலசதகம், பாண்டிமண்டலசதகமுதலிய, நமக்குச் சிலநூற்றாண்டுகட்கு முற்பட்ட நூல்களில், அவ்வப்பாடல் எழுந்த சரித்திரக்குறிப்புடன், மாறுபாடின்றி ஒப்பவழங்கப்படுதலால், இக்காலத்தவர்வழக்கினும் முன்னோர்வழக்கே நாம் கொள்ளத்தக்கதென்பது ஐயமற விளங்கும்.

இனி, பொய்யாமொழியார் காலமின்னதென்பதை ஆராய்வோம். திருப்புகழில், அருணகிரிநாதர், இப்புலவர் பெருமானுக்கு முருகக்கடவுள் அநுக்கிரகித்த விஷயத்தைப்பலமுறை கூறுதல்

* மணிமேகலை, காதை-௨௨, அடி-௬௧.

† இது கம்பர்பாடியதென்பது செந்தமிழ் மூன்றாந்தொகுதி ௮௨-௮௩-ம் பக்கங்களிற் காண்க.

மேலே அறியப்பட்டமையால், அவ்வருணகிரியார்க்கும் பெரிதுமுற்பட்டவர் நம்புலவர்பெருமானென்பது விளங்கும். அருணகிரிநாதர் காலம் இற்றைக்கு 450-ஆண்டுகட்கு முற்பட்டதென்பர். அன்றியும், நாற்கவிராச நம்பியென்பார் "சான்றோ ரிலக்கிய நோக்கி, அகப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம், புலப்படப் பொருள்விரித் திருளற வெழுதி" என்ற பாயிரப்படி, தாமே நூலுமுரையுமாகச் செய்த அகப்பொருள்விளக்கத்தே, பொய்யாமொழியாரது தஞ்சைவாணன்கோவையைப் பிரபலமாக எடுத்தாளுதலின், அந்நம்பியார்க்கும் இப்புலவர் முற்பட்டவரென்பது தெளிவாகும். * மேற்கூறியவாறு நம்பியாரே எழுதிய அகப்பொருளுரையில், தம்நூல் அரங்கேற்றப்பட்டது—" பாண்டியன்-குலசேகரன்காலம்" என்று அவரே கூறுதலானும், அப்பாண்டியன் கி. பி. 12-ம் நூற்றாண்டில் †மதுரையாண்டவனென்பது மகாவமிசத்தும் பிறவற்றிலும் காணப்பட்டமையாலும், நாற்கவிராசநம்பி இற்றைக்கு 800-வருஷங்கட்குமுன்னிருந்தவரென்பது துணியப்படும்.‡

இவ்வாறு, நாற்கவிராசநம்பி விளங்கிய 12-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவரென்று தெரிந்த பொய்யாமொழியார் எக்காலத்தில் விளங்கியவரென ஆராய்வோம். நச்சினார்க்கினியருரைப்பாயிரமாகக் கண்ட அகவலில், "வஞ்சிப் பொய்யா மொழிபுகழ்மையறு காட்சித், திருத்தகு முனிவன்" என்று கூறப்படுதலால், சிந்தாமணிசெய்த திருத்தக்கதேவர் காலத்தவர் பொய்யாமொழியென்பது தெளிவாகின்றது. திருத்தக்கதேவர் காலம் இற்றைக்கு ஆயிரவருஷங்கட்கு (கி. பி. 900)முன்பென்று ஸ்ரீமாந்-கோபிநாதராயரவர்கள் தக்கசாஸன ஆதாரங்கண்டு கருதுகின்றார்கள்.† ஆதலால், அக்காலத்தையே நம்புலவர் பெருமானுக்கும் கூறத் தடையில்லை. தமிழ்நாவலர் சரிதையில், பொய்யாமொழியார் பாடல்கள், கம்பர் ஒட்டக்கூத்தர் முதலியவர்க்குமுன்னும் ஔவையார்க்குப்பின்னும் வைத்துக்கூறப்படும் வரிசையும் ஈண்டுக்கவனிக்கத்தக்கது *. இனிச், சிலர்கருதுமாறு, பொய்யாமொழியார் இருவரென்று கருதற்கு ஆதாரமில்லாததோடு தமிழ்நாவலர்சரிதையில் ஒருவராகவே வைத்து எல்லாப்பாடலும் காணப்படுதலாலும் அது} பொருத்தமாகத் தோன்றவில்லை. இம்முடிபுகளால், நம்புலவர்பெருந்தகை இற்றைக்கு ஆயிரம் வருஷங்கட்கு முன்விளங்கியவரென்றே கொள்ளலாம்.

பத்திராசிரியர்.

திருத்தம்:—சென்ற பகுதியில், பொய்யாமொழியார் வரலாறு ௫௦௭-ம் பக்கத்தே, "கோட்டாற் கொழும்" என்னும் வெண்பாவிலே, "காட்டானைத்" என்பதைக் "காட்டானை" எனவும்; ௫௧௧-ம் பக்கம், ௩-ம் வரியிலுள்ள பாடலில், "குழைக்காலரவிந்தம்" என்பதைக் "குழற்காலரவிந்தம்" எனவும்; நரிவிருத்த முகவுரை, ௩-ம் பக்கம், முதல்வரியில், "முஷ்கதேசத்தில்" என்பதை, "முஷ்கத்தில்" எனவும் திருத்திக்கொள்க.

---

* நம்பியார், தம்மகப்பொருளிலக்கணத்துக்குத் தஞ்சைவாணன்கோவையை இலக்கியமாகக் கொண்டாரென்பதை மாற்றி, பொய்யாமொழியார் தம் கோவையை நம்பியாரகப் பொருளிலக்கணத்துக் கொப்பவைத்துப் பாடினரென்பர் சிலர். நம்பிக்குமுற்பட்டவரென்று தெளியப்பட்ட பொய்யாமொழியார் வரலாற்றோடு இது மாறுபடுதலேயன்றி, "இலக்கியங்கண்டதற்கிலக்கணம்" என்னும் வழக்குக்கும் விரோதமாம். அன்றியும், பெரும்புலவராய் விளங்கிய பொய்யாமொழியார், பிற்காலத்தவராகிய ஜைனரொருவர் நூலைவைத்து இலக்கியமமைத்தாரென்றல், அவர் பெருமைக்கு ஏற்றமாகாமையுங் காண்க.

† இவனன்றி, தென்காசியில் ஜடிலவர்மன் குலசேகரனென்பவனுமொருவனுளன்; இவன் கி. பி. 1463-ல் பட்டந்தரித்தவன். (செந்தமிழ் தொகுதி - ௨, பக்-௧௧௪.) நம்பிகூறும் பாண்டியன் இவனல்லன்.

‡ சோழவமிசசரித்திரம்—பக் - ௩௧ (செந்தமிழ்த் தொகுதி-இ, பகுதி ௧௧.)

† செந்தமிழ்த் தொகுதி-௫, பக்-௧௦௨.

* மகாமகோபாத்தியாயர்: ஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள், தமிழ்நாவலர்சரிதையிற்கண்ட முறைவைப்புக் காலவொழுங்குப்படி அமைந்ததாகக் கருதியுள்ளார்கள். (சீகாளத்தியுலா. ஆசிரியர் வரலாறு பார்க்க).

உ

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பதவிளக்கம்.

[பழையஏட்டினின்று எடுக்கப்பெற்றது.]

(முற்றொடர்ச்சி.)

## கண்ணப்பநாயனார் புராணம்.

(க0ச) சிவனைப்போய் அவர் தரிசித்தற்கு முன்னரே கிருபைக்கண்ணராகிய அவருடைய அருள்மிகுந்த திருவருணோக்கம்பொருந்தி, பொருந்திய பிறவியின் சார்புகழிய நீங்கிப் பொலிந்த சிவத்தினொளியிலே உவமையற்ற அன்பேயுருவமாயினார். சிவத்தினீழலன்பு - சிவத்தினீழலிலுள்ள அன்பு.

(க0ரு) மலையெழு - மலையிற்றானேயெழுந்த.

(க0சு) வடிவெலாம் நிறைந்தெழும் மயிர்க்கால்தோறும் புளகம் பொங்க. படி - உவமை.

(க0அ) மச்சு - அறுசிதம்.

(கக0) உள்ளே நிறைந்து எழுந்ததேயாயினும் நீக்கமின்றி நிறையாவன்பால், இனிய செய்கைகள் இவைபோலுமென்று இதனையே உறுதியெனக்கொண்டு. எண்ணிய இவை பெயரெச்சமுடிபு.

(ககக) கண்டேனுக்குப் பிரியவொண்ணாதென முடிக்க.

(கக௨) நிற்கவுங்கில்லேன் - நிற்கவுமாட்டேன். நிற்கவும்இல்லேன் எனப்பிரிக்க; குச்சாரியை. இனி இதைத் தனிமொழியெனக்கொண்டு, நிற்கவுங் கில்லேன் - நில்லேன் எனப்பொருள் கொண்டு, கில் எதிர்மறை யிடைநிலை யென்பாரு முளர். கில் ஆற்றற்பொருளாவதோர் விகுதியாவதன்றி எதிர்மறை யிடைநிலையாவதியாண்டெனமறுக்க.



(ககச) பழைய பிறவழிகளிற் செல்லும் விருப்பம் நீங்கி அன்பானது கொண்டு செலுத்த.

(ககரு) கோட்டையுடைய பன்றியின் உறுப்புக்களையெல்லாம் உங்கள் குறிப்பின்படி பக்கத்தே பார்த்துக்கொள்ளுங்கள்.

(ககசு) வங்கு - புற்று; மரப்பொந்துமாம். தேவருக்கேநன்மைப்பட்டான். எனவே, கடவுள் வசப்பட்டான் என்பது கருத்தாயிற்று.

(ககஎ) எங்களுடைய முதன்மை பொருந்திய பெருந்தலைவனீயல்லையோவென்று கூற. இகரம் பெயர்விகுதி.

(ககஅ) சருகையும் இலையையுந் தைத்தகல்லை இயையுமாறு கோலி மிக அக்கல்லை மீதிடுவாராயினர்.

(க௨0) பள்ளித்தாமம் - பூ. இது சைவபரிபாஷை யென்பது மேலுங்காட்டப்பட்டது. துதையக்கொண்டார் - நெருங்கவைத்துக்கொண்டார்.

(க௨௨) ஒருகையிலே தனுவைச் சரத்துடன்றாங்கி. இறைச்சியாகிய நைவேதனத்தை.

(க௨௩) திருமுடிமீது சிவகோசரியார் சாத்தியமலரைக் காலிலிட்ட அழகிய செருப்பாற் கழித்து வாயிலுள்ள திருமஞ்சனநீரை பூர்வசன்மங்களில் ஆர்ச்சித்த அன்பை உமிழ்பவர்போல.

(க௨ரு) அழலுறுபதத்திற்காய்ச்சி - அக்கினியில் மிக்க பொருந்திய பதத்தோடுகாய்ச்சி. பல்லால் மென்று. சால அழகிது - மிக நல்லது.

(க௨சு) வேடர்மன்னனார் இன்னமும் வேண்டு மென்னும் எழுபெருங்காதலைக்கண்டு பலநெடியகரங்களைக்கூப்பிச் சூரியன் அத்தமயனகிரியில் மறைந்தான். திருக்காளத்திமலையின்கண் அந்நாயனாரை வணங்கினான் என வேறுமொருபொருடோன்றியவாறுகாண்க.

(க௨எ) அந்தியாகியமாலை. உண்மைத்தன்மையின் வேறுப

டாத அன்பு. மெய்ப்பொருளாகிய கடவுளினின்றும் பொய்ப்பொருளைச் சிந்தியாத அன்பென்றுமாம். நின்று ஐந்தனுருபு.

(கஉஅ) எல்லாராலும் அநுட்டித்தற்கரிய.

(கஉகூ) கலை அவைகள் ஒக்கும். தலையுவா - முதன்மையான அமாவாசி.

(கங0) நெருங்கிய பலரத்தினங்கள் கான்ற பரந்த சுடர்ப் படலிகைகள் பொலிய, மரகதமும் ஒளியையுடைய நீலரத்தினங்களும் பிரகாசிக்கின்ற சோதியானது பொருகின்ற ஆதித்த சந்திரர் கட்கஞ்சிப்போன இரவிலுள்ள இருட்பக்கங்கடோறும் உள்ள எங்குமெங்கும் ஒதுங்கினாற்போன்றுளது.

(கஙஉ) சிலம்புமோசை - ஒலிக்குமோசை. பேரோசையென்றுமாம்.

(கஙங) ஏறுகால்-செங்குத்தானமலைகளினும் ஏறுகின்றகால். புனமான் - புல்வாய். ஏறுகாலென்பதற்கு உயர்ந்தகாலெனக்கூறுவாருமுளர். ஊறு செய் காலம் - கொல்லுங்காலம்.

(கஙச) கூட்டமாய்த்தோன்றுமிருளைக் கெடுத்து உதயத்தைக் காட்டுஞ் சூரியன், உண்மையைக்காட்டும் அன்பையுடைய வில்லையுடைய திண்ணனார் தனியே வேட்டைக்குச் செல்லுங்காட்டில் மிருகங்களை வளைக்குமாறிட்ட கரியதிரையை யெடுத்துக் கையாற் காட்டுபவனைப்போலக் கிரணங்களைக்காட்டி எழும்போதில். எய்காடு - வினைத்தொகை. முட்பன்றியையுடைய காடென்பாருமுளர்.

(கஙசு) செல்கின்றார் - வினையாலணையும் பெயர்.

(கஙஎ) மேவரோவா - மிகவருந்தி. பாவத்துக்கஞ்சாத வேடுவரே இதனைச் செய்தார்.

(கஙஅ) திருவலகு - கோயிற்றுடைப்பம்.

(கஙகூ) சம்பவித்ததாய அநுசிதம் நீங்க. பவித்திரம்-சுத்தம். பெறுவனகொண்டு - உபகரணங்களுள் அக்காட்டின் கண்ணே அப்



பொழுது சம்பாதிக்கத்தக்க உபகரணங்களை மாத்திரம் சம்பாதித்துக்கொண்டு.

(கச0) சிவனே ஒப்பற்ற பதியாமென்று பலதன்மையாற் றுணிந்த வேத இருக்குகளால்.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை,
நாகை "நீலலோசனி"ப்பத்திராதிபர்.

---

# பெண்கல்வி.

பெண்களும் புருடர்களைப்போற் கல்வியுடையவர்களாயிருக்க வேண்டுமென்பது தக்கதே. இதனுண்மையை யுணராதசிலர் பெண்பாலார் கற்கக்கூடாதென்பது நமது மதக்கோட்பாடென வீணெண்ணங்கொண்டிருக்கின்றனர். வைதிகர்கள் நாகரிகம் பெறாதவர்களென்றும், பெண்களை விலங்குகளாகவெண்ணி ஆடுமாடுகளைப் போல் அவரை நடத்துகின்றன ரென்றும், அவர்களே பெண்கல்வியைத் தடுக்கின்றன ரென்றும், அவ்வீணெண்ணக்காரர்களின் கொள்கை. அவர்கள் வைதிகர்மேற் கூறுகின்ற குறைகளுள் இதுவுமொன்று. வைதிகலௌகிககர்மங்கள் இருதிறத்தோர்க்கு மொத்தனவே; அவ்விரண்டு முடலுமுயிரும் போன்றன. இந்த ஞாயத்தை அங்ஙனநிந்திப்பவர் அறியார்போலும். இஃதிருக்கட்டும்.

பெண்டுகளே உலகத்துக்கெல்லாங் காரணமானவர். அவராலேயே கருமமனைத்தும் நடந்தேறுகின்றது. புருடார்த்தங்கட்குமவரே காரணபூதராயுள்ளவர். கற்புடைய மங்கையர்க்குக் கடவுளுங் கட்டுப்படுகின்றார். ஆனதனாலேயே "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்-பெய்யெனப் பெய்யு மழை" என்று தெய்வப் புலவருந் திருவாய்மலர்ந்தனர். சுருதி ஸ்மிருதிபுராணேதிகாசங்

கள் காவியநாடகங்களாதியான நூல்களிலெல்லாம் பெண்களின்பெருமையைப் பெரிதுங்காணலாம். அன்பு பொறுமை தருமம் ஈகை இரக்கம் பரோபகாரம் சாதுரியம் கல்வி முதலான உயர்குணங்களெல்லாம் அவர்க்குண்டென்றே அவைகள் அறைகின்றன. அவர் அறிவானும் சிறந்தவரென்பதற் கையமின்று. அவர்கள் நன்மை தீமையிரண்டற்கு மேதுவாகின்றனர். இறந்த கணவனை மீட்டவரும் இருந்தகணவனை யிறக்கச்செய்தவரு முண்டு. இவற்றுக்கு முறையே சாவித்திரியும் கைகயியுமே காட்டாகின்றனர். இவையெல்லா முணர்ந்த வைதிகதர்மத்தில் ஊற்றமுள்ள பண்டிதர் ஒரு போதும் பெண்களைப் புறக்கணியார். எல்லாவைதிககர்மங்கட்கும் அங்கனைமார் அருகுறவேண்டுமென்பதை யார்தாமறியார்; முக்கியமாக இல்வாழ்வார்க்கவரின்றி எதுதானாகும்? நற்குண நற்செய்கைகளுள்ள நங்கையொருத்தி மனைவியாகவொருவற்குக் கிடைப்பளேல் அவனெல்லாச்செல்வமு மியைந்தவனெனலாம்; "இல்லதெனில்லவண் மாண்பானுள்ள,தெனில்லவண்மாணாக்கடை" என்பதனாலது விளங்கும். மகளிர் அறிவுமுதலியனவைகளிற் சிறந்திருப்பினும் அவரெக்காலும் ஆண்மகன்காப்பிலேயே அமைந்திருக்கற்பாலர். தனித்திருக்கத்தக்கவரல்லர். இஃது எல்லா ஞாயங்களானும் விசதமாம். "மணப்பதன் முன்னும் பின்னு மீன்றவன் கணவன் மாட்டும், வணக்குறு முதுமைதன்னின் வளங்கெழு தனயன் மாட்டும், பணத்தரவல்குன் மாதர் படிந்துநாள் கழிக்கற் பாலா, ரெணப்படி யொழுகுந் தன்மை யின்றவர்க்கிகத்தின் மாதோ' என்னும் விதியின்படி யொழுகற்பாலரேயன்றி யதேச்சையாய் நடக்கும் சுதந்தரமவர்க்குக் கிடையாது. நமது சாத்திரமொன்றும் வீணானதன்று; எல்லாங்காரணகாரிய சம்பந்த முள்ளவைகளே. ஊன்றிப் பார்ப்பவர்க்குத்தானது புலப்படும். புதுநாகரிகமுணராத (old fools)'கிழமூடர்கள் இந்நீதியை இயம்பிக்கொண்டிருக்கின்றனரென்று சிலர் நிந்திக்கின்றனர். உலகெலாமொரு ஞாயத்திற்குட்பட்டு ஒழுகவேண்டுமென்பதெல்லோரு மொப்புக்கொள்ளத்தக்கதே. அனைவரும் அரசனாணைக்கடங்கி நடப்பதுபோல் அவ்வரசன் முதலிய யாவரும் கடவுளாணையாகிய முதனூன் முதலிய பல நூல்களுக்குமொருப்பட் டொழுகவேண்டுமன்றோ? "தேவ ரனையர் கயவ ரவருந்தா, மேவனசெய்தொழுகலான்" என்பதிலுள்ளபடி 'எல்லோருந் தம்மை நியமிப்பாரின்றி ஞாயத்துள்ளடங்காது தமதிச்சைக்கேற்க வொழுகுவதுந் தகுமோ? காலத்திற்கேற்ப ஆசாரங்களையுந் திருத்தவேண்டுமெனச் சிலர் செப்புகின்றனர். எவ்வெச்சமயங்களில் எவ்வெவர்கள் என்னென்னசெய்தாலும், அவையாவும் பழையநூல்களின் கோட்பாட்டிற்கு முரணின்றி அவைகளையநுசரிக்கவேண்டும். யதேச்சையாய் அவனவன் மனம்போனபடி வழங்குவதெல்லா மொருநூலாகுமா?.



பிறந்தபின் ஐந்துவயதானதும் ஏ.பி.ஸி. 'படிக்கத்தொடங்கிப் பெரியபரீக்ஷையிற்றேறி உத்தியோகத்திலமர்ந்து அதிகாரத்தால்தனத்தைத்தேடிச் சுகசந்தோஷத்துடன் கஷ்டமென்பதின்னதெனத் தெரியாமலும், தாமறிந்துள்ள அந்நியதேசபாஷைக் குரியவரதுகொள்கையே மேலானதெனக் கருதி நம்பண்டிதர்களையும் நமதாசாரங்களையும் புறக்கணிக்கும் கேவலலௌகிகர்கள் அவற்றின் பெருமையை எவ்வண்ணமறிவார்கள்? ஆனால் இங்கிலீஷ்படித்தவெல்லோரும் இத்தகையாரென யானியம்பவில்லை. இங்ஙனம் வரவர அநேகர் நமது வர்ணாசிரம தர்மங்களின் பெருமையுணர்ந்து ஒழுக்கத்தின் வழுவாது நடக்கின்றனர். இதற்கெதிர்வழியுா யென்னுடன் வாதாடிய சிலரைக்குறித்தன்றோ யான் இங்ஙனம் புகல்வது. இஃதிம்மட்டிலிருக்க. இனிப் பெண்களைப்பற்றிப் பேசுவோம்.

கடவுளின் சிருஷ்டியே பெண்டுகள் புருடர்களுக்கடங்கியொழுகத்தக்கதாயுளது. இயற்கையாகவே பெண்டுகளினும் புருடர்கள் உருவம், தைரியம், பலம், சௌரிய முதலியவற்,றிற் சிறந்துள்ளவர். இதுபொய்யன்று. இஃது எல்லோர்க்குங் கண்கூடாய் விளங்குவதே. இஃது அலரது அபலையென்னும் பெயராலேயே விசதமாம்; தமிழில் மெல்லியலென்பர். அநாதியாய் வளர்ந்தோங்கும் நமது தேசாசாரங்களிற் குறைகூறும் சிலபெரியமனிதர்கள் பெண்களும் புருடர்களைப்போல் அந்நிய பாஷைக்கண் ணிபுணராய்ப் பொருள்தேடுபவராய் நினைத்தபோது தமக்கிஷ்டமானவரைச் சுயம்வரமாக மணம்புரிந்துகொண்டு யதேச்சையாயொழுகவேண்டுமென்கின்றனர். இத்தேயத்திற்கு எவ்வளவோ தூரத்திலுள்ள ஐரோப்பாவிற் பெண்ணாய்ப்பிறந்து கிறிஸ்தவமதத்தில் வேரூன்றியிருந்த மகோபகாரியாகிய அனிபெஸ

ன்டு என்னும் பெண்மணிக்கு நமது வர்ணாசிரமதர்மத்திலுள்ள அன்பு அப்பெரிய மனிதர்கட்கில்லையே! அந்தஉத்தமி நமது தேயத்திற்கேற்ற பெண்கல்விவிடயமாகச் செய்துள்ள ஓர் உபந்நியாசத்தின் ஸாரத்தை இதனடியிற்காண்க.

“*இனிமேல் பெண்களின் வித்தியாப்பியாசத்தைப்பற்றி விசாரிப்போம். இவர்களேயன்றோ, முன்னுக்கு விவாகஞ்செய்துகொண்டு மக்களைப்பெற்றுக் குடும்பயோகக்ஷேமத்திற்குங் காரணமாகின்றவர். இத்தேயத்தி லாதியிலிருந்து இங்ஙனம் இரண்டுமூன்றுதலைமுறைக்கு முன்வரைக்கும் ஆரியப்பெண்கல்வி விஷயத்திற் கொஞ்சமும் அநாதரமிருந்ததில்லை. அவர்கட்குத் தமது மதாசாரப்பயிற்சியுங் குறைவற்றிருந்தது. அன்றியும், சிறந்த இதிகாசங்களான ராமாயண பாரதங்களையும், இன்னும் பலபுராணகதைகளையுந் தெரிந்திருந்தனர். சுயபாஷையிலுள்ள மதகிரந்தங்களையும் நன்கறிந்திருந்தனரென்பது தெற்றெனத்தெரிகின்றது. பல்லாயிரம் பாக்களும் கீர்த்தனங்களும் தோத்திரங்களும் அவர்கட்கு வாய்ப்பாடமாயிருந்தன. ஆதலால் அவர்மக்களும் பக்திநிறைந்த மனையிலே பிறந்ததால் தூய்மை வாய்ந்த பாடல்களையும் கீர்த்தனங்களையுங் கேட்டு வளர்ந்துவந்தனர். மேலும் பெண்களுக்கு வீட்டுவேலையைச் செவ்வனேபோதித்துவந்தனர். வீட்டுவேலையைப்பார்ப்பதிலும், தமது பாதுகாப்பிலுள்ளவரும் தொழில்செய்வோர் முதலானவரும் அவரவர் புரியுந் தொழிலின் சொரூபத்தைத் தெரிவிப்பதிலும் வல்லுநராயிருந்தனர். வைத்தியத்திலும் வன்மையுண்டு. தம்மக்களுக்குத்தாமே சிகிற்சை செய்து கொள்வது வழக்கம். அநேகர் தையற்றொழிலிலும் கான வித்தையிலும் கைதேர்ந்தனர். முக்கியமாய் அவரது கல்வி, உலகத்தோடொட்ட வொழுகற்கும் ஆரியகுடும்பங்களில் நடக்கத்தக்க வொழுக்கங்களை நிகழ்த்துதற்கும் வேண்டிய திறத்தை ஒவ்வொரு பெண்ணுக்கும் உண்டாக்கத்தக்கதாயிருந்தது.

*இங்கிலீஷிலிருந்து கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பெற்று மைசூர் ஓரியண்டல் புத்தகசாலையிலிருந்த இதை அதன் அத்யக்ஷர் கேட்டுக்கொண்டபடி யான் தமிழில் பெயர்த்தனன்.



இங்ஙனம் பழயகர்நாடகமென்று பரிகசிக்குங் கதியிலுள்ள அக்கல்விப்பயிற்சி அநேகமாய்க் குறைந்து விட்டது. இக்காலத்துள்ள வனிதையர், மிகுதியும்அசமர்த்தரும் அசக்தரும் அநேக சமயங்களில் அற்பபுத்திபாலபுத்தி யுள்ளவருமாயிருக்கின்றனர். ஆகையால் இன்பமாகியும் மேன்மையாகியும் ஆரியகுலத்திற்கியற்கையாகியுமுள்ள நன்னெறிக்கண்ணே தம்மக்களைச் செலுத்தத் தகாதவராயுமுள்ளார்.

ஆயினும், எல்லோருந் தெரிந்துள்ள இத்துர்த்தசையையொழிக்க அங்கங்கே பெண்படிப்பென்று பேர்வைத்துச் சில முயற்சியுஞ் செய்கின்றனர். அது, மூன்றுபங்கு, மேனாட்டார் தமக்கின்றியமையாதென நினைத்திருக்கும் முறையைப் பின்பற்றுவதால், அது நமது தௌர்ப்பாக்கியத்தால் ஆரியகுலாங்கனைகட்கு உபகாரமின்றி அபகாரமாக முடிகின்றது. கல்வியாலாகும் பயனைக்கருதாமல் ஒரு தேயத்துக் குசிதமாயுள்ளமுறையை ஆசாரவியவகாரங்களில் வேறுபட்டுள்ள மற்றொரு தேயத்திலும் உபயோகிப்பது விவேக மற்ற கண்மூடித்தனமான காரியமன்றோ. தாந்தாமினி யிம்முக்கூற்பாலனவாகிய செயல்களை நிர்வகிக்கத்தக்க வன்மையை யளிக்கவேண்டுமென்பதே யன்றோ கல்விகற்பதன் முக்கியகருத்து. அத்தகைய வன்மையையுதவாதது கல்வியேயன்று; அதுகேவலம் புத்தகப்படிப்பேயாம்.

இங்கிலாந்து அமெரிக்கா ஆதியான வெண்முகத்தோர் வதியும் நாடுகளில் பெண்கட்குப் பெருங்கல்வி கற்பிப்பதென்னையெனின், அங்குள்ள மங்கைமார் ஆடவருடன் கல்விப் பொறாமைகொண்டு நான்முன்னே நான்முன்னே யென்று போட்டியுடன் போராடிப் பெரியபரீக்ஷையிற் றேறிப் பலவேலைகளிலும் சர்க்காருத்தியோகத்திலும் அமர்ந்து ஜீவனஞ்செய்யவேண்டுமென்பதே யதன்கருத்து. அந்நாடுகளிப்போதிருக்கு நிலைமையில் அங்குள்ள குலமாதரும் ஜீவிப்பதற்கு வீட்டைவிட்டு வெளியிற் செல்பவராகின்றனர். இதற்குப் பலகாரணங்களுண்டு. அங்குள்ள ஆண்மக்களில்அநேகர் அயற்றேயஞ்சென்று அங்ஙனே நிலைத்து விடுவதாலும் விதவாவிவாகம் அவர்க்கியற்கையிலுண்மையால் ஒருத்தி தன்கணவனிறக்கப்பலதாரம்

மணஞ்செய்துகொள்வதாலும் அங்குப்புருஷமரணம் அதிகமாகையா
லும், இன்னும் இதரகாரணங்களாலும் வரனகப்படாமல் அநேகமங்
கையர் கன்னியராகவே காலங்கழிக்கின்றனர். அன்றியும், ஒருவன்
விவாகஞ்செய்துகொண்டதும் தன்தாய்தந்தையரைத் தணந்துதானு
ந்தன்தாரமுமாய் ஏகாந்தத்திற்சுகித்திருக்க வேறிடந்தேடிக்கொள்
வது வழக்கம். ஆகையால் விவாகமில்லாத மெல்லியலார் பெற்றோ
ரிறந்தபின் பிழைக்கவழிதேடப் புறம்பேபோகும்படி நேர்கின்றது.
ஆகையாலேதான் அவர்கள் கல்வியாற்றேர்ச்சியடையும் புருடர்க
ளுக்குச் சமமாகப் போராடவேண்டியிருப்பதால், அவர்க்காக ஏற்ப
ட்டிருக்குமதைத் தாமும் பயில்வதவசியமாகின்றது. அங்ஙனம்
பயிலாவிடின் இப்போராட்டத்தில் அவர்கட்குச் சகாயசம்பத்துங்
குறைந்து இழிந்த ஜீவனத்தால் வருந்தநேர்கின்றது. இதனாலே
தான் அந்நாடுகளிற் கீழ்வகுப்புமுதல் மேல்வகுப்புவரையுள்ள பாட
சாலைகளிற் பெண்களும் புருடர்கட்கிளைக்காது மனவெழுச்சியோடு
கற்கின்றனர். பின்பு பிழைப்புக்காகப் புருடருடன் போராடுவது
போல முதலிற் படிப்புக்காகவும் போராடுகின்றனர். அத்தேயங்க
ளிற் பல மடந்தையர் வைத்தியரும் உபாத்தியாயரும் எழுதுந்தொ
ழிலினருமா யிருப்பதுண்டு. அமெரிக்காவில் இவர் வழக்குப்பிடி
த்து வாதாடுபவரும் ஆசாரியரா யுபதேசிப்பவருமா யுறைகின்றனர்.

இத்தேயத்திலோ, ஆரியகுலாசாரங்களை அழித்துக் குடும்பங்
களைப்பிரித்து ஊணுடைகளைத்தேடிக் கொள்ளப் பெண்களை வீட்
டைவிட்டோடத்துரத்திப் பிழைப்புக்காகப் புருடருடன் போராடு
மாறுபுரியத்தக்க பலமான காரணங்களிருப்பதாகத் தோன்றவில்லை
யென்பதைச் சொல்லவேண்டியதே யில்லை. இங்கு ஆரியகுலப்பெண்
களின் செய்கைகளெல்லாம், அவரவர் கிருக கிருத்தியத்திலேயே
முடிந்துவிடுகின்றன. இவர்கள் கன்னிகையா யிருக்கும்போதே கல்
யாணம் நடந்துவிடுகின்றது. இத்தேசாசாரரீதியாய் மாதர்களை
இளம்பருவமுதல் முதுமைகாறும் காத்தற்குப் புருஷர் ஒவ்வொரு
வர் ஏற்பட்டுளர்.

இங்ஙனமிருக்க ஆரியகுலாங்கனைகட்குத் தமதுகுடும்பத்தைத்
தகுந்தபடி நிர்வகிக்கும் வன்மையைத் தரற்பாலதாய கல்வியைக் கற்



பிக்குங் காலங்களையெல்லாம் அவர்க்குப் பலபடியாலும்பழிக்கத்தக்க
தாயும் மேனாட்டுமின்னனையார்க்கே ஏற்றதாயுமிருக்கிற வித்தையி
னாலே வீணாய்க்கழித்து விடுவதாலென்னபயன்? இவர்கள்கல்விச்சா
லையிற்கற்குங் காலம் கொஞ்சமாகையால் அதனைக் கூடியமட்டில்
மிகப் பயன்படுமாறுபயோகித்துக் கொள்வதுதான் தரம். இவர்
பெரியமேனாட்டுச் சண்டைநிகழ்ந்த காலங்களைத் தெரிந்துகொள்வ
தாலும் லத்தீன்பாஷையைப் படிப்பதாலும் பயனென்ன? இவர்
இங்கிலீஷ்படித்துப் பட்டப்பரீக்ஷையிற் றேறுவதெதற்கு? அந்
நாட்டுப்பெண்கட்கு நம் பரதகண்டத்தின் செய்திகளை விவரமாகப்
போதிக்கின்றனரா? அஃதில்லையே! அங்ஙனமிருக்க, இவ்வாரியப்
பெண்கட்கேன் இங்கிலாந்தின் சொரூபத்தை இயம்பவேண்டும்?
அது பயனற்றதென்பதே அதனைவிடுவதற்குப் போதுமான காரண
மன்றோ.

இவர்கட்குத் தேசபாஷையையோதுவதற்கும் எழுதுவதற்கும்
நன்றாய்ப் பயிற்றவேண்டும். ராமாயணமகாபாரதாதி புராதனகதை
களையும், சாகுந்தலாதி நாடகங்களையும் இன்னும் மனோகரமாயுள்ள
வடமொழிக் கிரந்தங்களையும் மொழிபெயர்த்து அவற்றையே கற்
கும்படி யேற்படுத்தவேண்டும். பாடஞ்சொல்லுகையில் இத்தேச
த்துப்பேர்பெற்றகவிகளின் சரித்திரம் அவராலிழைக்கப்பெற்ற கிர
ந்தவிசாரம் பூகோளசாஸ்திரம் ஆகிய இவைகளிலுள்ள சுலபமான
விடயங்களைப்போதிக்கவேண்டும். இவையெல்லா மினிநடத்தற்காய
படிப்பிற்குப் பீடிகையாயிருக்கவேண்டும். குடும்ப காரியங்களுக்
கனுகூலமாயுள்ள கணிதப்பயிற்சி இன்றியமையாதது. ஆரோக்கிய
மான தினகர்மவிதியும் முக்கியமானதே.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்.

கோ. வ. ஸ்ரீநிவாஸாசாரியன்,

தமிழ்ப்பண்டிதன், மைசூர்.

---

# நல்லொழுக்கம்.

[இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்ப்பு.]

(முற்றொடர்ச்சி.)

"நான் துணிந்துசொல்லக்கூடியது என்னெனின், சோம்பலுள்ள புருஷன் அல்லது ஸ்திரீ, தம் இச்சைப்படி எவ்வளவு உயர் நிலைமையுடையராயிருப்பினும்; அவ்வளவிற்கு ஐசுவரியவந்தரும், சினேக வாஞ்சையரும், அதிர்ஷ்டவந்தரும், சந்தோஷ சீலருமாக ஆகார். அவர்கள் மனம்விரும்பி இச்சிக்கிறபடி திருப்தியாகச் செழிப்புடனும், சௌக்கியத்துடனும் சகலபொருள்களையும் உடைத்தாயிருக்கட்டும்; அந்த ஸ்திரீயாவது புருஷனாவது சோம்பலடைந்திருக்கிறவரையில், அவர்களுக்குச் சந்தோஷமும் கிடையாது; ஒருபோதும் சரீர சௌக்கியமும் மனோசுகமும் கிடையா; ஆனால் என்றும் இளைத்தும், பீடையுற்றும், கோபமுற்றும், அருவருப்புற்றும், அழுதுகொண்டும், பெருமூச்செறிந்தும், துன்புற்றும், சந்தேகித்தும் உலகத்தின் ஒவ்வொருபொருளின்கண்ணும் எரிச்சலுற்றும், தாங்கள் ஒழிந்து மாண்டுபோவதை விரும்பியும் அல்லது ஏதாவது மூடத்தனமான மனப்பைத்தியத்திற் பற்றுண்டும் இருக்கின்றனர்."

பர்ட்டன் என்பவர் இதேவிஷயமாக இன்னும் விசேஷமாகச் சொல்லுகிறதாவது:— அவருடைய புஸ்தகத்தின் சாரமும் கருத்தும் அர்த்தகர்ப்பமுமான முடிவுவாக்கியத்தில் அமைந்திருப்பது வருமாறு:—" உன் சொந்த க்ஷேமத்தையும் உன் சரீரசுகத்தையும் மனோசுகத்தையும் இதிலும் ஏனையதுக்கத்திலும் ஒப்புவிக்கிறபடியால், தனித்திருத்தலுக்கும் சோம்பலுக்கும் இடங்கொடாதே என்னும் இச்சிறியவிதியை முடிவான சாரமாக அநுஷ்டிப்பாயாக "தனிமையாயிராதே. சோம்பலாய் இராதே."

ஆகிலும் சோம்பேறிகள் முற்றும் சோம்பேறிகளல்லர். சரீரமானது வேலைசெய்யச்சோம்பினபோதிலும் மூளை சும்மாவிருக்கமாட்டாது. அது நல்லபயிரை விளைவியாவிட்டாலும், சோம்பேறிகளிடம் அவர்களது ஜீவகாலமுழுதிலும் காணக்கூடிய தீய முட்செடி



களையாவது வளர்த்துக்கொண்டிருக்கக் காணலாம். சோம்பலின் அதிதெய்வமாகிய பிசாசுகள் இருட்டிற்கிளம்பித் தாங்கள் பிடித்த ஏழையை என்றும் முகத்தில் உற்றுப்பார்த்து இம்சை செய்துகொண்டிருக்கின்றன.

"கடவுளர் நீதியுள்ளவர், நம்முடைய இன்பமான பாபங்களினின்றே, நம்மைத் தண்டிக்கக் கருவியுண்டாக்குகின்றனர்" நம்முடைய அந்தக்கரண தத்வங்கள் பிரவர்த்தித்து உபயோகமான காரியங்களிற்றலைப்பட்டாலன்றித் திமிர்கொண்டிருப்பதில் உண்மையான ஆநந்தம் காண்பதருமை. ஓர் மனிதனை இளைக்கச்செய்வது சோம்பலேயன்றி முயற்சியன்று. முயற்சிதான் உயிர்நிலையும் சௌக்கியமும் இன்பமுமாயிருக்கின்றது. வேலை செய்வதால் நம்முடைய பலங்கள் இளைத்துப்போகலாம். ஆனால் சோம்பலால் அவை முற்றும் பயனற்றனவாகின்றன. ஆகையால் ஓர் புத்திசாலியான வைத்தியன் வேலை செய்வதையே, மிகவும் அருமையான சுகசாதன ஔஷதமாக மதிப்பது வழக்கமாயிருந்தது. "வேலைசெய்யாத நேரத்தைப்போல் தீமை விளைப்பது வேறொன்றுமின்று," என 'டாக்டர் மார்ஷல் ஹால்' சொன்னார். 'பேயன்வலின்'—ஓர்பெரியகுருக்கள்-வழக்கப்படி' சொன்னதாவது—"மனிதரின் இருதயமானது ஓர்திரிகைக்குச் சமானமாகின்றது. அதில் கோதுமையை இட்டால், அதை மாவாகத் திரிக்கின்றது. கோதுமையை இடாவிடின் அது திரித்துக்கொண்டேயிருக்கிறது. அதனால் அது தானானே தேய்ந்துபோகின்றது.' என்பதாம்.

சோம்பேறிக்குப் போதுமான முகாந்தரம் வழக்கமாய் உண்டு. சோம்பேறி தான் வேலைசெய்ய மனமில்லாதவனாயினும், பெரும்பாலும் கள்ளநியாயம் பேசுவதிற் சுருசுருப்பாய் இருப்பான்; அதாவது "அடா, அந்த வழியில் சிங்கம் இருக்கின்றது." அல்லது "அந்த மலை ஏற முடியாது" அல்லது "முயற்சி செய்வதில் பயனின்று" "நான் பிரயாசையெடுத்துத் தவறியிருக்கிறேன்." "என்னாற் செய்ய முடியவில்லை" என்று சொல்வான். அவ்விதமுகாந்தரம் சொல்லுகிறவனுடைய கள்ள நியாயங்களைப்பற்றி, ஸர்சாமுவேல் ரோமில்லி,

ஒருகால் ஒரு வாலிபனுக்கு எழுதியது வருமாறு:— "உன்னுடைய சோம்பலுக்காகவும் வீண்காலக்ஷேபத்திற்காகவும் உன்னை உள்ளபடியே கண்டித்தேன் அதற்கு சமாதானமாக நீ கொண்டுவருகிற விநோதமான நியாயங்கள் உனக்கு வழக்கமாய் ஏற்பட்ட முயற்சியின்மை காரணமாக உண்டாயிருக்கக் கூடுமேயன்றிப் பிறிதன்று என நான் உள்ளவாறே நினைக்கிறேன். உனது கொள்கையின் சுருக்கமாவது; ஒவ்வொருவனும் தன்னாற் கூடிய நன்மை அனைத்தையும் செய்கிறான். ஒரு குறிப்பிட்ட மனிதன் நன்மைசெய்யவில்லையானால், அவன் செய்யத்தகுதியிலனென்பதற்கு அதுவே சாக்ஷியாகின்றது என்பதுபோலும். உனக்கு எழுதத் தெரியாமலிருப்பதானது, உனக்கு எழுதச் சக்தியில்லையென்பதை விளக்குகின்றது என்பதுபோலும். உனக்கு இஷ்டமின்மையானது, உனக்குச்சாமர்த்திய மின்மையை விளக்குகின்றது என்பதுபோலும். இஃது என்ன ஆச்சரியமான ஏற்பாடு! இந்தக் கொள்கையை உலகமுழுதும் ஒப்பிக்கொள்ளும்விஷயத்தில் ஆ! ஆ!! என்ன நல்லபயன் உண்டாயிருக்கலாம்.!"

ஒன்றைச் சம்பாதித்தற்குச் சிரமப்படாமல், அதை அடைய விரும்புவதானது பலயீனத்திற்கு அறிகுறியென்றும், நாம் பெற யோக்யமானதை எல்லாம், பிரதிப்பிரயோஜனம் செய்தே பெறுதலைவிரும்புவது அநுபவசித்தமான பலத்திற்கு முதன்மையான இரகசியப்பொருள் என்றும் உள்ளவாறே சொல்லப்பட்டிருக்கிறது. விட்டாற்றியுங்கூட, உழைத்ததாலுண்டாயினன்றி அநுபவித்துக் கொள்ளக்கூடாது. அது வேலைசெய்ததாற் கிடைத்திராத பக்ஷத்தில், அதற்குப் பிரதிப்பிரயோஜனம் கொடுபடாததாகவே யிருக்கின்றது.

இளைப்பாறுதலை நாம் அடையும்படிக்கு முன்னும் பின்னும் வேலையிருக்க வேண்டும். ஆனால் வேலையின்றி இளைப்பாறுதலானது மட்டுக்குமிஞ்சியுண்ட ஆகாரத்தைப்போன்ற பயனை அளிக்கக்கூடியதேயாம். செய்வதற்கு யாதொரு வேலையில்லாத அல்லது வேலையிருந்தும் அதைச்செய்ய விருப்பமில்லாத சோம்பேறியான செல்வனுக்கும் அத்தகைய சோம்பேறியான ஏழைக்கும் இச்சென்மமா



னது ஒன்றுபோலவே வெறுப்புள்ளதாயிருக்க வேண்டுவது அவசியம்; பிரான்சு தேசத்தில் 'போர்ஜெஸ்' பட்டணத்தின் சிறைச்சாலையில் எட்டாவதுமுறை சிறைப்பட்ட மனப்பிடிவாதங்கொண்ட ஒரு பிச்சைக்காரனுடைய வலதுபுயத்தில், பச்சைகுத்தப்பட்ட வார்த்தைகள் சகலமான சோம்பேறிகளுக்கும் உபதேசமாக அநுஷ்டிக்கப்படல் வேண்டும். அவை வருமாறு:— "சென்றகாலமானது என்னை வஞ்சித்து விட்டது. நிகழ்காலமானது என்னை ஹிம்சை பண்ணுகிறது. எதிர்காலமானது என்னைப் பயமுறுத்துகின்றது" என்பதாம்.

முயற்சியின் கடமையானது ஜனசங்கத்தின் சகலவகுப்பினர்க்கும் சகலநிலையிலுள்ளவருக்கும் உபயோகப்படுகின்றது. ஐசுவரியவான்களும் ஏழைகளும் அவரவருக்குரிய நிலைமைக்குத் தக்கபடி எல்லாரும் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. குடிப்பிறப்பாலும் கல்வியாலும் பிரபுவானவன் இவ்வுலகச் செல்வத்தில் எவ்வளவு செழிப்புடையனாயினும், பொதுஜனநன்மைவிஷயத்தில் தான் முயற்சிக்கவேண்டிய பாகத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருப்பதை உணராமல் தீராது. அவன் தன்னைமேன்மைப்படுத்துகிற ஜனசங்கத்திற்குத் தக்கபிரதிபலனைத், தான் செய்யாமல், மற்றவர்களுடைய உழைப்பால், தான் உண்டு உடுத்து ரக்ஷிக்கப்படுவதில் திருப்தியடையக்கூடாது. யோக்கியமும் கௌரவஎண்ணமுமுள்ள மனிதன் ஓர்விருந்தில் வந்திருந்து உண்டு அநுபவித்து, அதற்குநேரிட்ட செலவில் தன் பாகத்தைக் கொடாமற்போக நினைத்தலே அவனுக்குத் துன்பமாக நிகழும். சோம்பேறியாகி உபயோகமற்றிருப்பதானது கண்யமாவது பாத்தியதையாவது அன்று; அற்பசுபாவத்தையுடையோர் சாப்பிடுவதில் மாத்திரம் திருப்தியடைந்திருந்தபோதிலும், நிதானமான பேறும், ஆண்மைபொருந்திய அவாவும், யோக்கியமான நோக்கமும் உடையவர்கள் அந்நிலைமையை உண்மையுள்ள கண்யதைக்கும் மெய்ம்மையான புகழுக்கும் தகாததாக உணர்வர்.

இப்பொழுது 'டெர்பி' க்குப் பிரபுவாய் இளாஸ்கௌவிலிருந்த 'லார்ட் ஸேண்டிலி' என்பவர் கூறுமாறு;— ஓர் வேலையில் அழ

ராத மனுஷன், எக்காலத்தேனும் எவ்வளவு இனிமையும் பூஜ்யதையுமுடையனாயிருந்தாலும், இருக்கக்கூடியவனாயினும், உள்ளவாறே சந்தோஷமுள்ளவனென்று நான் நம்பவில்லை. வேலையே நம்முடைய ஜீவனாயிருப்பதால் நீ செய்யக்கூடியதை எனக்குக் காட்டு; நீ இன்னானென்பதை உனக்கு நான் காட்டுவேன். ஒருவன் வேலைசெய்ய இச்சிப்பதானது கேவலம் இழிவும் துன்மார்க்கமுமான இச்சைகளைத் தடுப்பதற்குச் சிறந்த கருவியாக நான் பேசியிருக்கிறேன். அது, போக்குப்படிவிட்ட சுவாமிமானத்தினின்றும் எழுகிற அற்பஇச்சைகளையும் கோபங்களையும் இரட்சிக்கிறதற்குச் சிறந்தகருவி என்று சொல்லவும் செய்வேன். மனிதர்கள் தாங்கள் ஓர் உலகத்தை உண்டாக்கியதாகப் பாவித்து அதில் தங்கிக்கொண்டு துன்பத்திலும் தொந்தரவிலும் இருந்து விடுபட்டிருக்கக் கூடுமென்று இதன் முன் எண்ணியிருந்திருக்கின்றனர். அநேக முறை இது சோதிக்கப்பட்டு எப்பொழுதும் ஒரே சித்தாந்தமாக முடிவுற்றது. நீங்கள் கவலையிலும் உழைப்பிலும் நின்று தப்ப முடியாது. அது மனிதஜன்மத்திற்கு விதியாக ஏற்பட்டிருக்கிறது. துன்பத்தை எதிர்ப்பதற்கு ஒதுங்குகிறவர்கள், துன்பம் தங்களுக்கு வருவதைக் காணுகின்றனர். சோம்பேறிகள் உலகத்தில் தாங்கள் செய்யவேண்டிய வேலையின் பாகத்தைக் குறைப்பதற்கு உபாயஞ் செய்யலாம். ஆனால் பிரகிருதியானது அந்த வேலைக்குள்ள வாசனையைச் சராசரிசெய்து, அந்தச்சொற்பமும் அவன்விஷயத்தில் அதிகமாயும் கடினமாயுமிருக்கும்படி உபாயஞ் செய்கின்றது. தன்னைமட்டும் இன்பப்படுத்திக்கொள்ளுகிறவன் வெகுசீக்கிரம் அல்லது தாமதமாய்ப், பெரும்பாலும் தாமசத்தைவிட அதிசீக்கிரமாய்த், தனக்கு மிகக்கடினமான எஜமானை உடையனாயிருக்கக் காண்கிறான். பொறுப்பினின்றும் தப்பித்துக்கொள்ளுகிற மிக்க துர்ப்பலத்திற்குத் தக்க தண்டனையானது உரிமைப்படுகின்றது. பெரிய காரியங்களை நீக்கினவிடத்து அற்பகாரியங்களே பெரியனவாகப் பாவிக்கப்படுகின்றன உலகத்தின் யதார்த்தமானவேலையிற் சிறிது பயனுடனும் சௌக்கியத்துடனும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கத்தக்க மனசினுடைய வருத்தங்கள், பிரவிர்த்தியிற்புகாத மூளைகளிற் பல்கிப்பெருகாநின்ற அற்பமும் அபாவமுமான கவலைகளிற்பட்டுப் பெரும்பாலும் வியர்த்தமாகின்றன



மிகத்தாழ்மையாய் எண்ணத்தக்கதாகிய ஒருவனுடைய சொந்த இன்பநுகர்ச்சிக்குங்கூட, இடையறாது பயனுள்ள தொழில் அவசியமாகின்றது. வேலை செய்யாதவன் வேலையின் பயனை அனுபவிக்கமாட்டான். "நம்முடைய நேரத்தை முயற்சியில் செலவிட்டால், நாம் அயர்ந்து தூங்குகிறோம். ஜாக்கிராவஸ்தையில் சந்தோஷமாயிருக்கிறோம். இளைப்பாறுநேரமானது கல்வியாற்கிடைத்து கடமையைச் செலுத்தியதால் எய்தியபோதிலும், அதனை அனுபவித்தற்கு உழைப்பின் சிறிது உணர்ச்சி அவசியமாகின்றது." என்று ஸர் வால்ட்டர் ஸ்காட் என்பவர் சொன்னார்.

அதிக வேலையால் இறக்கிற மனிதர்களும் உளர். ஆனால் பின்னும் அநேகர், சுயநயம்பாராட்டல், கட்டுப்பாடின்மை, சோம்பலாகிய இவற்றால் இறக்கின்றனர். அதிக வேலையால் முறிவடைவது, சாதாரணமாய்த் தங்கள் ஜீவனகாரியங்களை ஒழுங்குபடுத்தாத குறைவினாலும், சரீரசுகத்திற்குவேண்டிய சாதாரணவிதிகளை அசட்டைசெய்வதாலுமேயாம். மேற்கூறிய கிளாஸ்கௌ—மாணாக்கர்களுக்கு, லார்ட் 'ஸ்டேன்லி' என்பவர் செய்த பிரசங்கத்தில், ஸ்திரமாயும் ஒழுங்காயும் நடத்தப்பட்ட கடினமான வேலையானது எப்பொழுதாவது யாருக்காவது தீங்கு செய்ததா? என்பதில் தமக்குச் சந்தேகம் உண்டென்று அவர் சொன்னது பெரும்பாலும் சரியாயிருக்கலாம்.

தவிரவும், வெகு வருஷங்கள்ஜீவிப்பது நீண்டஆயுள் காலத்திற்கு இலட்சணமாகாது. ஒரு மனிதனுடைய ஆயுட்காலமானது அதிலே தான்செய்கிறதும் உணருகிறதுமானவற்றால் நிதானிக்கப்படுகிறது. ஒரு மனிதன் எவ்வளவிற்கு உபயோகமான காரியத்தைச்செய்து ஆலோசிக்கவும் உணரவும் செய்கின்றனனோ,அவ்வளவிற்கு அதிகமாய் அவன் உள்ளபடி வாழ்ந்தவனாகின்றான். சோம்பலுற்ற உபயோகமற்ற மனிதன் எவ்வளவு நீண்டகாலம் இருந்தபோதிலும் கேவலம் பயனற்றுத் தின்றுவளருவோனாகின்றனன்.

பூர்வத்திலிருந்த கிறிஸ்துமதபோதகர்கள் உழைப்பின் விஷயத்தைத் தங்கள் நிதர்சனத்தால் மேன்மைப்படுத்தினர். "வேலைசெய்ய மனமில்லாதவன் சாப்பிடவும் கூடாது" என்று 'ஸெண்ட் பால்' என்

யவர் சொன்னார். அவர் தன் கையால் பிரயாசைப்பட்டு, எவருக்கும் பாரமாயில்லாமல் தன்னை மகிமைப்படுத்திக் கொண்டனர். 'ஸெண்ட் போர்னிபேஸ்' என்பவர் 'பிரிட்டனில்' இறங்கினபொழுது ஒரு கையில் வேத புஸ்தகமும் மற்றொருகையில் தச்சுக்கோலும் கொண்டுவந்தார். இங்கிலாந்திலிருந்து பிற்பாடு கட்டுமானக் கருவிகளை எடுத்துக்கொண்டு ஜெர்மனி தேசத்திற்குப் போனார். அநேக வேலைகளுக்கு மத்தியில் அவருங்கூடத் தோட்டவேலை கட்டுமான வேலை உதவுவேலை கெடிகாரவேலைகளால் தம் ஆகாரத்தைச் சம்பாதிப்பதற்கு ஜாக்கிரதையாய் வேலைசெய்தனர்.

நெப்போலியன், சிறந்த கைத்தொழில் வேலையைப்போய்ப் பார்க்கும்போது, அவ்வேலைக்காரனுக்கு மிக்கமரியாதை செய்து, தான் அவனைவிட்டு வரும்போது, தாழ்ந்து குனிந்து அவனுக்கு வணக்கம் செய்வது அவருடைய இலட்சணமாயிருந்தது. ஒரு நாள் 'ஸெண்ட் ஹெலினாவில்' 'மிஸ்ட்டிரஸ் பால்கோம்பி'யுடன் உலாவிக்கொண்டிருந்தபொழுது, சில வேலைக்காரர்கள் ஒரு சுமையை எடுத்துக்கொண்டு நெருங்க வந்தனர். அந்தச் சீமாட்டி கோபத்தொனியுடன் அவர்களை வழியைவிட்டுப்போக உத்தரவு செய்தாள். அதின்பேரில் நெப்போலியன் குறுக்கிட்டு "அம்மா! அந்தச் சுமைக்கு மரியாதை செய்" என்றனர். மிகவும் தாழ்ந்த கூலியாளனுடைய அற்பவேலையுங்கூட ஜனசங்கத்தின் பொதுநன்மைக்கு உபயோகப்படுகின்றது. "வேலைசெய்யாத ஓர்புருஷனாவது சோம்பலுள்ள ஓர் ஸ்திரியாவது இருந்தால், இராஜ்ஜியத்தில் யாராவது ஒருவர், குளிரால் அல்லது பசியால் வருத்தமடையவேண்டும் என்று ஒரு சீன சக்கரவர்த்தி புத்திசாலித்தனமாகச் செப்பினர்" என்று சொன்னார்.

இடையறாமல் பயனுறுதொழிலைப்புரிதலானது புருஷர்களுடைய இன்பத்திற்கும் நன்மைக்கும் உரியதுபோன்று, ஸ்திரீகளுக்கும் இன்றியமையாததாம். அஃதின்றி, ஸ்திரீகள் தலைவலியும், நரம்புவலியும்கொண்டு சோம்பலான எய்ப்பும் பயனின்மையுமான ஸ்திதியில் அமிழுந் தகுதியுடையவராகின்றனர். 'கெரோலயன் பெர்த்தஸ்' என்பவள், கலியாணமாயின தன் குமாரத்தியாகிய 'லூயிஸா' என்பவளுக்கு அத்தகையசோம்பலுக்கு இடந்தராது ஜாக்கிரதைப்



படும்படி, முன்காப்பாக, எச்சரித்தனள். அவள் சொன்னது வருமாறு:—"என் குழந்தைகள் அரைநாள் விடுதலையினிமித்தம், வெளியேறியிருக்கும்பொழுது, நான்தானே பகற்காலத்தில் ஆந்தையைப்போல், மூடமும் மந்தமும் எய்தப்பெற்றவளாகச் சிலவேளை உணருகிறேன். ஆனால் ஒருவரும் இதற்கு இடம் கொடுக்கலாகாது. இது ஏறக்குறைய எல்லா இளமனைவிகளுக்கும் நேரிடுகின்றது. சிரத்தையுடனும் ஜாக்கிரதையுடனும் அமர்வுற்ற வேலைதான் சிறந்த சுகப்பேறாகின்றது. ஆகையால் விடாமல் ஜாக்கிரதையுடன் ஏதாவது ஒரு வேலையைச் செய்யுங்கள். ஏனெனில் உங்கள் பிதாமஹர் சிறியோர்க்கும் பெரியோர்க்கும் சோம்பலானது பிசாசின் கண்ணியாயிருக்கின்றதென்கிறார். அவர் சொல்வது வாஸ்தவமாயிருக்கிறது."

இவ்வாறு இடையறாது புரியும் பயனுறுதொழிலானது சரீரத்திற்கு மட்டுமன்று: மனதிற்கும் சௌக்கியமளிப்பதாம். சோம்பேறியானவன் தன் ஆயுளில் சோம்பலாகவே நாட்கழித்து, தன்னுடைய நல்ல பிரகிருதியை, சன்மார்க்கம் ஆன்மஞானம் சம்பந்தப்பட்ட அளவில் முற்றும் ஒழிந்துபோகவிடானெனினும், ஆழ்ந்த நித்திரையில் தூங்கவிடுகின்றனன். ஆனால் முயற்சியுடையோன் தன் ஆதீனத்தில் அணுகுகிறவர்களுக்கெல்லாம் சுறுசுறுப்பிற்கும் இன்பபோகத்திற்கும் மூலமாகின்றனன். சோம்பலைவிட ஏதேனும் சாதாரணமான கூலிவேலையானது மிகவும் நல்லது! அதிபால்யத்திலே கடலுக்கனுப்பப்பட்டு எஜமானனால் வேலையிற் பிரியாது வைக்கப்பட்ட 'ஸர்பிரான்ஸிஸ்டிரேக்' என்பவரைப்பற்றி "அவரது இளமையிலுள்ள வருத்தமும் பொறுமையும் அவருடைய ஆன்மாவின் பொருத்துக்களை இணைத்து, அவற்றை உறுதியும் கட்டியுமாகச் செய்தன" என்று 'புல்லர்' என்பவர் கூறுகின்றனர். இடையறுமுயற்சியை இன்றியமையாது வேண்டத்தக்க தினசரிதமான ஒழுங்குற்ற கைத்தொழில்வேலையில் அமர்ந்திருப்பது மிகவும் பயனுள்ளதென்று தான் நினைத்ததாக 'ஸ்ச்சில்லெண்' என்பவர் சொல்லுவது வழக்கம்.

முயற்சி, பயனுறு தொழில் எனப்படும் வேலையானது இன்பத்திற்குரிய மகத்தான அந்தரங்ககாரணங்களில் ஒன்றென 'பிரான்சு' சித்திரக்காரராகிய 'க்ரூஸின்' வாக்கியவுண்மைக்கு ஆயிரக்கணக்கான

சாக்ஷியங்கள் இருக்கின்றன. 'காசுபன்' என்பவரைச் சிலநாளைக்கு முழுதும் வேலையின்றியிருக்கும்படி அவருடைய சிநேகிதர்கள் ஒரு காலத்தில் வேண்டிக்கொண்டனர். ஆனால் அதற்கு அவர் ஏதேனும் ஒன்றைச் செய்யாமலிருப்பதைவிட ஒன்றைச்செய்துகொண்டு வியாதியைப் பொறுத்துக்கொள்வது மிக எளிதென்று சொல்லித் தன் வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

(இன்னும் வரும்)

---

# துன்பின் மூலம்.

"துன்பே நிறையுமிம் மன்பே ருலகு" என்றவண்ணம், மனிதன் பிறந்தது முதல் இறப்பதுவரையுள்ள பருவங்களிலெல்லாம் துன்பமே நிறைந்துள்ளதென்பதற்கு நாம் இலக்கியங்கள் காட்டுவதுமிகையாம். அதுபற்றிப் பெரியோர்கள் முறையிட்டிருப்பனவும், நாம் கண்டு மனுபவித்தும்வருவனவும் அநந்தமாகும். துன்பமேலிட்ட இவ்வுலகில், நாமனுபவிக்கும் இன்பத்தினிலையை எண்ணின் அத்தியற்பமேயன்றோ. வெவ்வராவின் வாயின்கட்பட்ட தவளை தன்னிலையறியாது தனதரும்பசியை மாற்ற வேறொன்றைப்பட்சித்துச் சுகிப்பதும் போலாம், இம்மண்ணுலகில் நாமனுபவிக்கு மின்பம். இவ்விஷயத்தைப்பற்றி வேறு அபிப்பிராய முள்ளவர் உண்டென்றாலும் துன்பமுண்டென்னும் அவரது சம்மதம் நாமீண்டெடுத்துரைக்கப்புகுந்த விடயத்திற்குப் போதும். ஆகவே, இத்துன்பத்தின் மூலமென்ன? அது கடவுளாலாக்கப் பட்டதோ? மனிதனால் வருவிக்கப் பட்டதோ? அல்லது, இயற்கையிலுண்டானதோ? என்பதை விசாரிப்போம்.

கருணாலயன், கருணாநிதி, அருட்சொரூபி என்னுந் திருநாமங்களைப் பெற்றகடவுள் இத்துன்பத்திற்குக் காரணமென்று சொல்பவர் ஆஸ்திகரிலிலர். எனினும், இப்பிரபஞ்சத் தோற்றத்தின்



முதற்காரணம் பிரமமென்றும், அஃதொன்றே அநாதி நித்தமென்றும் அஃதொழிந்த மற்றவையெல்லாம் அநித்தமென்றுஞ் சொல்கிற ஏகான்மவாதிகள் இத்துன்பத்திற்குக் காரணம் அப்பிரமந்தானென்று ஏற்படுத்தவேண்டியதுண்டு. பரமாத்மாவின் அம்சமான ஜீவாத்மா தன் அவித்தையினால் மாயாவசமாயிவ்வுலகின்கண் பிறந்து துன்புற்று வாழப் பக்குவமெய்தியபொழுது அவித்தை நீங்கி ஞானவெழுச்சியுண்டாங்கால், பரமாத்மாவோடு ஐக்கியப்படுமென்பதாகும் அவரதுகொள்கை. சருவவல்லமையுள்ள பரமாத்மாவின் ஓர் அம்சத்திற்கு இவ்விதந் துன்பத்திலுட்பட என்னவிதி? அந்த அம்சத்தை அவித்தையணுகிய தெங்ஙனம்? இஃதொரு நாடகமோ? நாடகமென்னில், அதில்யாருக்கென்ன பலன்? என்றறிவது ஆவசியகமல்லவோ. ஏகான்மவாதிகளும் அவரது இக்கொள்கையிற் சேர்ந்த வேதாந்திகளும் வாதிப்பது போல், இத்துன்பத்திற்கு நமதீசன் முதற்காரணமாயோ துணைக்காரணமாயோ விருப்பனென்று எம்போலிய சாமான்னிய புத்தியினர்க்குத் தோன்றவில்லை. இதற்குக் காரணம் வேறாயிருத்தல் வேண்டும்.

இத்துன்பம் மனிதனால் வருவிக்கப் பட்டதோ? நாமிப்பிறப்பில் அனுபவிக்குந் துன்பங்கள் மேலைப்பிறப்பிற் செய்த கருமத்தின் பயனென்று சொல்வாருண்டு. இதில் விரோதமொன்றுமில்லை. ஆனால் முன் கருமசம்பாத்தியமில்லாத ஆதிபுருடன் அல்லது உயிர் துன்பமனுபவித்த தெங்ஙனம்? மறுபிறப் புண்மையிலே நம்பிக்கையில்லாத கிருஸ்துவருக்கும் மகமதியருக்கும் இத்தர்க்கம் பொருந்தும். தேவனால் நிர்மிக்கப்பட்ட ஆதாமென்பவர் பாவஞ்செய்வானேன்? அவர் பரிசுத்தனாலாக்கப்பட்டவரன்றோ? நாதனது ஆக்ஞைக்கு விபரீதமாகத் தவிர்க்கப்பட்டகனியை அருந்துவரா? அவரும் சாத்தன (பாசம)துவலையில் அகப்பட்டார்போலும்! பரிசுத்தனாற் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாமானவர் சாத்தனதுவலையிலகப்பட்டாரெனவே, அவனது வலியுமென்னாம்? அநாதிநித்தமான கடவுளல்லாமல், அநாதிநித்தமான சாத்தன் (பாசம்)ஒன்றுண்டென்றும் அவன் அநாதியிலே ஜீவாத்மாக்களைப் பாதித்துவருதலுண்டென்றும் கிருஸ்துமதக் கொள்கைகளினின்றும் ஊகிக்கலாம். இவ்வு

லகில் அரிமான் (நயசக்தி) எபிலிஸ் (தீயசக்தி) எனவிரண்டு உண்டென்றும், அவைகள்முறையே உயிர்களைப் பக்கப்படுத்துமென்றும், அவற்றில், எபிலிஸ்என்ற தீயசக்திமூலமாய்த் துன்பமுற்பத்தியாயினவென்றும் முகம்மதியசாஸ்திரங்களில் விவரிக்கக்காணலாம். மனிதன் அபேக்ஷையால்அல்லாமல் மேற்கூறிய தீயசக்தியின் தூண்டுதலால் துன்பம் வருவித்தான் என்றலும், சருவவல்லமைபெற்ற கடவுள் தமது நற்செய்கைகளை நிர்மலமாக்கும்பொருட்டு இத்தீயசக்திகளைச் சிருட்டித்தாரென்றலும் நமதனுபவத்திற்கு வேறாயிருத்தல்காண்க.

இனி, இத்துன்பம் சருவவல்லமையுள்ள கடவுளால் ஆக்கப்படாமலும் மனிதனால் வருவிக்கப்படாமலு மிருக்க, அஃது அநாதியே பதியைப்போல நித்தமாயிருத்தல்வேண்டும். அநாதியிலே இத்துன்பம் அல்லதுபாசம் மனிதரைப் பாதிக்கவும் அதன் வசத்ததாயிருக்கும் பசுக்களை மீட்டு நல்வழிப்படுத்தித் தன் வயப்படுத்தலல்லவோ பதியின் றொழிலாயிருத்தல் இயல்பு. பாசத்தோடு அத்துவிதமாயிருக்கும் பசுக்களை (ஜீவாத்மாக்களை) பிறப்பிறப்புக்களால் கன்மந்துடைத்து ஞானமூட்டித் தன்வயப்படுத்தல் (மோக்ஷத்திலேய்துவித்தல்) தான் பதியினியல்பென்பது சாஸ்திரிக சம்பந்தமாயும் யுக்தானுசாரமாயு மிருக்கிறது. இயற்கையிலே பசுக்களைப் பாசமடுத்துள்ளதென்பதில் புதுமையென்ன? இயற்கையிலே செம்பிற்களிம்பு தோய்ந்திருப்பதும் அரிசியைப்பதர் மூடியிருப்பதும், இதற்கொருகரியாம். செம்பு புடம்போடக் களிம்புமாறிப் பிரகாசிப்பதும், நெல் இடிபட்டுப் பதர்மாறி அரிசியாவதும்போல, பாசத்தினிடைப்பட்டபசுக்கள் பிறப்பிறப்புக்களால் கன்மம் நீங்கி ஆக்கியோன்கருணையினால் மோக்ஷத்திற்குரியதாகு மென்றதும் உண்மையாகும். இவ்வுண்மையறிந்தல்லவோ சித்தாந்தியார் பதி பசு பாசமூன்றும் அநாதிநித்தமென்றும், பாசமனுகாப்பதி அதன்வசத்தவானபசுக்களின்பேரில் கருணைபுரிந்து துன்பந்துடைத்து அவைகளை மீட்டுத் தன்வயத்ததாக்குதல் இயல்பென்றும் வற்புறுத்திக் கூறலாயினர்.

"நாகம்"

# சில குறிப்புக்கள்.

சுந்தரமூர்த்திஸ்வாமிகளும் சேரமான்பெருமாள் நாயனாரும் பாண்டிநாட்டிராஜதானியான மதுராபுரிக்குச் சென்றகாலத்து, பாண்டியன் மகளாரைவேட்ட சோழவரசனும் அவ்விடத்து அக்காலத்திருந்ததாகப் பெரியபுராணத்தே அடியிற் காட்டியிருக்கும் செய்யுளில் கூறப்படுகின்றது:—

"தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கணினிதிருந்த சோழனார்
அன்னவர்களுடன்கூட வணையவவ ருங்கூடி
மன்னுதிரு வாலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார். *

இதனுட் குறிக்கப்பட்டுள்ள சோழவரசன் முதல்ஆதித்தனென்று தோன்றுகின்றது. ஏனெனில், சின்னமனூர்த் தாமிரசாஸனத்தில், பாண்டியவரசர்களது வமிசவிருக்ஷம் அடியில்வருமாறு காணப்படுகிறது. †

ஜயந்தவர்மன்.

|

அரிகேசரி, அசமசமன், அஸங்கியவிக்கிரமன், அகாலகாலன், மாறவர்ம்மன், பராங்குசன், சங்கரமங்கையில் நடந்தயுத்தத்தில் வெற்றிபெற்றவன்.

|

ஜடிலவர்ம்மன், பராந்தகன் (I), நெடுஞ்சடையன்

|

ராஜஸிம்மன் I.

|

வரகுணமஹாராஜன்

|

பரசக்கிரகோலாகலன், மாறவர்ம்மன், ஸ்ரீவல்லபன், ஏகவீரன், குன்[illegible] செங்களம், விழிஞம் முதலிய யுத்தங்களில் ஜயமடைந்து, குடமூக்கில் கங்கர், பல்லவர், சோழர், கலிங்கர், மகதர் முதலியோரைத் தோல்வியுறச்செய்தவன்—மாயபாண்டியனையும் வென்றவன்.

|

வரகுணவர்மன்

பராந்தகன் (II), வீரநாராயணன், சடையமாறன், காகிரியிற்செருச்செய்தோன். பெண்ணைகடமத்தோன், உக்கிரனைப்பிடித்தோன், இவன் மனைவியானவள் வானவன்மாதேவி.

|

இராஜஸிம்மன் II, அபிமானமேருமாறவர்ம்மன், ராஜசிகாமணி, மந்தரகௌரவன், சோழனைத்தோற்கடித்தவன்.

---

* பெரியபுராணம், கழற்சிங்கநாயனார் புராணம். பா. கக.
† Ep. An. Rep. for 1907.

மேற்காணும் வம்சவிருக்ஷத்தில், பராந்தகபாண்டியன் (I) ஆகிய ஜடிலவர்ம்மன் காலம் கி. பி. 770-ஆகிறது.‡ இவன் மகனாகிய இராஜசிம்மன் (I) காலத்துச்சோழவரசர்கள் விஜயாலயனும் முதலாதித்தனுமாவார்கள். இவர்கள் காலத்தேதான் சுந்தரமூர்த்திகளிருந்தது. ஆதலால் முதல் ஆதித்தனுக்கு இராஜசிம்மன் சகோதரியைக்கொடுத்துக்கலியாணமாயிருக்கவேண்டும். இதற்கேற்ப ஆதித்தன் மகன்பெயரும் பராந்தகனென்று இருத்தலால், இவனுக்கு இவன் மாதாமகன்பெயரை வைத்திருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டாவதோடுங்கூட, இவ்வூகம் மேற்சொன்ன சமாசாரங்களோடு ஒத்திருத்தலையும் காணலாம்.

பிறகு சோழபராந்தகன் தன்மகளை ஸ்ரீவல்லபன் ஏகவீரனுக்குக் கலியாணஞ் செய்து கொடுத்திருக்கவேண்டும். ஏனெனில், சோழபராந்தகன் இருபெயர்களாகிய பராந்தகன் வீரநாராயணனென்பவைகளை ஸ்ரீவல்லபன் ஏகவீரன்மகன் தரித்திருக்கிறான்; ஆயின் பராந்தகன் (I) காலத்து பாண்டியன் ஒரு ராஜசிம்மனென்று தெரியவருகிறது. ஆதலால் முதல் ராஜசிம்மன் பெயரனாகிய ஸ்ரீவல்லபனுக்கு ராஜசிம்மனென்ற பெயர் இருந்திருக்கலாமென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. இவனைப் பராந்தகன் (1) ஜயித்துப் பிறகு தன் மகளை மணம் புரிவித்து இவனுக்கு இவன் இராஜ்ஜியத்தையும் திரும்பக்கொடுத்து, தன்னுள்ளரசாளும்படி செய்திருக்கலாமென்று தோற்றுகிறது.*

இப்பொழுது பாண்டியசோழவமிசங்களினுறவுமுறை அடுத்த பக்கத்தில் காட்டியிருக்கும் மாதிரியாகவேண்டும்.

து. அ. கோபிநாத ராவ்.

[இவ்விஷயம், சோழவமிச சரித்திரம், ௩-ம் அதிகாரத்தின் முதற்கண்வைத்துப் படிக்தற்குரியது.]

‡ செந்தமிழ்த் தொகுதி-௪, பக்கம்-௩௩௪.

* இராஜராஜன் (I) விமலாதித்தனுக்குப் பெண் கொடுத்து ராச்சியமளித்ததை இவன் அரசாட்சியின்கீழ்க் காண்க.



உ

## திருவாலவாயுடையார் கோயில்

# திருப்பணி விவரம்.*

க. சுவாமியினுடைய அட்டகஜவிமானந் தேவேந்திரன் பிரதிட்டை.

உ. சுவாமிகோவில் அர்த்தமண்டபம் மணிமண்டபம் மகாமண்டபம் ஆறுகாற்பீடம் சன்னிதிக்கோபுரம் மூலப்பிராகாரத்திருமதில் சூழப்பத்தியும் நாயகர்கோவிலும் சூரியாதி சண்டேசுவரதேவதை கோவிலும், அம்மன்விமானம் அர்த்தமண்டபம் முன்மண்டபம் மூலப்பிராகாரத்திருமதிலும் கோட்டையகழும் கோட்டைக்குவெளியில் கீழைத்திக்கில் ஐயனார்கோவிலும் தெற்குத்திக்கில் சத்தமாதாக்கள் கோயிலும் விநாயகர் கோயிலும், மேற்குத்திக்கில் ருத்திரன் கோயிலும் வடதிக்கில் எண்டோள்காளிகோவிலும்--குலசேகரபாண்டியன் பிரதிட்டை செய்தது.

௩. சித்தர்கோவில் விக்கிரமபாண்டியன்பிரதிட்டைசெய்தது. சுவாமிகோவிலிரண்டாம் பிராகாரத்திருமதிலும் ஒன்பதுநிலைப்பெரிய கோபுரமும் அம்மன்கோவிலிரண்டாம்பிராகாரத்திருமதிலும் சன்னிதி மண்டபமும் சுந்தரபாண்டியன்செய்வித்தது.—சாலிவாகன† சகாப்தம் தூாசஂ0.

ச. அம்மன்சன்னிதி மூன்றுநிலைக்கோபுரம்- ஆனந்தத்தாண்டவநம்பி செய்வித்தது.—சகாப்தம்-தூாரு0.

---

* இவ்விவரம், முன் வெளியிட்ட "மதுரை வரலாறு" "மதுரை ஸ்தானீகர் வரலாறு" என்னும் பிரதியுடன் எழுதப்பட்டிருந்தது. எட்டிலுள்ளவாறே இங்கே பதிப்பிக்கப்பட்டுளது. இவ்விவரத்தால் இன்னார் இன்ன காலத்தில் இன்ன திருப்பணி செய்தாரென்பது நன்கு தெரியவரும்.

† சாலிவாகன சகாப்தம், நிகழும் பிலவங்க வருஷத்துக்கு, தூஅஉ௯ (1829) ஆகும்.



ரு. மாடவீதியாகிய ஆடிவீதிப்பெரியதிருமதில்—திருநோக்கழகியார் செய்வித்தது—சாலிவாகன சகாப்தம்-தூரு0சு.

சு. ஆடிவீதிமேற்கு ஒன்பதுநிலைப் பெரியகோபுரம்-பராக்கிரமபாண்டியன் செய்வித்தது, சகாப்தம்-தூஉசரு.

எ. சுவாமிசன்னிதி அஞ்சுநிலைக்கோபுரம் செய்தது, வசுவப்பன்—-சகாப்தம்-தூஉகூச.

ஷை கோவிலிரண்டாமபிராகார மேல்புறம், ஐந்துநிலைக்கோபுரஞ்செய்தது—மல்லப்பன்—சக-தூஉகூசு.

அ. அம்மன்கோவில் முதற்பிராகாரச்சுற்றுமண்டபமும் பள்ளியறையும் ஆறுகாற்பீடமும் நாயகர்சன்னிதி மண்டபமும், செய்வித்தது—மாவலி-சக-தூ௩எச.

௯. மண்டபநாயகமும் சின்னீசுரமும் செய்வித்தது—சின்னப்பன்—சக-தூசசஅ.

க0. சுவாமிகோவில் இரண்டாம்பிராகாரத்தெற்கு ஐந்துநிலைக்கோபுரம்—செவ்வந்திமூர்த்திசெய்வித்தது, சகாப்தம்-தூசஅக.

கக. ஷை பிராகார வடக்கு ஐந்துநிலைக்கோபுரம்—செவ்வந்திவேலன் செய்வித்தது, சக-தூசஅஉ.

கஉ. ஆடிவீதித்தெற்குஒன்பதுநிலைக்கோபுரம்—சிரீமலைச்செவ்வந்திசெய்வித்தது, சக-தூச00.

க௩. சுவாமிசன்னிதியில் துவாரபாலகர்மண்டபம் பொற்றாமரை வடபுறமண்டபம்—பெருமாள்செய்வித்தது-சக-தூசஅச.

கச. அம்மன்சன்னிதி சங்கிலிமண்டபம்—திருவம்பலச்செட்டி செய்வித்தது—சக-தூசஅச.

கரு. சுவாமிகோவில் முதற்பிராகாரக் கீழ்ப்புறந் தென்புறம் மண்டபம்-சக-தூசஅரு.

கசு. அம்மன்கோவிலிரண்டாம் பிராகாரக் கீழ்புற மண்டபம் பொற்றாமரை மேல்புறமண்டபம்—செட்டியப்பன் செய்தது-சக-தூசஅரு.

௧௭. வன்னியடிச்சபை—செல்லப்பெண்-சக-௧௪௮௫.

௧௮. சங்கிலிமண்டபத்துக்குத் தெற்குமண்டபம்—திம்மப்பநாயக்கன் செய்வித்தது—சக-௧௪௮௯.

௧௯. செவந்தீசுரம்—செவ்வந்திசெய்தது. சக-௧௪௮௯.

௨௦. சுவாமிகோவில் முதற்பிராகார மேல்புறமண்டபம் அம்மன்கோவிலிரண்டாம்பிராகாரத் தென்புறமண்டபம், சக-௧௪௮௭.

௨௧. சுவாமிகோவில் முதற்பிராகார வடபுறமண்டபம்—பட்டுத் திருமலைநாயக்கன், சக-௧௪௯௧.

௨௨. அம்மன்கோவிலிரண்டாம்பிராகார மேல்புறவடபுற மண்டபம்...வீரகிருஷ்ணன் செய்வித்தது, சக-௧௪௯௧.

௨௩. அறுபத்துமூவர் கோவில்மண்டபம்—நயினாமுதலி செய்தது, சக-௧௪௯௧.

௨௪. சன்னிதி யெழுநிலைக்கோபுரம்—காளத்திமுதலி செய்தது சக-௧௪௯௨.

௨௫. அம்மன்கோவிலிரண்டாம்பிராகார மேற்குஐந்துநிலைக்கோபுரம்—வீரத்தும்பசி செய்வித்தது, சக-௧௪௯௨.

௨௬. சுவாமிசன்னிதானத் துவஜஸ்தம்பமண்டபம் இரண்டாம் பிராகாரச்சுற்றுமண்டபம் சம்பந்தர்கோவில் மண்டபம் ஆயிரக்கால் மண்டபம், ஆடிவீதி வடக்கு ஒன்பதுநிலைக்கோபுரம், மடைப்பள்ளி செய்வித்தது—கிருஷ்ணவீரப்பநாயக்கர் சகாப்தம்-௧௪௯௪.

௨௭. பொற்றாமரைக் கீழ்புறமண்டபமும், திருமதிற்படியும், குப்பையாண்டிசெய்வித்தது, சகாப்தம் ௧௪௯௫.

௨௮. செவந்தீசுரச்சுற்றுத்திருமதில் சன்னிதிமண்டபம் யொ... ளை......மண்டபம்—சின்னச்செவந்திசெய்தது, சகாப்தம்-௧௪௯௬.

௨௯. பொற்றாமரைத் தென்புறமண்டபம்,படியும்,திருமதிலும், விசுவநாதபிரதிட்டையும்—அப்பன்பிள்ளைசெய்வித்தது, சக-௧௫௦௦.

௩௦. சொக்கநாதர்மண்டபம்—வீரப்பன்-வீரய்யன், சக-௧௫௦௦.



௩௧. சுவாமிகோவிலிரண்டாம்பிராகார நிருதிமூலை மண்டபம், விருப்பணன், சக-௧௫௧௦.

௩௨. வீரவசந்தராயமண்டபம்—முத்துவீரப்பநாயக்கர் செய்வித்தது, சக-௧௫௩௩.

௩௩. அம்மன்சன்னிதி, முதலிப்பிள்ளைமண்டபம்—கடந்தைமுதலி, சக-௧௫௩௫.

௩௪. மீனாக்ஷிநாயக்கர் மண்டபம், ச...மு...கட்சி சக-௧௬௩௦.

௩௫. கலியாணமண்டபம்—விஜயரங்கச்சொக்கநாத நாயக்கர், சக-௧௬௩௩.

௩௬. பேச்சக்கால்மண்டபம்-பிட்டுச்சொக்குப்பண்டாரம்-சக-௧௫௮௦.

௩௭. ஆடிவீதி நிருதிமூலை மண்டபம்—தும்மச்சிநாயக்கர், சக-௧௬௮௦.

௩௮. ஆடிவீதி அக்கினிமூலைமண்டபம்-ஆறுத்தாமுதலி செய்வித்தது-சகாப்தம் ௧௬௮௨.

௩௯. ஆடிவீதி ஈசானமூலை தட்டுச்சுற்றுமண்டபம்—வேங்கடேசுவரமுதலி—சக-௧௬௯௪.

௪௦. சேர்வைகாரர் மண்டபம்—மருதப்பசேர்வைகாரர்-சக-...

பத்திராசிரியர்.

---

# தஞ்சைவாணன்கோவையுரை.

பொய்யாமொழிப்புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவைக்குக் குன்றத்தூர் அஷ்டாவதானம் சொக்கப்பநாவலரியற்றிய உரை இற்றைக்குப் பதினைன்கு வருஷங்கட்கு முன்னே சென்னையிற் பதிப்பிக்கப்பட்டிருத்தல் பலரும் தெரிந்தது. இவ்வாணன் கோவையுரையை, சங்கத்துள்ள ஏடொன்றுடன் வைத்து ஆராய்ந்து வரும்போது, பலவிடங்களில் மாறுபாடுகளும், அச்சுப்பிழைகளும் காணப்பட்டன. நாவலருரையுடன் அந்நூலைப்படிக்க விரும்பும் மாணாக்கர்க்கும் பிறர்க்கும் உபயோகமாம்படி, அவ்வச்சுப்பிரதியிற்கண்ட பொருட்பிழைகளாயுள்ள விஷயங்களை எடுத்துக்காட்டி, அச்சுப்பிழைகளாய் அளவிறந்து கிடப்பனவற்றிற்கு ஒரு திருத்தவிளக்கமும் குறிக்க நினைந்து, இவ்வாராய்ச்சி யெழுதத்துணிந்தேன்.

ஷ கோவை ரு-ம் பக்கத்து கக-ம் வரியில், "இனிப்பொய்யுங் களவும் இரண்டு மென்பதாதலாற், களவினும் நன்குதரு களவுண்டு" எனவருவதிலே, "இரண்டும்" என்பது "இரண்டுமொக்கும்" எனக் காணப்படுகின்றது. "இரண்டுமென்பதாதலால்" எனின், பொருள் புலப்படுவது அரிதாதலின், பின்னையதே பொருத்த முடைத்தாதல் காண்க.

கஎ-ம் பக்கத்து கூ-ம் வரியில், "வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்" என்னும் பாடலில் வரும் "இயலார் செய்" என்பதன் விசேடவுரையிலே, "ஆர்-நிறைய; அர் என்னுஞ்சொல் விகாரத்தால் ஆர் என நின்றது" எனப்பதிக்கப்பட்டுளது; ஏட்டுப்பிரதியிலே, "ஆர வென்னுஞ் சொல் ஆர் எனநின்றது" எனக்காணப்படுகிறது. முன்னதற்குப் பொருளின்மையும் பின்னையதே பொருந்துதலுங் காண்க.

ககூ-ம் பக்கத்து கரு-ம் வரியில், "செழுந்திங்களுங்கள், முருந்தொன்றுகோப முகங்கண்டு நாணி முயன்மறுத்திர், மருந்தொன்று நாடியன்றோ வடமேரு வலங்கொள்வதே" என்பதன் விசேடவுரை



யிலே, "இதனுள் இல்லது மருந்தொன்று நாடுதல்; வடமேருவலங் கொள்வது" எனப்பதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாக்கியப்படி நோக்குமிடத்து, சந்திரன் வடமேரு வலங்கொள்வதும் "இல்லதின்" பாற்பட்டுப் பிறழும். இனி, ஏட்டுப்பிரதியிலே, "இதனுள் இல்லது மருந்தொன்றுநாடுதல்; உள்ளது வடமேருவலங்கொள்வது" எனக் காணப்படுதலால், இதுவே ஏற்றதாமாறு கண்டுகொள்க.

உக-ம் பக்கம் உரு-ம் வரியில், "திருமாளிகையும்" என்பது, 'திருமாளிகையினும்' எனக்காணப்படுகின்றது; இதுவே மூலபாடத்திற்குப் பொருந்துதல் கண்டுகொள்க.

ரு0-ம் பக்கம், க0-ம் வரியில் "எம்பெருமான் இவ்வாறு கூறியும் ஆற்றுணய் இன்னதனால்" எனக்காணப்படுவது, ஏட்டுப்பிரதியில், "எம்பெருமான் இவ்வாறுகூறியும் ஆற்றுனையின்னதனால்" எனக்காணப்படுகிறது. முன்னதற்குப் பொருட்பொருத்த மின்மையால், பின்னையதே பொருத்தமாம்.

ருஙு பக்கம், உ0-ம் வரியில், 'இயலாகிய புயலே' என்பது, 'கருமையாகிய புயலே' எனக்காணப்படுகிறது. இதுவே மூலத்திற்குப் பொருத்தமாதல் கண்டுகொள்க.

ருகூ-ம் பக்கத்து எ-ம் வரியில், "புகழ் - ஆகுபெயர்" எனப் பதிக்கப்பட்டுள்ளது; ஏட்டில், "கழல் - ஆகுபெயர்" எனக்காணப்படுகிறது; "புகழ்" என்னுஞ்சொல்லே பாட்டில் இன்மையும், அதில் வரும் "கழல்" என்பதற்குக் 'கழற்சிக்காய்' என ஆகுபெயர்ப் பொருள் கூறப்படுதலுங் கண்டுகொள்க.

சு0-ம் பக்கம் ச-ம் வரியிலுள்ள பாடலில், "பங்கமேந்து குழாந்தன்னூடுசெல்லுஞ் சலஞ்சலம்" என்பது, "சங்கமேய்ந்துகுழாந்தன்னூடு செல்லும் சலஞ்சலம்" எனக்காணப்படுகிறது. "சங்கக் கூட்டத்துள்ளே பொருந்திச் செல்லாநிற்கும் சலஞ்சலம்" என்பதவுரையும், 'குழாந்தன்னூடேய்ந்து செல்லுமெனமாறுக' "என விசேடவுரையு முண்மையால் அச்சுப்பிரதிப்பாடந்தவறுதல்காண்க.

சுங-ம் பக்கம் ச-ம் வரியில் "தலைவி சுனையாடிப் போந்தேனென்பதனால் வந்தது" என்பது, "தலைவி சுனையாடிப் போந்தேன்

அதனால் வந்தது" எனப்பொருத்தமான பாடம் காணப்படுதலால் இவ்வாறே திருத்திக்கொள்க.

௭௫-ம் பாடலான 'எண்ணந்தெளிதல்' என்னுந்துறையை "இருவரு முள்வழி யவன்வர வுணர்தல்' என்னும் பகுதியிற் சேர்த்து அச்சிடப்பட்டுளது. அது, "பெற்ற வாயில்பெற் றிரவுவலி யுறுத்தோன், கண்ணியுந் தழையு மேந்தி நண்ணி, ஊர்பெயர் கெடு தியோ டொழிந்தவும் வினவுழி, யாரே யிவர்மனத் தெண்ணம் யாதெ னத், தேர்தலு மெண்ணந் தெளிதலு மெனவாங், கோரிரண் டாகுங் குறையுற வுணர்தல்'' என்னும் அகப்பொருட் சூத்திரத்தால், குறை யுறவுணர்தற் பகுதிக்கே யுரித்தாதலின், இப்பாடலை அப்பகுதியில் வைத்தலே பொருத்தமுடைத்தாதல் காண்க. இங்ஙனம் ஏட்டுப்பிர தியிற் கண்டது.

௮௩-ம் பக்கம், ௬-ம் வரியில் "முறைமையன்று" என "முறைமையள்' எனக்காணப்படுகிறது. இதுவே மூலபாட குப் பொருத்தமாதல் காண்க.

௮௬-ம் பக்கம், ௨௬-ம் வரியில் "பூழையெலும்பு" என "பூளை ஈலும்பு""எனக்காணப்படுகிறது; மடலூருவோன்" பூளை லும்' பணிதல் யாண்டுங் காணப்படாமையாலும், ௧௦௩-ம் கலியில் "வெண்பூளை முகிழெருக்கோடு" எனக் கூறப்படுதலாலும், முன்ன அபத்தமாதல்காண்க.

௬௩-ம் பக்கம் ௩௨-ம் வரியில், "குறிப்பான் மருளெனத்தோ ன்றி" என்பது, "குறிப்பாண் மருளெனத் தோன்றி'' எனக்காண டுதலின், இதுவே பொருட்பொருத்த முடைத்தாதல் காண்க.

௬௪-ம் பக்கம் ௧௮-ம் வரியில் "குரும்பை கொங்கை;—பனை குப் பண்புத்தொகை; பெண்ணுக்கு உவமைத்தொகை. உண்கண் பனைக்கு உறுகள்; பெண்ணுக்கு மையுண்டகண்" என்பது, "குரும் பைக்கொங்கை—பனைக்குப் பண்புத்தொகை; பெண்ணுக்கு உவ மைத்தொகை. உண்கட்—பனைக்குக் கள்; பெண்ணுக்குக் கண்'' எனக்காணப்படுகிறது. முன்னது பொருந்தாமையும், பின்னது பொருந்துதலும் நோக்கிக்கொள்க.

## தஞ்சைவாணன்கோவையுரை.

௯௮-ம் பக்கம், ௬-ம் வரியில், "வாடல்-ஆவலித்து; வியங்ள்" என்பது, "வாடல் - அல்லீற்று வியங்கோள்" எனக்காணப்படுகிறது. முன்னதற்குப் பொருளேயின்மையால், இதுவே பொருந்துதல் காண்க.

௧௧௫ - ம் கவியில், "தஞ்சை வாணன்வெற்பா, கவி தெங்கு மாவுங் கமுகும் பலாவுங் கதலிகளும்" என்னும் இப்பாகத்திற்கு உரை காணப்படவில்லை; ஏட்டுப்பிரதியில் "தஞ்சை வாணன்வெற்பா! இலங்கலி தென்னை மா பாக்குபலா வாழை ஆகிய மரங்கள்" என உரை காணப்படுகின்றது. இது வேண்டப்படுவதேயாம்.

(தொடரும்.)

சுந்தரேசுவர ஐயர்.
செந்தமிழ்க் கலாசாலை உபாத்தியாயர்,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

---

## சாதுரிய வசனங்கள்.

௧. திருவாவடுதுறையாதீனம் பண்டாரசந்நிதிகளான ஸ்ரீசுப்பிரமணியதேசிகஸ்வாமிகளை, கல்போது ஜமீந்தார் முத்துக்குமாரசுவாமிப்பாண்டியன் அவர்கள், தம்குமாரருடன் தரிசனஞ் செய்து திரும்பும்போது, பண்டாரசந்நிதிகள் அவர்குமாரர்க்குப் பீதாம்பரமொன்று அளித்துபசரிக்குங்காலையில், "உமக்கு ஆசைப்பட்டுக்கொடுக்கின்றோம்" என்றுகூறி அருளினார்கள். உடனே ஜமீந்தாரவர்கள் "உத்தரவாசைப்பட்டுத்தான் பெற்றுக்கொள்கிறது" என்றனராம். [ஆசைப்பட்டு என்பது பீதாம்பரம், விருப்புடன் என்றபொருள்களும்; உத்தவாசைப்பட்டென்பது வடதிசைப்பட்டு, ஆஞ்ஞையை விரும்பி என்ற பொருள்களும் பயத்தல் காண்க.]

௨. கல்போது ஜமீனில், வித்துவானாயிருந்த பிச்சுவையரவர்கள் ஏழுமடையென்னும் ஊருக்குப்போய் அங்குள்ள பிரபுவொருவரைக் காணவேண்டி அவர் வீடுநோக்கிச் சென்றனர். அப்போது எதிர்ப்பட்ட அவ்வூரார்சிலர் 'தாங்கள் எந்தவூர்' என்று ஐயரவர்களைக் கேட்க, 'கல்போது' என்று கூறினர். கூறலும் "கல் போதானால் இலேசாகத் தூக்கியெறியலாமோ" என்று அவர்கள் கூறிப் பரிகசிக்கத் தொடங்க, ஐயர், அவர்களைநோக்கி 'அப்படி இலேசாகத் தூக்கமுடியாது; ஏழுமடையர்கள் கூடினால் ஒருகால் தூக்கலாம்'' என்றனராம். [கல்போது என்பது கல்லானது பூ எனவும்; ஏழுமடையர் என்பது, ஊரையும் ஏழு மடையர் எனவும் பயத்தல் காண்க.]

௩. சின்னிகுளம் அண்ணாமலைரெட்டியாரைக் காணவேண்டிச் சென்ற புலவரொருவர், அவரைக் கருவைநல்லூரிற் சந்திக்க, அவருடன் பேசிக்கொண்டே கோயிலுக்குச் சுவாமிதரிசனத்துக்குப் போம்போது, "இந்தவூர்ச்சாமி களவாண்டவரோ" என்று புலவர் ரெட்டியாரை வினவினர். உடனே ரெட்டியார் "ஆம்; அதனாலேதான் அவர் மறைவாயிருக்கின்றனர்'' என்றனராம். [களவு அந்தத் தலத்திலுள்ள களாவிருக்ஷம்; அதனடியிலேதான் சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியிருப்பது. மறைவாய்—வேதத்துள்ளே.]

௪. போடிநாயக்கனூர் ஜமீந்தாரவர்களைக் காணவேண்டிச் சில வித்துவான்கள் அவ்வூரையடைந்து அரமனைசென்று ஜமீந்தாரவர்கட்குத் தங்கள் வரவைச் சொல்லியனுப்பி உத்தரவுபெற்று உள்ளே சென்றனர். அவர்கள் வந்ததும், ஜமீந்தார் அவர்களை நோக்கி, "வாருங்கள் கவிக்கூட்டங்களே" என்று கவர்பொருள்படக் கூற, உடனே, அவ்வித்துவான்களில் ஒருவரான திருமலைக்கொழுந்துக் கவிராயர், பிரபுவை நோக்கி, "தாங்கள் தருப்போலிருத்தலால் இங்கே தானே கவிகளெல்லாம் வரவேண்டும்" என்று கூறினராம்.

௫. திருவாவடுதுறை யாதீன மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், சீகாழிக் கோவைபாடி ஆலயத்திலரங்கேற்றும்போது, அங்கு வந்து கேட்டுக்கொண்டிருந்த பெரியவர்களான தேசிகமூர்த்திகள் (அபிஷேகக்குருக்கள்) சிலர் முடிவில் "திருச்சிற்றம்பலக்கோவையே கோவை; மற்றக் கோவையெல்லாம் கள்ளிமேற்



படரும் கோவை" என்று கூறினர். உடனே பிள்ளையவர்கள் "கல்லால விருக்ஷத்தினடியில், சனகாதியர்க்கு உபதேசித்தருளிய ஆசாரியரே ஆசாரியர்; மற்றையாசாரி யெல்லாம் தட்டாசாரி கொல்லாசாரி கன்னாசாரி தச்சாசாரி என்று கூறி, அவர் வாயை அடக்கினார்களாம்.

௬. ஸ்ரீவில்லிபுத்தூரிற் பொன்னுசெட்டியார் என்னும் புலவர், ஒருகிராமத்திற்குச் சென்றிருந்தபோது, தம்முடைய சிநேகிதர் சங்கரன்பிள்ளை என்பவரைக் காணவேண்டி அவர்வீட்டுக்குச் சென்றனர். அப்போது, அந்தப்பிள்ளை, சிற்றுண்டிசெய்யுநிமித்தம், ஒரு சட்டியிலே மாவறுத்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் வந்த செட்டியார் அவரைக்கண்டு, "என்ன சங்கரன்பிள்ளை; சட்டியிலே மாவறுக்கிறீர்'' என்றார்; அதற்கு அவர் "சங்கரன்பிள்ளை சட்டியிலே மாவறுத்தல் சகஜந்தானே" என்று அழகாகக்கூறினராம். [சங்கரன் பிள்ளை சுப்பிரமணியர்; சட்டி - சஷ்டிதிதி. மா அறுத்தல்- சூரனை மாமரத்தை வெட்டுதல்]

௭. கல்போது ஜமீனில் தட்டார்குலத்தாராகிய பெரியநம்பியாசாரி என்னும் புலவர் அவ்வூரில் பரிவாரக்குலத்தினராகிய ஒரு பெரிய குடித்தனக்காரருடன் பாடியில்நின்று பேசிக்கொண்டிருக்கும்போது, அரமனைக் குதிரையொன்றை அதனிராவுத்தன் நடைப்பழக்கத்திற்கு வேகமாகநடத்திவருதலைக்கண்ட குடித்தனக்காரர், ஆசாரியைநோக்கி "குதிரை தட்டான்பறப்பது போல வருவது பாரும்" என்றனர். உடனே, ஆசாரி "ஆம்! பரிவாரவேகம் அப்படித்தான் இருக்கும்'' என்றனராம். ["பரிவாரவேகம்'' என்பது பரிவருகிற வேகம் என்னும் பொருளும், தட்டான் பறப்பது எனத்தங்குலத்தைச் சுட்டியதற்கெதிராக, பரிவாரவேகம் என அக்குடித்தனக்காரர் குலத்தைச் சுட்டியதும் காண்க. பரிவாரக்குலம், மறவர் குடியில் கீழானவகுப்பென்பர். வார என்பது வருகிற என்பதன் மரூஉ; அருணகிரியார் திருப்புகழில், "மாயாவாடை" என்னும் பாடலிலே "வாரபேர் பொருள் கண்டுவிரும்பிகள்'' என வருதல் காண்க.]

௮. ஷை புலவர் அடுத்தகிராமத்திலிருந்த தம்சிநேகராகிய ஒரு சாணாரைக்கண்டு, அளவளாவிவரும்போது, ஆசாரி, "தங்கட்கு இந்தவருஷத்தில் என்னவிளையும்'' என்றுசாவினர். சாணார் "தட்

உ. கல்போது ஜமீனில், வித்துவானயிருந்த பிச்சுவையரவர்ள் எழுமடையென்னும் ஊருக்குப்போய் அங்குள்ள பிரபுஒருவரைக் காணவேண்டி அவர் வீடுநோக்கிச் சென்றனர். அப்போது எதிர்ப்பட்ட அவ்வூரார்சிலர் 'தாங்கள் எந்தஊர்' என்று ஐயரவர்களைக் கேட்க, 'கல்போது' என்று கூறினர். கூறலும் "கல் போதானால் இலேசாகத் தூக்கியெறியலாமோ" என்று அவர்கள்கூறிப் பரிகசிக்கத் தொடங்க, ஐயர், அவர்களைநோக்கி 'அப்படி இலேசாகத் தூக்கமுடியாது; எழுமடையர்கள் கூடினால் ஒருகால் தூக்கலாம்'' என்றனராம். [கல்போது என்பது கல்லானது பூ எனவும்; எழுமடையர் என்பது, ஊரையும் எழு மடையர் எனவும் பயத்தல் காண்க.]

௩. சின்னிகுளம் அண்ணாமலைரெட்டியாரைக் காணவேண்டிச் சென்ற புலவரொருவர், அவரைக் கருவைநல்லூரிற் சந்தித்து, அவருடன் பேசிக்கொண்டே கோயிலுக்குச் சுவாமிதரிசனத்துக்குப் போம்போது, "இந்தவூர்ச்சாமி களவாண்டவரோ" என்று புலவர் ரெட்டியாரை வினவினர். உடனே ரெட்டியார் "ஆம்; அதனாலேதான் அவர்மறைவாயிருக்கின்றனர்" என்றனராம். [களவு அந்தத் தலத்திலுள்ள களாவிருக்ஷம்; அதனடியிலேதான் சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியிருப்பது. மறைவாய்—வேதத்துள்ளே.]

ச. போடிநாயக்கனூர் ஜமீந்தாரவர்களைக் காணவேண்டிச் சில வித்துவான்கள் அவ்வூரையடைந்து அரமனைசென்று ஜமீந்தாரவர்கட்குத் தங்கள் வரவைச் சொல்லியனுப்பி உத்தரவுபெற்று உள்ளே சென்றனர். அவர்கள் வந்ததும், ஜமீந்தார் அவர்களை நோக்கி, "வாருங்கள் கவிக்கூட்டங்களே" என்று கவர்பொருள்படக் கூற, உடனே, அவ்வித்துவான்களில் ஒருவரான திருமலைக்கொழுந்துக் கவிராயர், பிரபுவை நோக்கி, "தாங்கள் தருப்போலிருத்தலால் இங்கே தானே கவிகளெல்லாம் வரவேண்டும்" என்று கூறினராம்.

ரு. திருவாவடுதுறை யாதீன மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், சீகாழிக் கோவைபாடி ஆலயத்திலரங்கேற்றும்போது, அங்கு வந்து கேட்டுக்கொண்டிருந்த பெரியவர்களான தேசிகமூர்த்திகள் (அபிஷேகக்குருக்கள்) சிலர் முடிவில் "திருச்சிற்றம்பலக்கோவையே கோவை; மற்றக் கோவையெல்லாம் கல்[illegible]



படரும் கோவை" என்று கூறினர். உடனே பிள்ளையவர்கள் "கல்லால விருக்ஷத்தினடியில், சனகாதியர்க்கு உபதேசித்தருளிய ஆசாரியரே ஆசாரியர்; மற்றையாசாரி யெல்லாம் தட்டாசாரி கொல்லாசாரி கன்னாசாரி தச்சாசாரி என்று கூறி, அவர் வாயை அடக்கினார்களாம்.

சு. ஸ்ரீவில்லிபுத்தூரிற் பொன்னுசெட்டியார் என்னும் புலவர், ஒருகிராமத்திற்குச் சென்றிருந்தபோது, தம்முடைய சிநேகிதர் சங்கரன்பிள்ளை என்பவரைக் காணவேண்டி அவர்வீட்டுக்குச் சென்றனர். அப்போது, அந்தப்பிள்ளை, சிற்றுண்டிசெய்யுநிமித்தம், ஒரு சட்டியிலே மாவறுத்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் வந்த செட்டியார் அவரைக்கண்டு, "என்ன சங்கரன்பிள்ளை; சட்டியிலே மாவறுக்கிறீர்" என்றார்; அதற்கு அவர் "சங்கரன்பிள்ளை சட்டியிலே மாவறுத்தல் சகஜந்தானே" என்று அழகாகக்கூறினராம். [சங்கரன் பிள்ளை சுப்பிரமணியர்; சட்டி - சஷ்டிதிதி. மா அறுத்தல்- சூரனை மாமரத்தை வெட்டுதல்]

எ. கல்போது ஜமீனில் தட்டார்குலத்தாராகிய பெரியதம்பியாசாரி என்னும் புலவர் அவ்வூரில் பரிவாரக்குலத்தினராகிய ஒரு பெரிய குடித்தனக்காரருடன் மாடியில்நின்று பேசிக்கொண்டிருக்கும்போது, அரமனைக் குதிரையொன்றை அதனிராவுத்தன் நடைப்பழக்கத்திற்கு வேகமாகநடத்திவருதலைக்கண்ட குடித்தனக்காரர், ஆசாரியைநோக்கி "குதிரை தட்டான்பறப்பது போல வருவது பாரும்" என்றனர். உடனே, ஆசாரி "ஆம்! பரிவாரவேகம் அப்படித்தான் இருக்கும்" என்றனராம். ["பரிவாரவேகம்" என்பது பரிவருகிற வேகம் என்னும் பொருளும், தட்டான் பறப்பது எனத்தங்குலத்தைச் சுட்டியதற்கெதிராக, பரிவாரவேகம் என அக்குடித்தனக்காரர் குலத்தைச் சுட்டியதும் காண்க. பரிவாரக்குலம், மறவர் குடியில் கீழானவகுப்பென்பர். வார என்பது வருகிற என்பதன் மரூஉ; அருணகிரியார் திருப்புகழில், "மாயாவாடை" என்னும் பாடலிலே "வாரபேர் பொருள் கண்டுவிரும்பிகள்" என வருதல் காண்க.]

அ. ஷை புலவர் அடுத்தகிராமத்திலிருந்த தம்சிநேகராகிய ஒரு சாணாரைக்கண்டு, அளவளாவிவரும்போது, ஆசாரி, "தங்கட்கு இந்தவருஷத்தில் என்னவிளையும்" என்றுசாவினர். சாணார் "தட்

டான்பயிர்கள்தான் கொஞ்சம் விளையும்" என்றுகூற, அதற்கு ஆசாரி "ஆம்! அது ஒருசாண் கும்பிக்குப் போதும்" என்றனராம்.

மு. ரா. அருணாசலக் கவிராயர்.

---

## புத்தகக் குறிப்பு.

ஸ்ரீமத்: கம்பராமாயணம் (கிஷ்கிந்தாகாண்டம் உரை) கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் அருளிய இராமாயணக்கிஷ்கிந்தாகாண்டத்திற்கு ஓர் உரை, சஞ்சிகை ரூபமாக இப்போது வெளிவருஞ் செய்தி தெரிந்து மகிழ்வடைகின்றோம். எமது பார்வைக்குக் கிடைத்தவை முதலிரண்டு சஞ்சிகைகளாம். முன்னர்ச் சிற்சில காண்டங்கட்கு உரை வெளிவந்திருப்பதைக் கண்ணுற்ற தமிழ் மக்கள், இதுகாறும் முழுது உரையிடப்பெறாத பகுதிக்கு, யாவரும் படித்து மகிழ்தற்குரியதோர் வியாக்கியானம் வெளிவரத்தொடங்கியிருத்தலால், அதன் வருகையை விரும்பி ஏற்றுக்கொள்ளத் தவறார் என்பது திண்ணம். இதனுரையாசிரியர், யாழ்ப்பாணத்துச் சாவகச்சேரி ஸ்ரீமத்-நா. பொன்னம்பலப்பிள்ளை என்பவர்கள். இவர்கள், கல்வியிற் பெரிய கவிச்சக்ரவர்த்தியின் அரும்பெருங்கருத்துக்கள் கொண்ட பாடல்களை, இயன்றவரை நன்கு விளக்கிச்செல்வதோடு, இலக்கணக் குறிப்பு முதலிய விசேடங்களையும் விடாதெழுதிவருகின்றார்கள். கம்பநாடரது வாக்கிலும் போக்கிலும் நன்குபழகி, அவற்றைப் பிரவசனஞ் செய்யுஞ் சக்தி வாய்ந்துவிளங்கிய காலஞ்சென்ற வித்துவசிரோமணி-பொன்னம்பலப்பிள்ளையவர்கள் மாணாக்கராக இவ்வுரையாசிரியர் அமைந்திருத்தலும் அவர்கள் உரை விசேடமுடைத்து என்பதைக் குறிக்கும். ஆயினும், இங்கே எம்முள்ளக் கிடக்கையொன்றைக் குறித்தல் அவசியகமாகின்றது. அஃதாவது—சங்கபுத்தகசாலை முதலிய பலவிடங்களிலுமுள்ள இராமாயணப் பழம் பிரதிகளை இந்நாள்அச்சுப்பிரதிகளுடன் வைத்தொப்பிடுங்கால் எத்தனையோ அருமையான பாடபேதங்களும் புதிய பாடல்களும் காணப்படுகின்றன. பிள்ளையவர்கள் அப்பரிசோதனையையுஞ் செய்து பாடல்களைச் சுத்தப்படுத்திக்கொண்டு, தங்களுரையை முடிக்கக்கூடுமாயின், அவர்கள் முயற்சி இன்னும் பெரிய உபகாரமாகிப் பரிமளிக்கும் என்பதே. ஆயினும், உரையில்லாத பகுதிக்கு உரையிட்டு, யாவரும் கம்பராமாயணத்தைப் படித்து மகிழும்படி செய்யும் உபகாரம் நம்மவரால் போற்றத்தக்கதே. இவ்வுரை, மாதமொரு சஞ்சிகையாக, ௯-சஞ்சிகையில் முடிந்துவிடக்கூடுமென்று தெரிகின்றது. நூல் முழுதுக்கும் முன்பண மனுப்புவோர்க்கு ரூ. 3. சதம் 25. ஆக விலைச் சௌகரியஞ்செய்யப்பட்டுளது. விலாசம் "ஸ்ரீமத்-நா. பொன்னம்பலப்பிள்ளையவர்கள், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்" என்பது.

உ

கணபதி துணை.

# முகவுரை.

இற்றைக்கு ௧௫௰-வருஷங்களுக்கு முன்பிருந்தவரும் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சிவஞானயோகிகளுடைய அருமைமாணாக்கர்கள் பன்னிருவருள் ஒருவரும் மதுரகவியென்று சிறப்புப் பெயர்பெற்றவரும் இயற்றமிழ்இசைத்தமிழ்நூல்களில் மிக்கபயிற்சியுடையவரும் திருவாவடுதுறைக்கோவைமுதலிய நூல்கள் இயற்றியவரும் முருகக்கடவுளுடைய திருவடிக்கண் மெய்யன்புபூண்டு ஒழுகியவரும் ஷை ஆதீனவித்துவானுமாகிய தொட்டிக்கலை ஸ்ரீசுப்பிரமணியமுனிவரால் இந்நூல் இயற்றப்பெற்றது. மிக்க நோயால்வருந்தித் தம்மைச் சரணடைந்த ஒருவருடைய வேண்டுகோளின்படி, திருத்தணிகை முருகக்கடவுளைத் தியானித்து நாள்தோறும் அவர் பாராயணஞ்செய்து வரும்பொருட்டு இவரால் இயற்றப்பெற்றதென்பதும் அங்ஙனமே நியமத்துடன் பாராயணஞ் செய்து வந்தமையின், நோய் நீங்கப்பெற்று அவர் இன்புற்று வாழ்ந்திருந்தனரென்பதும் கர்ணபரம்பரைச்செய்திகள். அவர் முதலில் நோயால் வருந்தினமை இந்நூல் ௪-ம் திருவிருத்தம் முதலியவற்றால் நன்குவிளங்கும். முருகக்கடவுளுடைய மெய்யன்பர்களால் இன்றும் அவ்வாறே பாராயணஞ்செய்யப் பெற்று வருகின்றமையாலும் 'செந்தமிழ்' வாயிலாக வெளிப்படுத்தவேண்டுமென்று சில நண்பர்கள் தூண்டினமையாலும் செந்தமிழ்ப்பரமாசாரியராக விளங்கும் ஸ்ரீ முருகக்கடவுளுடைய அருமைத் துதியாகிய இந்நூல் இப்போது வெளிப்படுத்தலாயிற்று.

இந்நூலாசிரியருடைய சரித்திரம் திருவாவடுதுறைக்கோவை அச்சுப்புத்தகத்தால் விளங்கும்.

இங்ஙனம்.

வே. சாமிநாதையன்.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருத்தணிகைத் திருவிருத்தம்.

ஓங்கார வுருவசின் மயவியல வொளியாகி
யுலகமுழு வதுநிறைந்த
வுண்மைப் பராபர நிராமய நிராலம்ப
வும்பர்கள் சிகாரத்னமே
யாங்கார நீங்காத தீங்கான வத்தின்வரு
மலகிலாப் பிறவிதோறு
மடியேன்செய் கொடுவினை யளக்குருவ ரம்பினை
யளந்திடினு மளவுபடுமோ
வாங்காம லவ்வினை வருத்தலா லுன்றிருமுன்
வந்தபய மபயமென்றேன்
மயிலேறி வந்துதிரு மந்திர சடாக்கர
மருந்தரு டிருந்தடியார்
தாங்கான முன்னின்ற சண்முகத் தெய்வமே
சரவணேற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௧)

பண்ணரிய வுன்னற்பு தத்திருப் புகழைப்
பகர்ந்துகொண் டுன்றிருமலைப்
படியேறு மன்பர்வினை பொடியாகு மென்றுநிறை
மொழிமாந்தர் பகருவதுகேட்

டென்னுடைய பொல்லாத சஞ்சிதப் பிணியொழித்
தெனையும்வாழ் வித்தருளுகென்
றிரவுபக லுன்னருட் சந்நிதியில் வந்துமுறை
யிடுவேற்கி ரங்கியருள்வாய்
பொன்னிறக் காந்தளொடு செங்குவளை மலர்களும்
பொற்பமர் கடப்பமலரும்
பூத்தலர் குறிஞ்சியுஞ் *சேத்தகூ தளமும்
புனைந்ததிரு மார்பழகனே
தன்னமு மனத்துய ரிலாதமர ரைக்காத்த
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

திருவருள் கொழிக்குமுன் சரவணப் பொய்கைத்
† திருத்தந் தினைத்தாடியே
தீராத பழவினை யழுக்கைக் கழீஇவருந்
திருவாள ரைத்தரிசியா
வுரிமையுட னடியேனு மச்சர வணப்பொய்கை
யுற்றுவந் தாடியுட்கொண்
டுன்னடிக ளேசரண மென்றோல மிடுமெனக்
குறுகுறை தவிர்த்தருளுவாய்
பருவளரு மலரோன் றருக்கினைக் கண்டுகர
மலர்கொண்டு தாக்கியவனை
வன்சிறை யிருத்தியுல கேழும் படைத்தநின்
வல்லாண்மை சொல்லவசமோ
தருவளரு மமரா வதிக்கரசை வாழ்வித்த
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே.

---

* சேத்த - சிவந்த.
† திருத்தம் - தீர்த்தம்.



கண்டவர் களிக்குமுரு கேசவுன் பெருமையைக்
கட்டவுட் சுனைக்குள் வளர்செங்
‡ கல்லார முப்போது மலர்ந்து கமழ்தருங்
கந்தமே தூதாயுலா
வெண்டிசையு ளார்க்குந் தெரித்தலாற் கொண்டாடி
யெல்லாரும் வந்துதொழுதுன்
னின்னருளை மொண்டுண்ண வின்னோயின் யானொருவ
னிடருற் றினைப்பதழகோ
வண்டர்க ணடுக்கமுற வாயிரத் தெட்டண்ட
மாண்டிடு சூரசூர
னாண்மைதனை நீறாக்கி யவனையிரு கூறாக்கி
யாட்கொண்ட சயசிங்கமே
தண்டையொடு கிண்கிணிகள் கொஞ்சுசெஞ் சரணனே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௪)

அத்தான வச்சிங்கன் வெருவச் சிரங்களை
யரிந்தவச் சிரமிருக்க
வக்கிரம மிக்ககிர வுஞ்சமலை பொடியாக்கு
மயில்வேல் வலத்திருக்கச்
சித்தான வுன்னுடைய வாறக் கரங்களாந்
தெய்வமந் திரமிருக்கத்
தீண்டினும் பூசினும் பாபப் பசாசறத்
தீர்க்கும்வெண் ணீறிருக்க

---

‡ கல்லாரம் - கருங்குவளை மலர்; இது, திருத்தணிகைமலையிலுள்ள திருச்சுனையில் காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களிலும் மலர்ந்து வந்ததை, "காலைப் போதினி லொருமலர் கதிர்முதி ருச்சி, வேலைப் போதினி லொருமலர் விண்ணெலா மிருள்சூழ், மாலைப் போதினி லொருமல ராகவிவ் வகைமே, னீலப் போதுமூன் றொழிவின்றி நிற்றலும் மலரும்" என்னும் கந்தபுராணத்திருவிருத்தத்தால் விளங்கும்; வள்ளியம்மை திருமணப் படலம், ௨௨௨.

வித்தார ணிக்குளொன் றறியாக் குழந்தைபோ
லென்னளவு நீயிருந்தா
லென்னுகு லத்தைத் துரத்தியெனை யுய்விக்க
வின்னமொரு தெய்வமுண்டோ
சத்தாகி முத்திக்கு வித்தாகி நின்றசிவ
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (ரு)

வெங்கன லுறைப்பவரு பானுகோ பப்பதகன்
விட்டமா யைப்பகழிதான்
மிக்கமயல் பூட்டிக் கருங்கடற் கொண்டுபோய்
வீழ்த்திட வழுந்துகின்ற
துங்கவொளி மணிமகுட பாரநவ வீரரொடு
சோர்வரிய பூதர்களையுஞ்
சுடர்விடுங் குடுமியுடை யடலுடம் பிடிகொண்டு
தூக்கிய பராக்கிரமனே
பங்கமுறு கொடுவினைக் சடவிலே நெடுநாட்
படிந்துசுடு மாறுமெனையும்
பயப்படே லென்றுநின் பன்னிரு விழிக்கருணை
பாலித் தெடுத்தருளுவாய்
சங்கடம் விலக்குமொரு தந்திமுக வற்கிளைய
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (சு)

எண்ணிலுயிர் கட்கெலா மன்றுதொட் டகலாம
லென்றுமொரு தஞ்சமாயே
யிருத்தலாற் கந்தனென வொருநாம முற்றனை
யிருண்டமல மோகத்தினாற்
கண்ணிலா ருக்குமெய்க் கோல்கொடுத் தீர்ப்பதுன்
கருணைப் பெருக்கமன்றோ



காங்கேய வுனையன்றி மற்றொருதெய் வத்தைநான்
கனவிலு நினைத்தல்செய்யேன்
மண்ணிலடி யாரிரு வினைக்காடு வேரோடு
மடியவடி வேல்பிடித்து
மாறுத பேரின்ப வாழ்வைக் கொடுத்தருள
வாய்மையாங் கொடிகட்டியே
தண்ணருளின் வரமாரி பொழிகின்ற தெய்வமே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (எ)

அத்தகு சிறப்புடைய க்ருத்திகைத் தையலா
ரறுவர்முலை யமுதவாரி
யருமறை பழத்தொழுகும் வாயார மொண்டுகொண்
டானந்த மழைபொழிதரும்
வித்தகக் கருணைமா முகிலென்று நம்பியென்
விடாய்தீர வந்தடுத்தேன்
வேறுபுக லில்லையு னடைக்கல மடைக்கலம்
வெட்சிகு டியவிசாகா
சித்திரக் கலபமர கதநிற மயூரனே
தேவகுஞ் சரிமணாளா
சிங்கார வள்ளியிரு சிற்றடிகள் வருடிச்
சிவந்தபன் னிருகரதலா
சத்துருக் கசமுகத் தசுரசங் காரனே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (அ)

வாலைதிரி புரையான சிவகாம சுந்தரிதன்
மைந்தனே நின்றுவசமா
கையுறு காலாயு தத்தினுக் கேனுநீ
வாகனங் கொடுநடாத்தும்

## திருத்தணிகைத்திருவிருத்தம்.

வேலெடு வடவையழல் விழிபொழிய வருமொரு
வியன்றகர் தனக்காயினும்
விடைகொடுத் தென்னுடைய பேரா வினைக்குன்றை
வேரோ டிடித்தருளுவாய்
கோலமலி தென்பரங் குன்றா வினன்குடி
குளிர்ந்தசெந் தூரேரகங்
கொடியாடு சோலைமலை குன்றுதோ றாடலுங்
கொண்டருளி நின்றகுகனே
தாலமுழு தண்டபைங் கொண்டன்மே னியன்மருக
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௧

கலைமருவு மதுரைத் தமிழ்ச்சங்க மேற்புலவர்
நடுவிற் றிருந்தமுதல்லா
நக்கீரர் சொன்னமுரு காற்றுப் படைத்தமிழு
நல்லருண கிரிநாதர்சொற்
புலமையுறு சித்திரச் சந்தப்ர வாகமும்
புனிதச் செவிக்குளார்த்த
புகழாள குறுமுனிக் காரணத் துட்பொருள்
புலப்படுத் தியகுரவனே
கொலைகளவு முதலான பாதக மெனக்குவெகு
கோடிகளிருந்திடினுமுன்
கூர்மத் திரப்படையி னல்வீட்டி யெனதுளங்
குடிகொண் டிருந்தருளுவாய்
சலனமறு சருவபரி பூரண தயாநிதே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதராசனே. (௨

முற்றிற்று.



கடவுள் துணை.

# தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை

## முகவுரை.

(:o:)

இந்நூல், தொட்டிக்கலை ஸ்ரீ: சுப்பிரமணிய முனிவரால் இயற்றப்பெற்றது. இம்முனிவர், இற்றைக்கு கக௫ வருஷங்கட்கு முன்பு விளங்கியவரென்பதும், திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ: சிவஞான யோகிகளுடைய அருமை மாணாக்கர் பன்னிருவருள் ஒருவரென்பதும், அமிர்தவாக்மி என்பதும் பலரும் நன்கறிந்தவை. இம்முனிவர் வரலாறு, மஹாமஹோபாத்யாயர்: ப்ரஹ்மஸ்ரீ; வே. சாமிநாதையரவர்களால், திருவாவடுதுறைக் கோவைப்பதிப்பில், பிரபல ஆராய்ச்சியோடும் விளக்கப்பட்டுள்ளது. இது நிற்க. இம்முனிவர் இயற்றிய பிரபந்தத்திரட்டு என்னும் அரியபிரதியொன்று, நம் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் உள்ளது. இச்சங்கத்து அக்கிராசனாதிபதியும் தமிழருமையறிந்தவள்ளலுமாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்களால் பெரிதும் அருமை பாராட்டி அளிக்கப்பெற்ற ஏடுகளில் இஃதொன்று. இப்பிரபந்தத்திரட்டில், பல சிறிய நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள், தொட்டிக்கலையிற் றிருக்கோயில் கொண்டுள்ள கேசவப்பெருமாள் விஷயமாக, இரட்டைமணிமாலை, வர்ணங்கள், ஆசிரிய விருத்தம், விருத்தம், உலா, தாய்மகள் வினாதல், கலிவிருத்த அந்தாதி, கொச்சகக்கலிப்பா என்பவைகளும், ஷை ஊர் பெருந்தேவித்தாயார் விஷயமாக ஆசிரிய விருத்தம், ஊசல் என்பவைகளும், இம்முனிவரியற்றியனவாக உள்ளன. இதனால், சைவசமயப்பெரியாரில் ஒருவராகிய இம்முனிவர் திருமால்பத்தியும் சிறக்கவுடையர் என்பது நன்குவெளியாம். உண்மைப் பெரியோரெல்லாம் இங்ஙனம் இருத்தல் இயல்பன்றோ! ஷை பிரபந்தங்களுள்

## முகவுரை.

இரட்டைமணிமாலையைத் தமிழுலகமறிந்து ஆனந்திக்குமாறு, இப்போது, "செந்தமிழ்" வாயிலாக வெளியிடத்துணிந்தேன். இதன் சொற்பொருணயங்களின்சிறப்பு அறிஞர்க்குப் பெருமகிழ்வளிக்குமென்பது திண்ணம். ஆயினும், ஏனையரும் அவற்றை அறியவேண்டி, அவ்வப்பாடலின் அரும்பதம் விசேடமுதலியவற்றை, என்னறிவிற்கேற்ப, கீழ்க்குறிப்பில் வைத்து விளக்க முயன்றிருக்கிறேன். இம்முனிவர் இயற்றிய பிரபந்தங்களில் வெளிவாராதனவற்றை, இவ்வாறே, உரியகாலத்தில் வெளியிட்டுவரவும் எண்ணமுடையேன்.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்,

"செந்தமிழ்"ப் பத்திராசிரியர்.

---



கடவுள் துணை.

## திருத்தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை.

:(o):

### காப்பு.

மான்மேவுந் தண்டலைசூழ் வண்ணத் திருக்கலைசை
மான்மே லிரட்டைமணி மாலைசொல—மான்மருகன்
கந்தனுக்கு முன்னுதித்த கந்தனுக்குஞ் செங்கழுநீர்க்,
கந்தமதத் தந்திபதம் காப்பு.

[வெண்பா.]

நீர்பூத்த கந்தரத்தி னீல வடிவழகர்
சீர்பூத்த தென்கலைசைச் சேதானர்—தார்பூத்த
பின்னளகப் பின்னைதன்பூப் பிள்ளையமிர் துண்பதுபோ
லென்னை மணந் தார்வந் திரவு. (க)

[கலித்துறை.]

இருங்கேச வாதிருத் தொட்டிக் கலைநிதி யேமுகிலைப்
பொருங்கேச வாசுகம் போலுங்கண் ணொளொரு பூவையுன்றன்
மருங்கேச வாதணி மார்பேந் தியகுல்லை மாலைக்கிவ்வூ
ரொருங்கேச வாசையுற் றுளரு ளாசை யுடையவனே. (உ)

---

காப்பு:—

மால்-மேகம். தண்டலை - சோலை. உதித்த, அனுக்கும் என்னும் பெயரெச்சங்கள் தந்தி என்னும் பெயர்கொண்டன. பின்னதாகிய கந்தனுக்கும் என்பதைக் கந்து + அனுக்கும் எனப்பிரித்து, கட்டுத்தறியைமுறிக்கும் என்ப்பொருள் கொள்க.

நூல்.

க. கந்தரம்-மேகம். சேதானர், பின்னிய கூந்தலையுடைய நப்பின்னையின் மணற் சிறுசோற்றை உண்டுதிளைத்தமைபோல, இரவில் என்னைத்திளைத்தார்; என்றது-பிராட்டிசிற்றிலிழைத்துச்சமைத்த சிறுசோற்றைக் கண்ணன் பொய்யேஉண்டு விளையாடியது போல, என்னைக்கனவிற் பொய்யேகலந்தார் எனத் தலைவி இரங்கியபடி. நப்பின்னை, திருமகள் இருவர் சுகத்தையும் திளைத்தல் போல என்னை மணந்தார் என்பதுமாம்.

உ. கேசத்தை யுடைய பூவை (பெண்.) ஆசுகம்-அம்பு. குல்லை-திருத்துழாய். ஆசையுடையவன் - ஸ்ரீதாம்பரன். ஆசையுடையவன் ஆசையுற்றவட்கு அருளல் முறையெனவேறொரு குறிப்புத் தொனித்தல் காண்க.

[வெண்பா.]

உடையாச் செறுந ருயிர்குடிக்கு மாழிப்
படையாண்ட செங்கைப் பரனைப்—புடையார்ந்த
கற்புரிசைத் தென்கலைசைக் கண்மாலைக் கண்டிவளு
மெற்புருக மாலானா ளின்று. (௩)

[கலித்துறை]

இன்னற் பிறப்பறுத் தின்னலங் காட்டு மெழிலரியைக்
கன்னற் கழனிக் கலைசைப் பிரான்றனைக் கைதொழுதோர்
மின்னற் புசமுறுங் கண்ணீர் சொரியும் விதிர்விதிர்க்கு
மென்னற் பொழுதுங் கனவிற்கண் டேனென்னு நெட்டுயிர்த்தே (௪)

[வெண்பா]

நெட்டிலஞ்சிக் கெண்டைகடாய் நீள்கரைமே லோங்கிநின்ற
மட்டிலஞ்சிப் போதுதிர்க்கு மாவளங்கூர்ந்—திட்டமுறும்
பூங்கலைசைக் கேசவமால் பொன்னடியைச் சென்னிமிசைத்
தாங்கினரே செய்தார் தவம். (௫)

[கலித்துறை]

தவளை குதிக்கத்தண் டேன்பாய் வயற்கலை சைக்குளிருந்
தவளைக் கரதல னேமுல்லை யாய்ச்சியர் தாங்குறிவைத்
தவளை யெடுத்துண்ட செவ்வாய னேயிந்தத் தையனலத்
தவளை கவருதற் கோய்ருந் தூர்ந்தித் தலைவந்ததே. (௬)

[வெண்பா]

தேங்காவி மீதே சிறைவண் டுறங்கியநீர்
தேங்காவி சூழ்கலைசைச் சீதரனே—தேங்காவி
யாற்றியபா வத்தைநினை யாயுதமல் லால்வேறு
மாற்றுதற்குக் காணேன் மருந்து. (௭)

௩. உடையாச் செறுநர்-எனையரால் அழியாத பகைவர். உடைத்து எனக் கொள்ளினுமாம். புரிசை - மதில். மாலைக்கண்டு இவளும் மாலானாள் என ஒரு குறிப்புத்தொனித்தல் காண்க.

௪. கன்னல் - கரும்பு. ஓர்மீன் — எழுவாய்.

௫. இலஞ்சி - பொய்கை. மட்டு+இலஞ்சி = மதுவையுடைய மகிழமரம்.

௬. எதுகைகளை, முறையே, இருந்த+வளை (பாஞ்சசந்நியம்) எனவும், குறிவைத்த+அளை (வெண்ணெய்) எனவும், நலத்த+வளை(மகளிர்கையணி) எனவும் சேர்த்துப்பிரித்துப் பொருள் கொள்க. ஈற்றடியில், பருந்தூர்ந்து வந்தது, தவளை கவர்தற்குப் போலும் என வேறொரு குறிப்புத் தொனித்தல் காண்க.

௭. இரண்டாமடியை, நீர்+தேங்கு+ஆவி (பொய்கை) எனவும், நொந்து+எங்கு+ஆவி (உயிர்) எனவும் பிரித்துப்பொருள் கூறுக. ஐந்+ஐயாயுதம்; அவை:—சங்கு, சக்கரம், வாள், தண்டு, சிலை.



[கலித்துறை]

பருந்தே விமானத்தி லேறுஞ் சுரரை வளர்கலைசை
யிருந்தேவி யாளு மிறையவ னேயென் னிடர்தவிர்ப்பாய்
முருந்தே விராவிருள் வெண்மூர லம்பக மொய்குழலாம்
பெருந்தேவி மாதை மணந்தலை குண்ட பெருந்தகையே. (௮)

[வெண்பா]

கைவரையைக் காத்துக் கராவைக் கடிந்துகுடங்
கைவரைக்கு ளேழிசையுங் கண்டானே—யைவருக்குத்
தூதாதொட் டிக்கலைசைச் சுந்தரவிப் பைந்தொடிக்குத்
தாதாதொட் டித்துளவத் தார். (௯)

[கலித்துறை]

தாவா தவரும் பொருளேவை குந்தத்திற் றங்குருகுந்
தாவா தவரு மதியுஞ் செறிபொழிற் றண்கலைசைத்
தாவா தவரும் பருதியுஞ் சங்குந் தரித்தகைப்போ
தாவா தவரு மறியாப் பதத்தைத் தாவணக்கே. (௧௦)

[வெண்பா]

கேசவா திக்குநிறை கீர்த்தித் திருக்கலைசை
வாசவா திக்குமனை மார்வசையே—பேசலா
காயமதி யோடுமதன் கைக்கருப்பு விற்கணையுங்
காயமதி சோருமின்னைக் கா. (௧௧)

௮. (௨, ௩-ம்) அடியெதுகைகளை (சுரரை) இருந்து+எவி+ஆளும் எனவும், முருந்து (மயிலிறகடி) + எ (அம்பு) + இராவிருள் எனவும் பிரித்து, பிற்கூறிய முருந்து முதல் மூன்றற்கும்-வெண்மூரல் (பல்), அம்பகம் (கண்); மொய்குழல்களை நிரனிறையாகக்கொண்டு பொருள் கூறுக. பெருந்தேவி—பிராட்டி திருநாமம்.

௯. கைவரை—கஜேந்திரன். கரா-முதலை. குடவகைவரை - உள்ளங்கையிற் கொண்ட வேய்ங்குழல். தா+தாது+ஒட்டு + இத்துளவத்தார் எனப்பிரிக்க. தார்தாஎன இயையும்.

௧௦. எதுகைகளை, முறையே, தாவாத (கெடாத)+அரும்: எனவும், முகுந்தா+ஆதவரும் (சூரியனும்) எனவும், தாவா (இடத்திலுள்ளவனே) +தவரும் (வில்லும்) எனவும், கைப்போதா+வா+தவரும்(தவசிகளும்) எனவும் கூட்டிப்பிரித்துப் பொருள் படுத்துக. மூன்றாமடியில் தாவு உறைவிடம். எனக்குத் தா வா என இயையும்.

௧௧. (கலைசை) வாச+வா திக்கும் (துன்புறுத்தும்) + அனைமார் எனப் பிரிக்க. வசைபேசலாலும், மதியும் கணையும் காய்தலாலும் மதிசோரும் மின் (பெண்) என்க. மதிசோர்தல் - அறிவழிதல். தோழி இரங்கிக்கூறியது.

[கலித்துறை]

காயா மலரை நிகர்வண்ண னேடுதன் கலைசையில்வாழ்
மாயா மலரை யுடுக்கும்பொன் னம்பர மன்னவுன்னை
யோயா மலரை யிரவிலுஞ் சிந்தித் தொருத்திசொல்லுந்
தீயா மலரையுற் றுடன மேற்றன் தேடிக்கொண்டே. (கஉ)

[வெண்பா]

கொண்டலே யொக்குங் குளிர்வடிவாற் றன்னகலங்
கண்டவெழின் மின்னாற் கவுத்துவத்தின்—விண்டகதி
ரண்டுதழா யிந்திரவில் லாலதுபெய் தேன்மழையான்
மண்டுபுகழ்த் தென்கலைசை மால். (கங)

[கலித்துறை]

மாலைவிட் டோம்வன மாலையைப் பெற்றபின் வன்பிறவி
வேலைவிட் டோமுன் றன் வேலையைச் செய்தபின் வெய்யவிழிக்
காலைவிட் டோமுன்பொற் காலைத் தொழுதபின் காதிலிட்ட
ஓலைமட் டோடுங்கண் ணார்வாழ்தொட் டிக்கலை யுத்தமனே. (கச)

[வெண்பா]

மனவா சகங்கடந்த வாரீசன் றாதாய்
மனவா சகங்கடந்த வாழ்வே—யினியடியேன்
காந்தளறு சோராமற் காத்தருள்வாய் தென்கலைசைப்
பாந்தளணை யானே பரிந்து. (கரு)

கஉ. இரண்டாமடியில், மல்+அரை=வளப்புமுற்ற இடை எனக்கொள்க; அதிலுடுக்கும் பீதாம்பரத்தை யுடைய அரசனே. அரையிரவு—நடுச்சாமம். தீயாம்+அலர்=கெட்டபழிச்சொல். ஒருத்தி உற்றுளன இயையும். பின்வரும் தனம்-பொன்: பசலை என்றபடி.

கங. தென்கலைசைத்திருமால்—வடிவாலும், மின்னாலும், இந்திரவில்லாலும், மழையாலும், கொண்டலே போல்வர். அகலம்-திருமார்பு. ஒரு பொருளில், எழில்மின்—இலக்குமி; இந்திரவில் - உயர்ந்த ஒளி என்க. கௌஸ்துபமணியின் விரிந்தகிரணங்கள் படுதலால், திருத்துழாய் இந்திரவில் போன்றதென்பது கருத்து. மால் ஒக்கும் எனமுடியும். மால் என்பது மேகத்துக்கும் பெயராதலின், அம்மால் (மேகம்) வடிவு, மின் முதலியவற்றால் மேகம்போன்றது என வேறொரு நயம்பெறப்படுதலுங்காண்க.

கச. மால்-மயக்கம். வனமாலை-துளவமாலை. முதல்வேலை கடல். பின்வேலை கைங்கரியம். வெய்யவிழிக்காலை - தறுகண்மையுடைய யமனை; ஓலை-மகளிர்காதணி. மட்டு - எல்லை: உம்மை தொக்கது.

கரு. முதலடியை—ம(ன்)னவா+சகங்கள்+தந்த+வாரீசன் (பிரமன்) எனப்பிரிக்க. வாரீசம்-தாமரை. காந்து+அளறு - எரி வாய் நிரயம். பாந்தள் - ஆதிசேடன்.



[கலித்துறை]

துரங்கத்தி னார்ப்புறுந் தொட்டிக் கலைமது சூதனனே
தரங்கக் கடற்கு ளிலங்கா புரியினிற் றங்குமரக்
கரங்கத்தைப் பேயுங் கழுகுந் தினக்கொன்று கான்மரத்து
மரங்கத் தினும்பள்ளி கொள்ளும் பிரானுன் னடைக்கலமே. (கசு)

[வெண்பா]

அடுபடைவா ணன்சிரமீ ரைஞ்ஞூறு நேமிப்
படைதொட் டறுத்தருள்கோ பாலா—கொடிதெனைச்செ
யிச்சுதனைப் பெற்ற திசையலவே தென்கலைசை
யச்சுதனே பூமணவா ளா. (கஎ)

[கலித்துறை]

மணங்கொண்ட சோலைக் கலிசா புரியின் மணிவண்ணனே
பணங்கொண்ட பன்னகப் பாயலைப் போற்பகு வாயரக்கர்
நிணங்கொண்ட வாழிப் படையுடை யாயிந்த நேரிழைதன்
குணங்கொண்ட கொங்கைக் குவட்டிலு நீபள்ளி கொண்டருளே. (கஅ)

[வெண்பா]

அருந்தமிழ்தேர் தென்கலைசை யாண்டகையே யும்பர்க்
கருந்தமிழ்தே ராயளித்த வையா—வரைங்தெவரு
நாட்டினகை யாதெனையா ணல்வரையை மத்தாக
நாட்டினகை யாமுகில்வண் ணா. (கக)

[கலித்துறை]

நானங் கமழுங் குழலணங் கேகலி யாதிருமோ
வானவில் லோடு முருமோடு மேகம் வருமுன்னமே
யானவில் லேந்திவெண் சங்கத் தொலிசெய் தருட்கலைசை
நீனிறத் தங்க முகில்வருங் காணன்பு நீருண்ணவே. (உ0)

முற்றும்.

கசு. துரங்கத்தினார்ப்பு- குதிரைகளினொலி. தரங்கம்-அலை. அரக்கர்+அங்கத்தை. கான்மரம் - ஆலமரம். அரங்கம் - ஆற்றிடைக் குறையான ஸ்ரீரங்கம் என்னுந் திருப்பதி.

கஎ. என்னைக் கொடுமை செய்கின்ற நின்மகன் : என்றது, திருமால் புத்திரனை மன்மதனைக் குறித்தபடி.

கஅ. பணம் - படம். பன்னகம்-ஆதிசேடன். நிணம் - கொழுப்பு. குணங்கொண்ட—குடத்தின் றன்மை கொண்ட.

கக. அருந்து+அமிழ்து+ஏராயளித்த எனவும், நாட்டில்+நகையாது எனவும், நாட்டின+கையா எனவும் எதுகைகளைப்பிரித்துப் பொருள்கொள்க. வரைந்து - தள்ளி.

உ0. நானம்-கஸ்தூரி. மோ முன்னிலையசை. உரும்-இடி. 'கார்ப்பருவம் வருவதற்கு முன்பே திருமால் நின்னையணையவருவன்; வருந்தற்க' எனத் தோழி தலைவியைத் தேற்றியவாறு.

௨

# முகவுரை.

———:(o):———

தேவாரம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

[illegible]
[illegible]
தொடலிடை வைத்து நாவிற் சுழல்கின்றேன் றூயமையின்றி
யுடலிடை நின்றும் பேரா வைவராட் டுண்டு நானே.

தேவையுலா என்பது, இராமேசுவரத்துத் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ : இராமநாதர்மீது பலபட்டடைச் சொக்கநாத பிள்ளையால் இயற்றப்பெற்றது; தேவை இராமேசுவரம்; இது பாண்டிநாட்டிலுள்ள பாடல் பெற்ற பதினன்கு சிவஸ்தலங்களுள் ஒன்று.

உலாவென்பது தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றுறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று; பேதை முதலிய எழுவகைப்பருவமகளிர்களும் தன்னைக்கண்டு காதல் கூரும்படி ஒருதலைவன் வீதியிற் பவனி போந்தானென்று அவனுடைய அரிய செயல்களைப் பலவ

கையாகப் புலப்படுத்திக் கலிவெண்பாவாற் பாடவேண்டுமென்பது அந்நூலுக்குரிய விதி; வீதியென்றது இங்கே உருத்திர கணிகையருடைய தெருக்களை.

இந்நூலால், ஸ்ரீ இராமநாதருடைய பெருங்கருணைத்திறமும் இராமேசுவரத்தலவிசேடங்களும் தீர்த்தவிசேடங்கள் முதலியனவும் வேறுதலபுராண கதைகளும் பழைய சிவபுராணங்களிற் காணப்படும் அரியசரித்திரங்களும் நாயன்மார்களுடைய அருமைச்செயல்களும் பலமுகமாக அவ்வவ்விடத்து அறியலாகும். இன்னும், பொருளை எளிதில் விளக்கும் மடக்கு, சிலேடை முதலிய சொல்லணிகளும், முக்கியமான பொருளணிகளும் கேட்டோர்களை விரைவில் வியப்பிக்கும் தொனிகளும் இதிற் பரக்கக்காணலாம். அன்றியும் இத்தலத்தில் உள்ள ஆரியர் ஐந்நூற்றுப்பன்னிருவர் என்பது ௯௪-ம் கண்ணியாலும், பண்டைக்காலத்தில் இத்தலத்தில் இன்ன இன்ன திருப்பணிகள் இன்னாரின்னாரற் செய்விக்கப்பெற்றனவென்பது ௯௭-ம் கண்ணி முதலியவற்றாலும், இரகுநாத ஸேதுபதி கட்டுவித்த மண்டபம் ஒன்றில் உத்ஸவகாலத்தில் இராமநாதரெழுந்தருளினரென்பது ௯௫-ம் கண்ணியாலும், திருத்தேர் சேதுபதிகளாற் செய்விக்கப்பெற்றதென்பது ௧௦௮-ம் கண்ணியாலும், இராமநாதருக்குச்சாத்திய திருவாடை விஜயரகுநாதஸேதுபதியால் அளிக்கப்பெற்றதென்பது ௬௭-ம் கண்ணியாலும், அவர் திருத்தேர்வடமுகூர்த்தம் செய்தனரென்பது ௧௫௮-ம் கண்ணியாலும் விளங்குகின்றன. இன்னும் இங்ஙனம் விளங்குவன பல.

இந்நூலாசிரியர், கவிராயரென்றும் புலவரென்றும் வழங்கப்பெறுவர். இவருடைய வாக்கின் பெருமை இத்தமிழ்நாட்டில் யாவருக்குந் தெரிந்ததாதலால், அதைப்பற்றி இங்கே ஒன்றும் எழுதத்துணிந்திலேன்.



திருத்தேர்வட முகூர்த்தம் செய்தவர் விசயரகுநாதஸேதுபதி என்று கூறியிருத்தலால் அவர் காலமும் இந்நூலாசிரியர் காலமும் ஒன்றென்பதும் இந்நூலை இயற்றுவித்தவர் அவரென்பதும் விளங்குகின்றன.

பண்டைத்தமிழ்நூல்களிற் காணப்படாத ஒருவகைச்சொற்கள் இந்நூலிற் சிலவிடத்து வந்துள்ளன; இடத்துக்கேற்ற சிறப்புள்ளனவென்று கருதி அவை பெரியவர்களால் அக்காலத்து அங்கீகரிக்கப்பெற்றன போலும்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய ௫௨-வருடங்களுக்கு முன்பு அன்பர்களுடன் நான் சேதுபுராணத்திற் பாலோடைச்சருக்கத்திற்குப் பொருள் கேட்டுக்கொண்டிருந்தபொழுது திருவாவடுதுறை ஆதீனத்து மஹா வித்துவான் ஸ்ரீ: மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள், "மேலான கத்துருவின் வீழ்சலதோடந்தணிக்கப், பாலாவி யாகிய பாலோடையும்" (கண்ணி-௯௧) என்பதைக்கூறி, அதிலுள்ள 'சலதோடம்,' 'பாலாவி' என்பவற்றைப் பலபடப் பாராட்டி, "இது தேவைபுலா" என்றும், "இதில் ௨௪-தீர்த்தங்களும் இப்படியே ஒவ்வொரு நயம்படக் கூறப்பெற்றுள்ளன" என்றும் சொன்னார்கள். அதுவே இந்நூலைத்தேடி ஆராய்ச்சிசெய்யும்படி பண்ணுவித்தது.

கிடைத்த இந்நூற்கையெழுத்துப் பிரதிகள் :

| | |
|---|---|
| திருவாவடுதுறையாதீனத் தலைவர்களாகிய ஸ்ரீமத்-அம்பலவாணதேசிகரவர்கள் அளித்த பிரதி ... ... | ௧. |
| ஸ்ரீ: மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரதி ... ... | ௧. |
| திருநெல்வேலி, தெற்குப்புதுத்தெரு, வக்கீல் சுப்பையா பிள்ளையவர்கள்வீட்டிலிருந்து, மேலகரம் ம-௱-௱-ஸ்ரீ திரிகூடராசப்பக்கவிராயரவர்கள் வாங்கித்தந்த பிரதி ... | ௧. |
| ஆகப்பிரதி | ௩. |

## முகவுரை.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து அக்கிராஸநாதிபதியும், பாலவனத்தம் ஜமீந்தாருமாகிய இராமநாதபுரம் மகா-ள-ள-ஸ்ரீ பொ. பாண்டித்துரைஸாமித்தேவரவர்கள் செந்தமிழ்ப்பத்திரிகையில் மாதந்தோறும் வெளிப்படுத்தும்படி ஏதாவது தமிழ்நூலொன்றை அனுப்பிவரவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினமையால் அவ்வண்ணம் செய்யத்துணிந்து இம்முறை இதனை வெளிப்படுத்தலானேன்.

எண்ணியதை நிறைவேற்றும்படி திருவருளைச் சிந்திக்கின்றனன்.

சென்னபட்டணம்
24–2–07.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.



கணபதிதுணை

பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயரியற்றிய

# தேவையுலா.

---

### காப்பு.

ஆதியுலாக் கொண்ட வமலனிரா மேசன்மேற்
சோதியுலாந் தேவையுலாச் சொல்லவே—காதலாம்
தந்தத்தொந் தித்தந்தித் தாவென்று டுஞ்சிவன்சேய்
தந்தத்தொந் தித்தந்தித் தாள்.

### நூல்.

௧. நீர்கொண்ட மேக நிறங்கொண்ட மால்கமலப்
போர்கொண்ட கண்மலராற் பூசித்தும்—சீர்கொண்

௨. டிரமன் னியுவி னுபதேசம் பெற்றுஞ்
செபமன் னியபூசை செய்தும்—இபமென்ன

௩. வந்து பிறந்த மதலையைச் சாம்பனென
இந்துகுலத் தோன்றுபெய ரிட்டழைத்தும்—வெந்துயரை

௪. மேன்மாற்றும் வில்வோத கேச்சுர லிங்கத்தை
ஆன்மார்த்த பூசையா வர்ச்சித்தும்—நான்மறையின்

---

**காப்பு.**

ஆதியுலா-சேரமான் பெருமாள்நாயனார் அருளிச்செய்தஉலா. தேவை-இராமேசுவரம்; நூலின் ௧௧, ௧௨௧, ௨௨௬, ௨௪௮, ௩௩௮, ௩௬௰-ம் கண்ணிகளிற் காண்க.

மூன்றமடியில், 'தந்த' என்பது முதலியன தாளவொற்றுக்கள். சொல்லத் தாள் காதலாமெனக.

**நூல்.**

௧. மால், எழுவாய்.

௨. உபதேசம்பெற்றதை, கூர்மபுராணம், பூர்வகாண்டம். ௩௧-ம் அத்தியாயத்திற்காண்க. செபம்-ஜபம்

௩. மதலை-சாம்பவதியின் பிள்ளை. ஸாம்பனென்பது சிவபெருமானுடைய திருநாமம்.

௪. வில்வோதகேச்சுரம் ஒருசிவஸ்தலம். ஸ்ரீகண்ணபிரான், நரகாசுரனைக்கொன்று தேவலோகஞ் சென்று பாரிசாதவிருக்ஷத்தை அபகரித்தபின்பு பாரியாத்திர மலையையடைந்து, அதற்கு வரங்கொடுத்துவிட்டுத் தாம் நினைத்தமாத்திரத்தில் வந்த கங்கையில் ஸ்நானம் செய்து, கங்காதீர்த்தமும் வில்வமும் வைத்து அவற்றிற் சிவபிரானை ஆவாஹனஞ் செய்து, தாம் கொணர்ந்த பாரிசாத மலர்களால் அருச்சனைபுரிந்து துதித்தனர். இதனல் அவ்விடம் வில்வோதகேசுவரமென்று திருநாமம் பெற்றது. இது, பாரதம், ஹரிவம்சம், விஷ்ணுபர்வம், ௭௫-ஆம் அத்தியாயத்திற்கண்டது.

௫. வேர்பெற்ற வீதி விடங்கரைப் பாற்கடலின்
மார்பிற் சுமந்து வணங்கியும்—நேர்பெற்ற

௬. தொண்டு புரியுந் தொழும்பெல்லா நாளுநங்
கண்டு புரியுங் கருணையால்—அண்டருல

௭. கின்னு நடுங்கு மிராவணனைக் கொன்றபழி
தன்னை யகற்ற றலேக்கீடா—என்னேயோர்

௮. பல்லா யிரவர் படைத்த மலமாதி
யெல்லா விருளு மினிதகற்றத்—தொல்லேநாட்

௨௪-தீர்த்தங்கள்.

௯. கால வரையடைந்துங் கால வரையடையாச்
சீல முடையசக்ர தீர்த்தமும்—கோலவரைப்

௧௦. பேதையொரு பாகன்போற் பேயுட னேயாடும்
வேதாள தீர்த்தமெனு மென்புனலும்—பூதலத்து

௧௧. வாவுந் திடமதிக்கு வந்த மறுத்துடைத்த
பாவ விநாசப் பசுந்தடமும்—ஆவலாற்

௧௨ சீதைதரும் பட்டத்தாற் றேவேந் திரப்பட்டங்
கோதகன்ற தாஞ்சீதா குண்டமும்—நீதிபோய்த்

௧௩. தேயமிழந் தோனிழந்த தேர்பரியெல் லாங்கவந்த
வாயி லுதிப்பித்த மங்கலமும்—நேயத்தால்

௧௪. ஏத்திய நல்லோரை யேகாந்த ராமன்பாற்
சேர்த்து விடுபமுத தீர்த்தமும்—பூத்தமலர்

௫. வீதிவிடங்கர்-திருவாரூர்த்தியாகராசர்.

௭. தலேக்கீடு - வியாஜம். என்னே - என்னவியப்பு; ஓர், இடைச்சொல்.

௯. காலவரை-காலவமுனிவரை, கால எல்லே. சக்கரதீர்த்தமுதலிய ௨௪-தீர்த்தங்களின் விசேடங்களேயும், ஆடிப்பேறுபெற்ஶேர் இன்னர் என்பதையும் சேதுபுராணத்துள்ள சக்கரதீர்த்தச்சருக்க மூதலியவற்ருல் முறையே அறிந்துகொள்க. நூலாசிரியர், இவ்வாரு நயம் புலப்பட ௨௪-தீர்த்தங்களேயும் முறையே கூறியிருக்கும் அழகு கூர்ந்துணர்ந்து இன்புறற்பாலது.

௧௦. பேதையொருபாகன்போல்-சிவபெருமான் பேயோடாடுதல்போல. பேய்-சுதர்சனனுகிய பேய்.

௧௧. திடமதி - ஒருவன் பெயர்; மறு-அவனடைந்த பாவம்; சந்திரற்குள்ள களங்கமென்பது மற்ருெரு பொருள்.

௧௨. பட்டம் - குளம், பதவி. கோது - இந்திரனைச் சார்ந்திருந்த பிரஹ்மஹத்திதோஷம்.

௧௩. தேயமிழந்தோன் - மனேசவனென்னும் அரசன். கவந்தம்-நீர்.

௧௪. 'ஏகாந்தராமம்' என்பது இராமேசுவரத்திலுள்ள ஓரிடம்; இராமர் இராவண சங்காரத்திற்குரி



௧௫. விட்டினுறை வேதாவை மிக்கமக வானுகக்
கூட்டி யருள்பிரம குண்டமும்—வாட்டமுறு

௧௬. நொய்யமனத் தன்மசக னூறுமக வானுகச்
செய்யு மனுமகுண்ட தீர்த்தமும்—ஐயமற

௧௭. மானத வாவிவடி வாய்த்தெய்வ யானைதனை
யீனு மகத்தியனு ரேல்வையும்—மேனுளில்

௧௮. மெய்கழுவ வந்த விசயன் றமையனுக்குப்
பொய்கழுவி ராமர்திருப் பொய்கையும்—தெய்வதங்கள்

௧௯. வாழு மொருதேவை வந்து பலதேவர்
தாழு மிலக்குமணர் தண்புனலும்—சூழுலகிற்

௨௦. காந்திவருங் கூட்டைக் கழுவச் சுகமழுக்குத்
தீர்ந்து விடுசடா தீர்த்தமுஞ்—சாந்தமலர்

௨௧. கூற்றன் மகனைக் குபேரன் மகனுகத்
தேற்று மிலக்குமி தீர்த்தமும்—நாற்றிசையும்

காரியங்களேப் பலருடன் ஆலோசித்துக்கொண்டிருக்கையிற் கடல்முழக்கம் ஒருவர்பேசியது ஒருவர்க்குக் கேளாமலிருக்கும்படி செய்தமையின், அவர் கோபிக்க, உடனே கடல் ஓசையின்றி அடங்கியதனுல், அவ்விடத்திற்கு ஏகாந்தராமமென்றும் ஏகாந்தராமநகரம் என்றும் அங்கு எழுந்தருளியிருக்கும் இராமபிரானுக்கு ஏகாந்தராமனென்றும் பெயர்கள் உண்டாயின; "மாயோ னடக்கும், நெடுங்கடல் போலடங்கி நிற்க" என்றும், "இமைக்குங் கடலேழி லேகாந்த ராமன், அமைக்குங் கடல்பார்த் தமர்ந்தீர்" என்றும் பின் வருதல் காண்க; ௯௧, ௩௧௭.

௧௫. வேதா - பிரமர். மகவான்-யாகத்தையுடையவர்; பிரமதேவரை இந்திரனுகச் செய்ததென்பது மற்ருெருபொருள்.

௧௬. தன்மசகன் - தருமசகன்; இவன் ஓரரசன். நூறுமகவான் - நூறுபிள்ளேகளேயுடையவன். தன்மசகனென்னுமொருவனை நூறு இந்திரர்களாகச் செய்ததென்பது மற்ருெருபொருள்.

௧௭. மானதவாவி - கைலே அல்லது இமயமலேயிலுள்ள ஒரு தெய்வப்பொய்கை. தெய்வயானை - கஜூவானென்பவனைத் தாங்குதற்பொருட்டுச் சிவாஞ்ஞையால் தோன்றிய யானை; ஏல்வை-குளம்; "மதிக்கு மகத்தியனர் வாவிவந்த வேழத், துதிக்கை யனைய துடையாள்" என்பர் பின்னும்; ௨௨௨.

௧௮. மெய் - உடம்பு. விசயன் தமையன் - தருமபுத்திரர். பொய் - துரோணுசாரியார் இறக்கும்படிகூறிய பொய்ம்மொழி. கழுவல்-நீக்கல். மெய்கழுவவந்தவனுக்குப் பொய்யைக்கழுவியதென்பது குறிப்புப்பொருள்.

௧௯. தேவை - இராமேசுவரம். பலதேவர் - பலராமர். ஒருதேவைப் பலதேவர்கள் வணங்கினர்களென்பது ஒன்று.

௨௦. கூடு - உடம்பு. சுகம் - சுகமுனிவர். அழுக்கு - மனமாசு. கூட்டைக்கழுவக் கிளி அழுக்குத்தீர்ந்ததென்பது மற்ருெரு பொருள்; "நீடுசடா,தீர்த்த மொருசுகத்தின் சென்மந் துடைத்தமைகேட், டார்த்தசுக மெல்லா மடைந்தனவே" என்பர் பின்னும்; ௧௧௫, ௧௧௬.

௨௧. கூ[illegible] மகன் - தருமபுத்தி

௨௨. போய்முளைக்குஞ் சிதைபழி போக்குதற்காத் தண்ணீரிற்
தீமுளைக்கு மக்கினி தீர்த்தமும்—பூமியிலே
௨௩. தங்குமறை யான்றனுந் தந்துவிசும் பின்மறையான்
செங்கையு நல்குசக்ர தீர்த்தமும்—பங்கயத்தோன்
௨௪. மாலை முடியறுக்க வந்த பிரமகத்திக்
காலை யறுத்தசிவ கங்கையும்—வேலையெனப்
௨௫. பொங்குநீர்க் குள்ளே புழுங்கினோன் வெம்மையொரு
சங்கநீர் தீர்த்தசங்க தீர்த்தமும்—பங்கொருவன்
௨௬. ஒப்பரிய வையத்தி லோடிவந்து முந்நீரைச்
செப்பமுற நீந்தியமுத் தீர்த்தமும்—இப்புவியின்
௨௭. மாமிக்காய் மாமன்போய் மாமனைக் கொன்றபழி
சேமித் திடாக்கோடி தீர்த்தமும்—காமத்தால்
௨௮. ஓசைநீர் தோய்ந்தோற் குருப்பசியின் வேதனைகள்
மோசனமாஞ் சாத்யா முதநீரும்—பேசொருவன்
௨௯. வெண்மை யிரைக்கழுவ மிக்க கருமபிராந்
திண்மை பெறாஞ்சருவ தீர்த்தமும்—வண்மையினாற்
௩௰. றானே யரியையுஞ் சம்புவையும் விண்ணவர்தங்
கோனாகச் செய்ததனுக் கோடியும்—மாநிலத்தின்

---

ரர். குபேரன் மகனாக - பெருஞ்செல்வமுடையவனாக. யமன் "பிள்ளையைக் குபேரன் பிள்ளையாக்கியதென்பது மற்றொன்று.

௨௨. தீயில் தண்ணீர்தோன்றுவது முறையாக இருப்பத் தண்ணீரில் தீமுளைத்ததென்றது வியப்பு.

௨௨-௨௩. பூமியிலே தங்குமறையோன் - ஹரிஹரனென்னும் அந்தணன். விசும்பில் மறையான் - சூரியன். முன்னர்க்கூறிய சக்கரதீர்த்தம் வேறு, இது வேறு.

௨௪. மாலைமுடி - மாலையையணிந்த தலை. அறுக்க- அறுத்தலால். பிரமகத்தியினது அடியை.

௨௫. நீர்க்குள்ளே புழுங்கினோன் - வற்சநாபமுனிவர். புழுக்கம் - நன்றிமறந்தேமேயென்னுமனவெப்பம். பெருவெள்ளத்தினுள்ளேமுழுகியும் தீராத வெப்பம் ஒரு சங்குநீராலே தீர்ந்ததென்பது மற்றொருபொருள்.

௨௫-௨௬. பங்கு ஒருவன் - முடவனாகிய இரயிக்குவ முனிவன். வையம் - வண்டி. முந்நீர்-கங்கை யமுனை கயையென்னுமூன்றுதீர்த்தங்கள்; காலில்லாதவன் பூமியில் ஓடிவந்து கடலை நீந்தினனென்பது மற்றொருபொருள்.

௨௭. மாமிக்காய் - பெருமைமிகுந்து. மாமன்-திருமகள் கணவராகிய கண்ணபிரான்; மாமனைக் கொன்ற-தம்முடைய அம்மானாகிய கஞ்சனைக்கொன்ற. சேமித்திடா - பாதுகாவாது கொலைத்த.

௨௮. நீர்தோய்ந்தோன் - புரூரவா. உருப்பசி - ஊர்வசி;நீராடியவனுக்கு அச்சத்தைத்தரும் பெரும்பசி தீர்ந்ததென்பது குறிப்புப்பொருள். ஒருவன் - சுதரிசனனென்பவன்.

௩௰. அரி - குரங்கு. சம்பு - நரி. மேற்படி புராணம், கவிசம்புச்சருக்கம் பார்க்க. திருமாலையும் உருத்திரரை



௩௧. மேலான கத்துருவின் வீழ்சலதோ டந்தணிக்கப்
பாலாவி யாகியபா லோடையும்—மேலான
௩௨. நாணுருவா மம்புருவ நங்கை சிலையுருவின்
கோணொழித்தகவி குண்டமும்—காண
௩௩. அரிதலை தன்னை யயனுடலிற் சேர்க்குஞ்
சரசுவதி காயத்ரி தாமும்—பிரச
௩௪. மொழுகுஞ் சுனைகளா வோங்குபுகழ்த் தேவை
முழுது மொருபழமா முன்னோர்—தொழுதிறைஞ்சுஞ்
௩௫. சேதுப் பலாமரமாச் சேதுப் பலாமரத்தின்
மீதிற் பழுத்த வியன்கனியின்—கோதற்ற
௩௬. வான்பே ரமுதென்றால் வாய்கசக்கத் தித்திக்குந்
தேன்போ னிறைந்த சிவக்கொழுந்து—மான்போர்வாள்
௩௭. மச்சமயில் போற்கண் மலைவளருங் காதலியாம்
பச்சைமயில் வாழ்செம் பவளமலை—நிச்சயமாய்க்
௩௮. காவையு மிந்த்ர புரத்தையுங் கானமுந்
தேவையு மாகத் திருத்தினோன்—மேவுந்
௩௯ திருக்கந்த மாதனத்திற் சென்றேறு நாடொட்
டிருக்கந்த மாதனமா வேறான்—வெருக்கொள்ளு

---

யும் இந்திரனாகச்செய்ததென்பது குறிப்புப்பொருள்.

௩௧. சலதோடம் - வஞ்சனையாலுளதாகிய பாவம்; அது வினதையை அடிமையாக்கியது. பாலாவி-பால்வேது. ஜலதோஷத்தைத்தணித்தற்கு இது பாலாவியாயிற்றென்பது மற்றொருபொருள்.

௩௨. நாண் - நாணம். அம்புருவம் - அழகிய புருவம். நங்கை - அரம்பை. சிலையுருவம் - கல்வடிவம். கவிகுண்டம் - கவிதீர்த்தம். நாணி, அம்பு, வில் இவற்றின் வடிவங்களென்பது மற்றொன்று.

௩௩. அரிதலை - அரிந்ததலை. திருமாலின் தலையைப் பிரமருடைய உடலிற் சேர்த்ததென்பது ஒன்று.

௩௪. பழம்-பலாப்பழம்.

௩௬. 'தேன்போலிழைந்த' என்றும் பாடம்.

௩௫-௩௬. கனியின் தேன்போல் நிறைந்தவென்க. மானும் போருக்குரிய வாளும்.

௩௭. மச்சம் அயில் - மீனும் வேலும். மலைவளர்காதலி - அம்பிகையின் திருநாமம்; காதலியென்றும் வழங்கும்; "காதலிதேர்" என்பர் பின்; ௧௦௮. மலைக்கு மயில் உரியது.

௩௮. நிரணிறை.

௩௯. திருக்கந்தமாதனம் - ஒரு மலை; அஃது இராமநாதர் எழுந்தருளியிருக்குமிடம்; "கந்த மாதனத்திலருச்சித் தேத்து, மேந்துபுனற் சடிலமுடி யிராமநாதன்" என்பதனாலுணர்க; (சேதுபு. கடவுள். ௨) இருக்கு அந்தம் - வேதத்தின் உச்சி.

*

௪0. முங்கார கால வயிரவனு மோங்கார
சங்கார காலனையுந் தாபித்தோன்—பொங்குபெயர்க்

௪௧. காவலுறுஞ் சேதுவந்த மாகாளி யம்மையருட்
காவல் புரியுங் கடிநகரான்—தேவர்கோன்

௪௨. வேதனைசெய் கால்விலங்கை விட்டோட்டு வோன்சேது
மாதவன் கால்விலங்கை மாற்றுதான்—மோதி

௪௩. எறிகடலைத் தாண்ட வெழுந்தவனு மானை
மறிகடலை யென்றெதிரே வைத்தோன்—உறுபுலியாற்

௪௪. கோனு கலிங்கமன்றிக் கொட்டுணையும் பட்டுடான்
வானுக லிங்க வடிவினன்—மேலா

௪௫. மவனசை யாம லனுவசை யாமை
பவனனு மாருதியும் பார்த்தோன்—அவனையுமை

௪௬. தானளத் தான்வந் தெமையாள நாமெல்லாம்
வானோரை யாளவந்த வானோரும்—ஏனோரைப்

௪௭. பூதலமீ தாளப் புரியுங் கருணையான்
பாதலமே யாபரணப் பையானோன்—வேதனார்

௪௮. சென்னி தனக்குந் திருக்கை மலர்விடும்
அன்னமு நல்கு மருளாளன்—சென்னி

௪0. உங்காரகாலவைரவரென்பது ஸ்தலவைரவர் திருநாமம். பெயர்க்கு - புகழ்க்கு.

௪௧. சேதுவந்தமாகாளி - சேதுபந்தமாகாளி; ஸ்தலதேவதை.

௪௨. சேதுமாதவருடைய கால்விலங்கை மாற்றுமை, ஷெ புராணம், சேதுமாதவச் சருக்கத்தால் அறியலாகும்.

௪௩. கடலை மறி.

௪௪. கோனு கலிங்கம் - சுற்றப்பட்ட ஆடை. கொட்டுள் ளையும். வானுக லிங்கம்-மணலாலாகிய சிவலிங்கப் பெருமான்; என்றது, இராமநாதருடைய திருமேனியை; "மாதவர் வகுத்தவேலை வந்தது நிறுப்பாய் வல்லை, சீதைவா லுகத்தாற் செய்த சிவனருட் குறியை யென்றார்" என்பதனுலுணர்க; (சேதுபு. இராமனருச்சனை. அ௫.)

௪௫. அகங்காரமுற்றிருந்த பலதேவர்களுக்குமுன்பு இயக்கவடிவங் கொண்டுசென்ற சிவபெருமான் நாட்டியதுரும்பை அசைத்தற்கு வாயுதேவன் வலியில்லானனமையும், எடுத்துவிடுவதற்காக இராமலிங்கத்தை அனுமார் பலமுறை அசைத்துப்பார்க்கவும் அஃது அசையாதிருந்தமையும் இங்கே அறியற்பாலன; முறையே கந்தபுராணம், காமதகனச்சருக்கம், ௪௧-ம்பாடலையும், சேதுபுராணம், இராமனருச்சனைச் சருக்கம், க௫-ம்பாடல் முதலியவற்றையும்பார்க்க.

௪௭. ஆபரணம் பாம்புகளானமையின், பாதலம் ஆபரணப் பையாயிற்று.

௪௭ - ௪௮. அன்னம்-பிக்ஷான்னம். பிரமருக்குக் கொடுத்திருந்தன்றி அவர் தலைக்கும் பதுமாஸனம், அன்னவாகனம் கொடுத்தருளினரென்பது மற்றொரு பொருள்.



௪௯. மதியார்க்குந் தாள்பணியும் மார்க்கண்டே யர்க்கு
முதயாத் தமன மொழித்தோன்—கதிரவற்கும்

௫0. சண்டைப் படுமிருட்குந் தக்கன் செயுமோம
குண்டத்தின் முன்னுறவு கூட்டினோன்—புண்டரிகக்

௫௧. கண்ணினன் கண்களுக்குக் காட்டாத பொற்பாதங்
கண்ணிலா வந்தகற்குங் காட்டினோன்—கண்ணின்

௫௨. கடைக்கு விடயமன்றிக் கார்முதலை யென்று
விடைக்கு விடைகொடுத்த வேந்தன்—இடைக்குலத்துப்

௫௩. பூவையர் தாள்பணியப் போகாமல் விண்ணவர்க்குச்
சேவை கொடுத்தருளச் செல்கொடியான்—ருவிலா

௫௪. மாரூப வில்வேண் மலர்தூவக் கண்பார்த்துச்
சாரூபந் தந்தருளுந் தம்பிரான்—வீரப்

௫௫. புலிபோல வாட்டைப் புசிக்குமரா வுக்குஞ்
சலியா நடம்புரிந்த தாணு—வலியாரை

௫௬. மோது மிருமழுவன் முக்கால னாற்கண்ணன்
வேதமைந்த னாறுதலை மேவினோன்—காத

௫௭. லெழுசமைய னெட்டுலகு மொன்பது திக்கும்
பழுத்தகலின் பத்து நிதியும்—தொழவருள்வோன்

௪௯. மதியார் - சந்திரன். உதயாத்தமனமொழித்தது, ஒரேவிதமாக இருக்கும்படிசெய்தது; "கருமுடிவைத் தருகால கற்பமெலாங் கடப்பவுநின், திருமுடியிற் பிறைசிறிதுந் தேயாது வளராதே" என்றார்; (அருணைக்கலம்பகம், க.)

௫0. உறவு கூட்டல் - சூரியன் இருளை அறியும்படி செய்தல்; கண் போனமையின், அவன் இருளை அறிந்தான்.

௫0 - ௫௧. புண்டரிகக் கண்ணினன் - திருமால். கண்ணிலா அந்தகன் - கண்ணோட்டமில்லாத யமன். காட்டியது - மாற்பிலுதைத்தது. நல்லகண்ணுடையானுக்குத் தோற்றுதபாதம் குருடனுக்குத் தோற்றிய தென்பது மற்றொன்று.

௫௨. விடயமன்று இக்கார்முதலெல். விடை - திருமால், விடுத்தல்.

௫௪. சாரூபம் - செத்த உருவம். பூசித்தவனைக் கடைக்கணித்துச் சாரூபங் கொடுத்தருளினரென்பது ஒன்று.

௫௫. புலி - வியாக்கிரபாதர். ஆட்டை - ஆட்டினை, நடனத்தை. அரா - பதஞ்சலி.

௫௬-௫௭. ஒரு மழு, இருகால், முக்கண், நால்வேதம், ஐந்துதலை, ஆறுசமயம், எழுலகம், எட்டுத்திக்கு, ஒன்பது நிதி யெனவே இருத்தற் குரியவைகள் மற்றொருதொகைப்பொருள்களாகத் தொனிக்கும்படி இக்கண்ணிகளிற் கூறி யிருத்தல் வியக்கற்பாலது; இருமழு - பெரியமழு. முக்காலன் - மூன்று காலங்களையுடையவர். ஆற்கண்ணன் - ஆலமரத்தின்கீழே எழுந்தருளியிருப்பவர். வேதமைந்தன் - வேதத்தை அருளிச்செய்தவலியையுடையவர். மைந்து - வலி. ஆறு - ஆகாயகங்கை. எழு - எழுகின்ற. நெட்டுலகம் - நீண்ட உலகங்களையும். ஒன்பதுஉதிக்கும் - ஒன்பதாக உதிக்கப்பெற்ற. பழு

௫௮. தன்புய வெற்பிடத்துந் தாட்டா மரையிடத்து
மென்பணி கொள்ளு மிராமேசன்—அன்பர்

௫௯. திகைத்த வினையுமயன் சென்னியுஞ்சே திக்கு
நகத்தன் வராம நாதன்—சகற்பதியைப்

௬0. பூசித் திருநாளு நம்மையென்று போதித்தோன்
மாசித் திருநாள் வருநாளிற்—பாசத்தாற்

௬௧. பொற்கொடி மார்பிற் பொருந்தும் விடைக்கொடியா
நற்கொடி யேறு நலங்கண்டு—சொற்கொடிபோல்

௬௨. வாழும் பருவத வர்த்தனியுந் தானுமுல
கேழும் பரவ வெழுந்தருளி—ஆழியருள்

௬௩. காபாலிக் கென்றுகட்டு வித்த ரகுநாத
பூபாலன் மண்டபத்திற் போந்திருந்து—மாபாரச்

௬௪. செஞ்சடை யன்றித் திருப்புயஞ்சே ராளென்னு
நஞ்சடை வார்த்தைமிக நாணடைய—மஞ்சுதவழ்ந்

௬௫. தேறுகுழற் கங்கையா ளெங்கைபுயஞ் சேர்வதுபோற்
கூறு மபிடேகங் கொண்டருளி—வீறு

௬௬. புரியாடை யோரெட்டும் புல்லாடை யொன்றுங்
கரியாடை யொன்றுங் களைந்து—துரைராசன்

௬௭. தென்னன் விசய ரகுநாத சேதுபதி
கன்ன னருள்பொற் கலைபுனைந்து—பின்னை

௬௮. இறைப்பொழுதுங் கங்கைதனை யீசைகா ணாமன்
மறைப்பதெனப் பொன்மகுடம் வைத்துக்—கறைக்கண்டன்

௬௯. காதி லிருவரிசை காத்திருந்து கேட்பனபோற்
கோதி லரவக் குழைசாத்திச்—சாதலற

௭0. அண்டர்க்கா வுண்டநஞ்சி லாரமுத மூறுதல்போற்
கண்டத்தின் முத்துவடங் கட்டுறீஇச்—சண்டன்போய்

௭௧. எட்டித் தொடுமுன் னிறுகச் சிவக்கொழுந்தைக்
கட்டிப் பிடித்தோன் கரம்போல—வட்டத்

௭௨. தினமணிக்கே காந்திதருஞ் செம்மல் புயத்தி
லினமணிக் கேயூர மிட்டுக்—கனல்விழியைத்

௭௩. தோண்டும் விரலைத் தொழவந்த சூரியன்போற்
காண்டகுமா ணிக்கக் கடகமிட்டு—வேண்டிவளர்

௭௪. மெய்யாண் மூலைத்தழும்பை வேணியாள் காணாமற்
கையாள் பதக்கங் கவினுவித்துப்—பொய்யுலகில்

௭௫. தாயுதர பந்தனத்தைத் தள்ளுந் தனிமுதலுக்
காயுதர பந்தனமு மாங்கமைத்துத்—தேயம்

௭௬. பரித்தாளும் வாணன் பலசதங்கை யிட்ட
திருத்தாளி னூபுரமுஞ் சேர்த்தித்—தரித்த

௭௭. திருமா லொருபாலுந் தேவியொரு பாலும்
இருபாலுங் கைக்கொண்ட தென்னத்—திருமேனி

௭௮. ஆகாய மென்ன வகிலாண்ட மாந்தருவிற்
சேகாய வண்ணந் தெரிப்பதெனப்—பாகாய

௭௯. சானகி செங்கைத் தளிரும் பொருந்துதிரு
மேனி நிறங்கன்றி விட்டதெனக்—கானகத்தின்

௮0. மண்டிப் பொருவிசயன் மன்னைப் பிடிபிடிக்கக்
கண்டத்தி னஞ்சு கலந்ததெனக்—கொண்டலார்

---

து அகல் இன்பத்து நிதி - பழுதகன்ற இன்பத்தைச் செய்யுநிதி.

௫௮. என்பணி - என்னுடைய பணிவிடை, என்பு அணி.

௫௯. நகம் - மலை, உகிர். சகற்பதி - திருமால்.

௬0. பூசித்திரு, ஏவல். பாசம் - அன்பு.

௬௧. பொற்கொடி - திருமகள், பொன்னண். சொல் - புகழ்.

௬௨. பருவதவர்த்தனி - அம்பிகை திருநாமம். ஆழி - சக்கரம்.

௬௨ - ௬௩. ரகுநாதபூபாலன் - ரகுநாதசேதுபதியார். இவரைத்திருமாலாக உட்கொண்டு, 'ஆழியருள்' என்றார்.

௬௬. ஓர் எட்டு - எட்டுத்திசைகள். புல் ஆடை - புலித்தோலாகிய ஆடை.

௬௭. விசயரகுநாதசேதுபதி - இந்நூலாசிரியர் காலத்திருந்த அரசர்; "தருத்தேர் விசய ரகுநாதன் றங்கத், திருத்தேர் வடமுகுர்த்தஞ் செய்ய" என்பர் பின்னும்; கஙஅ.

௬௮. இறைப்பொழுதும் - சிறிதளவும். ஈசை - உமாதேவியார்.

௬௯. இருவர் - கம்பளர், அசுவதரரென்பவர்கள். கேட்பனபோல் - கேட்பனவாகிய பாம்புகள் போல். பாம்பு இசையை அறிதற்குரியது.

௭0. சண்டன் - யமன்.

௭௧. கட்டிப்பிடித்தோன் - மார்க்கண்டேயர்.

௭௨. தினமணி - சூரியன். கனல்விழியை - கனலுகின்றகண்ணை.

௭௪. மெய்யாள் - உமாதேவியார். வேணியாள் - கங்கை. கை - அலங்காரம்.

௭௬. வாணன் - வாணாசுரன். பல் சதம் கை - பலநூறாகிய கைகள்; ஆயிரம் கைகளையுடையவனாகிய வாணன் சிவார்ச்சனை செய்துவந்தவன். வாணன் சதங்கையணிகள் பலவற்றையணிந்த திருவடியென்பதும் ஒன்று.

௭௭. இதுமுதல், திருச்சாந்தணிதல் கூறப்படும்.

௭௮. சேகு - வயிரம்.

௭௯. இராமநாதரது திருமேனி, சீதையால் அமைக்கப் பெற்றது; (சேதுபு-இராமனருச்சனை.அரு-௧0௬)

௮0. மன்னை - கழுத்து. கொண்டலார் - மேகம்போல்வாராகிய இராமர்.

௮௧. தெள்ளுஞ் சிவத்தியானஞ் செய்போ திரண்டுருவு
முள்ளும் புறமு மொளிர்வதெனக்—கிள்ளைவளர்

௮௨. கையிற் கரும்பணிவாள் காத லெனுநீலப்
பையுட் பொதிந்த பவளமென—ஐயமாத்

௮௩. தூய சிவஞானந் தோன்று தெவரெவர்க்கு
மாயை நிழலின் மறைந்ததென—நேய

௮௪. மருக்கூந்தன் மங்கைநிறம் வாஞ்சித்தா ரென்னத்
திருச்சாந் திலேபனமுஞ் செய்து—விரைச்சாந்தாற்

௮௫. சந்திரனில் வாழுந் தடந்தா மரைக்கண்ணன்
வந்தெதிர் நிற்கும் வடிவென்ன—முந்தியே

௮௬. விம்பப் பிரதிவிம்ப வேதாந்த நீதியெனப்
பைம்பொனிலைக் கண்ணாடி பார்த்தருளி—வெம்போரில்

௮௭. வானிற் பறக்கு மதின்மூன் றையுமெய்ய
மேனிற்கும் பொன்மேரு வில்லென்ன—வானத்து

௮௮. முந்திய விந்திரவின் மூன்றி லுமைநிறமும்
எந்தைநிற மூங்கண் டிரண்டொளிக்க—நிந்தையிலா

௮௯. மற்றொருபொன் வில்லை வளைத்துத் தரித்ததெனப்
பொற்றிரு வாசி பொலிந்தோங்கக்—குற்றமறு

௯௦. சிரா தனமான சிங்கா தனத்திலிருந்
திரா தனைகொண் டருளியபின்—யாரும்.

௯௧. மடங்கலெனு நந்தியான் மாயோ னடக்கு
நெடுங்கடல் போலடங்கி நிற்கச்—சடங்குஞ்சேர்

௯௨. நான்மறையு முத்தமிழு நற்பே ரிரண்டுடையோ
ஞான்முறையு முன்னே நடவன் றதற்பின்—மேன்முறையே

௯௩. வாட்டி விடுஞ் சென்மம் வரும்வழியைத் தாளிட்டுப்
பூட்டிவிடுஞ் சேதுப் புராணமுங்—கேட்டருளி

௮௨. கையிற் கரும்பு அணிவாள்-உமாதேவியார்.

௮௪. இலேபனம் - பூச்சு. சாந்தால்-திருச்சாந்து அணிந்தமையால்; அது கருமையுடையது.

௮௫. சந்திரமண்டலத்தில் திருமால் எழுந்தருளியிருக்கின்றனர்; இதனை, "ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ, பாற்கடலோதிங்க ளோதங்கு மாவம் பலபலவா, மாற்கமு மாகினின் றார்மாதை நாதர் வலங்கொள்பம்பை, மேற்கரைக் கோயில்கொண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே" என்பதனு லுணர்க; (திருவாமாத்தூர்க் கலம்பகம்-௬௧.)

௮௮. இரண்டு - பச்சைநிறமும் சிவப்புநிறமும்.

௯௧. மாயோன் - இராமர்; இவர் கடலோசையை யடக்கினமை, இந்நூல், ௩௪-ம் கண்ணிக்குறிப்பாலுணரலாகும்.



௯௪. மெய்ந்நூற் றுறையின் விதிவழியே பூசிக்கும்
ஐந்நூற்றுப் பன்னிருவ ராரியரும்—இந்நிலத்திற்

௯௫. றேற்றுமலை யத்தனையுஞ் சேதுபந்த மீதுகுடி
யேற்றுலக நாதமுனி யென்போனுங்—கூற்றதிர

௯௬. ஆர்க்குங் கடறார்த் தழிவி றிருநகரஞ்
சேர்க்கு மிராவாடு தேசிகனும்—நீர்க்கடலில்

௯௭. ஆராமங் கோயில்குள மற்புதமாக் கற்பித்த
மாராம நாத வரமுனியும்—சீராமர்

௯௮. மெய்யம் பலமாக வீற்றிருப்பார்க் கேற்றபணி
செய்யம் பலவாண தேசிகனும்—ஐயன்

௯௯. சிவராச தானியுடன் தேவையையொப் பாக்குந்
தவராம நாதமுனி தானும்—புவனேசற்

௧௦௦. காதவன்வாழ் கோபுரங்க ளட்டபந்த னாதிகள்செய்
மாதவனும் வேதவன மாமுனியும்—சீதைபுணர்

௧௦௧. மேகஞ் சொரிந்ததிலு மிக்காக நித்தமபி
டேகஞ் சொரிந்து தினம்பூசை—ஆகத்தின்

௧௦௨. மைவார் விழியும் வனமுலையும் பெற்றோர்க்குத்
திவ்யா கமப்படியே செய்விக்கும்—சைவ

௧௦௩. சிகாமணி யான சிதம்பர நாத
மகாமுனியு மாமெழுவர் வந்து—நகர்தினைக்

௧௦௪. கண்ணன் முதலோர் கனசேது வைச்சேரப்
பண்ணுதல்போற் செய்யும் பணிவிடையும்—மண்ணுலகங்

௧௦௫. காத்தருளுஞ் சேதுபதி கட்டளையைச் சட்டமிட
வாய்த்தசொக்க நாத வரமுனிவன்—கீர்த்தியுடன்

௧௦௬. நம்பர் திருப்பணிக ளோடோறுஞ் செய்தனவுஞ்
சம்பு திருச்செவியிற் சாத்தியபின்—அம்பொற்

௧௦௭. றிருவாழி தாங்கலாற் சேரும் வடத்தாற்
பரிவான பீதாம் பரத்தாற்—றிருவென்னு

௯௫. சேது, சேதுபந்தமெனவும் சேதுவந்தமெனவும் வழங்கும்.

௯௭. ஆராமம் - சோலை.

௯௯. சிவராசதானி - ஸ்ரீ காசி.

௧௦௦. 'ஆதிகள்' என்றதனால், வேதவனமுனிவனால் வைப்பிக்கப்பெற்ற வேதவனச்சோலையும் கொள்ளப்படும்; பின் "மாதவனும் வேதவனமாமுனிவன் வைப்பித்த, வேதவனத் தண்டலைமென் கூந்தலாள்" என்பதனு லுணர்க; ௨௨௫.

௧௦௭ - ௧௦௮. திருமாலுக்கும் திருத்தேர்க்கும் சிலேடை: ஆழி - சக்கரம், உருளை. வடம் - ஆலிலை, தேர்வடம். திருவென்னு மாதுபதி - திருமால், போலும் தேர்.

க0அ. மாது பதியுமவன் மாமகுட மும்போலுஞ்
சேதுபதி வைத்ததிருத் தேரேறிக்—காதலிதேர்

க0கூ. பின்னூரச் சண்டன்றேர் பின்னூர மைந்தர்தேர்
முன்னூர நீரூரு மூதூரில்—என்னிறையோன்

கக0. ஆதித்தேர் தானு மழுக்குத் தோற்றிந்தச்
சோதித்தேர் தன்னைச் சுமப்பதென—வீதிக்

ககக. கெழுந்தருளும் போதி லிமையோர்கள் வெள்ளங்
கொழுந்து படர்ந்துவருங் கூட்டம்—தொழுந்தகைய

ககஉ. வள்ளலுடன் முன்வந்த வானரங்க ளோரொரு
வெள்ள மெனக்களித்து மீண்டதென—ஒள்ளிழையார்

ககங. அன்று தனிப்போ யரன்விழிக்குத் தோற்றமத
னின்று படைக்கூட்ட மிட்டதெனச்—சென்றோடிப்

ககச. பேதைமையால் வாலி பிதாமிதித்த பூமிதனை
மேதினியோ ரெல்லா மிதித்ததெனக்—காதலுமை

ககரு. ஏடலர் தாரா னிளனுக் கிடுஞ்சாப
மாடவர்க் கெல்லாமுண் டானதென—நீடுசடா

ககசு. தீர்த்த மொருசுகத்தின் சென்மந் துடைத்தமைகேட்
டார்த்தசுக மெல்லா மடைந்ததெனப்—பார்த்திருந்து

ககஎ. சானகியை யீன்ற தலத்தைவெல்லப் பூவையரை
யேனை யிடமெல்லா மீன்றதென—மானெல்லாங்

ககஅ. கோவங்க மானகா குத்தனை வஞ்சித்த
பாவங் கழுவப் படர்ந்ததெனக்—கோவங்கொள்

கககூ. தென்கடனீ ருண்ணச் செலும்போது சீமூத
மின்களையெல் லாங்கரையில் விட்டதெனத்—தன்கிளைபோற்

கஉ0. கொச்சை மயிலெல்லாங் கூட்டமிட்டு வெற்பீன்ற
பச்சை மயிலைவந்து பார்ப்பதென—அச்சுதனார்

கக0. ஆதித்தேர் - பூமி.

ககச. வாலிபிதா-'ரிக்ஷராஜஸ்' என்பவன்; மிதித்த ஆடவர்கள் உடனே மகளிர் வடிவமடையும் இடமொன்றை மிதித்து அவன் பெண்வடிவமடைந்தான்; கூர்மபுராணம், அகத்தியர் இராவணன்மரபுரைத்தவத்தியாயம், ககசு - ம் செய்யுளைப்பார்க்க.

ககரு. சாபம் - பெண்வடிவமடைகவென்றது.

ககசு. சுகம் - கிளி, சுகமுனிவர்.

ககஎ. ஈன்றதலம் - பூமியின் ஒரு பகுதி; ஏனையிடம் - பூமியிலுள்ள மற்றையிடங்கள்.

ககஅ. கோ - அரசன்.

கககூ. சீமூதம் - மேகங்கள்.



கஉக. மூவர் பணிந்த முதற்றலமென் றுங்கவர்தம்
பூவையரெல் லாம்பணியப் போந்ததெனத்—தேவைதனில்

கஉஉ. பிந்தாது சூழவனப் பேடவர்கைத் தாமரையில்
வந்தாடல் போற்சா மரையாடத்—துந்துபி

கஉங. சல்லரி தக்கை தடாரிமுரா சம்பேரி
கல்லவடங் காகளங் கல்லென்னச்—சொல்லரிய

கஉச. வெண்கவிகை யான்மறைந்து விண்ணிறம் வெண்ணிறமாய்
வண்கவிசொ னீலநிற மாறுடக்—கண்களெனும்

கஉரு. பொங்கலர் பூத்ததடம் போன்றமட வார்களட்ட
மங்கல மேந்தி மகிழ்வேந்தப்—பங்கயனும்

கஉசு. மாலும் பறவைகளில் வந்தேற வாசையிரு
நாலும் புரப்போர் நரர்விலங்கு—மேலேற

கஉஎ. எட்டிய கோள்க ளெழுபத் தொருகுதிரை
கட்டிய தேர்கள் கடிதேறக்—கிட்டுவினை

கஉஅ. பாறுமிரு நால்வசுவும் பன்னோ ருருத்திரரு
மேறு விமான மினிதேறச்—சீறயிலை

கஉகூ. எள்ளு மிருகண் ணெழுமடவார் நான்மூன்று
புள்ளும் விலங்கும் பொலிந்தேறக்—கிள்ளைமொழி

கங0. நேயத் திருமா னிலமா னிளம்பிடிமான்
காயத் திரிமான் கலைமானும்—தூயோர்

கஙக. எழுவர்நதி மாத ரெழுமுனிவர் மாதர்
வழுவி லெழுவரர மாதர்—பழிதீர்

கஙஉ. வசுமாத ரெண்மர் மகிதல மாதி
யசமான மாதரோ ரெண்மர்—இசைகதிரோன்

கஉக. மூவர் - இராமர், பலராமர், கண்ணபிரான்.

கஉச. ஆகாயம் நீலநிறமுடையதென்பது கவிகளின் மதம்.

கஉசு. ஆசை - திசைகள். நரவாகனமுடையோர், நிருதியும் குபேரனும்.

கஉஎ. சூரியன் முதலிய ஒன்பது கோள்களின் தேர்களிற்கட்டிய குதிரைகள், முறையே, 'எ, க0, அ, அ, அ, க0, அ, சு, சு' ஆதலின், 'எழுபத்தொருகுதிரை' என்றார்; (கூர்மபு. ஆதவர்கதிர்ச்சிறப்புரைத்த. கக, கஉ, கங.)

கஉகூ. எழுமடவார் - சத்தமாதர்கள்; நால்விலங்கும் மூன்றுபுள்ளுமென்க; எதிர்நிரனிறை.

கங0. இளம்பிடிமான் - இந்திராணி.

கஙக. எழுவர் அரமாதர்-அரம்பை முதலிய எழுவர்; 'எழுவரரமாதர்' என்றும் படித்தற்கிடமுண்டு.

கஙங. கன்னியர் நால்வர் கடவுட் கலாநாதன்
பன்னியர் மூவொன் பதுமாதர்—சென்னியச

கஙச. மானவர் பெற்ற வறுபது மாதருட
னேனையரு மொய்த்தீண்ட வெம்மருங்கும்—மேனுளிற்

கஙரு. கோவ மொடுங்கரா வுண்ட குலமைந்தர்
மூவரையும் வாழ்வித்த மூவர்களுந்—தேவருக்கும்

கஙசு. பேருலகத் தோர்க்கும் பிரம்படி யுண்டாக்கும்
ஓரிருவர் தாமு முடன்போத—நீரோடப்

கஙஎ. பண்ணியங் கொள்ளாது பார்முழுதுங் கொண்டாடப்
புண்ணியங் கொள்ளும் புகழாளன்—விண்ணோர்

கஙஅ. தருத்தேர் விசய ரகுநாதன் றங்கத்
திருத்தேர் வடமுகுர்த்தஞ் செய்யப்—பெருத்த

கஙகூ. மறுகு கடலாக மன்பதை வெள்ள
முறுகு கரைபுரண்டு மோத—நிறைவயிரக்

## குழாங்கள்.

கச0. கன்னிலத்து மின்னுசந்த்ர காந்த மணிநிலத்தும்
பொன்னிலத்தும் வைசயந்திப் பொன்னிலத்தும்—அன்னம்

கசக. உலாநிலத்து மேனிலத்து மோர்நிலத்து மில்லா
நிலாநிலத்தும் வெள்ளி நிலத்தும்—கலாநிதியும்

கசஉ. தாரா கரமுதவுந் தாவில்லா மின்களுவந்
தோரா யிரங்கோடி யுற்றவென—நேரிழையார்

கசங. காதனுட னேறிடுவார் கைக்கடகந் தம்மையே
பாத கடகமெனப் பார்த்தணிவார்—சோதி

கஙங. சூரியன் மனைவிகள் நால்வர், சஞ்ஞை, இராக்கினி, பிரபை, சாயையென்பார்; (கூர்மபு. 'சூரியன் மரபுரைத்த. ரு - கூ.)

கஙங - கஙச. சென்னி அசமானவர் - தக்கன்.

கஙரு. கோவம் ஒடுங்கு அரா, கோவமொடும் காரவெனப் பிரித்துப் பொருள் கொள்க; கரா - முதலை. வாழ்வித்தமூவர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய மூவர்.

கஙசு. ஓரிருவர் - திருவாதவூரடிகள், அரிமர்த்தனபாண்டியர்.

கஙஅ. தருதேர் - கற்பகமும் ஆராயப்பெற்ற.

கச0. வைசயந்தி - பெரியகொடி கட்டப்பெற்றதும் வீட்டின்முன்புறத்துள்ளதுமான மாளிகை.

கசக. கலாநிதி - சந்திரன்.

கசஉ. தா - கேடு. 'தாமின்மினிகளும் வந்து' என்றும் பாடம்.



கசச. பாடகத்தின் மீதே பரிந்தணியுங் கண்டசரம்
பாடகத்தின் மீதே பரிந்தணிவார்—நாடி

கசரு. இதங்கொண் மலர்க்கை யிருகை யிடத்தே
சதங்கை தெரியத் தரிப்பார்—விதங்கொண்ட

கசசு. காலாழி கையாழி யாகக் கடிதணிவார்
மாலாழி நீந்த மறுகுவார்—நாலிடமும்

கசஎ. மொய்த்திடுவார் மார்பு முறுகு முலைதாங்கி
யெய்த்திடுவார் வேர்வை யிறைத்திடுவார்—தத்தம்

கசஅ. இடைகளையுந் தேடுவா ரெல்லோர் மடியும்
உடைகளையுஞ் சோதித் துடைவார்—விடையோன்

கசகூ. கனிவாயுந் தம்பிதழுங் கைவிரலாற் கூட்டத்
தனியாமை யாலே தவிப்பார்—இனியிந்தப்

கரு0. பெண்களையு மாண்களையும் பேசுந் திரைக்காத்தாற்
கண்களைமூ டாதோ கடலென்பார்—எண்கொள்ளும்

கருக. எம்முடைய கொங்கை யிணைகளுக்கு மீசரே
உம்முடைய வில்லங்க மோயாதோ—எம்ம

கருஉ. திரவியமா நாணையழித் தீருமது நாணை
வரையறை யாப்பணுக்கி வைத்தீர்—நிரைவளையார்

கருங. கைவளையை நீக்கினீர் கண்ணுதலீ ரும்முடைய
பெய்வளையை நீங்கப் பெறுவீரே—ஐயரே

கருச. கொள்ளை விடமமுதாக் கொண்டீரே நீரெமக்குத்
தெள்ளமுத நஞ்சமெனச் செய்தீரே—துள்ளி

கருரு. விழுமதனை வென்றீரே விண்பழுத்த வெள்ளைப்
பழமதனை வெல்லப் படாதோ—முழுமுதலீர்

கருசு. என்றெவ் விரங்க விளநீ ரையுமுலையு
மொன்றென் றிருக்கு மொருபேதை—கன்றும்

கசச. பாடகம் - பாடுகின்ற இடமாகிய கழுத்து, ஒருகாலணி.

கசரு. சதங்கை - ஓரணி, இரண்டு கைகளில் நூறுகைகளைத் தரிப்பாரென்றும் ஒன்று தோற்றும்.

கருக. வில்லங்கம் - வில்லின் அங்கம்; வில் - மேரு; வேறுபாட்டுக் குணமென்பது மொன்று.

கருஉ. 'உமது நாண்' என்றது, பாம்பை.

கருங. பெய்வளை - அம்பிகை.

கருரு. வெள்ளைப்பழம் - சந்திரன்.

பேதை.

கருஎ. திருமகளார் சிந்தை.தெளிய விளைய
மருமகளார் பெற்றெடுத்த வஞ்சி—விரக

கருஅ. வசப்படுவோர்க் கெல்லா மதன்கரும்பு போலக்
கசப்பு விளையாக் கரும்பு—பசப்புவிளை

கருகூ. தன்போல் விளங்கச் சரக்காமன் றேரிழுத்துத்
துன்ப முறாத சுகப்பிள்ளை—பின்பொற்றை

கசு0. மாவிற் றனித்திருந்து மால்கொண்டோர் பேய்கொள்ளக்
கூவத் தெரியாக் குயிற்பேடு—தாவிப்

கசுக. படியேழு மோடிப் படரச் சிறிதே
கொடியோடுங் காமக் கொழுந்து—அடியோடிப்

கசுஉ. போரம்பஞ் செய்யும் புகழ்க்காம வேடிருநாட்
காரம்பஞ் செய்யுமங் காரப்பணம்—சேருங்

கசுங. களவுங் கொலையுங் கவுரியமுஞ் சூதும்
விளையுந் தமோகுண வித்து—வெளியதிரு

கசுச. நீற்றொளி பொங்குதிரு நீலகண்ட யாழ்ப்பாணர்
வற்றினு மேறாத வின்னிசை—ஆற்றலால்

கசுரு. என்முடியென் றெண்ணி யிருப்பினு முன்முடியாப்
பொன்முடிபோற் கூடாத பூமுடியாள்—முன்னோன்

கசுசு. தலங்குதிக்கு மப்பருக்குச் சாக்கியர் பாலிற்
கலந்தளித்த நஞ்சனைய கண்ணாள்—நிலந்துதிக்கும்

கசுஎ. பைநாகம் போய்மறைத்த பைம்பொற் சிகரம்போன்
மைநாக நீரின் மறைந்ததுபோற்—கைநாக

கசுஅ. பங்கன் சடைமுடிமேற் பண்டா யிரமுகத்துக்
கங்கை யொளித்திருந்த காட்சிபோற்—செங்கனியின்

கசுகூ. சார்பி லொளித்திருந்த தக்ககன்போன் மிக்கமணி
மார்பி லொளித்த வனமுலையாள்—ஊரனுக்குப்

கருஎ. இளையமருமகளார் - இரதி.

கசுஉ. போர் அம்பு அஞ்சு எய்யும்.

கசுங. கௌரியம் - இரௌரியம்; குரூரத்தன்மை.

கசுசு. சாக்கியர் - சைனர்; (திருவாலவாயுடையார் திருவிளை. ருஅ, இ0.)

கசுஎ. பைநாகம் - சேடன்.

கசுஎ. கசுஅ. கைநாக பங்கன் - சிவபெருமான்.

கசுஅ. செங்கனி - காசிபனென்பவன் பரீக்ஷித்துவுக்குக் கொடுத்த இலந்தைக்கனி.

கசுகூ. ஊரன் - சுந்தரமூர்த்திநாயனார்.



கஎ0. பைம்பொன் றிருமுருகன் பூண்டியி லேபறிபோஞ் [யாள்
செம்பொனெனப் போய்மீண்ட சிறெயிற்றாள்—கொம்பனை

கஎக. செய்யதொரு சித்திரத்திற் றீட்டுஞ் செழுங்கிளியைக்
கையி லழைத்தழைத்துக் கன்றுவாள்—மெய்யுறுகண்

கஎஉ. ணாடி நிழலுக் கமுதூட்டு வாளதுவுங்
கூடவமு தூட்டக் குனிந்துண்பாள்—நீடுதிரை

கஎங. மட்டித் தெடுத்த மணற்சோற்றைத் தானெடுக்க
எட்டிக் கடலை யிறைத்திடுவாள்—கிட்டிய

கஎச. மாதவிப் பந்தர் மணப்பந்த ராவாவிச்
சீதளச்செந் தாமரையே தீயாகப்—பேதுறாக்

கஎரு. கிஞ்சுக பத்திரமே கிட்டுஞ் சிருக்காக
வஞ்சுகங்கண் மந்திரஞ்சொ லந்தணரா—நெஞ்சுகந்த

கஎசு. புன்னை யரும்பே பொரியாகப் பூந்தேற
னன்னர்ச் சொரியு நறுநெய்யா—முன்னரிள

கஎஎ. வண்ட லயர்ந்த மணற்சோறு கல்விருந்தாக்
கொண்ட முரசங் குரைகடலாத்—தண்டலையில்

கஎஅ. தன்பாவை யான தமனியப் பாவைதனக்
கன்பா மணஞ்செ யமையத்துத்—தென்பூமி

கஎகூ. வாழ வருங்கந்த மாதனத்தைப் பொன்மேருத்
தாழவரல் போலுந் தடந்தேர்மேற்—சூழத்

கஅ0. தனுக்கோடி நீங்குதனுக் கோடியான் வந்தான்
மனுக்கோடி யேழுடையான் வந்தான்—எனைககாக்கும்

கஅக. மூவா முதல்வந்தான் முப்பத்து முக்கோடி
தேவாதி போற்றுஞ் சிவன்வந்தான்—மேவவரும்

கஅஉ. பாலாழி தூணியாக் கொண்ட பரன்வந்தான்
நீலாழி யில்வாழ் நிதிவந்தான்—மேலோர்கள்

கஅங. நந்தா வரராம நாதனெதிர்வந்தான்
வந்தானென் றாதும் வலம்புரியும்—துந்துபியும்

கஎங. மட்டித்து - சுழன்று.

கஎரு. கிஞ்சுக பத்திரம் - முள்ளுமுருங்கைப் பூவின் மடல். சிருக்கு - ஓமஞ்செய்தற்குரிய ஒருகருவி.

கஅ0. தனுக்கோடி - கோடி உடம்புகள், ஒரு தீர்த்தம்.

கஅஉ. நீலாழி-கரியகடல்; சேதுவுள்ள கடல்.

கஅச. பின்னத் தொனியான பேரிப் பெருந்தொனியுஞ்
சின்னத் தொனியுஞ் செவிதூர்ப்ப—அன்னை

கஅரு. தொழுவது கண்டெழுந்தா ளேழையர் பின்போய்த்
தொழுவது கண்டு தொழுதாள்—முழுவதும்

கஅசு. பாதாதி கேசமெலாம் பாவை தரிசித்து
வேதாதி கேசவனை மேம்பட்டாள்—பேதைமற்

கஅஎ. றொன்றினையும் வேண்டாம லும்பர்கோ னங்கைமான்
கன்றினை வேண்டிக் கரைந்தழுதாள்—நின்றினையு

கஅஅ. மன்னே யுமைவிழியென் றம்மானு மம்மானைத்
தன்னேயத் தாலே தரித்ததுகாண்—பின்னவனும்

கஅகூ. தேற்றுமிள மான்கன்றைச் சென்னிப் பிறைக்கொழுந்தில்
ஏற்றி விடுவதிலு மிச்சைகாண்—கூற்றுவன்வே

ககூ0. ராணி யறுகை யபேட்சித் தவர்சாத்தும்
வேணி யறுகையது மேயுங்காண்—மாணிழையாய்

ககூக. பெம்மா னமரர் பெருமானம் மான்கோமா
னெம்மானம் மானையுனக் கீயுமோ—சும்மாது

ககூஉ. கண்ணருவி யோடக் கரைந்தழுவ தேனெனுமுன்
விண்ணருவி யோடுந்தேர் வேறகலப்—பெண்ணெதிரே

ககூங. வந்த விசயமதன் வாளியின் வாய்க்குவிருந்
திந்த விசையமையா தென்றகல—வந்த

ககூச. குதம்பை ததும்புங் குழையா ளகன்றாள்
பெதும்பை யொருத்திகிளிப் பிள்ளை—பதங்கண்டு

---

கஅச. சின்னம் - ஒருவாத்தியம். இதிற் பேரொலி சிறியவொலி யென்பது மொன்று.

கஅசு. வேதாதி - பிரமர். இவள் மேம்பட்டமைக்குக் காரணம், அடிமுடியைத் தரிசித்தது.

கஅஎ. நின்று இனையும்.

கஅஅ. உமைவிழி யென்று - உமைவிழி போல்வதென்று. அம்மானும் - சிவபெருமானும்.

ககூ0. ஆணி அறுகை - ஆணி வேரறுதல்.

ககூக. சும்மாது - சும்மா; "சும்மாது சிரந்தூக்கி" (திருவிளை. பரிநரி: சக)

ககூஉ. அருவி - அரூபத்தையுடையார்; இராமநாதர்.

ககூங. இந்தவிசை - இந்தமுறை.

ககூச. பதம் - மலரும் பருவம், விரும்பும் பருவம்.



## பெதும்பை.

ககூரு. துச்ச மதனன் றொடுக்குங்காற் றேட்சாரமுங்
கைச்சாரமு மாகாக் கடிமுல்லை—அச்சமற

ககூசு. நீளவரு நாளத்தி னேற்று முகந்தோற்றி
நாளை மலரு நளினமலர்—வேளை

ககூஎ. வெடிக்குமலர் பேற்றாயை விட்டு நடந்து
படிக்கு மடவன்னப் பார்ப்புத்—துடித்தோடித்

ககூஅ. தாவுமதன் றேர்முன்னே தாய்கூவத் தான்காவிற்
கூவு மதுரக் குயிற்பிள்ளை—பூவுலகிற்

ககூகூ. செல்லார் திருமருகற் றிங்களூர் வெவ்விடம்போற்
கொல்லாமன் மீண்டுவிடுங் கூர்விழியாள்—சொல்லும்

உ00. பெருந்தாளம் வேண்டாத பிள்ளையார்க் கீசன்
றருந்தாளம் போலுந் தனத்தாள்—வருந்தியே

உ0க. பேதமற வாகீசர் பெற்ற சிவபதம்போற்
கோதையர் கூட்டுங் குழலினாள்—சோதிசேர்

உ0உ. பொற்கண்ட மான புதியமணி முற்றத்துக்
கற்கண்டு கொண்டு கரைகண்டு—சர்க்கரையாற்

உ0ங. பாத்தி பரத்திப் பசுந்தேன் குடங்கொண்டு
வார்த்து வளர்த்தசிறு மாதவிக்குப்—பூத்தறியாத்

உ0ச. தன்போ லிளங்கரும்பு தன்னையொரு கொள்கொம்பாப்
பொன்போலும் வஞ்சிநடும் போதத்தில்—இன்ப

உ0ரு. நலஞ்செய்யுங் கங்கை நதிவந்து நித்தம்
வலஞ்செய்யச் செய்யும் வழிபோல்—நிலம்பதிய

உ0சு. வண்டில் பதியு மணித்தேரி லெந்தைவரக்
கண்டில் கடந்தாள் கடிதடைந்தாள்—கொண்டல்போய்

உ0எ. முன்னம் பணிந்த முளரித் திருப்பதத்தை
மின்னும் பணிந்ததுபோன் மின்பணிந்தாள்—சென்னிமே

---

ககூரு. துச்சம் - இழிவு.

ககூசு. வேளை - காலம்.

உ00. பிள்ளையார் - திருஞான சம்பந்தர்.

உ0க. வாகீசர், திலதவதியாராற் சைவசமயத்தைச் சார்ந்து பேறுபெற்றமை இங்கே அறியற்பாலது.

உ0சு. வண்டில் - உருளை. கொண்டல் - இராமர், மேகம்.

உ0அ. லாறுபிறை தோற்று மழகுமொருவேளை
நூறுவிழி தோற்று நுதலழகும்—கூறரிய

உ0கூ. வெண்டிசையுங் கொண்ட விடையழகு மேழுலகுங்
கொண்ட சிலையின் குனிப்பழகும்—கொண்டுவரு

உக0. மம்புயத்தி லொன்றையொளித் தாயன் றனைவேடன்
றம்பியெனச் செய்த சரணழகும்—கொம்பனையாள்

உகக. கண்டவளுங் காணு தவளுமாய்ப் பேராசை
கொண்டுங் கொளாதுமெதிர் கும்பிட்டாள்—அண்டர்கோன்

உகஉ. வேற்றோர் மறுகடைந்தான் வில்வே டொடைமடக்கித்
தோற்றா னெனும்பேர் துலக்கினான்—சாற்றும்

மங்கை.

உகங. திருப்பிறந்த நாட்பிறந்த தெள்ளமுதத் தாலே
யுருப்பிறந்த மங்கை யொருத்தி—தருப்பிறந்த

உகச. அண்ட மனையு மகிலமுமஞ் சுங்காள
கண்ட மனைய கருங்குழலாள்—தொண்டருடை

உகரு. அன்பிறை நீங்கா வடியான் முடிமேல்வாழ்
வன்பிறை போல்விளங்கும் வாணுதலாள்—என்பிறவிப்

உகசு. பேரூசல் மாற்றும் பிரானே டுமையாடுஞ்
சீரூசல் போலுஞ் செழுங்குழையாள்—ஆரூரிற்

உகஎ. கோன்கன் றினையாளுங் கோமான் கரத்தேந்து
மான்கன் றனைய வரிவிழியாள்—தான்கன்ற

உகஅ. மைபோற்றுங் கண்ணுமையாள் வாட்டந் திருத்துமரன்
கைபோற் சிவந்த கனிவாயாள்—வையமெலாம்

உ0அ. ஆறு பிறை - ஆறும் பிறையும். நூறு விழி - அழித்த கண். ஆறுபிறை, நூறுகண்க ளென்பன இதில் வேறொரு பொருள்.

உக0. ஆயன் - திருமால்; வேடன் - கண்ணப்பர். ஆயனை வேடனுடைய தம்பியாகச் செய்ததென்பது இதிற் குறிப்புப்பொருள்; கண் சாத்தியது இங்கே அறியத்தக்கது.

உகஉ. தோற்றான் - தோல்வியுற்றான், கண்ணுக்குப் புலப்படான்.

உகங. தரு பிறந்த-கற்பகம் தங்கப் பெற்ற.

உகச. அண்ட மனையும் - அண்டமாகிய மனையும்.

உகரு. அன்பு இறையளவும் நீங்காத.

உகஎ. கோன்கன்று - மனுநீதிச் சோழருடைய குமாரராகிய வீதிவிடங்கர்.



உககூ. ஈன்றவரை யீன்றகுறி யீதென்னப் பச்சுடம்பு
தோன்றிய வேய்போலுந் தோளினாள்—ஆன்றபுகழ்ச்

உஉ0. சேதுவினுஞ் செம்பொன் வரையினுஞ் சேர்கந்த
மாதனங்கள் போலும் வனமுலையாள்—ஓதியபொன்

உஉக. னாடமருங் கங்கை நதிமுடித்தார் கைப்பிடித்த
மாடமரு கம்போன் மருங்குலாள்—நாடு

உஉஉ. பதிக்கு மகத்தியனார் வாவிவந்த வேழத்
துதிக்கை யனைய துடையாள்—பதுக்கொன்றைப

உஉங. பைந்தா மரைவணங்கிப் பச்சைமா லர்ச்சித்த
செந்தா மரையனைய சீறடியாள்—முந்தியதோர்

உஉச. தென்னிலங்கை நாபியாச் சேதுவரோ மாவலியாப்
பொன்னிலங்கு நற்சிகரம் பூண்முலையாத்—தன்னையுணர்

உஉரு. மாதவனும் வேதவன மாமுனிவன் வைப்பித்த
வேதவனத் தண்டலையென் கூந்தலா—போதாழிப்

உஉசு. பீடுறுகட் டேவையெனும் பெண்கொடியுந் தானுமா
வாடுதல்போற் பொற்பந் தடிக்குங்கால்—நீடாழி

உஉஎ. திண்கயி லாசமனஞ் செய்வோன் பணிந்தேத்தும்
வண்கயி லாச மனமுவந்தோன்—கண்கள்

உஉஅ. ககுபங் கடக்குமொரு காதற் கரும்பின்
மிகுபங் கடக்குதிரு மெய்யான்—தகைசீர்

உஉகூ. பராம நாதனையும் பாலித் தருள்வோன்
வராம நாதன் மகிழ்ந்து—சுரர்சூழ

உககூ. ஈன்றவர் - சிவபெருமான்; அவர் திருநெல்வேலியில் மூங்கிலடியில் முளைத்தருளினமை இங்கே அறிதற்பாலது.

உஉ0. மேருவின் தென்பாலும் கந்தமாதனமென்று ஒருமலையுண்டு; (கந்த.. அண்டகோச. நக.)

உஉக. நாடு அமரும். மாடமருகம் - பெரிய உடுக்கை.

உஉஉ. அகத்தியனார் வாவி - அகத்திய தீர்த்தம்; முன்புள்ள கஎ-ம் கண்ணிக்குறிப்பைப் பார்க்க.

உஉங. பைந்தாமரை - பசியமாலையுடைய சிவபெருமானை.

உஉரு. வேதவனத்தண்டலை - வேதவனமுனிவன் வைப்பித்த சோலை; க00 - ம் கண்ணிக்குறிப்பைப்பார்க்க.

உஉசு. கண் தேவையெனும்.

உஉஎ. திண் கையில் ஆசமனஞ் செய்வோன் - அகத்தியமுனிவர்.

உஉஅ. ககுபம் - திசை. காதற் கரும்பு - உமாதேவியார். மிகு பங்கு அடக்கும்.

உஉகூ. பராம் அநாதனையும்.

*

௨௩௦. ஆதித்த னம்பொற் குடைமேற் குடையாகச்
சோதித்தன் பொற்றேரிற் றோன்றுதலும்—யோதும்

௨௩௧. பரவைவயிரச் சின்ன பரிசதியா தென்ன
வுரவை யிரச்சின்ன மூத—விரைவெழுந்து

௨௩௨. தென்ன னடையாளஞ் சேருந் திருவிழியா
ளன்ன நடையா ளமலன்றேர்—முன்னின்

௨௩௩. றொளியன்னங் காணாத வொண்முடியை மற்றோர்
களியன்னங் கண்டுபோற் கண்டாள்—கிளிதான்

௨௩௪. திடமான்முன் காணாத் திருவடியை மற்றோர்
மடமா னெதிர்காணு மாபோல்—நடமாடும்

௨௩௫. பொன்னடியுங் கண்டு புகழ்ந்தா டிருவழகை
முன்னடியி னின்று முகந்துண்டாள்—பின்னை

௨௩௬. மதனம் படாதோ வரிக்குயிலி னோசை
விதனம் படாதோ விளயபீர்—முதனம்பி

௨௩௭. வந்தவளை முன்ன பதுறையினீர் போய்விற்ற
தந்த வளையுமக்குத் தந்தவளை—நொந்தவளை

௨௩௮. நாணுங் கலையு நலனுங் கலனுமருந்
தூணுங் கவர்ந்ததுமக் கொண்ணுமோ—வேணுமால்

௨௩௯. அந்தத் திருவணையி லன்பா விருக்கின்றீ
ரிந்தத் திருவணையி லீனமோ—சிந்தை

௨௪௦. திகைத்தகன்று போல்வாளைச் சேர்ந்தருளீ ரென்ன
நகைத்தகன்று தேர்மே னடந்தான்—பகைத்திருந்த

௨௪௧. சேக்கை யகன்ற செழுங்குயின் மீண்டுவரிற்
காக்கையுங் காக்கை கருதுமோ—தாக்குங்

௨௩௧. பரவை இரைச்சு - கடல் முழக்கம். வயிரச்சின்னம் - வயிரமூத்திய சின்னம்.

௨௩௨. பாண்டியனுடைய அடையாளம் - மீன்.

௨௩௩. ஒளியன்னம் - பிரமதேவராகிய அன்னப்புள்.

௨௩௪. திடமால்.

௨௩௫. மூன்னடி - அடிமுன்.

௨௩௬. மதன் அம்பு அடாதோ. விதனம் - வியஸனம்.

௨௩௭. 'வந்தவள்' என்றது, தன்னைப் படர்க்கையாக்கி. சந்த வளை - தந்தத்தாலாகிய வளையல்கள்.

௨௩௯. இந்தத்திருவானவன் அணைந்தால்.

௨௪௦. திகைத்த கன்று - திசைப்புற்ற மான்கன்று.

௨௪௧. காக்கை கருதுமோ - காத்தலை நிலையுமோ.



௨௪௨. கணைமேற் கிடத்தக் கருதுவாள் போற்பூ
வணைமேற் கிடத்தினா ளன்னை—கணையால்

மடந்தை.

௨௪௩. தொடர்ந்துபொருங் காமனுக்குத் தோட்டுணையாய் வந்த
மடந்தை யொருத்திமலர் மங்கை—அடைந்தவருக்

௨௪௪. கினிவிளைந்தருவா மேகாம் பரநாதர்
மாவினில் வாழும் வரிக்குயில்—மூவா

௨௪௫. திடைமருதூர் மேயார்க் கினிய நிழலாந்
தடமருதில் வாழுமிளந் தத்தை—பொடியாடிப்

௨௪௬. பால்வரையா மேனிப் பரமன் வரையான
மால்வரையில் வாழு மடமஞ்ஞை—நால்வரையாள்

௨௪௭. கூட்டற் குருமணிதன் கூட முளைத்தெழுந்த
வாட்டற் கடம்பி னமர்பூவை—நாடும்

௨௪௮. இணையிலி தேவை யிராம னடைத்த
வணையில் விளையாடு மன்னம்—பணியவெழில்

௨௪௯. காட்டுஞ் செருத்தணியிற் காலத் தலர்குவளை
யேட்டி லிருக்கு மிளஞ்சுரும்பு—நாட்டும்

௨௫௦. மகோததி முத்த மணிப்பவளத் தோடு
சகோதர வாஞ்சை தரித்து—முகோதய

௨௫௧. மாமதியில் வந்து மணியித மூக்கருகே
தாமதியா நின்றனைய தந்தத்தாள்—காமனையாள்

௨௫௨. அத்த னுமையவளுக் காக விரட்டைமுடி
வைத்த தனைய வனமுலையாள்—மத்தகசம்

௨௫௩. என்னப் படைத்த விளம்பிடி யானைநடை
தன்னைப் பழித்த தனிநடையாள்—துன்னும்

௨௪௪ - ௨௪௫. மாங்குயில், மருதக்கிள்ளை யென்பன வழக்கு.

௨௪௬. பால் வரையா - வெண்மை நீங்காத. மால்வரை - கைலை. மயில், குறிஞ்சிக்கருப்பொருள்.

௨௪௭. ஆடற் கடம்பு - வெற்றியையுடைய கடம்பமரம். பூவை - நாகணவாய்ப்புள்.

௨௪௯. செருத்தணி - திருத்தணிகைமலை. அம்மலையிலுள்ள ஒரு சுனையில், காலை உச்சி மாலை ஆகிய மூன்று காலங்களிலும் கருங்குவளை மலருமென்பர்; (கந்தபு. வள்ளியம்மை. ௨௨௨.)

௨௫௧. தாமதித்தல் - தங்கல்.

உருச. அறல்போலுங் கூந்தற் கடர்சோலை நல்குந்
திறைபோன் மலர்கொய்யச் சென்றாள்—நறைகள்

உருரு. துடிபோலு மெல்லிடையாள் சொல்லுக்குத் தோற்றுக்
குடிபோவ தென்னக் குதிக்கப்—பிடிபோல்வார்

உருசு. பின்னின் றிரங்கப் பிணைமலர் கொய்யுங்காற்
பொன்னின்ற வானுலகும் பூவுலகும்—முன்னின்

உருஎ. றொளிர்மணித் தேரேறி யும்பர் பெருமான்
கிளர்மணி வீதிவரல் கேட்டாள்—தளரும்

உருஅ. இடையென்று மெண்ணா ளிறுக்கியுடுத் தானு
முடையென்று நில்லாதென் றோடாள்—தடையொன்றும்

உருகூ. இல்லா தவர்போ லெழுந்தா ளிரண்டிருளும்
வெல்லா தவர்போலு மெய்வடிவும்—சொல்லாத

உசூ0. சந்திர சேகரமுந் தானு முமையவளு
மிந்திர சாப மெனுமழகும்—அந்தக்

உசூக. கரும்புயல் வாழ்கால கண்டமுங் கங்கை
விரும்பி வளர்சடில மின்னும்—இரும்புவனி

உசூஉ. ஆதார மெய்யெல்லா மாகாய மென்பதனைக்
காதா லறிந்தவள்கண் ணாலறிந்தாள்—சோதி

உசூங. இழந்தா ளொழுகடலி னெண்மடங்கு காம
முழந்தாள் சிலநின் றுரைத்தாள்—தழைந்தலர்ந்த

உசூச. குற்றமறு கொன்றைக் குழகன் கடைக்கணித்து
மற்றமறு கொன்றை மருவினான்—பொற்றபொறிக்

உசூரு. கோலத்து வண்டுதினங் கூட்டுண்ட பூமாலை
போலத் துவண்டு பொருமினாள்—சோலை

உசூசு. வருகாக வன்புள் வளர்த்தகுயில் கூவச்
சருகாக மெய்புலர்ந்து சாய்ந்தாள்—அருகே

உருஅ. உடையானது என்றும் நில்லாது.

உருகூ. இரண்டிருள் - அகவிருள், புறவிருள்.

உசூக. வாழ், உவமவுருபு.

உருகூ - உசூஉ. ஸ்வாமியின் திருமேனியை ஆகாயமென்றதற்கேற்பச் சூரியன் முதலிய பொருள்கள் இவற்றிற் கூறப்பெற்றிருத்தல் காண்க.

உசூசு. காக வன்புள் - காக்கை.



உசூஎ. மிகுந்த வரைமுலையார் மேவ விழியுட்
புகுந்தவரை யுட்கொண்டு போனாள்—தகுந்தவரைச்

## அரிவை.

உசூஅ. சாதக ராக்கியந்தச் சாதகரைத் தான்வளர்த்த
மாதக ராக்க வருமரிவை—தாதுநிறை

உசூகூ. போது நறைக்கமலப் போதுபங்க முற்றதென்று
சேதுவில் வாழுந் திருமடந்தை—வேதத்

உஎ0. திறைவன் மணிநாவை யெச்சிலிது வென்று
மறைபயில் தேவையில்வாழ் வாணி—குறைதோன்ற

உஎக. வாசவன் மேனி வடுப்பட்ட தென்றிரா
மேசுரம் வாழவந்த விந்த்ராணி—மாசிலா

உஎஉ. அத்தனுக் கோடி யருந்தனுவீந் தோனையகன்
றித்தனுக் கோடிவந்த வின்பரதி—நெய்த்திருண்ட

உஎங. கூந்தற் கருமணலுங் கோவா நகைமுத்துங்
காந்தி மதிமுகமுங் கட்கயலும்—வாய்ந்தகனி

உஎச. மூன்றையும் வென்ற மொழியமுத முங்காட்டித்
தோன்று மலையைத் துலக்குவாள்—தோன்றாத்

உஎரு. திறலிக்கு வேளுக்குச் செங்கோல் கொடுப்பாள்
விறலிக்கு நோக்கருளும் வேளை—மறலிக்குக்

உஎசு. கண்ணான் மகுடங் கவிக்குங் கனிமொழியைப்
பண்ணார் விறலி பணிந்திருந்தாள்—எண்ணரிய

உஎஎ. மூவேழ் நரம்பு முறையே குரன்முதலாப்
பாவே ழிசையும் பயில்வித்துப்—பூவை

உசூஎ. மிகுந்தவரை - மிக்கமலை. புகுந்தவர் - இராமநாதர். தகும் தவரை - தக்க தவமுடையோரை.

உசூஅ. சாதகர் - உதவிசெய்பவர்கள். மா தகர் - பெரிய ஆட்டுக்கிடாய்.

உசூகூ. போதும் நறை - போதிய தேனையுடைய.

உஎ0. இறைவன் - பிரமர்.

உஎஉ. அத்தனுக்கு - சிவபெருமானுக்கு. ஓடி அரிய உடம்பிழந்தோன் - மன்மதன்.

உஎச. 'தோன்றும் அலையைத் துலக்குவாள்' என்றதனால், அரிவையைத் திருமகளென்றபடி.

உஎங - உஎச. இவற்றிற் கடலிலுள்ள பொருள்களையே உவமைகூறி யிருத்தல் காண்க.

உஎரு. திறல் இக்கு வேளுக்கு - மன்மதனுக்கு.

உஎஎ. மூவேழ் நரம்பு - இருபத்தொரு நரம்பில்; பேரியாழுக்கு நரம்பு, உக.

௩௦௧. மஞ்சைப் பொருத மலர்க்குழற்கு மால்கொண்டார்
நெஞ்சைப் பொருததிரு நெற்றிக்குங் — கஞ்சந்

௩௦௨. தகுமான நீங்கவென்ற தாளுக்கு மன்று
வெகுமானஞ் செய்யும் விதம்போல் — நகையாய்த்

௩௦௩. துலங்காரஞ் சீதேவி சுட்டிசிலம் பாதி
யலங்காரஞ் செய்யு மளவில் — இலங்கிய

௩௦௪. கூவிரியால் விண்விரியக் கூரா ழிகள்பதிந்து
பாவிரி சேடன் படாவிரியத் — தேவருல

௩௦௫. கச்சாணி யந்தே ரணிகுடைக்கு மப்பாலே
கைச்சா ணிருசாணே காணுமென — முச்சகமுங்

௩௦௬. கோத்த மகமேருக் கூண்டனைய தேர்மீதில்
வாய்த்தமக தேவன் வரல்கேட்டாள் — பூத்த

௩௦௭. கமலங் கதிரோனைக் கண்டலரு மாறே
அமலன் வரல்கேட் டலர்ந்தாள் — உமைபாகன்

௩௦௮. புந்தியில் வாழப் புறந்தேடு மாந்தரைப்போல்
வந்தியர் சூழ மறுகடைந்தாள் — சந்தித்தாள்

௩௦௯. சங்கங் கடைந்தணியுந் தாழ்குழைப் பெம்மானை
அங்கங் கடைந்தா ரயனிற்ப — வெங்கஞ்சன்

௩௧௦. காட்டு மலரைவென்ற கண்ணன் கரமலர்
சூட்டு மலரைத் தொழுதிரந்தாள் — எட்டையுறும்

௩௧௧. அன்ன மறியாம லாகமெலா மென்பானீர்
பின்னைமால் வேதனையும் பெற்றீரே — முன்னியபே

---

௩௦௧ - ௩௦௩. தகுமானம் - தக்க பெருமை. கஞ்சம் நீங்க. நகையாய் - பல்லையொத்து. ஆரம் - முத்த மாலை. சீதேவியென்பது தலையணிகளுள் ஒன்று.

௩௦௦ - ௩௦௩. தனத்திற்கு ஆரம், கூந்தற்குச் சீதேவி, நெற்றிக்குச் சுட்டி.

௩௦௪. கூவிரி - தேர்க்கொடிஞ்சி. பாவிரி - பாக்களில் விரிந்த.

௩௦௮. வந்தியர் - புகழ்ந்துபாடுவோர்.

௩௦௯. கஞ்சன் - கம்ஸன்.

௩௧௦. காட்டு மலரை - காட்டியமலர்களை. காமலர், எழுவாய். எட்டை - இளைப்பு.

௩௧௧. அன்னம் - அன்னப்பறவை, உணவிற்குரிய அன்னம். மால் வேதனைபெற்றீர் - திருமாலையும்பிரமதேவரையும் பெற்றீர்; உணவில்லாமையால் இளைத்தீர், மயக்கத்தையும் வேதனையையு மடைந்தீ ரென்பது மற்றொரு பொருள்.



௩௧௨. ராசை யுடையீரே யண்டருக்குத் தோற்றீரே
மாசு மதியைவெல்ல மாட்டீரே — யீசரே

௩௧௩. தென்றலோ வம்ம திருமேனி தீண்டிவிடு
மென்றலோ வெம்பணியெ லாமணிந்தீர் — வென்றி

௩௧௪. மதனை யெரித்தீரோ மாதிடஞ்சேர் காம
மதனை யெரித்திடவொண் ணாதோ — விதனஞ்சேர்

௩௧௫. கொள்ளை விடமாங் குழலோசைக் காவேய்க்குப்
பிள்ளை புகுந்து பிழைத்தீரே — வெள்ளை

௩௧௬. அயில்வாயி லுங்கொடிதென் றல்லவோ கூவுங்
குயில்வாய் தனைநெரித்தீர் கூறீர் — கயல்பாய்ந்

௩௧௭. திமைக்குங் கடலேழி லேகாந்த ராமன்
அமைக்குங் கடல்பார்த் தமர்ந்தீர் — உமைக்கொம்

௩௧௮. பிசையு மொருபா லிராதுவிடை யேறி
ரசையுமணி யோசைக்கா வன்றோ — திசைதோறு

௩௧௯. மாலைப் பொழுதடரும் வந்திப் பொழுதென்றே
காலைப் பொழுதையொரு கண்வைத்தீர் — ஞாலத்தில்

௩௨௦. நம்ம விரக நமக்கிவ்வா றாமாகி
லெம்ம விரகமெமை யென்செய்யா — திம்மெனவந்

௩௨௧. தாளீர் புயத்தி லணையீர் படுந்துயரங்
கேளீ ரெனநெருங்கிக் கிட்டுதலும் — வேள்போருந்

௩௨௨. தேராமல் மாலைய நள் செய்யாமற் றேரானுந்
தாரானு நானென்றே தானகன்றான் — ஊரறிய

---

௩௧௨. ஆசையுடையீர் - திக்காகிய ஆடையையுடையீர்; இச்சையுடையீர். அண்டருக்குத்தோற்றீர் - தேவருக்குப் புலப்படீர்; பகைவருக்குத் தோல்வியுற்றீர்.

௩௧௩. என்றலோ - என்றன்றோ; அலோ - அன்றோவின்மரூஉ. பணி - பாம்பு; அது காற்றைப்புசிப்பது.

௩௧௪. ‘மாது’ எனத் தன்னைப் படர்க்கையாற் கூறினாள்.

௩௧௫. ‘வேய்க்குப்பிள்ளைபுகுந்து’ என்றது, திருநெல்வேலியில் மூங்கிலடியில் முளைத்ததனை; இதனால், சிவபெருமான் வேயின்றமுத்தென்று பாராட்டப்பெறுவர்.

௩௧௭. ஏகாந்தராமன் அமைக்கும் கடல் - இராமர் ஒலியை அடக்கிய கடல்; அது ஏகாந்தராமநகரத்தைச்சார்ந்தது; ௧௪-ம் கண்ணிக்குறிப்பைப் பார்க்க.

௩௧௮. அசையும் மணி - விடையின் கழுத்திற் கட்டிய மணி.

௩௧௯. காலைப் பொழுது - சூரியன்.

௩௨௨. தேரான் - தேரை உடையான், அறியான். தாரான் - மாலையை யுடையான், கொடான்.

௩௨௩. அன்றுந் தனித்தா ளிலம்புகுந்தா ளவ்வாறே
யின்றுந் தனித்தா ளிலம்புகுந்தாள்—நன்றென்று

## பேரிளம்பெண்

௩௨௪. கைத்தகாய் தின்று கனியை முனிவார்தம்
பித்தகல வந்துதித்த பேரிளம்பெண்—பொய்த்த

௩௨௫. வலலா விரும்பா சுரும்பை விரும்புஞ்
சிலலா மயறீர்க்குந் தெய்வம்—கலைமதியை

௩௨௬. விண்கூடு பாம்பருந்தி வெண்பிறையைத் தீண்டாமை
கண்கூடாத் தன்மேன்மை காட்டுவாள்—பண்கூட

௩௨௭. மூவரும் பாடு முதுதமி ழின்பத்தால்
மேவநந் தண்பருவ மேம்படுவாள்—காவிரிவாய்ச்

௩௨௮. சென்று திருவானைக் காவிற் சிவனைமதக்
குன்று வணங்கக் குனிந்ததோ—நின்றநிலை

௩௨௯. விட்டுத் திசைக்களிற்றை வெல்லவென்று காஞ்சிபுர
மட்டு மொருபயணம் வந்ததோ—இட்டிடைதான்

௩௩௦. என்று முறியா திருக்கத் தலைகீழா
நின்று தவஞ்செய்யு நீர்மையோ—வொன்றேடொன்

௩௩௧. றெய்யா வழக்கிட் டெதிரே மறிப்பிருந்து
பொய்யா நடுநிலையிற் போவதோ—கையாற்

௩௩௨. றகைந்த வடிக்கனத்தைத் தத்த முகங்கள்
பகுந்தெடுத்துக் கொண்ட படியோ—மிகுந்துவரும்

௩௩௩. தொண்டருக்கா மூர்க்கர் துணிந்தாடுஞ் சூதுகள்போய்ப்
பண்டு வயிற்றிற் படுப்பதோ—விண்டு

௩௩௪. புகழ்ந்திடும் போதுநின்ற போர்மா ருதிபோல்
முகங்கவிழ்ந்த கொம்மை முலையாள்—மகிழ்ந்துவரும்

௩௨௫. கலைமதி - கசு - கலைகளை யுடைய மதி; பூரணசந்திரன்.
௩௨௬. கண்கூடு - பிரத்தியக்ஷம்.
௩௨௭. முதுதமிழ் - தேவாரங்கள்.
௩௨௮. மதக்குன்று - யானை.
௩௨௯. காஞ்சிபுரம் - காஞ்சிநகரம், காஞ்சியென்னும் ஆபரணத்தையணிந்த இடை.

௩௩௧. எய்யா - இளையாத. மறிப்பு இருந்து - மறியலிருந்து. நடுநிலை - இடையுள்ள இடம், நடுவுநிலைமை.

௩௩௨. பகுந்து - பங்கிட்டு.
௩௩௩. மூர்க்கர் - மூர்க்கநாயனார். விண்டு - இராமர்.



௩௩௫. வேட்டுணை யாடவரை வென்று சயங்கொள்ளத்
தோட்டுணை தேடுந் துணைக்குழையாள்—நாட்டுறையும்

௩௩௬. மாந்தரையுந் தேவரையும் வாளமர் செய்வதற்குக்
கூந்தலரண் போய்ப்பார்க்குங் கூர்விழியாள்—வாய்ந்த

௩௩௭. பளிக்கு நிலத்தும் பதித்திடுகண் ணாடி
விளக்குமொளிப்பசும்பொன் வீட்டும்—ஒளித்தொளித்துப்

௩௩௮. பூவைய ரன்பு பொருந்தவிளை யாடுங்கால்
தேவை யரன்பவனி செப்பினர்—பாவை

௩௩௯. பழுதாதல் கூறுத பண்டை மறைபோ
லெழுதாத வேற்கண் ணிணையும்—எழுபிறவி

௩௪௦. வேலை யகன்று விடுஞ்சைவர் போன்றுதிரு
மாலை யகன்ற மலர்க்குழலும்—சீலமுறும்

௩௪௧. முன்னவரை வெல்லு முனைப்படைவேள் போற்கரும்பு
தன்னை வரையாத் தனதடமும்—மன்னினாள்

௩௪௨. என்ன விநகணெழுதாண் மலர்முடியாள்
கன்ன லெழுதாள் கடிதெழுந்தாள்—அன்னங்கள்

௩௪௩. பின்பதறி வாளைவிட்டுப் பேர்ந்தோடச் சென்றாளு
ளன்பதறி வானை யடிபணிந்தாள்—வன்பிலங்கை

௩௪௪. ஏற்றமுறு வேந்து மிருவர் முயலகருங்
கூற்றமு மஞ்சுங் குரைகழலும்—தோற்றுபுலி

௩௪௫. தான்முக னஞ்சு தளரும் திருவரையு
நான்முக னஞ்சு நகநுனியும்—கூன்முதுகுக்

௩௩௫. வேள் துணை - மன்மதனையொத்த.
௩௩௬. கூந்தல் அரண் - கூந்தலாகிய காட்டரண்.
௩௩௮. தேவை அரன் - இராமநாதர்.
௩௩௯. எழுதாத - மை எழுதப்படாத.
௩௪௦. திருமாலை - விஷ்ணுவை, அழகிய பூமாலை.
௩௪௧. வரையா - எழுதாத, நீக்காத.
௩௪௨. கன்னல் - கரும்பு; தொய்யில்.

௩௩௯ - ௩௪௨. கண்ணிணைகளில் மையெழுதாள், குழலில் மலர் முடியாள், தனதடத்திற் கன்னலெழுதாளாய்.

௩௪௩. பின்பதறி. அன்பது அறிவானை.

௩௪௪. வேந்து - இராவணன், இருவர் முயலகர் - முயலகனென்னும் அசுரன், முயலை அகத்தேயுடைய சந்திரன்.

௩௪௫. முகன் நஞ்சு தளரும் - முகம் நைந்து தளருதற்குக் காரணமான.

௫௪௬. கச்சபமும் வெள்ளைக் கருமாவும் பச்சைநிற
மச்சமு மச்சமுறு மார்பிடமும்—உச்சமுறும்

௫௪௭. முப்புர மஞ்ச முறுவலுங் காமவே
ளப்புர மஞ்ச முனிநுதலு—மொப்புரையா

௫௪௮. மோகப் பணியு முதிர்பணியும் பாரிருளு
மாகத் திருளு மடர்விழியும்—லோகம்

௫௪௯. முடிச்சிட்ட நாளின் முகுந்தனயன் சென்னி
முடிச்சிட்ட மாலை முடியுந்—தடிச்சிட்ட

௫௫௦. விண்ணவ ரஞ்சுமந்த வெண்பொடிப் பூச்சுமன்ப
ரெண்ண வரஞ்சுமந்த விண்ணருளுங்—கண்ணாரக்

௫௫௧. காண்டோறுங் காண்டோறுங் காயங் களிப்பெய்திப்
பூண்டோறும் பூண்டோறும் பூட்டவிழ்ந்தாள்—ஆண்டவரே

௫௫௨. மாற னடித்த மதுரையிலே யஞ்சாமல்
மாற னடித்த மதம்பாரீர்—நீறணியும்

௫௫௩. வெட்ட வெளியாரா மேனியா ரோரிடையன்
வெட்ட வெளியாராய் விட்டாரோ—முட்டவருள்

௫௫௪. தங்கலா லேறு தணவார்க்குச் சாக்கியனார்
தங்கலா லேறு சகித்ததோ—இங்கிவர்க்குக்

---

௫௪௬. வெள்ளைக்கருமா - சுவேதவராகம்.

௫௪௭. அப்புரம் - அந்த உடம்பு; அழகிய உடம்பும், அம்பினது உரமுமாம்; புரம் - உடம்பு.

௫௪௮. மோகப்பணி - மோகமாகிய பாம்பு. முதிர்பணி - முதிர்ந்த இராகுகேதுக்களாகிய பாம்புகள். பாரிருள் - புறவிருள். ஆகத்திருள் - அகவிருள். விழிகள் சோம சூரியாக்கினிகளாதலின், பணி முதலியவை அஞ்சுவனவாயின.

௫௪௯. முடிச்சிட்டநாள்=முடித்திட்டநாள் - அழித்த காலம். முடிச்சிட்ட=முடித்திட்ட-கட்டிய. தடிச்சு - தடித்து. இட்டம் - இஷ்டம்.

௫௫௦. விண்ணவர் அஞ்சும். எண்ண வரம் சுமந்த.

௫௫௧. ஆண்டவர் - சோமசுந்தரக்கடவுள்.

௫௫௨. மாற நடித்த மதுரை. மாறன் அடித்த மதம் - பாண்டியன் அடித்த செருக்கு.

௫௫௩. வெட்ட வெளியாராம் மேனியாரெனவும் வெட்ட எளியாராயெனவும் பிரிக்க; "வேயீன்ற முத்தர்தமை வெட்டினனேயிடையன்" என்பது இரட்டையர் பாடல். இடையன் வெட்டியது திருநெல்வேலியில் நிகழ்ந்த செய்தி.

௫௫௪. ஏறு தணவார்க்கு - இடபத்தை நீங்காதவர்க்கு. சாக்கியனார் தம் கல்லால் எறு.



௫௫௫ கண்ணிடந் தப்புமெனக் காலா லுதைத்தொருவன்
கண்ணிடந் தப்புவதுங் காதலோ—பெண்ணமுதம்

௫௫௬. அங்கிதஞ் செய்ததுபோ லங்கைவளை யால்முலையா
லங்கிதஞ் செய்த தடுக்குமோ—இங்கிதந்தான்

௫௫௭. என்னென் றுளைந்தா ளிறைவர் திருமேனி
பொன்னென்றல் பூவென்றல் பொய்யென்றாள்—பின்னை [ன்றுங்

௫௫௮. கூறத் தரமன் றெனக்குழைந்தாள் கொன்றையின்மே
லாறத் தரமன்றென் னாசையென்றாள்—மாறற்ற

௫௫௯ அம்புயத்தாள் போல்வா ளருளுமழ குங்கண்டு
செம்புயத்தாள் மாலை சிறிதளித்து—நம்பெருமான்

௫௬௦ பாரிறைவ னும்பர் பதியிறைவன் றென்றேவை
யூரிறைவன் போந்தா னுலா.

## வாழி.

சேது நகர்வாழி தீர்த்தங்கள் வாழிகந்த
மாதனம் வாழிபர மன்வாழி—காதலித்தாய
வாழி சிவசமயம் வாழிதலத் தார்வாழி
வாழிமனு வேந்தன் வளம்.

## தேவையுலாமுற்றிற்று.

இராமநாதர் திருவடித் தாமரைகள் துணை.

---

௫௫௫. கண் இடம் தப்புமென. ஒருவன் - கண்ணப்பநாயனார். கண் இடந்து அப்புவதும். பெண்ணமுதம் - உமாதேவியார்.

௫௫௬. அங்கு இதம் செய்தது போல். அங்கிதம் செய்தது - அடையாளஞ்செய்தது.

௫௫௭ 'என்னென்றுணைந்தாள் என்றும் பாடம்.

௫௫௯. செம்புயத்து ஆள் மாலை.

இராமநாதர் துணை.

ஸ்ரீ :

கடவுள் துணை.

திருத்தக்கதேவர்

இயற்றிய

# நரிவிருத்தம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச்

"செந்தமிழ்"ப் பத்திராசிரியர்

## மு. இராகவையங்காரால்

அரும்பதவுரை யெழுதி வெளியிடப்பெற்றது.

"செந்தமிழ்" ப்பிரசுரம்—௨௦.

மதுரை :

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1907.

# நரிவிருத்தம்

## முகவுரை

நரிவிருத்தம் என்பது நரியைப்பற்றிய பாடல்களாலானதொரு நூல் எனப்பொருள் படும். விருத்தம்-யாப்பு. அன்றி, விருத்தம் என்பதற்கு விர்த்தாந்தம் அல்லது கதை யென்று பொருள்கொண்டு நரியின் கதையினைக் கூறும் நூல் எனக் கொள்ளினும், பொருந்தும். இந்நூலிற் கூறப்படும் நரிக்கதையாவது:—வேடனொருவன் மலைப்பக்கத்தே தினைப்புனத்தை அழித்துநின்ற யானையைக் கொல்லவேண்டி, ஒருபுற்றின்மேல் ஏறிநின்று வில்லைவளைத்து அதன் மஸ்தகத்தில் அம்பையெய்ய, அதுபாய்ந்ததால் யானை மிக்கசினத்துடன் எதிர்த்து, நெற்றியிலுருவிய அம்புடன் அப்புற்றைத்தாக்கித் தானும்வீழ்ந்திறந்தது. அவ்யானையின் தாக்கால் அப்புற்றிலிருந்த நாகம் வெளியேறிச்சினந்து அங்குநின்ற வேடனைச் சிறிக்கடிக்கவும், வேடனும் வெகுண்டு தன் வாளையுருவி அந்த நாகத்தை இருதுண்டமாகச் சேதித்துத் தானும் இறந்தான். இவ்வாறு தினைப்புனத்தையழித்த யானையும் யானையையெய்த வேடனும் வேடனைக்கடித்தபாம்பும் ஒருசேர இறந்துகிடத்தலைப் பக்கத்தே கண்டிருந்த ஒருநரி மிக்க மகிழ்ச்சியுடன் "ஆ! நமக்கு நிரம்பவும் உணவு குவிந்துவிட்டன; யானை ஆறுமாதத்துக்கும் வேடன் ஏழுநாட்கும் நாகம்ஒருநாட்கும் ஆகாரமாகும்" என்று பலவாறு நினைந்து அப்பிணங்களின் அருகேவந்து, முதலில் வீழ்ந்துகிடக்கும் வேடன்கைவில்லின் குதைவாரைக்கடித்தின்னத் தொடங்கவும் அவ்வாரறுந்துபோக வில்லு விசையாக நிமிர்ந்து, கடித்த நரியின் வாய்க்குட் கோத்துக் கொண்டமையால் நரியும் விரைவிற் செத்தது. இக்கதைபோன்றதே உலகவாழ்வும்" என்பது. இச்சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு பலநீதிகளும் உவமைக்கதைகளும் இந்நூலுட் கூறப்படுகின்றன. இந்நூல் இயற்றியவர் "வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய, பொய்யில் வான்

கதை பொதிந்த செந்தமிழ்”*க்காப்பியமென்று சிறப்பிக்கப்படும்
சீவகசிந்தாமணியை இயற்றியவராகிய திருத்தக்கதேவர் என்னும்
புலவர் பெருமானேயாவர். இந்நரிவிருத்தத்தைத் தேவர்பாடியதன்
வரலாறுவது:—†திருத்தக்கதேவர் சீவகன் சரித்திரத்தைப் பெருங்
காப்பியமாகப் பாடத்துணிந்து, தமதெண்ணத்தைத் தம்மாசிரியர்
பாற்சென்று விண்ணப்பிக்க, ஆசிரியரும் அவ்வாறுபாடுவதிற் றம்
மாணுக்கர் வல்லுநராயிருத்தலை நன்குணர்ந்தவராயினும், மாணுக்கர்
கருத்தை அளந்தறிய ஆலோசித்திருக்கும் பொழுது; அவ்விருவர்க்
குமிடையே ஒருநரியானது ஓட, அதனைக்கண்ட ஆசிரியர் மாணுக்க
ரை நோக்கி “இந்நரிச்சாதித் தன்மையை ஆதாரமாகக் கொண்டு
உமக்குத்தோற்றியவாறே ஒரு சிறியநூல் இயற்றுதிர்” என்றுகூற,
திருத்தக்கதேவரும் அவ்வாணைப்படியேநரியை ஆதாரமாகக்கொண்டு
யாக்கைநிலையாமை செல்வநிலையாமை முதலியவைகளெல்லாம் வெள்
ளிடை மலைபோற் றெள்ளிதிற் புலப்படும் வண்ணம் விரைவில்
“நரிவிருத்தம்.” என்னும் ஒரு நூலியற்றி ஆசிரியர்க்குக் காட்டவும்
ஆசிரியர் பெரிதும் வியப்புற்றுச் சிந்தாமணியைப் பாடும்படி கட்ட
ளையிட்டனர்”—என்பது. இவ்வாறு திருத்தக்கதேவரால் நரிவிஷ
யத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட கதை அவராற் புனைந்துரைத்
ததன்றிப் பழமையானதாகவே தெரிகின்றது. வடமொழியிலுள்ள
பழைய நூலாகிய ஹிதோபதேசத்தே ‡ மித்திரலாபமென்னும் பகு
தியில் வியாத மிருக சூகர சர்ப்ப சிருகாலர்கள் கதை என்பதொன்று
கூறப்பட்டுளது. (வேடன் மான் பன்றி பாம்பு நரி-இவற்றின்கதை
என்பது பொருள்) இதனுட்கண்ட வரலாறு நரிவிருத்தக்கதையுடன்
பெரும்பாகம் ஒத்துச் சிறுபான்மையே வேறுபாடு கொண்டுளது.
இதோபதேசத்துக் கண்ட வரலாறுவது:—பைரவன் என்னும்
வேடன் ஒருமானை எய்துகொன்று அதனையெடுத்துக் கொண்டு
வரும் வழியில் ஒரு பன்றியைக் கண்டு, அதனை அம்பாலெய்ய அது

* நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம்.

† சீவகசிந்தாமணிப் பதிப்பிலுள்ள திருத்தக்கதேவர் வரலாற்றைக்
காண்க.

‡ இது, வடமொழியினின்று தமிழில் சுன்னாகம் ஸ்ரீ: நாகநாதபண்டி
தரால் மொழிபெயர்க்கப்பட்டு, ஷை யூர் வித்வான் ஸ்ரீ: அ. குமாரசுவாமிப்
பிள்ளையவர்களால் 1886-ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது.



அடி
மிக்க சினத்துடனெதிர்த்து அவ்வேடனது முஷ்கதேசத்தில்
த்து அவனைக்கொன்று தானும் இறந்தது; அவ்விருவரும் காலடித்
து உதறியதனால் இடையில் அகப்பட்ட பாம்பொன்றும் இறந்தது;
அப்போது உணவின் பொருட்டுச் சுற்றித்திரிந்த தீர்க்கராவன் என்
னும் நரி, இறந்துகிடக்கும் மான் வேடன் பாம்பு பன்றி என்ற நான்
கையுங் கண்டு ‘ஆ! எனக்கு இன்றைக்கு நல்லபோஜனங் கிடைத்தி
ருக்கிறது; ஒரு மாசத்துக்கு வேடனுடைய மாமிசம் போதும்;
இரண்டு மாசங்களுக்கு மானும் பன்றியும் போதும்; பாம்பு ஒரு
தினத்துக்குப் போதும்; இப்போது இந்த விற்குதையில் ஒட்
டியிருக்கும் வார்க்கயிற்றை உண்பேன்’ என்று சொல்லி அவ்வா
றே செய்ய, அப்போது வார்க்கயிறு அற்றுப்போக வில்லுவிசையாய்
மேலே நிமிர்ந்து அந்நரியின் நெஞ்சைப்பிளக்க அதனால் அந்தத்தீர்க்
கராவனென்னும் நரி உயிர் விட்டது”—என்பது. இக்கதைக்கும்
நரிவிருத்தக்கதைக்குமுள்ள சிறுவேறுபாடுகள் நோக்கிக்கொள்க.
இக்கதையே, திருத்தக்கதேவரால், பன்றியை யானை என்றது முதலி
ய சிலவிஷயங்கள் மாற்றிப் பாடப்பட்டதென்று நாம் கருத இட
முண்டாகிறது.

இந்நூல் “உவமைக்கதை நீதி நரிவிருத்தம்” என்னும் அடை
யுடன் ஒரு பிரதியிற் காணப்பட்டது. இது, காப்பை நீக்கி ஐம்
பது பாடல்களுடையது. இவற்றுள் நரியின் விருத்தாந்தம் கூறும்
பாடல்கள் எட்டேயாம். ஏனையவற்றில், இக்கதையை ஆதாரமாகக்
கொண்டு நீதிகளும் அந்நீதிகட்கேற்ற பல கதைகளும் கூறப்படுகின்
றன. இந்நூலுள் வருங்கதைகள் பதினெட்டு; அவை முழுதும் ஜைன
மதசம்பந்தமானவைகளேயாம். இந்நூலின் வாக்குச் சிந்தாமணி
வாக்கோடு பெரும்பான்மை ஒத்ததென்னலாம். யாக்கை செல்வங்
களது நிலையாமையும், பொய் கொலை களவு கட்காமம் என்பவற்றால்
அழிந்தவர்கதைகளும் அவையின்றியுயர்ந்தோர் சரிதங்களும், யதி
தர்மசிராவகதர்மங்களது பெருமையும், பிறதர்மவிஷயங்களும் இத
னுள் அடங்கியுள்ளன.

இவ்வாறு,நீதிபுகட்டும் சிலசிறுகதைகளை ஆதாரமாகக்கொண்டு
பல அரிய விஷயங்களைப் பாடுமுறை பழங்காலத்தில் வழங்கியதே

யாம். இந்நரிவிருத்தம்போலவே, கிளிவிருத்தம் எலிவிருத்தம் என்னும் வேறுநூல்களும் ஜைனர்களாற் பாடப்பட்டு வழங்கிவந்தன. இவ்விஷயம், வீரசோழியம், யாப்புப்படலம், உ௧-ம் பாடலுரையில் "குண்டலகேசிவிருத்தம் கிளிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்தமுதலாயுள்ளவற்றிற் கலித்துறைகளும் உளவாம்" என்னும் வாக்கியத்தால்விளங்கும். இவ்விருத்தங்களெல்லாம், திருஞானசம்பந்தமூர்த்திகள் திருநாவுக்கரசரென்னும் சைவசமயாசாரியர் காலத்துக்கு முன்பேசெய்யப்பட்டவை என்பதும், அவர்கள் நாளிலே, ஜைனர்களால் எப்பொழுதும் அவை பாராயணஞ் செய்யப்பட்டுவந்தன என்பதும், முறையே, திருவாலவாய்த்திருப்பதிகத்தும் ஆதிபுராணத்திருக்குறுந்தொகைப் பொதுப்பதிகத்தும் வருகின்ற,

"கூட்டினார்கிளியின்விருத்தமுரைத்ததோரெலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர் தங்களை"

"எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரி யானை யயர்த்துப்போய்
நரிவிருத்தம தாகுவர் நாடரே"

என்னும் பாசுரங்களால் நன்கு தெளியப்படும். இவற்றுள், பின்னதில்வரும் 'நரிவிருத்தமதாகுவர்' என்பது 'நரியின்விருத்தாந்தத்தினையுடையராகுவர்' என்று பொருள் தருவதாயினும், அந்நரிவிருத்தாந்தமும், கிளிவிருத்தம் எலிவிருத்தம்போன்றதோர் நூலினின்றே, அக்காலத்துப் பிரசித்தமாகவழங்கியதென்றும், சுவாமிகளும் அவ்வாறு பிரபலமாயிருந்த நரிவிருத்தத்தின் வழக்கைக்கருதியே அங்ஙனம் பாடினாரென்றும் கொள்ளக்கிடக்கின்றது. எனெனில், உடனொத்த கிளிஎலிவிருத்தங்கள் தேவாரத்துட்பயில்கின்றனவாதலின்.

இந்நரிவிருத்தம் இக்காலத்து அருகிய நூலாயிருப்பினும், இதனுட்கூறப்பட்ட நரிக்கதை இந்நாட்டில் பண்டிதர் பாமரர் எல்லாரும் தெரிந்திருந்ததாகவே வெளியாகிறது. நம்மவரிற் பெரும்பாலார்க்கு, தாம் சிறுபருவத்தே கற்ற,

"கரியொரு திங்க ளாறு கானவன் மூன்று நாளாம்
இருதலைப் புற்று ளாக மின்றுணு மிரையா மென்று



விரிதலை வேடன் கையில் விற்குதை நரம்பைக் கவ்வி
நரியினார் பட்ட பாடு நாளைநாம் படுவோ மன்றே.*

என்னும் நீதிப்பாடல் இன்னும் ஞாபகத்திலிருக்கக்கூடும். இப்பிரசித்தமானபாட்டு, நரிவிருத்தக்கதையின்முடிவையே கூறுவதோடு, அந்நூலில்வரும் "களிறநிதிங்கட்காகும்" என்னும் செய்யுளின் சொற்பொருள்களையும் அநேகமாகக் கொண்டுளது.

இனி, மேற்கூறியவாறு, வீரசோழிய உரைவாக்கியத்தில், கிளி எலிநரிவிருத்தங்களில் கலித்துறைகளும் உளவாம் என்னும்விஷயங் கூறப்படுகிறது. ஆனால், நரிவிருத்தத்தே கலித்துறையொன்றும் காணப்பட்டிலது. இதனால், அக்கலித்துறைகளையுடைய கிளிஎலிவிருத்தங்களோடு, அஃதில்லாத நரிவிருத்தமும் தவறாகச் சேர்க்கப்பட்டதென்றேனும், நரிவிருத்தத்தே கலித்துறைப்பாடல்கள் சிலவிருந்து பின்பு சிதைந்தன என்றேனும் கொள்ளும்படி நேருகின்றது. வெவ்வேறிடங்களிலிருந்து எனக்குக்கிடைத்த நரிவிருத்தப் பிரதிமூன்றும் முடிந்தநூலாகவும் ஈற்றுவாழ்த்துடனும் உள்ளமையால், முன்னதானவூகம் பொருத்தமுடையதுபோல் எனக்குத்தோன்றுகின்றதாயினும் உண்மை தெளிவாகவில்லை.

இந்நரிவிருத்தப்பிரதியொன்று தம்மிடமிருந்ததை எனக்கு அன்புடனனுப்பிச் "செந்தமிழில்" வெளியிட்டுக்கொள்ளும்படி உபகரித்தவர் ஸ்ரீரங்கத்தில் வசிக்கும் பண்டிதர்- ஸ்ரீ: பி. ஆர். கிருஷ்ணமாசாரியரவர்கள். இவர்களாற்கிடைத்த இந்நூலை வேறு பிரதிகளுடனும்வைத்து ஆராய்தல்வேண்டி, என் நண்பர்களாகிய மன்னார்குடிமிஷன்காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-சர்க்கரை: இராமசாமிப் புலவரவர்களையும், ஆரணி: ஸ்ரீமத்-சந்திரநாதநயினார் அண்டுப்ரதர்ஸ் அவர்களையும் உசாவினேன். இவர்கள் பெரிதும் சிரமமெடுத்து அப்பக்கத்து ஜைனகிருகங்களிலிருந்த நரிவிருத்த ஏடுகளினின்று பிரதிகள் எழுதியனுப்பினார்கள். இன்னோர்களுடையசெய்யாமற்செய்ததும், காலத்தினாற்செய்தனவுமான நன்றிகட்கு யான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்! இந்நரிவிருத்தத்து வரும் ஜைன

* விவேகசிந்தாமணி என்ற பெயருடன் வழங்கும் ஒரு பலதிரட்டுப் புத்தகத்தும் இப்பாடலைக் காணலாம்.

கதைகள் பெரும்பாலவும், இச்சங்கத்துள்ள மணிப்பிரவாள நடையினதாகிய ஸ்ரீபுராணம் (முதற்பகுதி), உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகிய ஜீவஸம்போதனை, தமிழ்மேருமந்தர புராணம், அருங்கலச்செப்புரை என்னும் ஜைனகிரந்தங்களால் நன்குவிளங்கின. சில கதைகள், அவற்றிற்குரிய நூல்கள் இங்கின்மையால் விளங்கக்கூடவில்லை. அதுபற்றி, தமது மதவாராய்ச்சியிற் றேர்ந்தவர்களான வீடூர்: ஸ்ரீமத்—அப்பாசாமிசாஸ்திரியாரவர்கட்கு எழுதிக்கேட்ப, அவர்கள், என் வேண்டுகோட்படியே, விளங்காத கதைகளையெல்லாம் சுருக்கமாக எழுதி அன்புடன் அனுப்பினார்கள். இவர்கள் உபகாரம் என்றும் என்னால் மறக்கத்தக்கதன்று. இவ்வாறு கதைகள் முழுதும் ஒருபடியாக விளங்கினமையால், இச்சிறுநூலுக்கு அரும்பதவுரையொன்றெழுதி, என் சிற்றறிவிற்குத்தெரிந்தவைகளை அதனுள்விளக்க முயன்றுள்ளேன். இந்நூற்பதிப்பிற் காணுங் குற்றங்குறைகளை அறிஞர் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்.

"செந்தமிழ்"ப் பத்திராசிரியர்.

---

ஸ்ரீ:

கடவுள் துணை.

# நரி விருத்தம்.

## காப்பு.

பானிலா மதிய மூன்று பன்மணி மிடைந்த பாங்காய்
மேனிலா விரித்த போலும் விளங்குமுக் குடையி னீழல்
தேனவாங் குளிர்கொள் பிண்டிச் செல்வன்சே வடியை வாழ்த்தி
யூனவா நரியினார்த முரைசிறி துரைக்க லுற்றேன்.

## நூல்.

சென்றுயர் மதிய முட்டுஞ் சிகரமால் வரைகள் சூழ்ந்த
குன்றியிற் குறவர் வாழுங் குறிச்சியுள் ளானோர் வேடன்
கன்றியூன் கிழங்கு காய்தேங் கனியொடு தேன்க ளுய்ப்பான்
நன்றியில் செய்கை தம்மால் நாரகர் தம்மோ டொப்பான். (க)

வாங்குவிற் கலப்ப வீசி வளைகடன் முகந்து வானம்
பாங்கினா லெழுந்து மின்னிப் படுமழை பொழிந்த காலைத்
தேங்கமழ் சிலம்பின் வாழுங் குறவர்கள் நறவு மாந்தி
வேங்கைபூ விரித்த நன்னாள் விளைவுநாட் செய்ய லுற்றார். (உ)

---

காப்பு. அமுதகிரணங்களைக்கொண்ட மூன்று சந்திரர், பலமணிகள் நெருங்குதலால் உண்டான அழகினையுடையராய், ஆகாயத்தினின்று ஒளியைப்பரப்பியது போல விளங்கும் முக்குடையென்க. தேன் அவாம்-வண்டுகள் விரும்பும். பிண்டிச்செல்வன் - அருகன்; ஈண்டு ஒருசொல். ஊன் - மாமிசம். நரியினார் - இழித்தற்கட்சிறப்பு.

நூல். க. சிகரம் - கொடுமுடி. குன்றி - மலை. குறிச்சி - மலைநாட்டூர். கன்றுதல் - பழகிமுதிர்தல். நன்றியில் செய்கை, உடையானது குற்றம் செய்கைமேலேற்றப்பட்டது. நாரகர் - நரகலோகவாசிகள்.

உ. வாங்கு வில் - வளைந்தஇந்திரவில். வேங்கை மலருங்காலம் தினை கொய்தற்கும் அதுவித்தற்கும் உரியது.

கருவியா லகிலொ டாரங் கற்புரந் திமிசு நூறி
மருவியர்ங் குறவர் நீக்கி வளைத்தன காடு மாணப்
பரவியாங் கருவி வீழும் சாரற்பைந் தினையை வித்திக்
குருவியுங் கிளியு மோப்பிக் குறமகள் காக்கு நாளால். (௩)

விண்ணினார் வரையின் றாழ்வில் வேழமென் றினையை மாந்த
நண்ணினான் குறவ னண்ணி நனிவெருண் டோடி யேறி
பண்ணினார் புற்றி னுச்சி நின்றுவார் சிலையை வாங்கிக்
கண்ணினா லமர்ந்து நோக்கிக் களிற்றின்மத் தகத்தி னெய்தான். (௪)

விடுகணை நுதலி னுங்க வேழமும் வெருண்டு மற்றோர்
தொடுகணை தொடாம லந்தப் புற்றின்மே லோடி யேறிப்
படுகணை யுருவப் பாயப் பாம்பழ லுமிழ்ந்து பொங்கிக்
கொடுவிலுங் கணையும் வீழக் குறவற்கொன் றிட்ட தன்றே. (௫)

நாகத்தைக் குறவ னல்ல பத்திர முருவிக் கொண்டு
பாகத்தைப் படுத்து வீழ்ந்தான் வீழ்தலிற் பசியின் வாடி
மோகத்தாற் சென்று கண்டோர் முழைநரி முழுதுந் தின்பான்
ஆகத்தா னமைக வென்ன வாய்ந்தது வகுக்கு மன்றே. (௬)

---

௩. கருவி - ஆயுதங்கள். ஆரம் - சந்தனமரம். "திமிசு - ஓர்மரம்" (சிந்தா - விம - ௧௩). மருவியாம் குறவர் - பயிலப்பழகிவருகின்ற மலைநாட்டார்; "மருவியாம் மாமலைநாடன்" என்னுந் திணைமாலைநூற்றைம்பதுத் தொடர்க்கு (௧௮) இப்பொருள் கூறப்பட்டது. நூறி நீக்கி வளைத்த காடுகள் மாட்சிபெற என இயைக்க. பரவி - பரந்து. ஆங்கு அசை.

௪. மாந்த - உண்ண. மண்ணின் - மண்ணால். வாங்கி - வளைத்து. அமர்ந்துநோக்குதல், குறிவைத்துப் பார்த்தல். மத்தகம் - யானைநெற்றி.

௫. நுங்குதல் - மூழ்குதல். வேடன் மற்றோரம்பை விடுதற்குமுன், யானை புற்றிற்கெதிரோடியேறி தன்மேற்பட்ட அம்பு அப்புற்றிலுருவும்படிபாய்தலால், அங்கிருந்த பாம்பு விஷாக்கினியைக் கக்கிக்கொண்டு சீறிக் குறவனைக் கொன்றிட்டதென்க. கொடுவில் - வளைந்தவில்.

௬. பத்திரம் - வாள்; "பத்திரம் வாங்கி" என்பது பெரியபுராணம். (மெய்ப்பொருணா - ௧௫.) படுத்தல் - துண்டித்தல். முழை - குகை. ஆகத்தான் அமைக - இச்சரீரங்களால் ஆகாரம் நிரம்புவதாக. வகுத்தல் - கூறுபடுத்துச் சொல்லல்.



களிறது திங்கட் காகுங் கானவ னாகு மேழ்நா
ளொளிறுவா ளெயிற்று நாக மூண்டோர்நாட் கிறையென் றெண்ணி
வெளிறிலாச் சிலையிற் கோத்த நாரிவாய்க் குதையைக் கவ்விக்
குளிறுபேழ் வாயி லுய்ப்பக் கொடுவிற்கோத் திட்ட தன்றே. (௭)

அத்தியு மரவின் வீழ்ந்த வேடனும் வேடன் கொன்ற
துத்திமா நாகந் தானுங் கிடப்பவிற் குதையைக் கவ்விச்
செத்தவிந் நரியைப் போலச் செய்பொரு ளீட்டு வார்கள்
சித்தம்வைத் தறங்கள் செய்யார் தேர்ச்சியின் மாக்க ளந்தோ. (௮)

சுற்றினார் வில்லின் வீழ்ந்த சூழ்ச்சியி னரியைப் போலப்
பற்றினார் பெரிதும் வவ்விப் பகுத்துணா தீட்டி னார்கள்
மற்றுணா வெறுக்கை தன்னை மன்னரும் பிறரும் வவ்வத்
தெற்றென வெளிறு நீரார் செல்வமு மிழப்ப ரன்றே. (௯)

குடற்படு முடையைக் கண்டு குறுநரி தின்று மான்றோர்க்
கடற்படை யியக்கங் கண்டே கள்ளத்தாற் கிடப்ப யாருங்

---

௭. திங்கள் - மாசம். ஒளிறு வாள் எயிறு - விளங்குகின்ற வாள்போற் கூரிய பல். இரை ஆகும் என முன்னுங்கூட்டுக. வெளிறு - குற்றம்; "வெளிறில் வாள்" என்புழிப்போல (சிந்தா - முத் - ௪௭௬). நாரி வாய்க் குதை - நாணைத் தன்னிடங் கொண்ட விற்கடையிலுள்ள வளை. குளிறுதல் - ஓசையிடுதல்.

௮. அத்தி - யானை. துத்தி - புள்ளி.

௯. சுற்றின் ஆர் வில் - கட்டுப்பொருந்திய வில். சூழ்ச்சி - அறிவு. பற்றினார் - பற்றினையுடையராய். உணாவெறுக்கை - தான்ய தனங்கள். பிறர், திருடர் முதலானோர். தெற்றென - நிச்சயமாக. வெளிறு நீரார் - மதிகெட்ட தன்மையராய்; வெளிறுதல் - உள்ளீடின்றாதல்; 'வயிரமின் மரத்தை வெளிறென்பது வழக்கு.' பிறருடைமையைவௌவி ஈதலின்றி ஈட்டியவர் தம்முடைமையைப் பிறர் வௌவ இழப்பர் என்க. "அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய - வொண்பொருள் கொள்வார் பிறர்" என்னுந் திருக்குறளோடு இதனை ஒப்பிடுக.

௰. குடல் படு முடை - குடரிலுள்ள மாமிசம். இயக்கம் - செலவு. திடன் - வலிமை. குடர்மாமிசமொன்றைக் கண்டு தின்றுகொண்டிருந்த நரி அருகே சைந்நியமொன்று செல்லுதலை நோக்கி 'இங்கே போர்நிகழு

திடற்பயக பின்மை யாலே செவிகொய்வான் வால்கொய் வானாய்
உடற்புறம்போர்த்தபுன்றோ லுரித்திட்டங்கொருவன்கொன்றான். ()

நாட்டினா முரைக்கப் பட்ட முறைநரி யனைய நீரார்
ஈட்டிய பொருள்க டம்மை யீதலுந் துய்த்த றானும்
மாட்டில ரகழ்ந்து பார்க்கீழ் நிலங்கொள வைப்பர் மாதோ
பாட்டரு மக்கள் யாக்கைப் பயன்கொளாக் கழிப்ப ரன்றே. (கக)

உண்டலோ டுறங்க லச்ச மிணைதலு மொருங்கு நாடின்
மண்டிணி யுலகின் வாழும் மாக்களும் விலங்கு மொப்பாம்
கண்டதொன் றுண்டு நல்ல வறங்களைப் பிடித்த நீரார்
பண்டித ரேனை மாக்கள் பசுவினுங் கடைய ரன்றே. (கஉ)

கடிமணக் கோல மாதர் காளைக்குக் காட்டி மீள்வர்
நடுவிடப் பட்ட தெல்லா நயப்புறக் கேட்டு நாய்கன்

---

மாதலால் மிக்க ஊனுணவுண்டாம்' என்று கருதிச் செத்ததுபோல வழியிற் கிடக்க, அவ்வாறு போர்கிழச்சி யொன்றுமின்மையால், வழிப்போக்கனொருவன் செவியையும் வாலையுங் கொய்து அதன்றோலையுரித்துச் சென்றான் என்க. பொருள் வேட்கையாற் செய்யும் சூழ்ச்சி உயிர்க்கிறுதி பயக்கும் என்பதுபட நின்றமையின், இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம்; பிறவும் இவ்வாறே வருவனவற்றுக்குரைத்துக்கொள்க. "தொடற்பயனின்மையாலே துளைச்செவி வால்கொய்வானாய்" எனவும் பாடம்.

கக. பார்க்கீழ் அகழ்ந்து. பாட்டரு மக்கள் - புகழ்தற்கரிய மக்கட் பண்புடையோர்; மக்கட்பண்பாவது ஐயறிவோடு மனமென்னும் ஆறுமறிவுமுடைமை; "மனஷ்ஷஷ்டானீந்திரியாணி" என்பது கீதை. "மக்கடாமே யாறறி வுயிரே" என்பது தொல்காப்பியம்

கஉ. உம்மையை ஏனையவற்றுக்கும் கூட்டுக. இணைதல்-மகளிர்முயக்கம். "இணைவிழை வொருங்கு" எனவும் பாடம். மாக்கள் என்றார், பசுப்போல மனவுணர்வின்றி ஐயுணர்வேயுடைமைபற்றி; "மாவு மாக்களு மையறி வுயிரே" என்பது தொல்காப்பியம். "ஆகார நித்ரா பயமைதுனஞ்ச ஸாமாந்ய மேதத் பசுபிர் நாராணம்; தர்மோஹி தேஷா மதிகோ விசேஷ:, தர்மேண ஹீனா: பசுபிஸ் ஸமானா" என்னும் வடமொழிநீதிவசனத்தோடு இதனை ஒப்பிடுக.

கங. உஞ்சயினி நகரத்தில் ராஜசிரேஷ்டியாய் இப்பர் குடியினனான ஸ்ரீ தத்தனுக்கும் அவன்மனைவி யசோபத்ரைக்கும் நெடுநாள் புத்திரரின்



கெடியெனக் கூறி யாங்கே யுணர்தலிற் கேட்டு வந்த
வுடையது மொருங்கு கொண்டே விடையமுங் கடிவித் திட்டான். ()

இளமையும் வனப்பு நில்லா வின்பமு நின்ற வல்ல
வளமையும் வலிது நில்லா வாழ்வுநா ணின்ற வல்ல
களமக ளேச நில்லா கைப்பொருள் கள்வர் கொள்வார்
அளவிலா வறத்தின் மிக்க தியாதுமற் றில்லை யன்றே. (கச)

நின்றன வல்ல வாணா ணிதியமு நின்ற வல்ல
சென்றுசென் றணுகி நாளுஞ் சினவரன் சொன்ன நன்னூ
லொன்றிய மனத்த ராகி யூதியங் கொள்வர் நல்லோர்
அன்றெனி லதனைக் காணா வாதனே போலு மன்றே. (கரு)

கேத்திர நன்ற தாகிற் கேடின்றி யிட்ட வித்து
வாய்த்ததா வெழுந்து நன்றாய் விளைதலைக் காட்டு மாபோல்

---

றிப்பின் சுகுமாரன் என்னும் புத்திரன் பிறந்ததும், தந்தை துறந்து தீக்ஷாப்ராப்தனாக, தாயான யசோபத்ரை புத்திரனுடன் ஒரு முனிவரை யடைந்து போய்நமஸ்கரிக்க, அம்முனிவர் 'இம்மகன் சீக்கிரம் துறந்து முனியாவான்' என்று கூறலும், தாய் வியசனித்தவளாய், புத்திரனுக்கு ஸம்சாரதுக்கமே தோன்றாவண்ணம் எல்லாபோகவஸ்துக்களையும் நிரப்பி, தேவஸ்திரீகளுக்கு சமானரான முப்பத்திருவரை மணப்பித்து இவ்வாறு செல்கின்ற காலத்தே, சுகுமாரனது பக்குவதசையையறிந்துதபோதனரொருவர் அவன் வசிக்கும் மாடத்தருகேயுள்ள ஜினாலயமொன்றிலிருந்து, அர்த்தராத்திரியில் அவன் காதுகேட்ப, தேவமானுஷ்யநரகலோகஸ்திதிகளைக் கூறிப் பின்பு பத்மகுல்ம மென்னும் விமான விசேஷமுரைத்தலும்; அவன் பூர்வஜன்மத்தே அதில் இருந்தவனாதலால், ஜாதிஸ்மரணைவந்து சம்ஸாரவைராக்கியனாய் வாயில்காவலரும் அறியாதே போய் அம்முனிவரை அடைந்து நமஸ்கரித்து தீக்ஷாப்ராப்தனாயினன்' இக்கதை, ஜீவசம்போதனையிற் கண்டது. இக்கதையை உட்கொண்டு இப்பாடலமைந்திருத்தல் உய்த்துணர்க.

கச. களமகள் - இல்லாள். கெடி - ஈண்டு வியப்புணர்த்தியது.

கரு. சினவரன் - அருகன். ஊதியம் -பயன். அதனை-அவ்வூதியத்தை. ஆதன் - மூடன்.

கசு. கேத்திரம் - க்ஷேத்திரம். "நன்னிலத் திட்ட வித்தி னயம்வா விளைந்து செல்வம் - பின்னலம் பெருக வீனும் பெறலருங் கொடையும்'

ஏத்தருந் தவத்தின் மிக்க வெல்லையில் குணத்தி னூர்க்குப்
பாத்திர தான மீந்தாற் பயனுமற் றதனை யன்றே. (௧௬)

ஓக்கத்தான் மதிய முட்டு முறுதவ னகரி முன்னே
யாக்கையா லழகி தாயோர் பொன்மயி லாடக் கண்டு
தோக்கையைப் பற்ற லோடுந் தொட்டவன் காய நூக்கிக்
காக்கையாப் பறந்தே யோடக் கவர்ந்தங்கை சோர்ந்து விட்டான். ()

வேறு.

நல்ல சூழ்ச்சியி லாநரி யெய்திய
அல்லல் கேட்டு மறஞ்செய்கி லாதவர்

என இவ்வாசிரியரே கூறுதல் காண்க (சிந்தா - முத்தி). பாத்ரதானம் நால்
வகைத்தானங்களிலொன்று; —அஃதாவது, தபோதனர்க்கு நவபுண்யக் கிரம
த்தால் நிரவத்யாகாரத்தினைத் தான், பவித்ரமாகிய சாஸ்திரத்தினைத்
தான், விசுத்தமாகிய ஔஷதத்தினைத்தான் தானம் பண்ணுதல். (ஸ்ரீபுரா
ணம்) பயனும் அதனை அற்று - பயனும் அக்கேத்திரவிளைவின் அளவாம்.

௧௭. ஒக்கம் - உயர்ச்சி. "மதிய முட்டும் உறுதவம்" என்பது தவத்தின்
பெருமையைக் காட்டும் ஒரு ஜைனவழக்கு. உறுதவன் நகரி - ஜினசைத்
தியாலயம். தோக்கை விரித்தல். தொட்டவன் - கைப்பற்றிய அர்ச்சகன். தார்
மீகனென சிராவகனொருவன் ஜினசைத்யாலயமொன்றுகட்டி ஜினபிம்பப்
பிரதிஷ்டையும் செய்து நித்யபூஜாங்கத்துக்கு யோக்யமாகிய படித்தரம்
செய்விக்காது இறந்து போய்த் தேவலோகத்திற் பிறந்ததாகவும், அங்
கே அவன் அவதிஜ்ஞானத்தாலே பூர்வபவங்களையறிந்து கோயிலுக்குப்
படித்தரம் செய்யாததை உணர்ந்து, தானே பொன்மயில் ரூபமாகத் தான்
கட்டிய ஜினாலயத்தை யடைந்து, சுவாமிக்கும் அர்ச்சகனுக்கும் யோக்யமாக
நித்யக்கட்டளைக்கு இரண்டுபொன்னிறகு போகட்டுவந்ததாகவும், அவற்றால்
அந்த அர்ச்சகன் ஜீவித்துக்கொண்டு சுவாமி பூஜாகார்யங்களைச்செய்து வருகி
ன்றவன் துராசையால் அந்தமயிலைப்பிடித்து விற்கலாமென்று அதனை நெ
ருங்கித்தழுவப்போக, அஃது ஆகாசத்தில் அவனுடன் எழும்பிக் காக்கைவடி
வாய்ப் பறந்து போக, அவ்வர்ச்சகன் பூமியில் விழுந்து மாண்டுவிட்டதாக
வும் புண்யாசிரவகதையில் கதைகாணப்படுமென்பர். "கவுத்தன்கை சோ
ர்ந்து விட்டான்" எனவும் ஒரு பிரதியிற் காண்டலால், இவன் பெயர் 'கவு
த்தன்' போலும். நூக்குதல் - தள்ளல்.

௧௮. பின்வரும் எய்திய, செய்யிய என்னெச்சம். இட்டிகை- செங்கல்.
புல்லிதாக் கொண்ட - அற்பமென்று நினைத்துக் கைப்பற்றிய. இது



செல்ல லெய்திய செம்பொனி னிட்டிகை
புல்லி தாக்கொண்ட வாணிகன் போல்வரே. (௧௮)

மெய்ப்பொரு டேறலன் பற்றுள மேபுரிந்
திப்பை யாக்கையிற் றேர்ச்சியில் வாணிகன்
கப்பி யாப்பிறந் தானெனுங் கட்டுரை
ஒப்ப நூலுணர்ந் தார்சொலக் கேட்டுமால். * (௧௯)

லோலுபன் என்னும் பிட்டுவாணிகன் கதை கூறியவாறு; அஃதாவது:—
*"ஒரு நாள் தன் நகராதிபதியாகிய ஜயசேனமகாராஜன் ஒரு ஜினபவனங்
கல்பிப்பான்வேண்டி இஷ்டகைகளைப் பரிஜனங்களால் அழைப்பிக்கின்ற
பொழுது, பரிஜனங்களுள் ஒருவனுக்கு லோலுபன் ஆகாரங்கொடுத்துச் சில
இஷ்டகைகளைப் பிரயோஜனத்தால் வாங்கிவைக்கின்ற பொழுது, ஒரு
இஷ்டகையதனுள் சுவர்ணசகலம் (துண்டம்) காணப்பட்டது. அதுகண்டு
சந்துஷ்டனாகி முன் தந்த பரிஜனத்துக்கு பகுவிதசம்மானதானங்களினால்
அவ்வவ்இஷ்டகைகளை ப்ரச்சந்நமாக அழைப்பித்துவாங்கித் தன் கிருகத்தில்
நிக்ஷேபிக்கின்ற இவன், ஒருநாள் கிராமாந்தரத்துத் தன் புத்திரியினைக்
காண்பான்வேண்டிப் போகின்றவன் தன் புத்திரனை நோக்கி, 'புத்திரனே!
ஆகாராதிதானத்தினால் இஷ்டகாஸங்கிரகணம் பண்ணுவாயாக' என்று
சொல்லிப்போகி மீண்டுவந்து, புத்திரன் உபேக்ஷையால் இஷ்டகாசங்கிரக
ணம் பண்ணுவது கண்டு கோபித்துப் புத்திரன் மஸ்தகத்தினையும் போன
தன் கால்களையும் அடித்தனன். எதத்விருத்தாந்தத்தினைக் கேட்ட நாயதி
யாஞ்ஞையால் பரிஜனங்கள் சித்ரதண்டம் பண்ண மரணமடைந்து, இந்தக்
கிரியாயினன்" எனக்காண்க. இச்சரிதம் ஸ்ரீபுராணம் விருஷப தீர்த்தகர
புராணத்துக் கண்டது.

௧௯. பற்றுள்ளம் - இவறுமெண்ணம். இப் பை யாக்கை - இந்தக்
கூடாகிய உடல். யாக்கையிற் றேர்ச்சி யின்மை - அதனிழிவு நிலையாமை
களை அறியாமை. கப்பி - குரங்கு: கபி: என்னுமாரியச் சிதைவு. நாகதந்தன்
என்னும் வாணிகன்வரலாறு கூறியவாறு. அஃதாவது:— "தான்யபுரத்து
குபேரதத்த சிரேஷ்டியினுக்கும் சுத்தை என்னும் பாரியைக்கும் நாகதந்
தன் (என்பான்) புத்திரன். இவன் அப்ரத்தியாக்யான மாயாகஷாயு தீவ்
ரோதயத்தால் தகர்மருப்போடொத்த மாயையினில் மனோவாக்காயங்க
ளால் அடக்கமின்றி வர்த்தித்தலில் ப்ரபத்ததிர்யகாஷ்யுத்சனாகி வர்
த்திக்கின்றகாலத்து, தன் தங்கை கல்யாண விதியின் பொருட்டுத் தன்
பிதாவினது கடையிலே தன்மாதா ஸாரரத்னங்களைத் தெரிந்து வாங்கு

நரியி னுருரை கேட்டபி னல்லராய்ப்
புரிவி னல்லறஞ் செய்வர்பொய் யாக்கொளீஇ
அரிவ ரம்மக னப்பொருள் வேட்கையாற்
றெரிவித் திட்டறஞ் செய்பொருள் செப்பினுன். (உ0)

அஞ்சு மின்னதி லோபமில் லோர்களுஞ்
செஞ்சு டர்நெடு வேற்றிரி யோதனன்
பஞ்ச வர்க்குமண் பாகங் கொடாமலே
துஞ்சி னுன்கிளை தன்னெடு மென்பவே. (உக)

குட்ட நீர்த்துறைப் போம்வழிக் கூனியை
ஒட்ட லன்புன லுய்த்தவக் காருத்தன்
திட்டை வேண்டிய தேர்ச்சியில் வாணிகன்
பட்ட தெய்துவ பற்றுளத் தார்களே. (உஉ)

இன்ற விடத்து வஞ்சிக்கவிடம்பெருமையால் சங்கிலேசத்தோடு மரித்து இக்குரங்காயினன்" என்பது. கட்டுரை-வரலாறு. இச்சரிதமும் ஸ்ரீபுராணத்து மேற்குறித்தவிடத்திற் கண்டது.

உ0. நரியினுர் உரை - நரிவிருத்தம். புரிவின் - விருப்பத்துடன். பொய்யாக்கொளீஇ-(யாக்கை செல்வங்களை) அநித்தியமாகக் கருதி. கொளீஇ நல்லறஞ்செய்வர். அரிவராகிய மகன். அரிவரன் என்பாஞெருவன் தருமத்தைச்செய்யவேண்டுமென்ற ஆசையால், முனிகளிடத்தே தர்மங் கேட்டு அதை அநுஷ்டித்தான் எனவும் இது கதாகோசம் என்னும் நூலிற் காணப்பட்ட தெனவும் கூறுவர்.

உக. பொருள் வெளிப்படை. "அதிலோபமுள்ளோர்களும்" எனவும் பாடம்.

உஉ. காருத்தன் என்னும் வாணிகன் ஒருஸ்திரீயின் ஆபரணவாஞ்சை யால் நடுக்குளத்தில் அவளைத்தள்ளி அவளாபரணத்தை கைக்கொள்ளப் போக அவள் இவனை இறுகத்தழுவிக்கொள்ளுதலால் தன்னுயிரைக் காப்பா ற்றுதற்கு மேடுநிலம் காணப்பெருது அமிழ்ந்து உயிர்விட்டான் என்பது ஜைனவரலாறு. காருத்தனுகிய வாணிகன் என இயைக்க. திட்டை-மேட்டு நிலம்.



நட்டவன் வந்து நல்லறங் காட்டவும்
ஒட்ட லன்னதி லோப முடைப்பெருஞ்
செட்டி யெய்திய தெய்துவ தேபொருட்
கிட்டி யம்மனத் தார்கிளர்ந் தென்பவே. (உ௩)

நாட்டி யாத்திரை செய்பவ னன்மணி
காட்டி வைத்தவன் போய்வந்து கண்ணுறச்

உ௩. நட்டவன் - சினேகித்தவன். நல்லறம் - நீதிமுறை. ஒட்ட லன்—சம்மதியாதவனை. இக்கதை, "தநதேவனுல் நிக்ஷேபிக்கப்பட்ட தனம் என்கண்ணில்லையென்று கொடாத சிவதேவனுக்கு ஜிஹ்வோத்பா டனம் பண்ணுகின்றபடியும்" எனவரும் ஸ்ரீபுராணவரலாறு போலும். பொருள் கிளர்ந்து கிட்டிய மனத்தார் - பொருளிடத்து மிகுந்த பற்றுள்ள முடையார். கிளர்ந்து எய்துவது எனவியைப்பினும் அமையும். மனத்தார் எய்துவது செட்டி எய்தியதே எனமுடிக்க.

உச. காட்டிவைத்தவன்- குறிப்பிட்டு நிக்ஷேபித்துச்சென்றவன். சாட்டி யம் - ஸாக்ஷ்யம்; "அழிசாட்டியம்" என்பது உலகவழக்கு. சத்தியகோடன்- சத்தியகோஷன். இவன் கதை ஸ்ரீபுராணத்து விமலதீர்த்தகர தீர்த்தப் பிரவிர்த்தாகிய மேருமந்தாகணதரர்களது சரிதத்துக்கண்டது; அது வரு மாறு:—ஜம்பூத்வீப பரதக்ஷேத்திர ஸிம்ஹபுரத்து ராஜா ஸிம்ஹஸேனன்: தேவி ராமதத்தை: இவன்மந்திரி சுருதிஸ்மிருதிபுராணுதி ஸர்வசாஸ்திர பாரங்கதனுகி ஸத்யவாதாதிசயத்தால் ஸத்தியகோஷன் என்னும் நாமத்தை யுடையனுகிய ஸ்ரீபூதி என்பான். பத்மஷண்டபுரத்து சுதத்தசிரேஷ்டிக்கும் சுமித்ராதேவிக்கும் புத்திரன் பத்ரமித்ரன்; இவன் ரத்நத்வீபமடைந்து உபார்ஜித பகுவிதரத்நத்தனுகி, ஸிம்ஹபுரத்திலே வசிப்பான்வேண்டி வந்து ஸ்ரீபூதி சமீபமடைந்து ஸ்வவ்ருத்தாந்த நிவேதனபுரஸ்ஸரம் ப்ரமாணபூத னென நினைந்து, இவன்கையில் தனது ரத்னங்களை நிக்ஷேபித்துப்போகி, பத்மஷண்டத்து நின்றும் ஸ்வபந்து ஜனங்களைப் பேர்ந்த, ஸிம்ஹபுரம் புகுந்து சத்யகோஷனையடைந்து தனதுரத்னங்களை வேண்டிய பின், ஸத் யகோஷனும் 'அஸத்யம் சொல்லுகின்ருய்; யான் உன்னைக்கண்டறிவதில் லை' என்று சொல்லி லோபகாயாதிரேகத்தால் அத்யந்தாபந்ஹவம் பண்ணி னன்: அதுகேட்ட பத்ரமித்ரனும் அதிக கோபசோகத்தினுல் 'அஹோ! ஸ்ரீபூதி, ராஜமந்த்ரி ஸத்யகோஷனென்றும் விப்ரோத்தமனென்றும் மந் த்ரி முக்யனென்றும் தர்மசாஸ்திரியென்றும் பரதிரவ்ய சுத்தனென்றும் நினைந்து அப்ரகாசமாக என்னுல் ஸ்வஹஸ்தநிக்ஷிப்தமாகிய ரத்னகாண்ட கத்தினைச் சௌர்யத்தினுல் ஸ்வீகரித்து........தர்மசாஸ்திரப்ரோக்தமா

சாட்டி யஞ்சொன்ன சத்திய கோடனும்
ஈட்டி வைத்திழந் தான்பொரு ளென்பவே. (௨௪)

கிய நியாஸாபஹ்ரவ தோஷத்தையறிந்தும் திரவ்யலோபாதிரேகத்தால்
அத்யந்தாபஹ்ரவம்பண்ணுகின்ற மந்திரியது அந்யாயமார்க்கத்தை ஸர்வஜ
னங்களும் அறிவீராகின்' என்று அநவரதம் ராஜத்வாரத்திலும் ஸபாஸ்தா
னங்களிலும் விருக்ஷாக்கிரங்களிலும்நின்று ஸர்வஜனங்களும் அறியக் கூப்பி
டலுற்றனன். சத்யகோஷனும் ஸ்வதோஷப்ரச்சாதனார்த்தமாக, 'அகோ!
பத்ரமித்ரன் சோரஜனங்களாலே அபஹ்ருத ஸர்வஸ்வாத்தநத்தனாதலில்
சோகத்தால் உன்மத்தனாகி அஸமஞ்ஜஸப் ப்ரலாபியாகி நின்றனன்' என்று
சகலருமறிவித்து, ஆத்மசுத்யர்த்தமாக நரபதிசந்நிதானத்து தர்ம்மாதிகார
ப்ரோக்தமாகிய சபதத்தினையும் செய்தனன். ராமதத்தாமகாதேவி பத்ரமி
த்ரனது அநவரத ஆக்ரோசத்தைக் கேட்டு, 'பூர்வாபர விரோதமின்றியே
ஏகப்ரகாரத்தால் ஆக்ரோசிக்கின்றஇவன் உன்மத்தனல்லன்போலும்; ஸத்
யகோஷாபஹ்ரவத்தினை த்யூதவியாஜத்தால் பரீக்ஷிப்பன்' என விம்ஹஸே
ன மகாராஜாவுக்கு அறிவித்து, யஜ்ஞோபவீத நாமமுத்ரிகைகளையே பணி
தயந்தமாகவிசைந்து ஸத்யகோஷனோடு த்யூதஞ்செய்து ஜயித்தபின், அவ்
விரண்டினையும் வாங்கி ரகஸ்யமாக நிபுணமதியென்னும் தாசிகையுட் கொ
டுத்து, இவையே அபிஜ்ஞானமாக, பத்ரமித்ரநிக்ஷிப்த ரத்னகரண்டகத்தி
னைத் தருகவென்று ஸத்யகோஷன் ஆஜ்ஞாபித்தனனென்று தத் பாண்டா
காரிகனுக்குச் செல்லி அதனைவாங்கிக்கொண்டு வருவாயாகவென்று சொல்
லிப்போகவிட்டழைப்பித்த பின், ராஜா, அநர்க்கியமாகிய ஸ்வாத்னங்களை
யும் அவற்றையுங்கலந்து ரத்னகரண்டகத்தினை பத்ரமித்ரனை அழைத்துக்
கொடுப்ப, அவனும் அவற்றுள் ஸ்வரத்னங்களையே தெரிந்துகொண்டு சே
ஷரத்னங்களைக் கொடுத்தனன். ராஜாவும் அதுகண்டு சந்துஷ்டனாகி அதி
கப் பிரஸாதஞ்செய்து, பத்ரமித்ரனுக்கு ஸத்யகோஷநாமஸஹித ச்ரேஷ்டி
முக்யபதங்கொடுத்து, ம்ருஷாவாதியும் மாயாவியுமாகிய ஸ்ரீபூதியினுக்கு
தர்ம்மாதிகார நிர்த்திஷ்டமாகிய தண்டங்களைச் செய்கவென்று நியோகி
த்து தர்ம்மிளன் என்னும் ப்ராஹ்மணன்மிசை மந்த்ரிபதம் வைத்தனன்.
ஸ்ரீபூதியும் ஸர்வஸ்வஹரணமும் யந்த்ரமுஷ்டி என்னும் மகாமல்லரால் இட
ப்பட்ட சவட்டைமுப்பதும் கம்ஸபாத்ரத்திரயம்நிறைந்த கோமயபக்ஷண
முமாகிய தண்டத்திரயங்களை அனுபவித்து நரபதிமிசை பத்தவைரத்த
னாகி ......ஆர்த்தத்தியானத்தோடு மரித்து ராஜபாண்டாகாரத்து அகந்திய
னன் என்னும் சர்ப்பமாகிப் பிறந்தனன்." இவ்வாலாறு தமிழ் மேருமந்தர
புராணம் பத்ரமித்ரன் சருக்கத்திலும் விரிவாகக்கூறப்பட்டுள்ளது.



விழுமின் பொற்கலம் பெற்றங்கொ ரேழைபோய்க்
கழுவு வான்புகக் கைத்தலத் தின்னிரா
தழுவ நீர்புகுந் தாழ்தலிற் கெட்டுயிர்
வழுவி னார்கதை வைகலுங் கேட்டுமால். (௨௫)

சந்த மாயினுந் தன்பழப் பிண்டியைக்
கந்த மாய்ப்புளி நீரொடு காடியாய்ச்
சிந்தை யொன்றில னுண்ட சிரேட்டியுர்
அந்த மில்பொருள் காத்தவ னாயினன். (௨௬)

௨௫. விழு மின் பொற்கலம் - விரும்பத்தகும் ஒளியுடைய பொற்
பாத்திரம். அழுவம் - பரப்பு. உயிர்வழுவினார் - உயிர் விட்டவர். இக்
கதை ஜீவசம்போதனை என்னும் ஜைனமதகிரந்தத்தே அடியில் வருமாறு
காணப்படுகிறது:—"பொன்னின் பரிகலத்தைப் போய்விற்பக் கண்டொ
ருவன் - தன்னை விலையாடித் தான்விடலும்—பின்னை, விலைகொண் டவன்
கழுவ வீழ்துரவி னுள்ளே - தலைகொண்டு போய்வீழ்ந்தான் மூழ்ந்து"—என்
பது, கிருஷியாளன் மண்பணிசெய்யாநிற்ப, புராதனத்துக்கிடந்த பாசியே
றிய பொன்னின்தளிகையைக் கண்டெடுத்து அதனை ஸ்வர்ணமாவதறியா
தே ஒரு செட்டிக்குக்காட்ட, அவனும் பொன்னாவதறிந்து 'இதற்கு விலை
யென்' என்று கேட்ப, அவனும் அதற்கு நாழிமிளகுவேணுமென்று சொ
ல்ல, செட்டி ஒருகாலே விலையறுத்தலாகாது என்றுகருதி ஆழாக்குக் கொள்
ளீர் உரிகொள்ளீர் என்று விட்டுப்பற்றுவதென்றுகருதி அங்ஙனமேசெய்ய,
அவனும் போய் மற்றொருசெட்டிவந்தானுக்குக் காட்ட, அவனும் பொ
ற்கலமாவதறிந்து நாழிமிளகுங்கொடுத்துக் கொண்டு, சீக்கிரம்போய் அத
னைப் பாசியறக் கழுவுவனென்று ஒருபழந் தூரவின் கரையிலிருந்து உரி
ஞ்சிக்கழுவாநிற்பக் கைநழுவிப்பாதாளத்திலே விழக்கண்டு ப்ரமைகொண்டு
'அதுகழுவாக்காலோ' என்று பிதற்றி மரணமெய்தினான்; முன்னம் விலை
யாடி விட்ட செட்டியும் அவனை யெங்கும் தேடிக்காணாமையால் 'அம்மிளகு
கொடுத்தாலோ, அம்மிளகு கொடுத்தாலோ' என்று பிதற்றி மரணமெய்தி
னான்" என்பது. இப்பாட்டில், நீர் புகுந்து ஆழ்தலினாலும், கெடவிட்டமை
யாலும் உயிர்வழுவினார் (இருவர்) கதை எனப் பொருள்கொள்க. கெட்டு -
முன்னரே வாங்காது தவறவிட்டு.

௨௬. சந்தம்மாயினும்-இயற்கை நலங்கெட்டிருப்பினும். தன் பழப்பிண்
டியை-தன்னிடமுள்ள பழைய இலவமுண்மாவை; பிண்டி - மா. கந்தமாக-
வாசமுடையதாக. சிந்தை ஒன்றிலன் - சிந்தையிலே இழிவுகருதானாய்.

பொன்னி னேறுடைச் செட்டியிற் போந்திருட்
கன்ன மிட்டவ னப்பொருள் கொண்டுபோய்த்
துன்னு தாபதன் றாங்குறி யிற்கிடந்
தின்ன லெய்தின னென்பதுங் கேட்டுமால். (உஎ)

நீடு நீணெறி செல்பவ ரூடொறும்
பாடி கண்டங்கொர் பாசனத் தாணிரை

"ஒருலோபியாகிய செட்டி இலவமுள்ளை மாவாகஇடித்துப்புளித்தகாடியிற் கூழாகக்காய்ச்சிக்குடித்து மிகுந்ததிரவியம் சம்பாதித்தானென்பதும், அந்தத் திரவியத்தினுடைய ஆர்த்தத்யானத்தால்மரித்துப் பாம்பாய்ப்பிறந்து அதனைக்காத்துக்கொண்டிருந்தா" னென்பதும் கதை. இது ஜீவசம்போதனையிற்கண்டது.

உஎ. பொன்னின் ஏறு - செல்வத்தின்மிகுதி. கன்னமிட்டவனுய்த்துன்னியதாபதன் எனவும் தாபதன் இன்னலெய்தினன் எனவுமியையும். இவன் உறித்தாபதன் எனப்படுவான்; இவன்கதை சிராவகாசாரம் என்னும் நூலில்விசேடமாகக் காணப்படுமென்பர். இவன் ஆலமரமொன்றில் உறியைக்கட்டி அதிற்பகல்முழுதும் தங்கியிருந்து, இராவந்ததும் களவுசெய்பவனென்பதும், இச்செய்தி அரசனுக்குத் தெரிந்து அத்தாபஸனை சிக்ஷிக்க அதனால் மரணமடைந்து நரகமடைந்தானென்பதும் கதை. "தனசிரி சத்தியன் தாபதன் காப்பான், இனைதாடி வெண்ணெய் உரை" என்னும் அருங்கலச்செப்பில் தாபதன் என்பவன் உறித்தாபதன் என உரைகூறப்படுதலோடு அவன் "அந்நியருடைமையைக் கன்னமிட்டுத்திருடுந்" தன்மைக்குக் கூறப்பட்டுமுள்ளான்.

உஅ. பாடி - ஆயர் ஊர். பாசனம் - பாத்திரம். தாடிவெண்ணெய்க்காரன் என்பவன், நாள்தோறும் பசுக்கூட்டத்தையுடைய ஆயர்பாடியிற் சென்று அவராற் பெற்றுக்குடித்துவந்த மோரில் உண்டானவெண்ணெயைத்தாடியால் தோய்த்தெடுத்து ஒருசேர் நெய் திரட்டியதாகவும் அதை வைத்துப் பெருத்த வியாபாரம் செய்யலாமென்னும் எண்ணத்தால் வெகு வாரம்பபரிக்ரகத்தை மனதிலே நினைத்துக் கொண்டேயிறந்து நாகத்தையடைந்தான் என்பதுங் கதை. மேற்பாடலுரையிற் காட்டிய அருங்கலச்செப்பில், தாடிவெண்ணெய்க்கார னென்பவன் "க்ஷேத்திர முதலான பொருளை வரைதலுக்கு" உதகரிக்கப்பட்டுள்ளான். அருங்கலச்செப்பிற்கு முதனூலும் ஸமந்தபத்ராசாரியரால் இயற்றப்பட்டதுமான ரத்னகரண்டகம் என்னும் வடநூலில், "தனஸ்ரீ ஸத்ய கோஷௌச தாபஸா ரக்ஷகாவபி; உ



நாடி நாடொறு நெய்தனக் கீட்டிய
தாடி வெண்ணெய் தனதுரை கேட்டுமால். (உஅ)

அறத்தி னற்பொருள் கேட்டது கொள்ளலன்
மறத்தி னலர விந்தனு மாநிதித்
திறத்தி லொன்றில னூனுடை யுண்டியுண்
டிறப்ப வுந்நர கத்திடை யெய்தினன். (உகூ)

பாக்யேயாஸ் ததாச்மசுரு நவநீதோ யதாக்ரமம்" என்னும் சுலோகத்தில் இத் தாடிவெண்ணெய்க்காரன் "சுமசுருநவநீதன்" என்று கூறப்படுவன். (சுமசுரு - மயிர்.)

உகூ. பொருள் - உபதேசப் பொருள். மறம் - பாபகர்மங்கள். மாநிதித்திறத்தில் ஒன்றிலன் - வித்யாதரசம்பத்தை அநுபவித்தலிற் பொருந்தாதவனாய். ஊன் உடை உண்டி - மாமிசத்தோடுகூடிய ஆகாரம். இவ்வரவிந்தன் சரித்திரம் ஸ்ரீபுராணத்து வருவதடியில் வருமாறு:—"இந்த நகரத்து (அளகாபுரி) ராஜா அரவிந்தன் என்பான்: அவன் சிரகாலம் வித்யாதரவிபவங்களை அநுபவித்து பஹ்வாரம்பபரிக்ரஹ ரௌத்ரத்யானபாபபரிணமத்தினால் சஞ்சிதமாகிய பாபகர்மங்களையும் நரகாயுஷ்ய பந்தத்தினையுமுடையனாகி, பிரத்யாஸந்நமரணசமயத்து தாகச்சுரவியாதிபீடிதனாகிய பொழுது பாபாதிரேகத்தால் அப்பியஸித்த வித்தைகளும் தனக்கு வசமாகாத பொழுது, ஜேஷ்டபுத்திரனாகிய அரிச்சந்திரனை அழைத்துச்சொல்லுவான்:— 'புத்திரனே! தாகச்சுரமகாஸந்தாபபீடிதமாகிய எனது ஸர்வாங்கங்களிலும் சீதோபசாரக்கிரியைகளால் விடப்பட்ட கல்லார அரிசந்தனாதிகளும் கரிந்து சந்தாபத்தினைச் செய்கின்றன கண்டாய்: இனி இதற்குப் பிரதிக்கிரியையாவது—உத்தரகுருக்ஷேத்திரத்து சீதாநதி தீரோத்யானப் பிரதேசங்களில் என்னை உனது வித்தைகளால் உய்த்திடவே சீதாநதி சீதஜலபிந்துஸம்பர்க்க சீதளமாகிக் கல்பதருவனங்களிடை அசைகின்ற மந்தமாருதம் வந்துவீசிட எனது ஸர்வசந்தாபமும் உபசமித்திடும் போலும்' என்றனன். என, அவனும் அவ்வாறு செய்கவென்று தனது ஆகாசகாமினி வித்தைகளையேவ அவையும் இவனது புண்யபரிக்ஷயத்தால் அவ்வாறு செய்யாது வைமுக்யமடைந்த பின், அரிச்சந்திரனும் தாகச்சுரமகாவியாதி அசாத்தியமேபோலுமென நினைந்து சோகபீடிதனாகிச் செய்வதறியாதிருப்ப, ஒருநாள், பவநப்பிரதேசத்து பரஸ்பரகலகத்தினால் க்ஷதமாகிய கிருககோகிலங்களினின்றும் வீழ்கின்ற ரக்தபிந்துக்கள் அரவிந்தன் சரீரத்தின்மேல் வீழ்தலுமே, தத்பிரதேசம் பாபதோஷத்தால் தாகம் உபசமித்திட்டது.

மான வேன்மன்னன் மாதவத் தார்க்குண்டி
தான மீயுழிச் சத்திய பாமையும்
ஊன மின்மனத் தானுடன் பட்டனள்
ஈன மில்குரு வத்திடை யெய்தினாள். (௩௦)

கயக்கில் கற்புடைப் பார்ப்பனி போசனம்
வியக்கப் பட்டவள் வேதியற் கில்வழி
மயக்கின் மாதவத் தாற்குண்டி யீந்தவள்
இயக்கி யாயின ளென்பதுங் கேட்டுமால். (௩௧)

---

இடுதலுமே, பரமௌஷதம் இதுவேபோலும் எனக்கருதி அதுபொழுதே பெறப்பட்ட விபங்கஞானத்தாலே மிருககுலமொருவழி மிகவும் நின்றமையறிந்து குருவிந்தனென்னும் கனிஷ்ட புத்திரனை நோக்கி, இந்த மிருககுலங்களால் எனக்கு ருதிரவாவி சம்பாதித்துத் தருகவென அவனும் பாபபீருவாகி அதுபொழுதே என்செய்யத்தகுவதென நினைந்துபோகி திவ்யஞானியாயினனொரு முனிவரனல் பிரத்தியாஸன்ன பிதுர் மரணத்தினையும் நரககதிப்பிராப்தியினையும் அறிந்து தத்காரியத்தில் உதாசீனனாகிலும் பிதிர்வசனம் அநுல்லங்கியமாதலில்,கிருத்திரும ரூபத்தால் நிறைந்ததொரு ருதிரவாவி சமைத்துக்காட்டினனாக, அவனும் அதனை மகாதனங்கண்ட தரித்திரன்போலக் கண்டு களிசிறந்து புகவீழ்ந்துமண்டி எங்கும் பரிப்ரமியாநின்று அதனை முகந்து பருகிக்கொப்புளிக்குமளவில் அது கிருத்ருமருதிரமாவதறிந்து குபிதனாகித் தனது மணிச்சுரிகையினை உருவிக்கொண்டு இம்ஸானந்த பரிணாமத்தாலே குருவிந்த குமாரனை வதிப்பானோடாநின்றவிடத்துத் தளர்ந்த வடியினனாகிவீழ்கின்றவிடத்துச் சுரிகைவாய் வீழ்ந்து பிங்மூர்த்தியாகிப்போய் நரககதியினைப் பிராபித்தனன்" என்பது.

௩௦. மான வேல் மன்னன் - ஸ்ரீஷேணமகாராஜன். மானம்-பெருமை. சத்யபாமை - அம்மகாராஜனால் கபிலன் என்னுந் தாஸீபுத்திரனுக்கு விசாரணையின்றியே விவாகம் செய்விக்கப்பட்டவள். மாதவத்தார் - ஆதித்யமதிகள் அரிஞ்சயர் என்போர். உண்டிதானம் - மூவகைத்தானங்களில் ஒன்று. அஃதாவது - மஹாதபஸ்விக்கு விசுத்த ஆகாரத்தினைக்கொடுத்தல் (ஸ்ரீபுராணம்)என்பர். இச் சத்யபாமைகதை ஸ்ரீபுராணத்து சாந்திதீர்த்தகரர் மான்மியத்துக் கண்டது. குருவம் - உத்தரகுரு என்னும் போக பூமி.

௩௧. கயக்கு இல் கற்பு - வெறுத்தலில்லாத பாதிவ்ருத்யம். பார்ப்பனியாகிய வியக்கப்பட்டவள். வேதியற்கு - தன்கணவனாகிய பிராமணனு



சந்தனை யென்னு மாதர் சாரணர்க் கண்டு முன்றில்
வந்தனை செய்து பேணி வரகுநீர்ப் புற்கை யீந்தா
ளிந்திர ருவந்து நோக்கி யெல்லையில் செம்பொன் மாரி
அந்தரத் தமர ரார்ப்பச் சொரிந்துவந் தருச்சித் தாரே. (௩௨)

---

க்கு பார்ப்பனி வேதியற்குப் போஜனமில்லாதவிடத்தும், மாதவத்தாற்கு உண்டியீந்து இயக்கியாயினள் என்க. பிராமணன் ஒருவனுடைய பத்தினியானவள், தன் புருஷனுக்காகாரமில்லா திருக்கவும், எதிர்கண்ட தபோதனரொருவரையுபசரித்து அவர்க்கு ஆகாரதானம் பண்ணினளாக, அதுகண்டபுருஷனை பிராமணன் அவளை இம்சிக்க,அது பொறுக்காது,அவள் கிணற்றில்விழுந்து இறந்து, தானபுண்ணியத்தால் தர்மதேவிஎன்ற யக்ஷியாகிப் பிறந்தாள் என்பதுகதை. இது, தர்மதேவதைகதையிற் கண்டதென்பர்.

௩௨. சந்தனை - வந்தனை என்னுங் கன்னி. சாரணர் - ஸ்ரீவர்த்தமானஸ்வாமி. வரகுநீர்ப் புற்கை - வரகாகாரத்தின் பரிணாமமாகிய சால்யந்நம். பின்னிரண்டடியும் சந்தனை பஞ்சாச்சரியத்தினைப் பெற்றமை கூறப்பட்டது. பஞ்சாச்சரியமாவன:—தேவர்களாற் பொழியப்பட்ட கனகவர்ஷமும் தேவதுந்துபியும் ஸுகந்தமந்தமாருதமும் தேவஸ்துதியும் புஷ்பவர்ஷமும் என இவை. ஈண்டு, 'செம்பொன் மாரி' எ - து கனகவர்ஷத்தை; 'அமரர் ஆர்ப்ப' எ - து தேவதுந்துபியையும் தேவஸ்துதியையும்; 'அருச்சித்தார்' எ - து புஷ்பவர்ஷத்தை; 'வந்து' என்பது மந்தமாருதத்தை; வந்தால் அருச்சித்தார் என்க. இனி இச்சந்தனைசரிதம் ஸ்ரீபுராணம் ஸ்ரீவர்த்தமானதீர்த்தகரபுராணத்து அடியில் வருமாறு காணப்படுகிறது.—சேடகமகாராஜன் புத்திரியாகிய சந்தனைஎன்னும் கன்னிகையினைப் பூர்வகிருத பாப பரிபாகத்தால் பந்துக்களிற் பிரிப்பித்து ஒரு வித்யாதரன் எடுத்துக்கொண்டு போகி ஸ்வபார்யைக்கு பீதனாகி ஓர் அடவியிலேபோகட்டுப்போக, ஒரு வியாதன் அவளைக்கொணர்ந்து விருஷசேனனென்னும் வைசியனுக்கு திரவியலாபார்த்தமாகக் கொடுப்ப, புத்ரியாகி வர்த்தியாநிற்ப—இவன்பாரியை ஸுப்பிரபை என்பாள் ஸ்வபர்த்தாவினுக்கு சந்தனையுடன் ஸம்பர்க்க தோஷத்தினை சங்கித்து வரகாகாரத்தினை சராவபாத்ரத்திலே போஜனம் பண்ணுவித்து, சரணங்களில் சிருங்கலாபந்தனமும் சிவரகண்டம் உடையாகவும் பண்ணுவித்துச் செல்லாநிற்பப், பகவான் (வர்த்தமானசுவாமி) மற்றொருநாள் வத்ஸவிஷயகௌசம்பிநகரத்து சர்யாமார்க்கார்த்தம் எழுந்தருளுதலும், அதுகண்டு சந்தனை அதிகமெதிர்கொள்வனென நினைந்தபொழுது சிருங்கலாபந்தனமும் தானே கழன்றது; பூர்வவத்ஸுகந்த புஷ்பமால்யா

பற்றுள மென்றோர் பாவை பாவமும் பழியு மாக்கிச்
சிற்றுள மிலேச்சர் பொல்லா நாற்கதி நவையை நூக்கிச்
சொற்றுள வாய துன்பம் பயத்தலிற் றுறந்து போகிக்
கற்றறி வுடைய மாந்தர் கடிந்தன ரதனை யன்றே. (௩௩)

ஓங்கிய தவத்தின் மிக்க வுறுதவர்க் குறுதி நாடின்
ஈங்கிரண் டல்ல தில்லை யிசைகொடா நிற்ப மண்மேற்
பாங்கமை செல்வ ராகிப் பகுத்துண்டு வாழ்த லொன்றே
தாங்கிய தவத்தின் மிக்க தவநிலை நிற்ற லொன்றே. (௩௪)

இல்லறத் தியல்பு குன்றா வேந்துபூண் முலையி னார்தோள்
புல்லறப் புல்லி மண்மேற் பூவணை பொருந்த லொன்றே
நல்லறத் திறைவன் சொன்ன நாற்கதி நவையை நீக்கும்
தொல்லறத் துணிவி லாதார் துன்பத்தைத் துணிந்து நின்றார்.

---

லங்கிருதமாகிய கேசபாரமும் அழகுபெற்றது; சீவரகண்டமும் மஹாநர்க்கியமாகிய பட்டுவஸ்திரமாயிற்று; ஸர்வாங்கமும் ஸர்வாபரண பூஷிதமாயிற்று; வரகாகாரமாகிய புற்கையும் திவ்விய சால்யந்நமாயிற்று; சராவபாத்ரமும் ஸ்வர்ணபாஜனமாயிற்று: சந்தனை அதிகாநந்தத்தினோடுங்கூட நவபுண்யக்கிரமத்தால் எதிர்கொண்டு, வரகாசாரபரிணமமாகிய பவித்ர சால்யந்நத்தினை அமிர்துசெய்விப்ப பஞ்சாச்சரியத்தினையடைந்து ஸ்வபந்துக்களுடனே சேர்ந்தனள்" என்பது.

௩௩. பற்றுளமாகிய ஒருபெண். சிற்றுளமிலேச்சர் - அற்பஎண்ணமுடைய சண்டாளர். மிலேச்சர்க்குரிய நாற்கதி என்க. நாற்கதி, தேவமானுஷ்ய திரியக்நரககதிகள். நூக்குதல் - அடைவித்தல்; "குரங்குகள் மலையைநூக்க" என்பது திருமாலை.

௩௪. உறுதவர்க்கு - தபோதனர்களிடம்: வேற்றுமையக்கம். உறுதி - புருஷார்த்தம். ஈங்கு இரண்டு - இல்லறந்துறவறங்கள். கொடாநிற்ப - கொடுத்துநிற்பன. மண்மேல் பகுத்துண்டு வாழ்தலும் தவநிலைநிற்றலுமாகிய இரண்டல்லது இசைகொடாநிற்பன (பிற) இல்லை என இயையும். தாங்கியதவத்தின் - ஜன்மாந்தர புண்யத்தால். சிராவக யதிதர்மங்களிரண்டும் நற்கதியளித்தற்குரியன என்பது கருத்து.

௩௫. புல் அறப் புல்லுதல் - சிராவகதர்மத்துக் கிழுக்கின்றித் திளைத்தல். புன்மை - இழுக்கு. இறைவன் - அருகன். தர்மப்படி ஒழுகின் சிராவகநிலையே பாவத்தை நீக்கவல்லது என்பது கருத்து.



ஈகைநற் றான மீந்தா ரிணையிலாக் குருவின் மிக்க
போகத்தைக் கொடுத்துப்புத்தே ளுலகமுங்கொடுத்து மண்மே
லேகநல் லின்ப மாக்கி யிறைவனற் காட்சி யீயும்
மேகத்து மின்னே டொக்கும் விழுச்செல்வ மதிக்க வேண்டா.

பற்றுள மகல நீக்கிப் பாசிழைப் பரவை யல்குற்
பொற்றொடி மகளிர் தங்கள் புணர்முலைக் குவட்டின் வைகிச்
சுற்றத்தார் சுற்ற வாழ்த லன்றெனிற் றுறந்து போகி
நற்றவம் புரிவில் லாதார் நடலைநோய்க் கடலு ளாழ்ந்தார்.

கலையெலா நிறைத்த லொன்றோ கதிர்நகைப் பவளச் செவ்வா
யலைகட லமிர்த னாரோ டகிற்புகை யளாய சேக்கை
முலையுற முயங்க லொன்றோ முனிவனம் புகுத லொன்றோ
புலைகொலை களவோ டொன்றிப் பொழுதவங் கழிப்ப ரன்றே.

இருந்தவர்க் கிசைவ தொன்றோ காப்பில தாக வீந்து
கருந்தடங் கண்ணி னார்தோட் கதிர்முலைக் காத்த லொன்றோ
பொருந்திய சுற்ற மென்னு நிகளத்தைப் பரிந்து போகி
அருந்தவ முயற்சி யில்லார் ரிசையு ளழுந்து கின்றார். (௩௯)

உத்தம தான மீந்தே யொண்பொரு ளுவந்து நல்ல
உத்தமர்க் குவந்து முன்னே யுத்தம தான மீந்தே

---

௩௬. ஈகை - வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது தவல். நற்றானம்;—சாஸ்திரதானம் அபயதானம் ஆகாரதானமென மூவகையாகவும், தயாதானம் பாத்திரதானம் சம்மானதானம் அந்வயதானமென நால்வகையாகவும் கூறுவர்; இவற்றின் விரிவு ஸ்ரீபுராணத்துக்கண்டது. நற்காட்சி - அநந்ததரிசனம். நடலை - துன்பம்.

௩௮. பிரமசரியநிலையினராய்ச் சாஸ்திரங்களைக்கற்றலும், இல்லானோடு சிராவகதர்மங் கொண்டொழுகலும், யதிதர்மத்தராகலும் ஆகிய இவற்றில் ஒன்றுஞ் செய்யார் என்க. ஒன்றோ என்பவை மூன்றும் எண்ணிடைச்சொல்; [illegible] முனிவனம் - தபோவனம். புலை - புலாலுண்டல். அவம் - வீண்.

௩௯. இருந்தவர் - மிக்க தவமுடையார். இசைதல் - உபசரித்தல். காப்பிலதாக - ஒளித்தலின்றி. நிகளம் - பாசம். பரிதல் - அறுத்தல்.

௪௰. (முதல்) உத்தமதானம் - உயர்ந்த ஆசனம். "ஒண்பொருள்" என்

உத்தம நெறிநின் றோர்க்கு முவமையொன் றில்லை யாகும்
உத்தம குருவும் புத்தே ளுலகமு முடைய ரன்றே. (௪0)

மறுவிலாக் குணத்தின் மிக்க மறுவறு தவத்தி னோர்க்கு
மறுவறு தான மீந்தே மறுவிலாப் போக பூமி
மறுவிலாப் பயன்கொ டுத்து மறுவில ராவர் மாதோ
மறுவிலா மண்ணும் விண்ணு மறுவின்றி விளங்க வன்றே.

நடரிடைப் பட்ட நாளும் நாற்கதி நவையை நீக்கி
யிடரிடை யுய்த்த லின்றி நீண்மணத் தொகுப்பி னோர்க்குஞ்
சுடர்கொள்பூம் பிண்டி நாதன் றொல்லறந் துணிந்து முன்னே
படர்கள்பூஞ் சிந்தை வைத்தார் பவக்கட லெல்லை காண்பார்.

உள்ளறப் பற்று நீக்கி யுத்தம தான மீந்தே
கள்ளவிழ் கோதை மாதர் கதிர்முலைக் கரத்த லொன்றோ
புள்ளுறைந் தினிது நீண்ட தவவனம் புரிந்து போகி
எள்ளற நோற்றல் செய்யா ரிடும்பைநோய்க் கிரைக ளாவார்.

வேறு.

கோற லோம்புமின் கொன்றபி னூன்றடி
மேற லோம்புமின் மெய்ப்பொரு ளல்லன

---

றார், "பழியினீங்கிநன்கீட்டியபசும்பொருள்" என்பதற்கு. "அறத்திறனீட்டிய அரும்பெரும் பொருளைப் புறத்துறை குற்றமூன் றறுத்தநற் றவர்க்கு, உள்ளமுவந் தீதல் உத்தம தானம்" என்பது திவாகரம். முன்னே - முதற்கண்.

௪க. கொடுத்து - கொடுப்ப.

௪௨. நடரிடைப்பட்ட நாற்கதிநவையை நாளுநீக்கி என இயைக்க. உய்த்தல் - செலுத்தல். நீண்மணத்தொகுப்பு - எங்குங்கமழுகின்ற வாசனைச் சேர்க்கை. ஆர்க்கும் - நிறைக்கும். ஆர்க்கும் பூ எனவும் சுடர்கொள் நாதன் எனவுமியையும். சுடர்கொள் - பிரபாவலய மூன்றினையுமுடைய. படர்கள் - தொண்டர்களாய். தொல்லறத்தைச் சிந்தைவைத்தார் என்க.

௪௩. உறைந்து - உறையப்பெற்று. புரிந்து - விரும்பி. எள் அற - இகழ்ச்சி நீங்க.

௪௪. ஓம்புதல் - பரிகரித்தல். ஊன்தடி - மாமிசத்தசை. மேறல் -